உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞாநசம்பந்தகுருப்யோநம

Dr. U. V. S. Iyer Library
23088
Madras-90

# சித்தாந்தரத்நாகரம்.

## சித்தாந்தசேகரம் ஆ...ளிப்பு

திருமதி : கி. வா. ஜ.
'காந்தமலை'
சென்னை - 600 028.

இஃது

"வைதிக சைவ சித்தாந்த சண்ட...

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயகரவர்களால்

இயற்றப்பட்டு

...ஷியார் மாண... ...குணக்...

ஸ்ரீமாந்-பல்லவபுரம்

அப்பாவு செட்டியாரவர்களால்

பரிசோதித்து

தமது

சென்னை :

வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதித்து

வெளியிடப்பட்டது.

*Second Edition.*

*28* **February** *1907.*

Copy-right Registered.

இதன் விலை. அணா 6

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணுபநம:.

# சித்தாந்தரத்நாகரம்.

## சித்தாந்தசேகரம்.

Dr. U. V. S. LIBRARY MADRAS-90 23088

காப்பு.

முக்கணனெண்டோள்வரையினிவர்ந்துமுரிதிரைக்கங்கை
முழுநீராடித்
தக்கதிருவெண்பொடியிற்புழுதிவிளையாட்டயர்ந்து
தண்பசுந்தே [illegible] துணைக்கார[illegible]
னுக்கமலர்க்கடுக்கையங்காடுழக்கியாமட்டலர்தின்ற
வொண்கரும்பு
நெக்குசுவைப்பாலமுதநெடிதுநுகரொருகளிற்றை
நெஞ்சுள்வைப்பாம்.

நூல்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்று திருவள்ளுவதேவர் கூறியவுண்மை யுய்த்துணருமிடத்து, எழுத்துக்கள் அகரத்தை முதலாக வுடையனபோல் உலகங்கடவுளை முதலாகவுடையது என்று துணியப்படும்.

எழுத்தெல்லாமென்றபோது அகரமு மடங்கி நிற்கவும், அதனை வேறுபோல அகரமுதலவென்று கூறுவ தென்னையெனின், தமிழேயன்றி வடபாஷையினும் முதலாதல் பற்றியாம். இஃது உரை

யாசிரியர்கள் கருத்து. இதனுண்மையை மறைஞானதேசிகர் கூறிய வாறு இடம் வந்துழிவிரிப்பாம்.

அகரமானது எழுத்துக்களுக்கு முதலாதல்போல், கடவுள் உலகத்துக்கு முதல்வரென்பதை விரிக்குங்கால் "காட்டவனல் போலு டல்கலந்துயிரை யெல்லா, மாட்டுமொருநாட்டுவெனம் மண்ணலென வெண்ணுய்" என்ற பிரமாணப்படி யெல்லாவுயிர்களையும் ஆட்டிவைக்கின்றவரென்று முடியும். சர்வசராசராத்மகராய் விளங்கும் பெருமானை யறிவிப்பது அகரமாகி விளங்கலால், அகரமாதியெழுத்துக்களையுறுப்பாகவுடைய கல்வியின் முயல்வதனு லடையத்தக்கபயன் "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ, னற்றாடொழாஅ ரெனின்" என்னுந் திருவாக்கின்படி அவரை வணங்குதலென்றே தெள்ளிதினுணரப்படும்.

கற்றதனுலாய பெரும்பயன் கடவுளை வழிபடுதலென்று துணியுமிடத்து அவரை யறிவதெங்ஙன மெனின், "ஞாலமேசரியாகநானுனை நச்சிநச்சிடவந்திடுங் - காலமே" என்றுள்ள வாக்கியம்பற்றிப் புகையைக்கண்டு நெருப்புண்டென்னு மனுமிதிஞானத்தால் உலகத்தையே சாட்சிகோடலா லமையு[illegible]

புகையைக்கண்[illegible] மாத்திரத்தில் அனல் ஞானம் வருமென்பது புகையைக்காணுவதன் முன்னரே அனலைக்கண்டிருந்தாலல்லது அமையுமாறெங்ஙனமெனின், புகைஞானம் ஒருவனுக்கு வருதலும் ஆப்தவாக்கியத் துணிவாலன்றி அமையாவாறுபோல் காணப்படு இப்புகை வெளியாதற்கிடம் இன்னது என்றுவரும் அனல்ஞானமும் ஆப்தவாக்கியத் துணிவாலென்றே அறியத்தக்கதாம். நெடுந்தூரத்தி லிருக்குமோர் மலையினின்று மெழும்புகையைக்கண்டு அம்மலையில் அனலுண்டென்று கருதி அம்மலைதோன்றுங் குறிபற்றி அதனை நாடிச்சென்று அனல் ஞானம் சித்திக்கப் பெறுதல்போலுலக முடையவனிடத்தது என்று கூறும் மேலோர்வாக்கியங்களை, துணிந்து, அவர் கூறும் சாதனாந்தரங்களி லொழுகி யுண்மைவிளக்கப் பெறுவரென்பதே சத்தியம். இங்கே மேலோர் வாக்கியமென்றது பாரம்பரியத்தானே புராதனநோக்குமிடத்துக் கடவுள் வாக்கியமாகிய வேதாகமங்களென்றே தெள்ளிதிற்றுணியப்படும்.

"பெண்ணுணலியாய்ப் பிறந்துவளர்ந்தேயழியு, மெண்ணுதபேதமி பின்றிப் - பண்ணுங்கால், காரணகர்த்தாவொருவனுண்டவனைக் காட்டுநூ

ஆரணமுமாகமுமாம்" என்ற பிரமாணத்தானுந் துணியக்கடவர். புகை யைக்கண்டு நெருப்பையும், வெள்ளத்தைக்கண்டு மழையையும், பிரயோசையைக்கண்டு யானைவருதலையும், கடகலசாதிகளைக்கண்டு குயவனையும் அறியுமாபோல் காரியமாகிய பிரபஞ்சத்தைக்கண்டு காரணகர்த்தாவை அறியத்தக்கதாம்.

மேற் கூறிப்போந்த அனுபவங்களால் பிரபஞ்சங் காரியப்படுவது பெருமானாகிய காரணனிடத்திலென்று துணியுமிடத்துப் பொன்னாகிய காரணத்தினின்றும் பூஷணமாகிய காரியம் வெளிவருவது போல் பிரமமே பிரபஞ்சமாகக் காரியப்படுவது போலுமெனின், அங்ஙனங் கூறுவது மாயாவாதக்கூற்றாகிப் பொன்னாகியகாரணத்தைப் பூஷணமாகக் காரியப்படுத்தும் வினையாளனை நாடுமாபோல் காரணமாகிய பிரமம் பிரபஞ்சகாரிய மாதற்கு வேறொருபிரமத்தை நாடவேண்டி வருமாகலின், அங்ஙனந்துணிவது பழுதாகும். உண்மையயக்கும் வழி மற்றியாதெனின். காரிய காரணங்கண் முதறுணை நிமித்தங்கண்டாம், பாரின் மண்டிரிகைபண்ணுமவன்முதறுணைநிமித்தம், தேரின் மண்மாயையாகத் திரிகைதன்சத்தியாக, வாரியன்குலாலனாய்நின்றாக்கு வனகிலமெல்லாம்" என்றுள்ளபரமோபதேசத்தைச் சிந்தித்து, முதற் காரணமாகிய மண்ணைக்கொண்டு துணைக்காரணமாகிய தண்டசக்கரங்களால் நிமித்தகாரணனாகிய குலாலன் பாண்டங்களைவனையுமாபோல் மாயையாகிய மண்ணைக்கொண்டு தன்சத்திகளாகிய தண்டசக்கரங்களால்கடகலசாதிகள்போலுந் தனுகரணபுவனபோகங்களைக் குலாலனையொத்த கடவுள் ஆன்ம கோடிகளுக்குக் கொடுத்துப் பேரருளுடையவராய், அவருள்ளும் புறம்புங்கலந்து நிற்பாரமென்றறியக்கடவர்.

மாயையினின்றும் உலகம் காரியப்பட்டதென்பது எங்ஙனம்? பிரமத்தினின்றும் உலகம் வந்தது என்று சுருதி விளங்குகையாலெனின், இதுவிபரீத வுணர்ச்சியாம். எங்ஙனமெனின், பிரமம்சித்தும் உலகம் அசித்துமாகலின், கடத்திற்படமும் படத்திற்கடமும் பிறவாதனபோல் சத்தாகிய பிரமத்தினின்றும் அசத்தாகிய உலகந் தோன்றாதென்பதே துணிபு.

சத்தாகிய சிலம்பியினின்றும் அசத்தாகிய நூல் வருவதுலாமேயெனின், அசத்தாயுள்ள தேகத்தினின்றும் மலத்தடி நூலாய்வருவதன்றிச் சிலந்திரூபத்தைத்தாங்கியிருந்த ஆன்ம

னின்றும் நூலாகிய அசத்துத் தோன்றுவதில்லையாகலின், அசத்தாகிய உலகம் சத்தாகிய பிரமத்தினின்றுந் தோன்றியதென்னும் மூடஞாநம் அங்கீகரிக்கப்பட்டதன்றாம். அன்றியும், கடவுள் உலகத்தைச்சிருட்டித்தது ஆன்மாக்களிடத்து வைத்தகருணையால் உத்தேசங்கொண்டேயாகவும், சிலந்திநூலைவிட்டது எது பயன்கருதி? சிலம்பியினின்றும் நூல்வருவது சுபாவம். வெளிவருமதனைத் திரவியங்களிலொன்றுமென்பது மில்லையாகிச் சிலந்தியின் மலமென்றே முற்றுணர்ச்சியிற் றுணிந்து கூறப்படுமாகையால், சிலம்பி திருட்டாந்தத்தால் நின்மலனாகிய பெருமானிடத்து உலகமாகிய மலம் உளதென்றுகூற அவர்பாவம் வழிவிட்டவாறு அந்தோகொடிது! கொடிது!! மேல் நியாயங்களால் சத்தில் அசத்துதியாதென்றும், அசத்தில் அசத்துதிக்குமென்றும், அசத்தில் அசத்துந் தானே யுதியாதென்றுந் தெளிந்து, உதிப்பிக்குமொரு சத்துளதாக விளங்கப்பெற்று மாயையினின்றும் பிரபஞ்சபேதங்களைப் பெருமான் காரியப்படுத்தினரென்று துணியக்கடவர்.

சிருட்டிதிதி லயங்களைப் பெறுதலால் உலகம் உடையவனிடத்ததென்று துணியுமிடத்து, உலகத்தை அநாதியாகக் கூறும்வாக்கியங்களுக்குப் போக்கேதெனின், உலகத்தை அநாதியென்றது காரணமாகிய மாயையை நோக்கியென்று துணியப்படும். மாயையை அநாதியென்ப தொக்குமேயன்றி மாயையினால் காரியப்பட்ட வுலகத்தையும் அநாதியென்ப தெங்ஙனமெனின், சிருட்டிக்கப்பட்ட காலம் இன்னது என்று வரையறுக்கப் படாமையால் கால நீடிப்பை நோக்கிக்கூறியதாம். இதனைக் கால நீட்சியின் மரிக்குந் தேவர்க்களை அமரரென்பதுபோல் கொள்ளத்தக்கதாம்.

அநாதிமுத்தசித்தாய பெருமான் இவ்வுலகமாதிகளைப் பஞ்சகிருத்தியத்தின்வழி யெதுபயன்கருதி நடத்துகின்றன ரெனின், அநாதியே பாசத்தளை யுண்டிருந்த ஆன்மாக்களை வெளியே விடுத்துத் தனுகரண புவனபோகங்களை அவர்க்குக் கொடுத்துக் காத்த னிமித்தமே காருண்ணியமிகுதியினால் பஞ்சகிருத்தியஞ் செய்தருளப் பெருமான் திருவுள்ள முவந்ததாமென்று துணியக்கடவர்.

ஆன்மாக்களை அநாதியென்பதெப்படி? கடவுள் சிருட்டித்தாரென்ப தில்லையோவெனின், இதுவிவிலியர்முதலினோர் கூற்றாகி

பாவத்தை விளைத்து உண்மைபயக்காதாகலின், அங்கீகரிக்கத்தக்கதன்றாம். எங்ஙனமெனின், சிருட்டிக்கப்பட்டன வெல்லாம் நாசத்தையடையுமென்பது அநுபவ சித்தமாகையானும், சிருட்டியாதி காரியங்களுண்டாவதற்குக்காரணம் ஒன்று இருத்தல் வேண்டுமாகலானும், சிருட்டிக்கப்பட்ட ஆன்மா சித்தாயிருத்தலால் இதன் காரணமும் சித்தாகக்கொள்ளுமிடத்துச் சிருட்டித்த கடவுளையன்றி வேறொருசித்து ஆன்மா தோன்றுவதன்முன் னில்லையாகலின், கடவுளாகிய சித்தொன்றினின்றே ஆன்மசித்துக்கள் காரியப்பட்டனவென்றுகொண்டு, அங்ஙனங்கடவுளைக் காரியப்படுத்திய வேறொருகடவுளை நாட்டவேண்டுமாகலினானும், இவ்வுணர்ச்சி மாயாவாதமாகவே முற்றுணர்ச்சியிற் றுணிந்து கூறப்படுமாகையால், மேல் மாயாவாத நிரசனத்தில் கூறியவற்றை அன்வயித்துத் திரஸ்கரிக்கக்கடவர்.

இங்ஙனநிற்க, கடவுள் ஆன்மாக்களைச் சிருட்டித்ததுஎதுபயன் கருதி? தம்மை வணங்கவெனின், வணக்கம்விரும்பிய தெற்றுக்கு? அவருடையசித்தமெனின், அவிகாரியென்பதுகூடா. ஆகவே, பதியிலக்கணங்குன்றும். பதியிலக்கணமிருந்தவா றென்னையெனின், "தன்னையறியாதுவேறுண்டாய்த்தானறியா, துன்னிலொழிவுமுதிப்பீறொன்றுமிலை, சன்னிதிக்கே, அஞ்சுதொழிலாமதனை யானந்தவாக்காலே, கிஞ்சளவுகேட்டலுமாகும்" என்னும் பிரமாணமுகத்தா லறியக்கடவர். வணக்கத்தைவிரும்பியே ஆன்மாக்களைப் படைத்தவராகத் துணியுமிடத்துச் சமஸ்தான்மாக்களையும் ஒருங்கேஞானிகளாகப் படைத்தல் வேண்டும். அஞ்ஞானிகளையும் படைத்ததனால் அவரைச் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையவரென்று கூற விடந்தருகின்றது. "வேண்டுதல்வேண்டாமையிலானடிசேர்ந்தார்க், கியாண்டுமிடும்பையில" என்னும் உண்மை ஞானோபதேசத்தைச் சிந்தித்துய்யக்கடவர். இப்படிப்பட்ட நியாயங்களால் பசுக்களைப் பதி ஓர்காலத்தி லுண்டாக்கினரென்னும் மூடஞானத்தை நிரோதஞ்செய்து கன்மபரிபாகத்தில் வினைக்கீடாக அனாதிநித்தியர்களாகும் அப்பசுக்களுக்குத் தனுகரணாதிகளைக் கொடுத்துப் பஞ்சகிருத்தியஞ் செய்து வருகின்றனராமென்று துணியக்கடவர். "ஆதியலச்செம்பினுக்குக் களிம்புதானுமாராயிலதற்கதுவு மனாதியாகும், ஆதியலமூலமலமணுக்கட்கெல்லாமாணவமுமாருயிர்கட்கனாதியாகும், ஆதியலப்பசுபாசமரிக்கவல்ல வமலனுமாருயிர்களுமேயனாதியாகும், ஆதியலவுலகத்தையடக்கித் தன்பாலாக்குவதும் வினையுமுயிர்க்கனாதியாமே" என்னுஞ்சிவதருமோத்திரத் திருவிருத்தத்தானுங்காண்க.

மலவாசிகளாயுள்ள ஆன்மாக்களை வெளியே விடுத்தமையெவ்வாறெனின், "பசியுவமை-குழந்தைக்குப் பாலினுண்டாகிய விருப்பம் தாய்கொடுத்த விருப்பமோ குழந்தைக் குள்ள விருப்பமோவெனின், தாய்கொடுத்த விருப்பமாயின் அவள் கொடுத்த நேரமெல்லாங் கொள்ளவேண்டும். கொள்ளாதபடியால் அவள் கொடுத்த விருப்பமன்று. குழந்தைக்குள்ள விருப்பமாயின் எந்நேரமுங் குடிக்கவேண்டும். அவ்வாறு குடியாதபடியால்குழந்தைக்குள்ள விருப்பமுமன்று. இனிச்சித்தாந்த மெப்படியெனின், பசியே குழந்தைக்குப் பாலின் விருப்பத்தைக் கொடுத்தது. ஆயின் விருப்பத்தைக் கொடுத்த பசியும் குழந்தைக்குப் பாலையறிந்தெடுத்துக் கொடுக்க மாட்டாது. விரும்பின குழந்தையும் பாலை யறிந்தெடுத்துக் குடிக்க மாட்டாது. விரும்பப்பட்டபாலும் குழந்தைக்கு வாயில்வந்து புகுதமாட்டாது. ஆகையால் இந்தச் செய்தியைத் தாயானவளறிந்து இரக்கத்தினாலே பாலடையிலே பாலைவிட்டுக் கொடுப்பள். இங்ஙனங் குழந்தையைப் போலும் ஆன்மாவுக்குப் பசியைபோலும் ஆணவம், பாலைப்போலுங் கன்மத்தி லாசையை யெழுப்பத் தாயைப்போலும் பரமசிவம், பாலடையைப்போலுஞ் சரீரத்தைக்கொடுத்தனுபவிக்கச் செய்வரென வுணர்க"

"வியாதியுவமை - பிணியாளனுக்கு மருந்தில் உண்டாகிய விருப்பம் வைத்தியன் கொடுத்த விருப்பமோ பிணியாளனுக்குள்ள விருப்பமோவெனின், வைத்தியன் கொடுத்த விருப்பமாயின் மருந்துகொடுத்த நேரமெல்லாங் கொள்ளவேண்டும். கொள்ளாதபடியால் அவன் கொடுத்தவிருப்பமன்று. பிணியாளனுக்குள்ள விருப்பமாயின் எந்நேரமுங் கொள்ள வேண்டும். கொள்ளாதபடியால் பிணியாளனுக்குள்ள விருப்பமுமன்று. இனி யுண்மை யெவ்வாறெனின், பிணியே பிணியாளனுக்கு மருந்தில் விருப்பத்தைக் கொடுத்தது. ஆயின், விருப்பத்தைக் கொடுத்த பிணியும் அவனுக்கு மருந்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பப்பட்ட மருந்தும் அவன் வாயில் வந்துபுகமாட்டாது. விரும்பின பிணியாளனும் மருந்தை யறிந்தெடுத்துப் புசியான். ஆகையால், இதனை வைத்தியனறிந்து இரக்கத்தினாலே மருந்தை யொருபாத்திரத்திட்டுக் கொடுத்துக் கொள்ளச் செய்வன். இவ்வாறே பிணியாளனை யொத்த ஆன்மாவுக்குப் பிணியைப்போலும் ஆணவம், மருந்தைப் போன்ற கன்மத்தில் விருப்பத்தை யுண்டாக்க வைத்தியனை யொத்த கருணாநிதி

யாகிய சிவபெருமான், தமது காருண்யத்தால் பாத்திரத்தைப் போ லுஞ் சரீரத்தைக் கொடுத்தனுபவிக்கச் செய்வரெனஅறிக"

இவ்வாறு கூறியிருக்கும் ஆன்றோரது அநுபவசீயமான அருள்வாக்கியங்களை யாராய்ந்துய்யப் பெறுவதேநமது கடமையாகும். ஆன்மாக்களை யெடுத்து வெளியே விடுத்தகாலமே சிருட்டியாகத் துணியுமிடத்துச் சிருட்டிக்குப் பூர்வமிருந்த அனுபவமெவ்வாறெனின், ஆணவகேவலத்திலே ஆன்மாக்கள் கிடந்தன வாகலின், சுழுத்தியனுபவமாய்க் கொள்ளப்படும். சிருட்டி யாரம்பகால மெப்போதெனின், சீவர்களுக்குக் கன்மத்திலாசை யெழுந்ததாகிய சிருட்டி காலமெதுவென்று விசாரிப்பதற்கு முன்னமேதானே சீவர்கடோன்றிய காலமெது? பாசந்தோன்றிய காலமெது? பதியுண்டாகிய காலமெது? என்றும் விசாரிக்கவேண்டி வருமாகையால் அது பொருந்தாதென்க.

மாயையை முன்னர் ஏகமாகக்கூறி ஆணவமலம் கன்மத்திலாசையை யெழுப்பியதென்று அம்மாயையை யீண்டுப் பலவாகக் கூறுவதென்னையெனின், மாயை - மலம் - பந்தம் - பாசமாதிகளாக வழங்குஞ் சொல்வேறு பாடொழியப் பொருள் வேறுபாடின்றி யொன்றேயாய் அநாதியிலேயே ஆன்மாவைப் பற்றியுள்ள வப்பாசத்தை ஆணவம் - கன்மம் - மாயை யென்னும் வேறு வேறான மூன்று மலங்களாகப் பிரிந்திருக்குமென்று தம்பிரா ஞகமங்கள் கூறும். இவற்றை யுபதேசமுகத்தாற் றெளிந்திடுக.

ஆணவமலம் கன்மத்திலாசையை யெழுப்பிய தென்று கொள்ளுமிடத்து ஆணவமலம் சடமாகையால் எப்படித்தானே யியக்கிற்றெனின், மலஞ் சடமென்பது திண்ணமாகித் தானே யியங்கப் பெறாதாயினும் அநாதியே சித்தாகிய ஆன்மாவைப்பற்றியுள்ள தாகையால் ஜடவத்தாயுள்ள நஞ்சுமுதலியவைகள் அறிவோடு கூடிய வுயிரைக்கலந்து வெதுப்புதல்போல மேலியக்கம் அம்மலத்திற்குங் கூறப்பட்டது.

ஆன்மாக்களை வெளியே விடுத்தமை பெருமானுடைய கருணையிருந்த வாறென்று கொள்ளுமிடத்து, மீண்டு மவ்வான்மாக்கள் ஈகதுக்கச் சோர்விலலைவ தென்னையெனின், புண்ணிய பாவங்களிருந்தவாறும். புண்ணிய பாவங்கள் வந்தவா றெங்ஙனமெனின்,

இதாகிதங்கள் புரிந்தவாறும். சுதந்தர அறிவுடையாரல்லராக ஆன்மாக்களைச் சிவாகமங்கள் கூறுமிடத்து அவர்பால் குற்றஞ் சுமத்துவ தென்னையெனின், பசு பட்சி மிருகங்களைச் சித்தாகக்கொள்ளு மவதரம் புல் பூண்டு முதலியவைகளைச் சடமாகவும், மானிடர்களைச் சித்தாகக்கொள்ளு மவதரம் பசு பட்சி மிருகங்களைச் சடமாகவுங்கொள்ள விடமுண்டாதல்போல் கடவுளைச் சித்தாக விவகரிக்கு மவதரம் ஆன்மாக்களைச் சடரூபிகளாகக் கூற விடமுண்டாமேயன்றிப் பதி அனாதிமல முத்த சித்தும், பசு அனாதிமல பெத்தசித்தும், பதி பசுவுக்குப் பரமுத்திவியத்திக்குறி அனுக்கிரகம் பண்ணுஞ் சித்தும், பசு அவ்வனுக்கிரகத்தைப் பதியினிடத்தினின்றும் பெறுஞ்சித்தும், பதி சிருட்டி திதி சங்கார திரோபவ பதமுத்தி யனுக்கிரகங்களைப் பண்ணுஞ்சித்தும், பசு அந்தப் பஞ்சகிருத்திய பரதந்திரத்தி லகப்பட்டுக் கட்டுண்ணுஞ் சித்தும், பதி ஒருவராலறிவிக்கப்படாது தானேயறியுஞ்சித்தும், பசு சிற்றறிவு பேரறிவுகளா லுணர்த்துவிக்க யோக்கியமாகுஞ் சித்துமென்றே தெளியக்கடவர். "சிவன் சீவனென்றிரண்டுஞ் சித்தொன்றுமென்னிற் சிவனருட்சித்திவனருளைச் சேருஞ்சித்திவன்றான், பவங்கெடுபுத்திமுத்திபண்ணுஞ்சித்தவற்றிற் படியுஞ்சித்தறிவிக்கப்படுஞ் சித்துமிவன்று, னவன்றானே யறியுஞ்சித்தாதலின லிரண்டுமெணைந்தாலு மொன்றுகாதனனியமாயிருக்கு, மிவன்றானும் புத்தியுஞ் சித்திவனுமோபுத்தி யிதுவசித்தென்றிடிலவனுக் கிவனும்சித்தாமே" என்னும் பிரமாணமுகத்தானுமறிக. அரசனுடைய நீதிகளை யுணர்த்துஞ் சட்டங்களை அறிவுடையோ ராகியநாமே அரசனால் கொடுக்கப்பெற்று அவற்றிற் கூறி யிருக்கும் விதிவிலக்குகளைப் பற்றி யொழுகுகின்றேமன்றி அறிவில்லாதன வாகியமிருகங்களுக் கமையாவாறுபோல் கடவுளால் தரப்பெற்றசட்டங்கள் ஆன்மாக்களைச் சுதந்தர வீனராகக்கொள்ளு மிடத்துப் பயனற்றனவாகும். அங்ஙனமேல், சட்டங்களைக்கொடுத்த பதியும் அறிவீனனாகவேண்டும். அங்ஙனந்துணிவார்க்கு நரகப்பிராப்தம் சித்தமாகவின், சத்தாயுள்ளசிவத்தையும், அசத்தாயுள்ளமலத்தையும் அறியுந்தன்மையால் சதசத்தென்று சொல்லப்படும். பசுவுக்கு வேதசிவாகமங்களை யுணர்த்தினரென்பது கண்டுகொள்க. "அறிந்த விடத்தின்பதுன்பமாகாததுவு, மறந்தவிடத்தின்பமயக்கம்-அறிந்த, அவியறிவு நீயென்றுனத்துவிதானந்த, மூலையமுதமுண்டமுனி" என்று கூறியகண்ணுடையவள்ளலார் திருக்காணுமுணர்க. பதியறிவு-ஆணறிவென்றும், பாசவறிவு - பெண்ணறிவென்றும், இவ்விருவகையும் போலன்றிப்

பதியறிவோடு கூடிப் பதியறிவாயும், பாசவறிவோடு கூடிப் பாசவறிவாயும், ஆண்வடிவும் பெண்வடிவுந் தழுவிநிற்றலிற் பசுவறிவை அலியறிவென்றுங் கூறியுள்ள விசிட்டத்தினால் ஆன்மவிலக்கணத்தைப் பகுத்துணர்வாராக.

மேல்நியாயங்களால் ஆன்மாக்கள் சித்தேயாகியிருந்தும், சிவாக்ஞையை மீறிநடந்தமையால் புண்ணியபாவத் தொடக்கிலலைந்து மொத்துண்பாரென்பது போதரும். பாவபுண்ணியத் தொடக்கில் ஆன்மாக்கள் மொத்துண்பாராயின் அவனுடைய கருணையிருந்தென்செயவெனின், அங்ஙனம் மொத்துண்ணுதலாகிய வினைப்போகத்தை யுடனிருந்தூட்டி வைத்தற்கேயாம். புண்ணியபாவங்களைச் செய்யுமிடத்தும், சொர்க்க நரகங்களை யனுபவிக்குமிடத்தும், ஆன்மாக்களை விட்டு நீங்காதவனாகவே பெருமான் இசைவிப்பனென்பது உண்மைநூற்கருத்தாம். எமது பெருங்கருணைத் தோன்றலாராகிய ஸ்ரீமங்மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய "இன்பமுந் துன்பமு மில்லானேயுள்ளானே" "சோதியனே துன்னிருளே" என்றற்றொடக்கத்து அற்புதவாக்கியங்களினானுந் துணிக. உள்ளானேயென்றது பிள்ளைக்குவந்தநோய் தாய்க்குவந்ததுபோலாம். துன்னிருளேயென்றது தன்வியாபகத்துள்விரவிய வியாத்தியாகிய உயிரை வியாப்பியங்கொண்டு வர்த்திக்கு மதுபற்றியாம். ஈண்டுப்போந்த நியாயங்களால் "அவனன்றியோரணுவுமசையாது" என்றற்றொடக்கத்துச் சிவானுபூதிமான்கள் திருவாக்குண்மையைத்தெளிந்து, பாவபுண்ணியங்களைச்செய்வார் சீவர்க்களேயென்றும், பதி துணைக்காரணரென்றும் அறிந்திடுக.

பாவச்செயல்களை யுடனிருந்தூட்டுவது எங்ஙனமெனின், பாவங்களையனுபவித் தொழிக்கச்செய்வது காருண்யமேயானபடியால் பாவச்செய்கையைப் பெருமானிடத் தேற்றிக் கூறுதல்பெரும்பிழையாம்."இந்நிலமைமானுடருக்கேயன்றியெண்ணிலா-மன்னுயிர்க்குமிந்த வழக்கேயாய்-முன்னுடைய-நாளுள்வரையிலுடல் பிரித்துநல்வினைக்கண்-வாளின்மாலாயயனாகி-நீணாகர்-வானாடர்கோமுதலாய் வந்தபெரும்பதத்துநானவிதத்தானலம்பெறுநாட்-டான்மாள - வெற்றிக்கடுந்தூதர்வேகத்துடன்வந்து-பற்றித்தம் வெங்குருவின்பாற் காட்ட-விற்றைக்கு-மில்லையோபாவிபிறவாமையென்றெடுத்து-நல்லதோரின்சொனவொகச்-சொல்லியிவர் - செய்திக்குத்தக்கசெயலுறுத்துவீரென்று-வெய்துற்றுரைக்க விடைகொண்டு - மையறருஞ்-செக்கிலிடைத்திரித்துந் தீவாயிலிட்டெரித்துந்-தக்கநெருப்புத்தூண்டழுவு

வித்து-மிக்கோங்கு-நாராசங்காச்சிச்செவிமடுத்தநாவரிந்து-மீராவுன்றூனைத்தின்னென்றடித்தும்-பேராம - லங்காழ்நரகத் தழுத்துவித்தும்பின் னுந்தம்-வெங்கோபம்மாறாதவேட்கையராய்-இங்கொருநா-ளெண்ணிமுதல்காணுதவின்னற்கடுநரகம்-பன்னெடுநாட்செல்லும் பணிகொண்டு-முன்னுடிக்-கண்டுகடன்கழித்தல்காரியமாமென்றெண்ணிக்-கொண்டுவருநோயின்குறிப்பறிவார்-மண்டெரியிற் - காச்சிச்சுவடறுக்கக்கண் ணூரிக்கநன்னிதிய - மீத்துத்தாய்தந்தை தமரின்புறுதல்-வாய்த்தநெறி-யோடியதேரின்கீழுயிர்போனகன்றாலே-நீடுபெரும்பாவமின்றேநீங்குமெனு-நாடித்தன்-மைந்தனையுமூர்ந்தோன்வழக்கேவழக்காக-நஞ்சனையசிந்தைநமன்றூதர்-வெஞ்சினத்தா-லல்லலுறுத்து மருநாகங்கண்டுநிற்க-வல்லகருணைமறம்போற்றி" என்று கூறியுள்ள வுண்மையானுமறிக.

தம்முடைய ஆணையை மீறுவார்கள் ஆன்மாக்க ளென்றியற்கை ஞானத்தாலுணரும் பெருமான் வேதசிவாகமங்களை யேன்விதித்தல்வேண்டும்? அப்படி விதித்தமையைமீறிய ஆன்மாக்களைத்தண்டனைக்குட்படுத்துவது எப்படி? எனின், பசுக்களுக்குக்கன்மத்தினளவேசிவனுடைய பஞ்சகிருத்தியமென்பது மேலிடங்களில் விவரித்துள்ளேமாகையால், எல்லாம் அநாதிகன்மமிருந்தவாறு மென்றறிக. "அநாதியேலமைவின்றெனின்மலமாயைகன்ம மனுச்சிவ, னநாதிகன்மமனுக்கள்செய்பவறிந்துகன்மமுடற்செயா, வநாதிகாரியமாமுடற்களசேதனம் மணையாவறிந், தநாதியாதியமைக்கவேண்டு மமைப்பினேடு மநாதியே" என்னுந்திருவாக்கானுந் தெளிந்திடுவாராக.

எல்லாம் அநாதிசித்தபாகவே வருமென்று துணியுமிடத்துஎல்லாங்கற்பிதமாத்திரமாக வுள்ளனவென்றும், பரமார்த்தத்திலொன்றுமில்லையென்றும், விவகாரத்திலுண்டென்றும், வஸ்துவேயெல்லாமென்றும், வஸ்துவொன்றே சத்தியமென்றும் சிலநூல்கள் கூறுவதென்னையெனின், மேல்வாக்கியங்களே யொன்றை யொன்றுமறுத்து உதைத்துக்கொள்ளுகிறதாகையால், "மிண்டிய மாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ்சுழித்தடித்தாஅர்த்து" என்று வாதவூரடிகள் அருளியவுண்மையை யுணர்ந்தவர்கள் மயங்காரென்பதே துணிபு. இதனால், எல்லாம் சத்தியமாயுள்ளன வென்று நாட்டப்பட்டது. இங்கேயெல்லாமென்றது பதிபசுபாசங்களிலடங்குமாகையால் பதிபசுபாசங்களை அநாதிநித்தமென்று வேதாகமங்கள் கூறுமென்பது சர்வசம்மதம். மூன்றுபொருள் நித்தமாயிருக்குமாயின் சமானப்பொருளாமேயெனின், ஒன்றையொன்றுபற்றியனவாய்க்குணிகுண

ஙகளாய் வேறுபாடின்மை கொண்டு விளங்குமதனால் சமானப்பொருள்களாகாவாம.

கடலைபபோலும்சிவம, நீரைப்போலும் ஆன்மா, உவரைப்போலும்மலம் என்று பிரமாணங்கள் கூறுதுட்பமறியாமல் ஒன்றென்று கூறுமுன்மத்த வுரைகுழறுபடையேயாம். "கடல்சிவநீரான்மாவுப்புமலங்கன்மம்" என்னும் ஒழிவிலொடுக்கத் துரையானுந்தெளிக. கடலென்னுமவசரத்தில் நீருடக்கமதனுட் கூறவிருக்கவும் வேறென்ப தெங்ஙனமெனின், கடல்வற்றியது, குளம்வற்றியது, குளம்வெட்டினேன், கிணறெடுத்தேன், என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் நீரைவேறுபிரித்து துரைக்கவிட முண்டாயிருத்தலை யறிநது வாய்மூடக்கடவர். இதனால் சிவம வியாபகமாயும், சீவன் வியாத்தியாயும், பாசம் வியாப்பியமாயுநிற்குமென்பது பெற்றும். "வியாபகமாதிவிரிக்குங்காலை, வியாபகமேலிதெநிறைவாமென்ப, வியாத்திசமநிறைவாகும்விளம்பின், வியாப்பியமொன்றின்றிடைந்தநிறையே, வியாபகங்கடலேவியாத்தியந்நீரே வியாப்பியமுமுவரெனவிளக்கியநூலே, வியாபகமீசன்வியாததியாருயிர், வியாப்பியமலமெனவீக்கியநூலே" என்னும் பிரமாணமுகத்தானுந தெளிந்திடுக.

இங்ஙனநிற்க, ஒன்றெனவும் இரண்டெனவும் பிரியாவாறு ஆன்மாவும் பரமான்மாவும அமைதல்நோக்கி அத்துவித மென்று வேதங்கள் கூறுமுண்மையை, இரண்டாவதில்லாமை யுடையது என்றுபொருள்கொண்டு மயங்கிக்கிடப்பார் விளையிருந்தவாறு அந்தோகொடிது! கொடிது!! அத்துவிதமென்றது ஒன்றுமிரண்டு மல்லாமையாம. உயிருமெய்யுங் கலந்திருப்பதுபோல ஆன்மாவும் பரமான்மாவும விரவிநிற்கு முண்மையையறியாமல் விசாரஹீனத்தினால் உயிருமெய்யுமொன்றே யென்றும், இரண்டாயின் சமானபொருளாமே யென்றுஞ் சொல்லித்திரிவாரை நம்மில்வேறு பேரிட்டழைப்பதே யுத்தமம். நிததததினால் சமானமன்றோ வெனின், சலததிமலகிடக்குநதவளையை அரியென்னும்பெயராலழைக்குமதுகொண்டு க்ஷீராப்திசயனராகிய விட்டுணுவையும் அரியென்னும பெயருடையராகக் கருதிச்சமாதானங் கூறும் விநோதவழக்காம்.

ஆயின், வேதங்களிற் பிரமமொன்றே சத்தியமென்று கூறுவதென்னை யெனின், பிரமத்தைப்போல் வேறொரு பிரமம் இல்லையென்பதே அதனது துணிவன்றி அப்பிரமத்துக்கு வேறாக ஆன்மாக்களில்லை யென்பது கருத்தன்றாம். "ஒன்றெனமறைகளெல்லாமுரைத

இட வுயிர்களொன்றி, நின்றனனென்று பன்மைநிகழ்த்துவ தென்னையெ ன்னின், எனன்றமையபதிதானொன்றென் றறையுமக்கரங்கடோறுஞ், சென்றிமெக ரம்போல நின்றனன்சிவனுஞ்சேர்ந்தே" என்னுஞ் சித்தியாருள்ளுங் கண்டுணர்க. இதனால் எழுத்துக்கடோறும் அகரஞ் சென்றிருப் பதுபோல் ஆன்மாக்கடோறும் சிவம் வியாபித்துடையது என்று நிச்சயிக்கப்பட்டது. எழுத்துக்களை அகரம் இயக்குவ தெங்ஙன மெனின், அகரமுதல் ஔகாரமீறான பேதங்களாய் மெய்களின் மேலேறிவர்த்திப்பதனாலென்க. அகரமியக்குவது எல்லாவெழுத்து க்களையுமென்று பொதுப்படக்கூறியிருக்கவும், உயிர்களை யொழி த்து மெய்களைமாத்திர மீண்டுக்கூறியதென்னையெனின், எழுத்துக் களை யியக்குவது அகரமொன்றேயாகக்கூறி யிருக்கவும், மற்றை யுயிர்களும் அகரத்தைப்போலவே மெய்களை வர்த்திப்பிக்குந் தன் மையைக்காண்கின்றோமாகையால், அவ்வுயிர்ப்பேதங்கள் அகரமாத்தி ரமாகவேகொள்ளப்படும். "அகரமுதலவெழுத்தெல்லாம்" என்றதும்இ வ்வுண்மை கருதியென்க. மெய்கள் அகரத்தில் வந்தனவாகக்கொள் ளக் கூடாதோவெனின், கூடாது. எங்ஙனமெனின், உயிர்கள் ஏறி நடத்துகிறசாதியும், மெய்கள் தாங்கிச்சுமக்கிற சாதியுமாகி விளங் கலால் சுமக்கிறசாதி எப்படி ஏறுகிற சாதியாகும்? பாகனுங் குதி ரையும் ஒருசாதியாகக்கண்ட அனுபவிகளுக்கு உயிருமெய்யும் மொன்றாகுமேயல்லது பாகன்வேறு குதிரைவேறு என்று தெளிவா ர்க்கு உயிர்வேறும் மெய்வேறும் ஆக இரண்டு தனித்த சாதிகளுண் டென்றேகொள்ளப்படும். மெய்கள் அகரவுயிரினின்றும் வந்தன வாகக்கொள்ளுமிடத்துப் பொன்னினின்றும் வந்த பூஷணங்கள் மாற்றுரைகளில் தாழாதுநிற்றல்போல் அகரத்தைப்போலவே எழுத் துகளிலேறியியங்கப்பண்ணும் ஆற்றலுடையனவாயிருத்தல் வேண் டும். அகரமும், அதன்வருக்கமான ஔகாரமீறான வுயிர்களும் இய ப்பிக்க வியங்குவனவாகிய மெய்களை அவ்வகரமேயென்றுநாம் எந் தமதியால் சொல்லத்துணிவோம்? இவ்வுண்மை நன்குவிளங்குமாறு தொல்காப்பியம் பிறப்பியற் சூத்திரம்வருமாறு.

"(க) அ ஆ ஆயிரண்டங்காந்தியிலும்.

இவை அங்காத்தலையுடையனவாய்ப் பிறக்குமென்பதாம்.

(உ) இ ஈ எ ஏ ஐ யென இசைக்கும்
அப்பாலைந்தும் அவற்றோரன்ன - அவைதாம்
அண்பன்முதனாவிளிம்புறலுடைய.

இவை வாய் திறத்தலுடனே அண்பல்லை நாக்கடியினது ஓரமானது பொருந்தப் பிறக்குமென்பதாம்.

(ரு) உ ஊ ஒ ஓ ஔ வெனவிசைக்கும்
அப்பாலைந் துமிதழ்குவிந் தியலும்.

இவை வாய்திறத்தலுடனே உதடுகளின் குவிதலாற் பிறக்குமென்பதாம்.

(௬) ககாரஙகாரம் முதலுநாவண்ணம்.

இவை நாக்கினடி மேல்வாயடியைப் பொருந்தப் பிறக்குமென்பதாம்.

(௭) சகாரஞகாரமிடை நாவண்ணம்.

இவை நாக்கினடு மேல்வாய் நடுவைப் பொருந்தப் பிறக்குமென்பதாம்.

(௮) டகாரணகார நுனிநாவண்ணம்.

இவை நாக்கின்கடை மேல் வாய்க்கடையைப் பொருந்தப் பிறக்குமென்பதாம்.

(௯) அண்ணநண்ணியபன்முதன் மருங்கின்
நாநுனிபரந்து மெய்யுறவொற்றத்
தாமினிதுபிறக்குந் தகாரநகாரம்.

இவை அண்பல்லினது அடியை நாக்கு நுனிபொருந்தப்பிறக்குமென்பதாம்.

(அ) அண்ணநுனிநா வண்ணமொற்ற
றஃகானஃகானுமிரண்டும்பிறக்கும்.

இவை மேல் வாயை நாக்குநுனி மிகப்பொருநதப் பிறக்குமென்பதாம்.

(கூ) நுனிநாவணரியண்ணம்வருட
ரகாரழகாரமா யிரண்டும்பிறக்கும்.

இவை மேல் வாய்க்கடையை நாக்குநுனி தடவப் பிறக்குமென்பதாம்.

(ய) நாவிளிம்புவீங்கி யணபன்முதலுற
ஆவயினண்ணம் ஒற்றவும்வருடவும்
லகாரளகாரமாயிரண்டும்பிறக்கும்.

இவை அண்பல்லடியை நாவோரமானது தடித்து நெருங்கவும், மேல் வாயை நாவோரமானது தடவவும் முறையே பிறக்குமென்பதாம்.

(மக) இதழியைந்துபிறக்கும் பகாரமகாரம்.

இவை மேலுதடுங் கீழுதடும் பொருந்தப் பிறக்கு மென்பதாம்.

(மஉ) பல்லிதழியையவகாரம்பிறக்கும்.

இது மேற் பல்லைக்கீழுதடானது பொருந்தப் பிறக்குமென்பதாம்.

(மஙு) அண்ணஞ்சேர்ந்தமிடற்றெழுவளியிசை
கண்ணுற்றடையயகாரம்பிறக்கும்.

இது நாக்கினடி மேல் வாயடியைப் பொருந்தப் பிறக்குமென்பதாம்.

ஈண்டுக்கூறியவற்றால் எத்துணையும் மெய்களுக்கு உயிர்வருக்கத்துப் பிறப்பில்லையென்பது நாட்டப்பட்டதாகலின், அகரமேயெல்லா வெழுத்துக்களு மாயினவென்னும் அஞ்ஞான விருளினின்று நீங்கி உயிர்கள் மெய்களை யியக்குவதுபோல் சிவன் ஆன்மாக்களை யியக்குமென்று தெளிவது விவேகிகள் மரபாம். உயிர்களைப் பன்மையாகவும், சிவனையொருமையாகவும் உவமித்துக்கூறுவ தெங்ஙனமெனின், அகரவுயிரொன்றே பலபடவிரிந்ததல்லது அவைகள் வேறல்லாமையால், சிவனோடுவமை கூறப்பட்டது. பலபடவிரிந்த அகரத்தோடு ஏகத்துவ நிருமலத்துவமுள்ள சிவத்தை யெப்படிப்பொருந்தக் கூறுவதெனின், பலபடவிரிந்த எழுத்துக்கள் பலவிகாரகுணங்களை யடையாது அகரமாத்திரமாகவே நிற்றலான மேலுவமானம் பிழைத்தன்றாம்.

அகரம் விரிந்ததுபோல் சிவமும் விரிந்திருக்க வேண்டுமேயெனின், "சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன்றிகழுமீச, னுயர்ந்தருளுருத்திரன்றான் மாலயனென்றி னென்றாய்ப், பவந்தருமருவநாலிங் குருவநாலுபயமொன்றாய், நவந்தருபேதமாக நாதனேநடிப்பனென்பர்" என்றதற்கெடுக்கத்துச் சந்தான குரவர் திருவாக்குண்மையை மெய்யன்போடுஞ் சிந்திக்கக்கடவர். இப்படிப்பெருமான் றிருவுள்ளமுவந்தது ஆன்மாக்களுடைய பரிபாக நெகிழ்ச்சியளவே யன்றி உண்மையில் அணுத்துணையும் பேதமின்றென்பதாம். இதுகாறுங்காட்டிவந்த நியாயங்

களால் அகரமும் மற்றையுயிர்களும் ஒன்றென்றும், உயிர்களும் மெய்களும் வேறென்றும், சிவமும் மற்றைமூர்த்தங்களும் ஒன்றென்றும், சிவமூர்த்தங்களும், ஆன்மாக்களும் வேறென்றும் நன்கு விளங்குகிறதாகையால், ஆன்மாக்கள் சிவத்தினின்றும் வந்தனவென்னும் விரோதஞானம்விலகிப்போயிற்றென்க.

வாயைமூடிக்கொண் டுச்சரிக்கு மோரெழுத்து மில்லையாகலினும், மெய்களும் உயிரைப்போலவே அங்காத்தலைப்பெற்று வருதலினாலும், எல்லாவெழுத்துக்களும் அகாத்தில்வந்தனவாகவே கொள்ளுவாமெனின், மெய்கள் தாமேயியங்கும் ஆற்றலைப்பெறாது உயிர்களைத் துணைகொண்டு அங்காத்தலைப்பெற்று வரு முண்மையையறியாமல், மெய்கள்தாமே அங்காந்து வருமென்பது அறியாமையேயாம். (இக்) என்றபோதிலும் (க) என்றபோதிலும் உயிர்த்துணையை முன்னும் பின்னுமாகக்கொண்டு தன்னொலியைக் காட்டிநின்ற மெய்யை, அதனை ஒலிப்பித்த வுயிர்ப்பேதமேயென்பது காலத்திரயத்தும் மேலோரங்கீகரியாரென்க. இதனால் மெய்களும் உயிர்களும் தனித்தனிவேறாகவே யொலிகளையுடையனவென்றும், மெய்கள் ஒலிப்பித்தாலொலிக்குஞ் சாதியென்றும், உயிர்கள்தாமேயொலிக்குஞ்சாதியென்றும், உயிர்கள் மெய்களாகா வென்றும், மெய்கள் உயிர்களாகாவென்றும் நாட்டப்பட்டது. இதனைத்திருட்டாந்த பூர்வகமாய்க் கூறுமிடத்து ஒற்றொலியைக் கண்ணொளியென்றும், உயிரொலியைக் கதிரொளியென்றுங் கொண்ணொர்க. கண்ணுக்கொளியிருந்துங் கதிரொளியைப் பெறாமல் முன்னேதோன்றுமவற்றைக் காணக்கூடாவாறுபோல மெய்யெழுத்துகள்தாமே யொலிக்குஞ் சத்தியை யடையாது உயிர்களொலிப்பிக்கவொலிக்குமியல்புடையனவென்க. கண்ணுக்கொளியைத் தருவதுங் கதிரொளிதானே யெனின், கண்ணில்லாதவன் மாட்டுப்பயன்படாமையால் அதுபொருந்தாதென்க. இவற்றைச் சிவசீவர்களிடத்தும் அன்வயித்துக்கொள்ளக்கடவர். இதனால் சிவன் ஆன்மாக்களையியைவிக்கு மென்பதுநாட்டப்பட்டது. "விற்பிறம்பாலுற்றவடுமேவவுலகெங்குநிறை -சிற்பரனே தெய்வஞ்சிவசிவா-சொற்சிறந்த-அகரமுதலவெழுத்தெல்லாமாதி-பகவன்முதற்றேயுலகு" என்னுமான்றோர் திருவாக்கானுமுணர்க. இவ்வுண்மையையறியாமல் அகரமாகிய முதலினின்றும் எல்லாவெழுத்துக்களும் பிறந்தனவென்று நாயனார் திருவாக்கைத் திரிபுணர்ச்சி கொண்டுமயங்குவது பரிபாகத்தாழ்ச்சியேயாம்.

"தேவர்குறளுந்திருநான்மறைமுடிவும்-மூவர்தமிழுமுனிமொழியுங் - கோவைத்-திருவாசகமுந்திருமூலர்சொல்லும்-ஒருவாசகமென்றுணர்" என்று நிச்சயித்துக் கூறிய ஔவையார் திருவாக்கால் இத்திருவெண்பாவிற்கண்ட நான்முடிவுகளெல்லாம் ஒரே சித்தாந்தத்தை யுடையனவென்று நாட்டப்படுதலின், ஆன்மாவேறு சிவம்வேறு என்றுண்மையையுணர்த்துந் தேவார திருவாசகங்களுக்கு மாறாக ஆன்மாவேசிவம் என்று திருக்குறளுணர்த்து மென்பது முரண்பட்டழியுமென்க.

இப்படியே வேதங்களிலுள்ள வொவ்வொரு வாக்கியங்களையும் அபார்த்தங்கொண்டு வேதாந்திகளெனப் பெயர்பூண்டு திரிவார் உண்மைக்கு விரோதிகளானபடியால் அவர்கூற்றைமறுத்துக்கூறும் உண்மைவாக்கியங்கள் வருமாறு.

"ஊடலிருவர்க்கொழியவுண்டெனிலொருத்தர்க்
கேடணையுமேவலெழுவாயுரியனூலு
மூடருணரார்மலைவுமுன்னொடுபின்னென்னே
தேடுவர்சிவன்றனையுமாதரவுசெய்தே"

"பொத்தையுடலூனுமறவேயருள்புரிந்து
தத்துவமசிப்பொருடருங்குரவனோரன்
றத்தவுதயத்தவலமாசினையறுத்தே
சித்திபெறுமோபிரமமென்கொலிதுசெப்பாய்"

"அத்துவிதமென்றசொலு முன்மறையினுய்க
அத்துவயமென்றசொலுமம்முறையினுய்க
முத்தனிணையற்றொருவனென்றமொழிவேதத்
தத்தமறியாரமலனுவிமலமென்பார்"

வேறு

"ஏகமன்றிறைவனுவியிரண்டுமென்றபேதமென்றே
யாகமவேதமெல்லாமயிக்கியபதத்தினுலே
யூகமுள்ளவர்தம்முள்ளத்துணர்த்திடும்பிரத்தியாயத்
தூகமுமற்றொன்றென்பரயிக்கியபதார்த்தமூனர்"

என்று சைவநூல்களெல்லாம் கூறுமாகையால் இவற்றையுள்ளபடி ஞானுசாரியரிடஞ் சென்றுதேர்ந்தவர்கள் அவலமார்க்கங்களை யணுத்துணையும் மதியாரென்க. இதனுல் பதிபசுபாசங்கள் மூன்றும் சத்தியப்பொருளாமென்று நாட்டப்பட்டது.

பதிபசுபாசங்கள் அநாதி நித்தியமாயின் பஞ்சகிருத்தியம் காருண்ணியத்தை யதிட்டித்துடையமென்று மேலிடங்களில் விவரித்துள்ளநியாயங்களால் எல்லாவுயிர்களும் அநாதியேமுத்தியடைந்திருக்கவேண்டுமேயெனின், பெருமானுடைய கருணை யிருந்தவாறு பஞ்சகிருத்தியமென்பது ஆன்மாக்க ளநாதிகன்ம மிருந்தவாறன்றிக்கன்மமொழிந்து காருண்ணியமில்லையாம். கன்மத்தைக்காட்டாது காருண்ணியத்தைப் பிரதானமாகக் காட்டுவது அப்பெருமானிடம் வைத்திருக்கும் அன்பு பாராட்டியென்க.

ஆன்மாக்கள் நித்தியமாகலானும் முத்தியடைந்தோர்கள் பிறப்பின்கண் திரும்பாமையானும் அநாதியே பஞ்சகிருத்தியம் ஒழியவேண்டுமேயெனின், "பிறந்தநாண்மேலும் பிறக்குநாள்போலுந்-துறந்தோர் துறப்போர்தொகை" என்னும் பிரமாண முகத்தால் மேலாட்சேபம் நிரஸ்தமாமென்க.

சிருட்டிக்கொருவர் முத்தியடையினும் எண்ணிறந்த சிருட்டியில் எண்ணிறந்தவான்மாக்களும் முத்தியடைவார்கள். முன்னிறந்த காலத்திற் களவின்மையால் அநாதியே பஞ்சகிருத்தியம் ஒழிந்திருக்கவேண்டும். அங்ஙனமொழியாது பஞ்சகிருத்தியம் வர்த்திப்பதெங்ஙனமெனின், இது வேதாகமத்திலில்லாத விநோதவிசித்திரமாம். ஆன்மாக்களோடு காலவொழிவையும் விசாரித்தால் மேலாட்சேபத்திற்குச் சமாதானம் பிறக்குமாகையால் எண்ணிறந்தசிருட்டியில் எண்ணிறந்தவான்மாக்க ளொழிந்திருக்கவேண்டுமேயென்பது புரிபாகத்தாழ்ச்சியாம். காலவொழிவே ஆன்மாக்களொழிவென்று தெளியத்தக்கதாம். காலம் ஒழியுமோவெனின், குருமுகத்தானுணர்க. இங்கே கூறப்பட்டுள்ள சமாதானமே மேல்விஷயத்தைப்பற்றிய மற்றைச்சாமானிய கேள்விகட்கும் உத்தரமாமென்பதை விவேகித்துணர்வாராக.

பாசம் அநாதிநித்தமாயின் அது உயிரைவிட்டகலுமாறெங்ஙனம் ? பாலில்வெண்மைபோற் சகசமாமெனின், பாலிலேவெண்மையையொத்த சகசமுமல்லாமல், வெள்ளைப் புடவையில் வந்தேறிய அழுக்குப்போல் ஆகந்துகமுமல்லாமல், தண்டுலத்தைப்பற்றிய முளைதவிடுமிபோ லொத்த சகசமென்று தெளிந்து, ஆன்மாவுக்கு மலநாசத்தை மதித்திடுவாராக

முன்னுள்ள சிவத்துவாபிவியக்தியை விளக்குவதே பரமாக ஆகமங்கள் கூறுவதால் மலத்தை வந்தேறியதென்றே வேதாந்தவாதிகள்போற் கொள்ளவாமேயெனின், முளைதவிடுமி நீக்கத்திற் காணப்படும் வெண்மையாதி குணங்கள் தண்டுலத்தில் உள்ளனவேயன்றி ஒன்று கெட்டொன்று புதிதாகவந்தவல்லவாகலின் மேலுண்மையைத்தரும். ஆகமவாக்கியம் சத்தியமென்றேதுணியத்தக்கதாம். வேதத்தினுண்மையும் இதுவேயாமென்க. மாயாவாதிகள் போல் இதனைச் சிவத்திற்கென்று கொள்ளாது, சிவனைப்போல் ஆன்மாவும் ஞானக்கிரியைகளை யுடையவனாகையால் ஆன்மாவுக்கென்றே அறியத்தக்கதாம். சிவத்துவம் என்பதைச் சிவ சீவர்களுக்கு முத்தியைத்தருதல் பெறுதலால் கூறியதாம்.

மலத்தை யொழிக்குமிடத்து மாயாகாரியங்களேதுக்கு? தமது ஞானசத்தியால் தானேயொழித்த லமையாதோ? மாயையைத் துணையாகக்கோடலினும், இப்போதேமலமோசனஞ் செய்யாமையானும், சிவத்துக்கு அசத்தனாகுதல் வராநிற்குமேயெனின், சிவனைப் போல் சீவர்களும் ஞானக்கிரியைகளை யுடையவர்களென்பது சத்தியமாய்ச் சிவன்மலமுத்தனும், சீவர்கள்மலபெத்தருமாகி விளங்கி நிற்குமுண்மையால் சிவனுடைய ஞானக்கிரியைகள் பிரகாசித்தும், சீவர்களுடைய ஞானக்கிரியைகள் அப்பிரகாசம் பூண்டும் விளங்கும். இங்ஙனமாகவும், மலமில்லாதவராகிய கடவுள் ஆன்மாக்களிடத்துவைத்த கருணையால் அவர்கள்மலத்தினின்று நீங்குதற் குபகாரணமாகத் தனுவாதிகளைக் கொடுத்தலும், அப்பெருந்துணையால் மலமறைப்பாற் கிடந்தவான்மாக்கள் தமது ஞானக்கிரியைகள்சிறிது விளங்கப்பெற்றுத் தாமேமலத்தை யொழித்துக் கொள்வரென்பதே பிரமாணசித்தம். மலத்தையொழித்துக் கொள்வார்தம்முடையமுயற்சியால் ஆன்மாக்களேயாத லறியாது சிவத்துக்கு அசத்தனாகுதல் வராநிற்குமேயென்பது பெரும்பிழையாமென்க.

தனுவாதிகளைக்கொடுத்த கடவுள் ஆன்மபந்தமாயுள்ள ஆணவத்தைத் தாமேயொழிக்கக்கூடாதோ வெனின், ஆன்மாக்கள் அசத்தரா யிருந்தாலொழியச் சிவமே மலத்தையொழித்தற் கிடமில்லை. ஆன்மாக்கள சத்தியுடையவராதலால் தனுவாதிகளைக் கொடுத்துத் துணைசெய்ததாம். ஆன்மாக்களே நீக்கிக் கொள்ளுவதாயின் அன்றே நீக்கிக்கொள்ளாமை யென்னையெனின், சிற்றறிவுஞ் சிறுதொழி

மூடையவராகலானும், கன்மங்களைப்பொசித்துத் தொலைக்கவே ண்டியவராகலானும் அன்றே முத்தியடையாராயினர். தனுவாதிக ளைப் பெற்றமாத்திரத்தானே மலமொழிவ தெங்ஙன மெனின், தனு வாதிகளைக்கொடுத்த சிவம், வேதசிவாகம மாகிய சட்டங்களையுங் கொடுத்தனராகலின் அவற்றிற் கூறியுள்ள சிவத்தியானவிசிட்டத் தினால் முத்தியடையுமென்க. சிவசிந்தனையால் மலமொழிதலால் மல த்தையொழிப்பவர் சிவமென்று வேதசிவாகமங்கள் கூறும். இங்ஙனக் கூறிவதொழிந்து மாயாகாரியங்களால் முதற்பிரதிபந்தஞ்செய்து பின்னர் தனதுஞானசத்தியால் பிரதிபந்தஞ் செய்யாநிற்கும் சிவ மென்பது அப்பிரமாணமாம்.

மாயாகாரியப் பிரதிபந்தம்முன்னும், ஞானசத்திப் பிரதிபந்த ம்பின்னும் சிவம்செய்யாநிற்குமென்பதொழியவே, வேறுவிதத்தாற் கூறவேண்டு மென்பதாயிற்று. எங்ஙனமெனின், சேடியானவள் ஒரு பெண்ணைவளர்த்துப் பருவம்வந்தகாலத்து நாயகனிடஞ் சேர்த்து விடுதல்போலும், சிவசத்தியானது உயிரைப் பரிபாகப்படுத்தி உடை யவனிடஞ் சேர்க்குமென்பதாம். பெண்ணைவளர்க்குங்கால் சேடிக்கு ஊணுடையாதிகள் சாதனங்களாயிருந்ததுபோல் உயிரைப் பரிபாக ப்படுத்துங்கால் சிவசத்திக்குத்தனுவாதிகள் சாதனங்களாமென்க. சேடியானவள் பெண்ணைநாயகனிடஞ் சேர்த்துத் தான் புறம்பிலே தானே நின்றுவிடவும், நாயகனிடஞ் சேர்ந்த பெண் அவனைக் கூடிச் சுகிக்குமின்பத்தில் சேடியை மறந்து விடுமாறுபோலும், சிவனைச் சேர்ந்த ஆன்மாவும் சிவசத்தியைச்சிந்தியாது சிவானந்தத்தில் அமி ழ்ந்துகிடக்கு மென்பதாம். "தாயுடன்சென்றுபின்றாதையைக்கூடிப்பின் றாயைமறந்தேயுமதே நிட்டையென்றுமொழிற்கச்சியேகம்பனே." என்று பட்டினத்தடிகள் கூறியுள்ள பிரமாணத்தானுந் தெளியக்கடவர். சேடியைப்போலும் சிவசத்தி பின்னப் பொருளல்லவே யெனின், சத்தி சிவத்தில் அபின்ன மெனினும், பின்னமாகக் கூறும்விவகாரங் களு முளவாகலின் மேல்நிச்சயம் பழுதுடைத்தன்றாம். இங்கே விரி க்கிற்பெருகும்.

மேலிடங்களில் ஆன்மாக்களே பந்தத்தை நீக்கிக்கொள்ளுமெ ன்றுகூறி ஈண்டுச் சிவசத்தி ஆன்மாவைச் சிவத்தோடு சேர்க்குமென் பதெங்ஙனமெனின், தனுகரணாதிகளைப் பெறுவதன்முன்னர் ஆன் மா சித்தாயிருந்தும் ஜடப்பொருளாகவே கேவலத்திற் கிடந்ததாக லின், தனுகரணங்களைக் கொடுத்தது முதல் முத்தியனந்தரம் உட

னிருந்துபசரிக்கு முறையால் சிவசத்திக்கியக்கங் கூறப்பட்டியானவள் பெண்ணேவளர்க்குங்கால் பெண்ணுக்கியக்க போய்ச் சேடியேயியங்கச் செய்தன ளென்பதமையாவ ஆன்மசிவசத்திகளிடம் அன்வயித்துக்கொள்க. "தீர்ந்த வன்பர்க் கவரினுமன்பபோற்றி" என்றுகூறியுள்ள பரமோப னுந் தெளிந்திடுக. ஆன்மா சிவத்தை நாடிப்பத்தடிதூரம் டததுச் சிவம கருணையாலிரங்கிட பதினைந்தடிதூரம் வந்த ன்பதாம. இவ்வித நியாயங்களால மலமோசனஞ் செய் வார் ஆன்மாககளேயென்றும, சிவம் உடனிருந துபசரிக் றும நிசசயிககப்பட்டது.

ஆணவமலம்கண்ணுக்கு இருளும, செம்பிறகளிமட ஆதபஞானசததியைப பிரிவறககலநது நிற்குமாயின தோடு கூடியகண்ணுக்கு இருளும், ரசகுளிகையுடன் கூடி பிறகுக் களிமபுமின்மைபோல நிததியபரிபூரண சுத்தமாயிரு ளள சிவததோடு கூடிநின்றுள்ள ஆத்மாவை அஞ்ஞானமாவரித் தல் கூடாதெனின், இதுசததியம. நாயகனுமநாயகியும் ஓரறையில் ஏகசயனத்தில் வீற்றிருக்கவும், வெளியேநிற்பவர்கள் அறையினுள் ளாரிருவரும் ஒனறுய்க்கூடியின்பம அநுபவிக்கின்றன ரென்று மயங்குவதாய் முடியுமன்றி உண்மையில் அதுமயக்கவுணர்ச்சியே யாம். இங்ஙனநிற்க, "பரமசிவன்பராசததி பல்லுயிர்க்கும்பயின்றிருக்க, விரவுவதென்னிருளெனிற்கேள் வெய்யவழல் பசுமரததின், விரவியதே பசு மரமும்வெந்தவலவெந்துவிழும், பருவமுறக் கரணமுறப் பதியுமுறப் பழுத றவே" என்னும் உண்மைஞானவுணர்ச்சியால் மேலாட்சேபம் அற வே நிரஸ்தமென்க.

பசுவும், பசுவைப்பந்திதத பாசமும், பாசத்தை அரிக்கும்ப தியும் அநாதிநித்தமென்பது ஸ்திரமாகலின், பெருமானை வழிபட் டுமலமோசனஞ்செய்து கொள்ளக்கடவர். பாசம்நித்தமாயின் அநி த்தத்தையடையாதே யெனின், தேற்றுங்கொட்டையினுல் தெளி வுற்றநீரை அழுக்கானது பற்றுமலும், தானுங்கெடாமலும், அடி யிலேநின்று விடுமபோல் பாசமானது ஆத்மாவைப்பற்றுமலும் தானுங்கெடாமலும் தன்சத்திகுன்றி விரவிநிற்குமென்க. எங்ங மெனின், மாயைவியாபகமுடையதெனவும், மாயையின்மேலிட் வியாபகமுடையது ஆன்மசிற்சத்தியெனவும், ஆன்மசிற்சத்தியி

விட்ட வியபாகமுடையது ஆன்மாவெனவும், ஆன்மாவின் மேலி ற்கட் வியாபகமுடையது சிவசத்தி யெனவும், சிவசத்தியின்மேலி ட்ட வியாபகமுடையது சிவம் எனவும், உண்மைநூல்களுணர்த்து மாகலின், சிவபூரணத்துள் ஆன்மபூரணத்தை விசாரித்துத்தெளிய க்கடவர்.

முத்தியின்மலமொழியாது விரவிநிற்குமதனால் மயக்கத்தைச் செய்யாதோ வெனின், உருகிய பதத்திலுள்ள நெய்யானது கனங் கெட்டுத் தான்கெடாது நின்றதுபோலும், உயிர்களை யெல்லாங் கொல்லவெழுந்த ஆலகாலவிஷம் பரமசிவத்தின் றிருமிடற்றிலட ங்கி வலிகெட்டு முதல் குன்றாது நின்றதுபோலும், ஆணவமலம் ாது வலிகெட்டு ஆன்மசத்திக்கு வியாப்பியமாய் முதல்கெடாது த்தியமாகவே நிற்குமென்பதுபெற்றும். "முத்தியினின்மூன்றுமுதலு ாழியக்கேள், சுத்தவனுபோகத்தைத்துய்த்தலணு-மெத்தவே,யின்பங்கொ த்திறை யித்தைவிளைவித்தன்மல, மன்புடனேகண்டுகொளப்பா" என் ம் உண்மைவிளக்கத திருவெண்பாவினானுந் தெளிந்துய்க. "பாச ங் கெடாமல்பதியிற்கலவாமல், நேசச்சமத்துமுத்திநேருநாளெந்நாளோ"என் றுகூறிய தாயுமானசுவாமிகள் திருவாக்குஞ் சான்றுமென்க.

ஆயின், முத்தியில் வியாபகத்துவம் எல்லாவுயிர்களும் அடை வதெவ்வாறெனின், ஆகாசத்தில் உலாவும் சந்திரனை யேககாலத்தி ற் நாலும் பலருடைய கண்ணொளிகள் ஒன்றோடொன்று தாக்காது விரவிச்சென்று பற்றுதல் போலுமென்க. முத்தித்தசையில் ஆன் மாவும் சிவமும் ஒன்றாயிருக்குமோ இரண்டாயிருக்குமோவெ னின், ஒன்றும் இரண்டுமெல்லாமல் அத்துவிதமாய்நிற்குமென்பது மலோர் துணிபென்க. "பண்ணையுமோசையும்போலப்பழமதுவு, மெண் ணுஞ்சுவையும்போலெங்குமாம்-அண்ணலருள், அத்துவிதமாதலருமறைகளொ ன்றென்னு, தத்துவிதமென்றறையுமாங்கு" என்று சாதித்தருளிய மெய் கண்ட சிவாசாரிய சுவாமிகள்திருவாக்கானும், "ஒன்றாகாமலிரண்டா ம, லொன்று மிரண்டுமின்றாகாமல்" என்றருளியதிருச்சிற்றம்பலநாடி திருவாக்கானு முணர்ந்திடுக.

ன் இவருண்முதலாசாரியரை அத்துவிதமென்னுஞ் சொல்லினு பமெய்கண்ட சிவானுபூதிப் பெருஞ்செல்வரென்பதுதோன்ற "மெ ய்கண்ட சிவாசாரியசுவாமிகள்" என்னும் அற்புதத்திருநாமம்பாரா லிஉண்மை ஞானிகளெல்லாம் வழிபடுமதனானுங்காண்க. "பொய்

கண்டார் காணுப்புனிதமா மத்துவித, மெய்கண்ட நாதனருண்மேவுநாளெந் நாளோ" என்றற்றொடக்கத்து வாக்கியங்களே சான்றுமென்க. இந்நியாயங்களால் முத்தியில் ஆன்மாவும் சிவமும்நிற்கும் அநுபூதிநிலை வெளிப்பட்டதாகலின், இவ்வுண்மையை வற்புறுத்திக் கூறும் பின் வாக்கியங்களையுஞ் சிந்திக்கக்கடவர்.

### உமாபதி சிவாசாரிய சுவாமிகள்.

"தத்துவங்களெல்லாஞ் சகசமாயான்மாவிற்
பெத்தத்தினிற்கின்ற பெற்றிபோல்-முத்திதனிற்
சித்தமலமற்றார் செறிந்திடுவரென்றுமறை
சத்தியமாயோதிடுந்தான்"

"ஆதவன்றன் சந்நிதியி லம்புலியினேர்சோதி
பேதமறநிற்கின்ற பெற்றிபோல்-நாதாந்தத்
தண்ணறிருவடியி லான்மாவணைந்தின்பக்
கண்ணிலமுந்தியிடுகாண்"

"சென்றிவன்றானென்றிற் சிவபூரணஞ்சிதையும்
அன்றவன்றானென்றுமெனிலன்னியமா-மின்றிரண்டு
மற்றநிலையேதென்னி லாதித்தனந்தன்விழிக்
குற்றமறநின்றதுபோற்கொள்"

### தாயுமான சுவாமிகள்.

"செங்கதிரின்முன்மதியந் தேசடங்கிநின்றிடல்போல்
அங்கணனார் தாளி லடங்குநாளெந்நாளோ"

"வானூடடங்கும் வளிபோலவின்புருவாங்
கோனூடடங்குங் குறிப்பறிவதெந்நாளோ"

"எட்டத்தொலையாத வெந்தைபிரான்சந்நிதியிற்
பட்டப்பகல்விளக்காய்ப் பண்புறுவதெந்நாளோ"

"ஆணவத்தோடத்துவித மானபடிமெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ"

என்னுமிவ்வுறுதிப் பிரமாணங்களால் அத்துவிதமென்னுஞ் சொற்பொருளும், முத்திமுடிவும், மற்றைமுத்திகளின்றாழ்வும் வெளிப்பட்டதாகையால், இதனைத் துல்லியமுத்தியென்றுமேலோர்கொளவரென்க.

இவ்வுண்மைமுத்தி கிடைப்பதெங்ஙனமெனின், "ஆகமமாகிநின் றண்ணிப்பான்றாள்வாழ்க" என்று வாதவூர்ப் பெருந்திருவாளர்கூறிய வாக்கியவிசிட்டத்தினால் சிவாகமவழித்தாய் ஒழுகுவார்க்கேயுரித்தெ ன்பது பெற்றாம். "கொள்கசிவாகமத்திற்கூறுநெறிபூசாதி, கொள்ளல்புறநூல்விதியெல்லாம்" என்னுஞ் சைவசமயநெறித் திருக்குறளானுங்காண்க. ஆயின் வேதத்தின்வழிப் பரஞானங்கைகூடாதோ வெனின், "மெய்யாவிமலாவிடைப்பாகாவேதங்கள், ஐயாவெனவோங்கியாழ்ந்தகன்றநுண்ணியனே" என்னுந் திருவாசகப்பிரமாணத்தால் வெளிப்படுமென்க.

(அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.)

"மறையினாலயனான்மாலான்மனத்தினான்வாக்கான்மற்றுங்
குறைவிலாவளவினானுங்கூறொணாதாகிநின்ற
விறைவனார்கமலபாதமின்றியானியம்புமாசை
நிறையினார்குணத்தோர்க்கெல்லாநகையினை நிறுத்துமன்றே"

"அருளினாலாகமத்தேயறியலாமளவினாலுந்
தெருளலாஞ்சிவனை ஞானச்செய்தியாற்சிந்தையுள்ளே
மருளெலாநீங்கக்கண்டுவாழலாம்பிறவிமாயா
விருளெலாமிரிக்கலாகுமடியரோடிருக்கலாமே"

என்னுஞ் சித்தியாருள்ளுங்கண்டுணர்க.

ஆயின் வேதம் அப்பிரமாணமோவெனின், "அன்னியநூலின் விதியவிரோதமே, லுன்னேல்பழுதென்றுளத்து." என்னும் ஷை குறள் வெண்பாவால் வேதம் அப்பிரமாணமென்று பிறர் சொல்லக்கேட்பினும் அதிபாதகமென்க. "வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள் வேறுரைக்குநூலிவற்றின்விரிந்தநூல்கள், ஆதிநூலநாதியமலன்றருநூலிரண்டு மாரணநூல் பொதுசைவமருஞ் சிறப்புநூலாம், நீதியினாலுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்குநிகழ்த்தியது நீண்மறையினொழிபொருள்வேதாந்தத், தீதில் பொருள்கொண்டுரைக்கு நூல்சைவம்பிறநூ நிகழ்பூர்வஞ்சிவாகமங்கள்சித்தாந்தமாகும்." என்னும் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் திருவாக்கால் வேதசிவாகமம்இரண்டும் பதிவாக்கெனவும், இவை ஆதிநூலாக உலகினுள்ள சாமானியருக்கும், சிறந்த சத்திநிபாதர்க்கும், முறையேபொதுநூலாகவும், சிறப்புநூலாகவுங் கொடுக்கப்பட்டன வெனவும், வேதத்திற் கூறுதொழிந்தனவும், வேதாந்தத்தில் தீதில்லாத பொருளையுடையனவு மானவற்றை எடுத்துச்சொல்லுநூல் சைவநூலெனவும், இஃதொழிந்தனவெல்லாம் பூர்வபக்ஷமெனவும், சிவா

MAHAMAHOPADHYAYA

கமங்கள் சித்தாந்தமெனவும் நாட்டப்பட்டதாகையால், வேதசிவாகமங்க ளிரண்டும் பிரமாணசித்தமென்பதே சைவநூற்றுணிபென்க.

ஆத்மாக்கள் பரிபாகம் பலவேறுபாடுடைய தாகலின் அவரவர் பரிபாகத்துக்குத்தக்க வுணர்ச்சியைத்தரும் பரிசினை யுடையது பற்றி வேதத்தைப்பொதுவென்றும், பரிபாகமுதிர்ச்சியில் வரத்தக்க சிவஞானத்தை பலிப்பிப்பது ஆகமமாதலால் அதனைச்சிறப் பென்றும் மேலோர்கொள்வர். அறம்-பொருள்-இன்பம்-வீடு-என்னும் நாலையுங் கூறுவது வேதமும், வீட்டைமாத்திரம் தனித்துக் கூறுவது ஆகமுமாக விளங்கலான் வேதம் உலகிலுள்ள சாமானியருக்கென்றும், ஆகமம் சிறந்த சத்திநிபாதர்க்கென்றுந் துணியப்படுமென்க. இதனால் ஒன்றிலொன்று முரணுமை வெளியாகப்பெற்றுச் சுருங்கச் சொல்லும் வேதத்தையும், விளங்கச்சொல்லும் ஆகமத்தையும் பரிபாக நெகிழ்ச்சியளவாய்க் கொண்டுய்வாராக.

பல்வேறுவகைப்பட்ட திரிபுணர்ச்சியைக் கன்மத்தினளவாய் விளைக்கும் வேதத்துண்மையை ஆகமத்துணையாலன்றி அறியப்புகுவது வெறுங்கதையாமென்க. வேதம் பொருள்பலபடத்தோன்றுஞ் சூத்திரமும், சிவாகமம் அதனை அங்ஙனமாக வொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும்போலச் சிவபெருமானால் அருளிச்செய்யப் பட்டனவாகலின் அற்பபரிபாகிகளல்லாத சைவர்கள்கொள்ளத்தக்கது ஆகமமேயாமென்க. வேதமும் சிவாகமும் அபேதமாதலால் ஆகமத்தைமறுது வேதவழித்தாய் ஒழுகலாகாதோவெனின், வேதம் ஆகமத்தில் அபேதமாயினும், அதுசாமானியருக்கே கொடுக்கப்பட்டது என்பதனால் சத்திநிபாதர்க்குப் பொருந்தாதென்க. ஜனகர்முதலிய முநீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதியும் ஞானம் நிலைபெறுதவராயினர் என்றும், பின்பு ஆகமாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதி ஞானம்பெற்றனர் என்றும், ஸ்காந்தத்தில் சங்கரசங்கிதையிற் கூறியவாற்றானும் இவ்வுண்மைதெளிக.

ஊர்த்துவமுகமாகிய ஈசானத்தினின்றும் காமிகமுதலிய சிவாகமம் இருபத்தெட்டும், அதோமுகங்கள் நான்கினுள்ளும் தற்புருடத்தினின்றும் இருக்குவேதமும், அகோரத்தினின்றும் யசுர்வேதமும், வாமதேவத்தினின்றும் சாமவேதமும், சத்தியோ சாதத்தி

னின்றும் அதர்வணவேதமுந் தோன்றினவென்பது பிரமாணசித்த மாகலினாலும், வேதாரணியத்திற்பெருமானை யெழுந்தருளப்பண்ணி ஆகமவழித்தாய் வேதங்கள் பூசித்தன வென்பதனாலும், வேதத்தி னும், ஆகமத்திற்கு விசிட்டம் நாட்டப்படுமென்க.

ஆகமம் விசிட்டமுடையதாயின் மனுவாதி ஸ்மிருதிகளில் தந் திரா நுஷ்டானத்திற்கு நிஷேதஞ்சொல்லுவ தென்னையெனின், இது விபரீதவுணர்ச்சியாம். எங்ஙனமெனின், சங்கரஸம்ஹிதை முதலிய வற்றில் விசிட்டங்கூறி ஸ்மிருதியாதிகளில் கனிஷ்டங்கூறுவது பொ ருந்தாதாகலினென்க. வேதபாஹ்யராயிருக்கிறவர்களுக்கு அதிகா ரா நுகுணமாகவும், அசுராதிவியாமோஹார்த்தமாகவும், வாமகாளா முகபௌத்தாகமங்களையும் உண்டுபண்ணி அவை வேதபாஹ்யமா கலின் வேதோக்தா நுஷ்டா னதிகாரிகளுக்குச் சேவியமல்லவென்று காமிகாதி சைவாகமங்களினும் நிஷேதித்திருக்கு முண்மையை விசா ரியாமல் ஸ்மிருதிகளில் நிந்தைகூறியது மூலாகமங்களையே யென்று வாய்க்குவந்தபடிப் பிதற்றும் பேதமையை யினியொழிவாராக. மனு ஷ்யாதி சிவபரியந்தம் ஆப்ததாரதம்யங்களினால் சிவன் பரமாப்த னாகலின் சிவவாக்கியம் ஒருவராலும் பாதிக்கப்படுவ தல்லவென்க.

வாயுசங்கிதை- "சைவநூலிற்கூறப்பட்டதும, பாசமூன்றையு ந்தவிர்ப்பதும், மேலானதுமாகிய தீக்ஷையைத்தவிர யாதொரு ஆச்சி ரமமும் இவ்வுலகத்திலே மனிதருக்கு மேன்மையன்று. ஆதலால் தீக்ஷையினாலேதான் மோக்ஷம். ஆச்சிரமங்களினாலும், மற்றைக்கரு மங்களினாலும் மோக்ஷமில்லை. அத்துவசுத்தியின்றி முத்தியை விரும் பும் மனிதர் கோலின்றி நடக்கத்தொடங்கிய குருடர் போல்வர். தோ ணியின்றிக் கடலைக்கடக்க விரும்பினவர் போல்வர்" என்றும் ஸ்கா ந்தம் - பிருகுசாபப் பிரகரணம் - "இங்கே முப்பாசத்தை அகற்றுவ தும், மேலானதும், சிவச்சம்பந்த முடையதுமாகிய தீக்ஷையாலன்றி ஆத்மாக்களுக்கு ஆச்சிரமத்தாற் செய்யப்பட்ட உயர்ச்சியொன்று மில்லை. ஆகலான் தீக்ஷையாலேதான்முத்தி ஆச்சிரமங்களாலும் பிற கருமங்களாலும் முத்தியில்லை" என்றும், வைதிக நூல்களெல்லாம் ஆகம விசிட்டத்தைப் பலவிடங்களில் வியந்துகூறு நுட்பமறியா மல் தமக்கு முனிவர்களால் கிடைத்த சாபத்தின்வழிச் சிவாகமத் தைப் புறங்கூறிவரும் பாதகர் எக்கதியடைவாரோ அறிகிலம்.

மேல் வாக்கியங்களில் ஆச்சிரமங்களினானும், கருமங்களினானும் பயனில்லை யென்னும் வாய்மையைப் பாராட்டுமிடத்துத் தீக்ஷாவிசிட்டங்களைக்கூறும் ஆகமத்திற் றணிவுடையனவேயாக வைதிகநூல்கள் விளங்கலான், சிவாகமங்களை ஸ்மிருதியாதிகள் நிந்தை கூறுமென்பது விந்தையாமென்க. வேதாகமங்களல்லாத மற்றைப்புராண ஸ்மிருதியாதிகளியாவும் பசுவாக்கே யல்லது பதிவாக்கல்லாமையான் அவற்றில் முன்னொடுபின் முரணிய வேறயவாக்கியங்க ளிருப்பினும் நிஸ்புருஷமென்க. இவற்றின் விரிவைச் சிவாக்கிரயோகிகள் செய்தருளிய சிவஞானசித்தியார் உரையானும், சித்தாந்ததீபிகை என்னும் பிரபந்தத்தானுந் தெளியக்கடவர். இந்த மூர்த்திகள் சிவதீக்ஷையினால் சம்ஸ்காரப்பட்ட வைதிக ரத்னமாகவும், எதிபுங்கவராகவும் விளங்கியிருந்த மஹாசைவரென்க.

ஆகமம் என்பது ஆ - ஞானமென்றும், க - மோக்ஷமென்றும், ம - மலநாசமென்றும் பொருளைவிளக்கி ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி ஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தை அளிக்கும் உண்மையானும் உணர்க. ஆகமத்தினுடையமுடிவை யோகரூடியாய் அடையின்றிச் சித்தாந்தமென்றே எல்லாச் சமயங்களும் அங்கீகரித்த விஷயமாகவும், ஆகமத்தின் மேலிட்டதொரு சித்தாந்தமுண்டென்பது எங்ஙனம்? பௌத்தசித்தாந்தம், மாயாவாதசித்தாந்தம், வைஷ்ணவசித்தாந்தம் என்பனவாகக்கூறிச் சைவத்தைக்கூறுங்கால் சித்தாந்தம் என்று தனித்துக்கூறும் நூல்வழக்கினானுந்தெளிக, "அருளாலேதம்மை யறிந்தருளாயந்தப், பரிபூரணமேபரையாய்ப்-பரையொழிவில், ஆனந்தாதீதமா மத்துவிதசித்தாந்த, மோனம்வேதாந்த முடிவு" என்னுந் திருவெண்பாவில் அத்துவிதமான ஆகமமுடிவாகிய மௌனம் வேதமுடிவுக்கு முடிவாகும் என்றும், "தன்மையுமுன்னிலையுந் தானாய்ப்படர்க்கையுமா, யென்னொழிவிலின்பமாயின்புமிது-வென்னாத, வேதாந்தசித்தாந்தமே பிறவாவீடென்றான், ஓதாமல்வேதமுணர்ந்தோன்" என்னுந் திருவெண்பாவில் வேதத்தின் முடிவாகிய சித்தாந்தமே மீண்டுவாராமுத்தியென்று ஓதியறியாமல் திருவருண்ஞானத்தால் நான்கு வேதங்களையு முழுதுணர்ந்த திருஞான சம்பந்தப்பிள்ளையார் அருளிச்செய்தார் என்று கண்ணுடைய வள்ளலார் விளக்கிய வுண்மையினானும், அத்திருவெண்பாக்களுக்கு உரையெழுதிய திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் உரையிற் கோடலென்னு முத்தியால் வியாசர் முதலினோர் ஓதாமலுணரினும் அவர்க்கு விட்டுணுபரம் என்

றும், அகம்பிரமமென்றும், பின்னர் மலைவுபிறந்ததாகையால் பிள்
ளையாரைப்போலும் அவர் சுதந்தர அறிவிலரென்க என்று தெளி
த்துக்காட்டிய நியாயத்தினாலும், சித்தாந்த மென்னும் ரூடிநாமத்
தையுடைய சுத்தசைவத்தினது துல்யம் வெளிப்பட்டதென்க. "ஒரு
ம்வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த, வாராவின்பவருங்கனிபிழிந்து, சாரங்
கொண்டசைவசித்தாந்தத், தேனமுதருந்தினர்சிலரே" என்றருளிய கும்
ரகுருபரசுவாமிகள் திருவாக்கால் வேதமென்னும் விருட்சத்துச்சி
யில் உபநிடதமாகிய பழம் பழுத்துள்ளதென்றும், பழத்தை முழு
சாய் விழுங்குவார் சுவையைப்பருகாமல் கக்கல்விக்கல்களாகிய துன்
பம் அடைவதுபோல் பழம்போலும் அவ்வாக்கியத்தை ஜடார்த்தங்
கொண்டுணர்வார் பிறவிநீங்காமுத்தியினரென்றும், அவர்கள் வேதா
ந்திகளென்றும், பழத்தைப்பிசைந்து சாரங்கொள்வதுபோல் ஆகம
வாக்கியங்களால் அன்வயங்கொண்டு உண்மையையுணர்வார் சுவை
யைப்பருகியவராகிப் பிறவாமுத்தி யடைவரென்றும், இவர்கள் சித்
தாந்திகளென்றும், இச்சைவசித்தாந்திகள் சத்திநிபாதர்களாகலின்
வெகு சிலரென்றும் உண்மைவிளங்கு மாகையால், இதனை விவேகி
கள் பகுத்துணர்வாராக. ஆகவே பழம் வேதாந்தமென்றும், சாரம்
சித்தாந்தமென்றும், நாட்டப்பட்டது. "புறச்சமயத்தவர்க் கிருளாயகச்
சமயத்தொளியாய்ப் புகலளவைக்களவாகிப் பொற்பணிபோலபேதப், பிறப்பி
லதாயிருள்வெளிபோற்பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமுமின்றிப்
பெருநூல்சொன்ன, வறத்திறனால்விளைவதாயுடலுயிர்கண்ணருக்க னறிவொ
ளிபோற்பிரிவருமத்துவிதமாகுஞ், சிறப்பினதாய்வேதாந்தத் தெளிவாஞ்சை
வசித்தாந்தத்திறனிங்குத்தெரிக்கலுற்றாம்" என்னும் உமாபதி சிவாசாரிய
சுவாமிகள் திருவாக்கானுந்தெளிக. வேதாந்தத்தின்றெளிவு சைவசி
த்தாந்தமென்றதனால் ஆகமாந்தமல்லாத மாயாவாத முதலியவற்
றைப் பொருளென மதிப்பது பெரும்பாவ மென்க. "சித்தாந்தத்தே
சிவன்றன் றிருக்கடைக்கண்சேர்த்திச் செனனமொன்றிலே சீவன் முத்தராக.
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந்தம் பொழிந்துவரும் பிறப்
பையறுத்து, முத்தாந்தப் பாதமலர்க்கீழ்வைப்பனென்று மொழிந்திடவு முல
கரெல்லா மூர்க்கராகிப், பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப்பாவப் பெருங்
குழியில் வீழ்ந்திடுவ தீதுவென்ன பிராந்தே" என்னுந் திருவாக்கால்
சிவன் ஆன்மாக்களிடத்துக் காருண்யத்தால் திருநோக்கமாகிய
தீக்ஷாசம்ஸ்காரஞ்செய்து, ஒரு பிறப்பிற்றானே அவரைச் சீவன்
முத்தராக்கி, அந்தப்பக்குவம் வந்தவிடத்து மலங்களைப்போக்கி,
ஞானதீர்த்தத்தின் முழுகச்செய்து சிவானந்தானுபவத்தை விளை

த்து, ஜநநத்தை யொழித்து, முத்திவடிவாகிய தனது திருவடித்தாமரையில் வைப்பனென்று சித்தாந்தமாகிய திவ்யாகமங்களில் திருவுளம்பற்றி யிருக்கவும், இவ்வுலகத்தில் ஆத்மாக்களெல்லாம் மூர்க்கத்தன்மை யுள்ளவராய்ப் பைத்தியங்கொண்டவர் பிதற்றுவதுபோலப் பிதற்றிப் பாவமாகிய பெருங்குழியில் வீழ்ந்தலையும் பிராந்தியென்னேயோ வென்று உண்மையை யுணர்த்திய சகலாகமபண்டிதரென்னும் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் பரமோபதேசத்தையுஞ் சிந்திக்கக்கடவர். மேல் நியாயங்களால் வேதசிவாகமங்களிரண்டும் அபேதமாயினும் ஆகமத்தின் வழிநடப்போரே உண்மை முத்தியினரென்று நாட்டப்பட்டதென்க.

இனி வேதசிவாகமங்கள் அபேதமென்னு முண்மை வருமாறு. மூலப்பிரகிருதியின் சத்துவகுணம் மாயையென்றும், ரஜோகுணம் அவித்தையென்றும், தமோகுணம் ஆவரணமென்றும், ஆவரணத்தின் காரியம் விக்ஷேபமென்றும், இவற்றுள் அவித்தைநாநாபேதமென்றும், அந்த அவித்தையின் சத்துவகுணத்திலுள்ள கூடஸ்தன் ஞானியென்றும், ரஜோகுணத்திலுள்ள கூடஸ்தன் கர்மாநுஷ்டான பரனென்றும், தமோகுணத்திலுள்ள கூடஸ்தன் அஞ்ஞானியென்றும் வேதங்கூறும்.

சுத்தவித்தைக்குக்கீழ் அசுத்தமாயைக்கு மேலுள்ள ஸ்தானத்தில் ஆத்மாக்கள் எண்ணிறந்திருப்பர்களென்றும், அவர்களில் சுத்தமாயா தனுகரணாதிகளைப்பெற்றவர் விஞ்ஞானகலரென்றும், அசுத்தமாயா தனுகரணாதிகளைப்பெற்றவர் பிரளயாகலரென்றும், பிரகிருதி தனுகரணாதிகளைப்பெற்றவர் சகலரென்றும் சிவாகமங்கூறும். தனுவாதிகளைப் பெறுவதன் முன்னர் விஞ்ஞான கேவலிகள், பிரளயகேவலிகள், சகல கேவலிகள் என்று முறையே சொல்லப்படுவரென்க.

சிவதத்துவத்துக்கும் சுத்தமாயைக்கும் அபேதமாதல்போல மூலப்பிரகிருதிக்கும் சுத்தமாயைக்கும் அன்யோன்ய மாதலால் ஆகமங்கள் மூலப்பிரகிருதியையும் மஹாமாயையையும் வேறுபிரித்தோதாது சுத்தமாயையென்றே கூறுமென்க.

கூடஸ்தனை ஆத்மாவென்றும், அவித்தையைப் பலபேதமுள்ள ஆணவமென்றும், ஆவரணத்தை அசுத்த மாயையென்றும், விக்ஷே

பத்தைப் பிரகிருதியென்றும், ஆகமங்கள் பரிபாஷையாற் கூறும். அன்றியும், சிவன் சுத்தவித்தைமுதலியபஞ்சதத்துவ ரூபமாயிருப்பதுபோல் ஆத்மாவும் புருஷதத்துவரூபமா யிருப்பனென்றும், இப்புருஷதத்துவம் பிரகிருதிக்குமேலும், ஆத்மா அசுத்தமாயைக்குமேலும் இருக்குமென்றும் ஆகமம் கூறும். பிரமஞ் சுத்த மாயையிற் பொருந்தி விராட்டு, இரணியகர்ப்பன், அந்தரியாமியென்று சொல்லப்படுமென்றும், கூடஸ்தன் அந்தக்கரணத்தைப் பொருந்திச் சீவன் என்று சொல்லப்படுவன் என்றும், வேதங்கூறும். இங்ஙனமாகவும், பிரமமே கூடஸ்தன் என்று பிதற்றும்பித்துரை பேதமையிற் பேதமையென்க. "வேதமொடாகமமெய்யாமிறைவனூல் ஓதும் பொதுவுஞ்சிறப்புமென்றுன்னுக, நாதனுரையிவைநாடிலிரண்டந்தம் பேதமதென்னிற்பெரியோர்க்கபேதமே." என்னுந் திருமந்திரவுரையானும் அபேதத்தைத் தெளிவாராக. இவ்வுண்மையை விசாரியாமல் வேதம்வேறு ஆகமம் வேறு என்று தம்முடைய அற்ப வுணர்ச்சியளவாய்ப் பிதற்றி ஆகமத்திற்கு மாறாக ஒழுகும் பதிதர்களைச் சைவர்களாவார் கனவினுஞ் சிந்தியாதொழிவாராக.

இங்ஙனிற்க, வேதத்தின் றிரிபுணர்ச்சியை விளக்கும் மற்றைச் சித்தாந்தங்கள் வருமாறு :மீமாஞ்சைநூல் - ஜைமினிபகவானாலும், நியாயநூல் கணநாதராலும், வைசேஷிகநூல் அக்கபாதராலும், சாங்கியநூல் கபிலமுனிவராலும், பாதஞ்சலநூல் பதஞ்சலிபகவானாலும், பாஸ்கரியம், மாயாவாதம், சத்தபிரமவாதம், கிரீடாப்பிரமவாதமாகிய விந்நான்கும் வியாசபகவானாலும், ஒன்றிலொன்று முரணிய சித்தாந்தங்களாய் வேதத்தையாதாரமாகக்கொண்டு செய்தநூல்களாகலின் சத்திநிபாதர்க்குரித்தன்றாமென்க.

இனிவேதாகமங்களுக்குப் புறம்பான நாஸ்திக சித்தாந்தங்கள் பௌத்தம் - ஆருகதம் - உலோகாயதம் முதலியனவாம். இவற்றுள் உலோகாயதம் பிருஹஸ்பதிபகவானாலும், ஆருகதம் அருகனாலும், பௌத்தம் ஆதிபுத்தனாலும், செய்யப்பட்டன வென்க. இவர்கள் முத்தியைக் கூறுங்கால் உலகாயதனுக்குப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு வென்னும் நான்குபூதங்களின் கீழ்ப்பட்ட புவனங்களில் பிறவியொழியுமென்றும், ஆருகதருக்குக் குணதத்துவத்தின் கீழ்ப் பிறவி யொழியுமென்றும், புத்தருக்குப் புத்தி தத்துவத்தின்கீழ்ப் பிறவி யொழியுமென்றும், சாங்கியருக்குப் பிரகிருதிவரையும் பிறவி

யொழியுமென்றும், பாஞ்சராத்திரிகளுக்குப் பிரகிருதிக்குக் கீழ்ப் பிறவி யொழியு மென்றும், வேதாந்திகள் புருட தத்துவத்தை யடைவரென்றும், பௌராணிகர் அராகதத்துவத்தை யடைவரென்றும், காபாலிகர் காலதத்துவத்தை யடைவரென்றும், பாசுபதர் மாயாதத்துவத்தை யடைவரென்றும், மகாவிரதியர் வித்தியா தத்துவத்தை யடைவரென்றும், காருடம், தக்ஷிணம், வாமம், பூதம் என்னுந் தந்திரங்களில் தீக்ஷைபெற்றவர் சத்திதத்துவத்திலுள்ள நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தியென்னும் புவனங்களை முறையே அடைவரென்றும், சுத்தமாகிய சாத்தநூலார் சத்தி தத்துவத்தை யடைவரென்றும், கௌளயாமளாதியர் பிசாசபதத்தை அடைவரென்றுஞ் சைவநூற்றுணிபென்க. இங்ஙனமாகவும், புருட தத்துவப் பேறுடையாராகிய ஏகான்மவாதிகள் சிவஞானச் செல்வர்களைப் புறங்கூறித்திரிவது எக்கதிக்காளாகவோ அறிகிலம்.

இங்ஙனநிற்க, சைவருள்பலர் மாயாவாதத்துக்குரிய ஆசாரியரை வேடவொற்றுமையால் தம்மாசாரியரெனக்கொண்டு வழிப்பட்டொழுகியும், அம்மாயாவாத நூல்களைத் தஞ்சமயநூல்களெனக் கொண்டு பாராட்டியும், அம்மாயாவாதத்தை யவலம்பித்து அவர்களால் தூற்றப்படும் சிவாகமதூஷணம், சிவசாத்திரதூஷணம், சிவாசாரியதூஷண முதலியவற்றைக்கேட்டு எரிவாய்நிரயத்துக்காளாகின்றனர். கன்மத்தால் ஒருவேளை அவரோடு கூடிப்பழகப்பெறினும், பரிபாகிகளாவார் பாவத்துக்கஞ்சி உடனே அவர்கள் கூட்டத்தினின்று நீங்கவேண்டுமென்பது சைவநூற்றுணி பென்க. "தம்மைத்தெளிந்தாராய்த்தமேபொருளாகி, யெம்மைப்புறங்கூறியின்புற்றுச் - செம்மை, அவிகாரம்பேசு மகப்பிரமக்காரர், வெளியாமிருளில்விடாதே" என்றும், "தாம்பிரமங்கண்டவர்போற்றம்மைக்கண்டாங்கதுவே, நான்பிரமமென்பவர்பானண்ணாதே" என்றும், "ஆதிமறையோதியதன்பயனென்றும்அறியா, வேதியர்சொன் மெய்யென்றுமேவாதே" என்றும் வரும் சந்தானகுரவர் வாக்கியங்களே சான்றுமென்க. இதனால் பசுஞானிகளைவிட்டுச் சிவஞானிகளைப் பற்றவேண்டுமென்பது பெற்றும். "கண்ணுதலாரேனுமுன்னைக் கைகுவியாராயினந்த, மண்ணுவார்நட்பைமதியேன்பராபரமே" என்னும் அருள்வாக்கியமுஞ் சான்றுமென்க.

ஞானமானது மூன்றுவிதமாகிப் பாசஞானம், பசுஞானம், பதிஞானமென்று விளங்கி முறையே பாசமைந்தினோடுளோந்தும், ஆணவமொன்றினோடுளோந்தும், சிவமொன்றினோடுறழுந்தும் பாசஞா

னி-பசுஞானி-பதிஞானியென்று பரிபாகத்தளவாய் ஆன்மாக்கள் நிற்குமுறைமை கண்டுணர்க. அவ்வாணமுமொழிந்து தனிப்பது கூடாதோவெனின், ஆணவமொழிவது சிவன்றிருவடியைப் புணர்ந்தார்க்கல்லது அமையாதாகலின் அதுபொருந்தாதென்க. "தாணுவின்றன்கழலிணையத் தவிருமலந் தவிர்ந்தாற், றன்சுத்தனுயிருக்கை முத்தியரன்றுளேப், பூணவேண்டுவ தொன்றுமில்லை யெனிலருக்கன், புகுதவிருள்போமடியிற்பொருந்தமலம்போமே" என்பதனாற்காண்க. சிவன்றிருவடியைப் புணர்ந்தார்க்கல்லது ஆணவம் அகலாமையானும், ஆத்மா எதைச் சார்ந்தால் அதுவாய் நிற்குமியல்பினதாகலானும், கருவிகளைக்கடந்து சிவனைக்கூடாமல் தனித்துள்ளேமென்பாரை ஆணவத்தோடுளைந்த பசுஞானிகளென்றே சிவஞானிகள் ஆணையிட்டுக் கூறுவரென்க.

## திருச்செந்தூரகவல்.

"பாசஞானம் பகர்பசுஞானம்
ஈசஞானமென்னமூன்றுளவாம்.

### பாசஞானம்.

அதுகேள்பாசமாவதாணவ
மதிமயற்கன்ம மாயையிரண்டுந்
தெருமரல்காட்டுங் கருமமுந்திரோதையு
மருவிடும்பஞ்ச மலங்காணிதனை
ஆசெனவுணரா தகமெனவிருக்கை
பாசஞானப் பண்பதுவாகும்.

### பசுஞானம்.

தரும்பசுஞானஞ் சாற்றுதுங்கேண்மின்
வரும்பவமூட்டு மலமைந்தவற்றி
ளுணவமொன்று மகலாமையினுற்
காணுறுவிகடக் கருவிகடேர்ந்து
தன்னையுணர்ந்து தானேபிரம
மென்னக்கருதி யிருப்பதாகும்.

### பதிஞானம்.

பதிஞானத்தைப் பகருதுமகங்கூர்
மதிஞானத்தால்வரும் பவமொழியா

தாகையாலருள்புக் காணவமொழிந்திட்
டேகமாமின்பத் தெய்துவதாகும்."

என்றருளிய சிற்றம்பல நாடிகள் பிரபந்தத்தானுங் கண்டுணர்க. "ஆணவவழுக்கடையு மாவியைவிளக்கியனுபூதி யடைவித்ததொருபார் வைக்காரனும்" என்றருளிய அருணகிரிநாதர் திருவாக்குண்மையானும் பதிஞானம் வெளிப்பட்டதாகலின், பசுஞானத்தைக் கனவிலும்பற்றாது சிவஞானத்தையே மேலோர் சிந்திப்பரென்க. "மறுத்தானொர் வல்லரக்கனீரைந்து முடியினொடுதோளுந்தாளு, மிறுத்தானையெழின் முளரித்தவிசின்மிசை யிருந்தான்றன்றலையிலொன்றை, யறுத்தானையாரூரிலம்மானை யாலாலமுண்டுகண்டங், கறுத்தானைக்கருதாதே கரும்பிருக்கவிரும்பு கடித்தெய்த்தவாறே" என்றருளிய ஆளுடைய வரசுகள் திருவாக்கானுந்தெளிக.

ஆயின் அப்பசுஞானிகள் கூட்டுறவால் வருங்குற்ற மென்னையெனின், மேல் சிவஞானத்தை யடையவொட்டாது இதுவே யுண்மையென்று அவர் சாதித்துக்கூறும் மலபந்தவாசகத்தால் உண்மை ஞானம் இழக்கப்பெறுவதே யென்க.

பசுஞானமாவது சித்திக்குமே யெனின், பிறவாமுத்தியைப் பயக்கு ஞானமன்றாகலின் மேலோர் பழிப்பரென்க.

(கண்ணுடையவள்ளலாரருளிச்செய்தது.)

"அறிந்ததெல்லாம்பொய்யென்ற வத்துவிதியார்க்கும்
வெறும்பாழிலூன்றல்விடாது - பிறந்திறப்பை
யானுனதொழிவு மானந்தமாமுதிப்பும்
போனாற்காணுன் பிறப்பும்போம்."

என்னும் ஒழிவிலொடுக்கத் திருவெண்பாவினாலுணர்க. இதனுண்மையைப் பின்வெண்பாக்களானும் உணர்த்துவாம்.

ஒன்றும்பிரமமுடைந்தேபலவாகிச்
சென்றாற்பல்யோனிசிரிப்பாமே - நன்றும்
பிரமம்விமலமுடைத்தாகநீர்பேசுந்
திரமென்போயிற்றே திரிந்து. (க)

அவிகாரமாம்பிரமத்தாரோபிதங்கள்
புவிமீதுகூறிப் புலம்பில் - இவிகாரம்

வந்தவாறென்னோ வகுத்துரையீர் முன்னொடுபின்
சிந்துமாறேசொல்வீர் தீது. (௨)

அசத்தாமுலகுதித்தல் சத்தினிடத்தென்றே
யிசைத்துழலு மூமர்கா ளென்னே - நிசத்தெரிவீ
தாமோகடத்திற் படமுதித்த லாவதெவன்
சாமாறேபோந்து சரிப்பீர். (௩)

பாலேதயிராய்ப் பரிணமித்தாலென்னவுல
கேலாநிற்கும்பிரமத் தென்றுநீர் - மாலா
யுரைப்பீர்தயிர்மீண்டு முற்றிடுமோபாலாய்க்
குரைப்பீர்நாய்போற்குணமேகொண்டு. (௪)

இல்லாததேததுவேமாயையெனினில்லாத்
தில்லாததேயாகு மெம்மதமே - யில்லா
வொருபொருளுண்டென்ன வுரைக்குமோவேதம்
வருபொருள்வேறாக மதிப்பீர். (௫)

இருட்கேவலசகல மெய்துமோ மாயா
மருட்கோலம்போர்த்தழியுமோதான் - தெருட்காட்சி
யற்றுப்பலயோனி யார்ப்புண்டழிதருமோ
பித்துடையீர் நும்பிரமம்பேசு. (௬)

நீரோபிரமநிலைநின்றோர்நித்தியராம்
பேரோவுமக்குப் பெருவாழ்வீ - தாரோ
கொடுத்தார்காமம்வெகுளிகொண்டுமயக்குற்றே
விடுத்தார்போன்றேபேசுவீர். (௭)

பதிபசுபாசத்துண்மை பார்த்துணரமாட்டா
மதியிலிகளும்மை மதித்தல் - விதிவசமே
யாயினுநீரந்தகனுக் காளாகுமாறெமது
தாயுமானார் சொல்லேசார்பு. (௮)

தசமன்கதையுவமை கொண்டுநனிசாற்றி
நகைதருநும்போதவொளிநன்றே - யிசையுமிடத்

தேதமுறுமூடர்பத்திலேய்ந்தகதையென்று
லோதுமவர்நீர்தாமன்றோ. (௯)

சச்சிதாநந்தத் தனிமுதலாமுண்மைதனை
நிச்சயிக்கமாட்டா நிர்மூட - ரச்சமிலா
தாயுமதுதாமா யகங்கரித்தேயாடஜப்பே
ரேயுமாபோறக்கூறலென். (௧௦)

குட்டித்திரட்கரடி யாரெருமூகக்கோன்குதித்துக்
கட்டிப்புதைந்தகதை மேலோர் - வெட்டவெளி
யாயுரைத்து மாசிரியரல்லாரபக்குவரோ
டாயுமதென்ஞானவொளியற்று. (௧௧)

அகம்பிரமவாதத் தழுந்தியேஞாலம்
புகும்பிரமத்தொன்றுப் புகன்றே - யகங்கொண்
டழியுமறிவிலிகாளங்கோநும்போத
வொழிவென்றோகாண்பதொடுங்குற்று. (௧௨)

ஏகான்மவாதத் திசைந்தேயலமருவீர்
மோகாந்தகாரத்தின் மூழ்கியே - யேகாந்த
வாழ்வடைந்தார் போன்றாத்தை வாயாற்பிதற்றுவதால்
தாழ்விலையோ பேசீர் தணிந்து. (௧௩)

மாயாவாதம்பற்றியாழ்குவீர் நுந்துகளாற்
றேயாதரனடிக்கீ ழென்றுமே - பேயாய்க்
குரங்காய்க் கழுதையாய்க் குட்டிச்சுவராய்
வருந்தலிற்றோபிரமவாழ்வு. (௧௪)

மாயாமலத்தழுந்தி மாயுமதியிலிகாள்
வீயாமுன்காழி விரகன்று- ளேயாமல்
நாம்பிரமமென்று நவின்றிங் குழல்வானேன்
சாம்பிணங்களன்றோநீர்தாம் (௧௫)

காழிப்பதிவருநங் கண்மணியாஞ்சம்பந்தன்
வாழித்திருநாமம் வாழ்த்தகிலா -வேழைப்
பசுக்களே நும்மைமிகப் பற்றியேநாளைக்
கிழுப்பர்நமன்றூதரே. (௧௬)

சோம்பேறிஞானந் துரிசற்றார் போற்பேசித்
தேம்பித்திரிந்துழலுந் தீதரே - தீம்பாலும்
வேம்புஞ்சமதுலையில் வேண்டாதநீரென்றோ
நாம்பிரமமென்றுநவிற்றல். (கஎ)

வாயாற்பிரம வழிநின்றார் போன்றுநீ
ரோயாதுகூவி யுரைப்பதனுன் - மாயா
மயக்கங்கழிந்ததோ வன்புலாலுண்டே
தியக்கங்கொண்டேதிரிகுதிர். (கஅ)

எல்லாமெமக்குவரு மெம்மோடெதிர்ப்பவரார்
வல்லார்வருகவென வாய்க்கொழுப்பால் - கல்லா
மடந்தேடியேசொற்று வந்தநீரென்றோ
இடந்தேடுவீர்மூலையில். (ககூ)

உபதேசமென்றுநீ ரோதனனி நன்றாம்
விபசாரிபோலருத்தம் வேண்டி - அபசாரம்
பாராததமர்தமக் கெல்லாம் பகர்ந்திடவே
யாரோவுமக்குவிதித்தார். (உ0)

விடாமோகந்தாங்கியே வீணர்காணீர்தா
மடாஞானம்பேசியே யாவி - விடாமுன்னம்
வைதிகமாஞ்சைவ வழிநின்றுணர்வுபெறி
னெய்துவீர்நன்முத்தியே. (உக)

என்னுமிவற்றாற்போந்த வுண்மை நியாயங்களால் பதிஞான மென்னும் சிவஞானமே பிறவா முத்தியைப் பலிப்பிக்குமென்பது நாட்டப்பட்டதாகலின், அச்சிவஞானம் எளிதில் தோன்றமுயல்வது பரிபாகிகள் கடனென்க.

ஆயின், அச்சிவஞானங் கைகூடுவதெங்ஙனமெனின், "ஆறாறு தத்துவமுமாணவமும்வல்வினையு, நீறாகமுத்திநிலைநிற்போர்க்குப், பேறாகப் பார்விரித்தநூலெல்லாம் பார்த்தறியச்சித்தியிலே, யோர்விருத்தப்பாதிபோதும்." என்னும் பிரமாணமுகத்தால் "சிவஞானசித்தியார்" என்னும் நூலின் பெருமை தோன்றக்கூறியிருத்தலால் அந்நூலின் வழியொழுகுவார்க்குச்சிவஞானம் சித்திக்குமென்க. "பாதிவிருத்தத்தால் பார்

விருத்தமாகவுண்மை,சாதித்தார் பொன்னடியைச்சாருநாளெந்நாளோ.''என்னுந் திருவாக்குஞ் சான்றுமென்க.

இந்நூல் எக்காலத்தது ? யாருடையது ? எப்படிவந்தது ? எனின், சிருட்டி காலத்திலே பரமசிவன் சதாசிவமூர்த்தியை அதிஷ்டித்துக்கௌகப் பிரகாரமென்றும், பிரதிஸம்ஹிதாப் பிரகாரமென்றும்,இருவகைத்தாயருளின காமிகாதிவாதுளாந்தமான ஆகமம் இருபத்தெட்டையும், பிரணவாதி சிவன்கள் பதின்மரும், அநாதி ருத்திரர் பதினெண்மருமாகிய இருபத்தெண்மருக்கும், பிரதி ஸம்ஹிதாப்பிரகாரமாகவும் அனந்தேசுர தேவருக்குக் கௌகப்பிரகாரமாகவும் அருளினால் அநுக்கிரகம்பண்ணினரென்றும், அவ்விருபத்தெட்டினுள் ரௌரவாகமத்திலே பாசவிமோசன படலத்தில் அனுஷ்டுப்புச் சந்தசாகதுவாதசூத்திரம் சர்வாகமசாரமாயிருக்கு மென்றும், அதனை ஸ்ரீநந்திகேசுவரருக்குப் பகவான் பிரசாதித்தருளினரென்றும், அவர் சனற்குமாரபகவானுக்கும், அவர் சத்திய ஞானதரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதி மஹாமுனிகளுக்கும் முறையே அனுக்கிரகித்தன ரென்றும், அப்பரஞ்சோதி மஹாமுனிகள் தென்றிசையுய்யக் கிருபாவசத்தா லெழுந்தருளியபோது திருவெண்ணெ நல்லூரென்னுந் திருப்படை வீட்டிலே திருவவதாரஞ்செய்து சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத்திருநாமஞ்சாத்திச் சாம்சித்தராய் விளங்கியிருந்த மெய்கண்டதேவ சிவாசாரியருக் கநுக்கிரகம்பண்ணி, இதனைப் பக்குவாத்மாக்களுக் குணர்த்தக் கடவாயென்றருளலும், அங்ஙனமருளப்பெற்ற அவ்வடநூற் சிவஞானபோதத்தைத் தென்மொழியாக்கி முதனூற் பெயராகவே யுரைத்துத் தமதருட் சந்தி பதியப்பெற்ற அருணந்திதேவசிவாசாரியருக் கனுக்கிரகித்து, இதனை விஸ்தரித்து ஒரு சாத்திரம் பண்ணுமென்றாக்ஞாபிக்க, அவரும் சகலவேதாகம புராணவிதிகாசங்களை யதாவத்தாகவுணர்ந்து லோகானுக்கிரகமாகச் சிவஞானஞ் சித்திக்கும் பொருட்டு அருளினதாகையால் "சிவஞானசித்தி" என்னும் நாமமாகப் பூர்வபட்ச சித்தாந்தத்துடனே பிரமாணத்திரயங்களி னுடைய லட்சணங்களையும், பிரமேயத்திரயமாகிய பதி பசு பாசத்தினுடைய உத்தேசலட்சண பரீக்ஷைகளையும், சரியை கிரியை யோக ஞானமென்னும் சாதன சதுட்டயங்களையும், சாலோக சாமீப சாருப சாயுஜ்யமென்னுஞ் சதுர்வித கிரமமுத்திகளை

யும், ஜீவன்முத்தி பரமுத்தி லக்ஷணங்களையும், முறையே விளங்க வுரைத்தனரென்றும், சைவநூற் பிரமாணங்களுளவாகலின் பரிபாகிகள் கண்டுணர்வாராக.

இந்நூலுக்கதிகாரிகளாவார் யாவரெனின், பூர்வஜன்மங்களில் சிவதருமங்களை அனுஷ்டித்து ஞானசித்தியின் பொருட்டு இப்பூமியிற் பிறந்து குருவினால் தீக்ஷிதராகி முறையே சற்சாம்பிரதாயகதமான விதிநூல்-துதிநூல்-இழப்புநூல் என்பனவாகிய சைவநூல்களிற் பயின்று முத்தியை யடையவேண்டுமென்கிற விச்சையுடைய வைராயிகரே யென்றறிக. வைராயிகரெனவே, சாம்சித்தர்க்குரித்தன்றாமென்க. "பண்டைநற்றவத்தாற்றோன்றிப்பரமனைப்பத்திபண்ணுந்,தொண்டரைத்தானே தூயகதியினிற்சேருப்பன்" என்னும் வாக்கிய விசிட்டத்தினால் அவர் சுகவாமதேவ ஜடபரதாதிகளென்று கண்டுகொள்க.

இங்ஙனநிற்க, விதிநூல் நித்தியகன்மநெறி, சைவசமயநெறி, முதலியனவென்றும், துதிநூல் தேவார திருவாசகமுதலியன வென்றும், இழப்புநூல் பட்டினத்தார் பிரபந்தாதிகளென்றும், பதிநூல்சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாச முதலியன வென்றுங் கொள்க. அவ்வவ்விஷயப் பிரதிபாதக சாமானிய விசேஷங்கருதி மேன்முறை வகுத்ததன்றி உண்மையில் எல்லாம் பதிநூல்களென்றே துணியப்படுமென்க.

இவைகளுள்ளே, தேவாரம் அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள், என்னுஞ் சமயாசாரியர்கள் மூவராலும் அருளிச் செய்யப்பட்டது. சிவபெருமான் உமாதேவியாருக்குச் சதுர்யுகதருமங்களுங் கூறியபின்னர், இனிக்கலியுகத்திலே அறுபத்துமூன்று தொண்டர்கள் பிறந்து தம்பால் மெய்யானபக்தி செய்வார்கள் எனவும், அவர்கள் சரித்திரத்தை உபமன்னியு பகவான் பக்தர் கூட்டத்துக்குச் சொல்லுவர் எனவுங்கூறி, அச்சரித்திரத்தை முன்னுரைத்தருளினர் என்று பரமேதிகாசமாகிய சிவரகசியத்தில் நவமாமிசத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் திருவாய்மலர்ந்தருளிய பிரகாரமே, அறுபத்துமூன்று நாயன்மார்களுந் திருவவதாரஞ் செய்து முத்திபெற்றபின்பு, உபமன்னியு மகாமுனிவர் அவர்கள் சரித்திரத்தை இருடிகளுக்கு அருளிச்செய்தார். அது

ற்கு உபமன்னியு பக்தவிலாசம் என்பது பெயர். உபமன்னியுமகாமுனிவர் சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற்கடலையுண்டவரும், கிருஷ்ணருக்குச் சிவ தீக்ஷைசெய்து சிவபூசையெழுந்தருளப்பண்ணிக் கொடுத்தவருமாயுள்ளவர் என்று, சைவபுராணம், கூர்மபுராணம், மகாபாரதம் முதலிய நூல்களாலே நிச்சயிக்கப்பட்டவர். உபமன்னியு பக்த விலாசமானது சிவரகசியத்திலே சொல்லப்பட்ட அறுபத்துமூவர் சரித்திரத்துக்கு ஒத்திருக்கின்றது. இன்னும் அகத்தியமகாமுனிவரும் இவ்வறுபத்துமூவர் சரித்திரத்தைத் தம்மாணாக்கர்களுக்கு அருளிச்செய்தனர். அதற்கு அகஸ்தியபக்தவிலாசம் என்பதுபெயர். விஷ்ணுமூர்த்தி சிவசாரூப்பியம் பெறும்பொருட்டுக் காஞ்சிபுரத்திலே தவஞ்செய்தபொழுது சிவபெருமான் வெளிப்பட்டுக் கலியுகத்திலே சீர்காழியிற் கௌணியர் கோத்திரத்தில் அவதரிக்கும் ஞானசம்பந்தனுடைய தமிழ்ப்பதிகத்தினாலே நமது சாரூப்பியம் பெறக்கடவாயென்று திருவாய்மலர்ந்தருளினார் என்றும், அப்படியே நிகழ்ந்ததென்றும், காஞ்சிமான்மியத்து இருபத்துநான்காம் அத்தியாயத்திற் சொல்லப்பட்டது. சிவபாதஹ்ருதயர் சமணசமயத்தையும், பௌத்தசமயத்தையும் மறுத்துச் சைவத்தை நிறுத்தும்பொருட்டு முருகக்கடவுளைத் தமக்குப் புத்திரராகத் தரும்படி தவஞ்செய்தமையால், சிவபெருமான் முருகக்கடவுளைப் புத்திரராகக் கொடுத்தருளினார் என்பதும், அவர்சரித்திரமும், சீர்காழிமான்மியத்து இருபத்துமூன்றும் அத்தியாயத்திற் சொல்லப்பட்டன. இவர் சரித்திரத்தின் ஓர்பாகம் ஆலாசியமான்மியத்துஞ் சொல்லப்பட்டது. திருஞானசம்பந்த சுவாமிகள் குழந்தைப் பருவத்தில் உமாதேவியாருடைய ஞானப்பாலுண்டு தமிழ்ப்பதிகஞ் செய்தருளினமை வடமொழிச் சௌந்தரியலகரியிலே சிறப்பித்துரைக்கப்பட்டது. அச்சௌந்தரியலகரி, ஆதியிலே திருக்கைலாசமலையில் எழுதப்பட்டிருந்து, பின்பு புஷ்பதந்தமுனிவராலே மகாமேருமலையில் எழுதப்பட்டு, பின்பு கௌடபாதமுனிவராலே சங்கராசாரியருக்கு உபதேசிக்கப்பட்டு, பின்பு அவராலே இப்பரதகண்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாதிசங்கரர் கண்ணப்பசுவாமிகளைச் சிவாநந்த லஹரியினும், இயற்பகைநாயனார், சிறுத்தொண்டநாயனார், சண்டேசுரநாயனார் முதலியவர்களைச் சிவபுஜங்கத்திலுந் துதித்துச் சிவாநந்த வாழ்வடைந்தவரென்க.

திருவாசகம் ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிக ளென்னுஞ் சமயாசாரியரால் அருளிச்செய்யப்பட்டு ஸ்ரீ நடராஜமூர்த்தியாலெழுதியருளப்பட்டது. அவர் சரித்திரம் ஆலாசியமான்மியம், திருப்பெருந்துறை மான்மியம், மணிவாசகதீபிகை முதலியவைகளிலே சொல்லப்பட்டது. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலியன திருமாளிகைத் தேவர்முதலிய ஒன்பது நாயன்மார்களால் செய்யப்பட்டன. இந்நாயன்மார்கள் சரித்திரமும், இவர்கள் செய்தருளிய அற்புதங்களும், திருவாவடுதுறைமான்மிய முதலியவைகளிலே சொல்லப்பட்டன. பெரியபுராணம் சேக்கிழார் சுவாமிகளால் செய்யப்பட்டது. அவர்சரித்திரமாகிய சேக்கிழார் புராணஞ் செய்தருளினவர் தில்லைவாழந்தணருள் ஒருவரும், சந்தானசமயகுரவர் நால்வருள் ஒருவருமாகிய உமாபதி சிவாசாரியசுவாமிகள். இவர் சபாநாயகர் விடுத்தருளிய "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்கொற்றங், குடியார்க்கெழுதியகைச்சீட்டுப், படியின் மிசைப், பெற்றான் சாம்பனுக்குப் பேதமறத்தீக்கைசெய்து, முத்திகொடுக்கமுறை" என்னுந் திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு பெற்றான் சாம்பனுக்கு முத்திகொடுத்தருளி அப்பெற்றான்சாம்பனுடைய மனைவி அரசன் முதலாயினோர் கொண்ட சந்தேகத்தை யொழித்தற்பொருட்டு முள்ளிச் செடிக்கும் முத்திகொடுத்தருளினவர். இவ்வுண்மைகளால் வேதத்தினும்பார்க்க இவைகளிற்றானே தமக்குப்பிரீதி யென்று சிவபிரான் உமாதேவியாருக்குக் கூறினாரென்று சிவரகசியத்திற் கூறிய கிரந்தங்களினாற் றுணியப்படும்.

இங்ஙனநிற்க, சிவஞானபோதம் முதனூலாக மெய்கண்ட தேவசிவாசாரியராலும், சிவஞானசித்தியார் வழிநூலாக அருணந்தி தேவ சிவாசாரியராலும், சிவப்பிரகாசம் சார்புநூலாக உமாபதி சிவாசாரியராலும் செய்யப்பட்டனவென்க. இவர் அருணந்திதேவ சிவாசாரியரா லனுக்கிரகிக்கப்பெற்ற மறைஞானசம்பந்த சிவாசாரியர் மாணாக்கரென்க. இவைகளன்றியும், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், நம்பிகாடவநம்பி, கண்டராதித்தர் வேணாட்டடிகள், திருவாலியமுதார், புருடோத்தமநம்பி, சேதிராயர்முதலிய சிவானுபூதிமான்கள் செய்தருளிய திருமுறைகளும், ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியசுவாமிகள், அகோரசிவாசாரிய சுவாமிகள், சர்வாத்மசம்புசிவாசாரியசுவாமிகள், சிவாக்கிரயோகிகள், போஜராஜேந்திரர், ஞானப்பிரகாசசுவாமிகள், சிவப்பிரகாசசுவாமிகள், நமச்

சிவாயமூர்த்திகள், சிவஞானசுவாமிகள், சுவாமிநாத தேசிகர் முதலிய சிவாநுபூதிமான்களால் செய்யப்பட்ட பிரபந்தங்களும் எண்ணிறந்தனவாகப் பதிஞானத்தைப் பலிப்பிக்கும் உண்மைநூல்களாய் விளங்கியிருக்கவும், அவற்றையாராயும் புண்ணியமில்லாமல் மாங்கலியத்தைத் தரித்துக் கொண்டு தங்கள் தங்கள் நாயகருக்குத் துரோகஞ்செய்து இல்லொழுக்கிறந்த பெண்டிர்கள்போல விபூதிருத்ராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு சிவபெருமானோடு விஷ்ணுவாதி பசுக்களைச் சமமெனக் கூறியும், பசுக்களாகிய தாமே அச்சிவமென்று பிதற்றியும், சிவவாக்காகிய சிவாகமங்களையும், சிவாசாரியர்களையு நிந்தித்தொழுகும் அதிபாதகர்களால் செய்யப்பட்ட பசுநூல்களைப் பாராட்டித்திரிவது பாவம்! பாவம்!! "எச்சனைத்தலையைக்கொண்டு செண்டடித்திடபமேறி, யச்சங்கொண்டமரரோட நின்றவம்பலவற்கல்லாக், கச்சரைக்கல்லாப்பொல்லாக் கயவரைப்பசுநூல்கற்கும், பிச்சரைக் காணுகண்வாய் பேசாதப் பேய்களோடே" என்னுந் திருவிசைப்பாவினுங் கண்டுணர்க. இதனால், சத்தப்பிரகரணம், பஞ்சதசப்பிரகரணம், கைவல்யம், வாசிட்டம், வாசுதேவமநநம், பிரபோதசந்திரோதயம், வேதாந்தசூளாமணி, ஆத்மபோதம், வார்த்திகமுதலியவைகள் பசுஞானத்தைப் பலிப்பிக்குநூல்களாகலின் சைவர்க்குரித்தல்லவென்க. ஆகவே, சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய திராவிடசித்தாந்தம் பதினன்கும், தத்துவப்பிரகாசிகை-தத்துவசங்கிரகம் - தத்துவத்திரயநிர்ணயம், போககாரிகை - மோக்ஷகாரிகை - நாதகாரிகை - பரமோக்ஷநிராசகாரிகை-ரத்னத்திரயம் முதலிய அஷ்டப் பிரகரணங்களும், சித்தாந்ததீபிகை - சித்தாந்தப் பிரகாசிகை சித்தாந்த சிகாமணி பிரமாணதீபிகை - பிரசாததீபிகை - சிவயோகசாரம் - சிவபோகசாரம்-சித்தாந்தசாராவளி - தசகாரியமுதலிய ஞானநூல்களுமே சைவர்க்குரித் தென்பதுபெற்றும்.

"திருவைக்கோவைக்குங்கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே யென்பதுதிண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர்வாக்கிற்கலந்திருந்து அருமைத்திருக்கையாலெழுதினர். அப்பெருமையைநோக்காது, சிந்தாமணி - சிலப்பதிகாரம் - மணிமேகலை - சங்கப்பாட்டு-கொங்குவெண்மாக்கதை முதலியவற்றோடுசேர்த்துச் செய்யுட்களோ டொன்றுக்குவர். அங்ஙனமுமமையாது இலக்கணமாவது தொல்காப்பிய மொன்றுமே! செய்யுளாவது திருவள்ளுவரொன்றுமே! இவ்விரண்டு நீங்கலான இலக்கணஇலக்

கிபமெல்லாம் ஒன்றற்கொன்று பெருமை சிறுமை இணையென்று கொள்வாரென்பதுதோன்ற இம்முறைமைவைத்து அடைமையப்பொது வாக்கினும். அவர் அதுமட்டோ இறையனாரகப்பொருள் முதலிய இலக்கணங்களையும், தேவாரம் - திருவாசகம் - திருவிசைப்பா - திருப்பல்லாண்டு - பெரியபுராணம் - சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம்- பட்டினத்துப்பிள்ளையார்பாடல் முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாயெண்ணாது நன்னூல் - சின்னூல் - அகப்பொருள் - காரிகை - அலங்காரமுதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு - எட்டுத்தொகை - பதினெண்கீழ்க்கணக்கு - இராமன்கதை - நளன்கதை அரிச்சந்திரன்கதை முதலிய விலக்கியங்களையும் ஓர்பொருளாகவெண்ணி வாணாள் வீணாள்கழிப்பர். அவரிவைகளிருக்கவே அவைகளை விரும்புவதென்னெனின், பாற்கடலுட்பிறந்த அதனுள்வாழுமீன்கள் அப்பாலைவிரும்பாது வேறுபலவற்றை விரும்புதல்போல அவரதியற்கை யென்க." என்றுசுவாமிநாததேசிகர் இலக்கணக்கொத்தென்னு நூலிற்காட்டிய வுண்மையினானுங் கண்டுணர்க. இவ்வுண்மையுணர்ந்த வுத்தம பரிபாகிகள் அவலமார்க்கங்களி னில்லாது உண்மைவழியிற் சேர்ந்தொழுகுதல் கடனென்க. "புறச்சமயநெறிநின்று மகச்சமயம்புக்கும் புகன்மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம, வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள்புரிந்து மருங்கலைகள்பலதெரிந்து மாரணங்கள்படித்துஞ், சிறப்புடையபுராணங்களுணர்ந்தும்வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ்சென்றாற்சைவத், திறத்தடைவரிதிற்சரியைக்கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர்" என்னும் பிரமாணத்தால் சகலசமயாதீதாத்வைத சுத்தசைவசித்தாந்தமே மீண்டுவாராமுத்திநெறியெனவும், அம்மார்க்கத்திற் சேரும் பெற்றியுடையாரே கடந்த பரிபாகிக ளெனவும் பெறப்பட்டமையே போதும் இன்ன பெருநலத்தைப் பிரசாதிக்கும் பேரருளாளர் வாக்கியங்களிவையெனக் காட்டுதும்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருக்கோயிலில்லாததிருவிலூருந்திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்பாங்கினொடுபலதளிகளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்கமூதாவூரும்விதானமும்வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூருமவையெல்லாமூரல்லவடவிகாடே.

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்றீவண்ணர்திறமொருகாற்பேசாராகில்
ஒருகாலுந்திருக்கோயில்சூழாராகிலுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகி

லருநோய்கள்கெடவெண்ணீறணியாராகி லளியற்றூர்பிறந்தவாறேதோவென்னிற்,பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்பிறப்பதற்கேதொழிலா
[கியிறக்கின்றூரே.

## உமாபதிசிவாசாரியசுவாமிகள்.

"தொண்டரடிதொழல்பூசைத்தொழின் மகிழ்தலழகார்
துளங்கியவர்ச்சனைபுரிதற்குருதிநியமங்கள்
கொண்டபணிதிருவடிக்கேகொடுத்தலீசன்
குணமருவுமருங்கதையைக்குலவிக்கேட்டு
மண்டிவிழிதுளும்பன் மயிர்சிலும்பலுன்னல்
மருவுதிருப்பணிகாட்டிவருவவாங்கி
யுண்டிகொளாதொழிதலெனவிவையோரெட்டு
முடையரவர்பத்தரெனவுரைத்துளாரே"

என்பனவவை.

இவற்று னுணரப்போந்த வுண்மையெய்தும்படிப் பரமகருணுசாலியாகிய ஸ்ரீ சிவபெருமானையும், அவரினைய குமாரராகிய ஸ்ரீசண்முகக்கடவுளையும் வாழ்த்துதல் செய்வாம்.

## ஸ்ரீலட்சுமிநாராயணபுரம்.

---

சீர்தவழுமிலக்குமிநாரணபுரத்தேவயங்குஞ்
செம்மனினதடியவர்தஞ்செம்மையுளங்தேரேன்
கார்தவழுமுளத்தினனெனக்கசடகற்றியருளுங்
கருணைவடிவத்தியங்குங்கரதலநற்கனியே
நார்தவழுமணந்தழைக்கு நறுமலர்கள்சூடி
நாயடியேனிசைக்குமதொன்றுளதடைந்துன்னடியே
பார்தவழுங்காசிவிசு வேசதுரையெனவே
பற்றியுளமுற்றுய்விடாப்பெற்றிவரும்பரிசே. (க)

மாலயனிந்திரனமரர்மன்னுகணநாதர்
வாழ்த்திவழிபடவருளும்வளர்தருகற்பகமே
யோலமிடுமடியர்குழாமுட்கசிந்தேயுருகி
யுன்னருமிலக்குமிநாரணபுரத்தேயோங்கு

மாலயமேனின்னருள்கொண்டடையுமவருடனே
அரஹரசங்கரகிரிசம்புவெனநவின்றடைந்தேன்
சீலமருள்பரசிவசின்மயபரமாகாச
தேஜவிசுவேசவருள்செய்திடனின்கடனே. (உ)

தேவியுமைமாதுவிசாலட்சியிடமமருந்
தேவமஹாதேவனினதேவலகமுவந்தே
யாவலுடனுஞற்றுமடியார்புகழுநிலவு
மழிவிலிலக்குமிநாராயணபுரியின்றடைந்தேன்
பாவியெனும்பழமையதுபாராட்டலொழிந்தே
பரிவுடனின்பழவடியார் பக்கலவர்தங்குற்
றேவல்புரிந்துயும்வணநன்கருள்புரிதிகொல்லோ
வெழிலுலவுங்காசிவிசுவேசவிரைந்தருளே. (௩)

மணிமன்றுணடம்புரியுமரகதப்பைங்கொடியாண்
மருவுமொருபுறமறாவின்மாணிக்கமலையே
பணிபுரியுமிலக்குமிநாரணபுரிப்பைந்தருவே
பச்சைமயிலேறுமொருபாலனிபமுகனும்
அணிதரவேயேறிவிளையாடுறுமெண்டோளம்
பரதரசிற்சுகபரமாநந்தசிதம்பரனே
திணிவருளந்தணிவறுநெஞ்சொடுதவழுஞ்சிறியேன்
செய்பிழைதீர்த்தாடிவிசுவேசசிவகுருவே. (௪)

திருநாவுக்கரையாபுகலியர்பெருமான்றிகழுந
தேசிகசுந்தரர்வாதவூரர்மிகுதிறல்சேர்
தருகாதைசெவியாரப்பருகியவாதகைக
டகுதிகொடேவாரதிருவாசகமுட்டணிவேய்ந்
தொருபோதுமறவாமலேயுமொருவரமே
யுளங்களிகூர்ந்தருளுதிபோவொழிவிணடத்தரசே
மருவாருமிலக்குமிநாரணபுரிநன்மருநதே
மன்னும்விசுவேசஜகதீசமகிழ்ந்தருளே. (௫)

உலகவியலொழிநதமைதியுற்றுளமெப்போது
மூள்குமறிவாளருறவாடியுளமாறிக்
கலகநிலைமீறிநிஜகாரணமுட்டேறிக்
கருதருமுப்பாழுதாவுநகடந்துமினேக்காணுமே

எலையறுநல்வாழ்வருளிச்செயனின்கடனேயன்
பில்லாதானென்றகற்றுமெனுந்துணிவாலடைந்தேன்
பலர்புகழுமிலக்குமிநாரணபுரமாபதிசேர்
பரமபதியாகும்விசுவேசபசுபதியே. (௬)

மருமலர்சூழ்வனமிகுமாண்பமருமெழிலாரு
மன்னுமிலக்குமிநாராயணபுரமாநிதியே
திருவுடையார்தவநெறியேசிந்தையிசைந்தவர்தஞ்
சேவடிமாமலர்பரவுஞ்செம்மையொன்றேதருவாய்
கருவுடையாவகனிலமாமோகமினார்வடிவங்
கலந்தமனப்பதகனெனுங்கணக்கிலுழல்கின்றேன்
அருவுருவாயிருமைகலப்பாகவுமல்லவுமா
யமரும்விசுவேசநிஜாநந்தவருட்பரனே. (௭)

என்னுளப்பாங்கெழிற்புகலிக்கிறைவனெனதுளத்தே
யினிமைகலந்திலகுமவனிணையடிமாமலரே
யுன்னியுரைத்தன்புகெடாதுடனிலத்தேபடிந்தங்
குச்சிகரஞ்சேர்த்துமலருகுத்துமகிழ்ந்திடவே
பன்னுவனின்பாலருட்கண்பார்த்திடனின்கடனே
பரம்பரனேயிலக்குமிநாரணபுரிப்பண்ணவனே
என்னதுநானெனுமகந்தையிகந்திடுமாமுனிவ
ரேத்தும்விசுவேசபரமேசநயந்தருளே. (௮)

ஏகமிரண்டெனுமயலெய்தேலெனக்கண்ணுடையார்க்
கிசைத்தனர்சம்பந்ததுரையெனுமவர்வாய்மையிறை
மாகமொழிப்போதவுளவறியுமதியிழந்தே
மதங்களெனும்படுகுழிவீழ்ந்தமிழ்ந்துமயங்கினனால்
நாகமுலைத்தடமடவார்நடநவிற்றும்பழமை
நண்ணுமிலக்குமிநாராயணபுரமேநணுகி
யாகமுதலாமவித்தையானபலகடந்தே
யடையவிசுவேசநினையடையினருள்புரியே. (௯)

நீறுபுனைந்தொளிர்தருகண்டிகைபூண்டுநிதமு
நித்தநிமலாத்துவிதசத்தியநன்னெறியே
வீறுபுனைந்துளமகிழ்பூத்தன்புநனிமேவி
விளம்பருபஞ்சாக்கரநல்விருப்பமுறச்செபித்துந்

தேறிமயலொழிந்தனஞ்சூழ்தருவயல்சேரழிஞ்சில்
செம்மையிலக்குமிநாராயணபுரஞ்சென்றடைவார்க்
கீறில்பரிபூரணனெங்கோன்விசுவநாத
னின்னருள்செய்வானெனுமாகமநிகமாதிகளே. (௰)

## ஸ்ரீசண்முகஞானபுரம்.

---

பொன்பூத்தபூங்கொன்றைவேணியானிடம்பூத்தபூங்கொடிக்கட்
பின்பூத்தசேயெனவேபேர்பூத்தவாய்மைதிகழ்பெரியோயென்றிக்
கொன்பூத்தவயிற்படையெங்கோமானேயின்பநலங்குறித்துநின்பால்
மன்பூத்தவளந்தருசண்முகஞானபுரத்தடைந்தேன்மௌனவாழ்வே. (௧)

வாழ்த்துமடியார்வாழவரமருளுமணிக்குன்றேவயங்குமெய்ம்மை
சூழ்த்துமொருதனிமுதலேசுருதிமுடிமேனின்றதுணையேநாளும்
பாழ்த்தமனப்பதகனடியேனருள்பெற்றுய்யுநெறிபகராயன்பர்
தாழ்த்திமுடிவணங்குறுசண்முகஞானபுரத்தில்வளர்சகசப்பேறே. (௨)

பேறனைத்துமுதவுமருட்பெருமானின்பொன்னடிகள்பேணிவாழ
மாறறியாதந்தோவெம்பவத்தொடக்காலகம்பிரமமென்றுவாளா
கூறியலக்கண்பட்டிங்கழிவார்தங்கூற்றிகந்துகுலவும்வாய்மை
வீறுமெழிற்பதியாஞ்சண்முகஞானபுரம்பணிந்தேன்விறல்வேலோனே. (௩)

பதியாமுன்றனைப்போற்றும்பருவமுடையேனல்லேன்பாசஜால
முதிர்ஞானமிகவல்லேன்முத்திநலங்கமழுமருண்மொய்த்தநின்சீர்த்
துதிமேவுவார்க்கருளுந்துரையேநற்றணிகைமலைச்சோதியேயெங்
கதியேதிங்கருளாய்சண்முகஞானபுரத்தில்வளர்கருணைத்தேவே. (௪)

தேவேசூர்ப்பகைதடிந்தசிவக்கன்றேயெமைச்சழக்கிற்செலுத்தாதாளெங்
கோவேயன்றறுவர்முலைப்பாலுண்டுவிளையாடுங்குழந்தாய்மோனப்
பூவேபூங்கமலமிசையானெடுமால்போற்றுமருட்பொருப்பேசைவக்
காவேசண்முகஞானபுரத்தமர்ந்தபரஞானங்கமழுங்குன்றே. (௫)

குன்றமிசையேறியடியாருள்ளமேறியெழில்குலவுபச்சை
வென்றிமயிலேறியருட்பரன்மடியிலேறியிடமேவுமம்மை
நன்றுவந்துகண்களிக்கநடந்தேறிமுன்வந்துநடிக்குமெந்தாய்
என்றெனுளமேறுதிசண்முகஞானபுரத்தினிதேறுவானே. (௬)

வானேவான்வந்துலவுமாருதமேமண்கடையாய்வந்தவின்பத்
தேனேதேன்கைக்குமருட்டீஞ்சொல்பயிலஞ்சுகங்கள்சேர்ந்துவாழுங்

தானேதானாய்த்தழைத்ததருவேசத்தியஞானந்தருவோயுன்னைத்
தானேசண்முகஞானபுரத்தினில்வந்தடிநாயேன்றரிசித்தேனே. (எ)

ஏனோவிங்கலமரவைத்தாயென்னையேன்றுகொளாதிறையேயுன்னை
நானேவந்தடிவணங்குநலமுளதோநயந்தருணீநல்காயாயின்
றேனூறுஞ்செங்கழுநீர்த்தொடைபுனைந்தசெங்கரும்பேதித்தித்தென்னுட்
கோனாய்நின்றெழிறருசண்முகஞானபுரத்தில்வருகுமரவேளே. (அ)

மருவாருந்தண்கடப்பந்தாராயெண்சித்திமுத்திவாய்ப்பநின்சீர்த்
திருவாரும்பாதமலர்தாராயிந்திரைமகிழுஞ்செங்கண்மாலோன்
றருவானைச்சிறைவிடுத்ததமணியக்குன்றேயெஞ்சம்பந்தஞான
குருவேசண்முகஞானபுரத்துமடியாரிடத்துங்குடிகொண்டானே. (௯)

கொண்டலிவர்ந்தானுள்ளம்பூப்பவருமருமானின்கோலங்காணும்
பண்டைவினைவந்துறுமோபாவியேற்கருளாயின்பவளவான்கற்
கண்டனையாய்சிவமணங்கந்திக்குமொருபன்னிரண்டுகண்ணாய்வாய்மைத்
தொண்டர்புகழ்மலிதருசண்முகஞானபுரத்தமர்ந்துதுலங்கும்பொற்பே (க0)

## வாழ்த்து

வாழிமாமறை யாகமமாபதிக் - காழிமாதவனாதியர் கட்டுரை
வாழிமாதுமையாகமுமாபதிக்-காழிமாதரப்பூங் கழற்கானமே.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## சமரசஞானதீபம்.

இஃது

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயகரவர்களால்

இயற்றப்பட்டு

ஷெயார் மாணவகர்

ஸ்ரீமாந்-பல்லவபுரம்

அப்பாவு செட்டியாரவர்களால்

பரிசோதித்து

தமது

சென்னை:

வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதித்து

வெளியிடப்பட்டது.

Second Edition.

31 January 1907.

Copy-right Registered.

இதன் விலை. அணா 4.

சிவமயம்.

ஸ்ரீ சிவோரக்ஷது.

திருச்சிற்றம்பலம்.

—:0:—

# சித்தாந்தரத்நாகரம்.

## சமரசஞானதீபம்.

"சைவசமயமேசமயஞ் சமயாதீதப்பழம்பொருளைக்
கைவந்திடவேமன்றுள்வெளி காட்டுமிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ்சமயநெறி புகுதவேண்டாமுத்திதருந்
தெய்வசபையைக்காண்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே."

என்றருளிச்செய்த ஸ்ரீ தாயுமான சுவாமிகள் திருவாக்கால் சைவசமயமே சிறந்த சமயமெனவும், அதீதமாகிய வச்சைவ சமயத்தாற் பெறப்படுமநாதிப் பழம்பொருள் சிதாகாசமத்தியி லநவரத தாண்டவம் புரியாநிற்கும் ஸ்ரீ நடராஜவள்ளலே யெனவும், இன்னவுண்மையைப் பயவாத பொய் நிரம்பியொழுகும் புன்சமயங்களிற் புக்கு வீணே கெடவேண்டாமெனவும், பரமவீட்டைத்தருந் தெய்வ சபையாகிய வச்சிதாகாயத்தைத் தரிசித்தற்பொருட்டு இங்கே வந்து சேருங்களெனவு முலகத்தவரை யிதம்பேசி யழைத்தபடி வெளிப்பட்டது. இதை விரித்துரைக்குங்கால் "சைவசமயமே சமயம்" என்றேகாரத் தேற்றம்படக் கூறினமையால் சைவேதரமான வுயர்ந்தமார்க்கங் கிடையாதென்பது போதரும். சைவம் என்பது சிவசம்பந்த முடையது எனப்பொருடரலால் சிவத்தின் மேலிட்டதொரு பொருளுண்டாயினன்றோ சைவத்தின் மேலிட்டதொரு சமயமு முள்ளதாகும்? சிவத்துக்குச் சமானப்பொருளும், அதிகப்பொருளுங் கிடையாவென வேதங்கள் முறையிடல் கண்டுதெளிக. சிவம் என்னுஞ்சொல் மங்கலம், சுபம், முத்தியென்பனவாதி பொருள்களைப் பயத்தலால் அதன்ஸம்பந்தமான மார்க்கம் சுபமார்

க்கம், மங்கலமார்க்கம், முத்திமார்க்கம் என்றே விளங்கும். என்னை? குறுணியென்று மதற்குப் பொருளுண்மையாற் குறுணிமார்க்க மென்றாலோவெனின், அங்ஙனமுரைத்த கூரன் கண்ணிழந்தானுகையாலது கூடாதென்க. சைவத்தை மங்கலமார்க்கமெனவே யேனையமார்க்கங்க ளமங்கலமார்க்கங்க ளெனப்போதரும். புறமார்க்கங்க ளமங்கலமெனினவை கொண்டொருபயனு மின்றாமெவெனின், அவ்வவற்றினேற்றங்களின் படிப்பலனுண்டென்க. தேகமொன்றிலுண்டான வவயவங்களில்யாவு முபகாரத்தனவு மாவசிகமானவுமேனும் யாவுஞ் சமமரியாதையினவாகா. எல்லாஞ்சேர்ந்தே தேகமாகும். ஒன்று குறையினு மூனமேயாம். இவைகளா லுபசரிக்கப்பெற்ற வொருவனவ்வுபகார மீனைத்தெனவறியாமல் கண்ணேபிரதானம், வாயேபிரதானம், மூக்கேபிரதானம், செவியேபிரதானம், நாவேபிரதானம், பாயுருபக்காதிகளே பிரதானமென்றிசைத்த லமைவுடைத்தன்றாம். அங்ஙனமேயன்றோ தேகமேபிரதானம், கரணமேபிரதானம், சீவனே பிரதானம், இந்திரசந்திரரே பிரதானம், பிரமவிஷ்ணுக்களே பிரதானமெனத் தாபிக்கவெழுமதங்களு மலைத்தைப்பெறும்? இத்தனையுஞ் சேர்ந்தொன்றாகியதே சைவமாகையால் மங்கலமென்பது ஸ்திரப்பட்டது. தேகத்தி லொவ்வொரு கருவியையேகொண்டேனையவற்றைவிடுவது அமங்கலஞ்செய்தல் போலவே சைவத்தைவிட்டேனைய மதங்களைப் பற்ற லமங்கலத்தைக் காட்டிற்று. இதனுலெல்லாமதங்களுஞ் சைவத்திலுள்ளன வென்பதைக் காட்டினமையா லொருமதத்தையுஞ் சைவசமயம் விரோதியாமை வெளிப்பட்டது. பிறசமயங்கள் தத்தங்கூறுகளைத் தனித்தனிக் கொண்டமையா லவையே சைவத்தை விரோதித்தனவென்றறிக. எல்லாவவயவங்களுஞ் சேர்ந்து தேகமாகக்கண்ட வொருவனவ்வவயவங்களை விரோதியாதபடியும், அவ்வவயவங்களி லொன்றையே பற்றினவனேனைய வவயவங்களையு மவ்வவயவங்களாலாகிய தேகத்தையும் வெறுக்கின்றபடியுமாகிய வுவமை வெளிப்பட்டமையால். இந்தவுவமையால் சைவமொன்றே யவிரோத மார்க்கமெனவும், ஏனையமார்க்கங்கள் விரோத மார்க்கங்களெனவும் வெளிப்பட்டது. ஒவ்வோரவயவங்களைப்பற்றி யாதிக்கங் கூறுவாருள்ளுஞ் சிரம், உரம், கரம், பதமுதலான வங்கங்களிலேற்றந் தாழ்வுகளுக்கிடாக விவேகம் வெளிப்படல்போல் தனித்தனி மதாந்தரங்களிற் பிரவர்த்திப்பவர். தம்முள்ளுஞ் சிலாக்கிய முண்டெனவறிக. தலையுங்காலு மொன்றாகா

மையால். சாயுங்குதமு மொன்றாகாமையால். இப்படியே மதங்களி லும் பார்த்துக்கொள்க. "எல்லாமாயல்லவுமாய்" என்றுபதிக்குக்கூறி ய விலக்கணமேயன்றோ பதிமார்க்கமாகிய சைவத்துக்கும் விதித் திருக்கது? தேகம் எல்லா வவயவங்களுமாகி யல்லாமனின்றபடி யே சைவம் எல்லாச்சமயங்களுமாகி யல்லாமலப்புறப்பட்டு நிற் குமெனவறிக.

இது அதீதசமயமாகையால் இது விதித்திப்பதும் அதிகபக்கு வனுக்கே யெனத்தெளிக. இப்படிப்பட்ட அதீதமார்க்கத்திற் பிறக் கும் புண்ணியத்தை யடைந்துஞ் சைவசமயிகள் தங்களுண்மையை யும், தங்கள் சமயவுண்மையையும், தங்கள் கடவுளுண்மையையுங் கண்டறியாது ஏழைப்பசுக்கள்போலத் திரிவதென்னேயோ ஆச்ச ரியம்! ஆச்சரியம்!! ஒட்டன், சாத்தானி உப்பரவனெல்லாங் கனி த்திறமாக் குலாவிவர வரையன்மகனைக்கித் தெருவினிற்பதேயன் றோ விதற்குநிதரிசனமாம? சிவஞானச் செல்வர்களாயுள்ள நம்பெ ருமக்கள் கூறியிருக்குங் கம்பீரமொழிகளைத் தரிசித்தாலன்றோ வவ் வுண்மை விளங்கும்? "நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம் நரக த்திலிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணியோ மல்லோ மின்பமேயெந்நாளுந் துன்பமில்லை, தாமார்க்குங்குடியல்லாத் தன் மையான சங்கரனற் சங்கவெண் குழைமயோர்காதிற், கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சேவடியிணையே குறுகினோமே" என்றருளிய படியும், "யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்" என்றருளியபடி யும், "பொசிப்போஞ் சிவபோகம் பூரணமாயெங்கும், வசிப்போமுலகில் வசி யோம், மூசிப்பின்றி, வாழ்வோஞ் சிவனையுணர் மாதவர்தம் பொன்னடிக் கீழ்த், தாழ்வோமெமக்கார்சரி" என்றருளியபடியும், "கன்மமேதுகடு நோ யேதுமேற், சென்மமேதெனைத் தீண்டக்கடவதோ" என்றருளியபடியும், "அந்தகாநீயொரு பகட்டாற்பகட்டுவை தடாதடாகாசுநம்பாற், செல்லாதடா வென்று பேசவாயதுதந்தசெல்வமே" என்றருளியபடியுமே பிரமாணங் களாம். "மெலியார்வலிய விராவலரையஞ்சார், வலியார் தமைத்தாமருவில்" என்றபடி யறிந்தால் நாமார்க்கு மஞ்சவேண்டுவதின்றாம். என் கரு டா சுகமாவென்ற விதிகாசமே யதைநிறுத்தும். படைக்கின்றவனா கிய பிரமன்றலையோடு நங்கடவுளுக்குப் பலிபாத்திரமாயினமையி னவன்படைப்புநம்மையென்னசெய்யும்? அழிக்கின்றவனாகியகாலன் காலைவாரிக்கொள்ள நங்கடவுளிடக்காலுதையுண்டானாயி னவனழி ப்பு நம்மையென்னசெய்யும்? இடையினின்ற திதிக்கண் மனநோக்கா டேய்த வணங்கன்செய்யுமவனாற்றானம்மையென்னசெய்யும்? அவ

னேயுருவிலியாக நங்கடவுணுதற்கண்முற்பட்டுப் பட்டுப்போயின மையால். அத்திதிகர்த்தாவென்னு மரிக்கே தக்கன்யாகத்திலவிசுநேராது பட்டினிநோ்ந்து அவ்விடத்திலு மேனைய பலவிடங்களிலுந் தன்னையே காத்துக்கொள்ளுமாற்றல்போதாது பரிபவமுண்டாயின மையி னவனளிப்புத்தானமக்கெது செய்ய? சிவனே சங்காரகர்த்தாவாக, காலனை யழிப்புக்குத்தேடியதேனெனின், சிவனுரழிப்புத் தொழிற்கீழதிகாரம்பெற்று அடியாரல்லாதாரிட மாதிக்கஞ்செலுத்து மந்தகன் றன்மையே யாண்டுக்கூறிய தெனக. சிவனடியாராகிய மார்க்கண்டமுனிவர்பா லவனுண்மை யவலமாயினமையே போதும். இவ்வுண்மையறிந்து சிவனை வழிபடுவார்க்கு யாதுகுறையுள்ளது? இன்ன பெருஞ் சித்திபெய்தற்குரிய சைவசமயிகளாய்ப் பிறந்து மங்தேர வாணாளை வீணாய்க் கழிப்பது என்னபாவம்?

இங்ஙனநிற்க, "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி, முனிவிலாததோர் பொருளதுகருதலும், ஆறுகோடிமாயாசத்திகள், வேறுவேறு தம்மாயைகதொடங்கின, ஆத்தமானாயலவர்கூடி, நாத்திகம்பேசிநாத்தழும்பேறினர், சுற்றமென்னுந் தொல்பசுக்குழாங்கள், பற்றியழைத்துப் பதறினர்பெருகவும், விரதமேபரமாகவேதியருஞ், சரதமாகவே சாத்திரங்காட்டினர், சமயவாதிகடத்தமதங்களே, யமைவதாகவரற்றிமலைந்தனர், மிண்டியமாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ்சுழித்தடித்தா அர்த்து, உலோகாயதமெனு மொண்டிறற் பாம்பின், கலாபேதத்த கடுவிடமெய்தி, யதிற்பலமாயையெனைப் பலசூழவும்" என்ற பிரமாணப்படியே கோடியிடுக்கண் குறுக்கேவந்து தடுக்கும்! "நலமதொன்றடைதற் குறுமிடையூறநாதனே பலவுளவன்றே" என்றதனுனுங்காண்க. ஈண்டவ்விடரென்ப தேதெனின், மேலவ்வாக்கியத்தில் "சைவசமயமேசமயம்" என்றதன்பிற்போந்த "சமயாதீதப் பழம்பொருளை" என்பது அச்சைவசமயத்தினு மதிகரித்தவேறுபொருளை யென்றுபொருள்விரிக்கும் புன்மதமுநன்மதம்போலப் பகல்வேடங்காட்டி ஆபாசப் படுகுழியாய்ப் பக்கத்திலேதானே தவறிவீழுந்தால் விழுங்க வங்காந் திருத்தலேயாம். அவ்வதீத சமயமென்றது எச்சமயிகளுந் தத்தம் பரமாகக்கொள்ளக் கிடைப்பினு முக்கிய மநுவர்த்திப்பவ ரேகான்மவாதிகளேயாம். "பன்முகச்சமயநெறி படைத்தவரும் யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்று பலசமயிகளையும், அவருளதிகபாத்தியதைகாட்டி வெளிப்படநிற்கு மேகான்மவாதியையு மறுத்திருப்பதோடு "சுத்தநித்தவரு ளியல்பதாகவுள சோமசேகரகிருபாளுவே" எனச்சிவனது அடையாளத்தையுங் கூறினமையால், அப்பாடலில் "சைவசமயமேசமயம்" என்றமேற்பாகத்தை

யொட்டியவ்வதீதமாகிய சைவத்தால் லஷித்திக்கற்பாலதாகிய பரசிவப்பொருளென்று மேல்யாங்கூறியபொருளை லஷித்தித்தது. சந்திரசூடத்வ மபபதிப்பொருளுக்குரிய லிங்கமாகக் கூறினமையால் ஸாவயவமாயுள்ளதே யப்பதியென்பதும் போதரும். "ஒருநாமமோருருவமொன்றுமில்லாற்கு" என்னும் பரமாசாரியர் வாக்குப் பிரமாணமாதற்கிழுக்குமே யெனின், இழுக்காதென்க. பரமாசாரிய மூர்த்திகளேயன்றி, "குலமிலான்குணங் குறியிலான்குறைவிலான் கொடிதாம், புலமிலான் றனக்கென்னவோர் பற்றிலான்பொருந்து, மிலமிலான்மைந்தர் மனைவியில்லா னெவனவன்சஞ், சலமிலான்முத்திதரும்பர சிவனெனத்தகுமே." எனத்தாயுமானர் கூறியபடியுங்காண்க. இங்ஙனங் கூறியுள்ளனவேயன்றி "குவளைக்கண்ணி கூறன்காண்க, அவளுந்தானுமுடனேகாண்க" எனப்பரமாசாரிய மூர்த்திகளும், "கொழுந்துதிகழ் வெண்பிறைசசடிலக்கோவேமன்றிற்கூத்தாடற், கெழுந்தசுடரே யிமயவரையென்ருய்க்கண்ணுக் கினியானே" எனத்தாயுமானருரும் பாடியருளினாராகலி னவற்றினுண்மையை விசாரிப்பாம்.

சத்தா மாத்திரமாயுள்ள பொருளே சிவமும அதன்றாதான்மியகுணமாகிய சித்தே சத்தியுமாக வேதசிவாகமங்கள்கூறலி னவ்விருவருமுலகுக்குப் பிதாமாதாக்களாயினர் அவ்விருபொருளொற்றுமையினுண்டாமாநந்த ஸ்புரணமே சிவசத்திகள்பெற்ற மக்களாவார். இம்மூன்றுபொருளு மொரேபொருளன்றிவேறில்லை. ஸச்சிதாநந்தகநீபூதமாகிய வப்பரம்பொருள் விகாசத்தைப் பகுத்துணருங்கால் ஸத்தின்கனமேசிவனும், சித்தின்கனமேயுமையும், ஆநந்தத்தின் கனமே ஸ்கந்தகணேசர்களுமாம். பொன்னே பூஷணமாகத்திரிந்தவுபமானவாயிலாக மேலுண்மையைக்கவர்ந்திடுக. முன்னும்பின்னு நிலைகெடாதுநின்றபொன்னைப்போல் விளங்கும் நம்பதிநிலையினைத்தெதன வெளிப்பட்டமையா லொற்கொருநாமமுமில்லை யென்றும் ஆயிரநாமங்களுள வென்பதுமாகிய பரமாசாரியர்கருத்தும் வெளிப்பட்டது. அன்றியும், மாயிகமாகிய பிரபஞ்சதர்மத்தைக்கடந்தொளிர்வது என்னு முண்மையும்போதரும். எங்ஙனமெனின், கணவன், மனைவி, மக்களென்னு முலகதர்மத்தை நோக்குழிக் கணவனோரான்மாவும், மனைவியோரான்மாவும், மக்கள்வேறுவேறு ஆன்மாக்களுமாகவினைக்கீடாக வொருவரையொருவர் சம்பந்தங்கொள்ளத் தருவாதிகளை மாயையிற்கொண்டு போந்துழலாநிற்பர். இங்ஙனம்போல்வதன்றென்னு முண்மையையே யப்பரம வாக்குகள்

காட்டின. சிவனொருகடவுளும், உமையொருகடவுளும், ஸ்கந்தகணேசர்கள் வேறுவேறு கடவுளர்களுமாகக் கொள்ளாமைக்கேயவை பலஞ்செய்யுமென்க. பிரமனாதி கடவுளரைத் தனித்தனிப் பசுக்களாக வேதஞ் சொல்லுகையா லன்னோர்மனைவிமக்களு மவரவர் வினைக்கீடாகச் சிவனாற் கூட்டுவிக்கப் பெற்ற வேறுவேறு பசுக்களேயாவார். இவ்வுண்மைகளால், "பசுபதிப் பெயரியதனிமுதற்கடவுளும்பர்களெவர்க்குமுயர்ந்தோ, னென்பது தெளிக வியல்புணர்ந்தோரே" என்றபிரமாணப்படி. ஸமஸ்த சேதனாசேதனோஜ்ஜீவிதமாயுள்ள வப்பிராகிருதமாகிய திருமேனிகளை யுடையானென்பதே நிர்மாணம். இவற்றின் விரிவை யாஞ்செய்துள்ள (சிவபாரம்யப்பிரதர்சினி)என்னும் பிரபந்தத்தில் "சிவன் எத்தன்மையர்" என்னும் பகுதியிற்பரக்கக்காணலாமென்க. இன்ன பரமகல்யாணகுணைகவிக்கிரகமாய் விளங்குநங்கடவுள் திரிமூர்த்தியுத்தீர்ணராயுள்ளவராகையால் அவராணையின்வழியொழுகும் மாயாகுணவிசிட்டர்களாகிய திரிமூர்த்திகளில் ஸத்வபிரதானராகிய வுருத்திரரேநஞ்சைவசமயத்தாற் பெறப்படும் பரமபதியென்று துணியற்க.(செழும்பொழில்கள் பயந்துகாத்தழிக்குமற்றை மூவர் கோனாய்நின்றமுதல்வன்) என்னும் பிரமாணத்தானுந் தெளிந்திடுக. (ஓதருணை வித்தகரை மூவரிலொருத்தனெனவோதியிடேற்பமதியீர்) என்றதனானுங் காண்க. இன்னு மப்பாடலில் அப்பதிப்பொருள் ஸ்ரீ சிதம்பரமென்னு மோர் க்ஷேத்திரத்தை யிடங்கொண்டிருப்பதொன்றாமென்பதுஞ் "சோமசேகரகிருபானுவாய்" எனவாசிரியர் கூறியவுண்மையை நிறுத்தும். ஸ்ரீ சிதம்பரமென்கையி லதுசமயமொன்றையுஞ் சாராது பொதுவாய் விளங்கலானுண்டு மூர்த்திவிடய முக்கியமன்றெனின், "தானேயகண்டாகாரமயந் தன்னிலெழுந்து பொதுநடஞ்செய், வானே" எனக்கூறியுள்ள வாக்கியத்தால் அது தன்னுண்டதென்க. மேலிடத்தில் ஸச்சிதாநந்தகரீபூதமான சிவலட்சணத்தை வர்ணித்திருப்பதையே மீண்டும் பயன்படுத்திக்கொள்க. அந்த க்ஷேத்திரத்தி லெல்லாச் சமயிகளு மபிமானம்வைத்தலா லன்னோர் கூறும் மூர்த்திகளே பிரதானமென லாகாதோவெனின், அவர் தன்மையை விசாரிக்கி லவருட்சிலர் கேவலரூபவாதிகளும், சிலர் கேவல அரூபவாதிகளுமாய்க் காண்டலா லவர்சொந்தம் பாராட்டுதற்கச்சிதாகாய மிடந்தராதென்க. அவரெல்லாமுஞ் சைவரைப்போன் மூர்த்தாமூர்த்தங்களை யங்கீகரிப்பினன்றோ வவர்க்கு மங்கே யிடஞ்செய்யலாம்? அவர்களுக்கங்கே யிடமில்லாதபோது அவரபிமானஞ் சேர்தலுக்கு வழியேதெனின், மேலிடத்தில் தேகத்தையும், அத்

தேகத்தி லவயவங்களையுஞ் சமட்டி வியட்டிகளாக வபிமானிக்கு முவமானத்தாற் சமயங்களின் றன்மையைக் கூறினோமாகையால் அதையிங்கே விநியோகஞ் செய்துகொள்க. மூர்த்தா மூர்த்தங்களையெல்லாஞ் சமட்டியிற்கொண்டவருக்கு எல்லாவவயவங்களுங் கூடிய தேகத்தைக் கொண்டவரும், மூர்த்தம், அல்லது அமூர்த்தங்களைத் தனித்தனி வியட்டியாகக் கொண்டவருக்குக் கரசரணாதியவயவங்களைத் தனித்தனி வியட்டியாகக் கொண்டவரு முவமிக்கப்படுதலால் வியட்டியாளர் சமட்டியில் அபிமானம் பூண்பதற்குண்டான வேறுதுவெளிப்பட்டதென்க. "தில்லைமன்றுட் பார்த்தபோதங், கென்மார்க்கமிருக்குதெல்லாம் வெளியேயென்ன வெச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சாநிற்பர்" என்றபடியானுங் கண்டுணர்க. வேதசிவாகமங்களுக்குப் பாஹ்யமதவாதிகளு ளரூபவாதிகளே யதிகமாகையாலவரும் வியட்டித் தன்மையா லடங்கிவிட்டனர். தேகத்திலடங்கிய வுறுப்புக்களைத் தனித்தனி யபிமானித்தவர் தேகத்துக்குப் பாஹ்யவாதிகளல்லாததுபோல் மூர்த்தாமூர்த்தங்களைக்கொண்ட சமட்டி சிவதர்மத்தைத் தனித்தனி வியட்டியாகக் கிரகித்துக் கொண்டவரெப்படி வேதசிவாகம பாஹ்யராகக் கூடுமெனின், அவர் பதியினது மூர்த்தாமூர்த்தங்களைக்கொள்ளாமல் பசுபாசங்களிற்போந்த மூர்த்தா மூர்த்தங்களைக் கொள்ளலால் பாஹ்யவாதிக ளென்பதிற்றட்டில்லை. புருடனொருவனை யடைந்து தான் கோரியகாரியங்களை நிறைவேற்றிக்கொள்ள வெண்ணிய வொருவன் தானுபுருடனை யடைந்து தடுமாறியதே யிதற்கு நிதரிசனமாம். அப்படியான காலத்துங் கட்டைமாத்திரமே விரோதப்பட்டு அதிற்புருடாகிருதி விரோதியாவண்ணமவர் பசுபாசமூர்த்தங்களைக் கொள்ளும்போது மவையே பதிமூர்த்தங்களென மயங்கினதேயன்றி வேறில்லையாகையா லெச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பரென்றதனுண்மை விளங்கும். சைவத்தில் வேறான புறச்சமயங்களிலும் அரூபவாத மங்கீகாரமேனு மவைகூறுமரூபவியலும், பதியியலுங்கேவலம் முரணுதலாலவை சைவர்க்கு ஸாமஞ்சஸமாகாவெனவறிக. இக்கருத்தையே "பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம்" என மேல் வலிந்தறிவுறுத்திய படியாம். இது சைவரையே நோக்கிக்கூறியதென்க. புறச்சமயிகள் கூறுந் துர்ப்போதங்களான் மயங்கி முன்னுள்ள சிவத்வாபி வியக்தியை யிழந்தலையு மூர்க்கப்பிணங்களை நோக்கிக் கூறினமைகொண்டே "இக்கருத்தைவிட்டு" எனவும், "புகுதவேண்டாம்" எனவும் விதந்

தன்மைதெரியும். இக்கருத்தையே "உவலைச்சமயங்க ளொவ்வாதசாத்திர மாம்" எனப்பரமாசாரிய மூர்த்திகளுங்கூறினர். மேலினவ் வுண்மை முத்தியைப்பயவாவென்பது விளங்கும் பொருட்டே "முத்திதருந் தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே." என்று கூறிய படியுங் காண்க. புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம் அகச்சமயமென்னு மிருபத்துநான்கு வகைப்பட்ட பேதம், அபேதம், பேதாபேதங்களாகிய பலசமயங்களாலு முத்திகைகூடா வென்பதன் விரிவைச் சிவஞானஸித்தியார், தத்துவப்பிரகாச முதலிய நூல்களாற்கண்டுணர்க. ஈண்டுத் தெய்வசபையைக் கண்டன் மாத்திரத்தானே முத்தியுண்டாமென்பது போதரும். தெய்வசபையென்றது தில்லைமன்றே யாகையாற் தில்லையைக் கண்டான் முத்தியென்ற வேதப்பிரமாணமே சாலும். தேவன் என்பதற்குப் பிரகாசமானவன் என்றுமேலோர் பொருள்விரித்தலால் அந்தச்சத்திக்கொண்டே மாயாகாரியங்களாகிய சித்திரங்களைச் செய்யுமத்தேவனிடத்திற் கூலிக்குவேலைசெய்யும் பலவேலைக்காரருக்குந் தேவரெனப் பெயர்வந்தமைகாண்க. அந்தவேலையினின்று மவர்கள் தள்ளப்பட்டால் மானிடர், நாய்கள், பேய்களாகப் பவிக்கவருதலி னுண்மை விசாரத்தாற் போதருந்தெய்வ மொன்றென்பதே தீர்மானம். தேவியென்னும் ரூடிப்பெயரையுடைய வுமைக்குநாதரேயன்றோ தேவராதல் சாலும். அந்தத்தெய்வமே தில்லைமன்று ளிருப்பதாலன்றோ அது தேவசபையாயிற்று? அதுவே யுண்மைத்தெய்வ மென்பதற்கும், தில்லையைக் கண்டான்முத்தி யென்பதற்கும் போந்தவிதிகாச மொன்று கூறுவாம்.

வியாதருடைய மாணுக்கராகிய ஜைமினி யென்பவர் வேதங்களையெல்லாஞ் சரியாகவோதியுணர்ந்துந் திருவருள் போதாமையாலவ்வேதத்தாற் றுணியப்படுமுண்மை தெளியாதவராயினர். வேதமானது பூர்வம், உத்தரம் எனவிருபகுதியவாகி முன்னையது கருமத்தையும், பின்னையது பிரமத்தையும் பொருள்களெனச் சாதிக்கும் இரண்டையு மிலக்கணையாற் கவர்ந்து பிரமத்தையே வியாதர் பொருளாகத்துணிந்து வேதாந்தஸூத்திரம் என்னும் பிரம்ஹஸூத்திரத்தைச் செய்தருளினர். இதற்கே வியாஸஸூத்திரம், பிரமமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சையெனப் பெயர்கள்வழங்கும். இந்நூலுக்கும், இதையியற்றிய வியாதருக்கும் விரோதமாய்க் கருமத்தை விட்டுப்பிரமமென்பதொரு பொருளுண்டாவதில்லையென வவ்வேத

த்தின்வழியே சாதிப்பான்றொடங்கிப் பூர்வமீமாஞ்சை யென்னுங் கன்மஸூத்திரங்களை யச்சைமினிபகவான் வெளியிட்டனர். வியாதர் கருமத்தைத் தமது ஸித்தாந்தத்துக்குஸாதனமாகக் கொண்டவராகையா லதைத்தாம் விரோதியாவிட்டாலும் அச்சைமினிக்குண்மை வெளியாமாறு அவரைச் சூரியனிடமனுப்பினர். அவரிடஞ்சென்று படித்து மம்முனிவர் தெளியாதவராயினர். "நல்லனநூல்பலகற்பினுங்காண்பரிதே, யெல்லையிலாதசிவம்" என ஔவையாரருளிச்செய்தவாக்கியத்துக்கேயன்றோ வவரிலக்காயினர்? எவ்வளவு கற்றாலும், எவ்வளவு கேட்டாலும், எவ்வளவுபார்த்தாலு மென்னபயன் ? திருவருளில்லாதபோது. அருளிருந்தன்றி யமையாதென்பதை "அருளினாலாகமத்தேயறிபலாம்" என்னும் ஸித்தாந்த போதகர்திருவாக்குங்காட்டும். இன்னும், "உன்றிருவடிக்கீழுறுதியாமன்பு, முன்றிருவருளினாற்கிடைப்ப, தன்றிநூற் பலவுமாய்ந்த தாலுரைசெயளப்பருந் திறமையான்மதியான், மன்றவேகிடைப்பதன்று" என ஸ்ரீமத் அப்பதீக்ஷிதேந்திரர்கருத்தைச் சிவஞானயோகிகள் வெளிப்படுத்தினபடியாலுங் கண்டுகொள்க.

மேல் சூரியபகவானாலுந் தெளிவடையாதவராகிய அச்சைமினி பகவான் சிலகாலங்கடந்து பூப்பிரதட்சிணஞ்செய்யத் தொடங்கினர். அப்படிச்செய்து வருகையில் ஸ்ரீ சிதம்பரத்தையடைந்து ஸ்ரீ நடராஜமணியைக் கண்களின் பிரயோஜனமெனக் கண்டனர். கண்டமாத்திரத்தில் அழலிடைப்பட்ட மெழுகெனவுருகி நெஞ்சங்கசிந்து நெக்குவிட்டுநைந்து பரவசமாயினர். ஐயோ தெய்வமில்லையென்று காலங்கழித்தோமே! நந்தீவினையிருந்தவா றென்னே! என்னே!! இதோவிருக்கின்றதே தெய்வம்! என்று ஓடிச்சென்று எம பெருவாழ்வே! எனனன்பே! எனக்கட்டிக்கொண்டு கண்களினீர்ததும்ப முன்னேநின்று வேதபாதஸ்தவங்களால் துதித்தனர். (வேதபாதஸ்தவம்) என்பது அவரால் துதிக்கப்பட்ட நூலின்பெயராம். ஒரு சுலோகத்தில் நான்குபாதமாகையால் முன்மூன்றுபாதங்கள் தமது சொந்ததிருவாக்கும், நாலாவதுபாதம் வேதமுமாகச்சேர்த்துப் பாடியதென்றறிக. எந்தவேதம் படித்து மென்னபயனுச்சுது? திருவருளில்லாதபோது. "தில்லைச்சிதம்பரதேவாவுன்சித்தந்திரும்பிவிட்டால்", என்னும்படியன்றோ வுண்மை பிரகாசிக்கின்றது? "அவனருளாலேயவன்றாள்வணங்கி" என்றபடியாலுந்தெளிக. இவ்வுண்மைகளால் தில்லையைக்கண்டால் முத்தியென்னுஞ் சாத்ருசமும், தில்லையினுள்ள

தே தெய்வமென்னுஞ் சீர்ப்பாடும் வெளிப்பட்டன. இவை ஸ்ரீருத்ரம், கைவல்யம், சாந்தோக்யம், மஹாநாராயணமித்யாதியுபநிடதங்களாற் பெறப்படுதல்காண்க.

இனிச் செகத்தீரேயென்று பொதுவகையாற் கூறியிருக்க மேலிடத்திற் சைவரையே முன்னிட்டுரைத்தாரென்றதென்னையெனின், செகத்தவர் பல்வேறு வகைப்பட்ட பரிபாகத்தால் சைவபுத்தியின்றித் தேம்பித்திரிந்துழல்வாராக, அவர்போதங்களான் மலைந்தும், அவர் கோள்களின்முனைந்தும், அவரநுபவங்களிலிணைந்தும் அவரவராகி யலையாநிற்கு மநந்தபருவத்தினையுடைய சைவரைநோக்கியேபிடித்துக் கூறத்தொடங்கினமையினவரையே செகத்தீரேயென்று கூறினபடியமைந்ததுகொள்க, அல்லதூஉம், பொதுவாற் செகத்தவரைப் பார்த்துக் கூறினாரெனினு மிழுக்கின்றென்க. செகத்தவரெல்லாம வியட்டியா லகத்தில்லை யெல்லையினின்ற கடவுளையே "தந்தெய்வமெந்தெய்வமென், றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது" என்றபடிப்பற்றி வழக்குப பேசலாலவரையே யவ்வழக்கறுத்தருளும் பொருட்டுச் சேரவாருமென்றழைத்தபடியுங் கண்டுதெளிக. இவ்வாசிரியர் சைவமார்க்கமே சந்மார்க்கமென வற்புறுத்திக் கூறியுள்ளவாக்கியங்களை யீண்டுவரைந்து காட்டுதும். "விண்ணவரிந்திரன் பிரமனாரதாதி விளங்குசத்தரிஷிகள் கனவீணைவல்லோ, ரெண்ணரியசித்தர் மநுவாதிவேந்த ரிருக்காதிமறைமுனிவரெல்லாமிந்தக், கண்ணகன்ஞாலம்மதிக்கத்தானேயுள்ளங் கையினெல்லிக்கனிபோலக் காட்சியாகத், திண்ணியநல்லறிவாலிச்சமயத்தன்றோ செப்பரியசித்திமுத்தி சேர்ந்தாரென்றும்" எனவும், "செப்பரியசமயநெறியெல்லாந்தந் தெய்வமேதெய்வமெனுஞ் செயற்கையான, வப்பரிசாளருமஃதேபிடித்தாலிப்பா லடுத்ததந்நூல்களும் விரித்தேயநுமானாதி, யொப்ப விரித்துரைப்பரிவங்பொய்ம் மெய்யென்னவொன்றிலையொன்றெனப் பார்ப்பதொவ்வாதார்க்கு, மிப்பரிசாஞ்சமயமுமாயல்லவாகியாதுசமயமும் வணங்குமியல்பதாகி" எனவும், "இயல்பென்றுந் திரியாமலியமமாதி யெண்குணமுங் காட்டியன்பாலின்பமாகிப், பயனருளப்பொருள்கள் பரிவாரமாகிப் பண்புறவுஞ்சௌபானபட்சங்காட்டி, மயலறுமந்திரஞ்சிட்சைசோதிடாதி சாற்றுகைநூல் வணங்கமௌனமோலி, மயர்வறச்சென்னியில் வைத்துராஜாங்கத்தி லமர்ந்ததுவைதிகசைவமழகிதந்தோ" எனவும், "அந்தோவீததிசயமிச்சமயம்போலின் றறிஞரெலாநவெறியவணிமாவாதி, வந்தாடித்திரிபவர்க்கும் பேசாமோனம் வைத்திருந்தமாதவர்க்குமற்றுமற்று, மிந்திராதி போகநலம்பெற்றபேர்க்கு மிதுவன்றித்தாயகம்வேறில்லையில்லை, சந்தானகற்பகம்போலருளைக்காட்டத் தக்கநெறியிந்நெறியேதான் சன்மார்க்கம்" எனவும் போந்தவாக்கியங்களே சாலும்.

மேல் விசாரத்தால் எல்லாமார்க்கங்களினுஞ் சிறந்தமார்க்கஞ் சைவமொன்றே யெனவும், அச்சைவத்தாற் பெறப்பட்ட மெய்ப்பொருள் சிவமொன்றேயெனவும், அச்சிவம் தில்லைமன்றுளானவரத தாண்டவம் புரியா நிற்பதொன்றெனவும், அதுவே தந்தெய்வமெந் தெய்வமென்று சமயங்க ளெல்லாவற்றினும் வழக்குப்பேச நிற்ப தொன்றெனவும், அதனலெல்லாச் சமயங்களுமடங்காங்கி பாவத்தால் சைவமேயாகுமெனவும், சிவத்தைக்காட்டினும் வேறுதெய்வந்தேடினுங் கிடையாமையாலெல்லாச் சமயங்களாலும்போந்ததெய்வங்கள்யாவும் நம்பரசிவமொன்றேயெனவும், தெய்வ வொற்றுமையாலும, சமயாங்க வொற்றுமையாலுஞ் சைவத்திற்குவேறான தொருமார்க்கங் கிடையாமையால் சைவராயுள்ளபேர் வேறாக வெண்ணுவதற்கு ஒருசமயமு மில்லையெனவும, யாவருஞ் சைவரேயாவரென வுந் துணிவதுமேலோர் மரபாம்.

இன்னுமிதை விரிக்கில் வேறுசமயிகளிடத்துச் சைவருக்குத் துவேஷமுண்டாகக்கூடாத நியாயங்கள் பலபடக்கிடக்கும். எங்ஙனமெனின், பொய்யாமை, கொல்லாமை, களவாமை, கள்ளாமை பிறர்மனை நயவாமை முதலிய நற்குணங்களுயிர்களுக்குரிய பூஷணமாக வேதசிவாகமங்கள் விதந்துரைக்கும். "அழுக்காறவாவெகுளியின்னாச் சொலுன்கு, மிழுக்காவியன்றதறம்" என்றதேத்யாதி பிரமாணங்களுஞ்சான்றும். இன்ன மங்கலகுணங்களுத்த மோத்தமமார்க்கமாகிய சைவத்துக்கேயமையும். இவை யச்சைவசமயிகள் கொண்டொழுகற்பாலனவாகிய வறங்களாம். இங்ஙனமாக, சைவரென்னும்பேர்மாத்திரம் வகித்துப் படி விபூதியை மேற்பூச்சாகக்கொண்டு பொதிபொதியாக ருத்ராக்ஷங்களைச்சுமந்து பகல்வேடதாரிகளாய்த் திரிந்து கொப்புங்கிளையுமேவிடுத்து வில்வமரத்தினிலைகளை ஸமூலமாய்ப்பறித்துச் சிவபூசையென்னும் வீண்வியாஜத்தாற்போதுபோக்கிக் காலங்கழித்துக்கொண்டு சிவதிரவியாபஹாரங்களும். மேற்கூறிய தர்மவிஹீனங்களுங் கொண்டிலையும்போலிச் சைவரையுமன்றோ வவர்வேடமாத்திரத்தாலஞ்சி நாம்வழிபடுகின்றோம்? மேல்யாம் காட்டிய பகுதிகள் சைவசமயிகளநுட்டிக்கற் பாலனவாகிய பாஹ்யாந்தரமானவிரண்டு தர்மங்களாக வேற்படுகையா லிரண்டிலெனுங் குறையினு மவரைவிவேகிகள் தள்ளவேண்டியது. இங்ஙனமாக, அந்தரதர்மங்க ணிறைந்திருப்பினும் பாஹ்யதர்மங்க ளில்லையாயி

னவரைமாத்திரமேநாம் வர்ஜிக்கின்றோம். இப்படியே பாஹ்யதர்மங்க ணிறைந்திருப்பினு மந்தர தர்மங்களில்லையாயி னவரையும் நாம் வர்ஜிக்கவேண்டுமன்றோ? அப்படிக்கனுபவமின்றே! இது என்ன பெருந்தாழ்வு? சைவருளநேகர் பாஹ்யதர்மிகளாகவே திரிவதன்றி அந்தரதர்மிகளாகக்கிடைப்பது அதிதுர்லபமாய்விட்டது. அந்தரத்திலவலம்பிப்பன வெல்லா முலகாயதர்க்குரிய வஞ்சம், பொறாமை முதலான வஸங்கதங்களேயாகையால் அவரேன் புறச்சமயிகளாக மாட்டார்கள்? அப்படியே கடவுளில்லை யெனவுலகாயதஸித்தாந்தத்தைப் பாஹ்யத்தி லவலம்பிப்பவருள் பொய்யாமைமுதலியவந்தரதர்மங்கள் ஸித்திக்கப்பெற்றவர் கிடைப்பினவரேன் சைவராகமாட்டார்கள்? சைவத்துக்கே யவை யுரியதருமங்களாகையால். இவை யெல்லாச்சமயங்கட்கும் பொதுக்குணங்களெனக் கூறுவாருமுளர். சைவத்தைவிட்டு ஒருசமயமு முண்டாதற்கே யிடமில்லாதபோது அங்கே யவர்கூற்றுப் பயன்படுவதெங்ஙனம்? சைவத்தினடியாகவே யச்சமயங்கள் சீவித்தலாலவற்று ளித்தருமங்களுபசாரமென்க. பாஹ்யத்தில் சைவசிந்நங்கண்டு சைவரென மருவும்படியே அந்தரத்திற் சைவதருமங்களைக்கண்டு சைவரென மருவிக்களிகூர்தல் சாலுமென்க. இதனாலெந்தச்சமயிகளுஞ் சைவதருமங்களைப் பாஹ்யாந்தரங்களாகிய விரண்டுவகையாலுங் கொள்வதரிதாயினு மவற்றுளொருவகையாலாவ தவசியங்கொண்டே யிருப்பராகையால் யாவருஞ் சைவரால் விரும்பத்தக்கவரேயாவர். இப்படிக் கூறியதால் பாஹ்யாந்தரங்களாற் சைவஸித்தியுண்டாவது பரமகஷ்டமென்பதும், அப்படியுண்டாகப் பெற்றவரருமையிற் கிடைப்பவரென்பதும், அவருக்கு ஸமரசஞான முண்டாமென்பதும் ஏற்பட்டது. இவ்வாறன்றி மாயாவாதத்தையே வேதாந்தமெனவும், அந்தப்போலி வேதாந்தமுஞ் சைவஸித்தாந்தமுஞ் சமரஸமாகியவொரே ஞானமெனவும்பேசிப் பொங்கியழிவார் கோளையும், ஆணவத்தான்மொத்துண்டு பிறந்துழலும் விண்டுமுதலிய போலித்தெய்வங்களையும், நம்பரமசிவமூர்த்தியையு மொரேதெய்வமென்று சமரஸ ஞானம்பேசிச் சழக்கிற்பட்டுழல்வார் கோளையுஞ் சமரஸமெனல் பொருந்தாது! பொருந்தாது!!

ஈண்டு மாயாவாதம்,போலிவேதாந்தமென்றுகூறி நம்மால்பஹிஷ்காரஞ் செய்யப்பட்ட சமயமே யுத்தமோத்தமமான வைதிகமார்க்கமெனவும், அதற்கிப்பெயர்க ளுரிமையல்லவெனவும், மாயாவாத

மெனவதைக் கூறுவதற்கு நியாயங்கிடையாதெனவும், மாயையென்பதொரு பொருளேயே கொள்ளாத வம்மத மெப்படிமாயாவாதமாகுமெனவும், அதுவே மாயாவாதமாகுமெனி னம்மதத்துப்பூர்வீகர் தங்கள் சாத்திரங்களில் மாயாவாதமென்னுமோர் மதத்தை நிரசிப்பதென்னேயெனவும், அதனுல். "மிண்டியமாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ் சுழித்தடித்தா அர்த்து" என ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் கடிந்தருளிய மார்க்கமிதென்னதெனவெளிபட்டதெனவும், இந்தமாயாவாதப்பே ரதைவிட்டொழிதலா லதற்குப் போலிவேதாந்தமென்னும்பேரு மப்படியேயாகுமெனவும், அப்படியாகுங்கால்வேதாந்தமென்னுமார்க்கம் அதைக்காட்டிலும் வேருகவுண்டாவது கூடாதெனவும், சித்தாந்தமென்னுஞ் சைவத்துக்கு அது பொருண்முடிவில் விரோதியாமையால் ஸித்தாந்தமும் அதுவேயாகுமெனவும், இரண்டுமொன்முன வுண்மையறிந்தே "வேதாந்த சித்தாந்தசமரச நன்னிலைபெற்ற வித்தகசித்தர்கணமே" என்று தாயுமானவருங் கூறினுரெனவுஞ் சமாதானங்கூறித் திருப்தியடைந்துகொள்ளு மன்னேர் அறியாமை தொலைய வுரைசெய்வாம்.

போலிவேதாந்தமென யாம் நிரசிக்கு மார்க்கத்தை யுத்தமோத்தமமான வைதிகமார்க்கமென்று அவா கூறலாலுண்டாகிய வுசிதம்யாது? கடவுளில்லை, ஆன்மா இல்லை, பூதங்களே யுள்ளவையெனக்கூறுமுலகாயதனுந் தன்னை வைதிகமார்க்கத்தானுகக் கூறலால். "பூதத்தேயன்னமாகி யன்னத்தாலுடம்புபுந்தி, பேதித்தேமனமுமாகிப் பிரிந்தமை திருந்தவின்று, வேதத்தேகிடக்கவென்னே மேதினியோர்களெல்லாங், கேதத்தேவீழ்ந்துவேறு நெறிபலகேட்குமாறே" என வவனநுதாபப்படும் பிரமாணவாக்கியமேசாலும். இவன் சிவசீவர்களுக்கு நாத்திகத்வங்கூறிப் பூதங்களைமாத்திரமே யாத்திகமாகக்கொண்டவன். இவனை யேனையசமயிகளெல்லாம் நாத்திகன், நாத்திகனென வோயாது கூறுகின்றனர். மாயாவாதியுமப்படியே கூறுகின்றனன். அது அவன் பாலிழுக்கெனவறிக. அவனே ஆத்திகனுகாதபோது அவன் பிறரை ஆத்திகரென்றல் யாண்டிசையும்? உலகாயதன் பூதங்களுக்குமாத்திரம் ஆத்திகத்வங்கூறிச் சிவசீவர்களுக்கு நாத்திகத்வமங்கீகரித்திருக்கின்றனன். சத்தாயுள்ள சிவத்தை யங்கீகரித்த மாயாவாதிக்கும், அசத்தாயுள்ள பூதத்தையங்கீகரித்த வுலகாயதனுக்கு மொருதாரதம்யமும் யாங்கண்டிலம். இரண்டுபேரும் நாத்திகரென்னுந் துணிவுடைமையால். சத்தாகிய சிவத்தை மாத்திரங்

கொண்ட மாயாவாதிக்கு அசத்தாகிய வுலகமும், சதசத்தாகிய வான்மாவுமில்பொருள்களாய்முடிதலி னவனை முழுஆத்திகனெனல்கூடாது. அசத்தாகிய வுலகத்தைமாத்திரங்கொண்ட வுலகாயதனுக்குச் சத்தாகியசிவமும், சதசத்தாகிய வுயிருமில்பொருள்களாய் முடிதலி னவனுமப்படியே முழு ஆத்திகனாகமாட்டான். மாயாவாதிக்குள்ள ஆத்திகத்வமுலகாயதனுக்கு முண்டாயினமையின் மாயாவாதியாவானினி யுலகாயதனை நாத்திகனெனக்கூறித் திரிதனலஞ்செய்யாதென்க. உலகாயதன் அசத்தாகிய பூதங்களே சிற்சடங்களாய்த் திகழுமெனவும், மாயாவாதி சத்தாகிய சிவமே சிற்சடங்களாய்த் திகழுமெனவுங்கூறலா லிருவர் கோள்களுமொரே தன்மையவாகியழியும். "சத்திலசத்துரைசெய்வாரகம்பிர, மத்தருன் மத்தரென்றுந்தீபற" என மாயாவாதியையும், "ஓதுமசத்தி லுயர்சத்து திக்குமென், றோதுவர்நாத்திகருந்தீபற, ஆகமிழந்தாரென்றுந்தீபற" என வுலகாயதனையுஞ் (சித்தாந்தவுந்தியில்) யாம் கண்டித்திருத்தல்காண்க. சத்து அசத்தாகவும், அசத்துச்சத்தாகவுந் திரியமாட்டாவாகையால். நெல் கமுகாயும், கமுகுநெல்லாயு நீளாவென்னுந்தருக்கமே யதைநிறுத்தும். நாத்திகராகிய வவ்விருவருள் மாயாவாதியை ஆத்திகனென்கையிலப்படியே யுலகாயதனையும் ஆத்திகனென்றலிற் பழுதில்லையெனவும், உலகாயதனை நாத்திகனென்கையி லப்படியே மாயாவாதியையும் நாத்திகனென் றலிற்பழுதில்லையெனவுங் கற்றுணர்ந்த மேலோர்கருதாநிற்பர். இப்படி யிவர்களொழியவே, சத்து, அசத்து என்னு மிருபொருள்களையுந்தான் விவகரித்தலாலவற்றின் வேறான மூன்றாவது சதசத்தாகிய வான்மாவென்னுந் தன்னையுங்கண்டு பதார்த்தத் திரயபோதகமாகிய வேதாந்தரஹஸ்யங்களைக் கண்டுணர்ந்தவனேயன்றோ ஆத்திகனாவான்? கண்டவுலகமும், காணும் ஆன்மாவும், காட்டுஞ்சிவமுமாகிய மூன்றனுளொன்றுகெடினு மாண்டு ஆத்திகம் பூர்த்திகட்டாதென்க. சித்சிதீசுவரபதார்த்தத்திரயபோதகர்களாகிய பாஞ்சராத்திரிகட்கு ஆத்திகத்வம் ஸித்திக்குமேயெனின், அன்னோர் காணுந்தன்மையினவாகிய தம்மோடொத்தபசுக்களு ளோர்பசுவையேகாட்டும் பதிப்பொருளென மயங்கலாலவருக்கும் பதிநிச்சயத்தன்மையில் நாத்திகமேநிலைக்கும். மேல், பதிபசுபாசபதார்த்தத்திரய போதகராகிய சைவஸித்தாந்திகளே முழுஆத்திகராதல்கண்டுதெளிக. சைவமொன்றுக்கே ஆத்திகத்வம் நிலைத்தலாலதுவே வேதவேதாந்தபாரங்கசிலர்களால் கொள்ளத்தக்க வைதிகமார்க்கமாயினமை ஸித்தித்தது. இந்த வுண்மை

நியாயங்களால் மாயாவாதமே வைதிகமார்க்கமென்று சாதிக்கப்புகுவது தவறாய்விட்டது. நாத்திகமுமவைதிகமுமாகத்துணியப்படு மம்மதத்துக்கு மாயாவாதம், போலிவேதாந்தமென்னும் பெயர்களுரிமையல்லவென்னுந்தூர்வாதமு மினிச்சிவியாதென்க. மேல்வியவஸ்தையா லப்பெயர்களம்மதத்திற்குரியவேயென்னு நியாயம் போதரலாலதையின்னுங்கொஞ்சம் விளங்கவுரைப்பாம்.

மாயையை யில்பொருளாகக் கொள்ளலாலவர்மதம் மாயாவாதமாவதெப்படியெனின், அவர் ஜகஜ்ஜீவபரங்களை மித்தையெனக் கூறுந்தன்மையான் மித்யாவாதிகளென வவரையுண்மைநூல்கள் கூறும். (யாமாஸாமாயா) என்பதற்கு எது இல்லாததோ அது மாயையென வவர்மதப்படியே பொருளுண்டாவதாலதுவே மித்சாவாதம், மாயாவாதமென்றின்னனவாக வழங்கப்பெறும். மித்சாவாதம் என்பதற்கும், மாயாவாதமென்பதற்கு மொரேபொருள் கண்டுதெளிக. சிவனை யுள்பொருளாக வாதிக்குஞ்சமயம் சைவவாதமெனவும், விண்டுவை யுள்ளபொருளாக வாதிக்குஞ் சமயம் வைணவவாதமெனவும் பெறப்படுதல்போன் மாயையையுள்பொருளாவாதிக்குஞ் சமயமாயினன்றோ அது மாயாவாதமாகுமெனின், ஒருசொல்லுக்குப் பலபொருளுண்மையா லப்பலபொருளும் ஸந்தர்ப்பங்களின்வழி விநியோகம்பெறும். மாயையென்ப தொருபொருளையில்லாதது எனவவர்கூறுவது சொன்மாத்திரமே யன்றி யவர்க்குள்ளரோதனங்களெல்லா மம்மாயாவிலாசமேயாம். அநுபவத்திலதையுடையவராகி வார்த்தைமாத்திரத்தாலது கிடையவேகிடையாதெனக் கூறுவதாலவர் வீண்சொல்லென்னை, கௌரவம் பெறுமா? மாயையுளதென்பது சொன்மாத்திரமெனவும், அதுபொருளாகவுளதாயின் ஞானிகளநுபவத்திற்பிரபஞ்சந் தோன்றாததென்னையெனவுஞ் சங்கித் தழலுமன்னோரறியாமையைத் தொலைப்பாம். அஞ்ஞானிகளுக்குச் சிவம் விஷயமாகாததுகொண்டு அச்சிவமுஞ் சொன்மாத்திரத்தது எனவும், அதுபொருளாக வுளதாயினஞ் ஞானிகளநுபவத்திலேன் றோன்றக்கூடாதெனவு முண்டாகு மாசங்கைக்குச் சமாதானமவர்சொல்லட்டும் பார்ப்போம். ஞானிகளுக்கு உலகமும், அஞ்ஞானிகளுக்குச் சிவமும்புலப்படாவென்க. அஞ்ஞானிகளுக்குச் சிவம் விஷயமாகாமையா லதை யில்பொருளென லமையாததுபோன் ஞானிகளுக்கு விஷயமாகாதது கொண்டே பிரபஞ்சத்தை யில்பொருளாகத்துணிவது சர்வாஸங்கதமென்க. ஞானிகளுக்குச்

சிவமொன்றே தோன்றிக்கொண்டிருக்கும். அப்படியே அஞ்ஞானிக ளுக்குப் பிரபஞ்சமொன்றே தோன்றிக்கொண்டிருக்கும் இவ்வுண் மைகளான் மாயையென்பதொருபொருளை யாமங்கீகரித்த தில்லை யென வவர்கூறுங்கூற்றுச்சிதைவுண்டெதன்க. "இல்லாததேததுவே மாயை யெனினில்லாத, தில்லாததேயாகுமெம்மதமே, யில்லா, வொருபொ ருளுண் டென்னவுரைக்குமோவேதம், வருபொருள் வேறாகமதிப்பீர்" என யாம் (சித்தாந்தசேகரத்திற்) கூறியபடியானுங்காண்க. (வருபொருள்வே றாகமதிப்பீர்) என்பதனை ஞானிகளுக்குச் சிவமொன்றே தோன்றிக் கொண்டிருக்குமென மேற்சாதித்த நியாயமேநிறுத்தும். உள்ளதை யில்லதாகக் கூறுந்தன்மையால் அஸத்தியவாதிகளென்பது தோன் ற மிச்சாவாதி, மாயாவாதியென வவரையாம்கூறுதல்பிழைபடாதெ னவறிக. தம்மநூல்களிலவர் மாயாவாதமென வேறொன்றை நிரசிக்க த்தொடங்குவதெல்லாந் தம்பாலேலறிய குற்றத்தைத் தவிர்த்துக்கொ ள்ளும் பொருட்டேயாம். ஒருவன்றலைமேல் மலமிருக்கக் கண்டிரங் கிய மற்றொருவனுன் றலைமேலுள்ள மலத்தைமாற்றுதி யென்றவள வில் என்றலைமேன் மலங்கிடையாது, அவன்றலைமேன் மலமிருக்கிற தென வேறொருவனைச் சுட்டிக்காட்டியும், உன்றலைமேற்றான் மலமி ருக்கிறதெனச் சொல்லவந்தவனையே திருப்பிக்கூறியுந் தன்றலையிலு ள்ளமலத்தைமாற்ற வழிதேடாதமதிகேடன் விருத்தாந்தத்தினிதட ங்கலால் விவேகிகள் கழகத்து மணம்பெறுதென்க. மாயாவாதியாகி ய தனக்கு நேரிட்டிருக்கும்நாத்திகத்வத்தைப் பரிகரித்துக்கொள்ள மாட்டாமல் உலகாயதனை நாத்திகனென வவன்பழித்துத்திரியும் பண்பிற்றேனை முற்றுமிழிந்தழியுமென்க. (மாயாவாதி பேயாகித், தா னேயுரைக்கு மந்நூலினுண்மைதன்னைச் சாற்றுவாம்) என அருணந்தி சிவாசாரிய சுவாமிகளும், (மாயாவாதப்பேயா வுனக்குத், தேவரிலொருவ னுண்டாக, மேவருநரகம் விடுத்தலோவரிதே.) என உமாபதிசிவாசாரிய சுவாமிகளும் முறையே சிவஞானசித்தியிலும், சங்கற்ப நிராகரண த்திலுங் கூறினராகலி னவற்றினுண்மைகளை யறிந்தோர்பாற் கேட் டடங்குக. இப்படி யுண்மைவெளிப்பட்டமையால், ஸ்ரீமந் மணிவா சகமூர்த்திகள் கடிந்தருளிய மாயாவாதம் தம்மதல்லவெனத் தப்பி த்துக்கொள்ள வழிபார்த்ததுந் தடுமாறிப்போயிற்றென்க.

இந்த விசாரத்தால், மாயாவாதப்பேரவரை விட்டொழியாமை வெளிப்பட்டதனாற் போலி வேதாந்தபேரு மவரைவிட்டதில்லை யெ ன்பதை நிரூபிப்பாம். மேலிடத்தில் வியவஸ்தைபண்ணி மாயாவாத

மென்பது நாத்திகம், அவைதிகம் என்னும் பெயர்கட்குரிய சிருஷ்டித்தெனத் தீர்மானித்திருக்கின்றேமாகையாலதுவே போலிவேதாந்தமென்பதை நிலைக்கப்பண்ணும். இவ்வளவாபாசத்தினதாகியவதை வேதாந்தமாகிய சைவதுல்யமெனவாவது, சைவாதீதமெனவாவது எந்த விவேகத்தால் நாமொப்புக்கொள்ளலாம்? வேதாந்தம் என்பது வேதமுடிவு என்று பொருள்படும். வேதத்தின்முடிவு சிவமென்றே தீர்மானம். அச்சிவம் ஸச்சிதாநந்த கநீபூதமாயுள்ளது. அதற்கு அநர்தஜடதுக்காதிகள் கூறுவது வேதாந்தமாகாது. இங்ஙனமாக ஜநநமரணப்பட்டுழலு முயிர்வர்க்கங்களும், தநுவாதிகளாகக் காரியப்பட்டழியு மாயாப்பிரபஞ்சங்களு மந்தப் பரமசிவத்தின் விபூதியெனக்கூறிப் பிரலாபிக்குஞ சித்தாந்தத்தை நாமெப்படி வேதாந்தமென்னலாம்? தத்வமஸியாதி வேதாந்தங்களால் ஸித்திக்கு முண்மை யெதைப்பயக்குமெனின், (ஆரணங்கடருதத்துவம்மஸி யெனும்பதப் பொருளறிந்திடாய், காரணம்மதுவுநீயுமென்றிருமை கண்டுவேறின்மைகருதலால்) என்னும் வசனத்தாற் கண்டுணர்க. இத்தியாதி மஹாவாக்கியங்களை வேதாந்தமென்பதிற் றட்டில்லை. இவற்றினுண்மையு முரிமையுமானபொருள்களையன்றி மதாந்தரஸ்தர் அந்யதாகூறும் ரோதனர்த்தங்களெல்லாம் எப்படி வேதாநதமாகும்? அபார்த்தங்களாற் பிரலாபித்துக்கொண்டிருப்பவரெல்லாமுந தங்களை வேதாந்திகளெனக்கூறித்திரிவதால் அவருளக்ரகண்யனாகிய மாயாவாதியுமப்படியே சொப்பனங் கண்டுகொண்டிருக்கின்றனன். அவற்றினுண்மைப் பொருளைக்கவர்ந்து அநுஸந்தானஞ்செய்யு மாற்றலுடையவனெவனோ வவனேயன்றோ வேதாந்தியென வெளிப்படக்கூடும்? அவனெவனோ யிருக்கக்கூடுமெனின், வேதாந்தத்திற் கூறிய ஸச்சிதானந்தலட்சணத்தைக் காலத்திரயத்துஞ் சிதையாமற் பாதுகாத்துக்கொள்ளத்தக்கவனுய்ச்சிவத்தியான விசிட்டமேற் கொண்டொழுகு முத்தமாதிகாரியாதல் வேண்டும். அந்தலட்சணங்குன்றுது உபசீவிப்பது சிவாகமஸேவை செய்தாலன்றி விளங்காது. அச்சிவாகம நிஷ்டை பெற்றவரே சைவ ராகையால் அவரே வேதாநதிகளாதல் சாலும். வேதத்தினந்தத்தை யறிந்தவரே வேதாந்திகளாவதுண்மையாக, சிவாகமங்களையறிந்தபேர் வேதாந்திகளாவதெங்ஙனமெனின், வேதத்தினந்தத்தை யறியுந்தன்மையி லுண்மையறிவும், பொய்யறிவுமாக வெளிப்படலால் உண்மையறிவின்படி வேதாந்தமும், பொய்யறிவின்படிப் போலிவேதாந்தமுஞ் சித்திக்கும். ஒவ்வொருவருந் தாந்தாங்கூறும் பொருளேயுண்மையெனக்கோடலினதனை யிதுதானெனநாட்டுதல்

வேறு சான்றிருந்தாலன்றி யமையாது. அச்சான்றே சிவாகமமாகையாலதனையுணர்ந்தவரே வேதாந்திகளென்றல்பொருந்தும். வேதத்தையும், வேதாந்தங்களாகிய உபநிடதங்களையுஞ் சொன்ன சிவனே சிவாகமங்களையுஞ் சொன்னாராகையால், வேதத்தை ஸூத்திரமும், சிவாகமத்தைப் பாடியமுமாகக் கொள்ளுஞ் சைவமார்க்கமே வேதாந்தமெனவுஞ் சித்தாந்தமெனவும் பெறும். மூலத்தால் வேதாந்தமும், பொருள்விளக்கத்தால் ஸித்தாந்தமுமாகி விளங்குஞ் சைவமார்க்கத்தோடு எப்படியோ மாயாவாதம் ஸாம்யம்பெறும்? அம்மாயாவாதத்துக்குமுன் சிவாகமம் இருளுக்குமுன் கதிரொளியாகுமாகையால். இருளுங்கதிரொளியு மொன்றாகு மெனினன்றோ, மாயாவாதமுஞ் சைவமுமொன்றாகும்? அப்போதல்லவோ வம்மாயாவாதம் வேதாந்தமுமாகும்? அப்படியே சித்தாந்தமுமாகும்? பின்னர் வேதாந்த சித்தாந்த சமரசமுமதுவே யென்னலுமாகும்.

பதிபசுபாசங்கண் மூன்றுக்குமாத்திகங்கூறும் வைதிகசைவத்தின் முன்னர்ப் பாசபசுக்களுக்குநாத்திகங்கூறிப் பதிக்கு மாத்திரம் ஆத்திகமங்கீகரித்து அப்பதியைக்காட்டிலும் பசுபாசங்கள் வேறில்லையெனப் பதிநிந்தைகூறுநிற்கு மம்மாயாவாதம் ஸாம்யம் பெறுவதெங்ஙனம்? கதிரொளியும், கண்ணொளியும், இருளுமாகிய மூன்றுங்கதிரொளியேயென்னப் பொருந்துமா? தனித்தனி யொவ்வொன்றும் வேறுவேறு லட்சணங்களைக் கொண்டுவிளங்கலால். கதிரொளிசிவமும், கண்ணொளி யுயிரும், இருள் மலமுமானபோது இம்மூன்றையுங் கதிரொளியேயென்று சொல்லுவதெங்ஙனம்? மூன்றும் வேறுவேறாகி வியாபக, வியாப்தி, வியாப்பியங்களாக விரவிநிற்குமென்னுஞ் சைவசித்தாந்தமும், இவை மூன்றல்ல வொரே பொருளென்னும் மாயாவாதமு மெப்படியோ சமரசமாகும்? பசுபாசங்களை யில்பொருள்களாகமதித்துப் பதியொன்றுளதெனக்கொண்டதேயன்றி அப்பதிதருமங்குலைய வதுவே பசுபாசங்களாய்த் திரிந்ததென்னு மாபாசத்தா லப்பதிக்கு நாத்திகத்வமே ஸித்திக்கச்செய்தவராயினர். அப்படிப் பரிணாமத்தைப் பெறுவது பதியாகக் கூடாமையால். அல்லது பசுவே பதியாயின தென்றாலும், பாசமே பதியாயினதென்றாலுஞ் சர்வாஸங்கதமெனத் தள்ளுண்டுபோமெனவறிக. வேதாந்தத்தின் பொருளாயுள்ளது ஆகமாந்தமாகையா லவ்வாகமாந்தமே ஸித்தாந்தமென லமையும். இவ்விரண்டுமே ஸமரச

மாகுமன்றியேயினைய நான்முடிவுகளைச் சமரசமெனல் பொருந்தாது! பொருந்தாது!! "ஓரும் வேதாந்தமென்றுச்சியிற்பழுத்த, வாராவின்பவருங்கனிபிழிந்து, சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுதருந்தினர்சிலரே" எனப்போதரும் பிரமாணத்தானு மிதுநிலையுதல்பெறும். வேதாந்தமுடம்பும், சித்தாந்தமுயிருமென விளங்கலாலவை யத்துவிதப்பட்டுநிற்கு முறைமைநோக்கி அதுவேயிது வெனவும், இதுவேயதுவெனவுங் கூறுதல் பொருந்தும். இன்னும், "வேதாந்தத்தெளிவாஞ் சைவ சித்தாந்தத்திறனிங்குத்தெரிக்கலுற்றாம்" எனவும், "வேதாந்த சித்தாந்தமே பிறவாவீடென்றான், ஓதாமல்வேதமுணர்ந்தோன்" எனவும் போந்தவருள்வாக்கியங்களு மவ்வுண்மையைக்காட்டும். இன்னவுண்மையை விளக்கவேயன்றோ "வேதாந்த சித்தாந்தசமரசநன்னிலைபெற்ற வித்தகச்சித்தர்கணமே" எனத் தாயுமானாருங்கூறினர். இங்ஙனந்தேராது மாயாவாதத்தையே அவர் வேதாந்தமெனக் கொண்டாரெனவும், அதையே சித்தாந்தமாகிய சைவத்தோடு சமரசங்கூறினாரெனவும் வீணாசை கொண்டு உரிமைபாராட்டுவாரு மவர்வாய்மைப்பாடு வளம்பெறுகென்க.

அவர்கோளை மாயாவாதம், போலி வேதாந்தம், போலியத்துவிதம், அகம்பிரமவாதம், ஏகான்மவாதம், பிரச்சின்னபௌத்தவாதம், சூனியவாதம், நாத்திகவாதம் என்றற்றொடக்கத்துப் பலபெயர்களால் வழங்குவதே யுரிமையென்க. என்னை, அகம்பிரமவாதம் என்பது எமக்குமொப்பேனும் அத்துடன் பிரமவாதமென்று மதை வழங்குவே மெனின், அதுகூடாது. பிரமவிலக்கணஞ் சிதைந்துபோக விவகரிக்கும் அவலத்தைப்பெற்று விளங்குகையால். உலகாயதனுக்கு அவன்கூறும் பூதசமட்டியே ஜகத்காரணமாகின்றமையாலவனுமன்றோ பிரமவாதியென வெளிவரக்கூடும்? அவன் பூதத்தையேபொருளெனக் கொண்டபடி யிவன் பசுவையே பொருளெனக் கொண்டமையா லிருவரும் போலிப்பிரமவாதிகளேயாயினர். இரண்டுக்கும் வேறாகப் பிரமமொன்று விலட்சணமாக வுண்டாகையால். அந்தப்பிரமம் சிவவாசகத்தால் சைவசித்தாந்த மொன்றனே பெறப்படுகையால் அதற்கே பிரமவாதம் என்னும் பெயர் சிறக்குமென்க.

இப்படிப்பட்டவுண்மைகளை யறியாது தம்ம விபரீதப்படியே தாயுமானாரையுங் கொண்டு அவர் சுத்தவேதாந்தியென்பவரும், வே

தாந்தசித்தாந்தசமரசி யென்பவருமாகப் பொங்கிவழியும் பூரியருள்
ளம் வெள்குற வின்னுஞ் சிலவசனங்களைக்காட்டி அவர் சைவசிரோ
ரத்நமாயுள்ளவரென்பதை நிலைக்கப்பண்ணுவாம். "கவ்வுமலமாகின்ற
நாகபாசத்தினாற் கட்டுண்டவுயிர்கண்மூர்ச்சை, கடிதகலவலியவருஞானசஞ்
சீவியே" எனவும், "காரிட்டவாணவக்கருவறையிலறிவற்ற கண்ணிலாக்குழ
வியைப்போற், கட்டுண்டிருந்தவெமை வெளியில்விட்டு" எனவும், "கருமரு
வுகுகையனையகாயத்தினடுவுட் களிம்புதோய் செம்பனையயான், காண்டகவி
ருக்கநீ ஞானவனல் மூட்டியே கனிவுபெறவுள்ளுருக்கிப், பருவமதறிந்து நின்
னருளானகுளிகைகொடு பரிசித்துவேதிசெய்து, பத்துமாற்றுத்தங்கமாக்கியே
பணிகொண்ட பட்சத்தையென்சொல்லுவேன், அருமை பெறுபுகழ்பெற்ற
வேதாந்தசித்தாந்த மாதியாமந்தமீது, மத்துவிதநிலையரா யென்னையாண்டுன்
னடிமை யானவர்களறிவினாடுந், திருமருவுகல்லாலடிக் கீழும் வளர்கின்ற
சித்தாந்தமுத்திமுதலே, சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியேசின்மயானந்த
குருவே" எனவும் போந்திடும் வாக்கியங்களைத் தரிசித்தாலன்றி வே
தாந்த சித்தாந்த சமரசவுண்மை விளங்காதென்க. இந்தவசனங்க
ளால் பதார்த்தத்திரயபோதகமாகிய சைவரஹஸ்யமேபிரதிபாதிக்க
ப்பட்டன. அன்றியும், வேதாந்த சித்தாந்தங்களை யாதியுமந்தமு
மெனக்கூறப்பட்டது. (வேதாந்தசித்தாந்தமேபிறவாவீடென்றான்)என்னு
ம்வாக்கியம் கண்ணுடைய வள்ளலாரருளிச்செய்ததில் வேதத்தினு
டைய வந்தத்திலுள்ள சித்தாந்தம் என்று பெறப்பட்ட வர்த்தத்
தையே யன்றோ விந்தவசனமுங்காட்டிற்று? இன்னும், அத்துவிதநி
லையினராயுள்ளபேர் சிவனுக்கடிமைகளெனவும், அவருக்குத் தாமடி
மையெனவுங் கூறினதாக வெளிப்பட்டது. இதனால் வேதாந்தத்
தைக் களவாடியதுபோல் அத்துவிதந்தம்மதெனக் களவாடியதுஞ்
செரிக்காமற்போயிற்றென்க. அத்துவித மென்பதற்கு ஏகமென்று
பொருள்கொண்டழியு மன்னோரை யடிமைகொள்ள வேறொருபொ
ருள் அவருக் கன்னியமாகத் தேடக்கிடையாமையி னவரை யவ்வ
த்துவிதமுந் தெருவில்விட்டதென்க. ஆயின், "சைவமுதலாவளவில்
சமயமும்வகுத்துமேற் சமயங்கடந்தமோன, சமரசம்வகுத்து" எனச் சை
வாதீதமான சமரசமொன்று கூறியதென்னையெனின், இதனுண்
மையைச் (சங்கற்பநிராகரணத்தில்) சைவவாதி சங்கற்பமறுப்பிற்
கண்டுதெளிக. இன்னும், "வேதமுடனாகம புராணவிதிகாசமுதல் வேறு
முளகலைகளெல்லா, மிக்காகவத்துவித துவிதமார்க்கத்தையே விரிவாயெடுத்து
ரைக்கு, மோதரிய துவிதமே யத்துவிதஞானத்தை யுண்டுபண்ணுஞானமாகு,
மூகமநுபவவசன மூன்றுக்குமொவ்வுமீ துபயவாதிகள்சம்மதம், ஆதலினென
க்கினிச் சரியையாதிகள்போதும்" என்னும் வசனத்தையுஞ் சற்றேபரி

யாலோசிப்பாம். இதனுள், (ஒதரியதுவிதமே யத்துவிதஞானத்தை யுண்டு பணுஞானமாகும்" என்றதை மாயாவாதமாகிய அத்துவிதஞானத்தைச்சைவமாகிய துவிதஞான முண்டுபண்ணுமென்றுபொருள்கொண்டு மயங்குவர். மேல், (யூகமநுபவவசன மூன்றுக்குமொவ்வுமீ துபயவாதிகள் சம்மதம்) என்றவிடத்தில் உபயவாதிக ளென்பது துவைதியாகிய சைவனும், அத்துவைதியாகிய மாயாவாதியுமெனவன்றோ பொருள் கொள்ளவேண்டும்? அங்ஙனங் கொண்டால் பொருந்தாது. மாயாவாதி தனதுமார்க்கத்தை மேலாகக்கருதினவ னாகையால் சைவத்தைத் தனது மதத்துக்கு ஸாதனமாகக் கொள்ளுவன். இது ஒருவாதிக்கு ஸம்மதமாயிற்று. இவன் கருத்திற்கேற்பச் சைவசித்தாந்தி தன்னைத்துவைதியாகவும், தனக்குமேலிட்ட வத்துவிதியாகிய மாயாவாதியொருவனுளனெனவும், அவன்மதத்திற் கூட்டிமுடிக்கும் ஸாதனமாத்திரத்தது தான் பற்றியுள்ள சைவமெனவுமொப்பி யிருந்தாலன்றோ மற்றொருவாதிக்கும் ஸம்மதமென்பது போதரும்? அப்போதன்றோ உபயவாதிகள் ஸம்மதம் என்னுஞ்சொல் பிரயோசனத்தையடையும்? சைவசித்தாந்தியின் ஸந்நிதியில் மாயாவாதிக்குப் போலியத்துவித யென்னுமிகழ்ச்சிப் பெயருண்டாகிப் புறப்புறச்சமயியா யொதுங்குந்தன்மை நேருமாயி னவன் சாய்வுகாலிந்த விடத்திலெம்மட்டிற் பயன்படும்?

இங்ஙனநிற்க, சிவாகமங்கள் கூறுஞ் சரியை கிரியை யோகஞானங்களை யடைந்தவர் யாவருஞ் சைவரேயாவார். அவருள், ஞானி மற்றையமூன்றுந் தானெய்தியுள்ள ஞானத்துக்கு ஸாதனங்களெனக்கொள்வன். யோகி தனக்குக் கீழிட்ட விரண்டுந்தானெய்தியுள்ள யோகத்துக்கு ஸாதனமெனக் கொள்வன். கிரியாவான் தனக்குக் கீழிட்டவொன்றுந் தானெய்தியுள்ள கிரியைக்கு ஸாதனமெனக் கொள்வன். சரியாவான் தனக்குக் கீழொன்று மில்லாமையால் தனக்குமேலிட்ட கிரியையை யடைவதற்குத் தான்ஸாதகனென வெண்ணுவன். கிரியாவான் றனக்கு மேலிட்டயோகத்தை யடைவதற்குத் தான்ஸாதகனென வெண்ணுவன். யோகி தனக்குமேலிட்ட ஞானத்தை யடைவதற்குத் தான் ஸாதகனென வெண்ணுவன். இப்படியன்றோ மாயாவாதி சைவசித்தாந்தியையும், சைவசித்தாந்தி மாயாவாதியையு மொப்பவேண்டும்? மாயாவாதியைச் சைவதீக்ஷாஹீனத்தினுற் சித்தாந்தி பரிசிக்கவுஞ் செய்யானுகையால் துவிதம்=சைவம், அத்துவிதம்=மாயாவாதம் எனமனப்பால்குடிப்

பது மணம்பெறுமென்க. அதனுண்மையை யோசிக்கில் துவிதம்=அபரஞானம், அத்துவிதம்=பரஞானம் என்றே வெளிப்படும். பெத்தத்திலாணவக்கலப்பாற் சிவனோடத்துவித முண்டாகாமையாற் றுவிதியாயும், முத்தியிலாணவநீக்கத்தாற் சிவனோடத்துவித முண்டாகின்றமையால் அத்துவிதியாயுஞ் சைவசித்தாந்தியொருவனே விளங்குவன். அத்துவிதமென்பதற்கு ஏகமென்று பொருள்விரிந்தாலன்றோ வது மாயாவாதமாகும்? (பண்ணையு மோசையும் போலப் பழமதுவு, மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா-மண்ணருள், அத்துவிதமாத லருமறைகளொன்றென்னு, தத்துவித மென்றமறையு மாங்கு.) என்னும் பிரமாணத்தால் அத்துவிதத்தினுண்மை வெளிப்படும். இவ்வுண்மையறிந்தேயன்றோ (பொய்கண்டார்காணாப்புனிதமாமத்துவித, மெய்கண்டான் பொன்னருளை மேவுநாளெந்நாளோ) எனத்தாயுமானார் துதித்தனர்? இந்த உண்மையையேயன்றோ, (ஆணவத்தோடத் துவிதமானபடி மெய்ஞ்ஞானத், தாணுவினோடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ) என்னுந் திருவாக்கால் வெளியிட்டனர்? இந்த விசாரத்தால் துவிதமாகிய வபரஞானத்துக்கும், அத்துவிதமாகிய பரஞானத்துக்குமுள்ள சம்பந்தம் வெளிப்பட்டமையாலிரண்டும் ஸாதகஸாத்யங்களென்பது சித்தித்தது. இந்தக் கருத்தை நிலைக்கப்பண்ணவேயன்றோ (ஆதலினெனக்கினிச் சரியையாதிகள்போதும்) எனமேல் விளங்கவுரைத்தனர்? சரியையாதிகள் கைவந்தால் ஞானம்முடிந்தபொருளாகையால் பூர்வோத்தர விரோதமுண்டாகாமை வெளிப்பட்டது. "விரும்புஞ்சரியைமுதல் மெய்ஞ்ஞானநான்கு, மரும்புமலர் காய்கனிபோ லன்றோபராபரமே" எனப்போந்த பிரமாணமுமதைநிறுத்தும். இன்னும் அத்துவிதமென்பது (ஒன்றாகாம விரண்டாகாம, லொன்றுமிரண்டு மின்றாகாமல்) என்றபடியமைந்தது. கண்ணொளிகதிரொளிகளின்கலப்பே யதுவாகையா லிந்தவுபமான வாயிலாக வுபமேயத்தையறிந்திடுக. இரண்டொளிகளுங்கலந்தகாலத்திற் காணுந்தன்மையுங் காட்டுந்தன்மையு மங்கேயுண்டாதலா லொன்றாகாமலெனவும், அவ்விரண்டு தன்மைகளையுந் தனிதனிக் காணக்கூடாமையா லிரண்டாகாமலெனவும், அவற்றை யிரண்டாகப் பிரிக்கப்படாமையாலும், அவற்றுட்டனித்தனிக் குணங்களைக் காண்பதனாலு மொன்றுமிரண்டு மின்றாகாமலெனவுங் கொள்வதுமரபாம். இவ்வுவமையே யான்ம பரமான்மவயிக்கத்தை நன்குவிளக்கும். கண்ணொன்றைக் காணுகையி லதற்கெனக்காணுந் தன்மையிருந்தன்றிக் கதிரொளிகாட்டாது. கண்ணில்லாதவன்பாட்டுக் கதிரொளிபயன்செய்யாது. கதிரொளியில்லாவிடத்துக் கண்ணொன்றை

யுங் காணாது. இவற்றாட் பிரயோசனங் கண்ணொளிக்கேயன்றிக் கதிரொளிக்கன்று. இப்படிகாணுகையிற் காணுந்தன்மை பாதியும், காட்டுந்தன்மை பாதியுஞ்சேர்ந்து முழுத்தன்மையா லொருபொருள் விஷயமாவதாற் கண்ணுக்கு அரைக்காட்சியே யுரிமையாயிற்று. இப்படியே யான்மபரமான் மாக்களிடங் கொண்டதுணிபை விளக்கவேயன்றோ (நான்கும்பிடும் போதரைக்கும் பிடாதலால் நான்பூசை செய்யன்முறையோ) என வுண்மையைச் சாதித்தனர்? கண்ணுக்குக்காணுஞ் செயலிருந்துங் கதிரையன்றி யதுபிரயோசனத்தைச் செய்யாமையாலன்றோ சிவனையன்றி யுயிர்க்குச் சேட்டிப்பின்றெனவுபமானவாயிலாகச் சிவாகமங்களுண்மையை நிறுத்தும்? சேதனமாகிய வுயிர்க்கே சேட்டையொழிந்தபோது அசேதனமாகிய பிரபஞ்சத்துக்குச் சேட்டையுண்டாமென்பது கூடாதாகையாற் சேதனத்துக்கு அறியுஞ் சேட்டையும், அசேதனத்துக்கு அசையுஞ் சேட்டையு மச்சிவத்தினது ஞானக்கிரியை களாலுண்டாமென்பதையேயன்றோ "எல்லா முன்னடிமையே யெல்லாமுன்னுடைமையே யெல்லாமுன்னுடைய செயலே" என்னுந் திருவாக்கால் விளக்கினர்? அடிமை சேதனங்களும், உடைமை யசேதனங்களுமாம். இரண்டின் சேட்டைகளையுஞ் சேர்த்து "அவனன்றியோரணுவுமசையாது" எனவுங்கூறினர். இப்படியேராளமான பிரமாணங்களுண்டாயிருத்தலால் அத்துவித விலக்கணமினைத்தென வெளிப்பட்டது. இப்படியுணராமல் அத்துவிதமென்பது இரண்டில்லாதது எனக்கொண்டு ஏகமென்னுந்தேர்ச்சியால் எல்லாஞ்சிவம், நானுஞ்சிவம் எனமயங்கியழிவது வினையின் கொடுமையென்க. இப்பெருந்தீமை கொண்டேயன்றோ கௌதமசாபமுடையாராகிய விப்பிரருட்பலர் பிறந்திறந்துழலும் விண்டுமுதலிய தெய்வப்பசுக்களையும் பதிகளெனமயங்கி யவரைப் பரமபதியாகிய சிவபெருமானோடு சமானங்கூறுகின்றனர். அவ்விப்பிரருக்குக் கேடுவந்தபோதுந் தாய், தங்கை, மகவென்னும் வியவஸ்தை கெட்டதில்லையாக வந்த வியவஸ்தையேனோ தெய்வவிஷயத்தின் மாத்திரங் கெட்டொழிந்தது? அப்படியே பிராமணன், பஞ்சமனென்னும் வியவஸ்தை யுண்டானபோது சிவன், விஷ்ணுவென்னும் வியவஸ்தை யுண்டாகாததென்னை? பஞ்சமனுக்குந் தனக்கும் பேதம்பாராட்டிக்கொண்டு விஷ்ணுவுக்குஞ் சிவனுக்கும்பேதம்பாராட்டாததென்னை? அன்னத்துக்கு மமேத்யத்துக்கும் வியவஸ்தை கண்டபோது சிவனுக்கும் விஷ்ணுவுக்குமேன் வியவஸ்தைகாணக்கூ

டாது? அமேத்யமன்னமாகாதபோது விஷ்ணு சிவனுவதெப்படி? இன்ன பலஹேதுக்களால் சமரசமிதுவல்லவெனத் துணியப்பட்டது. அறிவினதுவரம்பிகந்த விவகாரங்கள் செய்வது பித்தர்செய்கையும், பாவிகள்செய்கையுமாக முடிதலின் ஸமரசமென்பது அவ்வப்பொருள்களினிலக்கணப்படி யங்கீகரித்து ஒன்றிலும் விரோதம்பாராட்டாமை யென்பதே தீர்மானமாயிற்று.

இதுகாறுஞ் செய்துவந்த விசாரத்தால் உலகாயதனிழிவும் மாயாவாதியிழிவும், ஏனைமதத்தவரிழிவும் பெறப்பட்டமைக்கு யாதுகதியெனின், ஞானத்தைப்போதிக்கு மாசாரியன் யோகத்துக்குங் கிரியைக்குஞ் சரியைக்குமிழிவு கூறுவதனாலுண்டாகிய தாழ்வு யாது? அப்படிக்கூறுவது கீழுள்ளவன் மேலுக்குமுறையே வரவேண்டுமெனக் கருதியே யாகையால் யாவுமங்கீகாரமேயாம். சரியை முதல்நான்குஞ் சேர்ந்தே சைவலட்சணம் பூர்த்திகட்டுவதா லவற்றுளொன்றுகெடினுஞ் சைவங்கெடுமென்க. "உபதேசப் பித்தோ வுபமாணப் பித்தோ, விபரீத மோபழக்கோ வேறோ, தபசிநீ, கண்மூடாவிண்மூடத் தேடுங்கவுசனைபோ, லெண்மூடாயோகமிது" என்பது யோகநிந்தையைக் காட்டிற்று. யோகிக்கே நிந்தையுண்டானபோது ஏனையோர்க்கு நிந்தையைவிசாரிக்க வேண்டியதில்லை. இப்படி நிந்திக்கு ஞானியின் றன்மையை நோக்கின் "சன்மார்க்க மேமுதலாந் தாணார்க் கத்தளவுந், தன்மார்க்க மானவெங்கள் சம்பந்தன்" எனவும், சரியாதிநான்கினுக்குஞ் சாலோகமாதி, வருமாறெமக்களித்தவள்ளல்" எனவும்நடயுந்த பிரமாணங்கள்காட்டும். நான்குபாதத்தவருஞ் சிவனடியாரேயாதலா லொருவரையொருவர் காணநேரிடுங்கால் றம்முட்டாரதம்ய நோக்காது வழிபடுஞ் சமரசத்தன்மையே மேலுண்மையைநிறுத்தும். சைவசித்தாந்தத்திற் பெறப்படுந் தத்வபேதங்களிற் பூதங்களே விசுவசிக்கு மூலகாயதனும், புத்திதத்வத்தை யபிமானிக்கும் புத்தனும், குணதத்வத்தைக் கொண்டாடுஞ் சமணனும், வாசுதேவப்பிரகிருதியை வாஞ்சிக்கும் பாஞ்சராத்திரியும், ஆன்மாவை யநுசந்திக்கு மாயாவாதியுஞ் சைவவிரோதிகளாவதெப்படி? ஒரரண்மனேயி லவ்வருக்கு விட்டிருக்கும் விடுதிகளி லபிமானம்வைத்தத் தனித்தனித் தத்தமாளுகைகளே முக்கியமெனக் கொண்டாடி மகிழ்வார்பால்

அரண்மனைச் சொந்தக்காரனுக்கு என்விரோதமுண்டாகும்? தனது அரண்மனைப் பாதுகாவலுக்கே பலமுண்டாயினமையா லன்றோர் பலருந் தனக்கவிரோதிகளேயாயினர். இப்படிக் கொள்ளுஞ் சமரசப் [illegible] [illegible] சமார்க்கஞ் சைவமார்க்கமொன்றே யெனத [illegible] சமரச சிவாநுபூதியை யடைந்து உலகம் பிழைத்துய்க.

## வாழ்த்து.

"காலமொடுதேசவர்த்தமானமாதி கலந்துநின்றநிலைவாழி கருணைவாழி [வாழி
மாலறவுஞ்சைவமுதன்மதஙகளாகி மதாதீதமானவருண்மரபுவாழி
சாலமிகுமெளியேனெவ் வழக்கும்பேசத் தயவுவைத்து வளர்தருவருட்டன்மை
யாலடியிற்பரமகுருவாழிவாழி யகண்டிதாகாரவருளடியர்வாழி."

## ஸ்ரீ தாயுமானசுவாமிகள் பொன்னடிவாழ்க.

சமரசஞானதீபம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வாகீசதேசிகாய நம:

# சித்தாந்தரத்நாகரம்.

---

## சைவசித்தாந்தபூஷணம்.

## ஸ்ரீசேக்கிழார் திருவாக்குண்மை.

"உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்."

என்னு மித்திருவாக்கின் மான்மியத்தை யுரைப்பாறு ஸ்ரீசிவபெருமானுடைய திருவருளிருந்தன்றியமையாது. (உலகெலாம்) என்று ஸ்ரீநடராஜப்பிரபுவே முதலெடுத்துக்கொடுக்க ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் பாடியருளியதாகையால். திருத்தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணத்தின் முதற்செய்யுளாகிய விதன் பெருமையே! பெருமை!! இந்தப்பாடலில் கடவுள்வாக்கு ஓர்பாகமும், ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள்வாக்கு மற்றைப்பாகமுமாகக் கலந்திருக்கின்றனவென்பதன் கருத்தை யுய்த்துணருங்கால் எல்லாங் கடவுள் வாக்கென்பதே யுண்மையாகமுடியும். எங்ஙனமெனின், கடவுள்வாக்குடன் கடவுளல்லாதவராகிய ஸ்ரீசேக்கிழார் சுவாமிவாக்கு விரவியதெனின், கடவுளை நின்மலராகக் கொள்ளுந்தன்மையால் ஒன்றிலொன்று சேர்தல்பொருந்தாது. ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்குங் கடவுள் வாக்கைப்போல நின்மலமுடையதாகலின் ஒன்றிலொன்று சேருமெனின், அப்போது ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளுங் கடவுளேயாகக் கொள்ளப்படும் இரண்டு கடவுளருக்கிடஞ் செய்ததாய்முடியும். சேக்கிழார்சுவாமிகள் வாக்கே நின்மலமானபோது அதற்குக் கடவுள் முதலெடுத்துக்கொடுப்பதே னென்னுமாசங்கையும் வரும். கடவுள்வாக்கும், ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் வாக்கும் ஒன்றிலொன்று

தாரதம்யம்படவே கலந்திருக்கின்றனவெனின், சமானஹீனமாகிய வாக்குடன் தமது வாக்கைக் கடவுள் கலப்பாரென்பது அஸங்கதம். வேதபுருடன் ஸ்ரீசிவபெருமானை நோக்கித் தேவரீரை யிதரதெய்வங்களோடு ஸமானமாக வரித்துத் துஷ்ட ஸ்தோத்திரங்களாற் கோபம்வரச் செய்யமாட்டோம் என்று சொல்லியிருப்பதால், அவர் தம்மிற்றாழ்ந்தவர் குழுவிற்சேர்ந்து சந்மானத்தை யடையாதபடி அவர்வாக்குந் தாழ்ந்தவாக்கிற் கலந்து நில்லாதென்க. அவரை வரித்துப்பூசிக்கின்ற காலையில் வேறு தேவர்களையும் வரித்து அவர் திருமுன்னர்ப் பூசிக்கின் அவருக்குக் கோபமுண்டாமெனவும், பிறரைப்பூசிக்கின்ற காலையிலவருடனிருத்தி ஸ்ரீசிவபெருமானையும் பூசித்தல் ஸ்ரீசிவபெருமானுக்கு ஸந்தோஷத்தை யுண்டாக்காமல் கோபத்தையே யுண்டாக்கலால் அந்தப்பூசை சிவபூசையென்பதிற் றவிர்ந்து துஷ்டபூசையென்று சொல்லப்படுமெனவும் மேற்காட்டிய வேதபுருடன் கருத்தால் விளங்குகையால் பரஸ்பரம் விஜாதிகமாகிய சாமானியவாக் கொன்றுடன் பரமபதியாகிய வவரே தமதுவாக்கைக் கலப்பாரென்பது எங்ஙனம் பொருந்தும்? பிறர்செய்தலாற் கோபமுண்டாமன்றித் தாமேசெய்தாற் குற்றமில்லையெனின், அப்போது கடவுட்டன்மைக்கே பங்கம்வரும். அப்படித்தாமே செய்யவேண்டிய வாவசிகந்தான்யாதென்பதற்குஞ் சமாதானஞ் சொல்லவரும். மேல் சுருதியாதரவால் பிறர் கிஞ்சிஞ்ஞராகவு மவர்செய்யவே யுடன்படாராகிய வக்கடவுள் தாமே தங்கொள்கையை விரோதிப்பாரென்பது எப்படியமையும்? ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்குடன் கடவுள் வாக்குக்கலந்த விஷயஞ்சந்தேகமெனின், அதைக் காட்டினுங் கடவுளையே சந்தேகிப்பது மிகு விசேடமாம். இன்னும் இதை விசாரிப்பது அவசியமன்றென விடுவதே பெருநலமாம். சைவம் என்னும் ஸித்தாந்தத்திற் கட்டுண்ட பரிபாகிக்கே யிந்தவிசாரமாகையா லவனின்ன ஹேயாவலம்பனத்தினிகழ்தல் செய்யான். அவனுக்கு அச்சமயத்தாற் பெறப்படும்யாவு முண்மையெனக் கொள்ளுந் துணிவுடைமையா லத்துணிவுபற்றி விசாரித்த லொன்றேயுரியகடமையாம். அதனை யினிப்புறச்சமயிகள் கூற்றைக்கலந்து விவகரியாது விடுப்பாம்.

புறச்சமயிகளுக்கு மொப்ப நியாயஞ் சொல்லவேண்டுவது நானேயெனின், புறச்சமயிகளநேகருள் கடவுளேயில்லை யென்பவனுக்கு எவ்வளவு எடுத்துச்சொன்னாலு மென்னபலன்? முதல் கட

வுளிருப்பை அவனுக்கு விளங்கக்காட்டியன்றே பின்னர் மற்றை விஷயங்களை யுணர்த்தல்வேண்டும்? அதற்குப் புண்ணியமிருந்தன்றே அவனுக்கு ஸித்திக்கவேண்டும்? நமது பாஷையவனிடம் பிரயோஜனப்படாதென்க. அவன் நாமாகிற வரையில். அவன் நம்ம தன்மையடைவனேயெனின், நாயும் பேயுமே நாளைக்கு நம்மதன்மை யடைவது ஸித்தமாக, எவ்வளவோ படிகடந்து வந்தவனாகிய வவன் வரமாட்டானென்ப தெங்ஙனம்? "புல்லாகிப்பூடாய்ப் புழுவாய்மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாஅநின்றவித்தாவரசங்கமத்து, ளெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான், மெய்யேயுன்பொன்னடிகள்கண்டின்று வீடுற்றேன்" என்னும் அருளாளர் திருமொழிப்படிக்கண்டு கொள்க. அறியும், "புறச்சமய நெறி நின்றுமகச்சமயம்புக்கும், புகன்மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம, வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள்புரிந்து, மருங்கலைகள்பலதெரிந்து மாரணநூல்படித்துஞ், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச், சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற்சைவத், திறத்தடைவரிதிற் சரியைகிரியாயோகஞ், செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர்" என்னும் பிரமாணத்தாலுங்காண்க. இந்த அருள வாக்கியங்களால் இன்றுள்ள நாய்களும் பேய்களும் நாளைக்கு ஞானிகளாவரென்பதும், அப்படியே புறச்சமயிகளும் பாகம் வரப்பெற்றுக் கிருதகிருத் யராவரென்பதும் வெளிப்பட்டது. எப்படியானால் நாளைக்கு ஞானிகளாவது ஸித்தமாயிருந்தும், அந்தஞானத்தையிப்போது அப்படியாகப்போகிற நாய்களுக்கும் பேய்களுக்கும் ஸித்திக்கச்செய்வது கஷ்டமும், அப்படிச்செய்ய முயல்வது அறியாமையுமாய் முடியுமோ, அங்ஙனமே புறச்சமயிகளிடமுங் கொள்ளத்தக்கதாம். புறச்சமயிகள் ஒருநலனுமிதனு லெய்திக்குணப்பட விடமுண்டாகாதபோது அவர்களைக்குறித்துச் சிவதத்வங்களை நம்மாசாரியர்கள் வெகுவாய்ப் பிரசங்கித் திருப்பதென்னையெனின், அதனுண்மையை விளக்குதும். சிவசாம்பிராஜ்யப் பெருஞ்செல்வத்தை யடைதற்குரிய நம்மவர்கள் அப்புறச்சமயிகள் துர்ப்போதங்களாற் கலங்காவண்ணமும், அப்புறச்சமயிகள் பகிரங்கமாக வெளிப்படு நஞ்சமயத்திற் புகுந்து சைவத்தை யவலம்பித்திருக்கும் புண்ணியங் கூடாவிட்டாலும், அப்படிக் கூடுவதற்கான ஹேதுவாக வவர்நெஞ்சிலாவது உண்மைதைக்குமாகையால், அப்படித்தைக்குந்தோறும் உண்மை யிப்படி யிருக்கிறதல்லவா? நாம்வீண்வியாஜத்தாற் கலகமிட்டுத்திரி

தோமே! இப்போது இதைவிட்டுவிட்டு அதிற்பிரவேசிக்கலாமெ ன்றால் மானம்வாட்டுகிறதே! என்றுபலவாறு சிந்திக்கவருகையால், அச்சிந்தனை வீணாகக்கூடாததன்மையால், அதனால் வசித்திக்கற் பாலதானபரிபாகத்தை அவர்க்கூட்டும் பொருட்டும் நம்பெருமக்கள் செய்கை பெருமைபெற்று நிலைக்கும்! நிலைக்கும்!!

இங்ஙனநிற்க, மேலெடுத்துக்கொண்ட விஷயத்தை விசாரிப் பாம். ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்ததாகப்பெறப்படும் அத்திருவாக்கினோரற்பபாகமே ஸ்ரீநடராஜமூர்த்தி முதலெடுத்துக் கொடுத்ததேயன்றி வேறில்லை. ஏனையவெல்லாம் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் பாடியருளியது. இங்ஙனமாக, அதிகபாகத்துக்கு ஆக்கி யோராகிய ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்கை அற்பபாகத்துக்கு ஆக்கியோராகிய கடவுள் வாக்கில் வியாப்பியங் கூறுவது பொருந்தா தெனின், அதிகபாகத்தையருளிச் செய்தவராகிய ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளென்னை யந்தவற்பபாகமுஞ் சொல்லத்தெரியாதவரா? அவருக்கேனந்தப் பாகத்தை முதலாகக் கடவுளெடுத்துக்கொடுக்க வேண்டும்? ஸ்ரீசேக்கிழார் சுவாமிக ளந்தப்பாகமுஞ் சொல்லுவார். அதற்கு மேலுஞ்சொல்லுவார். கடவுள்வாக்கில் விஜாதிகமாகிறபடி. அவர்தாமென்னை, யாம் சொல்லமாட்டேமா? எம்மளவுக் கிசைந்த படி. எம்மளவின்படி யாம்சொல்வது போலவே ஸ்ரீசேக்கிழார்சுவா மிகள் தம்மளவின்படித் தாமுஞ்சொல்லு வரேயன்றிக் கடவுள் தம்மளவின்படிக் கூறியபாகத்தி லெப்படி ஸாம்யம்பெறும்? கட வுள் ஸ்ரீசேக்கிழாராகாமையாலும், ஸ்ரீசேக்கிழார் கடவுளாகாமை யாலும் அவரவரளவின்படி வாக்குகள் போந்திடுமாயி னவைதார தம்யமுடையனவாயே யிருக்குமென்பது பெறும். இதனால் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் தம்மளவின்படித்தாமே யதிகபாகங்களை யரு ளினாரென்பதுஞ் சேராதொழியும். பெரியபுராணத்தில் (உலகெலாம்) என்று ஸ்ரீநடராஜமூர்த்தியால் முதலெடுத்துக் கொடுக்கப்பெற்ற வற்பபாக மெந்தவளவுடைத்தோ வந்தவளவேமற்றை யதிகபாக ங்களும் ஸாம்யம்பெற்று விளங்கலுண்மையா லவையொரே தன் மையின வென்றலமையும். இதனாலிரண்டு வாக்குகளு மொரேவாக் கென்பதும்பெறும். இப்படிக்கொள்ளுங்கால் ஸ்ரீ சேக்கிழார் சுவா மிகள் தமது போதத்தாலன்றித் திருவருட்போதத்தாலருளியபடி யோ வெனின், அவரென்னை, சிவனடியார்தம்மிற்பலர் திருவருட் போதமேலீட்டாற் பாடினாராகலின் அவர்வாக்குகளெல்லாமுஞ் சிவ

வாக்காகுமா? சிவனடியார் வாக்குகளென்பதே போதரும். இதுவும் ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் வாக்கெனலால் சிவனடியார் வாக்கென்றலேயமையு மெனின், இதற்கேயன்றி யேனையவாக்குகளுக்குக் கடவுள் முதலெடுத்துக் கொடுத்தனரா? இப்போது விசாரமெல்லாம் கடவுள் முதலெடுத்துக் கொடுத்தருளிய முக்கியம் பாராட்டியேயாகையா லேனைய சிவனடியார்வாக்குகள் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்குடன் ஸாம்யம் பெறுமென்க. ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகைக்குக் கடவுள் முதலெடுத்துக் கொடுத்தமையால் அவர் திருவாக்குஞ் சிவவாக்காகுமேயெனின், அவரே சிவமாகையால் விசாரிப்பதவசியமன்றாம். கடவுள் முதலெடுத்துக் கொடுத்தாலுங் கொடாவிட்டாலு மவையொரேகன்மை பெறுதலால். ஆலாலஸுந்தரரே ஸ்ரீ சுந்தரமூர்த்திகளாகத் திருவவதாரஞ் செய்தபடியால். இப்படியே சிவவிபூதிகளாகிய ஸ்ரீகுமாரக்கடவுள் ஜ்ஞானஸம்பந்தமூர்த்திகளாகவும், நந்தியெம்பெருமான் ஸ்ரீ மந்மணிவாசக மூர்த்திகளாகவும், சிவகணத்தலைவர் வாகீசமூர்த்திகளாகவுந் திருவவதாரஞ் செய்தமையா லவர்வாக்குகளுஞ் சிவவாக்கேயாம். நால்வராசாரியர் வாக்குகளோடு ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள்வாக்குஞ் சேர்க்கப்பட்டுத் திருமுறைகளாக வெண்ணப்பட்டதனுன் மற்றைத் திருமுறைகளுஞ் சிவவாக்காகுமேயெனின், அவைகளையுந் திருமுறைகளாக வான்றோர் தொகுத்தமுறைமையானே யவற்றினேற்றம் வெளிப்படலாலவை சிவவாக்காதலிலிழுக்காவென்க. அவ்வாக்குகளி னேற்றங்களும், அவை சிவவாக்காதற்குப் போந்த நியாயங்களுமிடம் வந்துழிப்பின்னரெழுதுவாம்.

இனி, ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திருவாக்கு எப்படிச் சிவவாக்காகு மென்பதை சற்றே விளக்குவாம். ஸ்ரீநடராஜமூர்த்தி அவருக்கு (உலகெலாம்) என்று முதலெடுத்துக் கொடுத்தருளினரென்பது உண்மையன்றோ? அப்படி யெடுத்துக் கொடுக்குங்கால் அவரென்னை திருமேனி சாத்திவெளிப்பட்டு நேரில்நின்று அருளிச்செய்தனரா? அசரீரியாகநின்று அருளிச்செய்ததேயன்றி வேறில்லை. அப்படியே ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யதிட்டித்து ஏனையபாகங்களையு மவரே சொல்லியருளினரென்பதே மேலோர்கருத்தாம். ஆகாயமென்னு மோர்பூதத்தை யிடமாகக்கொண்டு முதலெடுத்துக்கொடுத்தபடியே ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யிடமாகக்கொண்டு ஏனையபாகங்களை யருளிச்செய்தபடியாம். இலிங்கவடிவத்தை யதிட்டித்து (சில்லு

கண்ணப்ப நில்லுகண்ணப்பவென், னன்புடைத்தோன்ற னில்லுகண்ணப்ப) என்று ஸ்ரீகண்ணப்பதேவருக் கருளிச்செய்தபடியுமிதற்குப் போந்த நிதரிசனமாம். ஸ்ரீசிவபெருமான் திருமேனி சாத்திவநதருளிச் செய்தலும், அசரீரியாகநின்றருளிச்செய்தலும், சிவலிங்கப்பெருமானை யதிட்டித்து நின்றருளிச்செய்தலும், சிவனடியார்களை யதிட்டித்து நின்றருளிச் செய்தலும் அருண்மரபாகையா லவையே யீண்டு வித்தாந்தமாயிற்றென்க. இந்த வுண்மையால் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளொன்றுஞ் சொல்லியதில்லையெனவும், யாவும் ஸ்ரீநடராஜமூர்த்தியே அருளிச்செய்தாரெனவும் வெளிப்பட்டது. இப்படிக்கன்றி வேறுவிதததாற் கோடலமைதிபெறாதென்க.

ஸ்ரீசிவபெருமான் சராசரங்களோடறுங் கலந்திருந்து அவ்வவற்றினிய லறிந்தியங்கச்செய்வது வேதஸம்மதமாகவின் யாவும், யாவருமச் சிவனையன்றி யொன்றுஞ் செய்யவுஞ் சொல்லவுங் கூடாதல்லவா? அப்போது யாவர்சொல்வதுங் கடவுள் சொல்லதேயாகிறபடியால் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளுக்குமாததிரம் விசேடமென்ன வெனின், யாவர்சொல்வதையுஞ் சொல்லுவிக்கின்றவர் கடவுளென்றபடியே யல்லது கடவுளே சொல்லுகின்றார், சொன்னார் என்பது பொருந்தாதென்க. கடவுள் சொலலுவிக்கின்றார், சொல்லுவித்தாரென்பதேயமையும். ஸ்ரீசிவலிங்கப் பெருமானிடமிருந்து அவரொன்றைச் சொல்லுகையில் சிவலிங்கம் சொல்லிற்று, அவர்சொல்லுவித்தாரென்றலமையாமைபோலவே ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளிடமுங் கொள்ளற்பாலதென்க. ஆயின், ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யதிட்டித்துப் பின்பாகங்களை யேராளமா யருளிச்செய்த கடவுள் முன்பாகத்தைக் கொஞ்சமேன் அசரீரியாகவிருந்து சொன்னாரெனின், பின்சொல்லப் போகிறபாகத்தின் பெருமை வெளிப்படும் பொருட்டென்க. உலகத்தில் அசரீரியாகநின்று சொன்னதையே கடவுள் வாக்கென்று கொண்டிருக்கிறாரன்றி ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்கை யதிட்டித்துரைத்தபடியை யறிந்ததில்லையன்றோ? உலகத்தில் அதன் பெருமைதோன்ற வுரைக்கவந்தவராகையா லவ்வுலகரநுபவத்தின்படி யுசிதம்பெற அசரீரியாகநின்று உரைத்தபடியாம். உண்மையை யூகிக்கின், அசரீரியாலுரைத்ததென்று நாம் கொண்டிருப்பதைக்காட்டிலும், ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை யதிட்டித்துரைத்ததே விசேடமாம், எங்ஙனமெனின், அசரீரியாக நின்றுரைத்தாரென்கையி லன்னனின்றருளிய விடம் பூதாகாயமாகையாலதுவே திரு

மேனியாகிச் சட்டத்வம்பெறும். அப்படியே ஸ்ரீசேக்கிழார் சுவாமிக ளிடம் விசாரிக்கையில் அவருள்ளமாகிய ஞானகாய விடமேதிருமே னியாகிச் சித்தாதனிலேயுதல்பெறும். இரண்டினுஞ் சித்துக்கே விசே டங்கூறப்படுதலால் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளே யதிட்டித்துரைத்த மையே ஸ்ரீசிவபெருமானிச்சை யிருந்தபடியாம். பூதாகாயத்தில் விரவியுரைத்தருளியது பின்னுரைக்கப்போகுமதன் பெருமையை விளக்கவேதுவாக விருந்தமையி னதுவும் ஸாமஞ்சஸமேபெறும். இரண்டுக்கு தமமில் பேதமுறினு மதிட்டித்த பரன்வாக்கபேதமே பெற்றமையும். ஜடாகாயத்தை மேலுண்டாகப்போகிற மகிமைக்கு ஹேதுமாத்திரத்தா லதிட்டித்துச் சிதாகாயத்தையே யுரிமையாகக் கொண்டமையால் பூரணமாக வதிட்டித்து முற்றுமருளிச்செய்தப டிக் கண்டுணர்க. மேல்விசாரத்தால் பூதாகாயத்தை யிடமாகக்கொ ண்டு பரன் சொன்னது ம ஸ்தூலப்பார்வையில் அசரீரியும், ஸூக்ஷ் மப்பார்வையில் சரீரியுமாகநின்று அருளிச்செய்தா ரென்பதாகக் கொள்ளவரும். இன்னமஹிமாதிசயங்கள் போதரக்காணும் ஸ்ரீசே க்கிழார் சுவாமிகள திருவாக்காகிய பெரியபுராணத்தி னேற்றத்தை யாவரேயறியவல்லார்? போதுமான புண்ணியமில்லாதபோது. இந்த வுண்மையால் பெரியபுராணமடங்கலுஞ் சிவவாக்கென்பதே ஸித் தாந்தஞ் செய்யப்பட்டது. சேக்கிழார் வாக்கெனினுஞ் சிவபெரு மான் றிருவாக்கெனினு மொக்குமேனுஞ் சேக்கிழாருஞ் சிவபெரு மானு மொருபொருளல்ல வென்பதுந் தெளிந்திடுக. உலகம் மாயை யிற் றோன்றுமெனினும், பரமனிற் றோன்றுமெனினு மொக்குமே னும் மாயையும் பரனுமொன்றாகாதபடியை விசாரித்துத் தெளியு மாபோல். இவ்விடயத்திலின்னு மநந்தஸமாதானங்களை யிதுகொ ண்டே புத்திமான்களா யுள்ளபேர் தெளிந்துரைக்கக் கூடுமாகையா லிதை யிவ்வளவில் விடுத்தாம்.

இதற்குத் திருத்தொண்டர் புராணம் எனவும், பெரியபுராண மெனவும் பெயர்வழங்கலால் இவை குணிகுணஸம்பந்தத்தா லமை வுபெறும். திருத்தொண்டர் குணியும், பெருந்தன்மை குணமுமா கும். இதனால், திருத்தொண்டரே பெரியவராவரென்பது வெளிப்ப ட்டது. (பெரிதுபெரிது புவனம்பெரிது)என்றுபக்கிரமித்து தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே) என்று உபஸங்காரத்தாற் பூர்த் திசெய்த மூதன்னைவாக்கியமுஞ் சான்றாம். பதினெண்புராணங்களை யும் வியாதரையதிட்டித்து ஸ்ரீசிவபெருமானுரைத்தருளியபடியே

யிப்பெரியபுராணத்தை ஸ்ரீசேக்கிழாரை யதிட்டித்து வெளிப்படுத்தினரென்பதுண்மை. வியாதர்வாக்கேயன்றி யேனைய நூல்கள் பிரமாணமாவென்று சிலர் கூறுவரேயெனின், வியாதருக்குண்டான யோக்யதையெல்லா மவர் சிவனடியாரிற் சிறந்தவராயிருக்குந் தன்மையேயன்றிவேறில்லை. அப்படியே சிறந்த மேலோர்வாக்குகளெல்லாம் பிரமாணத்திலென்னதடை? வஸிஷ்டராற் செய்யப்பட்ட குருஜ்ஞானவாஸிஷ்டம், வான்மீகமுனிவராற் செய்யப்பட்ட ஸ்ரீமத்ராமாயணம், மநுமுதலினோராற் செய்யப்பட்ட அஷ்டாதசஸ்மிருதிகள முதலியனிவை பிரமாணமாகாமற் போயினவா? இவைகளுள் பிரமாணதாரதமயங்களை நோக்கின், ஸ்மிருதிகளிற் புராணங்களும், புராணங்களி லிதிகாசமாகிய இராமாயண பாரதாதிகளுந் தணிவுடையன வென்பது சாஸ்திரமறிந்த மேலோர்துணிவாம். இவைகளுக்குள்ளே யுபாந்தனவாகவேற்பட்ட ஸ்மிருதிகளை நோக்கினவையும் வேதத்துக்கு விரோதித்தவழிப் பிரமாணமாகாவென்பது தேற்றம். இதிகாசங்களுக்கு மேம்பட்டனவான புராணங்களுக்கு ஆக்கியோராகிய வியாதரே யப்புராணங்களிற் றணிந்தனவாகக்கூறு மிதிகாசங்களிற பாரதத்தைச் செய்தவராயினர். இதனால் ஒன்றிலொன்று தாரதம்ப முடையநூல்களை வியாதரொருவரே செய்தாரென்று ஏற்படுகின்றது. அங்ஙனமாதலவர் முக்குணவியல்பினமைந்தபடியே கொள்ளப்படும். ஸத்வமேலிட்டிருப்பினு மேனையகுணங்களுந் தம்பாற் குடியிருக்கவிடங்கொடுத்தவராகிய வியாதர்முகத்து வெளிப்பட்டநூல்களே பிரமாணங்களாகிறபோது சுத்தஸத்வநிதிகளாய் விளங்கும் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திருவாக்குப் பிரமாணமாதலி லிழுக்கடையுமா? ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் வாக்கைப புறச்சமயிகள் பிரமாணமாகக் கொள்ளாரேயெனின், வியாதர்வாக்கைமாத்திரங் கொள்ளுகின்றனரா? அவர்செய்துள்ள புராணம் பதினெட்டனுள் சிவபுராணங்களைத் தாமசங்களென்று அவர் வர்ஜித்தபடிக்காண்க. அவரங்கீகரிப்பதும், அங்கீகரியாததும் பிரமாணமல்ல. பிரமாணங்களையும், அவற்றினாக்கியோன் தன்மைகளையும் விசாரித்தறிவதேயுண்மையைக்காட்டும். இப்படி விசாரித்துத் தெளிந்தார்க்கு ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திருவாக்கையன்றி வேறு பிரமாணங்கள் பிடிபடாவென்க. இதுகாறுஞ் சுருதி யுக்திகளாலதன் பெருமையை யெடுத்துக்காட்டினோமாகையாலினியநுபவவகையாலும் விளக்குதும்;

இப்போதுலகில் ஞானசாத்திரங்களாகக் கொள்ளப்பட்டிருக்கும் ஸித்தாந்தசாத்திரங்களும், அவற்றையருளிச் செய்த சிவஞானிகளு மெய்தியுள்ள பெருமை யெல்லாமிப்பெரிய புராணத்தால் வந்தவாழ்வன்றிவேறில்லை. பெரிய புராணத்தை அசேதனனொருவன் சிரவணஞ்செய்யப்புகினுமவனுள்ளநெக்குருக நைந்து அதிப்ரவசனாகிக் கிருதகிருத்யனாய் விடுவனென்பதை அது அநுஸந்தானமுடையாரிடமெல்லாங்காண்க. சைவரல்லாவிடினும் பஸ்மருத்ராக்ஷங்களை மாத்திரந்தரித்துள்ள புறச்சமயிகளுமன்றோ வப்பெரிய புராணத்திற் பிராணனைவைத்து நைந்துருகுகின்றனர்? அப்பெரிய புராணத்துக்கு முன்னர்ச் சிவனடியார் பக்தியையுஞ் சிவபக்தியையும் விளைவிக்கும் வேறுநூல்கள்யாவுள? எல்லாநூல்களு மதன்பின் பிறந்தவைகளேயாம். திருமுறைகள்நீங்கலாக. அத்திருமுறைகளின் மான்மியத்தையுணர்த்தப் போந்த வுண்மையினதே யிப்பெரிய புராணமாகையா லத்திருமுறைகளு மிப்பெரிய புராணமுண்டாகாதவழி அப்பிரகாசத்தையேயடையும். "சொற்கோவுந் தோணிபுரத்தோன்றலு மென் சுந்தரனுஞ், சிற்கோல வாதவூர்த் தேசிகனு-முற்கோலி, வந்திலரேனீறெங்கே மாமறைநூ லெங்கே, யெந்தைபிரானைந்தெழுத்தெங்கே" என்ற திருவாக்கின்படியே (தேவாரமெங்கே திருவாசகமெங்கே, நால்வராசாரியரெங்கே) அப்பெரிய புராணந் தோன்றாக்காலெனவுமன்றோ சொல்வது அழகுபெறும்? உலகில் சரியைகிரியை யோகஞானங்களென்னும் வழிபாடுகளால் சிவனையாராதிக்கும்படியான தன்மை அறுபத்துமூன்று நாயன்மாருண்மைகள்காட்டும். அவற்றைப் பெரியபுராணங்காட்டி வெளிப்படலாலவ்வழி யொழுகி யுலகமுய்யுநெறி பெற்றது. அதன்பின்னரேசைவம் பிரகாசத்தை யடைந்தது. நால்வித வழிபாடுகளு மஃதொன்றுமே வஸித்திப்பதன்றிப் பரமமுத்தியுங் கைகூடப் பெறுதலாலதுவே முத்திநூலென்பது பெற்றாம்.

அதுகீர்வாணத்தன்றித் தமிழில்வழங்கலாற்கீர்வாணத்தைநோக்க வேற்றம்பெறாதெனின், அதுதமிழாயிருப்பது கொண்டே யேற்றம்பெறுமென்க. தமிழ்வழங்குநாடே புண்ணியபூமியிலுஞ் சிறந்த பாகமென்பதை யநேக வனுபவங்களாற் காண்க. நமது வேதசிவாகமங்களிற் பெறப்பட்டவிதிகளை முறையேவிடாதுஞற்றுமியலு மொருவனுக்கு வடநூல்வழங்கிவரு முத்தரதேசமிடங்கொடா தென்பதை யாவருமறிந்த விஷயமே! அந்தப்பாகங்களி லெப்படிச் சைவவைதிகாசாரங்கள் தலையெடுக்கும்? பாதலத்திலுஞ் சலங்கிடைப்பது

கஷ்டமானால். நீர்விர்த்தியேராளமாய்க் கிடைக்கக்கூடுமான பாகங் களையே வைதிகநூல்கள் புகழ்ந்தனவன்றி வேறில்லை. இவ்வைதிகச் சிரேஷ்டமாகிய பாகங்களிற்றானே திரமிடமென்னுந் தமிழ்வழங் கலானுத்தமோத்தம சிவபுண்ணிய முடையார்க்கே அநுகிரகிக்கப் படுமென்பது பெற்றாம். கீர்வாணமன்றோ மாத்ருபாஷையெனின், தமிழுக்கும் அதுமாத்ருபாஷையென்றல் பொருந்தாது. மாத்ருபா ஷை யென்பது உற்பத்திநோக்கியாதலாற் கீர்வாணத்திற் றமிழுக் குற்பத்தி யில்லாமையே காரணமாதல் காண்க. (எ-ஒ-ழ-ற-ன-) என் னுமித்தமிழெழுத்துக்கள் கீர்வாணபாஷையிற் பிறந்தகாரண முண் டாகாமையால் ஸ்வதப்பிரமாணமுந் தனிமையுமான பித்ருபாஷை தமிழென்று கொள்ளற்பாலதாம். தமிழும், கீர்வாணமுமாகிய விர ண்டுபாஷைகளும் முறையே அகத்தியமுனிவருக்கும், பாணினிமுனி னிவருக்கும் ஸ்ரீசிவபெருமானால் அநுக்கிரகிக்கப்பட்டனவென்பதை யுண்மை நூல்களாற்காண்க. இதனாலொருபாஷையி லொருபாஷை யுண்டான தில்லை யென்பது உணரப்படும். இரண்டுந்தனித்தனிய மைந்தஸ்வதப்பிரமாணமான பாஷைகளென்பதே தீர்மானம். கீர்வா ணத்துக்குத் தேவபாஷையும், தமிழுக்குரிஷிபாஷையுமென்றுபெயர் கள் வழங்கலால் கீர்வாணஞ்சிறந்ததெனின், பாணினியுமோரிருடியே யானபோது அதுவுமிருடி பாஷையேயாகாது? தேவபாஷையென்றலா லுண்டாகியவுயர்வு யாது? தேவனாகிற சிவன்சொன்னாரென்பது கரு த்தல்ல. தேவர்கள்தங்கள் சொர்க்காதிலோகங்களில் வழங்கும்பா ஷையென்றுசொல்லுதலமைவுடைத்தாம். அப்படியாயின், தமிழை ஸ்ரீகைலாச பாஷையென்றுமேலோர்கூறுவதிலென்னதடை? ஸ்ரீகை லாசத்திற்றானே திருவாசகம், ஆதியுலாமுதலிய நூல்களரங்கேற் றல் செய்வித்தபடியால் ஸ்ரீகைலாசத்தில் தமிழ்ப்பாஷையே வழக்க மென்பதும் ஏற்பட்டது. ஸ்ரீகைலாசத்தில் தமிழையே சிவபெரு மான் உரியபாஷையாகக் கொண்டாரென்பதை அவர் மதுரையின் கண்சங்கமுண்டாக்கி அதிற்றாமொருவித்வானாகவிருந்து தமிழை விர்த்திசெய்ததையே காட்டும். (தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத் ததுமுதலை, யுண்டபாலனையழைத்தது மெலும்புபெண்ணுருவாக், கண்டதும் மறைக்கதவினைத்திறந்ததுங்கன்னித். தண்டமிழ்ச்சொலோ மறுபுலச்சொற் களோ சாற்றீர்.) என்றதித்யாதி பாடல்களாலுந் தமிழின் பெருமை விளங்கும். இன்னும் விஷ்ணுமூர்த்திக்கு ஸ்ரீஞானசம்பந்தமூர்த்தி கள் சிவசாரூப்பியமருளியதுந் தமிழ்ப்பதிகவாயிலாகமென்பதுதெ ளிக. தமிழினுமுயர்ந்ததாகக் கொள்ளுங்கீர்வாணபாஷையாற்போக

த(ஹாலாஸ்யமாங்மியத்தாலும்)தமிழின் பெருமையைக்காட்டும். எங்ஙனமெனின், சங்கத்தார் பிரஸ்தாபம் அந்த நூலாற்பெறப்படும். அச்சங்கத்தார் யாவரெனின், ஆகாரமுதல்ஹாகாரமிறுதியாகநாற்பத்தெட்டு எழுத்துக்களுமே(சஅ)வித்வான்களாகத்தோன்றிச் சங்கத்தாரா யெழுந்தருளியிருந்து தமிழை வளர்த்தாரென்று அங்கே சொல்லப்பட்டிருக்கின்றது.(சஅ)எழுத்துக்கள் என்றபோது எழுத்துக்கள் வியஷ்டியும், அதனாலாகியபாஷை ஸமஷ்டியுமாகும். எந்தப் பாஷையினெழுத்துக்கள் சங்கத்தாராகப் பிறந்திருக்கவேண்டுமென்று யோசிக்கில், தமிழ்ப்பாஷைக்குள்ள வெழுத்துக்கள் முப்பத்தொன்றேயாகையால் அதிகதொகை யுடைமையைக் கூறுந்தன்மையாலது தமிழல்லவென்பது வெளிப்படும். அப்போது அதிகவெழுத்துக்களையுடைய பாஷை கீர்வாணமென்பதேயமையும். இதனால், கீர்வாணமாகிய பாஷையானது வியஷ்டியாகத் தனித்தனி யுருக்கொண்டு சங்கத்தாரென்னும் தமிழ் வித்வான்களாய்ப் பிறந்து தமிழை வளர்த்தாரென்பது போதரும். மேலுண்மையால், கீர்வாணம் பூமியிற்பிறந்து தமிழ்ப்பாஷையைக்கற்று, அந்தப்பாஷையைக்கற்பிதிலு மாற்றல் போதாது பரிபவமெய்திற்றென்பதற்கு அச்சங்கத்தில் தலைவராகிய நற்கீரதேவருக்கு அகத்தியரைக்கொண்டு ஸ்ரீசிவபெருமானிலக்கணங் கற்பித்தருளியது முதலிய பலஹேதுக்களே போதும். இன்னும் ஸ்ரீசிவபெருமான் ஸ்ரீஜ்ஞானஸம்பந்த ஸ்வாமிகள் முதலிய சைவாசாரியர்களிடமாய்த்தமிழாலாகிய தேவாரப்பதிகங்களையே விரும்பியருளினபடியாலும் திராவிடபாஷையினுதிக்கத்தைத் தெளிந்திடுக. இன்ன பலநியாயங்களால் ஸ்ரீசேக்கிழாரிடமாகநின்று ஸ்ரீசிவபெருமான் திரமிடபாகத்தால் வெளியிட்ட திருத்தொண்டர்புராணம் ஸப்பிரமாணமாயினமை காண்க.

இவ்வுண்மைகளால் சைவசமயிகள் கனவிலும் மறவாதுகைக்கொண்டநுட்டிக்கற்பாலதான அருணூல் பெரியபுராணமொன்றேயென்றறியத்தக்கது. இதனானே யெல்லாநலனுஞ்சித்திக்கும். இப்பெரியபுராணத்தை யருளிச்செய்த ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திவ்யசரித்திரத்தைச் சந்தானகுரவருளொருவரும், பெற்றான் சாம்பனுக்கும், முள்ளிச்செடிக்கும் முத்திகொடுத்தருளினவரும், தில்லைவாழந்தணருளொருவருமாகிய ஸ்ரீமத் உமாபதிசிவம் திருவாய்மலர்ந்தருளிய (திருத்தொண்டர் புராணவரலாறு என்னும் நூலாற்கண்டுணர்ந்துய்க.

மேல் யாமிதனைதிக்கங்கூறல் திருவருளிருந்தன்றி யமையாதெ ன்றபடி யிருட்கேவல சகலத்தழியு மெம்போல்வாரால் இனிது பிரச ங்கித்து முடியாதாயினு மாசைமேற்கொண்டறைந்த தாகவினிதைக் கண்ணுறப் பெறுமான்றோர் மேலுமாண்டாண்டிருந்து திருவரு ளுணர்த்தும்படியா வினிதுண்மைப் பிரவசனத்தாலிவ் வுண்மை யை விளக்குவார்களென வவர்பொன்னடிகளைச் சிரஸாவகிக்கின்றோ மென்க.

பொன்னவிருஞ்சடைமௌலிப் புண்ணியனைத்தொழுத்துண்மைபுவியிலோங்
மெய்ந்நெறியாஞ்சைவநனிவாழவருமெய்ஞ்ஞான வேந்தாயன்பர் [கு
தந்நிலைமையுலகறியத்தம்பிரான் முதலெடுத்துத் தறவேற்றுண்மை
துன்னுமவர்புராணநவின் றிடுமுனியாஞ் சேக்கிழார் துணைத்தாள் வாழி.

ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள்

பொன்னடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## ஆபர்சஞானநிரோதம்.

—:o:—

இஃது

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயக ரவர்களால்

இயற்றப்பட்டு

ஷையார் மாணவகர்

ஸ்ரீமாந்-பல்லவபுரப்

அப்பாவு செட்டியா ரவர்களால்

பரிசோதித்து

தமது ணிலியூழி தவஞ்செய்தங்கே
சென்னையும் போந்த பிரமாணங்களா
ப்பது சைவமார்க்கமொன்
வித்யாபாஸ்கர அச்சியந் ம், சைவம் சிவத்தொடு சம்பந்த
வெளியிடப் ர்த்தி) என்னும் வாக்கியத்தால்
—— லாமார்க்கங்களுக்கும் அதீதப்
Second தன்னிலைமை யெக்காலத்து மா
த்தில் பிறக்கும் புண்ணியத்தை
31 Jan ஆகிய சிவசாதனங்களைத் தாங்கி
Copy-rig நட்டபலர் தங்கள் பெருமையைத்
இதன் பலங் கழிக்கின்றார்கள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாயபாரம்பரைத் திருவாவடுதுறை மஹா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகஸ்வாமிகள்** கருணைகூர்ந்து, சித்தாந்தரத்நாகரத் தடங்கிய அநேக சிவோத்கர்ஷ திவ்ய கிரந்தங்களுள், கடவுள் ஒருவருண் டென்னும் வாய்மையைச் சுருதி யுத்தி அநுபவ வாயிலாக ஆஸ்திகமத சைவசித்தாந்தவழி எளிதி னுணர்த்தும் சிவபுண்ணியம் நிறைந்த "ஆபாசஞான நிரோதம்" என்னும் இந்நூல் உலகிற்பரவிவிளங்க அச்சியற்றும் பொருட்டுப் புரிந்த பேருதவியினை என்றென்றும் மற்றெவராலும் எக்காலத்தும் மறக்கற்பாலதன்று. அத்தேசிகோத்தமருடைய திவ்ய திருவடிக் கமலம் நீடூழி வாழ்க. சுபம்! சுபம்!! சுபம்!!!

ம - ஞ

80, விந்தப்ப...யக்கன் வீதி, சென்னை

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமந்மணிவாசகப்பிரபவேநமஃ.

KAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

# சித்தாந்தரத்நாகரம்.

## ஆபாசஞானநிரோதம்.

வஞ்சித்துறை.

விஞ்சிய பிரணவ-துஞ்சர முகனவிர்
செஞ்சர ணிணைமலர்-நெஞ்சினி னினைதுவாம்

பரமபதியாகிய சிவபெருமான் அருளிச்செய்த வேதசிவாகமமங்களிற் பெறப்பட்ட பதிஞானத்தையுணர்வது பூர்வபுண்ணியமுடையார்க்கே கைவல்யமாகையால், அவ்வுண்மைஞானசித்தி யாவர்க்குங்கிட்டுவது அருமை! அருமை!! "நல்லனநூல் பலகற்பினுங் காண்பரிதே, யெல்லையிலாத சிவம்" எனவும், "எண்ணிலியூழி தவஞ்செய்தங்கீசனை, யுண்ணிலைமை பெற்ற துணர்வு" எனவும போந்த பிரமாணங்களாற்காண்க. இவ்வரிய சிவசித்தியைப் பயப்பது சைவமார்க்கமொன்றேயாம். (தெய்வம் சிவனேசிவனருள்சமயம், சைவம் சிவத்தொடு சம்பந்தமென்றான், சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி) என்னும் வாக்கியததால் சைவம் ஈதெனவெளிப்பட்டது. எல்லாமார்க்கங்களுக்கும் அதீதப்பட்டதாய், ஒப்புயர் வில்லாததாய், தன்னிலைமை யெக்காலத்து மாறுததாய் விளங்குஞ் சைவ மார்க்கத்தில் பிறக்கும் புண்ணியத்தைப் பெற்றும் விபூதி ருத்ராட்சங்களாகிய சிவசாதனங்களைத் தாங்கிவாழுஞ் சாம்பவாளாகிய நம்மவருட்பலர் தங்கள் பெருமையைத் தாங்களே யறியாதவர்களாய்க் காலங் கழிக்கின்றார்கள்.

உலகம் என்பது யாது? நாம் உலகில் ஏன்பிறந்தோம்? நாம் என்பது யார்? நமக்கும் உலகுக்கும் உள்ள சம்பந்தம் யாது? என்றின்ன விசாரத்திற் றலைப்பட்டவர்க்கே உண்மை வெளியாகுமாகையான் மானிடராய்த் திரிவாரொவ்வொருவரும் தத்தங்கடமையாகப் போந்த மேற்காரியத்திற் றலைப்படுவது அவசியகரமாம். இந்த விசாரத்தால் முறையேமேல் வினாக்களுக்குச் சமாதானம் பிறந்து, அந்தத்தில் பதிப்பொருளொன்றுண்டென்பதும் வெளிப்படும். அப்பதியே (சிவம்) என்னும் மங்கலபதார்த்தமாய் விளங்குவதொன்றாகலான், அப்பதிப் பொருளோடு சம்பந்தம் பெறாதார் அமங்கலமுடையார் என்னப்படுவர் என்பதற்கஞ்சி யாவருஞ் சுமங்கலிகளாக வேண்டுமென்பதும் அமையும். இவ்வரிய பேறு நம்மவர்க்கு இயல்பாகவே அமைந்திருப்பதால் நாமிப்பெரும் பேற்றையுடையேம் என்று விசாரமுகத்தால் தெளிந்து மகிழ்வதே நம்மவர் செய்யத்தக்க கடமையாம்.

சிவசம்பந்திகள் என்று காட்டுவதற்குரிய விபூதி ருத்ராக்ஷங்களைத் தரிக்கும் நம்மவர் சுலபமாய் மேல்விசாரஞ் செய்வதற்கு அச்சிவசாதனங்களுமோர் துணையாம். விபூதியென்றாலென்னை? அதையேன் தரிக்கவேண்டியது? அதற்கும் நமக்குமுள்ள சம்பந்தம் யாது? என்றின்ன கேள்விகள் பிறக்கவிடமுண்டாதலே யுண்மையைக்காட்டி யுபகரிக்கும். இவ்வளவுசெய்ய அவகாசமின்றித் தங்களுக்குக்கிடைத்திருக்கும் பெரும்பாக்கியத்தை யிழக்கின்றவர்களேயாயினர். இவ்வுண்மைகளைச் சிந்தித்து நம்மவர் பலரும் நமது நிலைமை இனைத்து என்றறியுங்கால் தாம் தாம் பிறந்ததனாலடையத்தக்க பெரும்பேற்றை அடைகின்றவராவர். அவரப்படி அறியத்தொடங்கின், (நலமொன்றடைதற் குறுமிடையூறு நாதனேபலவுளவன்றே) என்றபடிப் பலவிபத்துக்கள் நம்மைச் சூழ்ந்திருப்பது முண்மையே! "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி, முனிவிலாததோர் பொருளது கருதலும், ஆறுகோடி மாயாசத்திகள், வேறு வேறுதம் மாயைக டொடங்கின, வாத்தமானாரயலவர்கூடி, நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர், சுற்றமென்னுந் தொல்பசுக்குழாங்கள், பற்றியழைத்துப் பதறினர் பெருகவும், விரதமே பரமாக வேதியருஞ், சரதமாகவே சாத்திரங்காட்டினர், சமயவாதிகடத்தமதங்களே, யமைவதாக வரற்றி மலைந்தனர், மிண்டிய மாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ் சுழித்தடித்தாஅர்த், துலோகாயதனெனு மொண்டிறற்பாம்பின், கலாபேதத்த கடுவிடமெய்தி, யதிற்பெருமாயை யெனைப்பல சூழவும்" என்னும் பரமாசாரியர் திருவாக்காற் கண்டுணர்க.

இவ்விபத்துக்களில் நாம் தப்புவது (அவனருளாலே யவன்றாள்வ ணங்கி) என்னும் திருவாக்கின்படியே கூடுமாகையால், அவன் அருள்வடிவமாகிய வேதசிவாகமங்களில் உறுதிப்பட்ட நிலையினிற்பதே நங்கடமையாம். (அருளுடைய பரமென்றே வன்று தானே யானுளனென் றும் மெனக்கே யாணவாதி, பெருகுவினைக்கட்டென்றும் மென்றுற்கட்டிப் பேசியதன்றே யருணூல் பேசிற்றன்றே) என்று தாயுமான சுவாமிகள் கூறிய பிரமாணத்தால் வேதசிவாகமங்கள் அருணூல் என்று வெளிப்பட்டமைகாண்க. அருணூலில் விதித்தவழி நிற்பின், அல்லாத நூல்கள் புலம்பும் அசப்பியங்கள் தலைகாட்டாதொழியும். அருணூலெனினும், பதிநூலெனினுமொக்கும். இந்நூல்களில் பதிநிச்சயத்தை யினிது விளக்கவேண்டிப் பாசபசுக்களினிலக்கணங்களையும் தாரதம்ய முகத்தானே பிரவசனஞ் செய்யப்பட்டிருத்தலின், அவ்வாபாச சித்தாந்தங்களில் மயக்கமுண்டாகாதவழி அவற்றைமுறையேவிளக்கி, அவற்றிலுண்டாகிய தோஷங்களைவிலக்கி, நம்முண்மையைத் துலக்கிக் காட்டுவோமாக.

முதல், (நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர்) என்ற பிரமாணத்தால் அந்நாத்திகர் இவரென்பதை விசாரிப்பாம்.

காணப்பட்ட உலகமொன்றே மெய். இவ்வுலகம் மண், சலம், தீ, காற்று என்னும் பகுதியுடைத்து. இந்த நான்கும் பூதங்களென்னப்படும். இவைகளொன்றோடொன்று புணர்ந்தும், பிரிந்து மியங்கு மியக்கமே சிருட்டி திதி லயங்களாம். இவற்றிற்குவேறாய், ஆன்மாவாவது, கடவுளாவது உண்டெனக்கொள்வது பிழை. பாவ புண்ணியங்களும், நரக சொர்க்கங்களு முண்டென்பது சர்வாபத்தம் என்று கூறித் திரிபவரே நாத்திகராவர்.

இந்தக் கொள்கையை அவலம்பித்திருக்கும் அதிகாரிகள் யாவரென விசாரிக்கின், அவர் இன்னாரென்று புலப்படுவது கஷ்டம். மற்றைக்கொள்கைகளை அவலம்பித்திருக்குஞ் சமயிகள் பலபிராகாரமாய்ப் பிரிந்து உலகமுழுதும் பரவியிருப்பதுபோல் நாத்திகர் என்னும் ஓர் பிரிவினர் உலகில் காணப்படாமையால். ஆகவே, இவர்களையொரு சமயிகளாகவும், நியாயங்காட்டி மறுக்க வேண்டிய பரிபாகிகளாகவும் விவேகிகள் கொள்ளாரென்க. இவர்கள் அநாமத்து ராயர்களானபடியால் இவர்களைத் தெய்வந்தான் திருத்தவேண்டும். ஆன்மாவுண்டென்று கொள்பவனுனல் தான் அடையவேண்டிய லாப

த்தில் திருஷ்டியுள்ளவனுய்ப் பெறுவாளுகியதாலும், பெறுவதாகிய பேறு முள்பொருள்களாகத் துணிந்த பயத்தால் தனக்கப்பேறு தருவாளுகிய தயாமூர்த்தியாணையில் வசிப்பன். தன்னிருப்பே மோசமானதால் இல்லாமற்போய் விடுகிற தனக்குண்டாவனவாய்ச் சொல்லும் பாவபுண்ணியங்க ளிருப்பை அவன் எம்மட்டில் அங்கீகரிக்கப் போகிறுன் ? எது எப்படியானுல் அவனுக்கென்னை ? புலி, கரடி, சிங்கம், நாய், நரி, பூனை, ஆனை, கழுதை, குதிரை முதலிய சீவசந்துக்கள் நாமின்ன நிலையிலிருக்கின்றேமெனவாவது, நாம் சேதனம், அல்லது அசேதனமெனவாவது அறியுஞ் சத்தியினவன்றும். அறியாவிடினும், ஆகாரம், நித்திரை முதலியவற்றை அவற்றி னளவறியாமலே யநுபவிப்பதுஞ் செய்கின்றன. நாமநுபவிக்கின்றேமெனவும் பகுத்தறியாவாம். இவற்றைப்போலாது, பகுத்தறியுஞ் சந்மத்தைப்பெற்றும், அவ்வறிவின் பிரயோசனத்தைப் பாழாக்கி அவ்வறிவைப்பெறு தியங்கும் மிருக பிராயத்தையெய்தி நாத்திகப்படுகுழியில் வீழ்ந்து அந்தோ நம்மவர் அழிவது அநியாயம்! அநியாயம்!!

ஆகாரம், நித்திரை முதலியனவன்றி வேறு லாபத்தையடையாத மிருகங்களையொத்து அந்த லாபமேயன்றித் தங்கள் பகுப்பறிவின் பிரயோசனம் இதுவென விசாரித்து அதனுரிய லாபத்தையடைய முயலாத அவர் வினையிருந்தவாறு கொடிது! கொடிது!! பகுப்பறிவின் பிரயோசனத்தால் மிருகங்களுக்கில்லாத ஆரோக்யங்களைத்தேடி யநுபவிக்கின்றேமெனின், அந்தந்தச் சந்மங்களுக்கு அவ்வவற்றிற்கு நேரும் உணவாதிகளே ஆரோக்கியமா மாதலால், அவற்றில் தான் விசேஷ ஆரோக்கியத்தைப் பகுப்பறிவால் பெற்றேனென்பது விந்தையென்க. அவைகளைப்போல் பிறவுயிர்களைக் கொல்லுதலும், மாத்ருகமனம் பண்ணுதலும், இச்சைபோனவழியே தன்னிடம் பிறப்பாயினும், உடன் பிறப்பாயினும் வேற்றுமை பாராது சரித்தலும், பிறர்பொருளை வெளவலுமாகிய தோஷங்களில்லாமையே யெம்பகுப்பறிவின் பிரயோசனமெனின், அன்ன காரியங்கள் செயற்பாலனவன்றாக ஏன் கொள்ளவேண்டும்? அவைகள் தீமையாவதெப்படி ? அத்தீமையாலுண்டாகும் நஷ்டம்யாது? இராஜதண்டனைக் கஞ்சவேண்டியதொன்றேயெனின், இராஜன் தண்டியாவிட்டால் அன்னவை செய்தல் கூடுமென்பதாமன்றே ? ஆஸ்திக ராஜாங்கமல்லாது நாஸ்திக ராஜாங்கமாயிருந்தால் இவ்

விதி விலக்குக ளுண்டாகாவன்றோ? இதனால், நாஸ்திகனுடைய சிந்தனை முழுதும் இராஜாங்கம் நாஸ்திகமானதில்லையே! என்ன வுபாயத்தால் இராஜாங்கத்தை நாஸ்திகமாக்கிவிடலாம்! என்றிரவும் பகலும் எண்ணி யலமந்திருக்கு மென்பது தானே போதரும். பிறன் மனைவி யொருத்தி மனோரம்யமான ரூபவதியா யெதிரேவரக்கண்ட காலத்து, அவளைக் கைப்பற்றலா மென்றெழுந்த தன்னுடைய அடங்காவாசையைத் தடுப்பது அரசநீதியே யாகையால் அது தனக்கொரு பெரிய தலைநோயாய் முடிகிற தன்றோ? அந்த விதி விலக்குகளுக் குட்பட்டுப் பிரத்யட்ச சுகத்தை யிழப்பதாகவும் எண்ணவிடமுண்டாகிற தன்றோ? இந்த இராஜாங்க நிர்ப்பந்தத்தைப் பெறாத கழுதை, நாய் முதலியவைகள் யதேச்சையாய்ச் சஞ்சரிப்பதால், அவைகளே இம்மை யின்பமுற்றும் அனுபவிக்க வுரியன வாகவுங் கொள்ளவிடமுண்டாகிற தன்றோ? இந்த நியாயத்தால் மானிட ஜந்மம் கழுதையினுங் கீழிட்ட ஜந்மமாகக் கொள்ள வருமன்றோ? வீணே பகுப்பறிவு என்று ஒருசநி தனக்குண்டாகி, எதேச்சையாய்ச் சஞ்சரித்து உலக வின்பமுற்றும் அநுபவிக்கப் போதாமையால், இனிப் பகுப்பறிவென்பது இன்பத்தைக்கெடுக்குமோர் தோஷ பதார்த்தம் என்றுமன்றோ நாட்டவேண்டிவரும்? நல்லழகிது!

இன்னும், அரசாங்கம் நாஸ்திகமாகுமானால் தெய்வத்துக்கு வந்த சம்பவம் அரசனுக்கும் வருமல்லவா? தெய்வம் வேண்டாதபடியே அரசனும் வேண்டாதவனே யாவன். தெய்வம் உண்டென்று கொள்வதனாலன்றோ அதற்குப் பயந்து பாவபுண்ணியங்களையேற்று அரசன் குடிகளைவதைக்கின்றான்? அப்படியே அரசனிருப்பதாகக் கொள்வதனாலன்றோ அவன்விதித்தவைகளை மீறமாட்டாமல் நம்மெதேச்சை தலையெடுக்க விட மில்லை? இந்தச் சநியுந் தொலைந்தாற்றான் நம்ம எண்ணம் பலிக்கும் என்று சிந்திக்கவருந் தவமேதவம்!! இந்த மதத்தின் சொரூபவர்ணனை சால வழகுடைத்தென்பதை யின்னும் பரியாலோசிப்பாம். அரசாங்கத்தார் விதித்தவைகளைக் கடந்தா லுதையுண்டாமென்று வெளிப்பட்ட நியாயத்தால், நம்மரசாங்கத்தார் தெய்வநிந்தை செய்வாரைத் தண்டித்தலுமோர் விதியெனக்கொள்வது அவசியமென்று புலப்படுகின்றது. நாத்திகப் பதுமைகளை யாட்டுஞ்சூத்திரம் அரசர்கள் கையிலிருப்பது உண்மை! உண்மை!!

பொய்யாமை, கள்ளாமை, களவாமை முதலிய பொதுத்தருமங்களை விதித்த நூல்கள் ஆத்திக மார்க்கங்களை யவலம்பித்து நிற்பனவாம். பொய் முதலியன கடவுளருளைப் பெறுதற்கு விலக்கென்னுந் துணிபிற்பட்ட நம்ம ஆத்திகர் அக்கடவுளையே யில்பொருளாகப் பழிக்கு மதிபாதகரை யென்னென் றழைப்பது ? பொய்முதலிய தீமைகளில் தெய்வநிந்தை தலையாகையால், தீமையிற் றலைப்பட்டார் நாத்திகரென்று வெளிப்பட்டது. ஆத்திகசமயங்களுள் விலக்கிய தீமைகளில் தெய்வநிந்தையு மொன்றுதல்பற்றித் தெய்வமுண்டென்பார்க்கு விலக்காகிய கொலைகளவாதிகள் தெய்வமில்லையென்று திரியும் நாத்திகர் கொண்டொழூம் நல்லொழுக்கங்களாக நிச்சயிக்கப்பட்டன. நாம் விலக்கிய தீமைகளி லொன்றாகிய தெய்வநிந்தையிற் றலைப்பட்டார் அந்நிந்தை நியாயமுகத்தாற் சாதிக்கப்படுமென்று எழுகின்றனர். இனியிவர்க்குச் சகோதரர்களாகிய கொலைஞர், புலைஞர், கள்வர் முதலியவர்களும் தத்தஞ்செய்கைகள் நியாயமுகத்தாற் சாதிக்கப்படுமென எனெழுமாட்டார் ? இவர்கட்கெல்லாம் சமாதானஞ்சொல்லித் திருப்திசெய்வதென்றால் யார்திறம் ? இவர்கட்குச் சமாதானஞ்சொல்பவன் அரசனேயாகையால், இவர்களில் மூத்தவனாகிய நாத்திக சிரோமணிக்கும் அவ்வரசனே நியாயஞ் சொல்லத் தெரிந்தவன். மேல்விசாரத்தால் தீமைகளெல்லாம் நாத்திகர் நிதிகளாக வெளிப்பட்ட தறியாது, அந்நாத்திகசிரோமணிகள் தாங்களும் தருமத்திற் கட்டுண்டவரென்பது தோன்றப்பொய் கூறலாகாதெனவும், பிறர்பொருளைக் கவரலாகா தெனவும், பிறவுயிரை வருத்தலாகாதெனவும் பலசாலவித்தை காட்டுகின்றனர். கடவுளுக்கே நாமம்போட அவரைத் தேடுபவர்கள் பொய்யாமை முதலியன கொண்டொழுகுவாரென்பது அசங்கதம்! அசங்கதம்!! அவர்கள்கொள்கை கொல்லாமை முதலியவற்றை மறுக்குமுண்மையால்.

ஏழை யொருவனும், தனவானொருவனும் ஓரிடத்தில் சந்தித்தபோது அது யாருமில்லாத விடமாகவும், தனவான் தேகவலிதப்பினவனாகவு மிருக்கக்கண்ட ஏழை தனவானைக் கொன்றுவிட்டால் அவன்மேல் தரித்துள்ள சொர்நாபரணங்களும், அவன்கையில் வைத்திருக்கும் நிதியும் தானபகரித்துக் கொள்ளலாமென்று நினைவெழுமானால் அத்தீயவெண்ணத்தை அந்தச்சமயத்தில் எது தடுக்கும் ? ஆருமில்லாத விடமாகையால் அரசன் பயம்விட்டது. தனவான் தேகவலி குன்றினவனாதலால் அவனையஞ்சுவதும் ஒழிந்தது. இ

னியஞ்சுவது ஆருக்கு? அவனைக் கொல்லுகையில் அவன் வருந்து வனேயென்னு மிரக்கமொன்றே தடுக்குமெனின், அவ்விரக்கம் வகி ப்பதால் தானடையும் பயன்யாது? அந்தச்சமயம் இரக்கமேற் கொண்டு வாளாவிருப்பின், தனவான் கைப்பொருள் தன்கைப் பொருளாவதெப்படி? அப்பெரு நஷ்டத்தால் தனதிம்மையின்ப ம் கெடுமன்றோ? தான்கெட மருந்துதின்பாருண்டா? நெல்லுக்கு ப்பக்கத்தின் முளைக்கும் புல்லை ஐயோ! இதுவும் வளர்வதாச்சுதே யென்று யார் இரக்கம் பாராட்டிப் பிடுங்காதவர்கள்? சிறுமீனைப் பெருமீன் விழுங்குவதனு லுண்டாகிற தோஷம்யாது? புலியைச் சிங்கங் கொல்லுவதனுலுண்டாகிற நஷ்டம் யாது? தனதுபுத்திரி, சகோதரி முதலியவர்கள் அதிகரூபவதிகளாகவும், தன்னையன்றி வேறு அவர்கட்குத் தாரகமில்லாதவர்களாகவும், தன்விசாரணையி லிருப்பவர்களாகவும் பெற்றவொருவிடன் அவர்களைத் தானிச்சித் தால் அவனெண்ணத்தை அப்போதுஅவனுக்கு மாற்றுபவர் யாவர்? எந்தநீதிவந்து அவனைத்தடுக்கும்? அவன் யாருக்கு அஞ்சுவது? பிரத்தியட்சசுகத்தை அவன் ஏன் இழப்பான்? தனதெண்ணங் கெடாவண்ணமுயன்று முடித்துக்கொள்வதே தான் பிறந்ததனு லுண்டாகிய பேறெனக் கொள்ளவருதலால் அவனஞ்சவேண்டிய தில்லை! இல்லை!! இப்படியே பிறன்மனைவியிடமுங் கொண்டு விசாரித்த தறிக. இன்னனபலவுளவாதலால், இவற்றையோசியாது தாங்களும் முதியோரென்பது தோன்றப் பொய்யாமை முதலியனகொண்டொ ழுகுவாராகச் சாலங்காட்டுவது முழுமோசமென்க, இன்னவாறே பொய்முதலியனவுந் திட்டாந்தமுகத்து விசாரித்தால் வெளிப்படு மாகையால், எல்லாத்தீமைகளும் இந்நாத்திகத்தலைவர்க்கே சொந்த ஆசாரமென்பது நாட்டப்பட்டது. இதனுல், கள்வரும், கொலைஞரு ம், பொய்யரும், குடியருமாகிய அதிகாரிகள் யாவருமே நாத்திகப் பெருஞ்செல்வரென்பது சொல்லாமேயமையும். ஆகவே, பொய்யா மைமுதலியன ஆத்திகாசாரமாதல் சுபாவசித்தமென்க. அன்னவை கடவுள் விதித்த ஆணையாகையால். இப்படியறிவதொழிந்து, அவை நாத்திகருங் கொள்ளற்பாலனவென்று வீண்பிரமங்கூறல் அசப்பிய மென்க. அப்படிக் கொண்டால் தங்கள் மதங்கெடுமாகையால்.

பூதங்கள் நான்கின் விகாரத்தைத்தவிரப் பிரபஞ்சமில்லையென் று துணிகின்றவர்கள் எந்தக்காரியஞ் செய்வதும் பூதவிகாரமேயாய் முடிதலால், தாய்முதலியவர்வளைச் சேர்வதும், பிறரைக்கொல்லுவ

தும், பிறர்பொருளைப் பறிப்பதுமாகிய யாவும் பூதவிகாரமென்றன்றி வேறுசொல்லாராகையால் பூதங்களொன்றோடொன்று தாக்கியிய ங்குவதனால் என்ன தோஷமிருப்பதாகக் கொள்வது? எல்லாம் பூ தங்களும், பூதகாரியங்களும், பூத விகாரங்களுமாகவே கொண்டவ னாகையால். இப்படி விவகரிக்கும் பூதசித்தாந்தியாகிய நாத்திகனோடு நாம் தலையடித்துக்கொள்வது கஷ்டம்! கஷ்டம்!! இவன் பூதமே யெல்லாமாச்சுது என்று புலம்புவதுபோல, இவன் தமையனொரு த்தன் பிரமமே யெல்லாமாச்சுது என்று மாரடித்துக் கொள்ளுகி றவனுண்டாகையால் அவன் விருத்தாந்தத்தை யிடம்வந்துழி வி ரிப்பாம்.

இதுகாறும் விவகரித்துவந்த நியாயங்களால் நாத்திகரைத் தி ருத்தவேண்டு மென்பது எம்ம கருத்தன்றாம். அவர்திருந்துவ ரேல், அப்படித் திருந்தக்கூடா தென்பதும் எம்மமுடிபன்றாம். ஆ கவே, அன்னோராபாச நிலையை நம்மவரறிந்து அவர் கூறுமாயாவ சனங்களாற் பிரமியாத வண்ணம் செய்வது பரம தருமமென்று கொண்டமையால் எமக்கிது செய்கை அவசியமாயிற்றென்க.

இந்நாத்திகக்கோள் பிரகிருதத்தில் ஆங்கிலேய நாட்டில் கொ ஞ்சம் தலையெடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. அதனால் நமக்கொ ருபாதகமின்றெனினும் நம்மதேயத்துப் பாலிசர்கள் தத்தஞ் சமயநி லையினைத்தென்றறியாத தன்மையாலும், நஞ்சமய வுண்மைகளை யறி வதற்குப் போந்ததமிழ், கீர்வாணமுதலிய பாடைகளை யினிது கல்லா மையாலும், அங்ஙனங்கற்றமேலோர்களோடு கலவாமையாலும், வயிற் று வித்தையே வித்தையாக வூணபாடை யொன்றையே கற்றுவருவ தனாலும், அங்ஙனங் கற்கப்புகுங்கால் அந்தப்பாடையி லன்றித் தம துசொந்த பாடைகளிற் பரிஞானமில்லாத கொடுமையால் அவற்றின் றூரதம்யங்களைக்காணுந் தன்மையொழிதலானும், அவ்வூணபாடை யைக் கற்றுவருங்கால் அப்பாடையைப் பயிற்றுவிக்கு மாசிரியரெ னப் போந்தவூணர் கூட்டுறவின்மிகுதியால் அவர்வாசனை தமக்கே றப்பெறுதலாலும், அப்படியேறிவருங்கால் அவர்தயையில் வைத்த நாட்டமேலீட்டால் அவர்குறிப்பின் வழியொழுகுதல் ஆவசியமெ னப் புலப்படலானும், இன்னு மிவ்வாறு சிந்திக்கத்தக்க வேறுபல வேதுவாலும் நம்ம தேசாசாரங்களும், சாதி, சமயாசாரங்களும் தா ழ்வுடையனவாகமதித்து (நிலத்தியல்பானீர்திரிந்தற்றாகுமாந்தர்க் கினத் தியல்பதாகுமறிவு) என்னும் பிரமாணத்தின்படிக் கெடுகின்றவனுபவம்

பிரத்தியட்சப் பட்டிருத்தலால், இதைக் காணும் நம்முண்மை யிந்துக்கள் எவ்வளவு அநுதாபத்தை யடைந்திருக்கக் கூடுமென்பதை விவேகிகள் சிந்திப்பாராக.

மேல்திருக்குறளின்படி நம்மவரோடு ஊணர் கலந்துவாழ்க்கையில், அவர்க்கு நம்மாசாரங்களி லிச்சை பிறவாததென்னையெனின், அவர்தயையை நம்மவர் விரும்பலன்றி நந்தயையை அவர் விரும்பி ஆசரியாமை யுண்மையால், அவரிச்சைக்கிடம் பெறுதொழிந்தது. அன்றியும், அசுத்தம், சுத்தம் என்னுமிரண்டில் அசுத்தம் முன்னமே முடிந்திருப்பதொன்றும், சுத்தம் இனி அடைய முயல்வதொன்றுமாதலுண்மையால் அவர்க்குப்புண்ணியம் வழிவிட்டாலன்றித் தமது ஆசாரத்தைக்கடந்து நம்மாசாரத்தை யெங்ஙனம் விரும்பக் கூடும்? மேலிருப்பவன் கீழேயிழிதல் சுலபமும், கீழிருப்பவன் மேலேயேறுதல் கஷ்டமுமாதல் காண்க.

நம்மதேசத்திற் செல்வராயுள்ளவர்கள் விபூதி, அல்லது திருமண்முதலியவற்றைத் தண்டத்திற் கிட்டாலு மிட்டார்கள். அல்லது நான்செஞ்சு என்றுவிட்டாலும் விட்டார்கள். அதற்கப்புறம் தெய்வம் என்றால் அதைஎழுத்துக்கூட்டவே தெரியாதவராகையால், அத்தெய்வவிலக்கண மெங்ஙனமறிந்திடவல்லார்? ஆகவே, நம்மபிரபுக்கள், தெய்வம் இக்கருங்கல்லே போலுமெனத்தெளிந்து இகழ்வதேயன்றி வேறு அவர்யாது செயற்பாலார்? இதற்குக்காரணம் தத்தமது சமயவொழுக்கங்களை யுணர்த்தும் நூல்களில் பழகப்பெறாத பாவமேயன்றி வேறில்லை. அன்னோர்க்குப் புத்திரரத்னங்களாய்ப் பிறக்குந்தவமுடையார் பேறு எவ்வளவிலிருப்பனவாக நாமெடுத்துரைக்கவிசையும்? அவர்மான்மியமுரைக்க நந்தரமன்றும். இப்படி நம்மவர்களே கெடுகின்றாரன்றி மற்றை மதத்தவர் தந்நிலையினின்றும் மாறுவது காணோம்! காணோம்!! ஊணர் மகம்மதியர் முதலியவர்களில் அவரவர் சொந்ததருமங்களிற் பிறழ்ந்து நடப்பவர் ஏகதேசத்திலும் ஏகதேசம். நம்மவர்களில் நம்மசொந்த தருமங்களைத் தழுவிநடப்பவர் ஏகதேசத்திலும் ஏகதேசம். பிறமதத்தவர் தங்கள் நிலையின்மாறாமைக்கும், நம்மவர் தங்கள் நிலையின்மாறுகைக்குங் காரணத்தை நோக்குங்கால் பிறருடைய ஆசாரங்கள் யுக்தமும், நம்மாசாரங்கள் அயுக்தமுமாயிருத்த லென்பார்போலும். இவற்றைக்காட்டிலும் மிருகங்களினாசாரம் அதிகயுக்தமாய்க் காணப்படலால், இன்னுங்கொஞ்ச காலத்தில் அப்படியும் அவலம்பிக்க வரும்போலும்.

இப்படிப் பாலிசர்களும், பிரபுக்களுந் தடுமாற்றத்தை யடைந்து கெடுவதெல்லாம் இயல்பினமைந்திருக்கும் நல்லவாசனையை யொழித்துக் கொண்டமையேயன்றி வேறில்லை. ஆகையால், மேல்நியாயங்களை யினிதுபரியாலோசித்து யுக்தப்படி யொழுகவேண்டுமென்பது தெளிக. எனவே, வயிற்றுவித்தையோடு ஒழுக்கவித்தையுங் கற்கவேண்டுமென்பது பெற்றும். இப்படிப்பட்ட சிறுவர்களும், பிரபுக்களுமே யிதற்குமுன்னும் நந்தேசத்தி லிருந்ததுண்டாயின், ஆகாயத்தையளாவிய நிலைகளையுடைய கோபுரங்களால் விளங்கும் நம்மாலயங்களும், அவற்றிற்கான ஏர்ப்பாடுகளு முண்டாயிருக்குமா? தெய்வத்தின் பேர்சொன்னால் ஓர்காசும் கையினின்றும் பெயராத ஔதார்யப் பிரபுக்கள் காலமிதுவாதலால். இக்காலத்துப்பிரபுக்களும், சிறுவருமென்னை முற்காலத்தவரைக் காட்டிலும் விவேகிகளா? முன்னில்லாதவிவேகமா இப்போது நம்மதேசத்தில் வந்துகுடிபுகுந்தது? அவிவேகமேவந்து குடிபுகுந்தமையால் விவேகம் ஒளிக்கவிடந்தேடிற்று. நம்மபூர்வீகர்கள் புத்திவிசாலத்தைக் காட்டுதற்கு அவர்களால் கட்டப்பட்ட ஆலயாதிகளே போதுமான நிதரிசனமாம். அவ்வாலயங்களிப்போது நம்ம தேசத்தி லில்லாவிட்டால் நம்ம ஆசாரங்கள் செத்தவிடம் புன்முளைத் திருப்பதில் என்னதடை? ஊணபார்டையைக்கற்றுச் செல்வத்தை யார்ச்சித்த பிரபுக்களில் தங்கள் சமயாசாரங்களில் அப்பொருள்களை விநியோகித்தவர் இன்னார் என்றுசொல்லுவதற்கு யாவருளர்? ஊணர் மகம்மதீயருள் எவ்வளவு செல்வமுடையவராயிருப்பினும், தங்கள் சமய நிலைகளில் அபிமானம்விடாமல் அன்பு பாராட்டித் தங்கள் பொருள்களைத் தத்தஞ் சமயாசாரவிசேஷங்களில் விநியோகப் படுத்தாதவர் வெகு சிலர். அவர்கள் தங்கள் பாஷைகளையும், சமய நூல்களையும் நன்கு பயில்வதாலும், அன்னபயிற்சி யுடையார்மாட்டு விடாப்பழக்கம் பற்றி வருதலாலும் அவர்க்குத் தங்கள் சாதிசமயாசாரங்களில் ஊக்கம் மாறாமை வெளிப்பட்டது.

நாத்திகவிசாரத்தில், ஊணர் ஆசாரங்களை யவலம்பித்து விவகரித்த தென்னையெனின், அவராசாரங்கள் ஆத்திகம்போல்வதொன்றாகக் காணப்படினும்,அவை யுண்மைவிசாரத்தில் நாத்திகமேயாய் முடிதலினென்க. கேவலம் நாத்திகர் கொண்டுவாழும் ஆசாரங்களும், அவர்களாசாரமும் பெரும்பாலு மொத்திருத்தல்காண்க. சிறுபான்மையே நாத்திகர்க்கு வேறுபட்ட வுண்மையால், அவரும்நா

த்திகராகவே நம்ம சித்தாநதத்தை நோக்க எண்ணப்படுவர். அவர்க ள்கடவுளை மாத்திரம் அநாதி நித்தமாக வொப்புக்கொண்டு ஆன்மா வையும், பாசத்தையும் இடையில் தோன்றிய ஆதியாக வொப்புக் கொண்டமையால்,ஆதியுடைய பொருள்கள் அந்தத்தைப்பெறுதல் திண்ணமாதல் கொண்டு, பாசபசுக்களுக்கு அநித்தங் கூறுந்தன் மை வெளிப்பட்டது. அவரப்படியுங் கொள்ளாது நரக சொர்க்கங் களில் பசுக்கள் நித்தமாய்க் கிடப்பரென்றுங் கூறுகையால், நித்தி ய நரகசொர்க்கங்களை யநுபவிக்க நித்தியமா யிருக்கு முயிர்களை ஆதியென்று கூறுதலடாது. அன்றியும், நித்தியமான நரகத்தை ஆ ன்மா நித்தியமா யிருந்தனுபவிக்க வருங்கால், கடவுளொருவருண் டென்பதற்கு இடமேயில்லை. கடவுளையொருவ னுண்டென்று கொ ள்வதெல்லாம் சுகத்தின்பொருட்டே யாதலுண்மையாகச், சதாநிர யத்தி லழுத்துமொரு பொருளுண்டெனில், அதைக்கடவுளென் று கூறுவதைக் காட்டிலும் வேறொரு கசுமலமென்று கொள்வது அதிககுணமாம். இன்ன ஆபாசஞான விவேசனத்தால், இந்தமார்க் கம் கடைசியில் நாத்திகமேயாய் முடிதல்காண்க. பாசபசுக்களை இ டையில் வந்தனவாகக் கொள்கையில், இடையில்வந்தன் முன்னில் லாமையாலும், பின்னழிதலாலும் முன்னும் பின்னுமில்லாத நாத்தி கப் பொருள்களே யாயின. இல்லாத பாசபசுக்களை யுண்டாக்கின மையாலும், உண்டாக்கினபிறகு நித்தியநரகத்தில் விடுத்தலாலும் பயனற்றசெயலும், கொடுஞ்செயலுமுடைய வொருமூடனேடுவமி க்குந்தன்மை வெளிப்படலால் அன்னபொருந்தாச் செயலுடைய தோர்பொருள் கடவுளாதல் செல்லாமையின், அவர் கூறுங்கடவு ளும் நாத்திகப்பொருளாய் முடிந்தது. ஆகவே, சொன்மாத்திரத் தால் கடவுளுண்டென்பதும், பாசமுண்டென்பதும் பசுவுண்டெ ன்பதுமேயன்றி, உண்மையில் அவற்றை யில்பொருள்களாகக்கொ ண்டவோர் துணிபினதாகவே அவர்மதம் வெளிப்பட்டமைகாண் க. இன்ன ஆபாசங்கள் பலவுளவாகலின், முற்றுணர்ச்சியில் இது நாத்திகமாவதில் எவ்வளவுந் தடையின்றாம். இது உண்மையில் நா த்திகமும், விவகாரத்தில் ஆத்திகமுமாய்க் கொள்ளவருந்தன்மை யால்,நம்மதேசத்திலுள்ள மாயாவாதம் போல்வதொன்றாகவுங் கொ ள்ளப்படும். இவர்கள் ஒருவர்க்கொருவர் அண்டை அசல் வீட்டுக் காரர்களாகையால், இன்னோர்செயல்யாவும் அசப்பியமே யாதல் காண்க.

ஊண பாடையைக் கற்றுவரு நம்மவர் அவ்வூண சாத்திரங்களில் அபிருசிமேலிட்டு அவர்நூல்களையும், அவ்வூணபண்டிதர்களையும் பழக்கங்கொண்டு வருங்கால், அச்சம்பந்தமேலீட்டால் அந்தஞானங் கைவருமென்பது திண்ணம். மேல்யாம் விளக்கிக்காட்டிய விசாரமுகத்தால், அதுகேவலம் நாத்திகத்திற் செலுத்துமென்பதற்கேற்ப, அவர்களிற்பலர் அவர்மதநூல்களில் முன்னொடுபின் முரணவாவது உண்டென்று கூறியகடவுளை மறுத்துக் கேவலம் நாத்திகராய்த் திரிகின்றனர். அன்னோர் நூல்களையும், அவர்களையும் பழக்கங் கொள்ளுங்கால் தெய்வ மொன்றுண்டென்று சொன்மாத்திரமாய்க் கூறித்திரிதலையும் விட்டு, அன்னசிரோமணிகளைப் போலவே தெய்வம் என்பது மொன்றுண்டா? தெய்வமென்றாலென்னை? என்று பரிகசிக்க ஏன்எழுமாட்டார்கள்? அது சித்தித்த பின்னர், தாயேது தந்தையேது நானேது நீயேது என்றும் ஏன் பிரசங்கிக்காமற் போவார்கள்? இன்னவியல்கொண்டு விளங்கும் பிரகிருதாசாரத்தில், நம்மதோழர் பலர் கெடுகின்றாராகையால், அவர்மாட்டுள்ள நட்புரிமையால் இன்னுங்கூடியவரையில் பிரவசனஞ்செய்வாம்.

இவ்வாபாசஞானம் ஆங்கிலேயநாட்டிற் கொஞ்சம் தலையெடுத்திருக்கின்றது என்று யாம்மேலே கூறினோமாகையால், அதன் பிரயோசனத்தைச் சற்றேவிசாரிப்பாம். அவ்விடத்தில் அநேகபண்டிதர்கள் கல்விகேள்விகளில் வல்லவர்களாயிருப்பினும், ஆண்டு அவலம்பிக்கப்பட்டுள்ளமார்க்கம் கேவலம் அஞ்ஞானகிருதமாதல்திண்ணமாகையால், ஆபாசத்தி லாபாசமாகத் தற்போதசமாஜந் தலையெடுக்க நேர்ந்தது. எனவே, அங்குள்ளவரிற் சில பண்டிதர்கள் கேவலம் தேகாத்மவாதிகளாய்த் திரிகின்றாரென்பது வெளிப்படை. இத்தற்போதத் தலைவர்கள் தந்தற்போதத்தைத் திரட்டிச் சிற்சில பத்திரிகாரூபத்தாலும், நூற்பிரவசனத்தாலும் வெளியிட்டு வருகின்றார்கள். நம்மிந்து பாலிசர்களிற் சில கேள்வியில்லாத பிள்ளைகள் மேல் யாம்காட்டிய நியாயத்திற்கேற்ப அவற்றை யப்பியசித்துவரு மவதிக்குள்ளாகி, நல்லவாள், பெரியவாள் என்னும் வரன்முறைகளைக்கடந்து தம்மிச்சைபோனவழி விவகரித்துக்கொண்டு தாம்கெடுவதன்றி மற்றைச்சிறுவரையுங்கெடுக்க முயன்று(தெய்வமிகழேல்) என்னும் ஆணையையுங்கடந்து திரிகின்றனர். இவர்களே (முலையுண்ணிநீருண்ணு மோட்டெட்டருமை மூடர்,சலமின்றிச்சந்துரைப்பார்தர்க்கர்,பலதாரை,வட்டிலிலேபோலுமிவர்மா

யோகவாசகத்தைக், கிட்டினாரகங்கிழர்)என்று நம்மஆசாரியர்கள் கட்டளையிட்டுள்ள வாக்கியத்திற்போந்த மெய்யதிகாரிகளாவர். இன்ன ஆபாச குணக்ஞானை முன்னீடாகக் கொண்டு விவகரிப்பது கஷ்டம் கஷ்டம்!! ஆகவே, அன்னோர்செய்யும் இந்திரசாலத்தைக்கண்டு நம் மதோழர் பலரும்பிரமியாத வண்ணமே யாமீண்டுப்பிரவசனிக்கப் போந்ததெனவறிக.

இவ்வாபாசகர் காணப்பட்ட பிரபஞ்சமொன்றே சத்தியமெனவும் ஆன்மாவாவது, கடவுளாவது உண்டென்பது தவறெனவும் புலம்பாநிற்பர். இதனால், (உலகத்தாருண்டென்ப தில்லென்பான்வையத்-தலகையா வைக்கப்படும்) என்னுந்திருவாக்காற் பழிக்கப்பட்டலகையாவரென்பது திண்ணம். உலகம்= உயர்ந்தோர் என்று பரிமேலழகர் கூறியிருத்தலின், கடவுளில்லையென்று சாதித்துக் கூறும்நியாயமேலீட்டால் யாமே அவ்வுயர்ந்தோராதல் ஏன்கூடாது என்பர். உலகம் =உயர்ந்தோர் என்பதைப் பரிமேலழகர் திருவாக்காற் கொண்டபடியேஅவ்வுயர்ந்தோ ரிவரென்பதும் அவர்திருவாக்கானே பெறல்வேண்டும். தீயவொழுக்கங்களுக்கு நிலைக்களமாய் விளங்கு மத்துன்மார்க்கமே உரையாசிரியர் பிரவசனத்தாலும், நூலாசிரியர் திருவாக்காலுங் கடியப்பட்டிருத்த லுண்மையாக, அன்னோர் திருவாக்கைத் தமக்காதரவா யெடுத்தாள்வது விளக்கில் விழுந்தவியும் விட்டிலின் கதியாமென்க. நியாயமின்றி மூடத்தன்மையால் விவகரித்தாலன்றோ யாம்அலகையாதல்சாலுமெனின், நியாயமென்றாலென்னை? ஒருவன் அறிவு விளங்கப்பெற்றநாள் முதல் நேற்று விளங்கியது இன்றும், இன்று விளங்கியது நாளையும், மாறுபட்டுவரும் அநுபவத்தையேன் சிந்தித்திலர்? மூன்றுகாலத்து மொன்றிலொன்று விகற்பித்தெழுந்த வொருவனுக்கு எதுநியாயம்? அந்தத்தக்காலத்தில் அதுவதுவே நியாயமாய்க் கொள்ளவருமன்றோ? முன்னையது பின்னும், பின்னையது அதற்குப்பின்னும் பூர்வபட்சமாதலால், அவனேதன்னை மறுத்தவனாகிறானன்றோ? அவன் பின்னர் கொள்ளப்போவதையே முன்னவசரங்களில் மற்றொருவர் சொன்னால் அவன் கேட்பானா? அவன் கேளாமைகொண்டே இடித்துக்கூறிய பெரியோர்சொல் அகௌரவத்தைபடையுமா? இந்த நியாயத்தால் எது நியாயமென்று கொள்ளற்பாலது? இவற்றையுணராது எமக்கே நியாயந்தெரியுமென்று வாய்ப் [illegible] யும்? உல

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
... NAGAR MADRAS-90

கில் யார்தான் அநியாயஸ்தர்? முடிச்சவிழ்க்கிறவனும் நியாயஞ்சொல்லத் தெரியாதவ னல்லவாகையால்.

உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னுஞ் சொற்பொருள்களை நோக்கின் உயர்ந்தபொருளோடும், தாழ்ந்தபொருளோடுஞ் சம்பந்தித்தவர் என்று வெளிப்படுகின்றது. மக்களுள் உயர்ந்தோருந் தாழ்ந்தோருமாகவே யிருக்கக்காண்டலின், மக்கள் யாவரும் உயர்ந்தோருமல்லர். மக்கள் யாவருந் தாழ்ந்தோருமல்லர். உயரவுந்தாழவும் வருந்தன்மை அவரவர் சாரும்பொருள்களி னுயர்வுதாழ்வுகளா லுண்டாவதாய் நிச்சயிக்கப்படுகின்றது. நிலத்தியல்பால் நீர் திரிந்தது போல், இனத்தியல்பால் மாந்தர்க்கறிவு திரியும் என்னும் பிரமாணமே சான்றெனவறிக. இதனால் மக்களுக்கில்லாத வுயர்வு தாழ்வுகளை அவர்களுக்குக் கொடுக்கு முயர்வுதாழ்வுடைய பொருள்கள் மக்களுக்கு வேறாகவுண்டென வெளிப்படலால், அவ்வுயர் பொருள்கடவுளும், தாழ்பொருள் மலமுமாதல்சாலும். கடவுளிடம் வகிக்கும் பற்றின்தாரதம்யங்களால் உயர்ந்தோர் தாரதம்யமும், மலத்திற் சாரும் பற்றின்தாரதம்யங்களால் தாழ்ந்தோர் தாரதம்யமும் வெளிப்படுமாற்றால் கடவுளிடம் மிக்க பற்றேறினோர் மிகவுயர்ந்தோரெனவும், மலத்தின் மிக்க பற்றேறினோர் மிகத்தாழ்ந்தோரெனவும் பெறப்படுகின்றது. இந்தவிசாரத்தால் கடவுள் சம்பந்தம் அற்பமுமெய்தப்பெறாத மலத்திற்பெரியராகிய வவ்வாபாசகரை யுயர்ந்தோரெனல் யாண்டமையு மென்பதை யூன்றிவிசாரிப்பாராக. உலகம்= உயர்ந்தோரென்னும் பொருளைநாடி அங்கிகரிக்கப்பட்ட பரிமேலழகர் கூற்றின்படி உயர்ந்தோரினத்தில் அவர்க்கிடங் கிட்டாமையால், உயர்ந்தோர் என்னும் பொருளைத்தரு முலகத்தா ருண்டென்பதை யில்லையென்று கூறவந்த அவ்வாபாசகர் அலகையாதல் திண்ணம்! திண்ணம்!!

ஆயின், சிவனில்லையென்று வைணவரும், விண்டுவில்லை யென்று சைவரும், இரண்டு மில்லையென்று ஏகான்மவாதியரும் இப்படியே பலசமயிகளுஞ் சொல்லிவருவதால் ஒருவருண்டென்பதை மற்றையரில்லையென்பது கொண்டு யாவரும் அலகையாவரே யென்பர். சிவனையாவது, விண்டுவையாவது, ஆன்மாவையாவது, மற்றைப் பொருள்களையாவது அவ்வாபாசகரைப்போ லில்லையென்பா ரொருவருமிலர். யாவு முள்பொருள்களாகவே கொண்டு ஒன்றிலொன்று தாரதம்யங்கூறுவர். இல்லையென்பதற்கும், தாரதம்யங் கூறுவதற்

கும் வெகு தாரதம்ய முண்டென்பதை யோசிப்பாராக. இவருளொருவரும் இல்லையென்னும் வாதிகளல்லாததுகொண்டு இல்லையென்று கூறு மவ்வாபாசகரே அலகையாதல் சாலும்.

உலகத்தாருண்டென்பதை யில்லையென்பதுபோல், இல்லையென்பதை யுண்டென்பவனு மலகையாதல் சாலுமென்று நியாயத்தால் முன்காணுதவொன்றை நூதனமாய்க் கண்டுரைசெய்வாரும் அலகையாவரேயென்பர். அற்றன்று. புகைவண்டி முதலியன முன் காணப்படாமை மாத்திரமேயன்றி அவை அபாவப் பொருள்களன்றும். இருந்தனவே வெளிப்பட்ட புதுமைகாண்க. உலகத்தாரில் பொருள்களாகத் துணிந்த முயற்கோடு கானனீர், ஆமைமயிர் முதலியன வுண்டென வொருவன்சொன்னால் அவன் ஏன் அலகையாகான்? இத்திட்டாந்தவாயிலாய் இல்லாததொருகாலத்து முண்டாகாதெனவும், உள்ளதொருகாலத்து மில்லாததாகாதெனவும் நாட்டப்பட்டது. முயற்கோடு முதலியவற்றை யுண்டெனலமையாததுபோல் கடவுளை யில்லையென்றலடாதெனவறிக.

இனி, யாம் அலகையாதல் தவறுஎன்று அவர் கூறப்போந்தமையில், யாம்என்பதற்குப்பொருளாய்நிற்பதெது? எம்மகக்கருவி, புறக்கருவியென்றெழும் பிரயோகங்க ளுளவாகையால், எம்ம எனவும், எமக்கு எனவும் போந்த பிரயோகங்களுக்கு நிலைக்களமான பொருள்யாது? எம்கருவி யென்றதில் எம்என்பதற்கு உடையபொருளும்,கருவியென்பதற்கு உடைமையும் பெறப்படுதலால்,தேகாதிகளாகியவுடைமைகளை யுடையவன் யாவன்? என்வீடு, என்மனைவி, என் காணி என்று கூறுகையில் வீடு, மனைவி, காணி யென்பவற்றிற்கு என் என்றெழுமொருவன் வேறுஞற்போல, என்கை, என்கால், என்மனசு என்கையில், கை, கால், மனசுமுதலியவற்றிற்கும் அவன் வேறுதலுண்மை. தேகாதிகளைக்காட்டிலும், வேறு பொருளுண்டெனக் கொள்ளாத பேய்கள் எம் எனவும் எமக்கு எனவும் பிறர் கூற்றை யவலம்பித்துரையாடல் என்ன பேதமை?

இக்கருத்தேபற்றித் தேகம் சடமாதலால் ஒன்றையும் விவகரியாது எனவும், தேகி அவர் கொள்கையின்படிப் பூதக்கலப்பாலுண்டாகிய குணமே யாதலால் அதுவும் சடமாகிவிவகரிக்க மாட்டாதெனவும், பின் விவகரித்த பொருள்யாதெனவும் நம்மவர் கேட்கும் வினக்களுக்கு அவர்கூறும் விடையாது? குணியினின்றுங்குண

த்தைப் பிரிக்கப்படாமையால் அப்படி விவகரித்து நிற்பது தேகியா கிய குணமுமல்ல, தேகமாகிய குணியுமல்லவென்று கூறுவரேல், இவ்விரண்டுமல்லாத வேறு பொருள்யாதோ விவகரித்து நிற்பது? இவ்விரண்டைக் காட்டிலும் வேறுபொருளைக் கொள்ளாத வவர் மதத்தில் விவகரித்த பொருளை யெங்கேகண்டு பிடிப்பார்கள்? தேகத்தைக்குணி யென்பதும், தேகியைக் குணமென்பதும் எம்ம சித்தாந்த மன்றாகலின், அவற்றைப் பிரிக்கப் படாதென்பதும் பிழைபட்டழியும். ஆன்மா தேகங்கடோறுந் திரிந்துவருதல் சத்தியமாகையால். தேகம் சடமாதலால் அதன் குணமுஞ் சடமாதல் திண்ணம். குணம் சடமானபோது அது ஒன்றினையுமறியாது. அறியாததாகிய குணத்தை அறிவாயுள்ளதேகியாக மயங்குவது மலவுறைப்பெனவறிக. தேகிசித்தும்,தேகம் அசித்துமாயிருப்பதால் அவைகுணியுங் குணமுமாகா. தேசி, தேசம் என்கையில் தேசிகுணியும், தேசம்குணமுமாகாமையால், குணம் குணியென்பதுதாதான்மியசம்பந்தமும், தேசம்தேசியென்பது பரிக்கிரகசம்பந்தமும் பற்றியவங்குமுறைமைகாண்க. இந்தவிசாரத்தால் தேகியென்பது, தேசத்துக்கு வேறாயிருக்குந் தேசியைப்போல், தேகத்துக்கு வேறாயிருப்பதொரு பொருளென்று நாட்டப்பட்டது.

சுண்ணத்திற்கும், மஞ்சளுக்குந் தனித்தனியில்லாத செந்நிறமாகியகுணம் அவைகலந்தபோ துண்டாகவில்லையா? அதுபோல் பூதங்கள் நான்கில் ஒன்றற்கேனு மில்லாதவறிவு அவை கலந்தபோதுண்டாமெனின், இல்லது வாராது, உள்ளதுபோகாது என்றபடி. அவ்விரண்டினிடத்து முளதாகிய செந்நிறமே யுளதாயிற்று. இல்லாததே யுளதாயிற்றெனின், கொட்டியுஞ் சுண்ணமுஞ் சேர்ந்தபோது அச்செந்நிறம் ஏன் உண்டாகாது? ஆகவே, தனித்தனியில்லாத சிவப்பு நிறமென்பது விசாரஹீனமாதலறிக. பாலினிடத்து முன்காணுதநெய்யும்,விறகினிடத்து முன்காணுததீயும் அவற்றுளில்பொருள்களாதல் யாண்டிசையும்? உள்ளபொருள்களே யுண்டாயினமைகாண்க. அன்றியும், சுண்ணமும்சடம். மஞ்சளும்சடம். அவற்றாலுண்டாகிய சிவப்புநிறமும் சடம். சடத்திற் சடமுண்டாதல் சுபாவம். அவர் தேகியாகக்கொண்டது சித்தாகையால் அது சடத்திற் காரியப்படுவது எப்படி? இதற்குச்சமாதானம் ஆங்கிலேயநாட்டி லாடம்பரஞ்செய்து திரியும் அன்றோராங்கிலேய தேசிகரைக்கேட்டு மகிழ்வாராக. சடத்திலேதானே சித்துமுதிக்குமெனின், அதற்கு அவர்

காட்டும் அநுபவப் பொருள்யாது? அவர் சுண்ணத்தையும், மஞ்சளையுங்கூட்டிச் செந்நிற முண்டாக்குவதுபோல் எந்தெந்தப் பொருள்களைக் கூட்டி அறிவையுண்டாக்குவார்? எம்மோடு வாதத்திற் றலை யுடைத்துக்கொள்வதை விட்டு அறிவாகிய ஆன்மாவைமாத்திரம் காட்டுச் சரக்கையெல்லாங் கூட்டித் தரையிலேதானே யுண்டாக்கிக் காட்டவல்லரேல் அன்று அவர் சமயம் நிலைக்கும்! நிலைக்கும்!! அன்னோர் பிரத்தியட்ச வாதிகளாகையால் அவர்கள் சித்தாந்தத் தன்மையைப் பிரத்தியட்சத்திற் காட்டினாலல்லது அவர் மறுபடியுந் தங்கள் தலையை வெளியே நீட்டுவது கேவலம் அசங்கதமென்க. ஓர் சிறிய எறும்பை மாத்திரம சிருட்டித்து விடட்டும் பார்ப்போம். அது செய்யவே வழிதேடுகின்றார்போலும்.

இதுகாறும் விவகரித்த நியாயத்தால் தேகத்துக்கு வேறாக ஆன்மா இல்லையென்னுந் துணிபு துணிக்கப்பட்டதுபோல், தேகத்துக்கும், ஆன்மாவுக்கும் வேறாய்க்கடவு ளில்லையென்பதும் விவகாரத்தி லிழுக்கடைந்தொழியு மென்பது திண்ணம். சூரியனுடைய வொளி யுதவியின்றிக் கண்ணொன்றையுங் காணாதவுண்மையால், திருவருளுதவியின்றி ஆன்மா வோரியக்கத்தையும் பெறாதென்பது சத்தியம். இவ்வுண்மைகளைச் (சிவபாரம்யப்பிரதரிசினி) யில் விளக்கியிருப்பதனாலுங் காண்க. பூதசாத்திரத்திற் புஞ்சங்களாமென மஞ்சளுஞ் சுண்ணமுஞ் சேர்ந்தமாட்சிகூறி மாழ்கியதுபோல், திருட்டிசாத்திர பரிஞான வள்ளல்களாமெனச் சூரியனொளியுதவி கண்ணுக்குவேண்டா மென்பார்போலும். சூரியனுதவிவேண்டாதவன் கண்ணில்லாதவனே யாகையால், திருவருளுதவி வேண்டாதவருங் கண்ணில்லாதவரே யாவர். ஒளியுதவி யின்றியே யாம் இரவில் சஞ்சரிக்கின்றோமெனின், அலகைத்தன்மை யுடையாரென்பது பெறப்படும். ஆண்டும், இருள் கண்ணுக்குக் காட்டாய் நின்றதென வறிக. தானே கண்ணொன்றையுங் காணாதன்மை யுண்மையால். கூகை முதலியன இருளைக் கண்ணுக்குக் காட்டாகப் பெற்றியங்குந்தன்மை யுண்மையால். ஒருசகாயமின்றிக் கண்ணொன்றையுங் காணாது என்னுமுண்மை மறுக்கப்படாதவரையில், கடவுளுதவியின்றி ஆன்மா தலையெடுக்காது என்னுந் துணிபு தாழாது! தாழாது!!

இன்ன சமாதானங்களைப் பரிசீலிக்கும் புண்ணியமிலராய், ஆத்திகர் கேள்விக்கு யாம் விடைசொல்லத் தெரியாமைகொண்டே

ஆத்திகர்கொள்கை சித்தாந்தப் படமாட்டாதெனவும், ஆத்திகர் தங்கள் சித்தாந்தத்தை நியாயஞ்சொல்லி நிலைநாட்டினால்தான் நாத்திகங் கழலுமெனவும் அவ்வாபாசகர் கூறித்திரிவர். உலகமடங்கலும் நிறைந்திருக்கு மார்க்கங்கள் யாவும் ஆத்திகசம்பந்த முடையனவே யாக, யாம் எம்ம ஆத்திகத்தை நூதனமாய் நாட்டுவதற்கு ஆவசிகம்யாது? நெற்பயிரைச் சூழ முளைக்கும் புல்பூண்டு முதலியவற்றைக் களைந்தெரிவதுபோல், அவராபாச நெறியாகிய நாத்திகத்தைக் களைவது எமக்குற்ற தொழிலாம். ஆகவே, அவர்மதத்தை அலைத்தழிக்க யாம் வினவிநிற்பது யுக்தமாம். யாம் வினவுங்கால் அவைகட்கு விடைசொல்லத் தெரியாமையால், அவர் சமயமாகியகளை பறிக்கப்பட்டழியும். அவர் சமயம் பாழ்படவே, (இயல்பென்றுந் திரியாமலியமமாதி யெண்குணமுங் காட்டியன்பாலின்பமாகிப்,பயனருளப் பொருள்கள் பரிவாரமாகிப் பண்புறவுசௌபான பட்சங்காட்டி, மயலறுமந்திரஞ்சிட்சை சோதிடாதி மற்றங்க நூல்வணங்க மௌனமோலி, யயர்வறச்சென்னியில்வைத்தி ராசாங்கத்தி லமர்ந்ததுவைதிகசைவ மழகிதந்தோ) என்னும் பிரமாணப்படி யெக்காலத்தும் அழியாததாகிய எம்ம ஆத்திகம் நிலைபெற்றே நிற்கும். ஆகவே, அவர் நாத்திகபோதந் தலைகாட்டுந்தோறும் ஒந்தித்தலையெடுப்பாய் நசுக்கப் பட்டழியும்,

நம்மாசாரியர் திருவாக்கொன்றை யீண்டுப் பரியாலோசிப்பாம். (புறச்சமயநெறிநின்று மகச்சமயம்புக்கும் புகன்மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம, வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள்புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள்படித்துஞ், சிறப்புடையபுராணங்களுணர்ந்தும்வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற்சைவத், திறத்தடைவ ரிதிற் சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர்) என்னும் பிரமாணத்தால் பதிஞானங் கிட்டுவது பரிபாகிகட்கேயன்றி, அன்யத்திரா சித்தியாதென்பது நம்ம சித்தாந்தமாகலின், புறப்புறச்சமய மாறனுளொன்றாகிய உலகாயதத்தை யவலம்பித்துத் திரியுமன்னோர்க்கு நம்ம சித்தாந்தத் துண்மையை யுணர்த்தப் படாதெனவும், அப்படி யுணர்த்தினும் அது பயன்படாதெனவும், வெளிப்பட்டமை காண்க. எமக் கிவ்விவகாரம் அவ்வாபாசகரை நோக்கியன்றாக வெளிப்படலால், அவ்வாபாசக் குழியில் நம்மவர் விழாதபடிக்கு இதிற்போந்த நியாயங்களை யொரு தரத்துக்குப் பல தரம் ஆசக்தியோடும் சிந்தித்து உண்மை கடைப்பிடித்தொழுகுவாராக.

அவ்வாபாசகர் தெய்வச் செயலொன்றுமில்லை யென்பதை விளக்குதற்பொருட்டு வினவுங் கேள்விகளைச் சற்று விசாரிப்பாம். இடி விழுகிறது கடவுள் செயலானால், அவர் செயலொருவராலுந் தடுக்கமுடியாது என்னும் ஆத்திகர் அதைக் காந்தத்தைக்கொண்டு தடுப்பதென்னை யெனவும், அப்படியே பேதியுண்டாகிறபோதும், பெசலடிக்கிறபோதும் முறையே ஔடதத்தைக்கொண்டும், பராமிடர் என்னுங் கருவியைக்கொண்டும் அவற்றினின்றும் மீள்வதென்னை யெனவும் பலவாறு பரிகசிப்பர். அவர் பரிகாசம் பல்லையிளித்துக் கொள்ளும்படியான சமாதானங்களைப் பரியாலோசிப்பாம். இடியைத் தங்கள் சத்தியாற்றடுக்க முயல்பவர் காந்தத்தைத் தேடுவதென்னை? அக்காந்தம் யார் வீட்டுடைமை? அது இல்லாமலே அவர் ஏன் தடுத்துக்கொள்ளக்கூடாது? இடியேவிழாமல் அவர் ஏன் தடுக்கக்கூடாது? அதவா அவர் காந்தத்தைக்கொண்டு தடுக்கும்போதும் சிலசமயங்களில் அவர்க்கு அது கூடிவராததென்னை? அவர் நடுவழியில் போம்போது அவர் தலையி லிடிவிழுந்தால் என் செய்வார்? அவர் சாமர்த்தியம் கொஞ்சம் வெளிப்படட்டும் பார்ப்போம். இப்படியே, அவர் பேதிகண்டகாலத்து மருந்துண்பதெற்றுக்கு? மருந்தின்றியே அதையேன் தடுத்துக்கொள்ளக்கூடாது? நோயே யுண்டாகாதிருக்க ஏன் செய்துகொள்ளக் கூடாது? அவர்க்கு நடுவழியில் பேதிகண்டால் என்செய்வார்? மருந்துண்டும் அவர் சாவதென்னை? எங்கே அவர்திறம் வெளியாகட்டும் பார்ப்போம். இனிப் பெசலடிக்கிறபோது அவர்க்குப் பராமிடர் என்னுங்கருவியேதுக்கு? அக்கருவியின்றியே அதை ஏன் அறிந்துகொள்ளக் கூடாது? பெசலேபெ அடிக்கவொட்டாது ஏன் தடுக்கக்கூடாது? அதில் தப்பிப்பிழைக்கலாமென்று கப்பலைக் கடத்திக்கொண்டு செல்லுகையில் நடுவழியில் கப்பல் உடைந்தா லென்செய்வார்? எங்கே அவர் தலை நீட்டட்டும் பார்ப்போம். அன்றியும், அன்னகாலங்களில் அவர் குப் பித்தேறியிருந்தா லென்செய்வார்? அவர்க்குக் கண்கெட்டிருந்தா லென்செய்வார்? அவர்க்குக் காதுகேளாதிருந்தா லென்செய்வார்? அவர்க்கு வாயடைத்திருந்தா லென்செய்வார்? அவர்க்குக் கையுங்காலு முடமாயிருப்பி னென்செய்வார்? அறியவும், காணவும், கேட்கவும், பேசவும், பற்றவும், நடக்கவுமாகிய வியக்கங்களின்றி யொருசாதனமு மவர்க்குண்டாகாதே! அவர்க்குப்பித்தும், குருடும், செவிடும், கைகால் முடமுமாயின் மேல்வி

பந்துக்களில் அவர் எப்படித் தப்புவார்? யோசித்துச் சொல்லட்டும் பார்ப்போம். பிறர் தடுத்தன ரெனின், அவரும் அப்படியாயின் என்செய்வார்? ஆகவே, அவரவர் கன்மத்தளவாய்த் தனுகரண புவனபோகங்களை மாயையிலேநின்றுங் காரியப்படுத்தி அவராணவ பாச மறும்பொருட்டுப் பெருமான் செய்யுமுறைமை யின்னபடித்தென் றன்னவன் பொன்னடிக் கன்புசெலுத்தி அறிந்து பிழைப்பார்களாக. நம்பரமசிவன் செயல்யாவும் உயிர்கள்பொருட்டேயாதலால் அவரவர் கன்மத்தளவா யொன்றைச் செய்தலும், மீண்டும் அதனைத் தவிர்த்தலும், அவர் கடமையாதலறிக. ஆகவே, அவர்செயல் நம் கன்மத்துக் கேற்ப அவரால் தடுக்கப்படுமேயன்றி மற்றெம்மாலும், பிறராலும், யாராலுந் தடுக்க முடியாது! முடியாது!!

இப்படியே, அந்நாத்திகப்பாலிசர் வினவித்திரியும் வினாக்களைச்சற்று விசாரிப்பாம். உலகத்தைக் கடவுளுண்டாக்கினு ரென்றால், அக்கடவுளை யுண்டாக்கினவர்யாவர்? அவரை யுண்டாக்கினவர் யாவர்? என்றின்னபரியாசம் பேசுவார்கள். இருட்டறையிற் கிடக்கும் பொருள்களைக் கண்களுக்குக் காட்டுவது ஒளியேயாக, அவ்வொளியைக் காட்டுவது வேறெங்க வொளியாக அவர் கண்டார்களோ அறியேம். தீபத்தைக் கொண்டு தீபத்தைத்தேடுவது அமையாமைபோல் கடவுளை மற்றொருகடவுள் உண்டாக்குதல் அமையாதெனவறிக. கடவுள் உலகத்தை யுண்டாக்கினமை தான் நிமித்தனுயிருந்தாகையால் தீபதிட்டாந்தம் எப்படிப் பொருந்தும்? மாயையிலே நின்றும் உலகத்தைக் கடவுள் காரியப் படுத்தியது போலத் தீபம் எதிலே நின்றும் எதனைக் காரியப் படுத்திற்று? எனின், அப்பொருள்கள் புலப்படாமையினின்றும் புலப்பாட்டைக் காரியப்படுத்தினமைகாண்க. அன்றியும், அசேதனமாகிய மாயையே யுலகமாகக்காரியப்பாட்டை யடையுமன்றிச் சேதனமாகிய ஆன்மாவாவது, கடவுளாவது காரியப்பாட்டை யொன்று லடையாதெனவறிக. இவ்வுண்மை விசாரமின்றி வீணே வினவித்திரிவது பாலிசவிகார மென்க. இவர் வாயடங்கும் பொருட்டுப் பின்வினாக்களை நம்மவர் கேட்கக்கடவர். உலகம் சுபாவமா யொருவரா லுண்டாக்கப்படாது தானே யுளதெனின், அது எங்கே யுள்ளது? மண், சலம், தீ, காற்று என்னும் நான்கும் ஒன்றிலொன்று பெரியதாய், ஒன்றுமற்றொன்றுக் கிடங்கொடுத்திருப்பதுபோல் நாலாவது பூதமாகிய காற்றுக் கிடங்கொடுத்திருப்பது எது? என்று கேட்கில் அவர்தரும்விடை

யாது? ஆகாயம் அவர்க்குக் காட்சியாகாமையால் அதையுடன் பாடாகக் கொள்ளார். அதனுண்மையை மீண்டுவிரிப்பாம். (ஆகாயமு ங்காலும் போலவசைற்ற, தேகாண்பரிபூரணம்) என்னும் பிரமாணத்தால் ஆன்மாவுக்குண்டாகிய பெத்த முத்திகளி னிலக்கணம் வெளிப்பட் டது. ஆகாசத்தி லடங்கியிராது காற்றுவீசப் பெற்றபோது பெத்த த்துக்கும், அவ்வாகாசத்தில் அடங்கி நின்றபோது முத்திக்கும் உ வமிக்கப்பட்டது. இதனால் காற்றுக்கு வேறாய், வியாபகமாயுள்ள தொருபொருள் ஆகாயமென்னும் பெயர்த்தா யுள்ளதென்னு முண்மை வெளிப்பட்டது. அவ்வாகாயம் உளதென்பதை யின்னும் பரியாலோசிப்பாம். புழுக்கமான வோரறையில் விசிறிகொண்டு விசிறுகையில் காற்று வெளியாகின்றது. அந்தக்காற்று எங்கிருந்து ண்டாயிற்று என்று யோசித்தால் அது வெளிப்படுவதற்கு முன்ன ரடங்கியிருந்த தானம் ஏர்ப்படவேண்டி யிருக்கிறது. அது ஒன்றினு மடங்கி யிருந்த தில்லையெனின், விசிறுவதற்கு முன் அதற்கிருப்பி டமெங்கே? விசிறியினின்று மேதாவதுமுளைத்ததா? அது தானே யிருந்ததெனின், ஏன் வீசாமலிருந்தது? வீசாமலிருத்தலும் அ தற்குச் சுபாவமெனின், காற்றுக்குச் சலனமும், நிர்ச்சலனமும், சுபாவமென்று சொல்லவரும். அப்போது, நெருப்புக்கும் அப்படி யே வெம்மையுந் தண்மையுஞ் சுபாவமென்று சொல்லவரும். இன் னதோஷம் சம்பவிப்பதால் பிரத்தியட்ச விரோதத்தை யபேட்சித் த அந்தத்துர்வாதம் நிரஸ்தமாம். உண்மை விசாரத்தில் அது வெ ளியாவதற்கு முன்னரடங்கியிருந்த தானமேர்ப்பட வேண்டியிருத் தலால் அதுவே ஆகாயம் என்னும் பெயர்த்தாய் விளங்கும். அடங் கியிருந்தபோது சலன மின்மையும், வெளிப்பட்டபோது சலனமு ம் அதற்குண்டான தன்மையால், அதைச்சலிக்க வொட்டாது த ன்னிலடக்கி வைத்தும், வெளிப்படுத்தியும் பிரகாசிக்கும் ஓர்பொரு ள் வியாப்பியமாகிய அக்காற்றுக்கு வேறாய் வியாபகமா யுளதென வெளிப்பட்டது. ஆகவே, அந்த ஆகாயம் எங்கே தங்கியிருக்கின்ற து? என்னும் வினாநிகழும். இப்படியே வினாக்கள் முடிவுபெறாது நிகழுமாகையால் அவைகட்கு அப்பேயர்கள் என்னவிடை தரு வார்கள்? ஆத்திகராகிய யாமோவெனின், கடவுளிடம் முடித்து அவர் சேதனராதலைக் காட்டி அவர் தங்குவதற்குத் தானம் வேண் டாமையை நிரூபித்தல் அமைவுடைத்தாம். இந்த நியாயப்படியே எல்லாவற்றையு முண்டு பண்ணும் அவரை யுண்டு பண்ணுதற்கு

வேறொருகடவுள் வேண்டியதில்லை யென்னுமுண்மை வெளிப்பட்டது. எல்லாவற்றையுந் தாங்கும் அவரைத் தாங்குவதற்கும், எல்லாவற்றையும் ஆக்கும் அவரை யாக்குவதற்கும், எல்லாவற்றையுங் காக்கும் அவரைக் காப்பதற்கும் எல்லாவற்றையு மழிக்கும் அவரை யழிப்பதற்கும் வேறுகடவு ளில்லாமையால், அவராக்கப்படாதவரெனவும், காக்கப்படாதவரெனவும் நிச்சயிக்கப்பட்டது. இவ்வுண்மையறியாது பாலிசச் சேட்டையால் வெந்ததைத்தின்று வந்ததைப்பேசித் திரிதல் அசப்பியமாதல் காண்க.

இனி அவ்வாபாசகரை நாத்திகர் என்று நம்மவர் கூறுவது அவர்க்குப் பரிபவமாய்க் காண்டலால், அந்தப்பெயரை யொழித்துக் கொள்ள அவர் வழிதேடுகின்றனர். எங்ஙனமெனின், நாத்தி என்பதற்கு இல்லை அல்ல என்னும் பொருள்களுண்டெனவும், அவ்விரண்டில் அல்ல என்னும் பொருளே தாமுரிமையாய்க் கொண்டு ஆத்திகர்கூறு மொவ்வொன்றையும் அல்ல அல்லவென்று மறுத்து வருவதெனவும், அதனால் இல்லையென்னும் பொருளை யவலம்பிக்கும் வாதம் தமக்கேலாத தெனவும் இந்திரசாலவித்தை காட்டுகின்றனர். அல்ல அல்லவென்று மறுப்பதுகொண்டே அப்பொருளையுடைய நாத்திகர் என்னும்பட்டம் அவர்க்குண்டாவதெப்படி? அன்னோர் கூறுவதை அல்ல அல்லவென்று மறுக்கும் ஆத்திகர்க்கு அப்பெயர் வராததென்னை? நாத்தியென்னுஞ் சொல்லுக்கு அல்ல என்னும் பொருளுண்மையே அவர் சமய வுடன்பாடாதலுக்குப் பிரமாணமென்னை? அவர் சமயப்பிரவர்த்தகருள் பூர்வத்தில் இவ்வபிப்பிராயத்தைக் காட்டினவரொருவருமில்லாமையால் நவீனபாண்டித்ய பிரகடனமாகி யுல்லங்கனப்பட்டழியும். பூர்வப்பிரமாணம் எமக்கு வேண்டியதில்லை யாம் கூறுவதே பிரமாணம் எனின், வேண்டாதபோது இல்லை அல்ல என்னும் பொருள்கள் நாத்தி என்னுஞ் சொல்லுக்கு உண்டென்று பிரமாணத்தையே தழுவிக்கூறியதென்னை? அவரிட்டப்படி வேறு பொருளேதாவது என் கூறலாகாது? (காத்திகப்புல்லர்சோணைசையிற்பட்டுழல்) என்றுகூறும் ஆன்றோர் வழக்குடைமையால், அதைப் பரிகரித்துக்கொள்ள முயலல் கூடிவராதகாரியமாம். ஆகவே, (மதியிலாதவனே) என்று ஒருவன் மற்றொருவனை வைதால் அதனாலுண்டாகும் அவமான பரிகாரமாய்,என்னைப் புத்தியிற் சூரியனென்பதாக்கும் அவர் கருத்தென்று வியக்குமொ

ருவனையே யொத்தவராயினர். மதியிலாதவன் என்பதற்குச் சூரியனையொத்த புத்திமான் என்னும் பொருள் பாராட்டி மதியுடையார் பலரும் யாம் மதியிலாதவர் என்று வெளிப்படுவார்களா? நாத்தியென்னுஞ் சொல்லுக்கு அல்ல என்னும் பொருள் பாராட்டி ஆத்திகர்பலரும் யாம் நாத்திகர் என்று வெளிப்படுவார்களா? மதியில்லாதவனே தனக்குண்டாகிய அவமானபரிகாரமாய் அவ்வாறுகூறி மகிழ்வன். அப்படியே இல்லையென்னும் பொருளைக்கொள்ளும் நாத்திகனே தன்னுடைய தோஷபரிகாரமாய் அவ்வாறு கூறிமகிழ்வன். நாத்தி என்னும் சொல்லுக்கு அல்லவென்னும் பொருளே சமயவழக்கிற் பட்டதுண்மையாயின், எல்லாச் சமயங்களும் நாத்திகங்களாய் முடியும். யாவரும் ஒருவரையொருவர் அல்ல அல்ல என்று மறுத்துவருமுண்மையால். அல்ல அல்ல வென்றொருவர் கூறுவதை மற்றொருவர் மறுத்துத் தங்கள் தங்கள் சித்தாந்தங்களை நிறுத்துவதால், சைவர், ஸ்மார்த்தர், வைணவர் என்னும் பட்டப்பெயர்களுடன்வெளிப்படல்போல், பிறமதங்களை அல்ல அல்ல என்று மறுத்துப் பின்னர் அவர் நிறுத்துஞ் சித்தாந்தத்தால் அவர்க்கு வழங்கற்பாலதாகிய பட்டப்பெயர் யாது? அதற்குப் பிரமாணமென்னை? எமக்கொரு கொள்கையுமின்று, பிறரை அல்லவென்று மறுப்பதே யெங்கொள்கையெனின், அப்போது கடவுளில்லை, ஆன்மாவில்லை, என்பவரைமாத்திரம் அவர்மறுக்காததென்னை? அதுவே அவர்கொள்கையாகவும் அவர் விவகரித்து வருவதென்னை? கடவுளுண்டு, ஆன்மாவுண்டு, கன்மமுண்டு என்னும் ஆத்திகமார்க்கங்களை விரோதித்து அவற்றை யில்லையென்று நாட்டுவதற்கு முயல்கின்ற வக்கீல்களாய் அவர்திரியக்காண்டலின், இல்லை என்னும் பொருளைத்தரும் நாத்திகர் அவர் ஏன் ஆகமாட்டார்? அல்ல அல்ல என்று மறுப்பதேயன்றி வேறு ஒருகொள்கையினுஞ் சாராதுநிற்பின், இல்லையென்னும் பொருள் அவர் தலையிலேறி அவர் நாத்திகராகமாட்டார். அல்லவென்று மறுத்தல் கொண்டும் நாத்திகராகமாட்டார். அவர் அல்ல அல்ல வென்று மறுத்துவருங்கால், உண்மைப்பொருள் தடத்தத்தில் அவர் மறுப்பு மறுக்கப்பட்டு அவர் குணப்பட்டுய்ய விடமுண்டாமாகையால், அவர்களை யுண்மை விசாரஞ்செய்யும் பரிபாகிகளென்று மேலோர் பலருங்கருதி மகிழ்வர். இப்படிக்கன்றி வாயில் வந்தபடிக்கெல்லாம் பேசித்திரிவது கேவலம் அறியாமையென்க.

இன்ன வாபாசசூளாமணிகள் கடவுள் செயலைப் பிரத்யக்ஷமாய்க் கண்டாலொழிய அவரிருப்பை அங்கீகரிப்பதில்லையென வாய்வம்பாடக் கற்றாரேயன்றி அன்னோர் கொள்கையின் முடிபையாவது அவர் பிரத்யக்ஷமாகக் காண்பதுண்டோவென்னு மாசங்கைக்குத் திருப்திகூற வகையறியாது மயங்கியே நிற்பர். என்னெனின், கடவுளொருவ ருண்டென்பதை அவருடைய சிருட்டியால் அறியத்தக்கது என்னும் நம்மவரைநோக்கி அவர் சிருட்டிக்கப் பார்த்தவர்யாவர்? பார்த்துவந்து சொல்லக் கேட்டவர் யாவர்? பார்த்தவருங் கேட்டவரு மில்லாமையாலும், வீடு முதலியவற்றை யுண்டுபண்ணுவாரைப் பார்த்தலும், பார்த்தவர் சொல்லக் கேட்டலுங் கூடுமாகையாலும், வீட்டைக்கட்டின ஒருவனுண்டென நிச்சயித்தல்போல், உலகத்தை யுண்டுபண்ணினவ னொருவ னுண்டெனக்கூறுதல் பிழையென்று பிதற்றாநிற்பர். கடவுள் சிருட்டித்ததைக் காட்டு என்று தடுமாறுகின்ற வன்னோர் தங்கொள்கையின்படிப் பூதங்களொன்றோடொன்று சேர்ந்து ஒருபொருளுண்டாகுங் காட்சியையாவது தாம்கண்டார்களா? பிறர்க்குக் காட்டுவார்களா? ஆலம்வித் தொன்றினின்றும் சாகோபசாகங்களாய்க் காரியப்படும் விருட்சமானது அங்குரத்தினின்றும் தளிர், இலை, அரும்பு, மலர், காய், கனி முதலிய வங்கங்களோடு விர்த்தியடையுங்கால் எந்தெந்தப் பூதங்களில் எவ்வளவெவ்வளவு கூறுகள் சேர்ந்து முறையே, அன்ன வேறுபாடுகளான வுருவங்க ளுண்டாகக்கண்டார்கள்? எந்தெந்தப் பூதங்களில் எவ்வளவெவ்வளவு கூறுகள் குறைந்ததனாலாவது அதிகப்பட்டதனாலாவது அன்னவேறுபாடுகள் கருகிப்போதலும், உதிர்ந்துபோதலும், பின்னமாய்ப் போதலுமாகிய தன்மையைக் கண்டார்கள்? செம்மை, வெண்மை, கருமை, பசுமை, புகைமை முதலிய வர்ணபேதங்களும், கார்ப்பு, உவர்ப்பு கைப்பு, இனிப்பு, புளிப்பு துவர்ப்பு முதலிய ரசபேதங்களும், மனிதர், ஆடு, மாடு, குதிரை, கழுதை, நாய், பன்றி, புறவு, ஆந்தை, குயில், காகம், அன்றில், தேள், பாம்பு, அட்டை, புழு, ஈ, எறும்பு, கொசுகு, மூடுமுதலிய வுயிர்ப்பேதங்களும், அவற்றுள் ஆண், பெண், அலி என்னும் இலிங்க பேதங்களும், அத்தி, பலா, மா, கமுகு, பனை, தெங்கு, புன்னை முதலிய விருட்சபேதங்களும், கதிர், மதி, உடுமுதலிய ஒளிப்பேதங்களும், இன்னு மநந்தமாயுள்ள நானாவிசித்திர தரமான சிருட்டிபேதங்களும் எந்தெந்த பூதங்களில் எவ்வளவெவ்வளவு கூறுகள் தாமே சேரவுதிக்கக் கண்டார்கள்? பசி, தாகம், நித்திரை, பயம்,

லஜ்ஜை, கோபம், சாந்தம், முதலாகிய பற்பல பேதங்களு முண்டாகும் விதம் எப்படியாகப் புகுந்து பார்த்தார்கள்? மேற்கூறிய இருட்டி வேறுபாடுகளில் ஏதாவதொன்றைக் கண்டுபிடித் துரைப்பாருளரேல் வெளிவரட்டும் பார்ப்போம். இதனால், கடவுள் உலகம் படைக்கையில் யாரும் பாராமையால் அதுகொள்ளத்தக்க தன்றெனக் கோணிக் கூறியது குதர்க்க மாயினமைகாண்க. ஆகவே, யாவும் சடமாகுந்தன்மையால், சடங்கள் தாமே தொழிற்படாத வுண்மையால், அவற்றைக் காரியப்படுத்திய சித்தாயிருப்பா னொருவனுளா னென்பது பசுமரத் தாணிபறைந்தாலென்ன நாட்டப்பட்டது.

பூதங்கள் நான்கும் சடமாகையால் அவைகட்கு அறிவுடைமை கூறாத தொன்றேயன்றி யியக்கங்கூறாமை யாண்டமையும்? அவைகளில் காற்று ஒன்றின் பிரேரணையின்றித் தானே சரித்தல்லாலெனின், இது தோஷ கிரஹணமென்பதை விளக்குதும். அறிவில்லாத பொருள் தானேயசையு மநுபவம் உலகிலுண்டா? ஒருபொருளுமில்லையாகக் காற்றுமாத்திர மசையுமென்பதென்னை? இது உலகம் தானேயுளது என்பது போல்வ தொன்றேயாம். உலகம் கடவுள் உண்டாக்கினால் உண்டாகுந் தன்மையேபோல் காற்று அவரசைவித்தாலசையுந் தன்மைத்தேயாம். ஒருபொருளும் அவரையன்றி யசையாதென்பது சத்தியமாகையால். யாவுஞ்சடமும் அவர் சித்துமாகுமுண்மையால். (அடிக்கின்றகாற்றேரி யாராலேதான் பேராதேசுழல்கின்றுயென்பேன்) எனவும், (அவனன்றியோரணுவு மசையாது) எனவும் போந்த ஆன்றோரநுபவ வுரையானுந் தெளிந்திடுக. இதனால் உலகம் சுற்றிவருகிறது என்பதும் சுற்றிவரச் செய்வானொரு முதலை யபேக்ஷித் திருத்தலாலென்பது தெளியத் தக்கதாம். உலகம், சித்தும், அசித்துமாகிய விருபகுதியுடைத் தாகையால், அவற்றுள் சித்து அறிவித்தாலறியவும், அசித்து அசைவித்தாலசையவும் விளங்குந் தன்மையினவாம். சேதனத்தை அறிவிக்கவும், அசேதனத்தை யசைவிக்கவும் வல்லபெரியோன் ஞானக்கிரியாஸ்வரூபனாய் விளங்குந்தன்மை யுண்மையால், அவனுடைய ஞானக்கிரியைகளையன்றி ஒருபொருளும் தானேஅறியவும், அசையவுங் கூடாத பண்பால், அறிவில்லாத சடமாகியகாற்று தானே வீசுகிறது என்பது சர்வாபத்தமெனவறிக. சேதனனுக்கு அறியுந் தன்மையாகிய ஞானமும், அசேதனத்துக்கு அசையுந் தன்மையாகிய கிரியையும் உரிய

சத்திகளாயினும், ஒற்றெழுத்துகள் உயிரொலியையன்றித் தலைகாட்டாவாறுபோல் சிவனுடைய ஞானக்கிரியைகளியக்குவித்தாலன்றித் தாமே யியங்கப்பெறா வெனவறிக.

இனி யிவ்வந்தசிரோமணிகள் கூறும் அசந்மார்க்கத்தை உயிர்கள் மயங்கிக் கெடாதவழி நம்மாசாரியர்கள் எடுத்துக்காட்டிக் கண்டித்திருக்குமுண்மையை யீண்டு வெளிப்படுத்துவாம்.

"இந்திரபுரோகிதனியம்புமொரு நூலின்
தந்திரமெனு மறிவினொடருளிலாமல்
சந்தனபுயத்துமண மாலைகடயங்க
வுந்தியுலகத்து ளுலகாயதனுரைப்பான்."

இ-ள். தேவராஜனாகிய இந்திரனுக்குப் புரோகிதராகிய பிரகஸ்பதிபகவான் அவனைமயக்கும் பொருட்டுக் கூறிய நூலினுடைய தந்திர மென்றறியாமல், அப்படியறிவதற்குமேலானஞானமும், திருவருளுங் கைகூடாமையால், சந்தனம்பூசிய தோளினிடத்து வாசனையுடைய மாலைகள்தூங்க வுலகத்தில் வெளிப்பட்டு உலகாயதன் அதனையே மெய்யென்று மயங்கிக் கூறுநிற்பன். எ-று.

தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் மயக்கத்தைத்தரும் அந்நூலையேன் கூறினரெனின், நூறு அசுவமேதஞ் செய்பவர் இந்திரபட்டத்துக்குவருவர் என்பது பிரமாணமாகையால், அப்படி இந்திரபட்டத்தை யடைந்தவர்க்கு அவர்கள்செய்த அசுவமேதங்களால் அடையத்தக்க பயனெதுவோ, அதனின்மேலிட்ட பயனையடைவது மேலிட்ட புண்ணியமில்லாமையால் கூடாமையால்,அன்னபுண்ணிய மில்லாத வவ்விந்திரர்க்கு அப்புண்ணிய முடையவர்க்கே யெய்தற்பாலதாகிய பதிஞானம் சித்திக்க விடம்பெறாமைநோக்கி, அவர் பரிபாகத்துக்கேற்ப அவரடைதற்குரிய போகநுகர்ச்சியையே வற்புறுத்தி யுணர்த்தினமைகாண்க. அவர்புண்ணியம் அதற்குமேலிட்ட சித்தியை யடையுமாறு வழிவிடாத வுண்மையால். தேகமே ஆத்மா, போகமேமோக்ஷம் என்னும் ஞானமே ஆண்டுணர்த்தற்பாலதாயிற்று. அதற்குமேல் ஆன்மாவென்றுவது, கடவுளென்றுவது வேறுபொருள்க ளுண்டெனக்கூறின், அவ்வான்மா எக்காலத்துள்ளது ? என்ன விலக்கண முடையது ? அதற்கு இத்தேகம் எப்படிவந்தது ? ஏன்வந்தது ? யாவர் கொடுத்தனர் ? அவரிலக்கண மென்

னே ? அவரென்றுள்ளவர் ? அவருக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தம் யாது ? அவரால் ஆன்மாவடையும் பயன்யாது ? ஆன்மாவுக்கு ஒருகாரியத்தை அவர் ஏன் செய்கின்றனர் ? அதற்கு ஆவசிகமென்னே ? அவர்செய்யாக்கால் ஆன்மாவுக்குண்டாகும் நஷ்டம் யாது ? அவரப்படிச் செய்வதனுல் அவருக் குண்டாகும் லாபம் யாது ? என்றின்ன விசாரம் பிறக்க விடமுண்டா மாகையால், அப்படி விசாரிக்கையில் உண்மைஞானம் கைவரப்பெறு மாகையால், அப்படி அது சித்திக்கையில் முத்திகைவல்ய மாகுமாகையால், அப்படிப்பட்ட சத்திநிபாதத்தைப் பயப்பதாகிய பதிபுண்ணியம் அவ்விந்திரர்க்குக் கிட்டப்பெறாதபோது கேவலம் சாமானியதாமாகிய பசுபுண்ணிய பத்தராயுள்ள வைர்க்கு அவரதிகா ராறுகுணமாகவே, அவர் செய்துள்ள புண்ணியத்துக் கிடான போகத்தை யநுபவித்துத் தொலைக்கச் செய்யவேண்டிய நிமித்தமே அவ்வாசாரியர் பரிமித கருணையால் அவர்க்கு அவ்வுபதேசத்தைச் செய்வதெனவறிக. அப்படிக்குபதேசியாது பதிஞானத்தை யுணர்த்தப் புகுவரேல், அதில் அபிருசிமேலிட்டுச் சொர்க்கபோகத்தில் வெறுப்புண்டாகி அதை நுகருந்தன்மையி லிழுக்குண்டாமாகையால் அது செய்யாராயினர். இவ்வுண்மையை அருச்சுனற்குக் கண்ணன் கீதையுபதேசித்ததோ டொக்குமென்று நம்மபெரியோர் கூறியிருக்கின்றனர். உலகாயதனைப் போலவே புண்ணியபாவங்களும், சொர்க்கநரகங்களும், சீவபரங்களும், பூசை, ஹோமம், ஜபம், தியானமுதலிய கன்மங்களும் பாரமார்த்தத்தில் பொய்ப்பொருள்களென்று அந்தக்கீதையிற் கூறப்பட்டிருக்குமுண்மையால். (விவகாரத்தில் வேண்டுது மூலகம், பரமார்த்தத்திற்பகாம்) என்பது அவர் கோளாத லுண்மையாகையால். இருதிறத்தவர்க்கும் முடிபொரு ளொத்திருத்தலால் அவ்விருவரும் நாத்திகராதலி லிழுக்கென்னே ? நாத்திகராதல் நோக்கியே இருவரையுஞ்சேர்த்து நம்மாசாரியர் ஸ்ரீவாசகத்தில் கடிந்திருத்தல் காண்க. மாயாவாதிகளாவார் கடவுளொருவருள ரெனவும், அவரேநாம் எனவுங் கூறுகையில், நம்மையன்றிக் கடவுளென்னு மொருமுதலில்லை யென்னுஞானத்தை நாட்டலால் கடவுளுக்கபாவமும், நாம் என்னுஞ் சீவப்பொருள் கடவுளிடத்து அத்தியாச மாத்திர மென்கையால் சீவனுக் கபாவமுமுண்டாதல் திண்ணமாகிக் கடவுளை நோக்கச்சீவனும், சீவனைநோக்கக் கடவுளு மில்பொருள்களாய் நிச்சயிக்கப்படுந் துணிவால் கடவுளையும், சீவனையு மில்பொருள்களாகத் துணிந்தவோ யர்க்கும் அது

என்று ஏற்படுகையால், அவ்விரு பொருள்களையும் முதலேயில்லையென்று கூறித்திரியும் உலகாயதத்தோடு ஏன் அது ஒத்ததாகாது? இரண்டுமொன்றே யாதல் திண்ணம்! திண்ணம்!! நாத்திக மார்க்கமொன்றே வேறு வேறு பிராகாரங்களா யுலகிற்பரவிப் பாவிகள் சேரும் படுகுழிகளாகப் பிரகாசித் திருக்கின்றன. சமணம், பௌத்தம், சாங்கியம் முதலிய யாவும் நாத்திகங்களேயாத லுண்மை யாகையால்.

இந்த விசாரத்தால், மேல்மதங்களை விளக்கவந்தது கொண்டே பிருகஸ்பதியும், கண்ணனும் முறையே உலகாயதனும், மாயாவாதியுமாத லமையாதென்க. அன்றேர் சிவபாதபக்தியிற்சிறந்த சீமான்களாத லுண்மையாகையால். சூதசம்ஹிதையில் வியாழபகவானுக்கு முத்திகாண்டத்தையும், சைவபுராணம், மஹாபாரத முதலியவற்றில் கண்ணனுக்குப் பாசுபதாநுட்டான மந்திரத்தையும் உபதேசித்ததாகக் கூறப்பட்டிருக்கும் பிரமாணம் பிரத்யட்ச கடிதமாகுந் தன்மையால். அன்றேர் வேறு சித்தாந்தங்களை யுணர்த்தினமை அவ்வச்சித்தாந்தங்களுக்கு அநுக்கிரஹாகமெனவறிக. வேதத்திலும் அநுக்ரஹாகமாகப் பல்வேறு சித்தாந்தங்கள் உணர்த்தப்பட்டிருத்தல் நிதரிசனமாத லுண்மையாகையால். அப்படியுணர்த்தினமை கொண்டு வேதத்துக்குத் தோஷமுண்டாகாவாறுபோல் அவ்வேதத்தைப்போலவே அவ்வேதார்த்தங்களை அதிகாரிகளை நோக்கி யநுக்கிரஹித்தருளிய பிருஹஸ்பதி, கிருஷ்ணர் முதலியோர்க்குந் தோஷமுண்டாகாமையைத் தெளிந்திடற் பாலதென்க. இப்படி விசாரித்தறியும் புண்ணிய மெய்தப்பெற்றவர் அவ்வாபாச நூற்களை மெய்யென மயங்கிக் கெடாராகையால், நம்மவர் யாவரும் இவற்றைநன்கு சீர்தூக்கிக் கெடாதவழி அதனுபாசத்தை யின்னும் விசாரித்துத் தெளிவுபெறக் கூறுநிற்பாம்.

அவ்வுலகாயதன் பூதங்கள் நான்கன்றி வேறுபொருளுண்டாக வங்கீகரியாதபோது அவை யொன்றேடொன்று புணர்தலே சிருட்டியென்று கொண்ட அவனேழை மதியைச் சற்றே பரியாலோசிப்பாம். முதல், அந்நான்கு பூதங்களுஞ் சடமாத லுண்மையாகையால், அவை யொன்றேடொன்று புணருமென்பது பொய்யா யொழிந்தது. காற்றுக்குரிய சலனமுஞ் சேட்டிப்பித்தாலன்றிப் பயன்படாத லுண்மையை மேல்விவகரித்து முடித்தோமாகையால் அறிவில்லாத

னவாகிய பொருள்கள் தாமே யொன்றோடொன்று சேர்ந்தியங்கு மென்று கூறுந்தார்வாதம் நிரசிக்கப் பட்டது.

"ஒருவனேடொருத்தியொன்றென்றுரைத்திடுமுலகமெல்லாம்
வருமுறைவந்துநின்று போவதுமாதலாலே
தருபவனொருவன்வேண்டுந் தான்முதலீறுமாகி
மருவிமொனாதிமுத்த சித்துருமன்னிநின்றே."

என்னுந்திருவாக்கால் அவன் அவள் அது என்று சுட்டப்படும் பிரபஞ்சமெல்லாம் உபாதானத்தினின்று மலவேதுவாற்றோன்று முறையானே தோன்றி, நிற்கு முறையானே நின்று, ஒடுங்குமுறையானே யொடுங்குவதுமாகிய காரியமாயிருத்தலின் அநாதி முத்தத்துவத்தையும், சித்ரூபத்தையும் பொருந்திநின்று சிருட்டிப்பவனும், சங்கரிப்பவனுந தானேயாகித் தருமவனொருவன் வேண்டும் என்று பெறப்பட்டது.

இதையினிது பரியாலோசிக்கில், "ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் பிரபஞ்சமானது ஒருகர்த்தாவை யுடையது: தோன்றி நின்றழியுங் காரியமாதலின். எங்ஙனம், கடம்போல் அஃதொக்கும், மாதாபிதாக்கள் காரணமெனின், அன்னோர் புத்திரோற்பத்தி வேண்டியகாலத்து உண்டாகாமையினாலும், வேண்டாதகாலத்து உண்டாதலாலும், ஆணிச்சிக்கப் பெண்ணாகுதலாலும், பெண்ணிச்சிக்க ஆணாகுதலாலும், இருவகை யிச்சையும் அன்றியில் அலியாயும், குரூபியாயுந் தோன்றுதலாலும், உற்பத்தி ஆனதும் ஆகாததும் உடனே உணரப்படாமையினாலும், ஒருவர் பண்ணக் காணதிருக்கவும் மாதாவுதரத்தில் மாதங்கடோறும் உருவாய் வளர்ந்து கருப்பாசயமுதலிய துன்பங்களுக்கு இறவாது இங்ஙனந் தோன்றுதலாலும், கடோற்பத்திக்குத் தண்டசக்கராதிகள்போல் மாதாபிதாக்கள் சுதந்தர மின்மையாலும், அஃதன்றியும், உற்பிஜத் தோற்றங்கள் மாதா பிதாக்கள் சையோகமின்றியே வித்துக்காரணமாக உண்டாகையினாலும், அன்னோர் காரணமென்பது கூடாது. அஃதொக்கும், சுக்கிலம் காரணமாய்த் தேகங்களுண்டாதலின் உத்தரோத்தர சரீரங்களுக்குப் பூர்வபீசம் காரணமெனின், பாம்பின்வாயிலே கல்லும், கல்லின்வாயிலே தேரையும், நராதி தேகங்களில் புழு முதலியவைகளும், மரங்களில் தோன்றுங் கிருமிகீடம் புல்லுருவி முதலானவைகளும், காளான் முதலானவைகளும், நிலத்திற் சலத்திற்

றுன்றும் கிருமியாதி வடிவங்களும் ஆகிய சுவேதஜத் தோற்றங்களு க்குப் பூர்வசரீர பீஜம் காரண மல்லாமையால் வித்தே காரணமென் பது கூடாது. சுவேதஜத் தோற்றங்களும் பூபூதராதிப் பிரபஞ்சத் தினின்றும் உற்பவிக்கையால் அவையே சரீரோற்பத்திக்குக் கார ணமெனின், சுவேதஜோற்பத்திக்குச் சராசர வுருவமிரண்டுங் கார ணமாகையினாலும், மற்றுமுள்ள மூவகையோனிகட்கும் அப்பூபூத ராதி காரணமென்கை காணப்படாமையினாலும் அதுகூடாது. அங் ஙனமன்று, ஒருதீபத்தில் ஒருதீபமாகப் பாரம்பரியத்தில் அனேக தீபம் உண்டாயினும் அத்தீபத்தினது தாகசத்தி அக்கினியின்கட் காணப்படுகையால் அதற்குக்காரணம் அக்கினியே யாமாற்போலத் தேககுலங்கள் பூபூதராதிசரத்தில் கிருமி புழுமுதலியவும், அசரத் தில் காளான் முதலியவுங் காணப்படுகையால் அவைகட்குப் பிருதி வியாதி சாதுர்ப்பூதமே காரணமெனின், அப்படித்தோன்றுவித்த தென்கை ஓர்காலத்தும், ஓரிடத்தும், ஒருவராலுங் கண்டோமென் கை கேட்கப் படாமையினாலும், அதுகூடாது. ஆயினும், அங்ஙன மன்று. விளக்கு உண்டாவதற்கு முன்னே அக்கினி விளக்கைத் தோன்றுவிக்கவேண்டுமே யல்லாமல் விளக்கு உண்டானதின்பின்பு அதுவும் இருக்க, வேறொருவிளக்கை அக்னிதோன்றுவிக்க வேண்டு வதில்லை அதுபோல், தேகாதிகள் இல்லாதகாலத்திலே சாதுர்ப்பூதம் தேகத்தைத் தோன்றுவிக்க வேண்டுமே யல்லாமல் இப்பொழுது தோன்றுவியாதெனில், இப்பொழுதும் பிருதிவியாதிகளில் சுவேதஜ வுருவம் தோன்றுகையினாலும், அஃதன்றிக் காஷ்டத்தில் அக்னி யை, அக்னியில் விளக்கை ஒருவன் தோன்றுவித்துப் பின்பு ஒரு வி ளக்கில் ஒருவிளக்கைத் தோன்றுவிப்பதலன்றி காஷ்டத்துக்கும், அக்கினிக்கும், விளக்குக்குந்தானே யொன்றைத் தோன்றுவித்தல் கூடாமைபோல் சராசரப் பிரபஞ்சங்கள் ஜடமாதலின் அவைகளை மாயையினின்றுந் தோன்றுவித்தவன் ஒருகர்த்தா வுண்டெனக் கொள்க." என நம்மபெரியோர் பலர்கூறியிருக்கு முண்மையானு ம், சித்தாயிருப்பா னொருவனையன்றி அசித்தாயுள்ள பிரபஞ்சங் காரியப் படுமென்னுந் துர்வாதந்தொலைந்து போயிற்றென்க.—இ ங்ஙனநிற்க,

"நீரின்வந்தெழுகொப்புளிரது வாயெழுந்திகழ்பூதமு
மோரின்வேறுணர்வா யெழாவவைபூதமாகியுதித்திடும்
தேரினூறண்டகாய் செறிந்தவைசேரவேறு சிவப்பெழும்
பாரினிற்பிரியாதுயுத்திபரிப்புடம்பு கிடக்கவே"

என்னுந் திருவாக்கைப் பரியாலோசிக்கில், நீரினிடத்தே தோன்றுங் குமிழிகள் நீரேயன்றி வேறொரு பொருளாகாத தன்மைபோல் பூதங்களில் தோன்றுங் காரியங்கள் பூதங்கண்மாத்திரமாயமைதல் சாலுமன்றிச் சடத்துவமாகிய பூதத்துக்கு வேறாகிய சித்தாயுதித்த லமைவுடைத்தன்றாம். அன்றியும், சுண்ணாம்பு, வெற்றிலையும், பாக்குமாகிய மூன்றுங் கூடியபோதுண்டாகிய செந்நிறம், அவற்றினின்று நீங்காததுபோல் பூதசையோகத்தாலுண்டாகிய அறிவு அவற்றை நீங்காதிருத்தலைவிட்டுத் தானிருந்த பூததேகத்தைப் பிணமாக்கிவிட்டுப் பறந்தோடிப் போவதெங்ஙனே? என்று வெளிப்படுமுண்மை நியாயங்களால், கேவலம் ஜடமாகிய பூதங்களுக்குப் பாரம்ப நாடலாமென்றெழு போதகிஞானம் நசுக்குண்டதெனவறிக. சாணம் ஜடப்பொருளாகத் துன்மையாம், அதில் சித்தாகிய புழுக்களுடைய தோற்றம் பிரத்தியட்சமாமெனின், ஜடமாகிய சாணத்திலுண்டாகியது புழுவாகிய ஜடதேகமேயன்றி, அத்தேகத்தாரியாகிய ஆன்மசித்தல்லவென் றறிந்துகொள்க. ஆன்மா அத்தேகத்தை யதிட்டித்திருப்பதொன்றென வத்தேகத்துக்கு விஜாதிகமாகிய அறிவுடைமையை நோக்கி வாய்மூடிக் கிடப்பாராக. ஜடமாயுள்ள பொருள்களுள்ளும் நற்காந்தத்திற்பட்டமும், பட்டத்திற்கடமும் பிறவாதெனின், கேவலம் ஜடத்தில் கேவலம் சித்துப்பொருளுதித்தல் யாண்டிசையும்? ஆகவே, அசித்தாயுள்ளமரம், மண்முதலியவற்றைப் பொருருவாக்கி அதில் அறிவு நிகழுந் தன்மையைக் காட்டுவாராயின், அவர் புன்மதம் நன்மதமாம். எதோசற்றே வெளிவரட்டும் பார்ப்போம். இது நிற்க, பாக்கு வெற்றிலை சுண்ணம் இவைகளில் செந்நிறம் நீங்காததுபோல் தேகத்தைவிட்டு அதன்குணமாகிய அறிவு நீங்கினதே கிடையாதெனவும், அத்தேக மியங்குதற் குபகரணமாயுள்ள நரம்பு, மூளை, இரத்தமுதலியன தத்தம் நிலையில் சகிமாறியதுகொண்டு இயக்கங்கெட்டதெனவும், அதை மறுபடியும் பழையபடியாக்க முயலுமிடத்து மறுபடியும் முன்னியக்கம் அத்தேகத்துக் குண்டாகுமெனவும், அப்படிச் செய்யக் கற்றிருந்த போகமே முற்காலத்திற் பெரியோரெனப் பேர்பெற்று இறந்தவரை யெழுப்பினர் எனவும் அவர் புலம்புவர். அன்றியும், அதைத்திட்டாந்தமுகத்து விளக்கவேண்டிச் செம்பிற் களிம்பேறியபோது அதினுடைய பிரகாசமழுங்கியும், அக்களிம்பு நீங்கியபோது முன்போலப் பிரகாசித்துங் காணப்படுந் தன்மையே போதுமானதென்றும் புகலாநிற்பர், இதனை முறையே பரியாலோசிக்கில், பூதக கூட்டுறவிலுண்டா

லைய அறிவு சரீரத்தைவிட்டு நீங்காது அதனிடத்திலேதானே தாதா ன்மியப்பட்டுப் பிரிவறமழுங்கி யிருப்பதும், அப்படி யதிலிருந்து பின்செய்யு முயற்சியால் மறுபடியும் வெளிப்படுவதுஞ் சாத்தியமா னகாரியமாயின் மானிடராய்ப் பிறந்தவர்க்கு இதைக்காட்டிலும் அ றியவும், செய்யவுமான பெருத்தகாரியம் உலகில் வேறொன்றுங் கிடையாதென்பது சத்தியம். ஆகவே, உலகந்தோன்றிய விதுகாறு ம் இந்த வித்தையேன் ஒருவர்க்குங் கைவந்திலது? அநேக விசித் திரதரமான காரியங்களைச் செய்து வெளிக்குக் கொண்டுவந்த வெ ண்ணிறந்த பண்டிதர்கள் மண்ணுக்கிரையாயினரே! ஐயோபாவமே! அவர்களநியாயமாய் மடிந்துபோனது எவ்வளவு பெரியநஷ்டம்? தம்பேரையே சொல்லத்தெரியாத மஹாமூடர்கள் பலர் நிறைந்திரு க்கு மிவ்வுலகில் சூ பண்டிதர்கள் சிலரிருந்தால் போதுமே! அவ ரால் உலகி லெவ்வளவு உபகாரமுண்டாம்? ஐயோ அநியாயமே! அவர்களை மண்ணுண்டுவிட்டதே! அவர்வாயில் மண்விழுந்துவிட் டதே! இப்போது கத்திக் கழிவார்வாயிலும் மண்விழப்போகிறதே! மண்ணைத்தெள்ளிக் கையில் வைத்திருப்பவன் மஹாதேவனென்ப தும் அறியார்களே! சொற்பதர்களாய் வீணே அகங்கரித்து வாய் வம்பாடலொழிந்து, இனியாவது விரைந்து வழிதேட வகையுளதே ல் வாய்திறக்கட்டும் பார்ப்போம். அன்றோர் கூறும் பெரும்பிச்சான னுரை கிளிஞ்சில் வெள்ளிகொண்டு வருவேனெனவும், கானனீர் பரு குவேனெனவும், முயற்கொம்பு முறம்போடுவேனெனவு முரணிக் கூறு மூடர்கூற்றேயாய் முடிதலால் விவேகிகள் சங்கத்தில் அவர் நகைக்க வுடம்படுத்த ஞமலிகளே யாவர். தெய்வத்துக்கு அபாவ ங்கூறுவார் பாவ முதிர்ச்சியிற் பழுத்துப் பக்குவமான வதிகாரிக ளாய்க் கிடைக்கவருவது துர்லபத்தினுந் துர்லபம். அவருள்ளும் ஏ ழைஜனங்கள் மயங்க வெடுத்தெறிந்து வைது வீண் குதர்க்கம்பே சக் கற்றவர் அதினுந் துர்லபம். இவ்வளவு துர்லபத்தில் ஜநித்த அ ரியஜந்மங்கள் இன்றோ நாளையோவென்று போங்காலத்தை யெதிர் பார்த் திருப்பதால் அதை யப்படியாக வொட்டாது தடுத்துக்கொ ண்டு நிலைத்திருக்க வழிதேடிக்கொள்வரேல், இப்போதெடுத்த தங் களுண்மைநிலையை நாட்டி யுலகத்துக்கு உபகரித்து வருதல் கூடு மே! உலகம் பிழைக்க வவதரித்தருளிய செந்நாப்போதர் முதலிய வான்றோரறிவினுந் தம்மறிவு மிக்கதென மதித்துச் செக்குஞ் சிவ லிங்கமுமென வறியாது நக்குநாய்போல வம்முதியோரைப் பழித் துச் சலிகிழிந்து சாக வழிதேடி நடைப்பிணங்க ளடலையிருந்தவா

று அந்தோ கொடிது! கொடிது!! இந்தவிசாரத்தால், சரீரத்தினுடையகுணம் அறிவென்பது அபத்தமெனவும், அவ்வறிவு தேககுணமாகாமையால் அது இறந்ததேகத்தின்கண் மீட்டுமுண்டாகாதெனவும், அப்படியுண்டாகக் காணுமநுபவம் காலத்திரயாபாவ சித்தமாகையால் அநுபவவேத்யமாகாத வோர் சித்தாந்தத்தை நாட்ட முயலல் பிரத்யக்ஷத்தை யபேக்ஷிக்கும நாஸ்திகத்துக்குத் தலைநோயாய் முடியுமெனவும், நமம ஆசாரியாளாயுள்ள ஞானசம்பந்தாதிகள் தெய்வத்தன்மையால் இறநத சரீரங்களில் உயிரை மீட்டும் வருவித்தனரெனவும, அப்படி வருவித்தலும் அவரவர் கன்மமிருந்தபடியாமெனவும் பெறபபட்டது அவ்வாசாரிய நிதிகள் தங்கள் சாமர்த்தியத்தால் மூலிகா பிரயோகங்களால் தேகத்தின் தர்மமாகிய அறிவை யுண்டாக்கினாரயின், அப்படி யிறந்தவரையெல்லாம் ஏன் உண்டாக்கா தொழிந்தனர்கள்? தெய்வத்தன்மையால உயிர்ப்பித்த காலையினும் கன்மம் காரணமாய் நிற்றலால், எல்லாவுயிரையு முயிர்ப்பித்தல் செல்லாதொழிந்தது. இவ்வுண்மையில் அசூயைமேற்கொண்டு சுட்டவெலும்பு பெண்ணுருமாவெனவும், அதைப் பூதசாத்திர பண்டிதர்கள் பொருந்தக்கேளாரெனவும் பொங்கிவழிதல் போங்காலத்துப புத்திநலப்பெருக்காம். சுட்டவெலும்பு ஏன்பெண்ணாகாது? தெய்வம் துணைசெய்யுமானால். அன்றியும், அறிவு அதன்குணமல்லாத வுண்மையால். இது, செத்தபிணங்களை மூலிகாப் பிரயோகத்தா லுயிர்ப்பிக்க என் முடியாதெனவாசாரம்பணங்கூறுந்தான்றோன்றித் தம்பிரான்கள் பித்துரைபோல்வதன்றும். எல்லாமுடையானாகிய பரமன் திருவருள்பெற்று வாழும் எம்மபெருமக்கள் யாதுதான் செய்யவல்லவரகார்? அவரால் யாவும் முடியும்! முடியும்!! கடவுளிச்சையின்படி.

இந்தவிசாரமுடிவால், அசித்தாகிய தேகத்துக்குச் சித்தாகிய அறிவு தாமமாகாத வுண்மைவெளிப்பட்டது. இதனால் தேகத்தின் பிரகாசமாகிய அறிவு, செம்பின்பிரகாசம் களிம்பால மறைக்கப்பட்டதுபோல் அததேகத்தி னியக்கவிகாரத்தா லுண்டாகிய தோஷத்தால மக்னப்படுமென்பது தோஷகிரஸ்தமாய் முடிந்ததெனக. செம்போ ஜடம், களிம்பு நீக்கத்தில் அதிற்காணப்படும ஒளியும் ஜடம். இப்படிக்கன்றி ஜடமாகிய தேகத்திலொளி சித்துப் பொருளாதல் யாண்டிசையும்? செம்பிற் களிம்புநீங்கத் துலக்கி அதன்பிரகாசத்தை வெளிப்படுத்துமாபோல் தேகத்தில் அதன் மாசுதீரப் பிணமா

னகாலத்தில் துலக்கி அதனொளியா யிருப்பது அறிவாயிருக்கக் கண்டவருளரேல் வாய்திறவாமல் மூலையிற் பதுங்குவதேன்? இவ்வரிய விஷயத்தில் வீணே தலையை நுழைத்துவிட்டு அகப்பட்டுக்கொண்டு அவதிப்படுவதெதற்றுக்கு? இன்ன சூக்கும விசாரஞ்செய்ய மதிநுட்பம் போதாத மந்திகள் (வாழவேவல்லவாமி வலக்கைதாவென்னுயிர்க்குத், தோழனீயுன்னையொப்பார் சொல்லிடினில்லைகண்டாய்) என்றபடித் தம்மினத்தவரைத்தழுவி அவர்களிப்பெய்துமாறு தத்தாபித்தாவென்று வாய்க்குவந்தனவெல்லாம் வகையறியாதுகூறித் தம்நாத்திகத்தை நாட்டமுயலுங்கால் குருடனுக்கொளி பகையானாற்போல் நம்ம ஆத்திகபோதத்தில் அசூயைமேற்கொண்டு மேல்விழுந்து வலிந்து வீண்பிரசங்கங்களால் தம்போதத்தைக் காட்டவெழுவர். அப்பேயர்களை முன்னீடாக்கி விவகரிப்பது விவேகிகளுக் கழகன்றாம். குடியனொருவன் குடித்து வெறிகொண்டு தள்ளாடிவிழுந்து வருகையில் அவனை எதிர்த்து நீகுடிப்பது தவறென்று புத்திகூறத் தொடங்குமொருவனுக் குண்டாவ தவமானமேயாம். மற்றையர் குடியில் கெடாதவண்ணம் உரியதோஷங்களை யெடுத்துக் காட்டுதன்மாத்திரமே அவசியமாதல்பெறும். அதுபோல் அந்நாத்திகப்புல்லர் துர்ப்போதங்களான் மயங்கி நம்மவர் கெடாதவண்ணமே நம்மநூல்கள் பலவற்றுள்ளும் பிரவசனம் பண்ணப்பட்டிருப்பதனால், அன்னவாறே யீண்டும் விவகரிப்பதாயிற்று.

இவ்வாபாசகர் (செய்வோரின்றிச செய்வினையின்மையின்) என்னுந் திருவாக்கைச் சிந்தியாது பூதங்கள் தாமே காரியபடாட்டையடைகின்றனவென்று கூறு மலைசிகதாந்த மினைகதென்னுமழகை யின்னும் விளங்கக்காட்டுவாம். மண், சலம், தீ, காற்று என்னும் பூதங்கள் நான்கும் நித்தியமென்று கொண்ட வன்றோர் அவை யொன்றோடொன்று புணர்ந்துண்டாகிய காரியோற்பத்திக் கிரமத்தையும் விளங்கக் கூறுவது அவசியமாம்.

பூதங்கள் நித்தமாய்க் காரியங்களுதிக்கு முபாதான மாத்திரமாயமையுமெனின், அவ்வுபாதான பேதமாகிய பிருதிவி, அப்பு, தேயு, வாயுக்களில் எந்தப்பூதம் முதலிலியங்கிற்று? மேற்போந்தநான்கில், காற்றின் வியாபகசலன சையோகத்தால் மற்றைமூன்றும் தொழிற்பட்டியங்கின வெனின், காற்று என்றுளது, அன்றே அதற்குச் சலனமுளது, என்றுசலனமுளது, அன்றே அது விரவிச்சலிப்ப

தால் மற்றைப் பூதங்க ளியங்குந்தன்மை வெளிப்பட்டது. ஆகவே
சாதுர்ப்பூ தோபாதானத்தினின்றும், அவையுள்ளவன்றே அவற்றி
ற்காரியப்படும் சிருட்டியுண்டானமை பெறப்படுகின்றது. அப்படி
யாயின், அச்சிருட்டியின் கிரமத்தை விசாரிப்ப தவசியமாம். முத
லில், அக்காற்று வீசியபோது காரியபேதங்களாய்த் தோன்றும் நா
னாகாரமாயுள்ள சிருட்டிகளில் எந்தெந்தப் பதார்த்தங்கள் தோன்
றின ? அநந்தமாயுள்ள சிருட்டிபேதத்தில் மானிடோற்பத்தியை மு
ன்விசாரிப்பாம். மானிடசன்மத்தில் ஆண், பெண், என்று மிரண்டு
விதம் ஏர்ப்பட்டு ஒன்றைவிட் டொன்றுக்குப் பிரயோசனமின்மை
வெளிப்பட்டது. ஆணும் பெண்ணுங் கலந்தே சிருட்டிநடந்து வரு
வது அநுபவமாகையால். இவ்விரண்டையும் ஷ நான்கு பூதங்க
ளுஞ் சேர்ந்துண்டாக்கின வென்னுங்கால், முதலுண்டானது ஆ
ணா? அல்லது பெண்ணா? ஆணொன்னில், பெண்ணெப்போதுண்டா
யிற்று ? பெண்ணொன்னில், ஆணெப்போதுண்டாயிற்று ? ஆணையு
ம் பெண்ணையும் ஒன்றிலொன்று காரணகாரியமாக அப்பூதங்க ளு
ண்டாக்கினவா ? அல்லது அவ்விரண்டையுந் தனிதனிக் காரணா
ங்களாகவே யுண்டாக்கினவா ? ஆணும் பெண்ணு மிருந்தாலல்லது
சிருட்டி நடவாதென்று அறிந்தே அப்படி யவைகளை யுண்டாக்கின
வா ? அல்லது அநாமத்தாய் அவைகள் அப்படித் தம்மிடத்திலு
ண்டாக இடந்தந்துநின்றனவா ? இவற்றால், ஆணும் பெண்ணுமா
கிய வேறுபாடுகளைச் சடமாகிய பூதங்கள் தாமே தந்தனவென்பது
சர்வாபத்தமெனவறிக. பூதகாரியமாய்க் கூறும் பௌதிக சரீரங்களி
ல் இயக்கத்தைப பெற்றுநிற்கும் ஆன்மாவைத் தேகத்திற்குவேறாய
தோர் சைதன்யப்பொருளென வறியாது அத்தேகத்தின் குணமே
னறே அவ்வாபாசகர் கூறுநிற்பர். பூதம் காரணமும், பௌதிகம் கா
ரியமுமாகையில் பூதத்தைக்காட்டிலும் பௌதிகமே விசேஷத்தை
யடைந்தது. பூதத்துக்கில்லாதவறிவு பௌதிகத்தினிடத்திற் காண்
கையால். பூதகாரியமாகிய பௌதிகத்திற்றானே யெல்லாவறிவின் வி
ளக்கமுமுண்டாகி இது செய்தற்பாலது, இதுதவிர்த்தற்பாலது,
எனப்பகுத்தறியும் பெற்றிமைத்தாய பலநியாய விளக்கம் வெளிப்ப
டுகின்றது. அந்த நியாயத்துக்கேற்ப, யுக்தாயுக்தமான காரியசித்திக
ளுண்டாவதும், கெடுவதும் அநுபவசித்தம். அறிவாகிய குணத்தை
ப் பெற்றுநிற்கும் பௌதிகத்திலேதானே யாவும் செவ்வேநடப்ப
து கூடாமையாக, அறிவின்மணமே வீசப்பெறாத கேவலம் ஜடமா
கிய பூதத்தினிடத்தில் நியாயமணங்கமழ்ந் தினிது பிரகாசிக்கும் இ

ப்பிரபஞ்ச காரியங்கள் நடக்குமென்பது என்னவிந்தை? ஆகவே, ஆணும் பெண்ணுமாகிய இரண்டுருவங்களும் பூதங்களால் காரியப்படாது ஜடமாகியபூதங்கள் தாமேயுள்ளனபோல் அவைகட்கு வேறாய் அநாதிநித்தமா யிருந்தமையால், அவற்றூ லுத்தரோத்தரா சிருட்டிநடந்து வருகின்றனவென் றுரைத்தல்வேண்டும். அப்படிக்கொள்ளுமிடத்து, ஆணும்பெண்ணுமாகிய சரீரங்களைப் பௌதிகமென்ற லடாதாய்முடியும். அப்போது பிருதிவிமுதலிய பூதங்கள் ஜடபூதமும், ஆண் பெண்முதலிய பூதங்கள் சிற்பூதமுமென்று கொள்ளவரும். அப்படிக்கு மப்பேயர் கூறுமாகையால், அன்னோர் குணக்கேட்டை யின்னும் பரியாலோசிப்பாம். அவ்வந்தசிரோமணிகள் ஆண், அல்லது பெண் தனித்தாவது, அல்லது ஒன்றிலொன்று காரியமாயாவது; அல்லது இரண்டுங் காரணமாயாது மூலபூதங்களில் பிறப்பதை யங்கீகரிக்கையில், அந்தப்படிக்கே பின்னும் அவ்வேறுபாடுகள் அப்பூதங்களில் முறையே பிறக்கக்காணுதமென்னே? கடவுளுண்டு, ஆன்மாவுண்டு என்னுஞ் சாதுக்களைநோக்கி நீங்கள் கடவுளைக்கண்டதுண்டா? ஆன்மாவைக் கண்டதுண்டா? என்று கேட்டுத்திரியுமன்னோர் கூறியபுத்தியில் பூதங்கள் ஆண்பெண்ணுருவங்களைத் தாமேயுண்டாக்கினவென்றபடி நாமெப்போதாவது கண்டதுண்டா என்று ஏன்புலப்படவில்லை? கடவுளும், ஆன்மாவும் இல்லாத பொருள்களாகையில் காட்டுவதும், காண்பதும் கஷ்டமாகலாம். காணக் கூடுமான பூதசிருட்டியை யேன் ஒவ்வொருவருங் காணக்கூடாது? பிறர்க்குக் காட்டக்கூடாது? ஒவ்வொரு பதார்த்தங்களையும் விசாரிக்கிறபோது அவற்றினிலக்கணங்கள் வெளிப்படுந்தன்மை யுண்மையால், மூலபூதங்களினின்றும் பௌதிகங்களாகிய தேகங்கள் தாமேயுண்டாவது அநுபவசித்த மல்லாமையால் பூதங்களுக்குத் தேகங்களைத்தாமே யுண்டாக்குந்தன்மை யுண்டெனக்கூறுவது மூடர்கூற்றாய் முடிந்தது. இப்படியே, பசு, பட்சி, கிருமி, கீடம் புல், பூண்டு முதலியவற்றினுங் கண்டுதெளிக. இந்தவிசாரத்தால் அசித்தாகிய பூதங்களையும், பௌதிகங்களையும், சித்தாகிய ஆன்மாவுக்கு வினைநீக்கமான போகார்த்தமாய்ப் பரமபதியாகிய சிவன் மாயையினின்றுங் காரியப்படுத்திக் கொடுத்தருளின னென்பது பசுமரத்தாணி யறைந்தாலென்ன நாட்டப்பட்டது.

"அறிவுபூதமதென்னில் வேறுபுறத்தறிந்தமைகண்டிலம்
செறிவுதானுடலத்தெனிற் சவமானபோதுடறேருமோ

குறிகொளாதுடல்வாயுவானது கூடிடாமையினென்னினீ
பிறிதராதுயிர்நிற்கஞானமுறக்கமென்பிறவாததே"

என்று வெளிப்பட்ட நம்மாசாரியர் திருவாக்கால், பூதங்களே அறிவாகையில், புலப்படக்காணும் நீர், தீ, காற்றுக்களில் அதுபுலப்படாத தென்னேயெனவும், பௌதிகத்தில் அறிவு காணப்படுமென்னில், சவமாய்க்கிடந்தபோது காணப்படாத தென்னேயெனவும், வாயுப்பிரிந்தமையாற் காணக்கூடாத தென்னில், வாயுப்பிரியாத வுறக்கத்திற் காணப்படாத தென்னேயெனவும் வினவிமறுக்குந்தன்மை யுண்மையால், அறிவு தேககுணமாகாமையும், தேகமாகிய பௌதிகம் பூதகாரியமாகையால், பௌதிகமாகிய தேகத்துக்கும், அதற்குக்காரணமாகிய பூதத்துக்கும் வேருயதோர் பொருளாயுள்ளதவ்வறிவென்பதும் நிச்சயிக்கப்பட்டது. உறக்கத்தில் அறிவுகாணப்படாமை, தேகத்தில் நரம்பு, மூளே, இரத்தமுதலியன தத்தமநிலையில் கதிமாறியதே காரணமென வன்னோர் கூறுவர். இந்தவிடையே தேகம்பிணமாதற்கு யாது காரணம் என்பார்க்கும் அன்னோர் கொடுக்கவுள்ளதாகையால் அதைச்சற்றே யோசிப்பாம். மேலிடத்தில் தேகம்பிணமாகிறவிஷயத்தில் அவர்கொள்கையைமறுத்து விஸ்தரித்துரைத்தேமாகையால், ஈண்டு உறக்கத்தைப்பற்றி மாத்திரமே விவகரிப்பாம். உறக்கம் என்பது பெருங்கேட்டைத்தரும்மறதி. ஜாக்கிரத்தில், அற்பமறதி யொருவனுக்குளதேல், அவனேயெவ்வளவு ஆபாசமுடையானுகக்கொள்ளவிடந்தருகின்றது? அம்மறதியை நிவிர்த்திபண்ணிக்கொள்ளுந்தன்மை சர்வசுதந்தரத் தன்மையுடையனவாக மதிக்குமவ்வாதப்பசுக்கள் இன்றுவரை யேனுகண்டுபிடித் தெய்தப்பெற்றிலவாயின? உறங்குங்காலத்தில், அன்னோர்முகத்தில் பாம்பேறினுலும், ஒருவர்காறியுமிழ்ந்தாலும் அறியுந்தன்மையின்றே! அதனுலெவ்வளவு அநர்த்தமுண்டாம்? ஆத்திகராகிய யாமோவெனின், ஜாக்கிர சொப்பனசுழுத்திகளே முறையே பரனது சிருட்டிதிதிசங்காரங்களாகக்கொண்டு (கனவின்பயனுநனவின்பயனும், வினேயின்பயனைபொய்யெனவேண்டா) என்னும் அநுபவவுரைப்படித் தழுவிநிற்குந் தகுதியுடையே மாகையால், யாவும் எமக்கு வினேப்போகமாய் முடிதல்காண்க. இன்னவிசாரமில்லாத குருட்டுப்பசுக்கள் குழாத்துக் கூடன்மின்னென நம்மவர் கூறுஞ்சபோதங்களே யினிது சிந்திக்கக் கடவோமாக. இன்னுமவ்வந்த பரம்பரையார் கூற்றிரிந்தகல வரும்வாக்கியங்களேப் பரியாலோசிப்பாம்.

"அறிவுடற்குணமென்னிலானையதாதி யங்கமெறும்பதா
வுறுமுடற்பெரிதானவற்றினுதித்திடும் பெரிதாகவே
சிறுவுடற்செறிஞானமுஞ்சிறிதாயிடும்பரிணமமும்
பெறுமுடற்சிறிதாவதென் பெரிதாவதென்சிலபேசிடே"

என்னும் வாக்கியத்தால் அறிவென்று வேறொரு முதலில்லை, உடற்குணமே அறிவாகுமென்று ஒருவன் சொன்னால், ஆனைமுதல் எறும்பிறுதியாக வுடல்களில் பெரியவுடல்களில் பெரியவறிவும், சிறியவுடல்களில் சிறியஅறிவும் உண்டாகாமைக்கு அப்பேதை யாது கூறவல்லானெனவும், பரிணமத்தையுடைய யானையுடற்கு அறிவுசிறிதாயும், சிறியவுடலையுடைய மானிடர்க்கு அறிவு அகண்டமாயும் உண்டாதலென்னையெனவும் பெறப்பட்டு, அறிவுதேகத்துக்கு வேறாயதோர் சைதன்யப் பொருளென்பதும், அப்படித்தாழ்ந்து முயர்ந்தும் பிரகாசித்தல் அவ்வுடற்களின் மன்னியவுயிர்க்குற்ற கன்மத்தின்படி யென்பதும் நிச்சயிக்கப்பட்டது. சரீரம் வளருந்தோறும் அறிவுவளரவும், அது தளருந்தோறும் அறிவு தளரவுங் காணுமநுபவத்தாலும், சரீரத்தைப்பிரிந்து ஆன்மாநிற்கக் காணப்படாமையாலும், அவ்வறிவு சரீரத்தின் காரியமேயென்னில், பிருதிவிசேடணமாகிய விந்தனம் பெருகுந்தோறும் பெருகிச் சுருங்குந்தோறுஞ் சுருங்கி, அதனில் வேறுபட்டதாகி, இந்தனமில்லாதவழி யில்லையாகின்ற அக்கினி இந்தனகாரியமாகி, அவ்விந்தனத்துடனொன்றாகாவாறுபோல் அறிவுசரீரகாரியமாகிச் சரீரத்துடனொன்றாகாமைதெளிக. கடாவைப்போலப் பருத்தமாத்திரத்தானே அவன் பருமனுக்கேற்ப அறிவுபிரகாசியாது மானைப்போலச் சிறுத்த வுடலுடையார் பலர் அறிவின் பிரகாசம் அதிகமாய்ப் பெற்றிருத்தல்கொண்டும் அறிவினைத்தென்பதை யூகித் தடங்குவாராக.

"அங்கியானது தானுமொன்றையணைந்துநின்று நிகழ்ந்திடும்
பங்கியாதுயிர்தானுமிப்படிப் பற்றியல்லதுநின்றிடா
தெங்குமார்தயிலத்தையுண்டெழுதீபமானதெரிந்திடும்
அங்கதாமுடனின்று கன்மமருந்தியாருயிராவதே"

என்னும் வாக்கியத்தைப் பரியாலோசிக்கில், நெருப்பானதோரிந்தனத்தைப் பற்றிநின்று தன்வடிவைக்காட்டுந் தன்மையன்றித் தனித்துநின்று தன்வடிவைக்காட்டுந் தன்மையுடைத்தன்று. அப்படியே ஆன்மாவு மோருருவைக்கூடியல்லது நிற்கமாட்டாது. தகளியெ

ங்குநிறைந்த வெண்ணெயைப் பருகியோங்கிய தீபமானது எரியாநிற்கும். அப்படியே, கன்மத்தாலெடுத்துக்கொண்ட காயத்தினின்றுங் கன்மத்தைப்பொசிப்பது ஆன்மாவென்றறிகவென்று புலப்பட்டநியாயமுகத்தால் திரியைக்காயத்திற்கும், எண்ணெயைக் கன்மத்திற்கும், தீபத்தை ஆன்மாவுக்கு முவமித்தறிகையில், ஆன்மாவாகிய அறிவு தேகத்தின் குணமென்பதும், அல்லது தேகத்துக்குவேறுயதோர் பொருளென்பதும் தெற்றெனவிளங்கும். இந்தவிசாரத்தால் உடல்வளர அறிவுவளருமென்றும், உடல்தேய அறிவுதேயுமென்றும், அறிவென்பது தேகத்துக்கு வேறுயதொரு முதலல்லவென்றும், சொப்பனங்கண்டு பிதற்றித்திரியுஞ் சோம்பர்வாதம் சோர்ந்துவிட்டமைகாண்க. திரி, எண்ணெய், தீபம் இம்மூன்றும் ஒன்றிலொன்று விஜாதிகப் பொருளாதல்போல், தேகம், கன்மம், அறிவு இம்மூன்றும் விஜாதிகப் பொருள்களேயாம். திரியின் குணம் தீபமல்லாததுபோல தேகத்தின்குணம் அறிவாகாதெனவறிக. எண்ணெய் தீபத்தைப் பிரகாசப்படுத்தாநிற்பதுபோலக் கன்மம் ஆன்மாவைத் தேகத்திற் போகார்த்தம் பிரகாசப்படுத்தாநிற்பதுமறிக. இதனால், தேகத்துக்குவேறுக அறிவென்பதொருமுதல் காணப்பட்டவாறே கன்மமென்பதொன்றும் அவ்விரண்டுக்கும் வேறுய்ப் பிரகாசியாநிற்பதெனவறிந்திடுக. இக்கன்மப்பகுதியைப் பின்னர் விசாரித்துத் தெளிவிப்பாம்.

இதுமட்டோ, பாவத்தழும்பேறித் தென்றிசையானுக்கென்று கொழுமையாநிகரித்து வளருங்கடாக்களேயவத்தூர்த்தர் வீழ்ந்துகிடக்கும் படுகுழிகளினின்று மன்னோர் வெளிப்பட விரும்பின், அவர் ஆதரவாய்ப்பற்றி யேறுவதற்குத் தாரகமாய் விளங்கும் ஏணிபோல்வதாகிய நம்மனோர் அருமைத் திருவாக்குண்மை யித்திறப்பகுதியுடைத்தென வியக்குந்தரமன்றும்.

> "காரணம்மமையென்ற தென்னேகடாதி போனிகழ்காரிய
> நேரணிந்துசமைந்து நின்றிடுமென்பதும்மதுநேர்கிலோம்
> போரணைந்திடு மொன்றேடொன்று பொருந்துமாகில்வருந் தியும்
> நீரணைந்தொரு தீயினின்றது கண்டதாயினிகழ்த்திடே"

**இ-ள். உருவங்களுண்டாவதற்குப் பெண்ணும் ஆணுங் கூட்டலே காரணமென்று நீ கூறியதென்னே ? மண்ணினிடத்துக் கடமுதலியன தோன்றுதல்போல் பூதகாரணத்திற் பெண்ணுமாணுங் கா**

மே காரியப்பட்டுத் தம்மிற் கூடியகூட்டத்தே யுருக்கள் சமைந்திடுமென்று நீசொல்லுந்தன்மை யாமங்கீகரிப்பதில்லை. ஏனெனில் நீ கூறியபூதங்கள் நான்கும் தம்மில் ஒன்றுக்கொன்று சத்ருபாவத்தால் மாறுபடுந் தன்மையுண்மையால். எங்ஙனமெனின், நீருந்தீயும் ஒன்றையொன்று விழுங்கி அபாவப்படுத்துந்தன்மை யுண்மையால். அவ்விரண்டுமோரிடத்திற் கூடியிருக்குந்தன்மை நீயுன்காட்சியளவையிற்கண்டதுண்டாயின் யோசித்துக் கஷ்டப்பட்டாவது சொல்வாயாக. எ-று

இதைப்பரியாலோசிக்கில், நீரும், தீயுந் தம்மிற் கூடாமை யநுபவமாகையாலும், அப்படிக்கூடுந்தன்மை அவைகள் ஜடங்களாகையால் தம்மில் செல்லாமையாலும், விவேகத்திற்பொருந்த முடிந்த வுண்மையில், அவற்றைப் பாகப்படுத்திக்கூட்டி முடிப்பான் ஒருவனுளனென்பது சொல்லாமேயமையும். ஆயின், சித்தர்கள் நீரிலே விளக்கெரித்தலும், சமுத்திரத்திலே வடவாமுகாக்கினி நிற்றலுமுண்டேயெனின், சித்தர்களென்னை, குளத்தில் நீரைத்தகளியின்மொண்டு அப்படியே அதில திரியைநனைத்து, அதில் தீயைமூட்டி எரித்ததுண்டா? அந்த நீரை மூலிகைகளால் பாகப்படுத்திய பின்னரேயெரிப்பதன்றி வேறு வகையில் செல்லாமைகண்டறிக. வடவையாமெனின், சமுத்திரத்தில் நாலுமலைகளுக்கு நடுவில்நிற்பதெனப் பிராமாணிகர் கூறுநிற்பர். காட்சியளவையிற் கட்டுண்டிருக்கு மலவந்தர்க்கு அவ்வக்கினி சமுத்திரத்திலிருப்பதே காட்சிப்படாமைகொண்டு அதையொருபோது அங்கீகரியாராயின், மலைகள் சூழ்நிற்பதெதொன்றெனக்கூறுவதும் அநாங்கீகாரமாய் முடியுமாகையால், மேலவிடை சமுத்திரத்தி னெருப்புண்டென்று கொண்டாரை மாத்திரமே நோக்கிக்கூறியதொன்றாம். அன்றியும் அவ்வக்கினி நிற்பது சிவனுடைய ஆணையாலென்பதும் அறிக. (தொலையாவிருசுடர் நாளுஞ்சுழல்வதுஞ் சூழமுந்நீர், நிலையாயிருப்பது நீள்வான்சுமப்பது நீடுசெம்பொற், சிலையானமேருச சலியாதிருப்பதுஞ் சேடனுச்சி, மலையாதிருப்பது மம்பலத்தாடிதன் னாணையிலே) என்னுந் திருவாக்காற் கண்டறிக. சமுத்திரத்தின் மத்தியில் அவ்வனலிருப்பது கொண்டே கரையற்றதாகிய கடல் தன்னிலை பிறழாது நிற்பதும்அறிக. அது இடையிலிருப்பதால் நான்குபக்கங்களிலும் நீரைமீறவிடாமல காந்தம் இரும்பைப்போகவிடாமல் தடுப்பதுபோல் காத்துக்கொண்டிருப்பதெனவறிந்திடுக. அதுசிவனாணையாகையால். அவர் திருவுள்ளப்படிக்குச் சலத்தை நிலைகடத்தவேண்

டில் அவ்வனலுக்குள்ள வாகர்ஷண சக்தியைச் சற்றே மட்டிடச்செய்வர். சலத்தையும், தீயையும் தன்னுடைய பிரயோசனமாக வாரு மொருவனுக்கு எதை யதிகரித்துக் கொள்ளவேண்டுமோ, எதைக்குறைத்துக் கொள்ளவேண்டுமோ அந்தப்படிக்கெல்லாஞ் செய்வதுகூடுமன்றி, அவைதாமே அவனுடைய பிரயோசனப்படிக்கெல்லாம் நிகழப்பெறுமென்பது செல்லாமைபோல், சிவனுடைய வாணையாலன்றிக் கடல் கடத்தலும் அனலடக்கலுங் கூடாமைகாண்க.

மேல்விஷயத்தை மறுத்துச் சமாதானங் கூறவகையுளதேல் சொல்லுதிபார்ப்போம். கண்மூடித்தனமாய்த் திஉரென்று சொல்ல விசையாதாயினும் வருந்தியாவது சொல்லுக என்று கூறியதியாதெனின், நீரையும், தீயையும் ஒன்றுசேர்த்துப்பார்த்து அவையங்ஙனஞ் சேர்ப்பித்தபோது அவையொன்றோடொன்று சேர்ப்பித்தாலன்றிச் சேராமையும், சேருங்காலையில் இரண்டுமுதலு மொப்பக்காணப்படாமையுங் கண்டு நமதுகொள்கை பூதங்கள் தாமேசேருமென்பதும், சேர்ந்து அவற்றின்றன்மை கெடாமல் சீவிக்குமென்பதுங் கெட்டுத் தலைகூடாததென்னையென்று அவன்வருந்தியே நிற்குந்தன்மையுண்மையால். இதனால், உன்னால் சமாதானஞ்சொல்ல முடியாதாகையால் நான்கேட்ட கேள்விக்கு விடையளிக்க வகையின்றி அழுமூஞ்சியா யெம்மைப்பார்த்து நாணிப் பதுங்குவாயென்பது முடிந்ததுகாண்க.

இனிப்பூதகாரியமாகிய பிரபஞ்சத்தில் ஆணும்பெண்ணுமாக விரவிநிற்குந் தன்மையைவிசாரிக்கில், அவ்வேறுபாடுகளுண்டாந்தன்மை யிழுக்குடையும். காரணத்திலவ்வேறுபாடு காணப்படாதவுண்மையால். "இயல்புகாணிலை யென்னின் வேறிசைபெண்ணொடாணிருதன்மையுஞ், செயல்சொளாவியர் செய்திகாரணமாகவந்து செனிப்பதென், இயல்பதாமுடல் பூதகாரியமாவதும் நிலையாகுமான். மயலதாம்விலையாலொருத்தன் வகுத்ததன்மையின்வந்தமைத்" என்னுந் திருவாக்கால் இப்படிப்பிறப்பதெல்லாம் பூதவியல்பென்று நீகூறின், இயல்பு ஒருதன்மைப்பட்டிருப்பதன்றி வேற்றுமைப்பட்டு ஆண், பெண்ணென்னுமிரண்டு தன்மையால்சிருட்டிநடப்பது கூடாது. அன்றியும், முதலுண்டான படிக்கேயாவது ஆணும் பெண்ணுமாயுருக்கள் மூலபூதத்தினின்றே பிறந்து வருவதுஞ் செய்யாது, அவ்வேறுபாட்டினின்றமே [illegible]ந்த போத்தர சரீரங்கள் காரணகாரியமாகப் பிறந்துவருவதென்னை? இதனால் நீகூறியபூதவியல்பும், பூதகாரியமுமே சிருட்டிக்குங் காரண

மாகாமை வெளிப்பட்ட நியாயத்தால், நீ பிதற்றுவதெல்லாம் உன்னைப்பற்றிநிற்கும் மலத்தழும்பாலாய மயக்கமேற்கொண்டேயென்று அறிந்தனமாகையால், அம்மயக்கந் தெளியும்படிக் கன்மத்துக்கீடாகவே ஆண் பெண்ணுருக்களைப் பெண்ணாகிய வுமையிடத்தனாகும் சிவன் தனது ஆண்டகைமையால் விரவி, அக்காரியத்தை நடத்துவானெனக்கண்டு தெளிகவென்று பெறப்பட்டது.

இதனால், அநாதியே கர்த்தா நாயகியோடுகூடிப் போகத்தைவிரும்ப, அதுகாரணமாய் உலகின்கண் ஆண் பெண்காரியப்பட்டு, அதுகாரணமாக அப்படியே வுருக்கள் காரியப்பட்டுவருதல் துணியப்பட்டது. கர்த்தாவாகியசிவன், நாயகியை நீங்கி யோகிருந்தகாலையில், உலகம் நடவாதவுண்மையே யிதற்குச் சான்றெனவறிக.

இவ்வாறு நியாயங்களால் நாத்திகம் என்னும் பாழ்வலையிற் சிக்கிப் பறக்கவகையற்றுக் கேவலப்பட்டு வருந்தும் பட்சிகண்மாட்டு நம்மாசிரியர் காட்டியகருணைக்கு யாதுகைம்மாறு செய்தற்பாலது? அவர்கள் திருவடிகளுக் கன்புசெலுத்தி அன்னோர் பெருங்கருணையைச் சிந்திப்பதன்றி அங்ஙனஞ் செய்வதொழிந்து, பாலன்னத்தைத் தனக்கு முன்னேபடைக்கவரும் ஒருநண்பனைப் பார்த்தபோது உறுமிக்கடிக்கவருஞ் ஞமலிகளொத்து அந்தோ அப்பேயர் அநியாயத்திலிழிவது ஆச்சரியம்! ஆச்சரியம்!! (எறும்பூரக்கற்குழியுமே) என்றபடிப்பலமுறை நம்பெரியோர் அருள்வாக்கியங்களை அகங்காரமேலிட்டவது பார்த்தருளுவரேல், என்றாவதோர்காலத்தில் குணமடையக் கூடுமாகையால், அவர்மாட்டிரங்கி யின்னும் நம்மாசாரியர்கள் அருளிச்செயல்களாகிய உண்மைப்போதங்களை யீண்டு விரித்துரைப்பாம்.

“காணொணாக்கரணங்களுக்குயிர் கண்டிடாமையினின்றெனிற்
காணுமோகடங்கண்டகண்ணிணைகண்டுநிற்பதுங்கண்ணதே
காணொணாதுயிர்தானுமிப்படி கண்டிடுங்கரணங்களைக்
காணொணாக்கரணங்களுக்குயிருண்மையாவதுங்கண்டிடே”

என்னுந் திருவாக்கைப் பரியாலோசிப்பாம். பாஹ்ய கரணங்களாகிய நேத்திரமுதலியவற்றால் ஆன்மாவைக்காண்பது கூடாமையால், காட்சிப்படாத வதுகொண்டே அவ்வான்மாவை யில்லையென்று நீ துணிவது தவறாம். தேகமானது தன்னைக்கண்டதாகிய கண்ணைத் தான்காணவற்றோ? கண்மாத்திரமே தேகாதிகளைக் காணுநிற்

கும். காட்சியளவையாகிய கண்ணுக்குக் காணவொண்ணாதென்றவுயிருமித்தன்மைத்தேயாம். உயிர்சேதநமாகையால் கரணங்களைக் கண்டுநிற்கும். கரணங்களைத் தேகமறியாதவாறு கரணங்களு மவ்வான்மாவைக் காணமாட்டாது. ஆகையால், ஆன்மா வுண்டென்று துணிவாயாக என்றுபெறப்பட்டது. இத்திருவாக்கால் ஆன்மாவென்பதொரு பொருளுண்டாயின், அது என் கண்ணுக்குப் புலப்படாது என்று வினவித்திரியு மவலர்கூற் றிரிந்தமைகாண்க. இந்தவாதரவால், அன்னோர் ஆன்மா கண்ணுக்கு என் புலப்படாதென்புழிக் கண் தேகத்துக்கு என்புலப்படாது என்னுங்கடாநிகழும். கண்ணுக்குள்ள காட்சித்தன்மை தேகத்துக்கின்மையால் அக்கண்ணைத் தேகங்காணாதெனின், அங்ஙனங்காணாதது தேகத்தின்றாழ்வா? கண்ணின்றாழ்வாவென்னுங் கடாநிகழும். தேகத்தின் றாழ்வெனின், அதனால், கண்ணென்பதொருபொருளுக் கபாவஞ் சொல்லுதல் யாண்டிசையும்? தன்னைப் பார்த்துக்கொண்டேயிருக்குங் கண்ணைத் தான் பார்க்குஞ்சத்தியற்ற வதன்குறைநோக்காது தேகமே யுள்பொருள், கண் இல்பொருளென்றலடாதெனவறிக. இப்படியே, ஆன்மா கரணங்களைக் கண்டியங்காநிற்கும். ஆன்மாவைக் கரணங்கள் காணப்பெற்றில. கரணங்களை விரவிக் காணுமான்மாவை அக்கரணங்கள் காணாதகுறைவு அக்கரணங்களிடத்ததன்றோவாக, அவற்றாற் காணப்படாமைகொண்டே ஆன்மாவுக் கபாவஞ்சொல்வதெப்படி? இதனால், ஆன்மாவுண்டென்பது நிச்சயிக்கப்பட்டது. தேகத்தினாற் காணப்படாமையால் கண்ணுக்கு அபாவஞ்சொல்லவிசையாததுபோல் கண் முதலிய கரணங்களாற் காணப்படாமையால் ஆன்மாவுக்கு அபாவஞ்சொல்லுதல் தோஷகிரஸ்தமாய் முடிந்தது. அப்படியே, ஆன்மா சிவத்தைக் காணப்பெற்றிலது. சிவம ஆன்மாவைக்கலந்து உபகரியாநிற்கும். தன்னைவிரவி யுபகரிக்குஞ் சிவத்தைக் காணுந்தன்மை தானெய்தாதது தன்குற்றமென்றுணராது தானேயுள்பொருள், அச்சிவம் இல்பொருளென்றலுமடாதாய்முடிந்தது. முறையே தேகம் கண் முதலியகரணங்கள், ஆன்மா, சிவம் என்னும் பொருள்கள் ஒன்றினொன் றேற்றமுடையனவாக வெளிப்பட்டமையால் தேகத்தைக்கண்ணும், கண்ணைக்கரணங்களும், கரணங்களை ஆன்மாவும்; ஆன்மாவைச்சிவமும் அறிதல் வெளிப்பட்டது. இதைப்பிரகடனமாய்ப் பார்க்கில் சிவத்தை ஆன்மாகாணாது. ஆன்மாவைக் கரணங்கள் காணா. கரணங்களைக் கண்காணாது. கண்ணைத் தேகங்காணாது. இந்த விசாரத்தால் யாவும் உள்பொருள்களாதல் துணியப்பட்டது. இ

ந்த வுண்மை நியாயங்களால் ஆன்மாகிடையாது, சிவங்கிடையாது என்று வாய்மதம் பேசுவார்வாயில் மண்விழுந்ததெனவறிக.

கண்ணொருபொருளைப் பார்க்கையில் கண்ணே பார்க்கிறதென் பது அடாது. காதொருபொருளைக் கேட்கையில் காதே கேட்கிற தென்பது அடாது. மனம் ஒருபொருளை நினைக்கையில் மனமே நினைக்கிறதென்பது அடாது. இப்படியே பலவுங்கொள்க. ஆன்மா வென்பதொருபொருளே கண்ணின்வழியாகப்பார்த்தும், காதின் வழியாகக்கேட்டும், மனத்தின் வழியாக நினைத்தும், இன்னும்பல வாற்றானுந் தேந்திரியங்களின் வழியாய் அவ்வவ்விஷயங்களை நுகர்ந் தும் வருந்தன்மையுண்மையால், ஆன்மாவுக்குபாவரு சொல்லுதல் தவறு. அப்படியாக இல்லையேல் கண்ணொன்றையுஞ்சாரா து காதொன்றையுங் கேளாது. மனமொன்றையு நினையாது. இங்ஙனமாக, காலுடைய புருஷனைக் கைவிட்டுக் காணும் வாயிலைகளைப் பார்த்துப் பல்லை யிளித்துத்திரிதல் கேவலம் அசங்கதமுடைத்தாம். ஆகவே, கண்ணின்வழியாக ஆன்மா பார்ப்பது நேத்திரக்காட்சியும், காதின்வழியாகக்கேட்பது சுரோத்திரக்காட்சியும், மனத்தின்வழியாக நினைப்பது மானசக்காட்சியுமாம் இப்படியே வாயிற்காட்சி, ஆக்கிராணக்காட்சி முதலிய பகுபாடுகள் வெளிப்படுதல் கண்டு தெளிக.

இந்த விசாரத்தால் காட்சியளவையால் நிரூபிக்கத்தக்க சித்தாந்தம ஆஸ்திகமாகவேமுடிந்தது, ஆன்மாவே காணுகிறதென்னு முண்மை வெளிப்படுதலால், இதனையறியாது, கண்ணால் ஆன்மாவைக் காணக்கூடாததென்னை யென்றெழுங்கடாக்கள் அவலப்பட் டொழிந்தமை காண்க. கண் அசித்தாயிருப்பதொருபொருளாய், அதனிடத்தில் சித்தாயுள்ள ஆன்மாவிரவி அதைவாயிலாகக்கொண்டு ஒருபொருளை நுகருந்தன்மையறியாது, ஆன்மாவைவிட்டாலொன் றையு மறியாததாகியகண் ஆன்மாவைக்கண்டிலது என்பது பேதமையிற் பேதைமையாய் முடிதலால், அனையோர்கோள் முற்றுங் குணமின்மையாகவே முடிந்தமைகாண்க. இங்ஙனமாறும் விசாரித்துவந்த வுண்மைநியாயங்களால் ஆன்மாவென்பதொருபொருளும், அதைத் தன்னாணையிற் செலுத்தி யாண்டுவரும் பதியாகிய வொருபொருளு ம உண்டென நாட்டப்பட்டதாகையால், மேலிடங்களில் பின்விசாரிப்பதாகக் கூறப்பட்ட கன்மம் என்னும்பொருளை யினிவிவகரித்துத் தெளிவிப்பாம்.

" அநாதியேலமைவின்றெனின் மலமாயைகன்மமணுச்சிவ
னநாதிகன்மமணுக்கள்செய்யவறிந்து கன்மமுடற்செயா
வநாதிகாரியமாமுடற்களசேதனமம்மணுயாவறிந்
தநாதியாதியமைக்கவேண்டு மமைப்பிறேனுமநாதியே "

என்னும் பிரமாணத்தால் யாவும் அநாதியே யாகிறபோது ஒரு வனிருந்து ஒன்றோடொன்றைக் கூட்டவேண்டுவது அவசியமன்றெ ன்னுமிடத்து, ஆணவமலமும் கன்மமலமும், மாயாமலமும், ஆன் மாவும், சிவனும் அநாதிப்பொருள்களாகுலும், கன்மத்தை ஆன்மா க்கள் செய்ய, அந்தக்கன்மம் தானும் அறிந்து ஆன்மாக்களுக்கு உட லையெடுத்துக் கூட்டமாட்டாது. அநாதியே காரியப்பட்டு வருமுடற் கள் அசேதனமாகையால் ஆன்மாவை அறிந்து கூடமாட்டா. ஆ கையால், அநாதியாகியசிவன் ஆன்மாவையுங் கன்மத்தையும், அத ற்குப் பொருந்தின வுருவையுங் கூட்டல்வேண்டும். இப்படிக்கூட்டுந் தன்மை அவைகளுள்ள வநாதியேயாகையால், யாவும் அநாதியென் பது மெய்யென்று நிச்சயிக்கப்பட்டது.

இதனைப் பகுத்துணருங்கால் பதிபசுபாசம் என்னும் மூன்றில் பதியேசிவனும், பசுவே ஆன்மாவும் என்று வெளிப்பட்டுப் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயையென்னும் மூன்று பிரிவினைப் பெற்று விளங்கும். பதியென்னுங்கால் தனக்குமேலொரு நாயகமில் லாத தென்று வெளிப்படும். ஆகவே, அது சுத்தமாயிருப்ப தொரு பொருளென்பது வெளிப்படை. அசுத்தமிருந்தாலே பதிவேண்டும் அதை யொழித்தற்பொருட்டு. தானே யொழித்துக் கொள்ளக்கூ டாதோவெனின், ஒழித்துக் கொள்ளுந் தன்மையிருந்தால் முத லிலேதானே அது தனக்குச் சகசமாந் தன்மையை யொழியும். கண் ணைப்பற்றி நிற்குமிருளை அக்கண்ணே யொழித்துக்கோடல் யாண் டமையும்? அதை யொழிப்பது கதிரொளியேயாதல் கண்டுதெளிக. கண்ணுக்கு இருளையொழித்துக் கொள்வது கூடாமைபோல் அசுத் தத்தையுடைய தொருபொருள் அதனைத்தானே யொழித்துக் கொ ள்ளுதல் கூடாது. இதனுல், அசுத்தமுடைய தொருபொருள் பதியா காமையால் சுத்தப்பொருளே பதியாதல்சித்தம். ஆகையால் பதிப் பொருள் சுத்தப்பொருளென்பது நிச்சயம். இந்தவுண்மை யறிந்தே வேதசிவாகமங்களில் பதியாகிய சிவனை நின்மலன் என்று விதந்து ரைக்கும். இனிப்பசுவென்பது பாசசம்பந்தமுடைத்து என்று பொ ருள்படும். ஆகவே, பாசமாகிய விலங்கிற்பட்டுவருந்து மிழுக்குடை

மையால் அசுத்தமுடைய தொருபொருளாய்ப் பதிப்பொருளாதல் செல்லாமை பெற்று விளங்குவ தொன்றெனல் வெளிப்படை. இனிப்பாசமென்பது அசுத்தமும், ஜடமுமாகிய பொருளாய்த் தனித்து நில்லாது கண்ணைப்பற்றி நிற்கு மிருளைப்போல் ஓர்பொருளைப்பற்றி நிற்பதொன்றாம். இந்தமூன்றில் பதியும் பசுவும் சேதனப்பொருள்களும், பசு அசேதனப் பொருளுமாதல் நிச்சயம். மேலிரண்டும் சேதனமானால் ஒன்றுக்கு அசுத்தமும், மற்றொன்றுக்குச் சுத்தமும்வரக் காரணமென்னை யெனின், இரண்டும் சேதனங்களேனும் ஒன்றுக்குப் பேரறிவும், மற்றொன்றுக்குச் சிற்றறிவு முடைமையால் பேரறிவுடைய பொருளை அசுத்தந் தீண்டாமையும், சிற்றறிவுடைய பொருளை அசுத்தந் தீண்டினமையும் பெறப்பட்டது. கண்ணும், ஆதித்தனும் ஒளியுடைய பொருள்களேனும், ஆதித்தன் பேரொளியுடையானதலால் அவனையிருள் சேராமையும், கண்ணானது அற்பவொளியுடைய தாகையால் அதை இருள்சேர்ந்து மயக்கினமையும் வெளிப்பட்டது. இந்த நியாயங்களால் சுத்தர்களாயிருப்பாரிருவர் தாரதம்யங்களும், அவரை அசுத்தம் பற்றுதமுறைமையும், பற்றுமுறைமையும் நிரூபிக்கப்பட்டது.

இனி அவ்வசுத்தமாகிய பாசத்தைச் சற்றுவிசாரிப்பாம். இது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று பிரிவினையுடையது. இவற்றுள், ஆணவமொன்றே ஆன்மஞானத்தை மறைத்திருக்கும் வலிமையுடைத்து. எங்ஙனமெனின், நீரை அதன் சுத்தந்தோன்றாதபடி அதிற்கலந்து அந்தநீரையும், தன்னையும் பிரிக்கக்கூடாதபடி விளங்கும் அழுக்குப்போல்வதாம். அங்ஙனங்கலந்து நிற்கு மழுக்காகிய தோடத்தைமாற்றி அத்துடனே தானுமொழிந்து போவதாகிய தேற்றாங்கொட்டையே மாயைக்கு நிதரிசனமாம். எனவே, ஆணவமாகிய அழுக்கைமாற்றி அத்தோடே தானுமகலுந் தன்மையுடையது மாயையென்று ஏற்பட்டது. இதையின்னு முவமிக்குங்கால், கோடிப்புடவையிலுள்ள அழுக்கைச் சாணம், உவர்மண் முதலிய வழுக்குகளைக் கொண்டு மாற்றுவதும் பொருந்தும். அன்றியும், தேகத்தில்வந்த பிணியைமாற்று மௌடதமாத்திரமாகவு மங்கீகரிக்கப்படும். இதைப்பரியாலோசிக்கில் தேகத்தில்நோயுண்டாகி அந்தநோயையுந் தேகத்தையும்வேறு பிரிக்கக்கூடாத சந்தர்ப்பத்தில் அது துன்பத்தைச் செய்யுமாபோல், ஆன்மாவினிடத்து ஆணவங்கலந்து துன்பத்தைச் செய்யா நிற்கும். அந்தநோயை மாற்று மௌடதம்

போல் மாயை யவ்வாணவத்தைப் போக்கும். ஆகவே, ஆணவமும்,
மாயையும், நோயு மௌடதமுமாக வேர்ப்பட்டன. இவ்வுண்மையா
ல் ஆணவமே மாயை, மாயையே ஆணவமென்று மயங்கிக்கூறுவார்
கோளுமிரிந்தது. இன்ன பலதிட்டாந்தத்தால் நிரூபிக்கப்படும் ஆண
வமாயா ஸ்வரூபங்களையறியாது ஆணவமே மாயையெனவும், மாயை
யே சத்தியெனவும், சத்தியே சிவமெனவுங்கூறி அபேதம்படப் புல
ம்பு மவதிஞானத்தைச் சற்றேபரியாலோசிப்பாம். மேல்விசாரத்தால்
ஆணவம், மாயைகளினுடைய ஸ்வரூபங்களிளைத்தென வேர்ப்பட்ட
மையால் அவ்விரண்டும் வேறு வேறு முதல்களென்பது நிர்மாணிக்க
ப்பட்டது. அப்படியே சத்திசிவஸ்வரூபங்கள் மாயையில் வேறுப
ட்டவுண்மையை நோக்கின், மாயை தேகாதிப்பிரபஞ்சங்களாகக் கா
ரியப்பாட்டை யடையுஞ் சடப்பொருளாதலுண்மை. சத்தி, சூரிய
னில் வேறாகாத பிரகாசம்போல் சிவனில் வேறாகாதகுணமாத்திர
மா யமைந்த வபின்னப் பொருளாதலுண்மை. ஆகவே, சத்தியுஞ்
சிவனும், குணமுங்குணியுமாதல் பெறப்பட்டது. சத்தாகியசிவனில்
வேறாகாத சத்தனது அறிவென்னுஞ் சிற்சத்தியானது தேகாதிக
ளாகக் காரியப்படுஞ் சடமாகிய மாயையி லொன்றுந்தன்மை யெ
ங்ஙனமிசையும்? மாயையாகிய ஜடப்பொருளும், சத்தியாகிய சித்
துப்பொருளும் ஒருபொருளாதல் சாலாமையின் இரண்டுமொன்
றாதலிழுக்காம். அன்றியும், ஈண்டுச் சத்தியென்பது சத்தனில் வே
றாகாத தொன்றாதல்போல், மேல் ஜடமென்றதும் மாயையில் வேறா
காத வதன் குணமாத்திரமாகிய தொன்றாம். எனவே, ஜடம் மாயை
யின் சத்தியென்பது அமையும். சிவத்தின் குணமாகியசித்தே சிவசத்
தியென்பதுபோல். குணகுணிமாத்திரமா யமைந்த சத்திசிவங்களைப்
போல் குணமுங்குணியுமாகவே ஜடசத்தியையும், அதனில் வேறாகா
தமாயையையும் அங்கீகரிப்பர் விசாரித்துணர்ந்த மேலோர். இவ்வு
ண்மையால் ஜடமாகியகுணத்தைச் சத்தியாகப்பெற்ற குணியாகிய
மாயாசத்தியைச் சத்தனாகியசிவனில் வேறாகாத குணசத்தியாகக்
கூறுவது பொருந்தாது பொருந்தாது. சிவம், சிவசத்தி, மாயை, மா
யாசத்தி யென்பனவற்றில் முதலிரண்டுங் குணியுங் குணமுமாதல்
போல், பின்னவையுங் குணியுங் குணமுமாதல் திண்ணம். இவற்றை
யினிது பரியாலோசிக்கில் பின்னே பெறப்பட்டமாயை அதன் கு
ணசத்தியால் அறிவு அறவேயில்லாததாய்க் கிரியையை அப்பிரகா
சமாய்த் தன்னிடம் பெற்றதாய் விளங்கும். முன்னே பெறப்பட்ட
சிவம் அதன் குணசத்தியால் அறிவுந்தொழிலும் பிரகாசமாய்த்

தன்னிடமுடையதாகி, அவ்விரண்டில் அறிவுநிற்க, தொழிலால் மேற்போந்த மாயையினிடம் அப்பிரகாசமாய் நிற்குந்தொழிலை யியங்கப் பண்ணுநிற்கும். எனவே, பிரகாசப்படுத்தாநிற்குமென்பது வெளிப்படை. அறிவுநிற்க, என்றதனால், கிரியையை அப்பிரகாசமாய்ப் பெற்றமாயையை யியங்கப்பண்ணுதல்போல் அறிவை அப்பிரகாசமாய்ப்பெற்ற ஆன்மாவை யியங்கப்பண்ணுமவதாரம் எடுத்தானற்பாலதெனவறிக. இந்தவிசாரத்தால், மாயை, மாயாசத்தி, சிவம்-சிவசத்தி இவற்றினுண்மை வெளிப்பட்டமையால், மேலிரண்டுபொருள்களும் இயங்குஞ் சத்தியையுடையதும், இயக்குஞ்சத்தியையுடையதுமாகி வெளிப்படாநிற்கும். இதனால், மாயை சிற்சத்தியாதலும், சிவமாதலுங் கேவலம் அசங்கதமாயிற்றென்க. இந்த நியாயங்களால், ஆணவமே மாயையென்பதும், மாயையே சிவசத்தி யென்பதும் நிராசிக்கப்பட்டது. ஆயின், வேதசிவாகமங்களில் மாயையைச் சிவனது சத்தியென்று கூறுவதி யாதெனின், அது பரிக்கிரகசம்பந்தம் பாராட்டியெனக. சத்தியென்பது அபின்னமெனவும், பின்னமெனவும் பெறப்பட்டுச் சத்தனில் வேறாகாததும், வேறாகியதுமாகி விளங்கும். எங்ஙனமெனின், சித்திரமெழுதுமொருவனுக்கு அவனுடையகையானது அபின்னசத்தியாகி, அந்தக்கையில் தாங்கியிருக்கும் இறகானது பின்னசத்தியாதல் வெளிப்பட்டது. சித்திரக்காரனுக்கு வேறாகாதகையும், அக்கையிற் பற்றியிருக்குமிறகுமாகிய விரண்டுமவனது சத்திகளேனும், அச்சத்திகளிரண்டுமொன்றாதல் செல்லாமையே சிவனது பின்னாபின்ன சத்திகளுக்குங்கூறு நிதரிசனமாம். இந்நியாயத்தால் மாயையைச் சிவனது சத்தியென்றது பொருந்துமாகி, அதுசிவசத்தியில் அபேதமென்றது அடாதாகி, மேலோர் கூறுந்துணிபின்னதெனவெளிப்பட்டது. இதைப்பிரமாண முகத்தால் விசாரிக்கில் "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே, ஸ்வாபாவகீ ஜ்ஞானபலக்ரியாச" என்னுஞ் சுருதியால் பராசத்தியாகும் ஏகமாகிய வச்சிவசத்தியானது ஞானக்கிரியா சத்திகளாகப் பிரகாசிக்கின்றனவென்று பரனது தாதான்மிய சத்தியின் பகுதிவெளிப்பட்டது. அப்படியே அப்பரனது பரிக்கிரகசத்தியை விசாரிக்கில் "வாசுதேவ: பரா: ப்ரக்ருதி:" என்னுஞ் சுருதியால் விஷ்ணுபகவான் பிரகிருதியாயுள்ளவரென்று பெறப்பட்டமையால், பிரகிருதிரூபமாகிய வச்சத்தியையுடைய சத்தனொருவன் வேறுள னென்பது சொல்லாமேயமையும். பிரகிருதியைச் சத்தனென்றுரையாடலடாதாகையால். விஷ்

ணுபகவான் கேவலம் சேதனராக, அவரைச்சடமாகக் கூறியதென் னையெனின், அவரும் மற்றையுயிர்களும் ஆணவமாயாதிகளை நோக்கச் சேனர்களேயன்றிச் சிவனை நோக்கக் கேவலம் ஜடர்களேயாம். அப்பரன்றனது கருணையாலன்னோரை மாயையிற் புணர்த்தாதபோது ஓர்சேட்டையுமற்றிருந்த வுண்மையால். ஆகவே, பரனுக்குமாயையோடு சேதனர்களும் பரிக்கிரகசத்தியாதல் பெறப்பட்டது. மாயையுஞ் சேதனனுந் தனித்தனி வேறு பொருள்களாகக் காணப்படாம லிந்தனமும் வன்னியும்போல் விரவிநிற்கு மொருமைப்பாட்டா லன்னது மன்னோனு மத்துவிதமாகிப் பரனுக்குப் பரிக்கிரகசத்திகளாதவிழுக்கா தெனவறிக. சிவன்பரிபூரணனுகையால் சத்திகளுக்கு வேறுயதோர் பொருளாய்த் தானு நில்லான். ஆகவே, சேதன னச்சத்தியுபகாரத்தைத் தனது மலநிவிர்த்தியின் பொருட்டுப் பெறுமாறும், சிவன் சேதனனது மலநிவிர்த்தியை யச்சத்தியா லுபகரிக்குமாறும் விரவிநிற்றல்காண்க. இதனுலிருவர் சையோகமு முபகாரத்தைப் பெறவுந் தரவுமென் றேர்ப்பட்டமையால், சத்திசத்தர்கடன்மை வெளிப்பட்டது. "அரியீரைந்தவதாரச்செயல்யாவுமரன்செயலா மாலறியாத கந்தைகூறற், றிரிவாகுமுடல்வாலதருண மூப்பின்செயலுயிரின் செயலாகுஞ் செய்திபோலும், விரிவாமைந்தொழிலையு மெம்மிறைவன்முனே மிகுபடர்க் கைமுன்னிலைத் தன்மையிலுண்டாக்குந், தரியாதன்றிராமனுடன் பரசுராமன் சமர்பொருத கதையுலகிற்சாற்றுவீரே" என்னும் பிரமாணத்தால் விஷ்ணுவின் தசாவதாரச்செய்திகளும் சிவனது கிருத்தியங்களென்று நிச்சயிக்கப்பட்டது. தேகத்திலுண்டாகிய பால்ய கௌமார யௌவன வயோதிகங்க ளத்தேகத்தி லான்மாநீங்கியவழி யமையா. அப்படியே, ஆன்மாக்களிடம் நிகழுஞானக்கிரியைகள் சிவனையன்றியமையாது. விஷ்ணு சேதனர்களி லொருவரேயாகலி னவருடைய ஞானக்கிரியைகளுஞ் சிவனையன்றி யமையாது. ஆகவே, தசாவதாரங்களும் சிவனியக்குவித்தலை யபேக்ஷித்தமை நிர்ப்பாதிதமாய்ப்பெறப்பட்டது. அவ்வுண்மையை விஷ்ணுவி னவதாரங்களாகிய பரசுராமனும், தசரதராமனுஞ் சண்டையிட்டு முரணியதே சான்றுரைக்கும். விஷ்ணு நிர்மலரும், அவர் விபூதிக ளவ்விருவருமாயி னொருவரோடொருவர் சண்டையிட்டு மாய்வதென்னை? இரண்டுருவு மொன்றுனகாலத்து மலத்தாக்குடைமையானும், சிவன் சேட்டிப்பித்தால் சேட்டிக்குந் தன்மை யெய்தலானு மன்னோர்பால் அது நிகழ்ந்தமையறிக. விஷ்ணுவோர் பசுவென்பது திண்ணமாகி, விவிதவினைக் குட்படுத லுண்மை

யாகையால் அவ்வினையை யவர்க்கூட்டித் தொலைப்பிக்கு முகத்தானே யவர்க்குவந்த சந்மங்களி லவ்வினையைப்பகிர்ந்து, முறையே தசரதராமன் பக்கல் சார்ந்தவினையைத் தன்மை முன்னிலை படர்க்கையென்னும் வழிகளால் சிவன் மாற்றிவருகையி லப்பரன் பரசுராமனை யதிட்டித்து, அவனைப் பரிக்கிரகசத்தியாகக் கொண்டு தண்டித்தும், பரசுராமன் பக்கல் சார்ந்தவினையைத் தன்மை முன்னிலை படர்க்கையென்னும் வழிகளால் சிவன் மாற்றிவருகையி லப்பரன் தசரதராமனை யதிட்டித்து, அவனைப் பரிக்கிரகசத்தியாகக் கொண்டு தடிந்து முபசரித்தல் சாலும். இப்படியே விஷ்ணுவினுடைய வொவ்வோரவதாரங்களினு மேனையவுயிர்களிடத்துங் கண்டுணர்க.

மேல்விசாரத்தால் விஷ்ணு பரிக்கிரகசத்தியானபடியே விதியுருத்திரர்களும் சிவபெருமானுக்குப் பரிக்கிரகசத்திகளாகு முண்மையைப் பிரமாணபூர்வகமாய் விசாரிப்பாம். "ஜ்ஞான மப்ரதிமம் யஸ்ய வைராக்யஞ்ச ஜகத்பதே:, ஐஸ்வர்யஞ்சைவதர்மஸ்ச ஸஹசித்தஞ் சதுஷ்டயம்" என்னும் வசனத்தால் உலகத்துக்குப் பதியாய்விளங்கும் பிரம்ஹதேவருக்கு அதிகமாகிய ஞானமும், வைராக்யமும் ஐசுவரியமும் தர்மமும் சுவபாவசித்தமென்று பிரதிபாதிக்கப்பட்ட பெருநலத்தை யுடையவராகிய சிருட்டிகர்த்தாவும், அவருக்குத் தந்தையென்னுங் கௌரவத்தை யுடையவராகிய விஷ்ணுமூர்த்தியும், அவ்விருவர் கிருத்தியங்களு மவத்தைகொண்டொழிய வழிக்கு மாற்றலுடையவராகிய ருருத்திர மூர்த்தியுமாகிய மூவர்களில் பிரம்ஹதேவர் பரமசிவனது ராஜாம்சமெனவும், உருத்திரமூர்த்தி தாமசாம்சமெனவும், விஷ்ணுமூர்த்தி சாத்விகாம்சமெனவுங் கூறும் மைத்திரேயோபநிஷத் வாக்கியத்தை யீண்டெழுதுவாம். "அதயோஹ கலுவாவாஸ்ய ராஜஸோம்சோ ஸௌஸயோயம்ப்ரஹ்மா, அதயோஹ கலுவாவாஸ்ய தாமஸோம்சோ ஸௌஸயோயம்ருத்ர:, அதயோஹ கலுவாவாஸ்ய ஸாத்விகோம்சோ ஸௌசயோயம் விஷ்ணுரிதி" என்பதனாற்காண்க. இப்படியே "ப்ரஹ்ம விஷ்ணு சிவாப்ரஹ்மாங் ப்ரதாநா ஆத்யசக்தய:, ததச்சதேவா மைத்ரேயாங் யூநாதக்ஷாதயஸ்ததஇதி" என்னும் விஷ்ணுபுராண வசனத்தால் அந்தப்பரமசிவனுக்குப் பிரம்ஹ விஷ்ணு ருத்ரர்கள் சக்திகளாவரென்று பெறப்பட்டது. இன்னும், கூர்மபுராணத்தில் "சக்தயோ ப்ரஹ்மவிஷ்ணவீசா புக்திமுக்திபலப்ரதா:, ஸர்வேச்வராஸ் ஸர்வவந்த்யாச் சாச்வதாநந்த போகிந:, அந்யாச்ச சக்தயோதிவ்யாஸ் தத்ரஸந்தி ஸஹஸ்ரச:, இஜ்யந்தே விவி

தைர்யஜ்ஞைச் சாக்ராதித்யாதயோமரா:, ஸர்வாஸாமேவ சக்தீநாம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகா:, ப்ரதாநாஸ் ஸம்ஸ்ம்ருதாதேவா: சக்தய: பரமாத்மந:, அப்ய: பரஸ்தாத்பகவாந் பரமாத்மா ஸநாதந:, கீயதே ஸர்வசக்த்யாத்மாச் சூலபாணிர் மஹேச்வரஇதி" என்னும் வசனத்தால் பிரம்ஹ விஷ்ணு ருத்திரர்கள் புக்திமுக்திபலங்களைக் கொடுப்பவர்களாயும், சர்வேசுவரர்களாயும், சர்வவந்தியர்களாயும், சாசுவதாநந்தபோகத்தைப் புஜிப்பவர்களாயுமுள்ள பிரம்ஹத்தின் சக்திகளெனவும், இதரைகளாயுள்ள சக்திகளும், மேல்சக்திகளாகிய இந்திரன், சூரியன் முதலியதேவர்களும் நாநாவிதமான யக்ஞங்களா லாராதிக்கப்படுகின்றார்களெனவும், சர்வசக்திகளுக்கும் பிரதானைகளாயுள்ள பரமாத்மாவின் சக்திகளானவை பிரம்ஹ விஷ்ணு சிவாத்மிகமான தேவாளாக ஸ்மரிக்கப்பட்டிருக்கின்றார்களெனவும், இந்தச்சக்திகளைக்காட்டிலும் சிரேஷ்டமாயுள்ள பகவானும், பரமாத்மாவும், சநாதனரும், சர்வசக்தியாத்மகரும், சூலபாணியும், மஹேசுவரருமாகக் காணப்பண்ணப்பட்டவரே பரமபதியாகிய சிவபெருமான் என்று நிச்சயிக்கப்பட்டது.

இதுகாறுஞ் செய்தவிசாரத்தால் சத்திகள்பேதம் பெறப்பட்டு அவற்றுள் சேதனர்களோடு மாயையும் பரிக்கிரகசத்தியாதல் துணியப்பட்டமையால் பரிக்கிரகசத்தியாகிய மாயை ஆணவநோயைப் போக்கு மௌடதமாத்திரமெனல் நிச்சயிக்கப்பட்டது. ஆணவம் நோயும், மாயை யௌடதமுமானபோது அந்நோயையுடையவன் ஆன்மாவென்பதமையும். அமையவே, அம்மருந்தை யப்பிணியாளனுக்குக்கொடுத்து நோயைத்தீர்க்கும் வைத்தியன் சிவனென்பதுபெறும். நோயுடைய பிணியாளன் றன்னைப்பிணித்திருக்கு மந்நோய்வருத்தத்தாலழிந்து அறிவுசோர்ந்து கிடத்தலானும், அந்தநோயைத்தவிர்க்குமௌடதங்களவனைத்தேடிச் சென்றுபகரிக்குமாற்றல்பெறாத ஜடப்பொருள்களாகலானும், அந்தநோயாளிக்கு மருந்தையறிந்துபசரித் துண்ணச்செய் துபகரிப்பான் வைத்தியனே யாதல்போல், ஆன்மாவாகிய நோயாளியைப் பற்றிவருத்து மாணவமாகியநோயைத் தவிர்த்துபகரிக்கும் பொருட் டௌடதமனைய தனுகரணாதிகளை மாயையினின்றுங் காரியப்படுத்திக்கொடுத்து வைத்தியனாகிய சிவனே அந்தநோயைத் தவிர்ப்பன். ஆணவரோகம், மாயாகாரியங்களாகிய வௌடதப்பிரயோக மாத்திரத்தானே நிவிர்த்திபெறுமோவெனின், பிரக்ஞையற்றுக்கிடக்கு மந்தநிலையினின்று மவனைத்தேற்றிச் சற்றே

பிரக்ஞை யுண்டுபண்ணுகையால், அதன்பின்னர் வேறுபத்தியபரி காரங்களுமுளவாம். இப்படியே மாயையாற் பிரதிபந்தஞ் செய்யும நந்தரஞ் சற்றேயறிவுவிளங்கப்பெற்ற வச்சேதனன் சிவனது ஆணை வடிவமாகிய வேதசிவாகமங்களென்னும் வைத்தியநூலிற் பெறப்ப டும் பத்தியபரிகாரங்களைப் பெற்று ரோகநிவிர்த்தி யடைவனென்ப து திண்ணம்! திண்ணம்!! இந்த வுண்மை விசாரத்தால் ஆணவமா யைகளின் றன்மை வெளிப்பட்டமையால் மேல்கன்மம் என்னுமல மினைத்தென்பதையுஞ் சற்றுவிசாரிப்பாம். கன்மம் என்பது நெல்லு க்கு முளைபோல்வதொன்றும். நெல்லினிடத்துத் தவிடு, உமி, முளை, என்னும் வேறுபாடுகளுண்டாதலின், அவற்றுள் தவிடு ஆணவத்து க்கும், உமி மாயைக்கும் உவமிக்கப்பட்டபடியே முளை கன்மத்துக் குவமிக்கப்படுமெனவறிக. முளையில்லையேல் அந்தவித்துக்குச் சீவிப் பின்றும். நெல்லினிடத்து இந்தமூன்றுந் தொன்மைச் சுபாவமாதல் போல் ஆன்மாவினிடத்து மும்மலங்களுஞ் சுபாவமாதல்கண்டறிக. மேலுவமையால் கன்மமில்லையேல் பிறவியில்லையென்று வெளிப்பட் டது. ஆகவே, பிறவிக்குக்காரணம் கன்மம் என்பது அமையும். அந் தக்கன்மம் என்றுவந்தது என்று கடாவுங்கடாக்களுக்கு இறைதரப் பட்டமையு மிதனுனேபோதரும். இவ்வுண்மையறியாதார் முன்செ ய்தபாவத்தா லிப்பிறவியில் துன்பமாயி னம்முற்பிறவியில் பாவம்வர க்காரண மென்னையெனவும், அதற்குமுற்பிறப்பி லார்ஜித்ததெனின ப்போது மதுவந்தகாரண மென்னையெனவுங்கடாவி முதலில் பாவம் வந்தவாறென்னையென மயங்குவர். பாவமிடையில்வந்ததன்றும். எ ன்று ஆன்மாவுண்டு, அன்றேமலத்திரய முண்டாகையால் கன்மத்தி ன்காரியமாகிய பாவபுண்ணியங்களு மநாதியேயுண்டென்று கொள் ளப்பட்டன. "வினையிலேகிடந்தேனைப் புகுந்துநின்றுபோது நான்வினை க்கேடனென்பாய்போல, வினையனனென்றுன்னையறிவித்தெம்பிரானுய்க் கு" என்ற திருவாக்கானுமுணர்க. இந்தக் கன்மத்தால்வரு மநுபவ மெனைத்தென யோசிக்கையில், ஆன்மா யாதாமொரு சரீரத்தையெ டுக்கையி லதனைக்கூட்டி முடிப்பதேயாம். இதனுல், கன்மமில்லையே ல் மாயாபோகமுண்டாவதும் அமையாது. மாயை யநாதியேயாயினு ம், அதுகாரியப்பட்டுத் தேகபோகங்களாய் வருகையில் கன்மத்தி ன்முறைப்படி வருகையால் கன்மமே தேகபோகநுகர்ச்சிக் கீடா னபிறவிகளைத் தருமென்பது சொல்லப்பட்டது. மேலிடங்களி லாணவமாயைகளை நோயுமௌடதமுமாக வுவமித்தபடியே மீண் டுக்கன்மத்தைப் பத்தியமாக வுவமிப்பதேசாலும். நல்ல பத்தியத்

தால் ரோகநிவிர்த்தியும், கெட்டபத்தியத்தால் ரோகவிர்த்தியுமுண்டாத லநுபவமாகையால். கெட்டவினையால் பிறவியநந்தமும், நல்லவினையால் பிறவியொடுக்கமு முண்டாதல் உவமித்தறிக. ஓரான்மா தேகத்தை யெடுக்கையில் எடுக்குந்தேகத்தைக் கூட்டுவதும், எடுப்பதற்குமுன் விடுந்தேகத்தைத் தவிர்ப்பதுங் கன்மமேயாகையால், விடுவதாகிய மரணத்தையும், எடுப்பதாகிய ஜநநத்தையுந் தருங்காரணமாயுள்ளது கன்மமென்னுந்துணிவு நன்குகாணப்பட்டது. அந்தக்கன்மம் ஆன்மாவுக் குடலைத்தருங்கா லந்தந்தவுடற்ருறும் வடிவு, நிறம், சாதி, ஒழுக்கம், நெறி, உணவு, சுகம், துக்கம், ஆயுள் என்றின்னவேறுபாட்டால் போகத்தை யூட்டுமாகையால் அது அநாதியேயமைந்திருக்குந் தன்மையையன்றி யமையாமை வெளிப்பட்டது. "இன்னவினையின்னதலத்தின்னபொழுதின்னதனு, லின்னபடியாய்ப்பொருந்துமென்றிசைத்தே-யன்னவினை, யன்னதலத்தன்னபொழுதன்னதனுலன்னபடிப், பின்னமறக்கூட்டும்பிரான்" என்னும் ஆன்ருேரநுபவ வுரையானுங்காண்க. இதனுல் வினையையன்றி யொருபோகமு முண்டாகாதெனவும், அந்தவினையும் சிவனுணையி னிகழுமெனவும் பெறப்பட்டது. எங்ஙனமெனின், சூத்திரதாரியால் பதுமையாடுகையில் பதுமைக்கும், அவனுக்குமிடையில் சூத்திரமொன் றியங்குகையால் சூத்திரமன்றிப் பதுமையாடாமையும், சூத்திரதாரியையன்றிச் சூத்திரமியங்காமையும் வெளிப்பட்டது. இதனுல் கன்மத்தா லான்மா தேகாதிகளை யெடுக்குமேனும், கன்மஞ்சடமாகையால் அதுசிவனையன்றி யமையாதெனவறிக. மேல்விசாரத்தால் கன்மமென்பதொருபொருள் சிவனுக்குத் துணைக்காரணமா யிருப்பதொன்ருக நிச்சயிக்கப்பட்டது. ஆகவே, அதுசிவனுடைய சத்திபேதங்களில் பரிக்கிரகமாத்திரமாகவே கொள்ளப்படும். கன்மம் நித்தமு மநாதியுமாயின், தநுகரணுதிகள் வந்தபிறகே யவற்றின்சார்பா லான்மா கன்மங்களை யார்ஜிக்குந்தன்மை யுண்மையா லத்தனுவாதிகளை யடைவதன்முன்னரே யான்மாவுக்குக் கன்மம் என்பதொன் றெங்கிருந்து வரக்கூடுமென்னுஞ் சங்கையுண்டாதலால் மேல்சமாதானத்தை யோசிப்பாம். ஆன்மாவை யநாதியேபற்றிய தொருமலமாய்ப் பின் செய்கை ரூபத்தா லியக்கப்பாட்டை யடைவதொன்ருய் வெளிப்படுந் தன்மையேசாலும். அப்படியந்தக்கன்மம் நிகழப்பெறுங்கால் சிவனுடைய சத்தியாகிய கிரியையென்னுங் கன்மத்தையன்றி யமையாது. அதுசெய்தலும், பின்னது செய்வித்தலுமே யிலக்கணமாக வுடைமையாந் தன்மையுண்மையால். கன்மம், மாயை, ஆணவமென்னுமூன்றுஞ் சடங்

களும், ஆன்மா சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடையதுமாகு மிலக்கணப் பெற்றியனவாகுந தன்மையால் ஜடங்களாகிய வம்மூன்றுங் கிரியைமாத்திர முடையனவாகி அத்துணையுந் தாமே யியங்குமாற்றல்பெறாது சிவனியக்குவித்தா லியங்கும். ஆன்மா கிரியைமாத்திரமேயன்றி ஞானமுமுடையதாகி அத்துணையுந் தானே யியங்குமாற்றல் பெறாது சிவனுரதுசேட்டிப்பால் அறிந்து மசைந்து மியங்குமெனவறிக. அசேதனங்களுக்குக் கிரியைமாத்திரமும், சேதனத்துக்குக் கிரியையோடு ஞானமு மிலக்கணமாகுந்தன்மையால். அவை தாமே யியங்கப்பெறாவாகலின் அவற்றை யந்தந்தப்படி யிசைந்தியங்கப்பண்ணுவான் ஞானக்கிரியாஸ்வரூபனாகிய சிவனாதல் துணியப்பட்டது. அவன் நின்மலனாகையால் "எல்லாமுன்னடிமையே யெல்லாமுன்னுடைமையே யெல்லாமுன்னுடையசெயலே" என்னும்பிரமாணமே யிவ்வுண்மையை நிறுத்தும். அடிமையென்றது ஆன்மாவையும், உடைமையென்றது மலமாயாதிகளையும், செயலென்றது ஆன்மாவினது ஞானக்கிரியைகளின் சேட்டையையும், மலத்திரயங்களினது கிரியையின் சேட்டையையுமே யெனவறிக. இந்தவுண்மையால் கன்மமொன்றைக் கூட்டுகையிலுஞ் சிவனையன்றி யமையாமையால், எல்லாஞ் சிவச்செயலென்றது அமைதல் திண்ணம்! திண்ணம்!!

இந்தக் கன்மமலம் தூலம், சூக்ஷ்மம், அதிசூக்ஷ்மம் என்று மூவகைப்படும். இவற்றுள், வினைகள் தூலமும், வினைகட்குப் பின்பலனைப் வருகிற புண்ணியபாவங்கள் சூக்ஷ்மமும், இப்புண்ணிய பாவங்கட்குப் பின்பலனைய்வருகிற இன்பதுன்பங்கள் அதிசூக்ஷ்மமும் என்றுசொல்லப்படும். இவை ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என மூன்றுபேதமாக விரியும். இருவினைகளே ஆகாமியமாகவும், புண்ணியபாவங்களே சஞ்சிதமாகவும், இன்பதுன்பங்களே பிராரப்தமாகவுங் கொள்ளப்படும். ஆகாமியம் பயிரிடுதலை ஒக்கும். சஞ்சிதம் அப்பயிரால் உண்டாகும் பலத்தைக் களஞ்சியத்திற் கட்டிவைத்தலை ஒக்கும். பிராரப்தம் களஞ்சியத்திலே வைத்ததைச் சிறிதுசிறிதாக எடுத்துப் பொசித்தலை ஒக்கும். இந்தக்கன்மங்கள் ஆன்மாக்கள் நினைத்தபடி ஒருபோதும் பயன்படா. ஒருவன் முன்னர்ப்பனையும், பின்னர்க்கீரையும் உண்டாக்கினால் பின்னர் உண்டாக்கிய கீரை பதினைந்து நாளைக்குட் பிரயோசனமாகும். முன்னருண்டாக்கிய பனை பதினைந்து வருடத்தின்பின் பிரயோசனமாகும். அதுபோல ஆன்மாக்கள் முன்பு செய்த கன்மம் முன்னே பயன்படாமல் வெகுசன

னத்தின்பின் பயன்படுதலும், பின்பு செய்த கன்மம் உடனே பய ன்பட்டு வருதலும் மரபாம்.

இவை ஆதி தைவிகம், ஆதிபௌதிகம், ஆதி ஆத்மிகம் என் னுந் தாபத்திரயங்களாக வுயிர்களுக்குப் பொசிப்பாகும். இவற்று ள், தெய்வத்தால் வருவன ஆதி தைவிகம். அவை மாதாவின் கருப் பத்திலும், சனனமரணங்களிலும், சுவர்க்க நரகங்களிலும் உண்டா கு மின்பதுன்பங்கள். நீர்-தீ-காற்று முதலிய பூதங்களால் வரும் இன்பதுன்பங்கள் ஆதிபௌதிகம். சரீரத்தாலும், மனத்தாலும்வரு வன ஆதிஆத்மிகம். ஒருவன் களஞ்சியத்திலே கட்டிவைத்த நெல் லானது தீப்பட்டு வெந்ததுபோல ஞானாசாரியருடைய திருநோக்க த்தினாலே சஞ்சிதந்தொலையும். உணவுக்கு வைத்தநெல்லானது குறி த்தகாலத்திலேயுண்டு முடிந்ததுபோலப் பிராரப்தம் உடம்புடன் அ ழியும். விதைத்துவைத்த நெல்லு மழையின்றி எரிந்ததுபோல ஆ காமியம் நின்மல ஞானத்தினாலே அழியும். "சஞ்சிதந்திருநோக்காற் போம் பிராரத்தந் தனுவோடேகும், விஞ்சுமாகாமியந்தான் விளங்குஞானத் தினாற்போம், செஞ்சயான்செய்தவெல்லாஞ் சிவன்செய லென்றுணர்ந்தால், மஞ்சனே வினைத்திறங்கள் வந்துனைச்சந்தியாவே." என்றதனானுங்காண் க. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இதுகாறும் விவகரித்துக் காட்டிய நியாயங்களால் தேகான்ம வாதியாகிய வுலகாயதன் கூற்றிரிந்தது. இவன் சிவபரங்களை யின் மைப்பொருள்களாகக் கூறிய வாபாசத்தையே நவநவமாயெடுத்து வி யவஸ்தை முகத்தாற் கண்டித்துப் பதார்த்தத்திரயங்களி னுண்மை யைக் கரதலாமலகம்போல் விளங்க வுரைத்தோமாகையா லினி யே னையவாபாஸ மதங்களையு மொறுவாறு சங்க்ஷேபமா யெடுத்துக்கா ட்டிப் பூர்வபட்சஞ் செய்வாம்.

மேலிடத்தில் ஸ்ரீவாசகத்தையே பிரமாணமாயெடுத்துக் காட் டி, அந்தவாதரவுகொண்டே புறச்சமயிகளி னாபாசங்களைக் கடியத் தொடங்கினோமாகையால் "நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர்" என்றவ சனத்திற்குப் பிற்போந்த வசன பரியாலோசனையானே யேனையவா பாஸங்களையும் விளங்கவுரைப்பாம்.

அவை (சுற்றமென்னுந் தொல்பசுக்குழாங்கள், பற்றியழைத்தப்பதறி னா) எனவும், (விரதமேபரமாகவேதியருஞ், சரதமாகவேசாத்திரங்காட்டின

ர்)எனவும், (சமயவாதிகடத்தமதங்களே, யமைவதாகவரற்றிமலைந்தனர்) எனவும் வருவனவாம். இவற்றை முறையே விசாரிக்கின்,முதற்போந்த வசனம் தேகவாதத்திற்றானே முடிந்தது (நவிலினிம்மனைமக்களுக்கொரு துணை நாமலதிலையென்றே, கவலையுற்றரன் றாண்மறந்தனையுனைக் காலனர் கொடுபோகிற், குவலயத்தடைந் திவரைநாடொறும்புரந் திடுவையோகுறிக் குங்காற், சவலைநெஞ்சமேசிவனலாதுயிர்க்குயிர்தானுமோர்துணையாமே) என்னு முண்மை விளக்கத்தாற் கண்டிக்கப்பட் டொழியும். வைதிகராயுள்ளபேர் கேவலங் கர்மடாளாய் வாஜபேய முதலிய வநந்தகாமியங்களிலுழன்று ஞானகாண்டமாகிய வுபநிடதங்களைச் சிவாகமஸித்தாந்த பரியாலோசனையானே யுணர்தலின்றி மருட்சிபூண்டு திரிகின்றாராகையால் (சுருதிவழியொழுகினர்கள் சுவர்க்கத்தார்) என்னு முண்மைக்கநுகுணமான வவ்விரண்டாம் வசனத்திற்போந்தமதமுங் கண்டிக்கப்பட்டழியும். மூன்றாவது வசனத்திற் போந்த வெல்லாச்சமயங்களும் (தம்மை-யுணராருணரா ருடங்கியைந்துதம்மிற், புணராமைகேளாம்புறன்.) என்னு முண்மைவிளக்கத்தாற் சிறப்பழிந்திழியும். மேல் (மிண்டியமாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ்சுழித்தடித்தாஅர்த்து) எனவும், (உலோகாயதனெனு மொண்டிறற்பாம்பின் - கலாபேதத்தகடுவிடமெய்தி) எனவும் போந்த வாக்கியத்வயங்களிற் பெறப்பட்ட சமயங்களிரண்டு மவைதிகங்களாகிய நாத்திகங்களேயாம். மாயாவாதியாவான் பாசபசுக்களை யில்பொருள்களாகவும், பசுவாகிய தன்னையே யுள்பொருளாகவுங் கொண்டு மலைந்தபடி யுலகாயதன் பாசத்தை மாத்திரமே யுள்பொருளாகவும், பதியையும், பசுவையு மில்பொருள்களாகவு மலைந்து கூறுந் தன்மையா லிருவரும் நாத்திகராவதி லென்னதடையுளது? தேகான்மவாதியாகிய உலகாயதனைமாத்திரம் நாத்திகனென்று கூறி யேகான்மவாதியாகிய மாயாவாதியை யங்ஙனங்கூறா தொழிவது விவேகத்தாழ்ச்சியாம். இப்படியே பௌத்தாதி மதங்களிடத்துங் கண்டுகொள்க. இவ்வுண்மையைச் (சமரஸஞானதீபம்) என்னு நூலில் யாம் செவ்விதின் விளக்கியிருக்கின்றேமாண்டுங் கண்டடங்குக. இவ்விரண்டுசமயங்களுந் துல்யமாவது கண்டேயன்றோ விரண்டையு மொருசேரக்கூறி ஸ்ரீமத், ஆசாரியஸ்வாமிகளும் பழித்தனர்? ஏனையபுறச்சமயங்களை நோக்க விவைதாமே யுயிர்களைமருட்டி வஞ்சிப்பனவாகலி னிவற்றுட் பின்னையதாகிய வுலகாயதத்தையே முன்னர்க்கூறிக் கடிந்தொழித்தோமாகையா லினி யிங்கே முன்னையதாகிய மாயாவாத சொரூப மினைத்தென்பதையுங் காட்டிப் பூர்வபட்சஞ்செய்வாம்.

இம்மாயாவாதம் அஸத்தியவாதமென்னும் பொருளைத்தருவ தொன்றாகலின் மிச்சாவாதமெனவுஞ் சொல்லப்படும். இதனுண்மையை (உத்தமவாத தூலவாதூலம்) என்னுநூலின்வழி விரிவாயெடுத்துக்காட்டிக் கண்டித்திருக்கின்றோமாயினு மின்னுங்கொஞ்ச மீண்டு விவகரிப்பாம்.

நாத்திகவாதம், மிச்சாவாதம், அஸத்யவாதம், பிரச்சன்னபௌத்தவாதம் என்னும் பரியாய நாமங்களையுடைய மாயாவாதந்தானே பிரகிருதத்தில் (வேதாந்தவாதம்) என்றுலகில் மூடஜனங்களால் வழங்கப்பட்டு வருகின்றது. அத்வைதவாதமெனவுங் கூறுகின்றனர். வேதாந்தமாவதும், அத்வைதமாவதுஞ் சித்தாந்தமென்னுஞ் சைவத்துக்கேயுரிய பரியாயநாமங்களாதல் சிவஞானபோதமுதலிய வுண்மைநூல்களின்வழி விளங்கும். இவ்வுண்மையறியாதார் ஏகான்மவாதம், அகம்பிரமவாதம், அத்யாஸவாதம், ஆரோபவாதம், பிராந்திஜந்யவாத மென்றற்றொடக்கத்துப் பலபெயர்களையுடைய வச்சூனியவாதத்துக்கே மேற்போந்த வேதாந்தமுதலிய பெயர்களை யிட்டு அபார்த்தங் கூறிப்புலம்பித்திரிவர். அம்மதத்தினுபாசம் வருமாறு. பிரமமொன்றேயுள்ளது என்பதைச் சாதிப்பான்றொடங்கி வேதத்தைச் சான்று கூறுவர். வேதமோவெனின், ஜீவபரங்களையும், அவற்றின் ஸம்பந்தங்களையுங் கூறுவதால் ஏகவாதத்தின் றலையிலிடி விழுந்தழியும். ஒன்றெனச் சாதித்தல் பரமார்த்தமும், இரண்டெனச்சாதித்தல் விவகாரமுமெனப் பின்னுங்கூறுவர். அவ்விவகார பரமார்த்தங்களே யவர் மதத்திற் போந்திடும் பெத்தமுத்திகளாகும். பெத்தமுத்திகளிரண்டு மோர்பொருளுக்கே காலவேறுபாட்டானுண்டாமென்பது நியாயமுகத்தாற் போதரலால் அவர் கூறும்பிரமமாகிய வொன்றற்கேயன்றோ வவையுரியவெனச் சாதிக்கப்படும்? பெத்தமுத்திகளும், அவற்றைக் கொண்டதொரு பொருளும், அங்ஙனம் வேறுபடுத்தியகாலமு மென்பனவாதி விவகாரங்கள் பெறப்படுமுண்மைக்குமுன்னர் அவர்கூறும் ஏகமெங்கே போகுமோவறிந்திலம். பிரமம் பிரமேயமும், வேதம் பிரமாணமும், பிரமமொன்றேயெனவறிந்துரைத்த பொருள் பிரமாதாவும், அறிந்தவறிவு பிரமிதியுமென வெளிப்பட்ட நியாயமுகத்தால் ஏகவாதஞ் சீவிக்கவிடம் பெற்றதெங்கே? ஏகமாகியதன்னையன்றி யெல்லாம் மிச்சையெனக்கண்டதனால் வேதமுமிச்சையாகி அதனாற் சாதிக்கப்போந்த வறிவாகிய தானும் மிச்சையாதலி லிழுக்கென்னோ? இவ்விபரீத ஞா

னம் யாண்டும் பயன்செய்யாதென்க. மேற்கூறிய விவகாரபரமார்த் தங்களிரண்டு நித்தமாய் விளங்கலி னவ்விருதன்மையும் பிரமசுபா வமென நாட்டப்படும். பிரமந்தானே விவகாரத்தையும், பரமார்த்த த்தையும் பெற்று விவகாரமிருந்தபோது பரமார்த்தமும், பரமார்த் த மிருந்தபோது விவகாரமுமொழிந்து நிஜாநுபூதியி னிலவுந்தன் மை அன்னோர் பிரஸங்கமாதலால் விவகாரப்பிரமம், பரமார்த்தப்பிர மமென்னும் பகுதியால் எமதுபரியாஸத்துக் குள்ளாகி யலக்கணுற்ற ழியு மதிசய முரைப்பரிது! உரைப்பரிது!! ஸ்ருஷ்டி ஸ்திதி லய கார்ய காரணங்களாகிய பஞ்சகிருத்யம் நித்தமெனக்கோடலும், அ வற்றை விவகாரமெனக்கூறலும் அவர் மதமானபோது எங்ஙனே ப ஞ்சகிருத்யங்கட்கு முடிவுண்டாகி விவகார பிரமமொழிந்து, பரமா ர்த்தபிரமந்தானே நிலைக்கும்? விவகாரமொழிந்திடுகையாற் பரமார் த்தமென்பது மற்றுத் தனது ஸ்வபரப்பிரகாச நிலையி லவ்வேகமாகி ய பிரமம் அமைதலுமென்றோகூடும்? இனிப்பரமார்த்த மென்பது தானென்னை? கண்டவர்யாவர்? தன்னையன்றிப் பரமார்த்தத்தில் வேறுகாணாத வொருவன் பரமார்த்த ஞானம் பகர்வதெங்ஙன்? பக ர்ச்சி விவகாரமாயிற்றே! தன்னில் வேறானோர்க்கன்றோ பகர்தல் கூடு ம்? பரமார்த்தங்கழன்று விவகாரத்தில் வந்தபோது முன்பரமார்த் தத்தை விவகரித்ததெனின், விவகாரத்திற் பரமார்த்தமின்றாகையா ல் பரமார்த்தஸ்வரூபம்பாழ்பட்டழியும். சுழுத்தியநுபவத்தைச் சா க்கிரத்தில் விவகரிப்பதுபோலா மெனின், கேவலசகலத் தாக்கால வை நிகழ்தலால் விவகரித்த பொருளுக்கு வேறான சகல கேவலங்க ள் சித்தித்தவாறு பரமார்த்தத்தை விவகாரத்திற் பிரதிபாதிக்கும் பொருளுக்கு வேறான பொருள்களன்றோ சித்திக்கவரும்? சுழுத்தி ஜாக்கிரங்கள் அநுபவமும், ஆணவமாயா துவந்தங்க ளவ்வநுபவத் தை யூட்டுவனவும், அவற்றையுடைய தொருபொருள் முறையேயு ண்டுழல்வது மானபடியே யன்றோ விவகார பரமார்த்தங்களிலுங் கொள்ளவரும்? பாசத்தோடு விரவியுண்டாகு மநுபவத்தால் விவ காரமும், பதியோடு விரவியுண்டாகு மநுபவத்தால் பரமார்த்தமும் பசுவாகிய சிற்றறிவுக்கு நிகழுந்தன்மையால் மூன்றுபொருள்களுந் தத்தங்கதிமாறாது விவகார பரமார்த்தங்களிலும் நிலைக்கும்! நிலைக் கும்!! இப்படிக்கன்றிப் பரமார்த்தத்திற் றன்னையே தான்கண்டு சு கிப்பதென்னும் அவலஞானம் நிலையாது! நிலையாது!! தன்னைத்தா ன் கண்டநுபவித்தலுக் கோருபமானங் காட்டல்வேண்டும். கண்ணு

னது தன்னைக்கண்டு சுகிக்கினன்றோ வறிவானது தன்னையறிந்து சுகிக்கும்? கண்ணாடியின் முன்னன்றிக் கண்ணானது தனதிலக்கணத்தைக் காணுவாறுபோல் அறிவானது திருவருளின் முன்னன்றித் தனதுண்மையிலக்கணத்தை யறிந்திடுவது கூடாது! கூடாது!! இவ்வுண்மைகளால் தன்னிற்றன்னைத் தானேகண்டநுபவித்த லென்னும் பரமார்த்தம் தலைமயக்கெய்தியது காண்க.

பதியைவிட்டுத் தானே யொருதனி முதலுண்டென்று சாதிக்கப்புகும் அம்மதத்தினர் கூறுநியாயங்களை யினிது பரியாலோசிப்பாம். காணப்படுவனவற்றைக் காண்பதும், கேட்கப்படுவனவற்றைக் கேட்பதும் எந்தவறிவோ, அந்தவறிவே தானென்றறியத்தக்கதென்பர். பார்க்கப்படுகிற வனைத்தும் பொய், அல்லது மிச்சையென்று வாதித்துத் தலையுடைத்துக்கொள்வது அவர்மதமாயின், அவர் பார்த்தது பொய்யானதொன்றையே யல்லவா? இல்லாத பொருளைப் பார்த்தாரென்கையால், அவர் பார்த்ததே யில்லையெனவன்றோ முடியும்? அதனால், பார்த்தபொருளு மில்லாததாகவே யன்றோ முடியும்? அதுபோல், கேட்டபொருள் பொய்யாகும்போது கேட்டதும் பொய்யாகுமல்லவா? அப்படியே கேட்டதொருபொரு ளிருந்ததும் பொய்யாகுமல்லவா? இவ்வுபமான வாயிலாக வுபமேயமாகிய தானாகிய வறிவுண்டென்று சாதிக்கப்படாமையின் முழுநாத்திகம் பெற்று அவர் புன்மதம் அழியும்! அழியும்!! பின்னு மப்பேய்மதத்தினர் கூசாது பேசும் பிழைகளையும் பெயர்த்தெறிவாம். ஏகமாகிய பிரமம் தேகாதி பிரபஞ்சமாக விரிந்ததன்மை பொன்னானது பலபணியாயிருந்த தன்மைபோலு மென்பார். "செய்வோரின்றிச் செய்வினையின்மையின்" என்றபடி ஒருவன்செய்யப் பொன்னானது பலபணியாகுமதொழிந்து தானே யாவதெப்படி? இதனால், பிரமம் பிரபஞ்சமாகக் காரியப்பட்டது மொருவனாலாயிருத்தல்வேண்டும். செய்பொருளும், செயப்படுபொருளுமாகப் பிரமத்தையும் பிரபஞ்சத்தையுங் கொள்ளவருங்கால் செய்பொருளாகிய குலாலனினுண்டாகாது செயப்படுபொருளாகிய பாண்டங்கள் மண்ணினுண்டானவாறுபோல் பிரமத்தினின்றும் பிரபஞ்சமுண்டாகாது பிரமத்தில் வேறுளமாயையிற் பிரபஞ்சமுண்டாகுந் தன்மை சாதிக்கப்படும். சிலம்பியிடத்துண்டாகு நூலுபமானத்தால் செய்பொருளாகிய சிலம்பியினிடத்துச் செயப்படுபொருளாகிய நூல்வரக்கண்டாமெனின், நூல்வந்தது சிலம்பியினது தேகத்தன்றித் தேகியாகிய வான்மசித

தி னிடத்தன்றென்பதை யூகிக்கின் மேலாட்சேபம் நசிக்கும்! நசிக்கும்!! சிலம்பி திட்டாந்தத்தா லதனிடத்துண்டான நூலை அத்யாஸமெனலடாதபடிப் பிரமத்தினிடத் துண்டாகும் பிரபஞ்சத்தையு மத்யாஸமெனல் கூடாமையறிக. அத்யாஸமென்றும், மிச்சையென்றும், கற்பிதமென்றும் பலவாறு புலம்பிப் பிராந்தி ஞானம் பேசித் திரிவார் உடனே மறந்து காரணகாரிய வாதத்தை யபேட்சித்தல் கேவலம் மூடத்தன்மை யென்க.

மேலே விசாரித்துக் கழித்த பரமார்த்த விவகாரங்களை யின்னுங்கொஞ்சம் பரியாலோசிப்பாம். பரமார்த்தமென்பது உலகந்தோன்றாது நான் பிரமமென் றறிந்திருப்பது. விவகாரமென்பது நான்பிரமமென் றறிவிழந்து உலகந் தோன்றிக்கொண்டிருப்பது. பரமார்த்தத்திலே நின்றும் விவகாரத்துக்கு வருதலும், விவகாரத்திலே நின்றும் பரமார்த்தத்துக்குப் போதலுமாகிய விரண்டநுபவங்க ளொருவனிடத்துக் காண்கையா லவ்விரண்டி லொன்று மெய்யும், மற்றொன்று பொய்யுமாதல் கூடாது. பரமார்த்தத்தி லிருந்து தானே விவகாரத்துக்கு வருத லேற்றமையாலும், பிரமத்திலிருந்துதானே யுலகம் காரியப்பட்டதென்று கூறுகையாலும் பரமார்த்தமாகிய பிரமம் சத்தியமானபடி விவகாரமாகிய வுலகம் வெறும் பொய்யாய்த் தோன்றுகையால் பரமார்த்த மதற்குற்பத்தி காரணமாகாதெனின், சிலம்பி திட்டாந்தத்தாற் பிரம முலகுக்குபாதானமா மென்றறிழுக்காம். பரமார்த்த விவகாரங்களை விசாரிக்கப் புகுந்து உலகுக்குபாதானம் பிரமமென்ற தொடிந்தமையா லவ்வுபாதானம் வேறியாதென்னு மாசங்கை நிகழும். மேல், ஸித்தாந்த முறைமைப்படிப் பிரமத்திற்கு வேறான மாயையேயன்றோ வவ்வுபாதானமென்றல் நிலையுதல் பெறும்? அன்றியும், விவகாரமென்னுமிடத்தி லறியாமை துக்க வசத்தனாகுஞ் சீவன்றானே பரமார்த்தத்திற் போந்த சுத்தவறிவாகிய பிரமமென்றனு நிலையாது. சுத்தவறிவாகிய பிரமமொருமுதலும், மலினவறிவாகிய சீவனொருமுதலும், அம்மலினமாகிய பாசமொரு முதலு மென்பதே துணிபு.

இங்ஙனநிற்க, சித்தாகிய பிரமத்தி லசித்தாகிய பிரபஞ்சந்தோன்றுதற்குக் காரணம் பகருமிடத்து அங்ஙனந்தோன்றுத லியல்பென்றுகூறுவர். வன்னிக்குஷ்ண மியல்பாதனேக்கு நியாயத்தாற் பிரமத்தியல்பெனப்படும் பிரபஞ்சம் பிரமத்தைப்போலவே சத்தாதல் பெ

றும். அஃதசத்தென்ப தவர்க்கு மொப்பாகையா லதனைப் பிரமத்தி
யல்பென்று பேசியது பேதிக்கப்பட்டது. ஒளியினிடத் தியல்பாக வு
ண்டாயிருக்கும் கருமைபோலன்றோ யாம் கூறுவதெனின், ஒளியி
னிடத்துக் கருமையியல்பன்று. (அங்கியானது தானுமொன்றை யணைந்
து நின்றுநிகழ்ந்திடும், பங்கியாதுயிர்தானுமிப்படிபற்றியல்லதுநின்றிடாது"
என்றபடி யொளியானது தனித்து நிற்றலின்றிக் காட்டமுதலிய
வொன்றைப் பற்றி நிகழுந்தன்மைத்து. அதுபற்றி யொளியை வர்
த்திப்பித்த காட்டமாதிகளி லுண்டாங் காரியமாக வன்றோ கருமை
யினுண்மையை மேலோர் கழறுநிற்பர்? ஒளியின்கண் ணியல்பாக வு
ண்டாமென்றகருமை மீண்டு மவ்வொளியிலேதானே யொடுங்குவ தி
ன்மையால், பிரமத்திலே யொடுக்கங் கூறப்படும் பிரபஞ்சத்துண்
மைக் குபமான நிதரிசனமாதல் சாலாது. இன்னும், சுத்தமாயுள்ள
பிரமம் அசுத்தத்தைப் பொருந்தின காரணத்தை வினவுங்கால் ஆ
காயத்தை மேகம்வந்து கூடிய சம்பந்தத்தைச் சான்றுரைப்பர். அ
ங்ஙனமேல், முத்தியடைந்தோர் மீண்டு மசுத்தமெய்துவ ரென்பது
வசித்தம். இதுகாறுங் கடிந்துரையாடிய நியாயங்களால் பந்தத்தை
ப் பிராந்தியென்றும், காரியமென்றும் இயல்பென்றும் பலவாறு வெ
றிகொண்டு பிதற்றியதை மறுத்தோமாகையால், மீண்டுமவர் பிரமம்
விளையாட்டாக வுலகமாயிற்றென்னும் அவிவேகத்தையும் வெளியாக்
கித் திருத்துவாம். விளையாட்டென்பது விழைவை யபேட்சித்த தொ
ன்றாகையால் (வேண்டுதல்வேண்டாமையிலான்) என்ற திருவாக்கை வி
ரோதித்தழியும். ஸ்ருஷ்டியை யபேட்சித்த விளையாட்டென்னு மப்ப
ரனது விழைவு அந்தஸ்ருஷ்டிக்குப் பூர்வமுண்டாகாமையால் வெறு
ப்பேயன்றோ நைஜமெனக் கூறலமையும்? இதனால், விழைவு வெறு
ப்புகளை யுடைய சுகதுக்க வடிவமான வினையிருமையிற்பட்ட தொ
ருபொருளெனவே யன்றோ அப்பிரமம் பீழையுற்றழியும்? விளையா
ட்டென்பது துக்கரகிதமா யிருப்பதொன்றாக, பிரமந்தேகமாகிய
விலங்கிற்பட்டுச் சீவனாகி யிருவினைப்பாசத்தான் மொத்துண்டு வரு
ந்துமேல் அந்தோ வெப்படியோ வதனை விளையாட்டென்று கோடல
மையும்? லீலையென்று கூறிய பின்னே காலைவாங்கிக்கொள்ளு ம
ன்னோருபாதியெனவு மதனைப் பிரமத்துக்கேற்றி யுபாதியுற்றழிவர்.

இம்மட்டேயன்றிப் பலநிறமணிகளூடு சரடொன்று நுழையு
மாபோல்யோனிபேதங்களாகிய வுடல்கடோறு மப்பிரமம் நுழைந்தி
ருக்குமென்று மவர்கூறி மகிழ்வர். நூலும், மணிகளும் விஜாதிகளா

ம். மணிகளூடு சரடு தானேயேறுது. இப்படியே பிரமமுந் தேகாதிகளும் விஜாதிப் பொருள்களாம். தேகாதிகளிற் பிரமந் தானே புகமாட்டாது. பிரமஞ் சித்தாதலாற் புகுமெனின், அது பந்தமாய் முடிதலிற் புகுந்தபொருள் பிரமமாகமாட்டாது. புகுந்தது தானியாதெனின், சுத்தவறிவாகிய பிரமமென்னுது மலினவறிவாகிய வான்மாவென்பதே மேலோர் துணிவு. மற்றோருபமானத்தை யோசிப்பாம். கண்ணுடியில் நிழல் தோய்வற நின்றாற்போலச் சரீரத்திற் பிரமந்தோய்வற நிற்கு மென்பதொன்று. கண்ணுடியிற் போந்த பிரதிபிம்பங் காரணமாக வந்தக்கண்ணுடி சலித்திடினன்றோ பிரமத்தின் பிரதிபிம்பங் காரணமாக வதற்கிடமாகிய விந்தவுடல் சலித்தல் கூடும் ? உடலுக்குப் போக்குவரவுக ளுண்டாகையா லந்நிகழ்ச்சி பிரதிபலன சையோகத்தா லுண்டாமென்பது ஸர்வாபத்தமாம். அன்றியும், கண்ணுடி -பிம்பம் - பிரதிபிம்பம் என்பவற்றின் விசாரமு மேகவாதத்தை யிடிக்கும். மேல், காந்தமசைவற நிற்க வதன் சந்நிதியி லிரும்புசலித்த தன்மைபோலப் பிரமம் விகாரமற்று நிற்க வதன்சந்நிதியி லுடல்போக்குவரத்தைச் செய்யாநிற்கு மென்பர். பிரமம் அகண்டிதமாகையால் அதனுடைய சந்நிதியல்லாதவிட மோரிடமு மில்லையாகையால் கடபடாதியாயுள்ளவை யெல்லாம் போக்குவரத்தைச் செய்யவேண்டும். அங்ஙனமின்றி யுடன்மாத்திரமே சேட்டித்தலால் பிரமசந்நிதியி லெல்லாஞ்சேட்டிக்கு மென்ற திழுக்காய் முடியும். சேட்டிப்பிக்கும் பிரமத்தையன்றி வேறுபொருளைக்கொண்டால் அத்வைதஹானி யுண்டாகிறதென்று துக்கங்கொண்டாடுமன்னோர் சேட்டிக்கும்பொருளை யதற்கு விஜாதியாகக் கண்டுபிடித்தவருமையே! அருமை!! சேட்டித்தபொருளும் சேட்டிப்பித்த பொருளுமொன்றே யெனின், தன்மைவேறுபட்டுயர்வுதாழ்வுக ளுண்டாயினமைக்குக் காரணம் பகர்தல்வேண்டும். அன்றியும், காந்த மிரும்பையீர்ப்ப தொன்றொழிய விடுவதன்று. அப்படியே பிரமசந்நிதியி லுடலுக்கு வரத்துமாத்திரமே யன்றிப் போக்குரையாடல் பொருந்தாது. காந்தமு மிரும்புமென்னுந் துவிதமுண்டாதலானு மேகவாதமெடுபட்டுப்போம்.

இதுநிற்க, சொப்பனத்திற் பயகம்பனுதிகளை யடைந்தவன் விழித்தவிடத்துப் பொய்யாகத்தெளியுமாபோல்சுகதுக்காநுபவங்கள் பிரமத்துக் குண்டாகாதென்று பேசிமகிழ்வர். மூன்றவத்தைகளி லிரண்டு மெய்யாகுகையில் ஒன்று பொய்யாமென்பதெங்ஙன் ? அது

பவத்துக்கு வாராமையாலெனின், சொப்பனஞ் சாக்கிரத்தி லநுபவ மாகாததுபோ லந்தச்சாக்கிரஞ் சுழுத்தியி லனுபவமாகாமையால் அதுவும்பொய்யாகவரும். அதனால் சொப்பனமொன்றுதானே பொய் யென்பது பொருந்தாது. அந்தச்சுழுத்தி கனவுநனவுகளிற் காணப்படாமையா லதுவும் பொய்யாம். இப்படி யெல்லாம் பொய்யாய்விடுகையால் அவத்தாத்திரயம் என்பது வெறுஞ்சொல்லாய்முடியும். இன்னுந் தன்னையீன்றெடுத்த மாதாபிதாக்க ளிறந்தகாலையில் மீண்டு மவர்களைக் கண்டநுபவிப்பது கூடாமையால் அன்னோர் தன்னைப்பெற்றதும், வளர்த்ததும், அவரிருந்தாரென்பதும் பொய்யாகவேயன்றோ கொள்ளவரும் ? காலவேறுபாட்டா லுண்டாகுந் திரிவுகளைக்கண்டு உள்பொருளுக் கபாவஞ் சொல்லுதல் கூடாது. (புல்லாகிப்பூடாய்ப் புழுவாய்மரமாகி எனவும், (ஆனையாய்க்கிடமாய்) எனவும் ஸ்ரீ வாசகங்களாற் போந்த பல்பிறவிக ளிப்போதொருவனுக்கு அநுபவத்துக்கு வாராமையா லவற்றைப் பொய்யென்று கூறுதல் எங்ஙனங்கூடும் ? நேற்றுண்டுகளித்த தொருபொருளை யின்று மறந்து ஞாபகத்துக்குக் கொண்டுவாராமையா லவனுண்டுமகிழ்ந்தது பொய்யாமாறு எங்ஙன் ? காசியிலிருந்து மதுரைக்குவந்த வொருவனுக்கு அந்தக் காசியானது தோற்றன் மாத்திரமேயன்றி யனுபவத்துக்கு வாராமையால் அந்தப்பதிக்கபாவமும், அந்தப்பதியிலவனிருந்து அநுபவித்த விஷயங்களுக்கபாவமுங் கூறுதல் யாண்டிசையும்? இப்படிப்பட்ட நியாயங்களால் கனவைப்பொய்யென்று கூறுதல் கூடாது. (கனவின்பயனுநனவின்பயனும், வினையின்பயனவை பொய்யெனவேண்டா) என்னுந் திருவாக்கின்படி. அவத்தைகளின் போக்குவரவுகள் வினையின்போகமாகவே முடிதலா லவற்றானுண்டாகிய சுகதுக்கங்களியாவு முண்மையென்றே நாட்டப்பட்டன. கனவின்கண் ணுண்டாமநுபவம்பூதம், பூதஸாரமென்னுந் தேகங்களைத்தாங்கி ஆன்மா நரகசொர்க்கங்களை யநுபவிக்குமாபோ லுண்டா மோர்தன்மைத்தென்று எல்லா வைதிகநூல்களுஞ் சொல்லும். சொப்பனமாகிய யாதனாசரீரத்தி லுண்டாகுமநுபவத்தைப் பொய்யாக்குகையில், அப்படியேயன்றோ நரகசொர்க்காநுபவங்களும் வெறும்பொய்யென்று நாட்டவேண்டிவரும் ? தூலசூக்குமமென்னு மிரண்டுதேகங்களை யிடமாகக்கொண்டு ஆன்மா பிராரப்தாநுபவம் பண்ணுவதுண்மை யென்றறியாத மதிக்குறைவேயன்றோ நிலைமயக்கேறிப் பிதற்றுநிற்பது ? இன்னும் விரிக்கிற் பெருகும்.

23088

இம்மட்டோ, புற்றினிடத்தே கயிறுகிடக்கக்கண்டு இரவில் பாம்பென்றுபயந்து விடிந்தபோது பாம்பு பொய்யென்று கண்டது போல் சுகதுக்கங்களா லுண்டாகிய வநுபவம் அந்தப்பிரமத்துக் குண்டாகமாட்டாதென்று நியாயமணம் வீசப்பேசுவர். புற்று, பாம்பு, பிரமை, பிரமையின்மை, இரவு, பகல் இத்யாதிகளைக் கண்டபின்னர் இவ்வுபமானதிஷ்டமாகிய பிரமசுபாவத்தை யேகமென்று கூறுதல் யாண்டிசையும்? பிரமித்துந் தெளிந்து மியங்குற்றதன்மை பிரமசுபாவமாத லெங்ஙன்? புற்று, கயிறு, இவ்விரண்டுஞ்சடம். பிரமையாருக்கு? தேகத்துக்கெனின், அதுவுஞ் சடமாகும்? அறிவுக்கெனின், அறியாமையாற் பிரமித்தது அறிவாவதெப்படி? சீவனும் அறிவு, சிவமும்அறிவென்பதூா லீண்டுப் பிரமித்தவறிவு சீவனேயெனின், அப்போது சீவனுக்குப் பிரமிக்குந்தன்மையும், சிவத்துக்கு அஃதியாண்டு மிசையாமையும் பொருந்தும். இதனால், சீவனுக்குப் பிரமையினின்றுந் தெளிவுண்டாதல் தானேயமையாமையும் சிவம் தெளிவித்தபின்னரே தெளியுந்தன்மையுங் கூறவரும். இன்னுமிரண்டும் வேறு வேறு முதல்களென்பதும் போதரும். சீவனைத் தெளிவிக்கும் பிரமம் பிரமித்தல் பொருந்தாமையின், கயிற்றரவுதிட்டாந்தங் கட்டுரைக்க வந்தது காலைவாரிக்கொண்டது. இனிச் சாக்கிராதி யவத்தைக ளுண்டாமுண்மையைக் கொஞ்சம் யோசிப்பாம். அவர் கூறும்பிரமம் அகண்டிதமாகையால் நனவு, கனவு, சுழுத்திகளிலடங்குவதெப்படி? அசித்தாயுள்ள வுடலுக்கென் றவருங் கூறமாட்டார். அறிவும், உடலுமொழிந்தபோது அவத்தையாருக்கு? கருவிகரணங்களதிகமா யியங்குதலாலுங் குறைந்தியங்குதலாலுமேயவத்தைகளின் போக்குவரவுண்டாமெனின், கருவிகரணங்கள் தேகத்தைப்போற் சடமாகையா லவைதாமே யியங்கா. தநு, கரணம், புவனம், போகம் இத்யாதிகளை வினைக்கீடாக வுயிர்களுக்குச் சிவங்கூட்டு மென்பது உண்மைநூற் றுணிவாகையால், கரணசையோகத்தாற் கட்டுண்டுமெலிந்து அவத்தைக்குள்ளாவது பிரமமாகாது. தேகத்தைப்போலவே பெருமாறுற் கூட்டப்பட்டதாகிய கரணத்தையொருமுதலாகக் கருதிக்கொண்டு காரணம்பேசவந்தது பூரணம்பெறுதொழிந்தது. இன்னவவத்தைகளான் மொத்துண்டுவருந்துவது அறிவாகிய பிரமமன்றெனவும், தேகந்தானே சுகதுக்க வேறுபாடுகளைக் கொண்டுழலாநிற்பதெனவும், அவையென்போலவெனின், கண்ணாடியிற்றோன்றிய நிழலினது கண்ணிலே யொருவன் கூர்ச்சி

கொண்டு கடாவின விடத்துக் கண்ணாடியுடைவதொழிந்து கண்
ணுக்குலயம்வராத தன்மைபோலெனவுஞ் சமாதானங்கூறி மீண்டு
ந்தம்மறியாமையை வெளியாக்காநிற்பர். கண்ணாடியிற் கண்டநிழ
ல் தோற்றன்மாத்திரமேயன்றி வேறில்லை. அந்தக் கண்ணாடியிற் கா
ணப்பட்ட கண்ணினது நிழல்யாது? கண்ணாடிக்கு முன்னிற்பவனை
தேயன்றோ? கண்ணாடிக்குள் காணப்படுங் கண்ணினது நிழல் தோ
ற்றன்மாத்திர மென்றறிந்தபின்னர் அந்தநிழலாகிய கண்ணை யூறு
படுத்த முயல்வது எற்றுக்கு? கண்ணாடியோஜடம். அதற்கறிவில்
லாமையால் சுகதுக்கங் கூறுவது கூடாது. உள்ளே காணப்படுங் கண்
ணினது நிழலோ முதலேயில்லாதது. அதனிடத்துச் சுகதுக்கவிசா
ரஞ்செய்வதும் சர்வாஸங்கதம். கண்ணாடியைக் கூர்ச்சிகொண்டு
கடாவுதலொழிந்து கையாற்குத்துவானாயிற் கண்ணாடியுடைந்த நஷ்
டமும், கையிற்றாக்கி யிரத்தங்கண்ட துன்பமு மவனேயெய்தா
தொழிவன்? சிங்கமொன்று ஓர் கிணற்றருகிற்சென்று தன்னிழலத
னுட் டோன்றக்கண்டு அந்நிழன்மீது பாயுமெனினச்சிங்கமேன் பல்
லையிளித்துக்கொள்ளமாட்டாது? இன்னகாரியம் அறியாமையுடை
ய வோர் சீவனிடத்தேயன்றோ நிகழும்? அறிவுடையார்செய்கை
யீதாகாமையி னிவ்வுபமானத்தா லுபமேயத்தைச் சற்றேபரியாலோ
சிப்பாம். பிரமம் தேகத்திற் பிரதிபலனமுறலாற் கண்ணாடியே தேக
மும், அதற்கண்டோன்று நிழலேசீவனும், பிரதிபிம்பத்துக் கேது
வாகிய பிம்பமே பிரமமும் என்றுகொள்ளவரும். கண்ணாடியின் பிர
திபிம்பத்தைக்கண்ட பிரமம் அதையுண்மையென்று பிரமித்து அ
ந்தப் பிரதிபிம்பத்தை யெதிர்த்ததாகவு முடியும். கண்ணாடிக்குமந்
நிழலுக்குஞ் சேதமின்றி யெதிர்த்தபொருளுக்கே சேதமுண்டாவது
போல் எதிரிட்டபிம்பமாகிய பிரமத்துக்கே கேடுஸம்பவித்ததாகவு
ங் கொள்ளவரும். கண்ணாடியும், பிம்பப்பொருளும் விஜாதிகளாதல்
போல் தேகமும், பிரமமும் விஜாதிகளாக வேண்டும். உருவமுடை
ய தொருபொருளே பிரதிபிம்பத்தை யடையுமாம்போல் பிரமமு மு
ருவத்தை யுடையதாயிருந்தே பிரதிபிம்பித்ததாகவேண்டும். கண்
ணாடி பிரதிபிம்பங்களுக்குப் பிம்பம் வேறாயிருந்தாற்போலப் பிரம
முடலுயிர்களுக்கு வேறான கண்டப்பொருளாதல்வேண்டும். கடா
காச மகாகாசங்களைப்போல வுடலுக்குள்ளும்வெளியு மப்பிரமந்
தோய்வறநிற்குமெனின், ஒருபடித்தாதலன்றித் தன்மை குன்றுவது
கூடாது. அவ்வாகாயமிரண்டும் பேதியாமையால். ஆகாயத்தைக் க

டமொன்றாற் கண்டிதமாக்கியவாறு பிரமத்தைத் தேகோபாதியாற் கண்டித்தலமையும்! அமையும்!! அங்ஙனங் கண்டித்தபொருளும் பிரமத்துக்கு வேறானதொன்றென நாட்டவரும். கடாகாசமகாகாசவுபமானத்தாற் பிரமத்தினதிகாமிசம் பருவரலெய்தாமையும், அற்பாமிசம் பருவரலெய்தினமையுங் கூறவரும். ஆகாயத்துக் கின்பதுன்பங்க ளெய்தாவாறு பிரமத்துக்கு மாகுமெனின், மகாகாசத்துக்கேயன்றிக் கடாகாசத்துக்கு மஃதின்மையின், பிரமத்துக்கேயன்றிச் சீவனுக்குஞ் சுகதுக்கங்களில்லாமை கூறவரும். அங்ஙனமேல், (புல்லாகிப்பூடாய்ப் புழுவாய்மரமாகி) என்றபிரமாணப்படி யிருவினையிற்பட்டுவருந்து நம்மனோர்கதியை யென்னென்று கூறுவது? ஒருவனுக்குக் காலிற்றளைபூட்டி வருத்துகையில் அதிகபாகத்தாற் பிணிக்கப்படாமையும், அற்பபாகத்தாற் பிணிக்கப்பட்டமையும் கண்டு எந்தவளவிற் சுத்தங்கூறலாம்? ஓர் துளிப்பிரையாற் றோயாநிற்கும் பெரிய பாற்குடமொன்றைப் பரிசோதித்தா லெம்மட்டிற் பாலைச் சுத்தமாகக்கொள்ளலாம்? இவ்வாறான பலவுபமானங்களால் மாயாவித்யோபாதிகளால் அசுத்தமெய்தியபிரமம் தனது அகண்டத்தால் நிருபாதிகமாயிருக்குமென்னும் அவலசித்தாந்த மடியோடே சாய்ந்தது. இங்ஙனநிற்க, ஆகாயத்தை மறைத்த மேகத்தை யவ்வாகாயத்தினின்றுந் தோன்றும் வாயுவகற்றுமாபோல் பிரமத்தை யாவரித்தமாயோபாதியை யப்பிரமத்தினின்றுந் தோன்றும் விவேகஞானமகற்றுநிற்குமென்று கூறுவர். ஆகாயம்-மேகம்-காற்று என்பவற்றினிலக்கணங்களையும், பாகுபாடுகளையும் விசாரித்துழி யேகமாயுள்ள பிரமத்தின்கதி யெடுபட்டுப்போவதன்றியும், அது மலவிஸர்ஜனத்தைப் பெறுமென்பதும் ஸித்திக்கின்றது. எங்ஙனமெனின், அந்த விவேகஞானம் பிரமத்துக்கு முன்னுள்ளதாயின் அது மயங்கவிடமில்லை. இடையிலுண்டானதெனின், முன்னில்லது பின்னுள்ளதாகாது. ஆகாயமுள்ளபோதே காற்றுமதனிலடங்கிநிற்பதுபோலாமெனின், காற்று ஆகாயத்தில் வியாப்பியப்பொருளன்றிக் குணப்பொருளன்று. சூரியனுக்குஒளி குணப்பொருளாவதுபோற் பிரமத்துக்கு ஞானங் குணமாகும். சூரியன் ஒளியால் இருளையகற்றுமாபோல் பிரமம் விவேகஞானத்தா லஞ்ஞானவிருளைத் துரத்தும். சூரியனிருளைத்துரத்துவது மவ்விருள் தன்னையாவரித்தன்று. அப்படியே பிரமம் அஞ்ஞானவிருளைத் துரத்துமென்பது மவ்விருள் தன்னைமூடியன்று. இந்நியாயங்களால் மாயோபாதியைப் பிரமத்துக்கேற்றி

யது மாட்சிபெற்றிலது. குணிகுணங்களை யத்துவிதமெனக் கொள்ளுஞ் சைவர்போலாது ஏகமெனக்கொள்ளு மம்மாயாவாதிகள் ஆகாயம், காற்று என்பவற்றை யுபமானங்கோடலு மஸங்கதமாயிற்று. ஆகாயம், காற்றுஎன்பவைகளைக் காரணகாரியமாகக் கூறுமன்னோ ரங்ஙனமாகாத பிரமத்தையும், விவேகஞானத்தையு நிதரிசனமாகக்கொண்டது பெரும்பேதமையே! ஆகாயமுங்காலுங் காரணகாரியங்களன்று. நெல்கமுகாய் நீளாதென்னுந் தருக்கத்தால் ஆகாயம் வாயுவாகவும், வாயு வன்னியாகவும், வன்னி யப்புவாகவும், அப்புமண்ணாகவுந் திரியமாட்டா. பஞ்சபூதங்களும் பஞ்சதன்மாத்திரைகளினின்றுந் தோன்றினவாகச் சிவாகமங்கள் வேதத்தின் பொருளைவிரித்தலா லவையொன்றினொன்று விபாபகவியாப்பிய ஸம்பந்தம் பெற்றுவிரவிநிற்கும். இதனால், அவரெடுத்துக்கொண்ட ஆகாயங் காற்றென்பவைகளி னுபமானத்தைப் பரியாலோசித்து உபமேயங்களாகிய பிரமம், விவேகஞானங்க ளென்பவற்றை வியாபக வியாப்பியங்களாகிய விரண்டு வேறுபட்ட பொருள்களென்று நாட்டுதலையும். இப்படியும் ஏகாத்மவாதம் சிரிப்புண்டு போகுமா? ஐயோபாவம்!

இனியொரு ஜாலவித்தைபகராநிற்பர். அதனையுங் கொஞ்சம் பேசி யொழிப்பாம். ஒருகம்பள மெதிரிலிருப்பதைக் காட்டுவார். அதிலொவ்வொரு மயிராகப்பிடுங்குவார். இஃதென்னென்றுகேட்பார். மயிரென்று விடைபகர்வானைநோக்கி யெல்லாமயிரையும் பிடுங்கிவிட்டாற் கம்பளமெங்கேயென்பார். இப்படியே தேகாதிபிரபஞ்சங்களையு மொவ்வொன்றாகப்பிரித்து விசாரித்துழி முதலற்றுப்போகையால் எல்லாவுபாதிகளையு மிதுநாமல்ல விதுநாமல்லவென்று நியதிகளையுமிடத்துச் சேடித்தது பிரமந்தானென்றுகாட்டி, அதையே நானென் றநுஸந்தானஞ் செய்யவேண்டியதென்று நாட்டி, மயிர்ஞானத்தையே நீளவோட்டிமகிழ்வர். கம்பளங்காரியம். மயிரோகாரணம். காரியம்பிரிந்ததன்றிக் காரணங்கெட்டதில்லை. மீண்டுமந்தமயிரையெல்லாஞ் சேர்த்துக் கம்பளமாக்குதல்கூடும். காரணங்கிடைக்கையாற் காரியமுண்டாகிவரும். வீட்டைப்பிரித்தவொருவன் அதிலுள்ள சாமான்களையெல்லாந் தனித்தனி வைத்திருந்து மீண்டு மந்தச் சாமான்களைக்கொண்டு பழையபடியே வீடு புதுக்குவானெனி னெங்ஙனே மயிர்ஞானந் தலைகாட்டுவது? யாதாயினுமோர் யந்திரத்தைப்பிரித்து வேறுவேறாகச் சாமான்களைக் கழற்றிவைத்தவன் மீ

ண்டும்பூட்டிப் பழையபடிச்செய்கையா லெங்கேகாரணங்கெட்டது? பொன்னாற்செய்யப்பட்ட வளையமொன்றை யழித்தகாலையிலதையேமீண்டும் வளையமாக்குகையாலும், முன்வளையமாயிருந்த பொன்னளவிலேதானே பல்வேறு வகைப்பட்ட சிலபூஷணங்கள் காரியப்படுமாகையாலுங் காரணத்துக் கபாவஞ்சொல்வதுகூடாது. அந்தப் பிரதமகாரணந்தானே யாங்கூறும்பிரமமெனின், பிரமஞ்சித்தும், உலகம் அசித்துமாகையால் விரோதம்பெறும். ஸர்வவிகாரங்களும் அசித்தாயுள்ள மாயையாகிய பரமகாரணத்திற் றோன்றினவெனவும், அதுநித்தமெனவும், அந்தமாயை பரிக்கிரகமாத்திரத்தது பரனுக்கெனவும் அறிவதேவிவேகிகள் மரபாம். அன்றியும், சித்தாகிய பிரமம் அறிவும், அசித்தாகியமாயை அறியாமையுமாகக்காண்டலா லறிவறியாமைக ளொன்று கூடுவதுகூடாது. ஒளியு மிருளுமொன்று கூடாதவாறு. இருளல்லாத சுத்த வொளிக்கும், ஒளியல்லாத சுத்தவிருளுக்கு மொருபயனும் வேண்டற்பாலதன்று. இருளோடுகூடி யிருளையநுபவித்தும், ஒளியோடுகூடி யொளியையநுபவித்து மவையிரண்டுமுதலு மாகாமற்றனியே யொருமுதலாய் நின்றகண்ணினது தன்மையே அவர்கூறும் பிரமத்துக் கேற்றப்படுகையால் அதனைப் பிரமமென்பதொழிந்து அறிவாயுள்ளபதியோடுகூடி யிதுபதியென்றறிந்தும், அறியாமையாயுள்ள பாசத்தோடுகூடி யிதுபாசமென்றறிந்து மிரண்டுமுதலுமல்லாமற் றனியே யொருமுதலாய் நிற்கும்பசுவென்று கூறுவதே யுண்மைநூற்றுணிவு.

இது நிற்க, ஸர்வவுபாதிகளும் கழன்றவிடத்து அந்தப்பிரமத்துக்குண்டாகும் பிரயோசனம் யாதெனின், தன்னிலே தன்னைத்தானே கண்டுகொண்டு சுகித்திருப்பதாமென்று கூறுவர். உபாதிகள் ஜடமாகையால் தாமேகழலா. உபாதியிற்கிடப்பவன் தானே கழற்றிக்கொள்ளான். யூபத்திற்கட்டப்பட்டிருக்கும் பசுவானது தானே கட்டையவிழ்த்துக் கொள்ளமாட்டாதாற்போல. கட்டுண்ணாதவொருவனே யக்கட்டை யவிழ்த்துவிடுமாபோல் மாயோபாதிகளை யஃதில்லாத வொருவனே யுடையவனுக்குக் கழற்றவேண்டும்? அன்றியும், தனக்குவேறான தொருபொருளைக் கண்ணுவது கண்டநுபவித்தலன்றித் தன்னைத்தானே காணுதல் கூடாமைபோல் ஆன்மாவானது தனக்கு வேறாயுள்ளதொருபொருளைக் கண்டநுபவித்தலன்றித் தன்னைத்தானே கண்டநுபவியாது. கண் கண்ணைக்காணுமேல் தான் தன்னைக் காணுதல்கூடும். தன்னைத் தரிசித்தலும், தலைவனைத்

தரிசித்தலுமாயுள்ள நிலைகளைக்கூறுஞ் சைவத்தின்கண் ணித்தோடமையாதோ வெனின், தலைவன்றரிசிப்பித்தாலன்றித் தன்னையுந் தலைவனையுங்காணுதல் கூடாதென்று சைவநூல்கள் கூறுகையாலத் தோடமேறாதென்க. (காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே) என்னுந் திருத்தாண்டகத்தாற் கண்டுணர்க. இன்னுந் தன்னைத்தானே யநுபவித்தலென்பது நாயகியொருத்தி நாயகனைக்கூடி யநுபவியாமல் தன்னைத்தானே யனுபவித் தின்பநுகர்ந்திடல் போலுமாம். (பேரின்பமான பிரமக்கிழத்தியுட - னேரின்பத்துள்ளானை யுள்ளபடி -பேரின்பங் கண்டவரேகண்டார் கடலுயிர்த்தவின்னமுத - முண்டவரேயுண்டார் சுவை) என்னுந் திருவாக்கானே யவ்வுண்மைபோதரும். இவ்வுண்மைநியாயங்களால் ஜகஜீவபரங்களை மிச்சையெனக்கொண்டு தத்துவமசியாதி மகாவாக்கியங்களுக்கு அபார்த்தங்கூறித் திரியுமாபாசகரது நிலைமை வெளிப்பட்டமையா லன்னோர் தூற்றுஞ் சைவதூஷணத்தையு மொருவாறு பரிகரித்து உபரதியடைவாம்.

அந்தப் பாழ்ஞ்சமயப் படுகுழியில்வீழ்ந்து மேலேறிவரமாட்டாமற் றியங்குமன்னோர் சாதுக்களவைக்கண் ணோரிடுங் கண்டனங்களை யினிதுபரியாலோசித்து வாய்மைகண்டுய்யுமாறு புண்ணியங் கைகூடாமையாற் பாலன்னத்தை யூட்டவருமொருவனை நாயானது கண்டு உறுமுவதைப்போல், அப்பெரியோரது போதங்களில் விபரீத புத்திபண்ணி நிந்தித்துழன்று எரிவாய்நிரயத்துக் காளாகின்றனர். எங்ஙனமெனின், (குதர்க்கவாதவிபஞ்சநி) என்னுஞ் சைவப்பிரபந்த மொன்றில் விளக்கியிருக்கு நியாயங்களை யறியும் விவேகமின்றி மண்டைபிளக்கக்கத்தி மாணழிந்து நாணிழந்து நலங்கெட்டோர் தன்மையை யீண்டு விளக்கிக்காட்டுதும்.

சைவர்—பதி-சத்து. இஃது ஏகமாகியும், சதசத்தாகாமலும், அசத்தாகாமலும் என்றுமொருபடித்தாகவே யிருக்குந்தன்மைத்து.

மாயாவாதி. சத்து - காலத்திரயத்தும் அழிவின்றியிருப்பது.
என்னுமிரண்டு வசித்தாந்தங்களு மிருதிறத்தவரால் தனித்தனிக்கூறப்பட்டன. இவற்றுள் முன்னையதாகிய சைவர் கூற்றிற் பின்னையதாகிய மாயாவாதக்கூற்று விரோதித்திலது என்றும், இப்படியே சைவர்கூறு மேனையமுடிவுகளும், மாயாவாதமேயாகுமெனவும் புலம்பவந்த வம்மாயா

வாதியை மதமடங்கும்பொருட்டு மாட்டி யெமது சொரூபத்தைக் கொஞ்சங்காட்டி அப்பெயரது அஞ்ஞானவிருளையோட்டிக் காதைப்பிடித்தாட்டி மேலுண்மைநிலை யீதெனநாட்டி யுபகரிப்பாம்.

மேல், சைவர்கூறிய சித்தாந்தத்தால் சத்தாகிய சிவத்துக்கு விஜாதிகளாக வசத்துச் சதசத்துக்களச்சத்தைப்போலவே அநாதிநித்தியங்களா யுள்ளனவென் றேற்படுகின்றது. சத்தாயுள்ளசிவம் நின்மலமாகையா லஃதொருபயனும் வேண்டாது. அசத்தாயுள்ளபாசம் ஜடமாகையாலதுவு மொருபயனைவேண்டாது. சதசத்தாகிய பசுவுக்கே பாசம் விலகவேண்டியபடியா லிந்தவிசாரம் அவசியமாதல்பெறும். தன்னிலக்கணமும், தலைவனிலக்கணமும், தனக்குந் தலைவனுக்குமிடையாகின்ற பாசவிலக்கணமும் அறிந்து மலத்தினின்றுங் கழன்று சிவனை யணைந்து இன்பநுகரவேண்டிய சிப்பாடு பசுவுக்குண்டாவதாகச் சைவநூல்கள் கூறுவதமையும். ஏகமாகிய பிரமம் தன்னை யேகமென்று விசாரிப்பதெற்றுக்கு? பிரமத்துக்கு வேறு பொருளிருந்தாலன்றோ விரண்டென்னு மெண்ணுக்கேனு மிடமுண்டாகும்? இரண்டாவது பொருளே யில்லாதபோது ஏகமென்னுஞ்சொல்லெங்கிருந்து பிறந்தது? ஏகமென்னுஞ் சொல்லொன்று பிரமத்துக்கிரண்டாவதாக முளைத்ததே புதுமையாம். இப்படியே பிரமம்-சத்து என்பனவாதிபேர்க ளமைந்தமையும் புதுமையே! இவை விவகாரத்தால் வந்தபேரென்பார்கள். விவகாரத்துக்கு மதுவே நியாயமாகி யலக்கணுண்டாயழியும். அன்றியும், காலத்திரயத்து முள்ளது சத்தென்பது கேவலம் ஆபாசமாம். சத்தேயன்றோ வுள்ளது? அதனோடு காலத்திரயமுளதாகப் பெற்றதென்னை? சத்தொருமுதலும், காலமொரு முதலுமாகின்றமையால் ஏகமெடுபட்டுப்போம். என்றுஞ்சத்தாகியசிவ மொருபடித்தாயிருக்குந் தன்மைத் தென்னுஞ் சைவமுடிபோவெனிற் காலம் பாசத்தில் வேறான தன்றென்னுந் துணிவா லிழுக்கடையாது. இன்னமுரண்கொண் டிழிவுற்ற மாயாவாதம் சைவசித்தாந்தத்தி லொப்பமுடிந்த சமரசமாதல் சாலாது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்,—பசு - சதசத்து. இஃது ஜநநமரணப்பட்டு வருந்துந்தன்மைத்து.

மாயாவாதி,—சதசத்து - ஒரோவொருகாலத்துளதும், ஒரோவொருகாலத்திலதுமாவது.

இவ்விருகூற்று மொன்றெனச் சாதிக்கவேண்டி ஆன்மா ஜநநப்பட்டபோது தோற்றமாயுளதாகலின் ஒரோவொருகாலத் துளதெனவும், அது மரணப்பட்டபோது தோற்றமாயிலதாகலின் ஒரோவொருகாலத் திலது எனவும் அறிவுகெட்டுரைக்கு மாயாவாதியை மகாடங்க் செய்வார்.

சைவநூல்கள் ஆன்மா ஜநநப்பட்டதை யோர்தேகத்தை யெடுத்ததெனவும், மரணப்பட்டதை யோர்தேகத்தை விடுத்ததெனவுங் கூறும். எடுக்கப்பட்டதும், விடப்பட்டதுமாகிய தேகத்துக்கு வேறாக வதையெடுத்ததும், விடுத்ததுமாகிய வான்மா ஸதோதயமாயுளதென்பது தீர்மானமாகையால், ஒரோவொருகாலத்துளதும், ஒரோவொருகாலத்திலதுமாவது என்று ஆன்மவிலக்கணங்கூறு மாயாவாதத்தோடு எங்ஙனஞ் சைவம் ஸமானம்பெறும்? உள்ளது இல்லதாவதும், இல்லது உள்ளதாவதுங் கூடாமையா லுள்பொருளெக்காலத்து முள்ளதும், இல்பொருளெக்காலத்து மில்லதுமாகவே முடியும். ஜநநப்பட்டபோது தேகத்திற் கூடியுள்ளதும், மரணப்பட்டபோது தேகத்தை நீங்கியுள்ளதுமாகிய விருப்பு மாறாமையா லுள்பொருளாகிய வான்மா வெப்போது முள்ளதென்பதே தீர்மானம். ஒருதேகத்தைவிட்டுப் பிரிந்தவான்மா வேறுதேகத்தை யுடனே வினைக்கீடாக வெடுத்துக்கொள்வ துண்டாகையாலும், எடுத்தெடுத்தும், விட்டுவிட்டு முழன்று திருவருளான் மலங்கழன்றபோது சிவனோடு வேறறக்கலந்து சிவாநுபவம் பண்ணிக்கொண்டு நித்தியமாக நிற்பதொன்றாகையாலும் ஆன்மாவென்று முள்ளதென்பது சாதிக்கப்பட்டது. பரமார்த்தத்தி லில்லதும், விவகாரத்திலுள்ளதுமென்று ஜீவலட்சணத்தைப் பிரதிபாதிக்கு மாயாவாதமும், சத்தோடு சேர்ந்து சத்தாயும், அசத்தோடுசேர்ந்து அசத்தாயுஞ் சத்துமசத்துமாகாமல் சதசத்தாயுள்ளதென்று ஜீவலட்சணத்தைப் பிரதிபாதிக்குஞ் சைவசித்தாந்தமு மொன்றாவது எங்ஙனங் கூடும்? அசத்தோடொருகாலத்துஞ் சத்தோடொருகாலத்துஞ் சேர்ந்திடு முண்மையா லிரண்டுகாலத்து மான்மா நித்தியமென்பது பெறப்படுதலால் ஒரோவொருகாலத் துள்ளது மில்லதுமென்று பிதற்று மஸப்யத்

தோடொன்றாது! ஒன்றாது!! அசத்தோடு சேர்ந்தது பெத்தமும், சத்தோடுசேர்ந்தது முத்தியுமாகையால் இவ்விரண்டையு முடையதொருபொருளை யோர்காலத்துள்ளது, ஓர்காலத்தில்லது என்றுகூறுவது சர்வாஸங்கதம். ஜீவனது மலத்தையே விவகாரமெனவும், மலநிவிர்த்தியையே பரமார்த்த மெனவுங்கொண்டு புலம்புமம்மதத்தைப் பசுமார்க்கமென்று மேலோர் நிச்சயித்தலால், அநாதிமுக்தசித்துருவாகிய பதிஞானங் கைகூடப்பெறாத பதிதமார்க்கமென்பதே தீர்மானம்.

சைவர்,—பாசம்-அசத்து. இஃது பொய்யாகித் தோன்றி நின்றழியுந் தன்மைத்து.

மாயாவாதி,—அசத்து, சொன்மாத்திரையாயுந் தோற்றன் மாத்திரையாயுந் தனக்கெனப் பொருளொன்றின்றித் தோற்றுவது.

இவ்விருகொள்கையு மொன்றேயெனச் சாதிக்கவெழுவர். அதுகூடாது. பொய்யாகியென்றது உருத்திரியுங் காரியப்பாட்டை யென்றறிக. கடகமா யிருந்தபொன் சரப்பளியாகுங்கால் முன்னிருந்த தோற்றம் மறைந்ததாலும், மீண்டுமது கடகமாகுங்காற் சரப்பளித்தோற்ற மறைந்ததாலுங் காரியத்திரிவையே பொய்யென்றல் சாலும். அதுபோலுமைமித்தறிக. அன்றியும், ஒளிக்குமுன்னிருள் முனைத்துத் தோன்றாதவாறுபோற் சத்தாகிய சிவத்துக்கு முன்னர் அசத்தாகியபாச முனைத்துத் தோன்றாமையாலு மதனைப் பொய்யென்றல் பொருந்தும். கதிரொளியினது சத்திக்குமுன்ன ரிருட்சத்தி யடங்கிக்கிடந்ததன்றி யவ்விருளாகியமுதல் அறவே நசித்ததின்றெனவறிக. இப்படியேயன்றோ விருட்சத்திக்கு முன்னர் நேத்திரப்பிரகாசசத்தி யடங்கிக் கிடக்கும்? நேத்திரப்பிரகாச சத்தி யிருட்சத்திக்கு முன்னர் தலையெடுக்காததுகொண்டு அதற்கபாவஞ் சொல்ல முடியாதாற்போலவே யன்றோ சத்தின்பிரகாசத்துக்கு முன்ன ரப்பிரகாசத்தை யடைந்திருப்பதுகொண்டு அசத்தென்னுமோர் முதல்கிடையாதென்று சொல்லப் பண்டிதராயுள்ளபேர்க்கு நாவெழுமாட்டாதா? சத்துக்கு முன்னர

சத்தும், அசத்துக்கு முன்னர் சதசத்துந் தலைபெடுக்காமையா லவற்றை யில்பொருளென்றல் கூடாது! கூடாது!! அவ்வவற்றின் சத்திகளேயன்றி முதல்கெடாதிருக்கு முண்மையால். காரணத்தா னுண்மையுங் காரியத்தா லின்மையுமாகு மிலக்கணங் கண்டபின்ன ரவ்வசத்துக் கபாவஞ்சொல்லுதல் யாண்டு மிசையாதெனவறிக. மேலிடத்திற் கம்பளம்-மயிர் முதலிய வுபமானங்களைக் காரியகாரணங்களாக விளக்கி யுண்மையை நிறுத்தியபடியாலு மீண்டுணர்த்தப் புகுந்த அசத்தினது தன்மை வெளிப்படும். இந்தவிசாரத்தாற் பொய்யாகியென்று அசத்தைப் பிரஸ்தாபித்த வுண்மை வெளிப்படலா லினித்தோன்றி நின்றழியுந் தன்மைத்து என்பதையு முறையே விளங்க வுரைப்பாம்.

அசத்தென்னும் பாசம் உபாதானமாயிருந்து அதினின்றும் பிரபஞ்சகாரிய முண்டாவதனையே தோற்றமெனவும், அந்தக்காரியம் தனது வியாபகத்திலியங்க விடங்கொடுத்திருப்பதனையே திதியெனவும், அது தன்னி லொன்றுபட்டொடுங்கி மறைவதனையே லயமெனவுஞ் சைவ நூல்கள் கூறுகையால், தோன்றுதல், நிலைபெறுதல், அழிதல் என்னு முத்திறப்பாகுபாடுகளு மினைத்தென வெளிப்பட்டன. காரியமுண்டானபோதும், காரியம் நிலைதிரிந்தபோதும், காரியம் அழிந்தபோதும் உபாதானமாகிய காரணமழிந்ததின்றாகலின், அவ்வுபாதானமாகிய அசத்தை யபாவப்பொருளென்றல் சாலாது. அஃதபாவப்பொருளாகுமேற் புனருற்பவ மொடுங்கினவிடத்தினின்று மீளவுண்டாமென்னுந் தருக்க மழியாநிற்கும். காரியமுங் காரணமுமழிந்து அபாவமாகுகையில், எண்ணிறந்த கற்பங்களையிசைக்கும் வேதாகமங்களுக்கு அப்பிராமாணியத்வமுண்டாம். பிரமம் நித்தமாகையா லதனிடத்தி லத்யாஸமாகத் தோன்றிநின்று மறைந்துவருமுலகத்தையே கற்பபேதங்களால் வேதாதிகள் கழறுவதெனின், மேலிடத்தி லத்யாஸவாதத்தையும், காரணகாரியவாதத்தையு மினிது விளக்கிச் சகசீவ பரங்களினது விஜாதித்தன்மையை விரித்துள்ளே மாகையால் அது கூடாது. பிரமத்தையே யுலகஸ்ருஷ்டிக்குப் பரமகாரணமாக வேதாதிகள் கூறுவதின்றோவெனின், அதனுண்மையை விரிப்பாம். நிலங்குளிர்ந்தவழி யதனிடத்திட்ட வித்தினிடத்திருந்து அங்குர முண்டாயினமையால் பிரமமே ஜகத்காரண மென்றமையும். நிலம், வித்து, அங்குரம் என்னும் பாகுபாடுகளை வி

சாரிக்குங்கால், நிலத்திலிருந்து வித்தில்வழி அங்குரந்தோன்றுமா றெங்ஙனம். ? நிலமில்வழியும் வித்தினின்று மங்குரந்தோன்றுமா றெங்ஙனம் ? அங்குரமாகியகாரியம் வித்திலுண்டானதா ? அல்லது நிலத்திலுண்டானதாவென்று யோசிக்கையில் வித்தினிடத்ததேயாகி யெப்படி நிலத்திலுண்டான தென்றுகூற லமையாதோ,வப்படியே யன்றோ வுலகமாகியகாரியம் மாயையிலுண்டானதேயாகிப் பிரமத்தினிடத்ததென்று கூறுதல் பேதிக்கப்பட்டழியும் ? பிரமம், மாயை, உலகம் என்னும் பாகுபாடுகளை விசாரித்து உபமேயமாகிய விவற்றினுண்மையை மேற்காட்டிய வுபமானவாயிலாகத் தெளிந்திடுக. அங்குரம் வித்திலுண்டாயிற் றென்றாலும், அல்லது நிலத்திலுண்டாயிற் றென்றாலும் எப்படிப்பொருந்தி யுண்மைக்குக் கெடுதி நேர்ந்திலதோ, அப்படியே யன்றோ வுலகம் மாயையி லுண்டாயிற் றென்றாலும், பிரமத்திலுண்டாயிற் றென்றாலும் பொருந்தி யுண்மைக்கொரு கெடுதியுமுண்டாகாது நிலையுதல்பெறும். இப்படி விசாரித்தறிவதொழிந்து சைவநலத்தோ டொப்புடையதாக வவ்வாபாசகர் கூறு மவலசித்தாந்தத்தை யினிக்கொஞ்சம் விசாரித்து ஒழிப்பாம்.

அசத்து - சொன்மாத்திரையாயுள்ளதென்பர். இது சொன்மாத்திரையாயுள்ள சசவிஷாணத்தோடன்றோ ஒக்கும் ? சசவிஷாணம் என்பது முயற்கொம்பாகையால், அது தனுகரணபுவனபோகங்களாய் விரிந்த பிரபஞ்சத்தோ டெங்ஙனே வொப்பிட வுரித்தாம் ? அனுபவ வேத்யமாகிய வோர்பொருளைச் சொன்மாத்திரையாகக்கூறுத லெங்ஙனே பொருந்தும். ? சசவிஷாணம் அநுபவத்துக்கு வராமலும், தனக்கென வோர் முதலில்லாமலு மிருப்பது கொண்டே யன்றோ சொன்மாத்திரையா யுள்ளதென்று யாவருமங்கீகரிப்பர் ? அங்ஙனமல்லாத பிரபஞ்சமாகியவசத்தைச் சொன்மாத்திரத்தது என்று கூறுவது சோம்பேறி வாதமாகவே முடிந்தது. இனித் தோற்றன்மாத்திரையா யுள்ளதென்பதனையும் விசாரிப்பாம். இது மருமரீசிகை யென்னுங் கானற்சலத்தோ டுவமிக்கப்படும். கானலிற்சலம் தோற்றன்மாத்திரமாயுள்ளதன்றி அதுவும் அனுபவத்துக்கு வராது. இவ்வுபமானதிருஷ்டமாகிய பிரபஞ்சம் அனுபவ வேத்யமாவ தொன்றாகையால், விரோதம் பெற்றழியும். இன்னுங் கானலிற் சலமுண்டாவது சூரியனது உஷ்ணசையோகத்தாற் கண்ணினது குற்றமாம். இங்கே போந்த கானற்சலத்தில் கானல் ஒன்

று, சலம் ஒன்று, கண்டகண்ணொன்று, கண்குற்றமொன்று, காரணமாய்நின்ற கதிரொளியொன்று, அதனுஷ்ணமொன்று என்னும் விவிதமுண்டாகையால் அசத்துக்கபாவங்கூறிப் பிரமமொன்றேயெனச்சாதிக்கு முபமேய மெங்ஙனே நிலைக்கும். ? அன்றியும், ஒருபமேயத்தைச் சாதித்தற்கு ஒன்றிலொன்று முரணிய விரண்டுவமானங்களைக் காட்டிய வறியாமையும் வெளிப்பட்டது. முயற்கொம்பு சொன்மாத்திரையாயுள்ளதும், கானற்சலம் தோற்றன்மாத்திரையாயுள்ளது மாகின்றமையால், சொன்மாத்திரையாயுள்ளது தோற்றன்மாத்திரத்ததாவதும், தோற்றன் மாத்திரையாயுள்ளது சொன்மாத்திரத்ததாவதுங் கூடாமையா லிவ்விரண்டுபமானங்களையும் அசத்தாகிய பிரபஞ்ச நிரூபணத்திலெடுத்துக் கொண்டது கேவலம் அஸங்கதமாகவே முடிந்தது. இன்னபேரவதியின் முடிந்த வஸ்துநிரூபணம் சைவஸித்தாந்தத்தோடொப்பமுடிந்ததாகக் கூறவெழு மவஞ்ஞானமு மடியோடே சாய்ந்ததெனவறிக.

சைவர்,—தோன்றிநின்றழிவதாகிய அசத்து காரியமும், அநாதிநித்தியமாகிய மாயை காரணமும் ஆம்.

மாயாவாதி,—காரணமெத்தன்மைத்தோ அத்தன்மைத்தாகவேயன்றோ காரியமிருக்கவேண்டும் ? அநாதி நித்தியமாகியமாயையில், தோன்றிநின்றழிவதாகிய அசத்து காரியப்படுமாறெங்ஙனம் ? அதாவது—அநாதிநித்தியமல்லாத பிரபஞ்சங் காரியப்படுமாறெங்ஙனம் ?

அநாதியி லாதிபிறப்பது கூடாதெனவும், அநாதியிலநாதியே பிறக்கவேண்டுமெனவும் விபரீதமாக வினவுவதன்முன்னர் காரணத்திற் காரியமுண்டாவது கூடாதெனவுங் காரணமே பிறக்கவேண்டுமெனவுமன்றோ அவர் கடாவுதல்வேண்டும் ? ஒவ்வொருபொருளுந் தொழிலுங் குணமுங்கொண்டியங்குகையில், தொழிலியக்கத்தாலுண்டாகும் விகாரத்தையேயன்றோ காரியமென்றலமையும் ? அங்ஙன மியங்குகையில் அவ்வவற்றின் குணங்கெடாம லிருப்பதையேயன்றோ வுரியவிலக்கணமென்று கூறுதல் கூடும் ? காரணமாகிய மாயை ஜடமாயுள்ளது. அப்படியே யன்றோ வதன் காரியமாகிய பிரபஞ்ச பேதங்களும் ஜடமாயிருக்கின்றன ? இரண்டிடங்களிலுந் தன்மை குன்றாமையாற் காரண மெத்தன்மைத்தோ காரியமு மத்

தன்மைத்து என்னுஞ் சித்தாந்தியார்கூற்று நிலைபெயர்ந்திதை. அநாதியிலநாதியே பிறக்கவேண்டுமெனின், ஓர்பொருள் தோற்றமின்றியிருந்த காலத்தை யநாதியெனவும், அந்தப்பொருள் காரியப்பாட்டை யடைந்த காலத்தை ஆதியெனவுங் கூறுவதால் அநாதியிலாதி பிறந்ததாகக்கொண்டு குரைப்பது மதியீனமாம். இங்கே விசாரிக்கத்தொடங்கியது அநாதி, ஆதியென்னுங் காலங்களினிகழுமோர்பொருளையே யாகையாலஃதிரண்டிடத்துந் தன்மைகுன்றும லிருக்கக்கண்டு ஏன் அடங்கிலர்? அநாதியென்பதும், ஆதியென்பதும் அஸத்தாகிய பாசத்தினிலக்கணமன்றென வெளிப்பட்டமையால், அநாதி ஆதியாகுமாவென்று கடாவியமதங் காலொரிக்கொண்டது.

இனி நித்தியமாகிய மாயையினின்றும் அநித்தியமாகிய பிரபஞ்சந் தோன்றுமாவென வினவியதையும் விசாரித்தொழிப்பாம். நித்தியாநித்தியங்களினிலக்கண மினைத்தென விசாரியாமையே யன்றோ விம்மூடவினாவுக் கிடஞ்செய்தது? சொர்நம் நித்தியம். பூஷணம் அநித்தியம். கடகம், பதக்கம், குண்டலமாதி வேறுபாடுகளாற் சொர்நமொன்றுதானே பூஷணமென்று பேர்பெற்றமையால் அவ்வேறுபாடுகளுக்கே யன்றி அவற்றைக்கொண்டியங்கிய பொருளாகிய சொர்நத்துக்கு எங்கே முன்னும் பின்னும் அநித்தியஞ் சித்தித்தது? இதனால், நித்தியத்தில் அநித்தியம் பிறந்ததில்லை யென்பது சாதிக்கப்பட்டது. வேறுபாடுகளாகிய விகாரத்துக்கேனும் அநித்தமுண்டே யெனின், அந்தவேறுபாடுகளு மடங்கியிருப்பதன்றி யறவே யொழிந்தனவன்றும். அறவே நசித்தனவெனின், மீண்டு மந்தஸொர்நத்திலிருந்து வரமாட்டா. விகாரித்துவருந் திரிவால் அதை யநித்தமென்றல் சொன்மாத்திரமாம். விகாரித்தபோதும், அதற்கு முன்னுமிருந்த சுபாவ வேறுபாட்டை விளக்கவேண்டியே அநித்தம், நித்தம் என்னும் வழக்குகளுண்டாயினமை யறிக. நித்தப்பொருள்களே யன்றி அநித்தப்பொருள் கிடையவே கிடையாவென்பது சைவநூற்றுணிவாகையால். இந்தவுபமானத்தா லுபமேயம் வெளிப்படலால், அஸத்திலக்கணமறியாது அரற்று மஞ்ஞானிகள் கூற்றழிந்தது! அழிந்தது!!

**சைவர்,—கதிர்முன் இருள் முனைத்துத் தோன்றுதவாறுபோலச் சத்தினெதிர் அசத்து விளங்கி நில்லாது.**

**மாயாவாதி,—அசத்து இருள்போல அபாவபதார்த்தமே யன்றித் திரவியமல்லவென்பது ஸ்வதசித்தம்.**

இருளை அபாவமென நாட்டற்கு அம்மாயாவாதி பின்னுங் கூறுவான். (யாதொரு வஸ்துவையும் ஒளியைக்கொண்டு பார்த்த பின்னரே நன்குதெளிகின்றோ மாதலானும், அவ்வொளியைக் கொண்டு இருளைக்காணு வென்றால், இஃது காணப்படவில்லை யாதலானும் பேரொளியுடைய தேயுப்பொதுமையின் அபாவமேயிருளென்று தெள்ளிதிற்றுணிதற்பாற்று) என்று அவன் பிதற்றும் பேதமைமையைக் கொஞ்சங் பரியாலோசிப்பாம். ஒளியினது சூத்திவியாபகத்தில் வியாப்பியமுற்று இருட்சத்தியடங்கிக் கிடக்குமுறைமையை மேலிடத்தில் யாம் விரித்துள்ளே மாகையால் ஒளியைக்கொண்டு இருளைக்காண்பது கூடாது. சூரியனொளியைக்கொண்டு நட்சத்திரவொளியைக் காணக்கூடாதவாறுபோல: பானுவொளியைக்கொண்டு தாரகையொளியைக் காணக்கூடாமையால் தாரகையொளிக்கு அபாவஞ்சொல்வதெப்படி.? பானுவொளியினது அபாவமே தாரகையொளியென்றுஞ் சொல்லுமாறெங்ஙனம் ? ஒளியைக்கொண்டு பார்க்கத்தக்கவை அந்தத்தேயுப்பொதுமையி னொளிக்குக் கீழிட்ட அப்புப்பிருதிவிகளின் காரியகோடிகளேயன்றி அதற்குமேலிட்ட வாயுவாகாயங்களாகா. காற்று, ஆகாயம், திக்கு, மனம், ஆன்மா, சிவம் இத்யாதி பதார்த்தங்கள் ஒளிக்கு விஷயமாகாமையால் அவற்றை யொளியினது அபாவப்பொருள்க ளென்றல் யாண்டமையும் ? இவ்வுண்மை கண்டபின்னர் ஒளியினது அபாவமே யிருளென்று கூறுதலெங்கே நிலைக்கும் ? தேயுப்பொதுமையி னொளிக்கு இருள் அபாவப்பொருளென்றபடி யேனைய நான்கு பூதங்களி னபாவப் பொருள்க ளெவையாகவவர் கூறுவாரோ தெரியவில்லை. பெயரும், உருவம், நிறமுங்கொண்டு கண்ணுக்கு விஷயமாகு மோர்பொருளை யில்பொருளாகச் சாதிக்க வவர்மனம் நாணிலைபோலும். அன்றியும், தாமெடுத்துக்கொண்ட வுபமானவாயிலாக வுபமேயத்தை யெப்படிச்சாதிப்பா ரென்பதுந் தெரியவில்லை. தேயுப்பொதுமையி னொளி கண்டப்பொருளாகையால் அதனபாவப்பொரு ளிருளென்று அவர் கோடல் ஒருவாறிசையும். அகண்டமாகிய சத்தொளியினிடத்துப் பாசமாகிய விருளுண்டாமாறு எங்ஙனம் ? ஒளியானது ஓரிடத்துள்ளதும், ஓரிடத்தில்லதுமாயினன்றி இருள் சீவிக்க விடமின்றாகையால், அங்ஙனமேயன்றோ சத்தசத்துக்களிடத்துங் கொள்ளவேண்டியிரு

க்கின்றது? அசத்தாகிய வபாவப்பொரு ளுண்டாதற்குச் சத்தாகிய வதிட்டானப்பொருள் கண்டிதமாகுங்கால் அது சச்சிதாநந்தாதி நிரதிசய லட்சணமுடைய பரதத்வப் பொருளாதல் கூடாது! கூடாது!! இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்,—சத்து, அசத்து, சதசத்து என்பவற்றுள் சதசத்தாற் சத்தானது அநந்யமா யறியத்தக்கதும், அசத்தானது சுட்டியறியத்தக்கதுமாம்.

மாயாவாதி,—அறிபவனாகிய சதசத்தா சத்தை அநந்யமாகக்கண்டபோது, அறிவானும் அறியப்படுபொருளும் வேறல்லவாம்.

மேலிடத்தில் அசத்து ஜடமாகையா லஃதொன்றினையுமறியாது. சத்து நின்மலமுடையதாகையா லதுவுமொன்றை யறிவது வேண்டாது. சதசத்து அசத்தை விரவிய குற்றத்தா லவ்வசத்தைச் சுட்டியறிந்தும், அவ்வசத்தின் றொந்தநீக்கத்தின் பொருட்டாகச் சத்தையறிந்தும், அங்ஙன மறிகையில் அச்சத்தநந்யமாயிருந் தறிவிக்கவறிந்து முபகாரத்தைப் பெறுமென்று யாம் கூறியிருக்கின்றோ மாகையால் அநந்யமாயறிவதும், அநந்யமாயிருந் தறிவிப்பதுமாகிய விரண்டுபொருள்களை யொன்றேயெனச் சாதித்தல் கூடாது. இவ்வுண்மைபற்றியன்றே வேதாதிக ளவ்விரண்டி னநந்யத்தை பேகமென்றுது அத்துவிதமெனக் கூறிற்று? அவ்வநந்யத்தை (ஒன்றாகாம விரண்டாகாம - லொன்று மிரண்டு மின்றாகாமல்) என்று இலக்கணங்கண்டு பெரியோர் கூறிய வகையானுங்காண்க. கதிரொளியுங் கண்ணொளியுந் தம்முள் விரவியறிவித்தும், அறிந்தும் வருகையால் அவை யேகமாகாது அத்துவிதமாகிய வநந்ய விலக்கணத்தைப் பெற்றிருக்கு முண்மையே யெடுத்துக்கொண்ட வுபமேயத்தைச் சாதிக்கு முபமானமாக முடியும். இவ்வுண்மை ஒற்றொலியுயிரொலிகளின் வியாப்பிய வியாபக தருமங்களாலும் விஸ்தரிக்கப்படும். இப்படியறிவதொழிந்து அறிபொருளே யறியப்படுபொருளு மாகுமென்று பிதற்றியது பேதமையாய் முடிந்தது. இன்னும் விரிக்கிற்பெருகும்.

சைவர்,—உலகம் பிரளயகாலத்திற் றனக்குக்காரணமாகிய மாயையி லொடுங்கிநின்று மீண்டுஞ் சிருட்டிகாலத்திற்றோன் றுமம.

மாயாவாதி,—மாயை தூலமா? சூக்குமமா? சூக்குமமாயின், அதிற் சூக்குமமே யன்றித் தூலமெங்ஙனந் தோன்றும்? நெல்கமுகாய் நீளுமாறெங்ஙன்? அல்லது அது தூலமாயின், அது இருததற்கு இடமெங்கே? மாயை அநாதியானபடி அதற்கிடமாகத் தேடப்படுவதொன்றும் அநாதியாகுமன்றோ? காலமும், இடமும் அநாதியாகவே, அதிற்சலிக்கும் வாயுவும், ஏனையபூதங்களும் அநாதிநித்தியமாருமன்றோ? அப்போது திரிபதார்த்தங்களோ அநாதிநித்தியமென்ற லெங்ஙனங் கூடும்?

மாயாவாத மதங்கொண்டாரற்று மம்மதிகேடர்கூற்றை யினிமாற்றுவாம். மாயையைத்தூலம், அல்லது சூக்குமம் என வொருவிதமாகவே யாவர் சொன்னாலுஞ் சொல்வரன்றி யிரண்டுவிதமாகவுஞ் சொல்லாரன்றோ? அங்ஙனமாகுகையில் இருதிறக்கொள்கையையும் வருவித்துச் சைவரைமுன்னிலையாக்கி மறுத்து விவகரித்ததென்னை? இதனால் சைவர்கொள்கை இனனதென்று தெரியாமல் விவகரித்ததாகவே யன்றோ முடியும்? மாயையைச் சூக்குமமெனவாவது, தூலமெனவாவது சைவர் கூறார்! கூறார்!! அது வியாபகப்பொருளாகையால். மாயையை யுபாதானமாகக்கொண்டு பிரபஞ்சகாரியத்தைக்கூறுஞ் சைவசித்தாந்தப்படியே பிரமத்தை யுபாதானமாகக்கொண்டு மாயாவாத சித்தாந்தமும் பிரபஞ்சகாரியத்தைக் கூறுகையால் அம்மாயாவாதி கேட்ட கேள்விகள் அவர் தலையிலேதானே விழுந்தனவென்றறிக. பிரமம் சூக்குமமா? தூலமா? சூக்குமமெனி லதிற் றூலப்பிரபஞ்சந் தோன்றுமாறெங்ஙனம்? தூலமெனி லதற்கிடமெங்கே? அப்பிரமமுள்ளவன்றே அது தங்குமிடமுமுண்டாகுகையால் பலமுதல்களுக் கிடஞ்செய்யுமோர் மதமாகி யேகவாதஞ்சத்தித்த லெடுபட்டுப்போமன்றோ? மாயை ஜடம். அதிற்காரியப்பட்டு மீண்டு மதிலடங்கும் பிரபஞ்சமுஞ் சட

ம். சடத்திற்சட முண்டாவதைக்கூறுஞ் சைவசித்தாந்தம்போலாது சித்தாகிய பிரமத்தில் அசித்தாகிய பிரபஞ்சத்தோற்றங்கூறு மாயாவாதமேயன்றோ வலைக்கணுற்றழியும்? நாலருக்குமங்கள் மாயை, பிரமமென்பவைகட் கிலக்கணமன்றாகையா லவற்றை விசேஷவருவித்துக் கடாவுவது கூடாது! கூடாது!!

சைவ,——ஆன்மாவினது அறிவு மலத்தான் மறைப்புண்டு மயங்கா நிற்கும்.

மாயாவாதி,——பாசம் ஜடம் அதன் ஸம்பந்தமாகிய மலமுஞ் சடம். ஜடமாகிய பாசம் அறிவை யெங்ஙனம் மறைத்தல் கூடும்? அநாதியே அறிவைமறைத்த பாசமு மநாதியாகுங் கால் அந்தப்பாசம் அநந்தத்தைப் பெறுமா றெங்ஙனம்? அநந்தத்தைப்பெறின், அது ஆதியாவதன்றி அநாதியாமா றெங்ஙனம்?

பாசம் ஜடம் என்பது திண்ணமே! அதனால் அது அறிவை மறைக்காதென்பது கூடாது. ஜடம் என்பதற் கிலக்கணந்தா னென்னை? அறிவில்லாமையே யன்றோ? பாசத்துக்கு அறிவில்லாமையேயன்றி அசைவில்லாமை யிலக்கணமன்றாகையால்; அவ்வசைவாகிய கிரியையோடு கூடிய தென்பது திண்ணம். ஜடமாகிய பாசம் கிரியையோடு கூடியதாம், சித்தாகிய ஆன்மா கிரியையுடன் ஞானத்தோடு கூடியதுமாகையால ஜடந்தன்மையால பாசம்பயக்காதென்று பிதற்றியது நிரஸ்தம். விஷமென்பது ஜடம். அது சித்தாகிய வுயிரைச் சம்பாதித்து வெதுப்புந் தன்மையேயன்றோ பாசபசுக்க ளிடத்திலுங் கொள்ளத்தக்கது? இனிய பாசநிவிர்த்தியைக் கொஞ்சம் விசாரிப்பாம். பாசம் சிவசீவர்க்களைப்போலவே அநாதிநித்தியமென்பது சித்தம். அந்தப்பாசம் யாண்டும் அந்தத்தைப்பெறாது. (முத்தியிலுமூன்று முதலுமொழியக்கேள்) எனவும், (பாசங்கெடாமல்) எனவுங் கூறிய பெரியோர் திருவாக்குகளுஞ்சான்றாம். ஸ்ரீ சிவபெருமானது திருமிடற்றிலடங்கிய விஷமானது முதல்கெடாமலும், சத்தியடங்கி யிருக்குந் தன்மையேயன்றோ பாசவிச்சேதமாகிய முத்திக்கெடுத்துக்கொண்ட நிதரிசனமாம்? இன்னுங் கதிரொளிக்கு முன்னர் முனைத்துத்தோன்று

தடங்கிக்கிடக்கு மிருளுமன்றோ மோட்ச நலமாகிய பாசவொழி வை யினிதுவிளக்கும்? இவ்வுண்மைதேராது விபரீதம் பேசியது வீண்பிரஸங்கமாய்முடிந்தது. சைவ நூல்களின் முடிபுணராது சழக்குரைபேசுஞ் சண்டிகளோடு விவகரிப்பது கஷ்டம்! கஷ்டம்!!

சைவர்,—இல்லாத ஜகஜீவபரங்கள் கற்பிக்கப்பட்டவா றென்னே? அங்ஙனங் கற்பிக்கப்பட்டவை மீண்டுங் கழலுமென்ப தென்னே? பின்னர் கழலந்தக்கவை முன்னர் கற்பனையா னவா றென்னே?

மாயாவாதி,—நிழலினது ஆரோக்யம் வெய்யலிலிருந்தவனுக் கன்றோ தெரியும்? அங்ஙனமிராதவனுக்கு அதனது அருமை புலப்படுமோ? இருளில்லாவிட்டால் ஒளியினது விசேடம் நன்குபுலப்படுமோ? விவகாரத்திலேனுஞ் சுகசீவர்கள் கற்பிக்கப்படாவிட்டால் அவற்றின் பிரதியோகியாகிய பிரமலட்சியம் அறிவிலிகட்கு நன்குபுலப்படுமோ? இங்ஙனம் பிரமலட்சியம் வரைப்படுத்துணர்த்துவான் கற்பிக்கப்பட்ட அபாவமாகிய ஜகஜீவர்கள் பின் விசாரணைசெய்தவுழி நிலைநிற்குமா?

பிரமம் ஒன்றேயுள்ளதும், அதற்கிரண்டாவது கிடையாதென்பதும் மாயாவாதிகள் துணிபன்றோ? ஜகஜீவபரங்கண் மூன்றும் ஏகமாகிய பிரமமாகாவன்றோ? இரண்டு என்னுஞ் சொல்லுக்கே யிடங்கொடாத பிரமத்துக்கு முன்னர் ஜகம், ஜீவன் பரம் என்னும் விவிதங்கள் முளைத்தவாறென்னை? என்று பல வினாக்களை யெம்மனோர் வினவியது யுக்தமே! இங்ஙனமாக, நிழலினது ஆரோக்யம் வெய்யலிலிருந்தவனுக்கன்றோ தெரியும் எனவும், இருளில்லாவிட்டால் ஒளியினது விசேடம் புலப்படுமோ எனவும் பிரஸ்தாபித்துச் சமாதானங் கூறிக்கொண்ட அவர் தடிப்புத்திக்கு நாமென்ன செய்யலாம்? அவர் கூற்றின்படியே வெய்யலினது அபாவம் நிழலும், ஒளியினது அபாவம் இருளுமாகின்றனவன்றோ? இவ்விரண்டுங் கண்டப்பொருள்களாகையால் அதுபொருந்தும். பிரமம் அகண்டிதமாகையால் அதனபாவமே ஜகஜீவபரங்களென்ற கிழுக்காம். வெய்யில், நிழல் என்கையில் அந்த நிழல் ஓர்மரம்-அல்லது வேறுபொருளை யாச்ரயித்துவன்

டாவதன்றித் தானே யுண்டாகாது. வெய்யில் - மரம் - இடம் - நிழல் இவற்றிற்கு வேறாயுள்ள வொருவனே ஆரோக்யத்தை யனுபவிக்கவுரியவன். இவ்வுபமான த்ருஷ்டமாகிய பிரமத்தினிடத்தில் அவ்வாபாசகர் கூற்று எங்ஙனேநிலைக்கும்? மரத்தினது நிழல் வெய்யலிருந்தபோது பூமியினிடத்துண்டாகையால் பிரமத்தினது நிழல் எது இருந்தபோது எதனிடத்திலுண்டாயிற்று? மரத்தினது நிழல் மரமிருந்தபடியே தழைந்து கிளை முதலியவற்றோடுண்டாகின்றமையால், அப்படியேயன்றோ பிரமசுபாவத்துக்கு வேறாகாமல் பிரமத்தினிழலுண்டாகவேண்டும்? பிரமத்தினிழலென்று சண்டமாயாவாதி யுரைத்தது ஜகஜீவபரங்களே யாகையால், இந்த நிழல் பிரமசுபாவத்துக்கு வேறானதன்றாகவேண்டும். அன்றியும், ஜகம் என்பது கேவலஜடப்பொருளும், ஜீவன் என்பது கிஞ்சிஜ்ஞத்வாதி யுபாதியுடையதும், பரம் என்பது ஸர்வஜ்ஞத்வாதி யுபாதியுடையதுமாகு மிலக்கணங்களை அன்னோர் கூறுவதுண்டாகையால், இம்மூன்றையுமுடைய சுபாவசீலத்ததாகவே அதிஷ்டானமாகிய பிரமமும் நிச்சயிக்கப்படும். ஜகஜீவபரங்கண் மூன்றும் அபாவமாகிய நிழலாகுங்கால் அந்தநிழலினிடத்துண்டாகும் ஆரோக்யத்தை யெந்தப்புருஷனே அனுபவிக்கத்தக்கவன்? ஏகமாகிய பிரமமொன்றையே சாதிக்கவெழுந்து அதுவிகாரமில்லாதது, உருவமில்லாதது, குணமில்லாதது, மலமில்லாதது என்பனவாதி யிலக்கணங்களைக் கூறிவிட்டுப், பின்னர் ஜகஜீவபரங்களாகிய விகாரங்களையும், நிழலுண்டாதற்கேதுவானவுருவத்தையும், ஜடத்வம்-கிஞ்சிஜ்ஞத்வம்-சர்வஜ்ஞத்வம் என்னுங் குணங்களையும், உபாதிவசப்பட்டு வருந்துதற்கிடமான மலத்தையும் அவர் கடைப்பிடித் தொழுகுங் கூற்று அந்தோ கொடிது! கொடிது!! இது என்போலுமெனின், பஞ்சபாண்டவரை நான் அறியேனு கட்டில்கால்போல என்று வாயாற்கூறி, மூன்று விரலைக்காட்டி, இரண்டுவிரலைக் கீழே தாழ்த்தி, ஒருவிரலாற் பூமியிற் கோடிழுத்த அவிவேகி யொருவன் செய்கைபோல்வதேயாம். இப்படியே அவர் காட்டிய ஒளியிருள்களின் றிட்டாந்தமும் விசாரமுகத்து அவலப்பட்டழியும்! அழியும்!!

இது நிற்க, நிழலினது ஆரோக்யம் வெய்யலி லிருந்தவனுக்கன்றோ தெரியும் என்று அவர்கூறிய நியாயம் வாயாற் சிரிக்கத்தக்கதன்றாம். ஒருவன் பூர்வஜந்ம விசேடத்தால் சகல சௌக்யங்களையுங் குறைவின்றி யனுபவிக்கத்தக்க பாக்யவா னாகுகையில் அவனுக்

கு அந்த ஸௌக்யத்தினருமை புலப்படுமாறு இடையில் தரித்திரமுண்டாகவேண்டுமென்று இழவெடுக்கவந்த அம்மாயாவாதியையென்ன செய்தாற்றூன்றீரும்? கன்மங் காரணமாகவே ஸௌக்யாஸௌக்யங்கண்முதலிய போகங்களுண்டாகுமென்று வேதாதிகள் கூறுமுண்மையையறியாத கொடுமையால் அவர்பிதற்றியது பெரும்பேதமைத்தே! ஒருவன் செல்வவானுகவும், ஒருவன் தரித்திரவானுகவும், ஒருவன் எசமானனுகவும், ஒருவன்அடிமையாளாகவும், ஒருவன் தண்டிகை ஏறுபவனுகவும், ஒருவன் அதைச்சுமப்பவனுகவுமுண்டாயிருக்கும் விசித்திரம் யாதென்று எழும் வினுக்களுக்கு இப்படிக் கடவுள் சிருட்டியாவிட்டால் உலகம் நடக்குமா என்று சமாதானங் கூறும் ஊணர் மகமதியர் செய்கையோடொப்ப மாயாவாதியுரைப்பது ஆச்சரியம்! ஆச்சரியம்!! கன்மமென்பதொரு பொருளை யங்கீகரியாமையால் ஊணர் முதலினேர் அங்ஙனம் பிதற்றுதலொக்கும். (அறத்தாறிதுவென வேண்டா சிவிகை- பொறுத்தானோ டூர்ந்தானிடை) என்னும் பிரமாணத்திற் கட்டுண்டு விவகாரத்திலேனும் யாம் வைதிகர் என்று கூறித்திரியும் மாயாவாதிகள் அங்ஙனம் பிதற்றுதலெங்ஙனங் கூடும்? அன்றியும். பிரமலட்சியம் அறிவிலிகட்குப் புலப்படுமா என்று வினவினுராகலின், அவ்வறிவிலிகள் யாவர்? ஜகஜீவபரங்கள் நிழலாய் முடிந்தமையால் அவற்றை யனுபவிக்கும் புருஷர் வேறுவேண்டும். அவர் ஜகஜீவபரங்களிற் சீவரேயெனின், நிழல் வேறுதேடவேண்டும். ஜகம், பரம் என்பவைகட்குங் கதிதேடவேண்டும். ஒன்றுமில்லாத பிரமத்திற் கற்பிக்கப்பட்ட ஜகஜீவபரங்களைப் பின்னர் விசாரித்தழி யில்லாமற் போய்விடுமென்றுரையாடிய அவரேழைமதியையுங் கொஞ்சம் விசாரிப்பாம். அவற்றை விசாரிப்பவர் யாவர்? ஜகமா? ஜீவனு? பரமா? அதிட்டானபிரமமா? அனுபவத்திற் சீவர்களே விசாரிக்கையால் ஜீவன் தன்னை விசாரித்துத் தன்னையும், தன்னெடு விசாரிக்கப்படும் பரம்-ஜகம் என்பவைகளையும் அபாவமாக்கிக்கொள்ளும் பெருமை சாலவுமுகுடைத்தே! அதிட்டானபிரமம் விசாரிக்கின்றதெனின், விகாரியென்பது பெறும். அல்லாமலும் மரமே தன்னிழலை யடைந்தனுபவிக்கும் புருஷர்களை விசாரித்து அபாவமாக்குதல் கூடும். இப்படி விரோதம் பெற்றழியு முபமானங்களா லவர்காட்டப்போந்த வுபமேயமாகிய பிரமத்தன்மை நிலைக்காமையால், கேவலம் பசுப்பிராயர்களென்றே அவரைத் தீர்மானிக்கவேண்டியது. மரம், மரத்தினிழல்

அதையடைந்தனுபவிப்பவர் என்னும் பகுதிகள் விசாரித்தழி நிலை பெறுதல்போலவே யன்றோ பிரமமுதலிய பதார்த்தங்களும் விசாரணையிற் கெடாது நிற்கும்? மரம் அழிந்தபோதன்றி நிழல் அழியாதாகையால், பிரமம் அபாவமான காலத்தன்றி அதனாலுண்டாகும் ஜகஜீவபரங்களும் அபாவமாகாவெனவறிக. வெய்யல் மிகுந்தவோரிடத்தில் நிழலில்லாதபோது அங்கு மரமில்லையென்று தீர்மானிக்கிறபடியே யன்றோ ஜகஜீவபரங்கள் அபாவமாகிற காலத்திலவற்றினதிட்டானமாகிய பிரமமும் அபாவமாயிற்றென்று தீர்மானிக்க வேண்டியது? ஒன்றுமேயில்லாமற் போய்விடுகிற சூனியவாதமாக முடிந்த அம்மாயாவாதம் எங்ஙனே நிலைக்கும்? இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்;—பால் தயிரானதுபோல் பிரமம் பிரபஞ்சமாகப் பரிணமித்ததுண்டேனின், மீண்டுந் தயிர் பாலாயிடு மன்றோ பரிணமித்த பிரபஞ்சம் பிரமமாயிடுமே?

மாயாவாதி;—தயிரைப் பசுவுக்கு ஊட்டினால் மீண்டும் அது பாலாகும்.

தயிர்மாத்திரந்தானே பசுவுக்கு ஊட்டினால் பாலாகும்? எந்த வைக்கோலேனும், பண்டமேனும் பசுவுக்குணவாகுங்காலவையும் பாலாகுமாகையால் தயிரைமாத்திரமுரைத்தது தவறாகும். பால்மாத்திரமேயன்றி வேறு பொருள்கள் தயிராகாமையால் விருத்தோபமானங்கொண்டதும் விரோதித்தது. இன்னும், தயிரைப்பசுவுக்கு ஊட்டி அதை மாத்திரம் பிரித்துப் பாலாகவெடுத்தல் கூடுமோ? ஓரிடையன் தயிருண்டிருந்தபோது அவன் வயிற்றைக்கீறிச் சோதித்த பண்டிதர்கள் எருமைப்பால் இவ்வளவென்றும், பசுவின்பால் இவ்வளவென்றும் பிரித்துரைத்தனரென்று அம்மாயாவாதி யோரிடத்திற் கூறியிருக்கிறபடியே ஓர் பசுவினிடங் கறக்கும் பாலில் தயிரினாலுண்டாகிய பால் இவ்வளவென்றும், மற்றையுணவுகளா லுண்டாகிய பால் இவ்வளவென்றும் பிரித்துக்காட்டுதல் கூடுமோ கூடாதோ தெரியவில்லை. இடையன் வயிற்றில் தயிரைக்கண்டு இன்னின்னபாலின் சம்பந்தமுடையது இத்தயிரெனக் கூறினதொழிந்து அந்தந்தக் கூறுகளைத் தயிரிலிருந்து பாலாக்கிக் காட்டினதுண்டா? இவராவது தயிரைப் பாலாக்குவாரா? வேறு நல்லபால் எளிதிற்கிடைக்கை

யால் தயிரை மீண்டும் பாலாக்குவ தவசியமன்றெனின், அநுபவத்துக்கு வந்திராத விஷயத்தை யாசரிப்பது கூடாது. இங்கே யெடுத்துக்கொண்ட வுபமானம் பிரமம், பிரபஞ்சம் என்பவற்றை விளக்குவதொன்றாகையா லின்னுங் கொஞ்சம் அதை விசாரிப்பாம். பிரமம் பிரபஞ்சமாயிற்று. பால் தயிராயிற்று. பாலானது பிரைக்குற்றத்தாலன்றோ தயிராயிற்று? தனக்கிரண்டாவதில்லாத பிரமம் எந்தக்குற்றத்தாற் பிரபஞ்சமாயிற்று? தயிரைப் பசுவுக்கூட்டினு லன்றோ மீண்டும் பாலாகும்? பிரபஞ்சத்தை யெவ்வாறுசெய்தா லதுமீண்டும் பிரமமாகும்? பிரபஞ்சந் தானுக்விசாரித்தாற் பிரமமாகு மென்பார் போலும். பால், தயிர்களுக்கு அவற்றைப் பரிணமிக்கச் செய்பவன் வேறுண்டுபோலப் பிரமம், பிரபஞ்சமென்பவைகளுக்கும் அங்ஙனஞ் செய்பவன் வேறாகவேண்டும். அஃதின்மையின், அவரெடுத்துக்கொண்ட வுபமானம் அவரைத் தெருவில்விட்டது.

சைவர்,—மாயையிலுண்டாகும் பிரபஞ்சம் மாயையிற்றானே யொடுங்கி மீண்டுங் காரியப்படும்.

மாயாவாதி,—மரத்திலுதிர்ந்த விலைகள் அம்மரத்திற்றானே யொடுங்கி மீண்டும் வருவதுண்டோ? இங்ஙனங்கேட்ட வுலகாயதனைநோக்கி அம்மரத்திற்குக் காரணமாகிய பிருதிவியிலொடுங்குமென்று சைவநூல்கள் கூறுவதென்னை?

இந்த வினுவிடைகளால் அம்மாயாவாதிக்கு ஆதாரமுண்டானதாகப் பொங்கி யெழுந்தனர். எங்ஙனமெனின், மரத்திலுதிர்ந்த விலை மரத்திலொடுங்காமல் மண்ணிலொடுங்கலால், அப்படியே மாயையிலுண்டான பிரபஞ்சம் அம்மாயையி லொடுங்காமல் அதற்குக் காரணமான பிரமத்திலொடுங்குமென்று கூறவிடமுண்டாகையால். இன்னும், பாலிலுண்டான தயிர் அந்தப்பாலிலேதானே யொடுங்காமல் அதற்குக் காரணமாகிய பசுவினிடத்தே யொடுங்குமென்று கூறவிடமுண்டாகையால். மேலுண்மையை விசாரிப்பாம். சிவஞான சித்தியார் - சுபட்சம், முதற்சூத்திரம் (மாயையிலுள்ளவஞ்சம் வருவதுபோவதாகு - நீயதிங்கில்லையென்னி னிகழ்த்திடுமுயலிற்கோடு, போயுகுமிலைகளெல்லா மரங்களிற்புக்குப்போதி, ஞாபிடமதுவுமென்னிற் காரணங்கிடக்கவாமே.) என்னும் வாக்கியமே அவரெடுத்துக்கொண்ட வாதரவாயுள்ளது. இந்தவாக்கியத்தில் (மாயையிலுள்ளவஞ்சம் வருவதுபோவதாகு, நீயதிங்கில்லையென்னி னிகழ்த்திடுமுயலிற்கோடு) என்பது சித்தாந்தி

யார் கொள்கை. (போயுகுமிலைகளெல்லா மரங்களிற்புக்குப்போதி, ஞயிடு மதுவும்) என்பது உலகாயதன்கொள்கை. (என்னிற் - காரணங்கிடக்கவாமே) என்பது சித்தாந்தியார் துணிவு. இவற்றுள், (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு மரத்திற்குக் காரணமாகிய மண்ணில் அம்மரத்திலிருந் துதிர்ந்த விலைகள் ஒடுங்குமென்று கூறுவதும், அப்படியே மாயைக்குக் காரணமாகிய பிரமத்தில் அம்மாயையிலிருந்துண்டான பிரபஞ்ச மொடுங்குமென்று கூறுவதுஞ் சைவசித்தாந்திகள் கூற்றாக வம்மாயாவாதி கண்டுபிடித்தது அதிசயம்! அதிசயம்!! (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு (அங்ஙன முதிர்ந்த விலைகள் சத்திரூபகாரணமாய் நிலைபெறுடைமையினது மீளத்தோன்றுதற்குரிய பிறகாரணங்களெல்லா மதனோடொருங்குகூடியவழி யவ்வாறே தோன்றும், அல்லுழித் தோன்றாதாகலினது பற்றிக்கடாவென்னை?) என்று திராவிட பாஷ்யகாரர் தமது பொழிப்புரையிற் கூறியிருக்கு முண்மையை யறிந்தடங்குக. இதனால், பிரபஞ்சம் அதற்குக் காரணமாகிய மாயையிலொடுங்காமல் அம்மாயைக்குக் காரணமாகிய பிரமத்திலொடுங்குமென்று சைவர்கூறுவரெனப் பிரமித்தாடிய சழக்குரை சரிந்துபோயிற்று. இனி (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு மரத்திலுதிர்ந்த விலை அதற்குக் காரணமாகிய மண்ணிலொடுங்குமென்று மாயாவாதி பொருள்கொண்ட வஸங்கதத்தைக் கொஞ்சம் விசாரிப்பாம். பிரபஞ்சம் அதற்குக்காரணமாகிய மாயையி லொடுங்கிமீண்டுங் காரியப்பட்டு வரும் என்பதை நாட்டவேயன்றோ (காரணங்கிடக்கவாமே) என்று ஆசாரியர் கூறினர்? காரணங்கிடக்க வென்கையா லுபாதானமும், ஆமேயென்கையா லதிற்காரியந்தோன்றி வருகையும் பெறப்படுதலறியாது காரியங்களொடுங்குதலையே யாண்டுரைத்ததாகப் பிதற்றியது என்னபேதமை? அதவா அவர்கொண்டபொருளின்படி நோக்கினும், மரம் இலையைத் தந்ததுபோல் மாயை யுலகத்தைத்தரலும், இலை மண்ணிலொடுங்குமாபோல் உலகம் பிரமத்திலொடுங்கலும் பெறப்பட்டு ஒடுங்கினமண்ணிலே நின்று மிலைகள் மீளத்தோன்றாமைபோலவே யன்றோ வொடுங்கின பிரமத்திலே நின்றும் பிரபஞ்சம் மீளத்தோன்றமாட்டாது? இந்த வுபமானத்தாற் பிரபஞ்சம் பிரமத்தி லடங்குவதொழியத் தோன்றுவதொன்றல்ல வென்றேற்படுகையால் உலகம் பிரமத்திலுண்டாகின்ற தென்னும் அம்மாயாவாதக்கோள் மாட்சி யிழந்தொழிந்தது. ஒடுங்கின விடத்தினின்றுமே மீளவுண்டாமென்னுந் தருக்கத்தால் பிரபஞ்சம் மாயையிலொடுங்கியும், மாயை பிரமத்தி லடங்கியும் வருதலா லப்படியே யன்றோ

மீண்டும் அடங்கியமாயையும, ஒடுங்கிய பிரபஞ்சமும் முறையே ய வற்றிற் கதிஷ்டானங்களாகிய பிரமம், மாயையென்பவைக ளிடத்தி ருந்து வெளிப்பட்டுங் காரியப்பட்டும் வருமென்று சைவசித்தாந்த நூல்கள் கூறும்? இன்னும், மரத்துக்குக் காரணம் மண்ணென்று அ வர் கொண்டதுந்தவறுடைத்தே! வித்தில்வழி மண்ணினிடத்து மரந் தோன்றுதாகையால். இந்தவுபமானத்தால் மரங்காரியமும், வித்து காரணமு மாகின்றமையால், வித்தினிடத்தன்றோ மரமொடுங்கவே ண்டுமெனின், வித்தினது ஸ்தானத்தி லுபமேயமாய் நின்றமாயை ய வ்வித்தைப்போற் சூட்சுமப்பொருளாகாது கடலைப்போல்வியாபகப் பொருளாய் நிற்றலி னஃதொருங்கே முழுதும் வித்தைப்போற் பரி ணமித்து விடமாட்டாது. ஒருவித்தி லோர்மரமே பரிணமிக்கும். ஏகமாகிய மாயையி லெண்ணிறந்த வண்டங்க ளுண்டாவதன்றி மேலுமேலு மளவிறந்த வண்டப்பகுதிக ளுண்டாவதற் கியைந்த காரணத்தன்மையு மெஞ்சிக் கிடத்தலால், அத்தகைய மாயையி லுண்டாகு மண்டங்க ளம்மாயையிலே தானே யொடுங்க விட முண்டாகும். கடலினிடத்துண்டாகு மளவிறந்த வலைகள் அந்தக் கடலினிடத்தே தானே யொடுங்குமாபோல். அலைகளாகிய காரியங் க டோன்றி யொடுங்கு மிடத்தை நோக்க வெஞ்சி யுள்ளவிட மநே கமடங் கதிகமாக வந்தக்கடலி னிடத்துக் காண்கையா லத்தகைய கடலினிடத்திற்றோன்றிய வலைக ளதிற்றானே யொடுங்குமென்பதற் கிழுக்கென்னோ? இவ்வாறான வரும்பொருள் கிடப்பவேயன்றோ காரணங் கிடக்கவாமே யென்று சைவத்தலைவருங் கூறினர்? கா ரணமாகிய கடல் கிடக்க, அதிற் காரியமாகிய வலைக டோன்றி யொ டுங்கி மீண்டுங்காரிப்படுதல் ஆம் என்று பொருள் விரவிக்கிடத்தலு மொன்று. மேலிடத்திற் காட்டிய வயித்தியார் வாக்கியத்தில் மரத்தி லுதிர்ந்த விலையைப்போல் மாயையிற் பிரபஞ்ச முண்டாமென்றது உலகாயதன் காட்டிய விபரீதவுபமானமேயன்றிச் சைவசித்தாந்தி யார் கொண்டவுபமானமன்று. அவன் மதத்தை யநுவதித்துச் ச மாதானங் கூறிய பகுதியே யதுவாம். அதனால், சைவநலம் கெடமா ட்டாது. சைவர் கூறு முபமான நிலைபெறுவிடின் மாத்திரமே யாம் யோசிக்கவேண்டியது. புறச்சமயிகள் புலம்பலுக் கெல்லாம் யாமே னோ மாரடித்துக்கொள்ள வேண்டும்? அதுபற்றியே யன்றோ (அல் லுழித்தோன்றுதாகலி னதுபற்றிக்கடாவென்னை?) என்று நஞ்சைவ பா ஷ்யகாரரும் பிரஸ்தாபித்தருளினர்? கடலையும், காற்றையும், அலை

ளையும் உவமித்துக் கடலிற் காற்றா லலையுண்டாகி யொடுங்குவதுபோல் மாயையிற் சிவனாலுலகமுண்டாகி யொடுங்குமென்று சைவர் கூறுவதை விரோதித்துச் சிலம்பி திட்டாந்தங்கூறி அபின்ன நிமித்தோபாதானங் கூறும் அம்மாயாவாதிமதத்தை யோசித்த லொன்றே மேனுண்மையை விளக்கும். உபாதானமும், நிமித்தமுஞ் சிலம்பியே யாகின்று, காரியமாகிய நூலைத்தருதல் அவர் மதமாகவினது பேதிக்குமாறு யாம் கடாவுவோ மன்றோ? சிலம்பியினது தேகம் ஜடமும், அதிற்போந்த தேகி சித்துமாகையால் நூல் காரியப்பட்டது தேகத்திலா? அல்லது தேகியினிடத்திலா? என்றபோது தேகத்திலென்றே வெளிப்பட்டு அவர் சாதிக்கவந்த அபின்ன நிமித்தோபாதானம் அடியோடே சாய்ந்துவிடுகிறதன்றோ? அதுபோல் சைவர் கூறு முபமானமு மறுக்கப்பட்டாலன்றோ சைவநலந் தாழ்வுபெறும்? எதிரியினது மதாநுசாரமான வுபமானங்களை மறுக்கவேண்டியதே யன்றி வேற்று மதத்தினர் குத்ஸிதம் பேசி விளக்கும் அவலதிட்டாந்தங்களை யொருபொருளாக மதித்து எந்த மதவாதியாயினும் பதிலுரைப்பது அவசியமன்று. அங்ஙனம் பதிலுரையாமையால் அவன் மதந் தாழமாட்டாது. பிரமத்தில் மாயைக்கு உற்பத்தி கூறு மாயாவாதியையுஞ் சைவசித்தாந்தியைக் கேட்டபடியே வினவுதல் கூடுமன்றோ? எங்ஙனமெனின், மரத்தி லுதிர்ந்தவிலை மரத்திலொடுங்காது அம்மரத்துக்குங் காரணமாகிய மண்ணிலொடுங்குதல்போல் பிரமத்திற் றோன்றியமாயை பிரமத்தி லொடுங்காமல் அந்தப் பிரமத்துக்குக் காரணமாகிய வேறெதி லொடுங்குகின்றது என்று கடாவுதலேயாம். இப்படி யொருவன் வினவுவது எமக்கபிமதமன்று. மரத்தையும், இலையையும் அவர்மதத்தி லுபமானங்களாகக் கொள்ளாமையால். அவர் கொண்டிருக்குமோ ருபமானத்தையே யன்றோ மறுத்தல்வேண்டும்? அப்படியே யன்றோ சைவரிடமுங் கொள்ளத்தக்கது? தன்மதத்துக்குப் பின் வரப்போகிற கதியை அம்மாயாவாதி நோக்காமல் எதிரி மதத்தை மாத்திர மெடுத்துப் பேசுவது என்ன பேதமை? இப்படிப்பட்ட பலநியாயங்களால் மாயையிலேதானே பிரபஞ்சமுண்டாகி யொடுங்கி மீண்டுங் காரியப்பட்டுவருமென்னுஞ் சைவ முடிவு சாதிக்கப்பட்டது.

ஆயின், வித்திலொடுங்காது அதிக்கிரமிக்கும் மரத்தையும், அந்த வித்தையும் பிரபஞ்சத்துக்கும், மாயைக்குஞ் சைவநூல்களுவமை கூறியதென்னையெனின், வித்திலே நின்றுந் தோன்று மரம்

பூமி யாதாரவிலன்றித் தானே தோன்றமாட்டாதாற்போல மாயை யிலே நின்றுந் தோன்று மூலகம் சிவஞதரவி லன்றித் தோன்றமா ட்டாதென்பதை விளக்குதற் பொருட்டே யன்றி, எதிலே நின்றுந் தோன்றிற்றோ வதிலேதானே யோர்பொரு ளொடுங்கு மென்பதை விளக்குதற் பொருட்டன்றும். இவ்வுண்மை கண்டபின்னர் வீண் விவாதத்துக் கிடமுண்டாகாமையால், அவரது அறியாமையை யி ன்னுங் கொஞ்சமெடுத் திசைப்பாம். அவர் பாலிலுண்டான தயிர் அந்தப்பாலிலேதானே யொடுங்காமல் அந்தப் பாலுக்குக் காரணமா கிய பசுவினிடத்தே யொடுங்குமென்று கூறிக்கொண்டன ரன்றோ? தயிரைப் பசுவுக் குணவாக வூட்டுவது ஸம்பிரதாயமன்று. சதாசித் தாக வூட்டுவ துண்டாகையால். பசுவுக்கு மாத்திரமே யன்றி அந்த ப்பசுவின் றயிரை யெருமைக்கும், பன்றி முதலாகிய தாழ்ந்த மிரு கங்களுக்கு முணவாக்குங்கா லது மீண்டும் பாலாகுமெனக்கூற வ ருமன்றோ? எருமைக்கும், பன்றிக்கு முணவான பசுவின்றயிர் எ ருமைப்பால், பன்றிப் பாலாகவே யன்றோ திரிந்துண்டாகும்? பசு வின்பாலாத லின்றாகையால், பிரபஞ்சம் பிரமமாயிடுமென்றது பெ ரும்பேதமையே! அந்தப் பசுவின்றயிர் மானிடர்க்கே யன்றோ முக் கியமாக வுணவாகின்றது? அவரிடத்தி லது எப்படியாகின்றது? இந்தப் பிரஸங்கத்தால் தயிரானது பசுவினிடத்தொடுங்கி மீண்டு ம் பாலாகுமென்பதை மறுத்தோ மாகையால், அவர் விபரீதமித் தோடேமாய்ந்தது.

மேல், பால் தயிராகப் பரிணமித்தது பிரமம் பிரபஞ்சமாகிய தென்பதற்கு மாத்திரமே யுபமான மாகுமன்றி அந்தப்பிரபஞ்சம் மீண்டும் பிரமமாயிடு மென்பதற் குபமானமாக மாட்டாதெனின், அதற்குள்ள வுபமானந்தான் யாது? அங்ஙனங் காட்டியவிடத்து ம் பூஜ்யமாகவே யாம் கொள்வோம். பிரமம் பிரபஞ்சமாக விரிந்த தென்பதற்குப் பால் தயிர்களைக்கொண்டதே தவறு. பாலுந் தயி ரும் பரிணம ஸம்பந்தம் பெற்றமையால். அப்படியே யுபமேயத் தையுங் கொள்வது அவசியம். அங்ஙனங்கொண்டு மறுத்ததை அ வருமொப்புக்கொண்டே ஸமாதானஞ்சொல்லவந்து தடுமாறிப்போ யின ராகையால், அது அஸங்கதமுற்றழியு மென்பதே ஸித்தம். பொன்னானது பூஷணமாகுங்கால் அந்தப்பூஷணம் மீண்டும் பொ ன்ஞய் விடுவதுண்மை யாகையால், அதுவே பிரமத்தின் விகாரமா கிய பிரபஞ்சம் மீண்டும் பிரமமாய் விடுமென்பதற்கு யாமெடுத்துக்

கொண்ட வுபமானமெனின், அதுவுந் தவறுடைத்தாம். பொன்னும் அதன் விகாரமாகிய பூஷணமும் ஒரு தன்மை பெற்று விளங்கலால் அது கூடும். பூஷணத்திரிவில் பொன்னுருவங் கெடாமை வித்தம். பிரபஞ்சத்திரிவில் பிரமசுபாவங் காணாமையாற் பிரபஞ்சம் பிரமமாகமாட்டாது. பால் தயிரானபோது பாலின்றன்மை தயிரிலில்லாமற் போனதுபோல் பிரமம் பிரபஞ்சமானபோது பிரமத்தன்மை பிரபஞ்சத்தி லில்லாமற்போயிற்று. பாலைக்காட்டிலும் தயிர் கௌரவங் குறையப் பெற்றது போலவே பிரமத்தை நோக்கப் பிரபஞ்சம் இழிவெய்தாநின்றது. உயர்ந்த பொருளும், இழிந்த பொருளுமாகிய பிரமம், பிரபஞ்சமென்பவைகட்குப் பொன்னையும், பூஷணத்தையு முவமைகொண்டு பூஷணம் மீண்டும் பொன்னாய் விடுமாபோல் பிரபஞ்சம் மீண்டும் பிரமமாய் விடுமென்று சாதிக்கத் தலைப்பட்டது அஸாமஞ்சஸமாய் முடிந்தது. இப்படியே அவர்காட்டு மொவ்வோருபமானமும் பேதிக்கப்பட்டு ஏகவாதத்தின்றலையி லிடிவிழுந்தழியுமாகையா லினியேனு மவர் மதமடங்கிக்கிடப்பாராக. இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்,—ஒன்றேயாகிய பிரமம் பல யோனிகளிற்புகுந்து பல பிரமங்களாயுடைந்த தென்னை? அது நின்மல முடையது என்று நீவிர் கூறுமாற்றம் தான் யோனிவாய்ப்பட்டழிதலால் பொய்ப்பட்டதென்னை?

மாயாவாதி,—சிவாகமங்கள் பதார்த்தங்கள் மூன்றே யென்றும், அவை பதிபசு பாசங்களே யென்றும் பிரதிபாதித்தற்குப் பொருளென்னை? பசுக்கள் பலவுளவென நீவிர் கூறுவதென்னை? பசுக்கள் பலவாயின், திரிபதார்த்தங்களென வரையறுத்த லெற்றுக்கு? பரமார்த்தத்தில் ஒற்றுமை நோக்கி ஒன்றென்றும், விவகாரத்தில் பலவாய் விஜிரும்பித்துக் காணப்படுகின்றமையால் பலவென்றுங் கூறியதெனின், இதுவே பிரமவிசாரத்திலுங் கொள்ளாததென்னை? அக்னி ஒன்று? பலவா? அக்னி பற்பலவாக விஜிரும்பித்தக்கால் அதனது அபின்னத்வமேனும் பரிசுத்தமேனுங் கெடுமா?

இந்த ஸமாதானத்தைப் பரியாலோசிக்குங்கால் பெருநகைப்பையே விளைக்கின்றது. பதி யேகமும், பசுக்கள்

பலவும், பாசங்கள் மூன்றுமாகப் பிரதிபாதிக்கப்படுஞ் சைவசித்தாந்தத்தில் இம்மூவித விஜாதிகளையும் பதார்த்தத்திரயங்களென்று கூறுதலமையும். தமிழ்ப்பாஷையினெழுத்துக்கள் உயிரெழுத்தும், மெய்யெழுத்துமென விரண்டுவகைப்படுமென்று கூறி, அவற்றுள் உயிரெழுத்து பன்னிரண்டும், மெய்யெழுத்து பதினெட்டுமாகும் என விரித்தோதுவதா லுண்டாகிய குற்றம்யாது? இப்படியேயன்றோ சைவசித்தாந்த விவரணத்தைக் கொள்வர் மேலோர்? திரிபதார்த்தங்களில் பசுவென்பது அந்த ஜாதியினது சமஷ்டி வாசகமாகக் கொள்ளப்பட்டதனால் வியஷ்டியாக விசாரிக்கையில் எண்ணிறந்தனவாக வெளிப்படும். இஃதொழிந்து பசுவென்பது ஏகமேயெனவும், அஃது விவகாரத்திற் பலவாகிப் பரமார்த்தத்தி லொன்றேயாக விருக்குமெனவுஞ் சைவநூல்கள் கூறாமையால், பிரமம் ஒன்றேயுள்ளதெனவும், விவகாரத்தில் அஃதொன்றே பலசீவர்க்களாகுமெனவும், அவை மீண்டும் பரமார்த்தத்தி லொன்றேயாய்விடுமெனவுங்கூறு மாயாவாதத்தோடு எங்ஙனே யொற்றுமை பெறும்? இருவர் பிரசங்கமும் வேறு வேறு அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கின்றமையால், அநேகம் பொருள்களை மூன்றென்று சைவர் கூறியபடியே அநேகம் பொருள்களை ஒன்றென்று யாம் கூறினோமென்று அவர் தொடுத்த வீண்வழக்கு அபஜயத்தை யடைந்தது. ஒன்றாயுள்ளது என் பலவாயுடைந்தது என்பதற்கு என்ன ஸமாதான முண்டாயிற்று? ஒருபொருடானே பலவாயுடைந்து காரியப்பட்டனவென்று சைவநூல்கள் பசுவைக் கூறியதுண்டா? பெத்தமுத்திக ளிரண்டுகாலங்களிலும் பசுக்கள் பலவுள்ளனவெனவும், அவை திரிபதார்த்தங்களென்னுஞ் சமட்டிகளி லொன்றி லடங்குமெனவுஞ் சைவநூல்கள் கூறுகையால், விவகாரபரமார்த்தங்களை யேகமாகிய பிரமத்துக்குக்கூறி யிஷ்டம்போல் விவகரித்துவரு மாயாவாதி மதந்தானே மாட்சிபெறாதொழிந்தது. இனியொன்றாயுள்ள அக்னி பலவாக விஜ்ரும்பித்தபோது அபின்னத்வமும், பரிசுத்தத்வமுங் கெட்டனவாவென்று சமாதானந் தேடிக்கொண்டதையுஞ் சற்றே யோசிப்பாம். ஒன்றாயுள்ள அக்னி பலவாக விஜ்ரும்பித்ததென்கையி லவ்வொன்றினிடத்தும், பலவற்றினிடத்தும் உஷ்ணசக்தி, தக்தசக்தி, பிரகாசசக்தி முதலியன வொருபடித்தாகவே யிருக்கக்கண்டோம். ஏகமாகிய பிரமமே யப்படிப் பலவாகுமெனி ஜ

விவேகத்தினிடத்தும், பலவற்றினிடத்தும் பிரமசுபாவம் நீங்காதிருக்கவேண்டும். பிரமத்தின் விகாரமென்று அவர் கூறும் உயிர்கள் சுகதுக்க ரூபிகளாய் வினைவயப் பட்டு மொத்துண்டு வருந்துகின்றவர்களும், உலகம் கேவல ஜடப்பொருளுமாகி விளங்கலால் பிரமத்தின் அபின்னத்வமும், பரிசுத்தத்வமும் அவற்றினிடத்துண்டோ வில்லையோ வென்பதை விவேகிகளே யோசிக்கவேண்டியது. இதனுல் ஜகஜீவர்கள் ஏகமாகிய பிரமமன்றெனவும், பிரமத்தைப்போலவே யவ்விரண்டு பொருள்களும் விஜாதித்வமெய்திய நித்தப்பொருள்களெனவுஞ் சாதிக்கப்பட்டது. இது காறும் விவகரித்து முடிவு செய்த பரிஷ்காரத்தால் சைவசிந்தையிற் றலைப்பட்டமிர்ந்த ஜண்டியொருவனுல் வெளிப்பட்ட (பேதவாததிமிரபாநு) என்னும் ஆபாசத்திரட்டு அடியோடே மாய்ந்துவிட்டது. பேதவாதமென்பது மத்வமதமாகிய துவைதஸித்தாந்தமென வறியாது பேதம், அபேதம், பேதாபேதங்களாகிய முடிவுகளைக்கடந்து அத்வைதமென்னுஞ் சிறப்புரிமை பூண்டு விளங்குஞ் சைவசித்தாந்தத்தையே பேதவாதமெனக் கொண்டெதிர்க்கவந்த பாஸ்கரனுக்குப் பலபலவென்று பல்லுடைந்து, குப்புறவீழ்ந்து குலைகுலைந்தோட நேரிட்ட புதுமையை நாடி அங்ஙனஞ் செய்தருளிய (ஆபாசஞானநிரோதம்) என்னு மிந்தச் சிவசூரியனையேயன்றோ வீரபத்திரமூர்த்தியெனத் துதித்து விரும்பாநிற்பர் மேலோர்? மேலே கூறப்பட்ட மூவிதவாதங்களும் புறப்புறச்சமயம் ஆறாகவும், புறச்சமயம் ஆறாகவும், அகப்புறச்சமயம் ஆறாகவும், அகச்சமயம் ஆறாகவும் விளங்கும். இவற்றுள் உலோகாயதம், சமணம், நால்வகைப் பௌத்தம் ஆகிய ஆறுசமயங்களும் புறப்புறச் சமயங்களாம். மாயாவாதம், பாஞ்சராத்திரம், ஸாங்கியம், மீமாம்ஸம், தார்க்கிகம், யோகம் ஆகிய ஆறுசமயங்களும் புறச்சமயங்களாம். சைவம் பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம், மஹாவிரதம் ஆகிய ஆறுசமயங்களும் அகப்புறச்சமயங்களாம். சிவாத்வைதம் - அல்லது சிவைக்யவாதம், சிவஸங்கிராந்தவாதம், சிவஸமவாதம், பாஷாணமோக்ஷவாதம், அவிகாரவாதம், பேதவாதம் ஆகிய ஆறுசமயங்களும் அகச்சமயங்களாம். இவ்விருபத்து நாலுசமயங்களுக்கும் அதீதப்பட்டது சைவசித்தாந்தமென்னுமுண்மை சிற்றம்பலநாடிகள் செய்தருளிய தத்வப்பிரகாசம் என்னு நூலின்வழி யினிதுவிளங்கும். இங்ஙனமாக, புறப்புறச்சமயியாகிய உலகாயதன் முதலினோரும், புறச்சமயியாகிய மாயாவாதி முத

வினோருஞ் சைவசித்தாந்தத்தை யெதிர்ப்பது பேராச்சரியத்தை யேயன்றோ வுண்டுபண்ணுகின்றது? சரபத்துக்கு முன்னர் சிங்கமே தலைநீட்டாதென்றால் மூடு, கொசுகு முதலியன தலையெடுத்து வெளிப்படுவது எவ்வளவுபேதமை? தீபத்தை யணைக்கவெழுந்து அதில் விழுந்து சாகும் விட்டிற்பூச்சிகள் கதியே ஸம்பவிக்கையால் ஐயோபாவம்! என்று அவர்கள் விஷயத்தில் அநுதாபமே யுண்டாகின்றது. ஆனாலுஞ் சிறிய பாம்பாயினும் பெரியதடிகொண்டடிக்கவேண்டுமென்னும் பழமொழிப்படியே ஷை மதஸ்தர்களி லிப்போது கொஞ்சந் தலைவிரித்தாடுங் கலிநண்பர்களாகிய உலகாயதன், மாயாவாதி முதலினோரைப் போதுமானவரையில் விசாரித்துக்கொண்டோம். இவருள்ளும் ஏகாத்மவாதியாகிய மாயாவாதியை அதிகமாக விசாரித்துக்கொண்டோம். உலகாயதன் இளையவனும், மாயாவாதி மூத்தவனுமாகையால். இம்மாயாவாதியினது மதங் கிளைத்து வேர்விட்டதென்ன வெளிப்பட்ட உத்தமவாதம், சர்வமதசித்தாந்த விளக்கவினாவிடை, திருக்குதிரிசியவிவேகம் என்னும் ஆபாசத்திரட்டுகளை முறையே உத்தமவாத நூலவாதூலம், சித்தாந்த பூஷணம், திருக்குதிரிசிய விவேக கண்டநம் என்னுங் கோடரிகளால் வெட்டி யெறிந்துவிட்டோம்.

இன்னு மிம்மாயாவாதம் பலவிதமான பரியாசத்துக் குள்ளாகி யலக்கணுண்டாகியும்! அழியும்!! எங்ஙனமெனின்? அம்பட்டனொருவன் எலுமிச்சங்காயளவு பொன்னை யெப்படியோ சம்பாதித்து அதைத் தன்னுடைய அடப்பத்தில் வைத்திருந்தான். ஓர் நாள் அவன் அரசனுக்கு க்ஷவரஞ் செய்துகொண்டிருக்கையில் அரசன் அவனைப்பார்த்து ஊர்க்ஷேமம் எப்படி யிருக்கிறதென்று வினவினன். அதற்கு எவ்வளவு ஏழையாயிருந்தாலும் எலுமிச்சங்காயளவு பொன்னுக்குத் தரித்திரமா? என்று அம்பட்டன் பதில் கூறினன். அதைக்கேட்ட வரசன் புன்சிரிப்படைந்து மறுநாள் அவன் க்ஷவரஞ்செய்ய வருகையில் அவனுக்கோர் வேலையிட்டு வெளியே போகச்செய்து அவனடப்பத்தைச் சோதிக்கையில் அதில் எலுமிச்சங்காயளவு பொன்னிருக்கக்கண்டு அதையெடுத்துக்கொண்டனன். பின்புவந்த அம்பட்டன் விடை பெற்றுக்கொண்டு அடப்பத்தையு மெடுத்துக்கொண்டுபோய் மறுநாள் க்ஷவரத்துக்கு வந்தனன். அப்போதும் க்ஷேமவிசாரஞ்செய்தனன். அதற்குஉலகமுழுதுங் கஞ்சிக்கு அலைகிறதென்றனன். அதைக்கேட்ட அரசர்களு

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIBRARY

டைய செல்வத்தின் பெருமை யினைத்தென்று அறிந்து வியந்தனன். இதுநிற்க, வேறொரு விசித்திரமு முண்டு. பூனையானது ஏதாவதொன்றைத் திருடியுண்கையில் அதற்குக் கண்ணைமூடிக்கொள்வது சுபாவம். அங்ஙன மூடிக்கொள்ளுகையில் தன் கண்ணுக்கு ஒருவரும் புலப்படாமையால் இவ்விடத்தி லாருமில்லையென்று பயமற்றுத் திருடியுண்ணும். அங்குள்ளவர்கள் பார்த்து உதையாமற்போகார்களாகையால், அப்போது திடீரென்று விழித்து இதுதானே வுலகம் என்று மருண்டு ஓடும். இவ்விரண்டு விருத்தாந்தங்களாலும் அறியாமை மேலிட்ட ஜங்மங்களுடைய தன்மையே வெளிப்பட்டது. அம்பட்டனுக்குத் தன்னனுபவமே யுலகமெங்குமிருப்பதாகவுண்டாகிய வுணர்ச்சியும், பூனையானது தனக்கு யாருந் தோன்றாமையால் யாருமே கிடையாதென்றுண்டாகிய வுணர்ச்சியும் நம்மாயாவாதப் பெருஞ்செல்வர்களுக்கே யன்றோ பொருந்து முபமானங்களாயின? மாயாவாதியான உலகம் தானினைத்தபோதே யுண்டென்றும், நினையாத போது இல்லையென்றுங் கூறுகின்றமையாலும், சுழுத்தியில்பிரபஞ்சம் உண்டானாற் காட்டென்று கேட்கின்றமையாலும் அவன்கூறு ஞானத்தை அம்பட்ட ஞானமென்றும், மார்ஜால ஞானமென்றும் விவேகிகள் கூறுவர். தன்னிடம் பொன்னிருந்த போது உலகமெங்கும் பொன்னிருந்ததெனவும், தான் கண்ணைமூடிக்கொண்ட மாத்திரத்தானே யாருமில்லையென்றும் அம்பட்டனும், பூனையுங் கொண்டபடியே யன்றோ தானினைத்தபோதே யுலகமுண் டென்றும், தான் கண்ணைமூடித்தூங்குவது கொண்டே யுலகங் கிடையாதென்றும் அம்மாயாவாதி மயங்கிக்கூறுகின்றான்? இத்தகைய மாயாவாதியின் சிறப்பை யின்னுங் கொஞ்சங் கூறுவாம். ஓரிடையன் மாடுமேய்த்துக்கொண்டிருந்து ஓர் ஏரிக்கரையின்கீழ் நல்ல நித்திரை வந்து தூங்கி விட்டனன். அப்போது பெருமழை யுண்டாகி வெள்ளம் பெருகி யோடிற்று. அந்த வெள்ளத்தில் அவ்விடையன் றலைமயிரவிழ்ந்து அலைந்து கொண்டிருந்தது. இடியும், மின்னலும், காற்றும் அதிகரித்து வருஷிக்கு மந்த மழையை அவனது பெருந்தூககஞ் சட்டை செய்யவில்லை. இந்த நிலையில் அவன்றூங்குகையில் அந்தவழியேபோன அம்பட்ட னொருவன் அவ்விடையனது தன்மையைக்கண்டு அருகணைந்து அவனைப் புரட்டிப்பார்த்தனன். செத்த பிணமல்ல வென்றும், தூக்கத்தின் பெருமை அது வென்றும் அம்பட்டன் றெளிந்து, அவ்விடையன் றலையிலும், முகத்திலும் வளர்ந்

து காடுபற்றி யிருந்த ரோமராசிகளைக் களைந்து அவனைப் புரட்டிப் புரட்டிச்சர்வாங்கமும் க்ஷவரஞ்செய்துவிட்டுப் போயினன். அன்று கழித்துமறுநாள் விழித்துக்கொண்ட அவ்விடையன் விழித்தவுடன் தன்னுடைய முகத்திற் கையையிட்டுத் தாடியை யுருவப்போனான். தாடியில்லை. மீசையைப்பார்த்தான். அதுவு மில்லை. குடுமியைப் பார்த்தான். அதுவுமில்லை. இப்படி யெங்குங்காணாமையால் அவன் தன்னிற் சந்தேகங்கொண்டு அழத்தொடங்கினான். (நான்றான் நானல்லவோ? இது—நல்லூரிலே யேரிக்கரையல்லவோ? கோனன்றான் கோனனல்லவோ?என்னைக்—கொண்டழித்து வேறு யாரைக்கொண்டணைந்தாரோ? நான்றான் நானல்லவோ?) என்று புலம்பிய விசேடத்தைக் கொஞ்சம் விரித்துரைப்பாம். அவ்விடையன் தாடி குடுமி முதலிய வடையாளங்களில்லாமற்போகவே தன்னிடத்திற் றனக்குச் சந்தேகமுண்டாயிற்று. நானாயிருந்தால் எனக்குக் குடுமி, தாடி முதலியன விருக்கவேண்டுமே! அவையில்லாமையால நான் - நானல்லபோலிருக்கிறது. நான் படுத்திருந்தவிடம் நல்லூர் ஏரிக்கரையாச்சுதே! அது தண்ணீரில்லாத ஏரியன்றோ? இதோ விருக்கிற ஏரி தண்ணீர் கொண்டிருக்கிறதாகையால் அந்த ஏரிதானோ இது வேறு ஏரிதானோ? தாடி முதலியவற்றோடு கூடிய எனபேர் கோனனாச்சுதே! அவையில்லாமல் இப்போது காணப்படுகின்றவன் கோனன்றானோ அல்லவோ? தெரியவில்லை. தாடி முதலியவற்றோடு தண்ணீரில்லாத ஏரிக்கரையின்கீழ்ப் படுத்துக்கொண்டிருந்த கோனன் என்னும் பெயரையுடைய என்னைக்கொண்டழித்து அவ்வடையாளங்களில்லாத வேறு யாரையோ தண்ணீர் நிரம்பிய விந்த ஏரியின்கீழ் யாரோ கொண்டுவந்து போட்டுவிட்டார்கள் என்று தேம்பித்தேம்பி யழுதுகொண்டிருந்தான் என்னும் விசேடம் நம்மாயாவாத ஞானிகளுக்கே யன்றோ பொருந்தும்? பிரமம் தன்னை மறந்து விட்டதனாலன்றோ தான் பிரமந்தானோ அல்லவோ என்று சந்தேகமுண்டாகிச் சீவத்தன்மை யெய்தி முன்னிருந்த வடையாளமாகிய பிரமநிலை பெயர்ந்து அழுதுகொண்டிருக்கின்றது? இப்படியும் பிரமத்துக்கு அவஸ்திகளுண்டாகுமா? இவைகளேயன்றி ஆற்றிலிறங்கிக் கரையேறித் தங்களை யெண்ணிப் பார்த்துக்கொண்ட பதின்மர்களில் அங்ஙனம் எண்ணிவந்த வொவ்வொருவருந் தனித்தனித் தங்களைவிட்டு எண்ணின வறியாமையால் தம்மி லொருவனை ஆறுவிழுங்கிவிட்டதென்று மருண்டு ஒருவரையொருவர் கட்டிக்கொண்டழுத

கதையுமேயன்றோ நமது பிரமத்தின் குஞ்சுகளாகிய மாயாவாதிகள் பெருமையை யினிது விளக்கும்? மூடர் பதின்மருடைய கதையாகிய விந்தவுபமானத்தைப் பிரமத்தினிடத்தேற்றி அப்பெருந்தகை யாளரே கூறிக்கொள்ளுவ துண்டாகையால் யாம் விசேடித்துரைப்பது அவசியமன்று. இவரை மார்ஜாலஞானிகளென்பது வேறுவிதத்தாலுஞ் சாதிக்கப்படும். "கேசித்த்வைத மாச்ரித்ய பிடாலப்ரதி மாநராஃ, ருத்ரேண ஸாம்ய மந்யேஷாம் வதந்தி ப்ரவிமோஹிதாஃ" என்னும் சூதஸம்ஹிதா வசனத்தால் சிலபேர் அத்வைதமென்னும் அபேதவாதத்தை யநுசரித்து மார்ஜாலச்சிரேஷ்டர்களாகி ஸ்ரீருத்ரமூர்த்தியோடு ஏனையதேவர்களையுஞ் சமானமாகப் பிரமித்துப் பிதற்றுகின்றார்கள் என்று வெளிப்பட்டது. இதனால் அத்வைதமென்னும் ஏகாத்மவாதத்தை யநுசரிப்பது கொண்டே ஸ்ரீ சிவபெருமானோடு ஹீனதெய்வங்களையெல்லாம் சமானங்கூறத்தக்க வவிஞ்ஞானமுண்டாகிறதெனவும், அந்த ஞானசித்தியநந்தரமே அவர்கள் பிரமித்துப் பிதற்றுகின்றார்களெனவும் ஏற்படுகின்றது. இவ்வத்துவிதம் இன்மைப்பொருளைக் கொண்டதென்றறிக. சைவபரமாக வதை விவகரிக்குங்கால் அன்மைப்பொருள் விரவிநிற்கும். அசைவம்பழுத்து விளங்கு மவ்வத்துவிதத்தை யநுசரிப்போர் மார்ஜாலசிரேஷ்டரென்றதென்னையெனின், பூனையானது சுவர்முதலிய விடங்களிலிருந்து தாவும்போது இந்தப்புறந்தாவுமோ, அந்தப்புறந்தாவுமோ என்று சந்தேகத்தை யுண்டுபண்ணுவதுபோலவே அவர் பரதத்வநிர்ணயம் பண்ணுகையில் அது சிவனோ, விஷ்ணுவோ என்று மயக்கத்திலே தானே முடியும். பூனைக்கு எந்தப்புறங் குதித்தாலுஞ் சகசமாவதுபோல் இவர்களுக்கும் எந்தத் தெய்வத்தைச் சொன்னாலும் சகசமாய் முடிந்திடுவதால். இவர்கள் சைவருமன்று, வைஷ்ணவருமன்று. உபயபிரஷ்டர்களென்பதே தீர்மானம். சிவலிங்கத்தைச் சகிக்காமல் வியவஸ்தைப்படுத்திப் போலியத்துவிதமாகிய ஏகாத்மவாதத்தைக் கண்டிக்கும் சூதஸம்ஹிதையை மாயாவாதநூலென்று மருண்டு கையாண்டுவரும் அவ்வவிவேகிகள் வினையிருந்தவாறு ஆச்சரியம்! ஆச்சரியம்!! அத்துவிதம் என்னுஞ்சொல்லானது அவருக்கெப்படி வுரிமையெனக்கொண்டு குழப்பிவருகின்றார்களோ அப்படியே சூதஸம்ஹிதையையுந் தம்மதாக அவர் குழப்பிப் பெருங் கூச்சலிட்டு வருகின்றனர். இன்னோர் விஷயத்தில் யாமெடுத்துக் கொண்ட பிரயாஸத்துக் களவின்றாகையாலிம்மட்டிலுபரதியடைச்

தாம். இவரினுமூத்தவனாகிய பாஞ்சராத்திரிக்குப் போதும் போது மென்று சொல்லும்படி சிவபாரம்யபிரதரிசினி, சிவதத்வசிந்தாமணி, சிவாதிக்யரத்நாவளி, சைவசூளாமணி என்னு நூல்களின்வழி அதிகமான ஸந்மானங்கள்செய்து திருப்தியடைந் திருக்கின்றோமாகையாலிங்கேயொன்றும் அவன் விஷயத்தில் யோசிக்க விடமுண்டாகவில்லை. ஏனைய சமயிகள் பிரபாவங்களைச் சிவஞான சித்தியார் பரபட்சமுதலியவற்றாற் செவ்விதி னறியலாமென்க இதுகாறும் பிரஸ்தாபிததுக் கடிந்த ஆபாசஞானங்களேயன்றி வேறு ஆபாசஞானமு முண்டாகையால், அதையுங்கொஞ்சம் விசாரித்துப் பரிஷ்காரப் படுத்துவாம்.

திரிபதார்த்த பிரதிபாதக போதமாகிய சைவசித்தாந்த வுணர்ச்சி கைவர முயலும் அதிகாரிகளைப்பற்றியே யீண்டு விசாரிப்பதாம். இந்தச் சைவசித்தாந்தம் சரியை - கிரியை - யோக - ஞானங்களென்னு நாலுவிதமான சிவபணிகளைக் கொண்ட தொன்றாம். இந்த நால்வகை யநுட்டானமுடையவருஞ் சைவரேயாவர். சிவனடியாரென்னப்படு மிவர்கள் ஒருவரை யொருவர் சிவமாகவேகொண்டு வழிபடுவது இவருக்கின்றியமையாத முக்கிய கடமையாம். நால்வகை யநுட்டாதாக்களும் வேடத்திலுஞ் செய்கையிலு மொத்திருப்பாராகையால் ஒவ்வொருவருந் தாரதம்யம் விசாரியாது சைவ வேடம் பூண்ட யாவரையுஞ் சிவ பாவனையாகவே வழிபடல்வேண்டும். சிவ ஸாந்நித்யமுண்டாகுமிடங்கள் தாவரமாகிய சிவலிங்கப்பெருமானிடத்தும், ஜங்கமமாகிய சிவனடியாரிடத்துமே யென்று சைவ நூல்கள் கூறுகையால் இரண்டிடங்களுஞ் சிவபாவனையே யதிகரித்தல் வேண்டும். சிவனடியார்க ளிடத்தில் யோக்யதை யில்லாதவழி அவரை வழிபடுதல் கூடாமையால் அதையேயன்றோ யாம்விசாரிப்பதெனின், சிவலிங்கப்பெருமானிடத்தும் யோக்யதை யுண்டோ வில்லையோ வென்று உடைத்தன்றோ பின்னர் பார்க்கவேண்டி வரும்? உடைபட்டுக் கல்லாக வெளிப்படுஞ் சிவபிரானிடத்தில் அன்புசெய்ய யோக்யமுண்டாகாமையால் சிவாலய சேவை வேதாகமங்களில் விதித்தது அவலமாக வன்றோ முடியும்? இப்படிப்பட்ட வீண் விசாரஞ் செய்யத் தலைப்படு மொருவனைக்காட்டிலும் அயோக்யர்கள் வேறுகிடைக்க மாட்டார்க ளாகையால் தன்னுடைய தோஷத்தையே முதலிலொழித்துக் கொள்ளவேண்டியது, தன்னிடமுள்ள குற்றமொழிந்தால் தான் நிர்த்தோஷியாய் விடுகிறானாகையால் வேற்றிட

த்து மலினங்கள் தனதுள்ளத்திற் பதியவிடமிராது. துரியோதன ன் தன்னைப்போலவே யுலகமுழுதும் பாவிகளே அதிகரித்திருக்கி ன்றார்களெனவும், தருமநந்தனர் தம்மைப்போலவே யுலகமுழுதும் நல்லவர்களே அதிகரித்திருக்கின்றார்களெனவும் பிரஸ்தாபித்த வு ண்மை ஸ்ரீமகாபாரதத்திற் கூறப்பட்டிருக்கும் விசேடத்தானுமறிக. அன்றியும், ஏகலவனென்னும் வேடன் துரோணாசாரியைப்போலொ ரு மரப்பாவை செய்துவைத்துக்கொண்டு அதனது அயோக்யதை யை விசாரியாது அதையே துரோணராகப்பாவித்து வழிபட்டுவ ந்த விசேடத்தால் ஆசாரியராகிய துரோணரிடங் கற்கவேண்டிய வ ரிய வித்தைகளை யெல்லாங் கற்று அதிக ஸம்பன்னனானதன்றியும், மூலபுருஷராகிய துரோணாசாரியரை யோர்காலத்தில் காணநேரிட்டு அவர் விரும்பியபடியே குரு தட்சணையாகத் தனது கட்டை விர லைத் துண்டித்து அவருக்குத் தத்தம் பண்ணினனென்பது முதலி ய இதிகாசவிருத்தாந்தங்க ளநந்த முண்டாகையால் சிவனடியா ரிலக்கணத்தைப் பரிட்சிக்கவேண்டு மென்பது கேவலம் அஸங்கத மாய்விட்டது. சேரமான் பெருமாணுபனார் உழமண் சுமந்துவந்த வண்ணானைச் சிவனடியாராகக்கண்டு வழிபட்டமையாலும், கலிக்க ம்பநாயனார் - ஏனாதிநாயனார் - மெய்ப்பொருணுபனார் முதலிய பரம மஞானிகளெல்லாங் கேவலம் வேடங்களையே மெய்ப்பொருளென வழிபட்டமையாலும், இயற்பகைநாயனார்-மானக்கஞ்சாற நாயனார் முதலினோர் மனைவியைக் கேட்டவர்க்கும், மகளாரது கூந்தலைக்கே ட்டவர்க்கும் வேடமாத்திரத்தானே மகிழ்ந்து அங்ஙனங்கேட்ட வ யோக்யதையை நாடாமல் கேட்டபடியே கொடுத்தருளினமையாலு ம் சிவனடியாரைப் பரிட்சித்துப் பார்த்தே வழிபட வேண்டுமென் பது செல்லாது. ஒருவரை யொருவர் பரிட்சிக்க முயலுங்கால் பரி ட்சிக்கத் தொடங்குபவன் தன்னைப் பரமயோக்யனாகவும், தன்னிட த்திலெல்லாச் சைவநலங்களு நிரம்பி யிருப்பதாகவு மதித்தே வெ ளிப்படுவதால், தன்னிடத்திற் றன்னை யறியாமலே குடிகொண்டிரு க்கும் அமங்கலங்களை யெல்லாம் யோசிக்கமாட்டான். அப்படியே பரிட்சிக்கப் படுபவனுங் கொண்டிருப்பா னாகையால் அவனுக்கு இ வன் குற்ற முடையவனும், இவனுக்கு அவன் குற்றமுடையவனுமா க முடிந்து ஒருவரை யொருவர் துவேஷிப்பதே பயனாக முடியுமன் றிக் குணமுண்டாவது கஷ்டம்! கஷ்டம்!! சிவனடியா ரிலக்கண ம் விசாரிக்கத்தொடங்கிய பலஸித்தி யுடனே கைகூடி விடுவதால்,

நிர்விசாரமுடைய சாதுக்களே யன்றோ வேடமாத்திரத்திற் குழைந்து அன்பு வழியிலொழுகுஞ் சிவனடியாராகவங்கீகரிக்கத் தக்கவராவர்? அன்பு என்னும் அரியபேறு கிடைக்கப் பெறுமையே பலதிமைகளி லொருவன் செறிந்தழியவிடஞ் செய்கின்றது. சைவவேடம்பூண்டு சிவநேசமிகுந்தவனுக வெளிப்பட்டு யாவராலு நன்கு மதிக்கப்பட்டவனுகிய வோர் சைவன் தனது பெண்டு பிள்ளைகள், தாய்தந்தைகள், பிராத்ரு பந்துவர்க்கங்கள் முதலிய தேகஸம்பந்திகளிடத்தில் எந்தச் சைவ நலங்களைப் பரிட்சித்தோ அவர்களை யுயிர்க்குயிராயிருந்து ஓம்புதல் செய்கிறுன்? எவ்வளவு ரோதனங்க ளவரா லுண்டான விடத்தும் அவற்றை யோர் பொருளாகப் பாராட்டாமல் அவரிடந் தான் வைத்திருக்கும் அன்பு அல்லது பாசம் காரணமாகவே யன்றோ அவர்களைத் தன்னினு மினியவராகக்கொண்டு உபசரித்தும், பாதுகாத்தும் வருகிறுன்? உண்மையான சிவனடியார் வந்து தன்னை யொன்று கேட்பினுந் தனது மைந்தர் மனைவிகளுக்குக் கொடுத்துச் சேடித்தாலன்றோ அன்னோர்க்கு ஏதாவதியன்றதை யுதவுகின்றவனுகிறுன்? பாசங் காரணமாகவேயன்றோ மைந்தர் முதலினுரைச் சிவனடியாரினு மேலாகப்பார்க்க நேரிடுகின்றது? இந்த நியாயத்தால் சிவவேடத்தாரைப் பரிட்சிக்க முயல்வதெல்லாம் அன்பில்லாத குறைவென்றே ஏற்படுகின்றது. துட்டுவிரயமில்லாமல் விபூதியும், உருத்திராக்கவடமும், பில்வ முதலிய பத்திரங்களுங் கிடைப்பதுகொண்டு சைவவேடம்பூண்டு சிவபூஜையின் முதிர்ந்து சைவப் பழமெனத்திரிவது கொண்டே தன்னைச்சிவனடியாராக வொருவன் மதிப்பது கூடாது! கூடாது!! தன்னை மதிப்பது மாத்திரங் கூடாதன்றி யேனையவிடங்களை மதிப்பது யுக்தந்தான். இபபடியே யொவ்வொருவருந் தம்மை மதியாமலும், ஏனையவிடங்களை மதித்தும் வழிபட்டு வருவதுண்டெனின், யாவரும் நிரகங்காரிகளாகிக் குணப்படுவார்களன்றோ? சாத்தன் தன்னையிழித்துக்கொண்டு கொற்றனை மேலாகமதித்து வழிபட்டு அன்பு பாராட்டுகிறபடியே கொற்றனுந் தன்னை யிழித்துக்கொண்டு சாத்தனை மேலாக மதித்து வழிபட்டு அன்பு பாராட்டிக் குணப்படுவதிலென்ன தடையுளது? முடிவாக வன்பே சிவவேடத்தை வழிபடுதலுக்குக் காரணமென் றேற்படுகையால் சிவவேடத்தாரைத் தாரதம்யமாகக் காண்பவர் அன்பில்லாத பாவிக ளென்றே நிச்சயிக்கவேண்டியது. அன்பில்லாமல் எவ்வளவு நூல்களைக் கற்றாலும், யுத்தனை தரம் சிவ

சிவ வென்று கதறினும், நாளெல்லாமிருந்து சிவபூஜை செய்தாலும் என்னபலனுண்டு? இத்தனையும் பெருமைக்கும், பேருக்குஞ் செய்வதாக முடியுமன்றி வேறில்லை. சிவவேடம் பூண்ட வொருவரை அவரைப்போற் சிவவேடம்பூண்ட மற்றொருவர் வந்தனம் புரிந்த காலத்தில் அதை யேற்றுக்கொண்டவர் பிரதிவந்தனஞ் செய்வது அவசியம். ஒருவர் அன்பு பாராட்டியபடியே மற்றொருவரும் அன்புபாராட்டவேண்டிய வுரிமையால். ஒருவேளை பிரதிவந்தனஞ் செய்யாதொழியின், அது அங்ஙனஞ்செய்யாதவரது அன்பின்குறைவேயாமன்றி முதலிற் செய்தவருக்கு உண்டாகுந்தாழ்வு யாது? இவர் அவரை வழிபட்டது சிவவேடம் பாராட்டியே யாகையால் அங்ஙனம் பாராட்டி வழிபட்ட நலங்கைகூடிச் சிவப்பிரஸாத முண்டாவதிலு மென்னதடை? இவ்வுண்மை தேராது தான்செய்த வந்தனத்துக்குப் பிரதிவந்தனங் கிடையாதபோது பெருந்துக்கமுற்று முன்வந்தனம் பண்ணியதாமே பின்னர் பலவாறு நிந்தித்துழல்வாரெனின், அவரை நாம் என்னென்றழைக்கலாம்? அன்பு காரணமாகாமல் பெருமை காரணமாக வேடம்போட்டுக்கொண்டதனாலன்றோ வீண்துக்கத்துக் கிடஞ்செய்தது? கேவலம் வேடமாத்திரத்தானும், அத்துடன் செயல்குணங்களானும், அவற்றோடு நிச்சயம் அநுபவம் என்னும் ஞானவிசேடங்களானுஞ் சிவனடியார் தன்மை வெளிப்படும். இவை யொன்றின்மேலொன்றேறிய படிகளாக வேற்பட்டமையால் ஒன்றின் பின்னொன்று பரிபாகவிசேடத்தா லொருவனுக்குச் சித்திக்குமென்பது முண்மை.

இவ்வரிய நியாயங்களால் சிவவேடத்தைக் கண்டமாத்திரத்தில் ஒருயோசனையுஞ் செய்யாமல் ஒருவரையொருவர் சிவமாகக்கொண்டுவழிபடவேண்டுமென்பது சாதிக்கப்பட்டது. (சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடுவானாளத் தருவரேனு, மங்குவாரவர் செல்வமதிப்பேமல்லே மாதேவர்க் கேகாந்தரல்லராகில், அங்கமெலாங் குறைந்தழுகித் தொழுநோயரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே) என்னும் பரமாசாரியர் திருவாக்கின் விசேடத்தைக் கண்டபின்னரும் அடியார் வேடம்பூண்டொழுகும் பெரியோரிடத்து எங்ஙனே தாரதம்யங் காண்பது கூடும்? இழிந்த குலத்தவரிடத்திலுந் தாரதம்யங் காணாது வழிபடவேண்டுமென்று வெளிப்பட்ட பிரமாணத்தை யநுசந்தித்தபின்னர் நானே யுயர்ந்தஜாதியெனவும், என்

னிற் றாழ்ந்தவரே யேனையஜாதியினரெனவுங்கூறித் தன்னினத்தவ
ரைமாத்திரமே தழுவி யுபசரித்தும், ஏனையவருணத்தில் வந்தவர் எ
வ்வளவு சுத்தர்களாயிருப்பினும் அவர்களைப்பொருளாகமதியாமல்
ஜாதியையே முக்கியமாகப்பாராட்டியும் அவலமார்க்கத்திலுழன்று
தன்னையும், தன்ஜாதியில்வேடம்போட்டுத்திரிகின்றவரையுமே யுயர்
ந்த வடியார்களெனவும், சைவரெனவுங் கூறிக்கொண்டு திரிகின்ற
வர்கள் சைவர் ஆகார்! ஆகார்!! திருவிளையாடற் புராணத்தில் அந்
தணர்வீதி, அரசர்வீதி, வணிகர்வீதி, வேளாளர்வீதி என்னும் பி
ரிவால் நால்வருணத்தவர் சிறப்புங்கூறப்பட்ட பின்னர் சைவர் வீ
தி என்று வேறுபிரித்து யாவர் சிறப்புத்தோன்றவோ கூறப்பட்டுள்
ளது? அவர்க்குச் சாதியென்னை? சிவதீக்ஷையடைந்து சம்ஸ்காரி
களாய் விளங்கும் எல்லாச்சாதியினரு மென்பதே துணிவாகையா
ல் சிவனடியார்களிடத்தில் சாதிநலம் பாராட்டுவது கூடாதெனவே
யன்றோ ஏற்படுகின்றது? ஏனையஜாதிகளைநோக்க வேளாளஜாதியி
ற்றானே சைவநலமதிகரித்திருப்பதனால் அவரையே சைவர் என்று
மிகுதிபற்றி யுலகம் வழங்கிவருகின்றது. வேளாளராவார் சுத்தகுல
த்தவர் நால்வரு ளொருவராகையால் அவர்பால் அன்னியஜாதி நிந்
தை விசேடிப்பதின்று. அன்னோர்பேரை யிரவலாகக்கொண்டு உயர
வேண்டி முயல்கின்றவர்களே நிந்தித்துழலா நிற்பர். இவ்வுண்மை
களாலுஞ் சாதி யெம்மட்டில் நிலைபெறுமென்பதை யோசிக்கவேண்
டியது. இன்னும் விசாரிக்கிற் சாதியென்பது தேகத்தை யபிமானி
த்ததொன்று. சமயமென்பது ஆன்மலாபத்தைப் பயப்பதொன்று.
நான் ஜாதியி லுயர்ந்தவன் என வொருவன் வெளிவரினு மவன் ற
ன்னிலுயர்ந்தஜாதி வேறுகிடையாது என்றுசொல்ல விடமில்லை. சுத்
தகுலஸ்தராகிய முதல் நால் வருணத்தவரு மொருவரிலொருவர் தா
ழ்ந்தவரென்பது யாவரு மொத்துக்கொண்ட விஷயமாகையால். எ
வ்வளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக் கொண்டபோதிலுஞ் சூ
த்திரன் வைசியனுக்குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிர
மிப்பதில்லை. எவ்வளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக்கொண்
டபோதிலும் வைசியன் க்ஷத்திரியனுக்குக் கீழாகவே தானடங்குவ
தல்லது அதிக்கிரமிப்பதில்லை. எவ்வளமேலாகத் தன்னைப் பிரஸ்தா
பித்துக்கொண்டபோதிலும் க்ஷத்திரியன் பிராமணனுக்குக் கீழாக
வே தானடங்குவதல்லது அதிக்கிரமிப்பதில்லை. எவ்வளவுமேலாகத்
தன்னைப் பிரஸ்தாபித்துக்கொண்டபோதிலும் பிராமணன் ஞானி

க்குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிரமிப்பதில்லை. மேல் வருணத்தவர் சிறப்பே நிலையாதபோது இவரிற்றாழ்ந்த வனுலோமர், பிரதிலோமர் முதலியவர்களுடைய சிறப்பு எங்கே நிலைக்கும்? சமயமோவெனின், ஒவ்வொன்று விசேடமே பெறும். சைவஸித்தாந் திமுத லுல்காயதனீறாக வொருவருந் தங்கள் சமயத்தை மற்றொரு சமயத்துக்குத் தாழ்ந்ததாக வொப்புக்கொள்ளார்களாகையால். ஒவ்வொருவருந் தங்கள்தங்கள் சமயமே யுயர்ந்தசமயம் எனக்கொண்டிருத்தலால் சமயத்தை யபிமானித்தல் ஒருவாறு பொருந்தும். தனக்குமேலிட்டசமயம் கிடையாது என்று துணிவுகோடலால். இங்ஙனமன்றி, தனக்குமேலொருஜாதியுண்டென்று கொண்டபின்னர் ஒருவன் ஜாதி யகங்காரங்கொள்ளலா லென்னபயன்? உயர்ந்தஜாதியுடைய வொருவனைநோக்கத் தானேதன்னைத் தாழ்ந்தஜாதியுடையவனாக வங்கீகரித்தடங்குவதால். தேகத்தை யிடமாகக்கொண்ட ஜாதிநல மத்தேகத்தோடுதானே யழியும். ஆன்மாவை யிடமாகக்கொண்ட சமயநலம் மேலுக்குமே லபிவிர்த்தியே பெறும். சமயம் என்பது, காலம்-பருவம் என்று பொருள் தரலால் அதை யபிமானித்தல் உசிதமென்று அப்பதத்தினடியாகவே சித்திக்கின்றது. புறப்புறச்சமயத்தினின்றும் புறச்சமயத்திலும், புறச்சமயத்தினின்றும் அகப்புறச்சமயத்திலும், அகப்புறச்சமயத்தினின்றும் அகச்சமயத்திலும், அதினின்றும் அதீதசமயத்திலும் புகுந்து ஒன்றுக்கொன்று சாதகமாகமுடிந்த சமயங்களைப் பருவபேதத்தா லொருவனபிமானித்தல் பெரும்பயனாகவே முடிந்தது. கறுப்புநாயை வெள்ளைநாயாக்க முடியாதாற்போல விழிந்தஜாதியிற்பிறந்தவ னுயர்ந்தஜாதியாக விடமில்லை. கேவலங்கடையனாகிய வுலகாயதன்புத்தனாகவும். சமணனாகவும், வைணவனாகவும், சைவனாகவுந்திரித லொரு பிறப்பிலேதானே கூடுமாகையா லுபகாரவடிவமாகிய சமயங்களை யபிமானித்தல் ஸாமஞ்சஸமே பெறும். உலகாயதனுக்கே யோகமுண்டாகிறபோது, ஏனையவுயர்ந்த சமயிகள் பிரயோசனமடைவாரென்பது சொல்லவும் வேண்டுமோ? (அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாய்) என்ற வசனத்தாலுஞ் சாதியைநோக்கச் சமயத்தினேற்றம் வெளிப்பட்டது,(விரிவிலாவறிவினார்கள் வேறொருசமயஞ்செய்தே-யெரிவினாற்சொன்னாரேனுமெம்பிராற் கேற்றதாகும்) என்ற பிரமாணத்தாலும் அது விளங்கும். எல்லாச்சமயிகளும் ஜாதியினுஞ் சமயமே யதிகமென்று கொண்டிருப்பதாலும், அங்ஙனஞ்செய்தலால் முடிவில்

சைவஸித்தியுண்டாவதாலும் ஜாதியைவிட்டுச் சமயத்தையபிமானித்தலே சால்புடைத்து. சைவராயுள்ள பலஜாதிமாக்கள் கூடி வாழ்கையில், அவர் பிரிந்து ஒருவர் ஜாதியை மற்றொருவரிகழ்ந்துபேசத் தொடங்குவரெனி னெங்ஙனே சமயம் விர்த்தியடையும்? சமய விர்த்திக்கு ஹானியுண்டு பண்ணுவதாகிய ஜாதியகங்காரம் அவசியம் உத்தமனுக்கு ஒழியத்தக்கதே! சமயக் கேட்டுக்குக் காரணமாய்முடிந்த ஜாதியேற்றம்பகர்ந்திடுவாரைச் சமயாபிமானிகளென்று கூறுவதெங்ஙன்? இவற்றைச் சீர்தூக்கின், ஜாதியை யபிமானித்தொருவன் றருக்குறல் குணமோ, அல்லவோ வென்பது விளங்கும்! விளங்கும்!! இதுகாறும் யாம் கூறிவந்த நியாய விளக்கத்தால், ஜாதியாசாரங்களை விட்டுவிடவேண்டு மெனவாவது, எல்லாம் ஓரே ஜாதி யெனவாவது, ஜாதிபேதங் கிடையாதெனவாவது காலத்திரயத்தும் அமையாது. அந்தந்தஜாதியாரும், தங்கடங்க ளாசாரங்களினின்றுமாறாது ஒழுகவேண்டுமென்பது, தத்தஞ்சாதியுயர்வைத் தங்கண்மட்டிலே பாராட்டுவதன்றி யேனையஜாதிகளை யிழிவுகூறி மகிழ்தல் கூடாதென்பது எமது முக்கியகருத்து. ஜாதி குலம் பிறப்புகளோ டொப்பவே கல்வி, செல்வமுதலியவற்றால் அகங்கரித்தலுஞ் சமயவிர்த்திக்கு ஹானிதேடுவதாக முடிதலால் அத்தொடக்குகளினும் பற்றொழிந்த சுத்தராகவேண்டியது.

கல்வி, செல்வம், விவேகம் என்பவை தனித்தனி வேறுவேறு பொருள்களாம். இவைமூன்றும் பூர்வகன்மவிசேடங்களாலொருவனுக்குண்டாகுமன்றிவேறில்லை. அவரவர் வினைக்கீடாக விவற்றுளொன்றேனும், இரண்டேனும், இவைமூன்றுமேனுங் கைகூடும். இவைமூன்றுந் தீமைநன்மையென்னு மிரண்டிடங்களினு முதவியாகநிற்கும். தீமையினுதவியாகுங்கால் அந்தக்கல்வியுஞ் செல்வமும் புத்தியும் அவலமாகவே முடியும். நன்மையி னுதவியாகுங் காலவைமுழுதுஞ் சபலமாகவே முடியும். இதனை விம்மூன்று மொருவனுக்குக் கைகூடப் பெற்றகாலத்து மிவற்றின் மேலாயதொரு சிவப்பிரஸாதமன்றோ சித்திக்கவேண்டி யிருக்கின்றது? அச்சிவப்பிரஸாதமுடையார்க்கு இவைவேண்டுமென்பது முசிதமன்று. நாத்திகனுக்குக் கல்வி, செல்வம், புத்தி இம்மூன்று மிருந்தால் அவன் என்ன செய்யமாட்டான்? சிவநிந்தைவிற் பழுத்து உலகங்கெடச்செய்வானன்றோ? அப்படியே பூணமகமதியருஞ்செய்வானன்றோ? கல்வி வி

வேகங்க ளிருந்தும் அவை யன்னோர் மாட்டுத் தீமையே விளைத்த லால் கற்றவரென்று பிறரைப்புகழ்தலும், நான் கற்றவனென்று தற்புகழ்ச்சி செய்தலும் அவலமேயாம். (கற்க கசடறக் கற்பவைகற்றபின்-நிற்கவதற்குத்தக.) என்ற வுண்மை நிலையிற்பெயராது சிவநேசம் விடாது பற்றியொழுகுமேலோரையே கற்றவரென்றும், அறிஞரென்றுங்கொண்டு வழிபடுவர் மேலோர். (சாத்திரம்பல பேசுஞ் சழக்கர்காள் கோத்திரமுங்குலமுங்கொண் டென்செய்வீர், பாத்திரஞ்சிவமென்று பணிதிரேன், யாத்திரையி லருளுமாற்பேறரே.) எனவும், (வேதமோதிலென் சாத்திரங் கேட்கிலென், நீதிநூல்பல நித்தல்பயிற்றிலென்.) எனவும், (காலைசென்று கலந்துநீர் மூழ்கிலென், வேலைதோறும் விதிவழி நிற்பிலென்) எனவும் போந்த வருள்வாக்கியங்களால் ஜாதிநலம், விருதாகல்வி, வாசாஞானம், வெளியாசாரமுதலிய வாபாசங்கள் கடியப்பட்டிருத்தலுங் கண்டுணர்க. ஆதிசைவம், மஹாசைவம், அநுசைவம், அவாந்தரசைவம், பிரவரசைவம், அந்தியசைவம் என்னும் பிரிவுகடோன்றச் சைவநலத்துக் குரியாரைச் சாதிஸம்பந்தம் பாராட்டிச் சைவநூல்கள் கூறுகின்றனவன்றோ ? இவர் சம்ஸ்காரத்தா லுத்தமோத்தமத்தன்மை யடைந்தவரென்பது முண்மையன்றோ ? இவருள் ஆதிசைவர், மஹாசைவராதி மேல்வருணத்தவர் தங்களிற் கீழிட்ட வேளையசைவர்பால் அபகர்ஷத்வமே யன்றி ஸமத்வம் பாராட்டி வருவதின்று. அப்படியே அவாந்தர சைவராகிய வேளாளருந் தம்மிற் கீழிட்ட சைவர்பால் ஸமத்வம் பாராட்டா தொழிவர். இங்ஙனமாக, இவ்வவாந்தர சைவராகிய வேளாளர் தம்மின் மேலிட்ட வேளைய சைவரைநோக்கி அவர்ஜாதி நலம்பாராட்டுதல் கூடாதெனவும், ஸம்ஸ்காரிகளாய்விட்டபின்னர் தம்மிற் றூரதம்யங்கிடையாதெனவும் நிந்தித்துழல்வர். தம்மின்மேலிட்டவரைத் தங்களுக்கு ஸமமாக்கிக் கொண்டுதாழுயர வெண்ணுவது போலவே தம்மிற்..கீழிட்டவரையும் ஸம்ஸ்காரதிருஷ்டியால் தங்களுக்கு ஸமமாக்கிக்கொண்டு அவரோடொத்துவாழவெண்ணுமலவரையவமதித்தும், நிந்தித்தும் வருவது எவ்வளவு பெருந்தாழ்வு ? அந்தணர் முதலியோரும் வேளாளரும், அவரிற் கீழிட்ட பேர்களும் ஜாதிகிரந்தியொழியாமல் தாங்கள் அடைந்திருக்கும் ஸம்ஸ்காரங்களையுஞ் சாதியுயர்வுக்கே துணையெனக்கொண்டு ஒருவரோ டொருவரிகலிவருவதால், அன்னோர் தாங்களடைந்த ஸம்ஸ்காரத்தா லெய்தற்பாலதாகிய ஸமானத்தன்மை யடையார் ! அடையார் !! அந்தணர் முதலியவரோ டொன்றுகூட வேளாளராதியோர் எண்ணுமாபோலவேவேளாளரிற்

றுழ்ந்தபேரு மெண்ணி யேறப்பார்ப்பதால், எங்ஙனே யிவரைச் சு
த்தர்களென்று கூற விசையும்? அந்தணர் முதலியோரே தமது
ஜாதி கிரந்தியை விடவேண்டுமென்பதுண்மையாக வேளாளர் முத
லியோர் அங்ஙனஞ்செய்தலின்றி மேனு முயர்ந்திட வெண்ணுத
லெங்ஙனே வமையும்? அந்தணராயினும், ஏனைய வருணத்தவராயி
னும் எதுகாறுஞ் சாதிக்கிரந்தி யொழியாம லியங்கி வர்த்திப்பா
ரோ, அதுகாறு மன்னோர் ஸம்ஸ்காரத்தா லெய்தற்பாலதாகிய சம
யாலம்பெற்றவ ராகார்! ஆகார்!! இதுபாத்திரமேயன்றிச் சிவனடி
யாரிலக்கணம் உபதேசகாண்ட முதலியவற்றிற் கூறியபடியே யமை
யாத பொழுது அவரைச் சாதகரென்றன்மாத்திரமேயன்றிச் சாத்
தியரென்றல் கூடாது. சாத்தியர்க்கு மாத்திரமே ஜாதிகிரந்தி முத
லிய தோஷங்கள் விலகிச் சுத்தத்தன்மை யுண்டாவதால், அவரு
டைய தர்மத்தைச் சாதகராயுள்ளபே ராரோபணஞ்செய்துகொண்
டு தாங்கடாங்களு முயர்ந்துவிடப் பார்ப்பது அவலமென்க. இத
னல் சாதகராவார் தங்கடங்கள் சாதியாசாரங்களிற் பெயராது நல்
லொழுக்க மெய்தித் துவங்கிடந்து, ஒருவரோடொருவரிகறீர்ந்து வா
ழவேண்டுமென்பதே நல்லோர் துணிவு. சாத்யதிசைவருமாயின் அ
வர்க்கு ஒருவரு முபதேசிக்கவேண்டுவதின்று. அவரவரன்பே யவ
ரைத்தலைப்படுத்து மாகையால். இந்தவிசாரத்தால் ஜாதிநலங்களெ
ல்லாம் ஸாதகவடிவங்களெனவும், அன்பினதுநலங்களெல்லாம் ஸா
த்யவடிவங்களெனவும் பெரியோர் துணிந்துகூறுவர். விதிவத்[illegible]கவு
ம், வித்வத்தாகவுஞ் சிவனை வழிபட்ட சிவகோசரியாரி[illegible]த்தும்,
தி நக்கண்ணப்பதேவரிடத்துமே யிவ்வுண்மை விளங்கும்! விளங்
கு !! ஸ்ரீமத் - அப்பர்சுவாமிகளிடத்தில் அப்பூதி யடிகளார்க்கும்,
திருநீலகண்ட யாழ்ப்பாணரிடத்தில் திருநீலநக்க வடிகளுக்கு முண்
டாயிருந்த வன்புகளுமே யன்றோ வீண்டு நிதரிசனமாதல் பெறும்?
இவ்வுண்மைகளைச் சீர்தூக்கித் தாவரசங்கமங்களாகிய விரண்டிடத்
துஞ் சிவபாவனை மேலிட்டு வழிபடுவதே சிவஸாம்பிராஜ்ய விர்த்தி
யைப் பயக்கும்! பயக்கும்!! "தாவரசங்கமங்க ளென்றிரண்டுருவினின்
று, மாபரன்பூசைகொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்" என்னும் பிரமா

ணத்தானு மதுவிளங்கும். சங்கமங்கணிற்க, தாவரமாகிய சிவலிங் கோபாஸனை விக்கிரகாராதனமாய் முடிகின்றதெனவும், அது செய்தல் கூடாதெனவும் புலம்பித்திரியு மாபாசங்களுஞ் சிலவுண்டாகையா லன்னவை (அர்ச்சாதீபம்) என்னும் பேரால் யாம் செய்திருக்கும் ஸத்கிரந்தவாயிலாக நிரசனம்பெற்றிருத்தல் கண்டு குணப்பட்டு உலகம் நீடுவாழ்க. சுபம்! சுபம்!! சுபம்!!!

திருச்சிற்றம்பலம்.

---

ஸ்ரீ ஸம்பந்ததீர்த்த

சரணாரவிந்தார்ப்பணமஸ்து.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானசம்பந்த குரவே நம:

# சித்தாந்தரத்நாகரம்.

## சிவாதிக்யரத்நாவளி

முதற்பாகம்.

காப்பு.

உலகெலாந் தனதொரு சிறுகூற்றி னுளவையு
மலகிலாற் றலானிறைந் தவனெவ னருளுமேலோர்
குலவியே துதியோ னெவனவ னுமை யொருகூற்றி
னலர்கறைக் களசிவ பிரானடி யிணைபோற்றி.

வேறு.

மலைமகள் கணவன் முக்கண னீலமணிமிடற் றவனென வானோர்
திலகனே யுன்னைத் தகரமாய குகையுட்டியானஞ் செய்திடு முறைசெப்பி
யலரவன் முகுந்த னீசனோ டைவரு மையனின் விபூதி யென் றுரைக்கு
மலவிருடீர்த்துச் சிவச்சுடர் விளக்க வந்தகை வல்லிய மறையே.

நூல்.

அகிலலோக பூஷணமாய்விளங்குஞ் சென்னையின்கண் பொன்னப்பபிள்ளை யென்பவரொருவர் சில தினங்களுக்கு முன்ன "மூடமதி கண்டனம்" என்றொருநூல்வெளியிட்டனரென்றும், அது கேவலம் வேதவிரோதமா யிருத்தலால் நாராயணனே பரனென்று நாட்டி யொருநூல் செய்யும்படி "நாகபட்டினம் இராமாநுஜ சித்தாந்த சபையார்" கேட்டுக்கொண்டனரென்றும், அதன்மேல செய்யப்பட்டதென்று அபவித்திரஸ்தானமாகிய குதத்தினிடத்தே தோன்றிய புண்ணைப் பவித்திரம என்பதுபோல் "சன்மதிவிளக்கம்" என்னும்பெயர்புனைந்து ஒருபுத்திமான் "[illegible] பா[illegible]

பஞ்செனப்பறக்கவும், அதனை நன்மதியுடையார் கண்டு சபாசென நகைக்கவும், நகைக்கப்படுமவர் நாணிநல்வழிதேடிப் பிழைக்கவும், சகலசமயாதீதாத்வைத சுத்த சைவசித்தாந்த ஞானிகள் நன்கிதாமென மதிக்கவும் வரைந்துவிடும் வாய்மையருமாறு:—

அவ்வழு வாசகத்திரட்டில் “ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:” என்னும் சுருதிவாக்கியப்படி வியாசர் சத்தியவாக்கியரானபடியால் அவரியற்றிய வேதாந்தசூத்திரத்தில் “பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்” என்று கூறினாரென்றும், அதற்குப் பாஷியஞ்செய்தருளிய சங்கராசாரியர் பசுபதிசம்பந்தமான பாசுபதமும் ஆகமமும் அநாதரணியமென்று கண்டித்துவிட்டாரென்றும் ஓர் கற்பனைவாக்கியத்தை யெழுதிவிடுத்தார். அவ்வாக்கியத்துக்குச் சங்கரருடைய அபிமதம் ஈசுவரனுக்கு நிமித்தகாரணத்வம் சைவர்கூறுவது விருத்தமென்றும், அபின்னநிமித்தோபாதாந காரணத்துவம் பொருந்தமென்றும் சாதித்துத தமது மரபை விளக்கியிருக்கின்றனர். அப்படியே “உத்பத்யஸம்பவாத்” என்றும் “நசகர்த்து: கரணம்” என்றும் “விஜ்ஞாநாதி பாவே வீதஸ்யஸ்வத: ப்ரதிஷேதாத்” என்றும் வரும் அடுத்த வாக்கியங்களால் “வாசுதேவாத் ஸங்கர்ஷணாத் ப்ரத்யும்நா தநிருத்த:” என்கிறபடிச் சீவர்களுக் குற்பத்திகூறுவதும், கர்த்தாவுங் கரணமும் ஒன்றென்பதும், குணமுங் குணியும் வேறென்பதும், விருத்தமென்பது கருதி “பக்தா பாகவதாச்சைவ வைஷ்ணவா: பாஞ்சராத்ரிண: வைகாநஸா: கர்மஹீநா: ஷட்விதா: வைஷ்ணவாமதா:” என்கிற வைஷ்ணவபேதங்களையுங் கண்டித்திருக்கின்றனர். இங்ஙனமாகவும், சைவத்தைமாத்திரங் கண்டித்தாரென்று கூறியது அறியாமையென்க.

இங்ஙனநிற்க, வேதத்திற்கூறியது வியாசரையேயல்லது சங்கராசாரியரையல்ல. சைவநிந்தை சங்கரர்கூறியது தமது ஏகான்மவாதத்தைச் சாதிக்கவேண்டியதாகலின் அதுவே வியாசர் கருத்துமென்பது கூடாது. கூடுமென்னும்பட்சத்தில் பாஞ்சராத்திராதி நிந்தையையும் அங்கீகரிக்கவேண்டும். அங்கீகாரமாயின் ஒன்றையொழித்து ஒன்றையுரைப்பது பெருவஞ்சமென்க. அவ்வாக்கியங்களுக்கு இராமாநுஜரபிமதம் வேறுமெனின், மேல்வாக்கியத்துக்கும் சைவபாஷியத்தில் வேறுபொருளை நாட்டியிருக்கு முண்மையையறியாது பிதற்றுவதென்னமடமை! சங்கராசாரியர்-இராமாநுஜாசாரியர்-மத்துவாசாரியர் ஆகிய மூவரும் சிவாகமங்களுக்கு மறுதலை

ப்பட்ட வொன்றிலொன்று முரணிய வேறுவேறு சித்தாந்தங்களைச் சாதிக்கப்புகுந்த பசுஞானிகளாகலின் அற்பமாரிபாகிகட்கே அவர்கூறிய பாஷியங்கள் பயன்படுமெனக. "வயந்து வேதசிவாகமயோர் பேதம் நபச்யாமஃ வேதோபி சிவாகமஃ" என்னும் வாக்கியத்தால் வேதசிவாகமங்கட்குப் பேதங்காண்கின்றிலம். ஸ்ரீ சிவபெருமானே பிரதமமஹாசிருஷ்டியில வேதசிவாகமங்களைக் கூறினபடியாலும், பொருள்முடிபில் அபேதமாக விளங்கலானும் வேதமே சிவாகமம் என்று ஸ்ரீநீலகண்ட சிவாசாரியசுவாமிகள் தமது பாஷியத்தில் உண்மைஞானத்தை விளக்கியிருக்கின்றனராகையால அவர் திருவாக்கே யெமக்குப பிரமாணமெனக.

சிவாகமங்களில பதிபசுபாசபதார்த்தத்திரய பிரதிபாதகமும் பஞ்சப்பிரமமூர்த்தி பிரதிபாதகமும், ஷடத்துவ பிரதிபாதகமும், சிவபூஜாபயுக்த தேவாலயோற்சவாதி பிரதிபாதகமும் விளங்குமாறே வேதத்திலுமமுறையே "ஏதாவந்தோவை பசவோத்விபாதச் சதுஷ்பாதச்ச" என்றும, "தஸ்மாத் ருத்ரஃ பசூநாமதிபதிஃ" என்றும "ஜ்ஞாத்மாதேவம் சர்வபாப ப்ரஹாணி, க்ஷீணை: க்லேசைர் ஜந்ம ம்ருத்யுப்ரஹாணிஃ" என்றும், "ஜ்ஞாந நிர்மதநா ப்யாஸாத் பாசம் தஹதி பண்டிதஃ" என்றும வரும் வாக்கியங்களால் துவிபாத சதுஷ்பாத பிராணிகளெல்லாம் பசுக்களென்றும், எல்லாவுயிர்களும பசுக்களேயென்று அறியத்தக்கதென்றும், அப்பசுக்களுக்குப் பதி ஸ்ரீ ருத்ரமூர்த்தியென்றும், பதியாகிய பரசிவத்தையறிந்தவர்கள் சர்வபாவங்களினின்று நீங்கி யெல்லாக்கிலேசங்களுமொழிந்து சந்மமிருத்துவைக் கடந்து பரமுத்தியடைவரென்றும, சர்வகாலங்களிலும சிவஞானவிசாராதிசயத்தால் சம்சாரபாசத்தைச் சிவபக்தர்கள் தகிப்பரென்றும் முறையே கூறுமாற்றால் பதார்த்திரயப் பிரதிபாதகமும், ஈசுராரணிய காந்தர்க்கதமாயிருக்கும் நாராயண பிரசிநசத மந்திரத்தில் "ஸத்யோஜாதம் ப்ரபத்யாமி ஸத்யோஜாதாயவை நமோநமஃ" என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் ஸ்ரீ பரசிவமூர்த்தியினுடைய பச்சிமமுகமாகிய சத்யோஜாதமுகத்தை ஆசிரயிக்கின்றேன் அல்லது நமஸ்கரிக்கின்றேன் என்றுகூறி வாமதேவாதி முகங்களையும் வாமதேவாதி மந்திரங்கள் நமஸ்காரங்களால் ஆசிரயிக்குமுண்மை வெளிப்படுமாற்றால் பஞ்சப பிரம்மமூர்த்தி பிரதி பாதகமும், "அத்வநாமத்வபதே ச்ரேஷ்டஸ்யாத் வசுபாரமஸீயா" என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் ஷடத்துவாதிமார்க்கங்களுக்குப் பதியாகிய

ஹே ருத்ரமூர்த்தி,! அத்துவாக்களில் முக்கியமார்க்கா நுசாரியாய் வர்த்திக்கக் கடவேன் என்று கூறுமாற்றால் மந்திரவர்ணபதகலாபுவன தத்வாத்துமக ஷடத்துவா பிரதிபாதகமும், "தமுஷ்டுஹியஸ் விகஸ்சுதந்வாயோ விச்வஸ்யக்ஷயதி பேஷஜஸ்ய யக்ஷ்யாமஹேசௌமநஸாயருத்ரம்நமோபிர் தேவமசுரந்துபஸ்வ" என்னும் ருக்மந்திர போதாயந கற்பசூத்திரங்களால் எந்தப் பரமசிவம் விஷ்ணு சந்திர ரூபமான பாணமும், மேருவில்லும் உடையதாய்ச் சகலசம்சார பிரபஞ்சங்களையு நசிப்பிக்குமோ அந்தப் பரமசிவத்தை யோக்கியமான மனமுண்டாதற்பொருட்டு நமஸ்காரங்களோடு பூசிக்கின்றேன் என்று கூறுமாற்றால் சிவபூஜோற்சவாசாராதி பிரதிபாதகமும் தெள்ளிதினுணர்த்தப்படு மாகையால் வேதமே சிவாகமம் என்னுமுண்மையினிது விளங்கும்.

ஏதத்விருத்தமான அவைதிக பரிபாஷா மூலமாய்ச் சிதசிதீசுவர பதார்த்தத்திரயபிரதி பாதகயுக்தமாய் விளங்கும் இராமாநுஜ சங்கேதித மதாசாரமே நிரஸ்தமென்று கண்டு கொள்க. கூர்மபுராணத்தில் "ஏவம் சம்போ திதோருத்ரோ மாதவேந முராரிணா சகார மோஹ சாஸ்த்ராணி கேசவோபி சிவேரிதஃ காபாலம் லாகுளம் சாக்தம் பைரவம் பூர்வபச்சிமம் பாஞ்சராத்ரம் பாசுபதம் ததாந்யாநி ஸஹஸ்ரசஃ" என்னும் வாக்கியத்தால் சிவகேசவாதிகளிருவரும் மோகனசாஸ்திரங்களைக் கற்பித்தார்களென்பது பெறப்படுதலால் சிவாகமங்கட்கும் பாதிதமுண்டாமேயெனின், "ததாந்யாநி ஸஹஸ்ரசஃ" என்னும் சம்பந்தத்தால் அன்னியமான அனேகமாயிரம் ஆகமங்களைச் செய்தனரென்று காணப்படுதலின் அது பொருந்தாதென்க. என்னை, சிவாகமங்களை யவற்றிற்சேர்க்காததெனின், அக்கூர்மபுராணத்திலேயே "நிர்மிதம் ஹிமயாபூர்வம் வ்ரதம் பாசுபதம்சுபம் குஹ்யாத்குஹ்ய தமம் சூக்ஷ்மம் வேதசாரம்விமுக்தயே ஏஷ பாசுபதாசாரஸ்ஸேவநீயோ முமுட்சுபிஃ" என்னும் வாக்கியத்தால் பாசுபதவிரதத்தைத் தெரிவிக்குமாகமமந்திரங்கள் வேதசாரமென்றும், மோக்ஷத்தை விரும்பியவர்களால் சேவிக்கத்தக்கதென்றுங் கூறுமாற்றால் உண்மைவிளங்குமென்க. ஆயின் "அந்யாநி சைவசாஸ்த்ராணி லோகேஸ்மின் மோஹநாயவை வேதவாத விருத்தாநி மயைவகதிதாநிதுஃ" என்னும் வாக்கியத்தால் வேதவிருத்தமும் அன்னியமுமாகிய சைவாகமங்கள் அக்கிராஹ்யமென்பது கூறப்படுமேயெனின் "வாமம் பாசுபதம் சௌமம் லாகுலம் சைவபைரவம் ஸஸேவ்யமேதத் கதி

தம் வேதபாஹ்யம் தத்தேதரத்" என்றும் "யாநி சாஸ்த்ராணி த்ருச்யந்தே யுகேஸ்மின்விவிதாநிது, ச்ருதி ஸ்ம்ருதி விருத்தாநி தேஷாம் நிஷ்டாஹிதாமஸீ" என்றும் வரும் வாக்கியங்களால் சவபஸ்ம நராஸ்தி கபாலதாரணங்கள் முதலிய வேதவிருத்த தருமங்களைச்சொல்லிய வாமபாசுபதமும், குருதார கமநமுதலிய விருத்ததருமங்களைக்கூறும் சௌமம் என்கிற சந்திர தேவதாகமமதமும், லகுலீபைரவ தேவதாகமங்களாகிய கபாலபாத்திரசுராபாநாதி கிருத்தியங்களையுடைய துர்மதங்களும் ஆகியநான்கும் வேதபாஹ்யமதங்களென்று கூறப்படுதலாற் கண்டுச் சைவாகமங்களென் றுபசரித்துக்கூறியது இவைகளேயெனக. இதனால் மூலாகமங்கள் ஒருவாற்றானும் பாதிக்கப்படுவதல்லவென்க.—இங்ஙனநிற்க, "காபாலம் பாஞ்சராத்ரஞ்ச யாமளம் வாமமார்ஹதம் ஏவமாதீநி சாஸ்த்ராணி மோஹநார்த்தாநி தாநித்விதி" என்னும் வாக்கியத்தால் காபாலம் பாஞ்சராத்திரம் முதலிய மதங்கள் அசுராதிவியாமோகார்த்தமாகக் கற்பிக்கப்பட்டனவென்று காணப்படுதலால் மேற்சொன்ன துர்மதங்களில் இவ்விருமதங்களுஞ் சேர்க்கப்படுமெனக. அன்றியும் "வாம பாசுபதாசாராঃ பாஞ்சராத்ரா ச்ரயாঃ பரே ச்ருதி ஸ்மிருதி விருத்தத்வாந் நஸேவ்யாஸ்தே முமுக்ஷுபிঃ" என்கிற வசனத்தால் வாமபாசுபதாசாரமும் பாஞ்சராத்திராசாரமும் சுருதிஸ்மிருதி விருத்தாசாரமாக விளங்கலான் அத்துராசாரமுடையவர்கள் முமுக்ஷுக்களால் தரிசனஸ்பரிசன தான பூஜாதி சத்காரங்கள்செய்தற்குரியா ரன்றென்று கூறுமாற்றால் வேதபாஹ்யமான துர்மதங்கள் இவையென்று விளங்கும். ஆயின் "த்ரயா ஸாங்க்யம் யோகঃ பசுபதிமதம் வைஷ்ணவமிதி" என்று மஹிம்நஸ்தவத்திற் கூறுவதென்னையெனின், தக்ஷிணபாசுபதமாகிய உத்தரசைவமும் சங்க சக்ராங்கித ரஹிதமாகிய விஷ்ணுபக்தி யுக்தமாகிய வைஷ்ணவமுமே புஷ்பதந்தமுனிவருடைய அபிப்பிராயமன்றிச் சூடுண்டுகிடத்தலாகிய வைஷ்ணவமாதிகளையன்றென்று அறியத்தக்கதாம். இந்த நியாயங்களால் பாஞ்சராத்திராகமசித்தமான இராமாநுஜமதமே வேதபாஹ்யமான துர்மதமென்பது நாட்டப்பட்டது. "த்வம் தேவேஷு ப்ராஹ்மணோஹ்யஹம் மநுஷ்யேஷு ப்ராஹ்மணঃ விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷிঃ" இந்தச் சுருதிகளால் சகலதேவகணங்களில் பிராஹ்மணத்துவமும், தேவதாதிக்யமும், மஹர்ஷித்வமும் உடையவராய மனுஷ்யாதி சிவபரியந்தம் ஆப்த தாரதம்மியங்களினும் பரமாப்தருமாகவிளங்குஞ் சிவ

பெருமானருளிய வாக்கியம் ஒருவராலும் பாதிக்கப்படுவ தல்லவெ ன்க. இவற்றின் விரிவை வாமனபுராணத்தும், சிவாக்கிரயோகிகள் செய்தருளிய சித்தாந்த தீபிகையினும், ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதரவ ர்கள் செய்தருளிய சிவார்க்கமணிதீபிகையென்னும் ஸ்ரீபாஷிய வி யாக்கியானத்தினும் பரக்கக்காணலாம்.

இவற்றுள் வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காம். அவற்றுள் இருக்குவேதம் இருபத்தொரு சாகையும், யசுர்வேதம் நூற்றொருசாகையும், சாமவேதம் ஆயிரஞ்சாகையும், அதர்வணவேதம் ஒன்பதுசாகையும் உடையனவாம். இவை அற்ப சுருதிவாக்கியம் பிரபலசுருதிவாக்கியம் என இருபகுதிப்படும். அவ ற்றுள் அற்பசுருதி வாக்கியம் கன்மாநுட்டானக் கிரமங்களைச்சொ ல்லும். பிரபலசுருதிவாக்கியம் அத்தியான்மகஞானத்தைச் சொல் லும். இது முப்பத்திரண்டு உபநிஷத்தாய் இருக்கும். வேதம் என் னுஞ்சொல் அறிதற்கருவியெனப் பொருள்படும். இவ்வேதத்து க்கு அங்கங்கள் சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற் பம், சந்தோவிசிதியென ஆறும். அவற்றுள் சிட்சையாவது வேதத் தின் உச்சாரணலட்சணத்தை யுணர்த்துவதாம். வியாகரணமாவது வேதத்தின் பதலட்சணத்தை விவரிப்பதாம். நிருத்தமாவது வேத த்தின் பதங்களுக்கு விவரணங்கூறுவதாம். சோதிடமாவது இலக் கினம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் முதலியவற்றால் வைதிக கருமங்களுக்குக் காலம் அறிவிப்பதாம். கற்பமாவது ஆசு வாலயநீயம், போதாயநீயம், ஆபஸ்தம்பம் முதலிய சூத்திரரூபத்தி ருந்து வைதிக கருமங்களைப் பிரயோகிக்கும் முறைமையைக் கற்பி ப்பதாம். சந்தோவிசிதியாவது வேதத்தில் உக்தைமுதலிய சந்தோ பேதங்களுக்கு அக்ஷரசங்கியை கற்பிப்பதாம். இவற்றை யுணராக் கால் வேதங்களை யோதுதலும், அவற்றின்பொருளை யுணர்தலும், அவைகளில் விதித்தவழி யொழுகுதலும் ஏலாவாம். ஆதலால் இவை ஒருதலையாக உணர்தற்பாலனவாம். இங்ஙன முணராதபேதையரே அபார்த்தங்கொண்டு சிவாகமத்திற்கு மாறுப்புலம்புவரென்க. "ஆ திமறையோதி யதன்பயனொன் றும்மறியா - வேதியர்சொல்மெய்யெ ன்றுமேவாதே." என்றுகூறியதும் இவ்வுண்மை கருதியென்க. இங் ஙனநிற்க, ஆகமமானது "சிவசம்ஸ்காரிஞைஞ்சைவஞ்ஞாநதர்மவதாம் ஸதா அஷ்டாவிம்சதிபேதேநசாகமாஸ்துசிவோதிதாः காமிகம்யோகஜ ம்சிந்த்யம்காரணம்த்வஜிதம்ததா தீப்தம்சூட்சமம்ஸஹஸ்ரஞ்சாப்யஞ்

சுமாசுப்ராபேதகம் விஜயஞ்சைவவிச்வாஸம்ஸ்வாயம்புவமதாகலம் வீரஞ்சரேளரவஞ்சைவமகுடம்விமலம்ததா சந்த்ரஜ்ஞானஞ்சபிம்பஞ்சப்ரோத்கீதம்லளிதம்ததாஸித்தம்சந்தாநசர்வோக்தம்பாரமேச்வரமேவசகிரணம்வாதுளஞ்சைவேத்யஷ்டாவிம்சதிஸம்ஹிதாः" என்றுகூறிய வீராகமவசனத்தால் காமிகம்-யோகஜம்-சிந்தியம்-காரணம்-அஜிதம்-தீப்தம்-சூக்குமம்-சகசிரம் - அஞ்சுமான் - சுப்பிரபேதம் - விஜயம்-நிசுவாசம் - சுவாயம்புவம் - ஆக்கினேயம்-வீரம்-ரௌரம் - மகுடம் - சந்திரஜ்ஞானம்-முகபிம்பம் - புரோற்கீதம் - லளிதம் - சித்தம் - சந்தானம் - சர்வோத்தமம் - பாரமேசுரம் - கிரணம் - வாதுளம் என்னும் பேதங்களாய்ப் பெறப்படும். இவ்வாகமங்கள் மந்திரமெனவும், தந்திரமெனவும், சித்தாந்தமெனவும் பெயர்பெறும். இவ்விருபத்தெட்டு சிவாகமங்களுக்கும் ஒவ்வொன்றுக்குக் கோடிகிரந்தமாக இருபத்தெட்டுகோடி கிரந்தங்களுளவாம். இவை ஞானபாதம்-யோகபாதம் - கிரியாபாதம் - சரியாபாதம் என்று தனித்தனி நான்குபாதங்கள் உடையனவாயிருக்கும். இவற்றுள் ஞானபாதம் பதிபசுபாசமென்னுந் திரிபதார்த்தங்களின் ஸ்வரூபத்தையும், யோகபாதம் பிராணாயாமம் முதலிய அங்கங்களையுடைய சிவயோகத்தையும், கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம் - சந்தியாவந்தனம் - பூசை - செபம் - ஓமம் என்பனவற்றையும், சமயவிசேஷநிருவாண ஆசாரியாபிஷேகங்களையும், சரியாபாதம் சமயாசாரங்களையும் உபதேசிக்கும். ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்தது எனப்பொருள்படும். இன்னும் ஆ என்பது பாசம் எனவும், க - என்பது பசு எனவும், ம - என்பது பதி எனவும் பொருள்படுதலால் ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்தலட்சணத்தை யுணர்த்தும் நூல் என்பதே சிறந்தபொருளென்க. ஆ - என்பது ஞானமும், க - என்பது மோக்ஷமும், ம - என்பது மலநாசமுமாதலால் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி ஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தல்பற்றி ஆகமம் எனக் கூறுதலுமொன்று. இவ்வாகமங்களுக்கு வழிநூல் நாரசிங்கம் முதல் விசுவகன்மம் ஈறுகிய உபாகமங்கள் இருநூற்றேழாம்.

ஆகமம் என்பது ஆப்தவாக்கியம். ஆகமங்கள் லௌகிகம்-வைதிகம் - அத்தியான்மகம் - அதிமார்க்கம் - மாந்திரம் என ஐந்துவகைப்படும். தற்காலத்தில் பயன்தருவது லௌகிகம். காலாந்தரத்திற் பயன்தருவது வைதிகம். ஆத்மவிசார வியர்கையது அத்தியா

ன்மகம். யோகவியற்கையது அதிமார்க்கம். சிவஞானவியற்கையது மாந்திரம் எனப்படும். அவற்றுள் மாந்திரம பிறநூல்களைப் பூர்வபக்ஷமாகக் கீழ்ப்படுத்தி மேற்பட்டு விளங்குங் காமிக முதலிய சைவாகமங்கள். ஆகமாந்தமென்னும் ஞானபாதப்பகுதி யோகரூடி நாமமாகியசித்தாந்தமென்னும் பெயரையுடையது. அது இரத்தினத்திரயத்திலே "சித்தாந்தமே சித்தாந்தம், அதற்கு வேறானவை பூர்வபக்ஷங்கள்" என்றும், ஸ்காந்தத்திலே "இந்த எல்லையில சிவன் வெள்ளிமலையாகிய கைலாசத்திலே சநகர் முதலிய முநீந்திரர்களுக்குத் திரிபதார்த்தங்களினாலே சம்மிதமாகியும், இரகசியம் ஆகியும், ஆகமாந்தம் என்னும் பெயர்த்தாகியும் உள்ள சித்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார்" என்றும், காமிகத்திலே "இருக்கு-யசுர் - சாமம் - அதாவணம் என்பவை சிவனது மற்றை முகங்களிற் பிறந்தன. காமிகம்முதலிய சிவஞானம் ஊர்த்துவ சுரோதோற்பவங்களாகி மேன்முகத்திற்பிறந்தன. முன்கூறியசகல நூல்களையும் பரமசிவன் பூர்வபட்சமாகச்சொன்னார். பின்னர் அவற்றையெல்லாங் கீழ்ப்படுத்திப் பரமாகத் தவிக்கற்பாலனவுங் கொள்ளற்பாலனவுமாகிய பொருள்களை நிச்சயிக்கும சிவசித்தாந்தத்தைச்சொன்னார். சித்தாந்தமாவது காமிகம முதலியனவாம. இதிலுயர்ந்தது பிறிதொன்றுமில்லை. இந்தச் சைவநூலே மூலமாம். சதுர்வேதங்களும் இதினின்றும் பிறந்தனவாம். சைவமே வைதிகம் எனப்படும். வைதிகமே சைவம் எனப்படும். சைவமானது வைதிகத்தில் அடங்கியும் அடங்காமலும் இருக்கும். வைதிகம் சைவத்திற்றாழ்ந்தது. முனிவரரே, அற்றாயினும், சைவம்வேதப்பொருளோடு ஒற்றுமையாயிருத்தலால் வைதிகம் என்றும், வேதசாரம் என்றுங் கூறப்படும். சிவப்பிரகாசமாகிய சிவஞானம் பரஞானமாம். பசுபாசபதார்த்த போதகமாகிய வேதம்முதலியன அபரஞானமாம். இராத்திரியில் மனிதரதுகண்ணும் பூனையின்கண்ணும் விலட்சணமாய் இருப்பது போல் இந்தப்பர ஞானமும் அபரஞானமும் விலக்ஷணமாய் இருக்கும்" என்றும் கூறு மாற்றாலறிக. லௌகிகம்முதலிய ஐந்துசாத்திரங்களும் முறையே ஒன்றற்கொன்று ஏற்றமுடையன. காமிகத்திலே "சித்தாந்தம் மந்திரதந்திரமாகும். அதிமார்க்கம் அதனிற்றாழ்ந்தது அத்தியான்மகம் அதனிலுந்தாழ்ந்தது. அதிலுந் தாழ்ந்தது வைதிகம். வைதிகத்திலும் தாழ்ந்தது லௌகிகம்" என்று சொல்லப்பட்டது. வாயுசங்கிதையில் "சைவநூலிற்கூறப்பட்டதும், பாசமூன்றையுந்தவிர்ப்பதும், மேலானதுமாகிய தீக்ஷையைத்தவிர யாதொ

ருஆச்சிரமமும் இவ்வுலகத்திலே மனிதருக்கு மேன்மையன்று. ஆதலால் தீக்ஷையினாலேதான் மோக்ஷம். ஆச்சிரமங்களினாலும், மற்றைக் கருமங்களினாலும் மோக்ஷமில்லை. அத்துவசுத்தியின்றி முத்தியைவிரும்பும் மனிதர் கோலின்றிநடக்கத் தொடங்கியகுருடர் போல்வர். தோணியின்றிக கடலைக் கடக்க விரும்பினவர் போல்வர்" என்றும், ஸ்காந்தம்—பிருகுசாபப்பிரகரணத்தில் "இங்கே முப்பாசத்தை அகற்றுவதும், மேலானதும், சிவசம்பந்தமுடையதுமாகிய தீக்ஷையாலன்றி ஆத்மாக்களுக்கு ஆச்சிரமத்தால் செய்யப்பட்ட உயர்ச்சியொன்றுமில்லை. ஆதலால் தீக்ஷையாலேதான் மோக்ஷம். ஆச்சிரமங்களாலும், பிறகருமங்களாலும் முத்தியில்லை" என்றும் முறையே கூறுமாற்றானுமறிக. இவ்வதிப்ரபலபிரமாணங்கள் வெகுவாய்விளங்கியிருக்கவும், சங்கராசாரியர் சைவத்தைக கண்டித்தாரென்பதும், வியாசருடையகருததும் அதுவேயென்று மயங்குவதும் மௌட்டியாந்தகாரமென்க.

"வேதாந்தநிஷ்டை பெற்றுக்களங்கமற்ற ஞானிகளும், எனது சிவாகமத்திலே தற்பரர்களாகி ஞானபாதத்திலே நிலைநின்றோரும் ஆகிய இருவகையோரும பெறுதற்கரிய சாயுச்சியம்பெறுவர்கள். கருமத்தையும் பிரமத்தையும் உணர்த்தும் வேதாகமம் என்று பிரசித்தம்பெற்ற இரண்டுமார்க்கங்களிலும் நில்லாதபாவிகள் சாத்திரத்திற்கூறிய நால்வகைதண்டங்களாலும் தண்டிக்கற்பாலர்கள்." என்னும் ஸ்காந்தசம்பவ சிதம்பரமான்மியத்தில சிவன்கூறிய பொருளையுடைய வியாச வாக்கியத்தினாலே சங்கரர் அபிமதமே வியாசருடையதுமென்னுங் குத்ஸிதவாக்கியம் அறவே நிரஸ்தமென்க.

இங்ஙனநிற்க, சைவாகமங்களுக்கு வேதபாஹ்யத்தன்மை எந்த நியாயத்தினாலே கூறுவது? வேதப்பொருளுக்கு விருத்தத் தன்மையே வேதபாஹ்யத தன்மையெனின், அப்போது வேதத்தில் கருமத்தையும் பிரமத்தையும் உணர்த்தும் பூர்வோத்தர காண்டங்கட்கு விருத்தத்தன்மையுண்மையால் அந்தப்பிரசங்கம் அங்குமுண்டாம். அங்கே இலக்கணையால் தாம் கருதியபொருளில் *முடிவுபெறுமெனின், அது எங்கும ஒக்கும். வேதத்துக்குவேறாய் இருக்குந் தன்மையே பாஹ்யத்தன்மையெனின், அப்போது ஸ்மிருதிகளும் அப்பிரமாணம் எனக் கொள்ளப்படும். வேதத்தை மூலமாகக்கொள்ளாத தன்மையெனின், அப்போது வேதத்துக்கும் வேதத்தை மூல

மாகக்கொள்ளாத தன்மை உண்மையால் வேதத்துக்கே அப்பிரமாணிய பிரசங்கம்வரும். ஆதலால் வேதப்பிரமாணியத்திலே நித்தியத்துவமும், வேதத்தைமூலமாக உடைமையாதலும் முடிவல்ல. மற்றென்னெனின், ஆப்தவாக்கியத்துவமேயாம். வேதம் சுத்தசைவசித்தாந்தம் என்பவை ஒருவாற்றால் ஒவ்வோரிடத்தில் விருத்தப்பொருளையுடையனவா யிருப்பினும், சாமானிய விசேஷத்தன்மையால் ஐக்யம் உள்ளனவாயே இருக்கும்.

வேதம் பொதுவாகவும், சிவாகமம் சிறப்பாகவும் இருத்தலால் இரண்டும் பிரமாணங்களென்றே துணியப்படும். ஆகமம் வேதவிசேஷமாய் இருத்தலால் அதற்கு வேதபாஹ்யத்தன்மையின்றென்க. வேதவிசேஷமென்று ஆலாஸ்ய மான்மியத்தும், கப்பிர பேதத்தும் சொல்லப்பட்டது. மோக சூரோத்தரத்திலே "புராணம் வேதங்களாலும், வேதங்கள் ஆகமங்களாலும் வாதிக்கப்படும். அவை சாமானியமும் விசேஷமுமாம். சைவமே மிகு விசேஷமாம்."என்றும், வாய்வு சங்கிதையிலே "பிறநூல்களிற் கூறப்பட்டதெல்லாம் சிவாகமத்தில் இருக்கின்றது. சிவாகமத்திற் காணப்படாதது பிறிதோரிடத்தினும் இல்லை" என்றுங் கூறப்பட்டது. அற்றேல், வியாகரணம் முதலிய வேதாங்கமாகலின் வேதமே பிரமாணம் - ஆகமம் பிரமாணம் அன்றெனின், யோகரூடிநாமத்தால் சிவாகமமே நால்வகைப் பிரமாணங்களாலும் முடிந்த ஆகமம் எனப்படுதலானும், "சித்தாந்தமேசித்தாந்தம்" என்று இரத்தினத்திரயத்திலே கூறப்படுதலானும், அதுவே பிரமாணம். வேதமும் ஆகமம்-சித்தாந்தம் என்னுஞ் சத்தங்களாலே கௌணவிருத்தியாற் கொள்ளப்படுமெனின், ஆகமம் வேதசத்தத்தாலே கௌணவிருத்தியாற் கொள்ளப்படுமென்பது நாட்டப்படும். ஆதலால் சிவாகமமே முக்கிய விருத்தியால் ஆகமம் எனவும், சித்தாந்தம் எனவும் படுதலில் சர்வோத்கிருஷ்ட பிரமாணமென்று சாதிக்கப்பட்டது.

இருக்காதிகளிலும், அவற்றின் சிரசிலும் லௌகிக வைதிக அத்தியான்மக அதிமார்க்க நூற்பொருளை விளக்கினும், அதர்வசிரசிலே மாந்திர நூற்பொருள் விசேஷித்துச்சொல்லப்பட்டது. சூதசங்கிதையிலே "பதினெண்புராணங்களையும் சத்தியவதியின் புத்திரர்செய்தார். காமிகமுதலியவற்றைப் பரமசிவனேசெய்தார்"என்று கூறுதலால், சிவாகமங்களைச் சாட்சாத் சிவனேசெய்தார் என்று

துணியப்பட்டது. சநகர்முதலிய முநீந்திரர் நால்வரும் வேதங்களை யும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதி ஞானம் நிலைபெறா தவராயினர் என்றும், பின்பு ஆகமாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதி ஞானம் பெற்றனரென்றும் சங்கரசங்கிதை யிற் கூறியவாற்றானும், சுவேதர் - உபமன்யு - கிருஷ்ணர் - அருச்சுனர் முதலியோர் சிவசித்தாந்த மார்க்கசிரவணசரணஞ்செய்தமை யானும், சிவாகமத்திற் கூறப்படும் ஞானமே ஞானமென்றும், அதுவே சிவனைப்பற்றிய பெரியோர்களுக்கு முத்திசாதனம் என்றும் சைவபுராணத்திற் கூறிய வுண்மையானும் சிவசித்தாந்தோத்கர்ஷம் வெளிப்பட்டதென்க.

இதுகாறுங் கூறிவந்த நியாயங்களால் வேதசிவாகமங்களிரண்டும் பொதுவுஞ் சிறப்புமாகக் கொள்ளற்பாலனவாய்ச் சாதிக்கப்பட்ட முதனூல்களென்று நாட்டப்பட்டதாகையால் குமதிகளால் தூற்றப்படும் சிவாகமதூஷணம் நிஸ்புருஷமென்க. ஆத்மாக்கள் பரிபாகம் பலவேறுபாடுடையனவாகலின அவரவர் பரிபாகத்துக்குத்தக்க வுணர்ச்சியைத்தரும்பரிசினையுடையதுபற்றி வேதத்தைப் பொதுவென்றும், பரிபாகமுதிர்ச்சியில் வரத்தக்கசிவஞானத்தைப் பயிப்பிப்பது ஆகமமாதலால அதனைச்சிறப் பென்றுங்கொள்ளப்படும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாலையுங்கூறுவது வேதமும் வீட்டைமாத்திரம் தனித்துக்கூறுவது ஆகமமுமாகவிளங்கலான் வேதம் உலகிலுள்ள சாமானியருக்கும், ஆகமம சிறந்த சத்திநிபாதர்க்குங் கொடுக்கப்பட்டனவென்று சைவநூல்கள் கூறுமென்க. பல்வேறுவகைப்பட்ட திரிபுணர்ச்சியைக் கன்மத்தினளவாய் விளைவிக்கும் வேதத்துண்மையை ஆகமத்துணைபாலன்றி யறியப்புகுவது வெறுங்கதையா மென்க. வேதம் பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திரமும், ஆகமம் அதனை அங்ஙனமாகவொட்டாது தெளித்துரைக்கும் பாஷ்யமுமாக ஸ்ரீ சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டனவாகலின், வேதசிவாகமங்களிரண்டையும் பிரமாணமாகக் கொண்ட உத்தமபரிபாகிகளாகிய சைவர்கள் துணிபே உண்மையுடையதென்பது நாட்டப்பட்டது.

"உத்யாகமேஷு வேதேஷு வேதாந்தோபநிஷத்சுச தர்மஸ்து சாச்வதஃ ப்ரோக்தோமுக்த்யே மாஹேச்வரோ மஹாந்" என்று விளங்கும் ஆகமவசனத்தால் இந்தச் சிவாகமங்களினும், வேதங்களினும், உப

நிஷத்துக்களினும் சாக்ஷிதமாகிய சிவதர்மங்கள் விசேஷித்துச் சொல்லப்பட்டது என்று கூறுகையால் வேதசிவாகமங்களுக்குப் பேதமின்மை வெளிப்பட்டது. இவ்வுண்மையையறியாமல் சிவாகமங்களுக்கு அப்பிரமாணியம் சொல்லுமிடத்துக் காயத்திரீமந்திர ஜபபுரச்சரணவிதிகளையும், ஜபநியமஹோமதர்ப்பணாதி விதிகளையும் விளங்கக்கூறுவது ஆகமமேயாகலான், சகல பிராஹ்மண்ய முக்கியமாகிய காயத்திரீ மஹாமந்திரங்களுடைய ஜபஹோமாதிகளும் அகாரியங்களாகும். இவற்றை விதித்தவேதமும் அப்பிரமாணியமென்பது தானேபெறப்படும். அன்றியுஞ் சரலிங்கஸ்தாவர லிங்கபிராண பிரதிஷ்டாகாலகர்த்தவ்ய துவாதசசம்ஸ்கார விதாயகவசனங்களாலும், "குண்டமண்டப நிர்மாணம் தத்தத் ஸம்ஸ்காரமேவச வாஸ்துபூஜாஞ்ச ஹோமஞ் பாலிகா சுப்ரதிஷ்டிதம்" என்றுகூறியகுண்டமண்டபசம்ஸ்காரமுதலாகியவாஸ்து பூஜாவாஸ்து ஹோமபாலிகாதி பிரதிஷ்டாதி விதாயக வசனங்களாலும், "பட்டிகாகஞ்ஜ கண்டாப்ஜ பட்டிகாத்யபிரதாரக" என்று கூறிய சரலிங்கஸ்தாவர லிங்காவயவங்களில் நியாசஞ்செய்யப்படும் புவனத்வாமந்திரத்வா முதலாகிய ஷடத்துவாநியாசவிதாயக வசனங்களாலும், சிவாகமங்கள் அதிதுல்யப்பிரமாணமென்பது பெறப்படும். இதனையறியாது அக்கிராஹ்யமெனின், ஆகமவசனோக்த லிங்கபிரதிஷ்டாதி சம்ஸ்காரங்களும் அக்கிராஹ்யமென்பது சொல்லாமேயமையும். களாநியாச மண்டபாராதன வாஸ்துபூஜாதி சம்ஸ்காரநிரூபணங்களை எந்த சுருதிஸ்மிருதிபுராண வசனங்களாலும் உதகரிக்கப்பட்டதில்லை யாகலின் சர்வ ஜன கிராஹ்யமாகிய ஸ்தாவரலிங்கசரலிங்கபிரதிஷ்டாதி காரியங்களை நிரூபித்திருக்கும் காமிகாதி சிவாகமங்கள் முக்கியகிராஹ்யமாயிற்றென்க.

ஸ்ரீநீலகண்டாசாரிய கிருதமாகிய சூத்திரபாஷ்யத்தில் "அங்காவ்யயாத் யநந்த மாங்கல்ய குணகண மணிஜலதேः பரமசிவஸ்ய" என்றற்றொடக்கத்துவாக்கியத்தால் சிவபெருமானை அங்காவ்யயங்களாகிய அநந்தகல்யாணகுண சம்பந்நராகக்கூறி "ஸர்வஜ்ஞதா த்ருப்திரநாதிபோதஸ்வதந்த்ரதா நித்ய மலுப்தசக்திः அநந்தசக்திச்ச விபோர் விதிஜ்ஞாஷ்ஷடாதுரங்காநி மஹேச்வரஸ்ய" என்று சர்வக்ஞத்வம் நித்யதிருப்தி, அநாதிபோதம், ஸ்வாதந்திரியம், நித்யாலுப்தத்வம், அநந்தத்வம், ஆகிய ஆறு அங்கங்களும், "ஜ்ஞாநம்விராகதைச்வரிய ம்தபச்சக்திः க்ஷமாத்ருதிः ஸ்ரஷ்ட்ருத்வமாத்மஸம்பந்தோஹியதிஷ்டா

த்நுத்வமேவ சஅவ்யயாநிதசைநாநிநித்யந்திஷ்டந்திசங்கரே." என்று திரிகாலஜ்ஞானம், பிராகிருத போகவிமுகத்துவம், அணிமாத்யஷ்டைசுவரியம், சத்திய சமதமாதிதபம், சகலப்பிரஹ்மாண்டதுரீணபிரகிருதி, சாந்தி, நித்யநைரியம் அல்லது நித்யாநந்தம், சர்வதிருஷ்டி, சர்வஜீவபிரேரகத்வசம்பந்தம், சர்வபிரபஞ்சாதிஷ்டாநத்வம் ஆகிய பத்து அவ்யயங்களும் சிவாகமவசனங்களால் நிரூபணம் பண்ணியிருக்கின்றாராகலானும், லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் "ஸகலாஸம சந்தேஹ கக்திசம்புடமோக்திகா" என்னுந் திவ்யநாமத்தைக் காமிகாதி சிவாகமங்களால் பாஸ்கராசாரியர் நிரூபணம் பண்ணியிருக்கின்றாராகலானும் சிவாகமங்கள் அதிதுல்யப்பிரமாணமென்பது இனிதுபெறப்படும்.

இந்தநியாயங்களால் சங்கராசாரியரபிமதமே வியாசசூத்திரத்துண்மை யென்பது ஒருவாற்றானுமில்லாதொழிந்த தாகலின், ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியசுவாமிகள் செய்தருளிய பாஷ்யமே மேதாவியர்கொள்வரென்க.

ஸ்ரீநீலகண்டவிஜயத்தில் வேதாந்த பிரவர்த்தகராகிய சங்கராசாரியரும், சித்தாந்த பிரவர்த்தகராகிய ஸ்ரீகண்டாசாரியரும் ஒருவரையொருவர் சந்தித்துத் தாங்கள்செய்த பாஷ்யவிஷயங்களை விவகரித்துக்கொண்டு வருகையில் சங்கராசாரியர் துர்பலிஷ்டராய் சமாதானங்கள் சொல்லமயங்கி "ஹேநருஸிம்ஹா" என்று அலறிக் கூப்பிட்டனரென்றும், அப்போது கோரரூபந்தாங்கி நரசிங்கமூர்த்தி வெளிப்பட்டு ஸ்ரீசிவாசாரியரை யணுகுதலும், சிவாசாரியர் "ஹேசரபா" என்று தியானவசத்தராய் நிற்கவும், பரமசிவம் சரபாக்ருதியாய்த்தோன்றி நாரசிங்கத்தை யிருகூறாய்ப் பிளந்தனரென்றும், சங்கராசாரியர் அஞ்சி ஸ்ரீகண்டாசாரியரைச் சரண்புகுந்து, அவர்பால் சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு சிவானந்தலஹரி-சௌந்தரியலஹரி - சிவபுஜங்கமுதலியசிவோத்கர்ஷகிரந்தங்கள் செய்து, அவற்றுள் சைவாசாரியராயுள்ள திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளையும், கண்ணப்பசுவாமிகள்-சிறுத்தொண்டநாயனார் - இயற்பகைநாயனார் - சண்டேசுரநாயனார் முதலியவுண்மைநாயன்மார்களையுந் துதித்து சிவாநந்தவாழ்வடைந்தனரென்று இனிது கூறுதலால், சங்கராசாரியர் சைவத்தைக்கண்டித்தாரென்னும் வீண்வா

தம் அறவே நிரஸ்தமாமென்க. சங்கராசாரியர் சிவனிடத்தில் அன்புடையவ ராகையால் சம்பந்தாதிகளை சிவனடியார்க ளென்னும் உபசாரங்கருதித் துதித்தனரெனின, அவர் விஷ்ணுவினிடத்துமஅன்புடையவரா யிருநதவராகையால்மாலடியார்களென்று இவர்கள்பேயாழ்வார்களை யேன்மறந்துங்கூறிறைரில்லை? சங்கராசாரியர் சுத்தசைவராய் விளங்கினராகலின், உண்மை நாயன்மார்களைத் துதிக்கும் பெருஞ்செல்வத்தைப்பெற்றனரென்க. இவ்வுண்மையை யுணரப்பெறாத முடிச்சூர்முதலியொருத்தன் வெளியிட்டபிரபன்னகாயத்திரி யென்னுஞ் சுவடியில் (றுஅ) வது பாடல்வியாக்கியானத்தில் "கேயம்கீதா நாமஸஹஸ்ரந்த்யேயம்ஸ்ரீபதிரூபமஜஸ்ரம் நேயந்நித்யம்ஸஜ்ஜநஸங்கம்தேயந்த்நதநாயசவித்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம்மூடமதே" என்கிறவாக்கியத்தை யுதகரிதது பகவத்கீதையையும், விஷ்ணுசகஸ்ரநாமத்தையும், கோவிந்தனையுஞ் சிறப்பித்துக்கூறியதுகொண்டு சஙகராசாரியர் வைஷ்ணவராய்த் திருந்தப்பட்டாரென்று தாபிமானத்தால் பிதற்றி யிருக்கின்றனன். சங்கராசாரியர் செய்தருளிய பிரஸ்தானததிரய பாஷ்யத்தில் கீதாபாஷ்யமொன்றுகலானும், விஷ்ணுஸஹஸ்ர நாமவியாக்கியானம அத்வைதபரமாய் செய்யபபட்டுள்ள தாகலானும், அவற்றைச் சிறப்பித்துக் கூறியதன்றி இவர்கள் பேய்க்கருத்துக் கிணங்கவன்றென்பதாம். இங்ஙனமாகவும, இப்பேயர்கள் அவர் திருந்தப்பட்டாரென்று கூறவநததுஎதுகருதியோ அறிகிலம். கோவிநதனை பஜிக்கச்சொன்னமையாலெனின், "கோவிந்தயோகீந்த்ரமதாஸ்யசிஷ்யம் ஸ்ரீசங்கராசார்யம்" என்றுவருங் குருமரபுவணக்கத்தால் கோவிந்தயோகிக ளென்பவர் சங்காசாரியருக்கு ஆசிரியரென்பது பெறப்படுதலால் "பஜகோவிந்தம்" என்றற் றொடக்கத்துத் தியானசுலோகங்கள் ஆசாரிய பாரமயமாகிவிட்டதென்க. ஆயின் ஸ்ரீயப்பதியைதியானிக்கும்படிச்சொல்லுவ தென்னையெனின், கோவிநதநாமத்தையுடைய லட்சுமீநாயகனேகோவிந்தனுக வந்தானென்று அலங்கார பிரசம்சைபெறக் கூறியதென்க. இச்சாம்பிரதாயம் வேதாந்தநூல் படித்தறியாத வெறித்தாதனுக்கு எப்படிவிளங்கும்?

"படைப்பானும்வியன்ஞாலங்காக்குமாழிப்
படையானும்படைத்தளிக்கப்பட்டதெல்லாந்
துடைப்பானுஞ்சுருதிகளுந்தொழுதுபோற்றுஞ்
சொரூபாநந்தச்சுடரைத்தொழுதல்செய்வாம்."

என்றுகூறிய தத்துவராயர் திருவாக்கா லிவ்வுண்மை வெளிப்படுமென்க. சொரூபாநந்தரென்று அவராசிரியருக்குப் பேராகலின் பிரமபரியாயநாமங்கள் வேறுபலவுண்டாயிருப்பினும் அவற்றைக் கூறாது, ஆசாரியநாமத்தை அதிட்டித்துடைய அதிதிவ்யநாமத்தால் விதந்துகூறினர். வேதாந்தபட்சம் சிவவிஷ்ணுக்களுக்குப் பேதமின்மை யுடையதாகலின் சங்கராசாரியர் விஷ்ணுநாமாங்கிதத்தால் கூறினர்.

> "சுந்தரர்க்குங்குந்திசுதர்க்குந்துணிவுடனைப்
> பைந்தொடிபால்வேந்தர்பாற்பைம்பொனடி-சொந்திடவே
> அன்றுதூதானரவர்பாலடியேற்கா
> வின்றுநீதூதாயெழுந்தருளாய்."

என்றுகூறிய தத்துவராயர் திருவாக்கானும் அபேதம்வெளிப்பட்டதென்க. இந்நியாயங்களால் சங்கராசாரியர் வைஷ்ணவராய்த் திருந்தப்பட்டாரென்னும் வீண்வாதம பாழாகிவிட்டதென்க. கீதாஸஹஸ்ர நாமங்கள் அவ்வாறேழுந்தனவாகலின் "தத்வவிவோகோவிஷ்ணுபுராணத்" என்றுகூறியதும் அத்வைதபட்சமென்பது சொல்லாமேயமையும். இதனால் பாஞ்சராத்திராகம சித்தமானவிஷ்ணு தத்துவமன்றென்பது கருத்தாமென்க. இதுநிற்க "ஸஜ்ஜநஸங்கம்" என்றுகூறியது அரிபக்தர்களையென்று தன்னைப்போல் சூடுண்டுதிரியுஞ்சோம்பர்களாக மயங்கிக்கொண்டனன். சூடுண்டு மண்பூசியவர்களைக் கண்டால் உடனே ஸ்நானஞ்செய்து பிரணவோச்சாரணையால் அத்தோஷத்தைப் பரிகரித்துக்கொள்ளும்படி சங்கரவிஜயமாதி கிரந்தங்களில் கூறியிருத்தலால் அதுபொருந்தாதென்க.

அதுமட்டோ, வேதங்களில் நாலுவாக்கியங்கள் மஹாவாக்கியங்களென்று கூறி, அவைகள் முறையே "ஸர்வம்கல்விதம்ப்ரம்ஹ" என்றும், "தத்வமஸி," என்றும், "அஹம்ப்ரம்ஹாஸ்மி," என்றும், "ப்ரம்ஹவேதப்ரம்ஹைவபவதி" என்றும்வரும் வாக்கியங்களாகத் துணிந்து, அவற்றை அத்வைதசித்தாந்தத்திற்கு மாறாகக்கண்டிக்கப் புகுந்தனன். என்ன அறியாமை! வைதிகர்கள் பார்த்தால் நகைப்பார்களே என்று நாணுதஜந்மம் சீச்சீ வெகு அல்பம்.!! இவ்வசடனும் ஒருநூலாசிரியனாகி மதஸ்தாபனஞ்செய்வதும், அம்மூடசிரோமணியை மற்றை மூடர்கள் வியந்துமகிழ்வதும் ஆச்சரியம் ஆச்சரி

யம்! மஹாவாக்கியங்கள் நாலுவேதங்களினும் நாலுவாக்கியங்களாக "அஹம்ப்ரம்ஹாஸ்மி" என்று தன்மைவாக்கியமாகவும், "தத்வமஸி" என்று முன்னிலைவாக்கியமாகவும், "அயமாத்மாப்ரஹ்மா" என்று படர்க்கை வாக்கியமாகவும், "ப்ரஜ்ஞானம்ப்ரஹ்மா" என்று பொதுவாக்கியமாகவும் உண்மையையுணர்த்துமாகவும் இவ்வுண்மையை யறியாமல் எல்லாந்தெரிந்தவனைப்போல ஏடுகொண்டது மனஞ்சென்றது என்று எழுதிவிடுத்த அவனேமைமதிக்கு விசனப்படத்தக்கதாயிருக்கின்றது.

மேற்கூறிப்போந்த நியாயங்களால் ஒன்றுந்தெரியாதவனும் மோகநூல்வலையில் முடங்கிக்கிடக்கும் மூடசிரோமணியாகிய அம்முடிச்சூர்முதலி எழுதிவிட்ட பாழ்வாசகம் பாழாகிவிட்டதாகலின், சங்கராசாரியர் வைஷ்ணவராய்த் திருந்தப்பட்டாரென்பது ஒருவாற்றானும் பொருந்தாதென்க. இதனால் யாம்மேற்கூறிய நியாயப்படி சங்கராசாரியர் சுத்தசைவராயினரென்பதே யினிது பெறப்படும்.

இதுநிற்க அம்முடிச்சூர்முதலி இன்னுஞ்சிலவிஷயங்களைவெகு துஷ்டத்தனமாய் அனேகவிடங்களில் எழுதியிருக்கின்றானாகையால், அவற்றை யிடம்வந்துழியெடுத்துக் காட்டிக் கண்டிப்போமாக.

இங்ஙனநிற்க அவ்வழுவாசகபயிறலில் சங்கராசாரியரால்கண்டிக்கப்பட்ட ஆகமங்களின்கருத்தையே ஆதாரமாகக்கொண்டு சமயகுரவர்நால்வருந்தங்கணூல்களில் விஷ்ணுவையிகழ்ந்திருக்கின்றனரென்று கண்ணீர்விட்டழுதார். சங்கராசாரியர் ஆகமங்களைக் கண்டித்தாரெனனும் வெறுங்கதையை மேலே விளக்கினேமாகையால், சித்தசமாதானத்தோடு பின்வருவனவற்றையுஞ் சிந்திப்பாராக.

> "பிரமனரியென்றிருவருந்தம் பேதமையாற்
> பரமமியாம்பரமென்றவர்கள்பதைப்பொடுங்க
> வாஞரழலுருவாயங்கே யளவிறந்து
> பரமாகிநின்றவா தோணோக்கமாடாமோ."

என்றற்றொடக்கத்தனவே சமயகுரவர்கள் இகழ்ந்து கூறியவைகளாக மயங்கிக்கிடக்கும் பேதைகள் சங்கராசாரியர் கூறிய சிவானந்தலஹரியில் "பாணத்வ ம்வ்ருஷபத்வமர்த்தவபுஷாபார்யாத்வ

மார்யாபதே கோணீத்வம்சகிதாம்நதங்கவஹதாசேத்யாதிநபம்தேோ த்வந்பாதேநயநார்ப்பணஞ்சக்நதவாந்த்வத்தேஹபாகோஹரீபூஜ்யாத் பூஜ்யதரஸ்ஸ்ரவநஹிசேத்கோவாததந்யோதிக:" என்னும் வாக்கியத்தால் சிவபெருமானது திருவடியைத் தேடும்பொருட்டு விஷ்ணுபன்றியாய்ப் பிறந்தாரென்னு முண்மைக் கென்செயவல்லார்? அதுமட்டோ? சிவபெருமானுக்கு பாணமாகவும், அவர் ஏறும் எருதாகவும், அவரைப்பூசிக்கும் அர்ச்சகனாகவும், அவர்க்குப்பெண்டீராகவும், அவருடைய நிருத்தத்தில் மத்தளசேவை செய்வோனாகவும் அன்புபாராட்டியுய்ந்த பெரியவனென்று விஷ்ணுவைக்கூறியதெந்த ஆதரவுகொண்டு? அன்றியும் சௌந்தரியலஹரியில் "விரிஞ்சிஃ பஞ்சத்வம் பரஜதிஹரிநாப்நோதிவிரதிம் விநாசங்கீநா சோபஜதி தநதோயாதிநிதநம் விதந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலதித்ருசாம்மஹா ஸம்ஹாரேஸ்மிந் விஹரதி பதித்வத்பதிரஸௌ" என்னும் வாக்கியத்தால் பிரமன், விஷ்ணு, இந்திரன், இயமன், குபேரன் முதலாயுள்ள அஷ்டதிக்குப்பாலகர் நாசத்தை யடைந்தகாலத்தும் உன்னுடைய நாயகராகிய ஸ்ரீருத்ரபகவான் நித்தியரா யழிவின்றி யிருப்பாரென்று கூறிய தெந்த ஆதரவுகொண்டு? பைப்பலாதத்தில் "ஸ ஏகோருத்ரோத்யேயஸ்ஸர்வேஷாம்ஸர்வஸித்தயே யோப்ரஹம்ணஃபஞ்சமவக்த்ரஹரதாதஸ்து" என்றும், "யோலீலயைவத்ரிபுரம்ததாஹா விஷ்ணும்சல்யம் ஸோம மக்நிஞ்ச பாணம் ஸர்வேதேவாஃ பசுதாமாபுர்யஸ்யதஸ்து" என்றும், "யோவிஷ்ணுநேத்ரார்ச்சிதபாதபத்மஸ்தஸ்மைததௌ சக்ரமதீவஹ்ருஷ்டஃ விஷ்ணோஃ கலாயாமவதீர்ணதேஹச்சிச்சேத சூலேநஜநாந்தகாலேதஸ்து" என்றும்வரும் வாக்கியங்களால் சமயாசாரியர்களும் சங்கராசாரியருங் கூறிய வாக்கியங்கள் உபநிஷத் பிரதிபாதகமென்று நாட்டப்பட்ட தாகையால், சமயாசாரியர்க ளிகழ்ந்துகூறினாரென்னு மிழிபுரையேலாதென்க. வேதசிவாகமங்க ளிரண்டு மொரேயுண்மையுடையனவாகலின் அவற்றை ஓதாமலுணரப்பெற்ற ஸ்ரீஜ்ஞாநசம்பந்தமூர்த்திகள் முதலிய சமயகுரவர்கள் தேவாரப்பதிகங்களில்விதந்துகூறினர். அவ்வுண்மையினையேசங்கராசாரியருமுடையவராகலின், அவ்வாறு தாமும்விதந்துகூறினர். சிவாகமங்களை விருத்தமெனக் கொண்டவராயின், சைவாசாரதுல்யராய்விளங்கியிருந்த ஸ்ரீஜ்ஞானசம்பந்தமூர்த்திகளை "தவஸ்தந்யம்மந்யேதரணிதரகந்யேஹ்ருதயதஃ பயஃ பாராவாரம்பரிவஹதிஸாரஸ்வதமிதி தயாவத்யாதத்தம்த்ரவிடசிசு ராஸ்வாத்யதவயத்கவீநாம்ப்ரௌடாநாமஜநிகமநீயஃ கவயதா" என்றுசௌந்தரியலஹரில் தேவியினுடைய திரு

மூலைப்பாலுண்டு உண்மைஞானம்பெற்றவரென்றுபுகழ்ந்து கூறுவ தெங்ஙனம்? இதனால் அவர் சிவாகமங்களைநிந்தித்தாரென்னும் நிந்தாவசனம் நிஸ்புருஹமென்க.

"வேதநெறிதழைத்தோங்கமிகுசைவத்துறைவிளங்க
பூதபரம்பரைபொலியப் புனிதவாய்மலர்ந்தழுத
சீதவளவயற்புகலித்திருஞானசம்பந்தர்
பாதமலர்தலைக்கொண்டு திருத்தொண்டுபரவுவாம்"

என்னும் பெரியபுராணத் திருவிருத்தத்தால் வைதிகநெறியும் சைவநெறியும் ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திகளுக்கு உரைக்கப்பட்டது. இதனால் சைவம் வேதசிவாகமங்களை அங்கமாகவுடையதென்பது நாட்டப்பட்டது. இங்ஙனநிற்க,

"தாழிளங்காவிரிவடகரையடைகுரங்காடுதுறை
போழிளமதிபொதிபுரிதருசடைமுடிப்புண்ணியனைக்
காழியானருமறைஞானசம்பந்தன் கருதுபாடல்
கோழையாயழைக்கினுங்கூடுவார் வானுலகினூடே"

என்று ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திகள் அருளிய தேவாரத்திருக்கடைக்காப்பில் தமது வாக்கியத்தில் அன்புடையார் உய்யுநெறி கூறப்பட்டது. "கோழையாயழைக்கினும்" என்று எளிமைதோன்ற அனுக்கிரகித்தனராகவும் சங்கராசாரியர் மெய்யன்போடும்வாழ்த்திக் கூறினாராகலின், சிவஞானவின்பஞ்சேரப்பெற்றவரென்பதேமேலோர் துணிபென்க. எங்கள் ஞானசம்பந்தமூர்த்திகளருளிய அற்புதவாக்கியத் துண்மையைக் காஞ்சிமான்மியத்து இருபத்துநான்காம் அத்தியாயத்தில் விஷ்ணுவைநோக்கி சிவபெருமான் வெளிப்பட்டுக் கலியுகத்திலே சீர்காழியிற் கௌணியர்கோத்திரத்தி லவதரிக்கும் ஞானசம்பந்தனுடைய தமிழ்ப்பதிகத்தினாலே நமது சாரூப்பியம் பெறக்கடவாயென்று திருவாய்மலர்ந்தருளினரென்றும், அப்படியே நிகழ்ந்ததென்றுங் கூறியுள்ள, வாக்கிய விசிட்டத்தினாலுங் கண்டுணர்க.

ஆயின், சங்கராசாரியர் தாம்செய்த பாஷியத்தில் பாசுபதமுதலியவற்றை நிந்தித்திருப்ப தென்னையெனின், அங்ஙனஞ்செய்தது ஸ்ரீநீலகண்ட சிவாசாரியரனுக்கிரகத்தைப் பெறுவதன்முன்னாகலின் அது பிரமாணமல்லவென்க.

அன்றியும், சங்கராசாரியர் ஒருகாலத்தில் தமது மாணாக்கர்கள் புடைசூழக் காஞ்சிக் கெழுந்தருளியபோது சமஸ்தவேதவேதாந்தங்களையு முழுதுணர்ந்த ஆதிசைவமூர்த்திகளனைவர் ஆயிரக்கால் மண்டபத்தில் சிவாகமபடனஞ் செய்துக்கொண்டிருந்தகாலை இவரைக் கண்டமாத்திரத்தில் படனத்தைநிறுத்திவிட்டு மௌனமாயிருந்தனரென்றும், சங்கராசாரியர் சிவாசாரியர்களைநோக்கி சிவாகமபடனஞ்செய்யும்படிக் கேட்டுக்கொண்டன ரென்றும், சிவாசாரியர்கள்நீர் சிவதீக்ஷையில்லாதவ ராகையால் உமக்குணர்த்தலங்களுக்குச் சிவாக்ஞையில்லையென்று மறுத்துரைத்தனரென்றும் பரிபாகத்தாழ்ச்சியால அவ்வுண்மைவாசகத்தை மாறாகக்கொண்டு அக்காலத்தில் தமக்கிருந்த ராஜபலத்தால சிவாசாரியர்களையும் சிவாகமங்களையும் நிஷேதங்கூறித தமயாற்கூடிய விடங்களில் சிவாலய பூசைக்கு வைதிகரை சேர்த்தும், ஆகமநிந்தைகூறியும் ஒழுகிவருங் காலத்தில ஸ்ரீநீலகண்ட சிவாசாரியமூர்த்திகள் தமது பிரபாவ விசேஷத்தால அவ்வல்லலெல்லாந் தொலைந்து சிவானுபவச் செல்வராய் விளங்கினரென்றும், ஸ்ரீநீலகண்டவிஜயத்தில் தெளிவுபெறக் கூறுமாகையால் முன்னெடுபின் முரணுமைவெளிப்படுமென்க. அன்றியும் “பிரபஞ்சசாரம்” என்னும்பெயரால் அவரியற்றிய மாந்திரிக நிபந்தன கிரந்தத்தில் திரியம்பக ஷடக்ஷரீ பிரபுருதி மஹாமந்திரங்களுக்கு மந்திராநுஷ்டானபுரச்சரணாதி காரியங்களை ஆகமவசனங்களால் நிரணயித்திருக்கின்றன ராகலானும உண்மை வெளிப்படுமென்க. இந்த நுட்பங்களறியாது சிவாகமங்களை நிந்தித்துவரும் பாதகர் எக்கதியடைவாரோ அறிகிலம்! “சிவேசிவாகமேசைவதர்மேசிவபரிக்ரஹே விபரீதாபவேத்புத்திர்யஸ்யஸ்யாத்ஸபஹிர்நரஃ” என்கிறஸ்காந்தவசனத்தால் சிவபெருமானிடத்தும, சிவாகமங்களிலும், விபூதியுருத்திராக்கதாரணமாதி சிவதருமங்களிலும், சிவபெருமானால் ஸ்வீகரிக்கப்படும நின்மாலியமாகிய கந்தமால்ய பாதோதக பிரசாதங்களிலும எவனுடையபுத்தி விபரீதத்தையடையுமோ அவன்பதிதன் என்றுதுணிவுபெறக் கூறுமாற்றானும், “சிவநிந்தாபரோபூத்வா.சிவசாஸ்த்ரவிநிந்தகஃ தஸ்யநோநிஷ்க்ருதிர்த்ருஷ்டாக்வாபிசாஸ்த்ரேபிகாசந” என்கிற சிவதர்மோத்தர வசனத்தால் சிவநிந்தாபரனாய் சிவாகமங்களை எவன்தூஷிப்பானோ அவனுக்கு சாஸ்திரங்களில் பிராயச்சித்தம் நிர்ணயித்துக்கூறவில்லை என்பதுகொண்டு பிரமஹத்தியாதி மகாபாதகங்கள்செய்த துர்ஜனனுக்கு செப்பப்படும் பர

ணுந்தபிராயச்சித்தமே சிவலிங்கதகனுக்குஞ் செய்யவுரிமையென்னு முண்மை வெளிப்படுமாற்றானும் இப்பதிதர்களே சைவர்களாவார் களவினுஞ் சிந்தியாதொழிவாராக. "அரனைப்பழித்துத் திரிபவரை ப்பாராதே" என்றருளிய சந்தானகுரவர் வாக்கியத்தானுமறிக.

ஸ்ரீமத் அப்பய்யதீக்ஷிதஸ்வாமிகள் இவ்வுண்மைகளையெல்லாம் ஒருங்குணர்ந்த வுத்தமபரிபாகவிசேஷத்தால் சைவாசாரங்கொண டொழுகுமுண்மைகண்டு அகோர சிவாசாரியசுவாமிகள் அவர்க்கு சிவதீக்ஷை செய்து சிவபூசை யெழுந்தருளப்பண்ணிக் கொடுத்துத தமது மாணாக்கரு ளொருவராகச்சேர்த்துக் கொண்டனரென்றும், தீக்ஷிதரவர்கள் ஆசாரியாக்ஞாவழித்தாகவே "சிவார்க்கமணிதீபிகை" என்னும்வியாக்கியை ஸ்ரீநீலகண்டபாஷ்யத்திற்குச் செய்தன ரென்றும் வழங்கிவரும் சற்சாம்பிரதாயவுண்மையை யினிது தெளிந்துய்வாராக. ஸ்ரீபாஷ்யத்திற்கு பிரஹ்மவித்யாத்வரர்முதலிய பூர்வாசாரியர்களால்தர்ப்பணம், தாராவளி, ஸ்ரீகண்டபாஷ்ய சமர்த்தநம் என்கிற வியாக்கியைகளும் செய்யப் பட்டுள்ளவாகலின் பரிபாகிகள் கண்டுணர்வாராக.

இந்த நியாயங்களால் சங்கராசாரியர்செய்த பாஷியம் சிவஞானிகளால் ஆதரிக்கற்பாலதன்றெனக. ஆகவே, ஸ்ரீநீலகண்டபாஷ்யமே உரிமையென்பது நாட்டப்பட்டது.

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர்தம்மு முனிமொழியுங் - கோவைத்
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்றருளிய ஔவையார் திருவாக்கானும், முனிமொழியென்னும் வியாசசூத்திரத் துண்மைவெளிப்பட்ட தாகையால் இதனை மாயாவாத முதலியனவாக மயங்கிக்கோடலும், சிவாகமங்கள் அநாதரணியமென்று பிதற்றுவதும் நிரஸ்தமாயிற்றெனக.

இங்ஙனநிற்க, அத்துஷ்டவாசகத்தில் சமயகுரவர் நால்வர், பட்டினத்தடிகள் முதலியவர்கள் யாருமில்லாதவூரில் அசுவமேதம் செய்தவர்களென்றும், எந்த வைஷ்ணவர்களோடாவ தெதிர்த்து வாதித்துத் தங்கள்மத தாபகஞ் செய்ததுண்டாவென்றும் வினவிய துதார். உண்டிவெறுத்தல், உயிர்க்கிதஞ்செய்தல்முதலிய தவங்க

ளைக் கைவிட்டுப் பேருண்டி, பெருந்தூக்கம், கடுங்கோபம், வீண்சண்டை முதலியவற்றையே தவமாய்க்கொண்டொழுகும் வைணவப்பேய்களுக்கே தன்வலிபிறன்வலியறியாது மேல்விழுந்து அறைச்சலுண்டுபோவது சுபாவமொழிய வாய்மை, தவம், இரக்கமுதலிய அருட்செல்வப்பேற்றினராகிய சிவஞானிகள் சமயிகளை யெதிரிட்டு வாதிக்க வுடன்படாரென்க.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

"விரிவிலாவறிவினோர்கள் வேறொருசமயஞ்செய்தே
யெரிவினாற்சொன்னாரேனு மெம்பிராற்கேற்றதாகும்
பரிவினாற்பெரியோரேத்தும் பெருவேளூர்பற்றினானை
மருவிநான்வாழ்த்தியுய்யும் வகையது நினைக்கின்றேனே

## பட்டினத்தடிகள்.

"ஒன்றென்றிருதெய்வமுண்டென் றிருவுயர்செல்வமெல்லா
மன்றென்றிருபசித்தோர் முகம்பார்நல்லறமுநட்பு
நன்றென்றிருநடுநீங்காமலேநமக்கிட்டபடி
யென்றென்றிருமனமே யுனக்கேயுபதேசமிதே."

என்றற்றொடக்கத்து வாக்கியங்களே சான்றாமென்க.

இவ்வுண்மையநுபூதியுடையார் வைணவப்பேய்களையெதிர்த்து வாய்வம்பாடுதற் கெங்ஙனமிசைவார்? ஆகவே, அகங்கரித்து மேல்வந்து விழுஞ்சமயப்பேய்கள் அறைச்சலுண்டோடத் திருவுள்ளமிசைவரென்க. இங்ஙனமாகவும் சமயகுரவர், பட்டினத்தடிகள். தாயுமானசுவாமிகள் முதலிய சிவஞானச்செல்வர்பால் எந்தவைஷ்ணவர்களும் வந்த தில்லையாமே! இவ்வவதாரமூர்த்திகள் காலத்தில் மற்றைப்பாழ்ஞ் சமயங்கள் சூரியசந்நிதிப்பட்ட மின்மினியாமென வொளிமழுங்கிக்கிடக்கவும், சிவாநுபவச்செல்வர்களாகிய எம்பெருமக்களை யாவரெதிர்க்க வல்லார்? சைந பௌத்தாதிகளாலேயே நசுக்குண்டுவைணவாதிசமயங்கள் சௌரூபநாசமடைந்திருக்கவும், எந்தவைஷ்ணவர்களோடாவ தெதிர்த்ததுண்டாவென்று கேட்பது என்ன மடமை? அன்றியும் தங்கள் மததாபகஞ்செய்த துண்டாவென்றும் புலம்பினர். மதத்தைத் தாபித்தலென்றாலென்னை? அல்லாததை ஆமென்றுசாதித்துக்கூறுவது தாபிதமாகுமன்றி, உள்ளதை உள்ளது என்று கூறுவதுதாபிதமாகாதென்க. உள்ளது கெடுமா

ளால் அதனை மீண்டுஞ்சாதித்தலுக்குத் தாபிதமாமேயெனின் உள் ளதியாண்டுங்கெடாதாகவும், ஆண்டுந்தாபிதமமையாதென்க. உள் ளது உள்ளதேயாகலின் சித்தாந்தமென்றமையும்; அஃதும் அநா திசித்தமென்க.

## தாயுமானசுவாமிகள்.

"இயல்பென்றுந்திரியாமலியமமாதி
யெண்குணமுங்காட்டியன்பாலின்பமாகிப்
பயனருளப் பொருள்கள்பரிவாரமாகிப்
பண்புறவுசெளபானபட்சங்காட்டி
மயலறுமந்திரஞ்சிட்சைசோதிடாதி
மற்றங்கநூல்வணங்கமௌனமோலி
யயர்வறசெந்நியில்வைத்துராஜாங்கத்தி
லமர்ந்ததுவைதிகசைவமழகிதந்தோ."

"அந்தோவீததிசயமிச்சமயம்போலின்
றறிஞரெலாநடுவெறியவணிமாவாதி
வந்தாடித்திரிபவர்க்கும்பேசாமோனம்
வைத்திருந்தமாதவர்க்குமற்றுமுற்று
மிந்திராதிபோகநலம்பெற்றபேர்க்கு
மிதுவன்றித்தாயகம்வேறில்லையில்லை
சந்தானகற்பகம்போலருளைக்காட்டத்
தக்கநெறியிந்நெறியேதான்சந்மார்க்கம்."

என்றருளிய வுண்மையால் அநாதிசித்தமாகிய சற்சமயத்திய ல்பு இனிது பெறப்படும். இதனையறியாது பிதற்றுவது முழுமூடத் தன்மையென்க.

இங்ஙனநிற்க, திருமங்கை மன்னன் ஞானசம்பந்தரையெதிர் த்து அவர்கையில் தாங்கியிருந்தவேலைப் பறித்துக்கொண்டதாய் சில மூடர் பிதற்றுவர். நல்லழகிது! உமாதேவியார்கொடுத்தருளிய திருமுலைப்பாலுண்டு சமஸ்தவேதங்களையும் ஓதாதுணர்ந்த எங்கள் சுவாமிகளை மறவர் குலத்துவந்த திருமங்கைமன்னனெதிர்த்தது நன்றுநன்று! ஞானசம்பந்தரை யெதிர்த்தாரெனவே, எதிர்த்தவர் அஞ்ஞானசம்பந்த ரென்பது தானேபோதரும். ஞானசம்பந்த ரென்பது காரணங்கருதியவழியானேவந்த அற்புதத்திருநாமமாகலி னென்க. இங்ஙனமாகவும், மாலடியாராகிய திருமங்கைமன்னர்க்கு அஞ்ஞானசம்பந்தரென்னுந் தீட்சாநாமம் இப்பெருப்பாதகர் இட்

டுத்தொலைக்க எத்தனைகாலம் தவஞ்செய்தனரோ அறிந்திலம். இது நிற்க, எங்கள் சுவாமிகள்கரத்தில் வேலேது? அவர் மாந்மியங்களைக் கூறுந் திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி, பெரியபுராணம், காஞ்சிமாந்மியம், சீகாழிமாந்மியம், ஆலாசியமாந்மியம், உபமந்யுபக்தவிலாசம், அகஸ்தியபக்தவிலாசம், சௌந்தரியலஹரி, சிவரஹஸ்ய முதலிய பிரமாணங்களால் உணர்த்தப்படாத வேலை இப்பேதைகள் கண்டுபிடித்தது அருமை அருமை. அவர்பால் வேலைப்பிடுங்கிக்கொண்ட புதுமை முயற்கொம்புபறித்துவந்த மூடக்கதையி லெண்ணப்படுமென்க. ஆகவே, இத்திருமங்கைமன்னர் எங்கள் சுவாமிகள் காலத்தவரல்லரென்றும், அவர் விஷயமாய்ப் பிதற்றிவரும் பெருங்கேடானகதைகள் மேலோர்களால் பழிக்கப் படுமென்றும் நிச்சயிக்கப்பட்டது. புறச்சமயம் ஆறினுளொன்றாகிய பாஞ்சராத்திரமார்க்கம்பற்றி யொழுகும் வைணவபபேய்களை சிவஞானிகள் பொருட்படுத்தாரென்க. "மாலயனையிந் திரனைய்வாழுவதாய்மானுவதாஞ்-சாலமயல்பார்த்துத் தலையசைப்பர்." என்னும உண்மையநுபூதியுடையார் இப்பேதைகளை யெதிரிடுவதெங்ஙனம்?

இங்ஙனநிற்க, இவர்களாழ்வார்கள் சிவவாக்கியரைத்திருத்தியும், சிவனது நெருப்புக்கண்ணை பங்கப்படுத்தியும், பாண்டியன் சபையில் கிழியறுத்தும், மதுரைச்சங்கப்புலவரைததாழ்த்தியும், சோழன்முதலியவர்களைவென்று வைஷ்ணவத்தை நாட்டியும் தங்கள்மத சித்தாந்தஞ் செய்தனர்களென்று இரண்டுசாமங் குரைத்தார். இவற்றை முறையேவிவகரிக்கு மிடத்து பரசிவனருளால் "சிவசிவ" என்றற்றொடக்கத்து ஸ்ரீ மூலமந்திரத்தை யுச்சரிததுக்கொண்டே அவதரித்தவுண்மையால் "சிவவாக்கியர்" என்று காரணங்கருதிய வழியானேவந்த அற்புதத்திருநாமங்கொண்டு மெய்ஞ்ஞானிகளெல்லாம் அவ்வன்பரைத் துதித்திருப்பாராகவும், முழுமூடசிரோமணிகளாகிய இப்பேதைகள் மாறகப் புலம்புவதுகொண்டு எமக்கொரு தாழ்வுமின்றென்க. "கண்டதுபொய்யென்றகண்டாகாரசிவமெய்யெனவே விண்டசிவவாக்கியர்தாண் மேவுநாளெந்நாளோ" என்றருளிய தாயுமான சுவாமிகள் திருவாக்கே சான்றுமென்க.

சிவவாக்கியம்.

"குண்டலங்கள்பூண்டுநீர்குளங்கடோறுமூழ்குவீர்
மண்டுகங்கள்போலநீர்மனத்துமாசறுக்கிலீர்

மண்டையேந்துகையனை மனத்திருத்தகயல்லிரேல்
பண்டைமாலயன்றொழப்பணிந்துவாழலாகுமே."

என்று உண்மையுணர்த்தும் எமது சுவாமிகள் வேறுசமயத்தை அடைந்தாரென்னும் பித்துரையை யாவரங்கீகரிப்பார்? இதனையதிகமாகவிரித்தெழுத வெமக்குடன் பாடில்லையாகலின் இவ்வளவில் விட்டனம்.

இதுநிற்க, ஓராழ்வார் சிவனது நெருப்புக்கண்ணைப்பங்கப்படுத்தினரென்றார். அதனை விசாரிக்குமிடத்து அவ்வாழ்வார் தனது காலிலிருந்த கண்ணால் சிவனைவென்றாரென்று அவர்கள்சுவடியில் எழுதியிருக்கின்றது. அவ்வாழ்வார்க்குக் காலிலே கண்வந்ததெப்படி? காலிலே கண்ணொன்றுபெற்றவராகவும், சூத்திலே வாயொன்றுடையவராவர்போலும். சமஸ்தான்மாக்களும் நெற்றியிலே கண்படைத்தவராகவும்,அவ்வாழ்வார்காலிலேகண்பெற்றதுகலியின்புதுமையென்க. உத்தமாங்கமல்லாவிடத்துக் கண்பெற்றதனால் இந்திரனைப்போல் சாபத்தால் விகாரப்பட்டவரென்றமையும். இவ்வவலட்சணமுடையார் சிவனை வென்றாரென்பது முழு மூடக்கதையாமென்க. "யோவிஸ்புலிங்கேநலலாடஜேநஸர்வம்ஜகத்பஸ்மஸாத்கரோதிபுநச்சஸ்ருஷ்ட்வாபுநரப்யரக்ஷதேவம்ஸ்வதந்த்ரஂப்ரகடீகரோதி"என்றுபைப்பலாதத்திற் கூறியவாறு சமஸ்தாண்ட சராசரங்களையும் நெற்றிக்கண்பொறியொன்றினால் சுட்டெரிக்கவல்லவராகிய பரசிவப்பிரபுவை வினைவயப்பட்டுக் கிருமிகீடங்களாய்ப் பிறந்திறந்துழலுமோரேழை வெல்லுமென்பது வேதமிருந்தவூரில் குடியிருந்தறியாத விழலர் கூற்றாமென்க.

இதுநிற்க, ஓராழ்வார் பாண்டியன் சபையில் கிழியறுத்தாரென்றார். அவர்கிழியறுத்தபுதுமை யிங்கேகிழியுண்டதென்க. எங்ஙனமெனின், அவரைக் கிழியறுக்கும்படி எதிரிட்டு வாதித்த சமயிகளொருவருமில்லையாகவும்,எங்களாழ்வார் கிழியறுத்தாரென்பது யாரைநோக்கி.?

ஓரரசன் தனது அற்பபரிபாகத்தளவாய் விரும்பியதற்கேற்பச் சென்று அவனால்கட்டிவைத்திருந்த கிழியையறுத்தகற்பனைகதையை அவர்கள்சுவடிகளாலேயே அறியக்கூடுமாகவும், அதனால்சிவோத்கர்ஷந் தாழ்க்குமென்பது என்ன அறியாமை? உள்ளபடியே அவர் பரத்துவஸ்தாபநஞ் செய்திருப்பாராயின், எங்கள் சொக்கலிங்க

மூர்த்தி அம்மதுரையில் இன்னுமெழுந்தருளியிருக்க வைப்பரோ? அன்றே வேரைக்கெல்லிவெந்நீர்விட்டிருக்கமாட்டார்களா? ஒன்றுமில்லாதகாலத்திலேயே அவர்கட் கொவ்வோர்காலத் துண்டாயிருந்த அதிகாரத்தினால் எமது அருட்பெருஞ்செல்வமாகிய முருகக்கடவுள் வரைப்பாகியதிருவேங்கடம், சோலைமலைமுதலிய தலங்களையெல்லாம் புரட்டி அவநெறியிற் புலம்பித்திரியும்பேதைகள் தம்பால் ஏதாவது உண்மை கண்டிருப்பார்களாயின் சும்மா விருப்பார்களா? இதனால் அநாதிதொட்டு இதுகாறுஞ் சிவப்பிரகாசங்கமழ்ந்துகொண்டினிது விளங்கும் அம்மதுரையில் வைஷ்ணவமொருகாலத்தில் ஓங்கியதென்னும் ஓந்திந்தலை யெடுப்புநசுக்கப்பட்டதென்க.

இதுநிற்க, ஓராழ்வார் தமது பாசுரங்களால் சங்கத்தாரைக் கீழ்ப்படுத்தினரென்றார். இது நுழைந்தான்கீழ் நுழைந்தகதையாமென்க. சிவாநுக்ஞைகொண்டு திருவள்ளுவர்-ஔவை-இடைக்காடராகிய இவர்கடாமே சங்கத்தாரைவென்று அருட்பிரகாசம்பூண்டுலவியமாந்மியம் எச்சமயிகளுங் கூறுநிற்கவும், யாருமில்லாதவூரென்று கருதி அசுவமேதஞ்செய்ய வந்தனர்போலும். "பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்" என்று திருத்தொண்டத்தொகையில் எடுத்துக்கூறப்பெற்ற பெருஞ்செல்வர்களை இவர்களாழ்வார்வென்றது இராமனை யிராவணன்வென்றதுபோலுமென்க.

இதுநிற்க ஓராழ்வார் சோழனையெதிர்த்து சைவத்தைவென்றாரென்றார். இதனை விசாரிக்குமிடத்துசோழராசன் "சிவாத்பரதரம் நாஸ்தி" என்று எல்லாரிடத்துங் கையொப்பம்வாங்கி வருங்காலத்தில் நாலூரான்கண்டு எம்பெருமானார் கையொப்பமிட்டாலன்றோ பிரயோசனமுண்டாவது, மற்றவர்களெழுதினாலென்ன பயன் என்று சொன்னதாகவும், அதுகேட்ட அரசன் உடையவரை அழைத்துவரும்படிச் சிலரையனுப்பினதாகவும், கூரத்தாழ்வான் அரசன் வஞ்சகனென்றறிந்து தேவரீரெழுந்தருளுவது யுக்தமன்று, அடியேன்போய் வருகிறேனென்று உடையவருடைய திரிதண்டகாஷாயாதிகளைத் தரித்துக்கொண்டு பெரியநம்பிமுதலியவர்களோடு இராஜசபைக்குப் போனானென்றும், பின்பு உடையவர்சகோதரிகளின் புத்திரர்களாகிய முதலியாண்டான்-நடாதூராழ்வான் முதலியவர்கள் தேவரீரிங்கிருக்க வொண்ணாதென்று, உடையவருக்கு வெள்ளைசாத்தி மேனாட்டுக்கெழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனார்களெ

ன்றும், முன்சென்றகூரத்தாழ்வான் சோழராஜன்சபையில் வித்துவான்கள் சொன்னகட்சிகளுக்கு உத்தரஞ்சொல்லிக் கண்டித்துவிட்டாராயினும், அரசன் பலாத்காரமாய் "சிவாத்பரதரம்நாஸ்தி" என்று கையொப்பம்வைக்கச்சொல்லி நிர்ப்பந்தித்ததின்மேல் "த்ரோணமஸ்திததஃ பரம்" என்று கையொப்பமிட்டாரென்றும், அதனால் அரசன் குபிதனாய் அவருக்கும் பெரியநம்பிகளுக்கும்நேத்திரோத்பாடனம் பண்ணுவித்தனனென்றும், பெரியநம்பிகள் திருநாட்டுக்கெழுந்தருளினாரென்றும், ஆழ்வார் நேத்திர முள்ளவர் போலவே கோயிலில் எழுந்தருளியிருந்தாரென்றும், இவைகளை யெல்லாம் உடையவரறிந்து மிகவுங்கிலேசித்துக் கூரத்தாழ்வானிருக்கப் பெற்றோமேயென்றுதேறிப் பெரியநம்பிக்கு ஸ்ரீசூர்ணபரிபாலனஞ்செய்து முடித்தாரென்றும் அவர்கள் வெளியிட்டிருக்கும் சுவடியினாலேயே தெளிவுபெறவிளங்கும்.

இதனை விசாரிக்குமிடத்து, உடையவரை அழைத்தபோது கூரத்தாழ்வான்சென்றதனாலுடையவரினும் இவர்க்காதிக்கம் அதிகரிக்கின்றது. அரசனையெதிர்ப்பது சொற்பகாரியமாகையால் ஆசிரியர்வேண்டுவதில்லையெனின், அவர்பூண்டிருந்த காஷாய திரிதண்டங்களைத்தாங்கிச்சென்றதென்னை? பொய்வேடங்கொண்டு சென்றதனால் தாமே அவ்வுடையவரென்று அரசனை வஞ்சிக்கப்புகுந்தாரென்பதுதானே போதரும். இங்ஙனமாகவும், அரசனைவஞ்சகனென்றது பெரும்பாவமென்க. ஆசாரிய பக்தியினால் அவரைநிறுத்திவிட்டுத்தாம்போயினரெனின், அரசனது ஆண்மைக்கு ஆசிரியரஞ்சினரென்பது சொல்லாமேயமையும். ஆசாரியருடைய மானத்தையும் பிராணத்தையுங்காப்பது விரதமாய்ச்சென்ற சிஷ்யர்களை அரசனுக்குக் காட்டிக்கொடுத்துவிட்டு ஓடிப்போயொளித்திருந்த ஆசாரியவைபவம் நன்று நன்று! காஷாயாதி சின்னங்களின்றி வெள்ளுடைதாங்கிச்சென்றதனால் வாரண்டுக்கொளித்தவைபவஞ் சொல்லவேண்டி வருகிறது. அரசனுக்குப்பயந்தோடிப் பதுங்கியிருந்த இவ்வதிசூரர் பன்னீராயிரஞ்சமணர்களோடு வாதித்து அவர்கள்காண ஆயிரம்பணமுடிகளுள்ள ஆதிசேடனாக எழுந்தருளியிருந்தாரென்றும் இரண்டுமுழநீளம் எழுதிவைத்திருக்கின்றது. ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திகள் சமணபௌத்தாதிகளைவென்று எண்ணாயிரம்பேரைக் கழுவேற்றிச் சைவப்பிரசாரஞ் செய்தனர் என்று ஸ்காந்தாதி பிரமாணங்களிற்கூறு முண்மையில் அசூயைகொண்டு கைகொண்

டது மனம்போனது காகிதஞ்சென்றது என்று நாலாயிரங்கூடச் சேர்த்துப் பன்னீராயிரஞ்சமணர்களை எங்கள் ஆழ்வார்வென்றாரென் றெழுதிக்கொண்டது கற்பனைவயத்ததென்று மேதாவியர் சிந்தியாமற்போகார். சமணபௌத்தாதிகளால் தேய்ப்புண்டுசொரூபநாசமாகிக்கிடந்த இவர்கள் சமயம் சைவத்தை அதிக்கிரமித்ததென்பது வீண்வழக்கென்க. அரசனைமாறுவேடத்தால் வஞ்சிக்கச் சென்றகூரத்தாழ்வான்கண்ணிழந்தபுதுமை காணப்பட்டது. உடன் சென்ற பெரியநம்பி பெரியவாளிடஞ்சேர்ந்தனன். ஆச்சரியம்! ஆச்சரியம்!! இங்ஙனநிற்க, “சிவாத்பரதரம்நாஸ்தி” என்று அரசன் கையொப்பம்வைக்கச் சொன்னகாலத்தில் சிவம் என்பது குறுணியென்று பொருள்கொண்டு குறுணிக்குமேல் பதக்கு பரமாகையால் “த்ரோணமஸ்திததஃபரம்” என்று விபரீதங்கொண்டெழுதினவர்க்குக் குறுணிக்குப்பொருள் சிவம் என்று வந்ததுபோல் பதக்குக்குப் பொருள் விஷ்ணுவென்று வந்திருக்கவேண்டுமே? துரோணமென்பது விஷ்ணுவை விளக்காதாகவும், அத்துரோணத்தைப் பரங்கூறிய தென்னமடமை? துரோணமே பரம்பொருளாகக்கொண்டவர்போலும். பதக்குக்குமேலே முக்குறுணி தூணிமுதலியவைகள் பரமாகுமே! அவைகட்கென்செயவல்லார்? இதுநிற்க, இராமாநுஜாசாரியர் தப்பிப்போய்விட்டது நல்லகாலம். அரசன்கையில் அவருமகப்பட்டிருப்பாராயின், சிஷ்யர்கள்பெற்றபேறு தாமும்பெறுவதிற் சந்தேகமிராது. பின் விளைவாகப்பாஞ்சராத்திரம் பரவி அப்பாழுஞ் சமயப்படுகுழியில் புன்மக்கள் வீழ்ந்தழியவரும் வினையிருப்பதால், சிஷ்யர்களுக்கு அரசனால்கிடைத்த சித்திமுத்திகள் தமக்குக்கிட்டாமற் போயிற்றென்க. இதனால் இவ்வற்பாதிகாரிகள் சைவத்தை வென்றாரென்பது பாழாகிவிட்டதென்க.

இனி சோழவிஜயத்தில் குலோத்துங்க சோழமஹாராஜன் திக்விஜயங்கொண் டெழுந்தருளி எல்லாமதங்களையும் வென்று “சிவாத்பரதரம்நாஸ்தி’ என்று கையொப்பம்வாங்கிக்கொண்டு வருகையில்இராமாநுஜாசாரியரென்பவர் அதிபிரபலியராய் வைஷ்ணவமத சித்தாந்தஞ் செய்துவருகின்றாரென்று கேள்வியுற்று அவரை அழைத்துவரும்படிச் சிலரை யனுப்புதலும், அவர் அரசனுடைய பேராற்றலைக் கேள்வியினாலுணர்ந்து ஒருவரோடுஞ் சொல்லாமல் தமது எதிவேஷத்தைமாற்றி வெள்ளுடைதாங்கி யிடம்பெயர்ந்தோடிப்போய் விட்டனரென்றும், எஞ்சிநின்றவர்களில் கூரத்தாழ்

வான் உடையவராகவும், பெரியநம்பி கூரத்தாழ்வானாகவும் பொய் வேடந்தாங்கிக்கொண்டு இராஜசபைக்குப் போனகாலத்தில் சதுர் வேதபாரகராகிய பிராமணோத்தமர்களும், திருநெறித் தமிழ்வேத முணர்ந்த சிவனடியார்களும்புடைசூழ இனிது வீற்றிருக்கும் அரசனுடைய அருட்கோலப்பொலிவைக்கண்டு நெஞ்சுலர்ந்து, முகம் புலர்ந்து நடுங்கிநிற்கையில் அரசன் அவர்களைநோக்கி, ஹரதத்தாசாரியசுவாமிகள் இருப்புப்படியேறிசாதித்த கட்சிகளைச்சொல்லி வாதித்தகாலையில் ஒன்றுஞ்சொல்லவகையறியாது மயங்கவும், அரசன் புன்னகைகொண்டு ஆயின் உங்களுடைய அபிமதமென்னை யென்று கேட்டகாலத்தில், அவ்விருவரும் பயந்தவர்களாய் நடித்து உமது கருத்தின்படிக் கையொப்பம்வைக்க இசைந்தோமென்று கூறி, அரசனால்கொடுக்கப்பெற்ற அத்திருமுகத்தைவாங்கி "த்ரோணமஸ்தி தத:பரம்"என்று விபரீதங்கொண் டெழுதினார்களென்றும், அதன்மேல் அரசன் கோபித்து "சிவநிந்தாகரம்த்ருஷ்ட்வாகாதயேத்த வாசபேதுதேசம்வாதத்பரித்யஜ்யகச்சேதந்யத்ரபுத்திமாந்"என்னும் பிரமாணப்படி இப்பதிதர்களைக்கொன்று விடுங்களென்று கொலைஞரை யழைத்து ஆக்ஞைவிதித்தனரென்றும், கூரத்தாழ்வான்பயந்து"அரசனே! எங்களை நிரபராதியாகக் கொள்ளும். நான் யதிராஜனல்லன்; இவர் கூரத்தாழ்வாரல்லர். எம்முடைய ஆசிரியராகிய உடையவர் உமது பேராற்றலுக்கஞ்சி ஓடிப்போய்விட்டபடியால் அவர்நாமத்தைக் காப்பாற்றும்படி நாங்கள்வந்தோம். எங்களைக் காப்பாற்று"மென்று கெஞ்சிக்கேட்கவும், அரசன் இரக்கமுற்று உங்களைக்கொல்ல ஒருவாறு இசைவில்லையாயினும், நீங்கள் சிவநிந்தகர்களா யிருப்பதுபற்றி ஒருவித சிட்சைக்குரியவர்க ளாவீர்களென்று கூறிக் கொலையாளிகளைநோக்கி, இவர்கள் கண்களைப்பிடுங்கிக் காட்டில்விட்டு வாருங்களென்றுவிதித்து, அவ்வாறே நடத்தினரென்றும் முறையேகூறி, எல்லாமதங்களையும்வென்று திருநீற்றுச் செல்வத்தை யுலகமெங்கும்பரவச்செய்த காரணம்பற்றி அவ்வரசப்பிரபுவைத் திருநீற்றுச் சோழமகாராஜ னென்றும் புகழ்ந்து கூறுமாக.

இவ்வுண்மையை மறைத்து வேறுவிதமாய் இவர்கள் கூறினுங் கூரத்தாழ்வான் கண்ணிழந்ததும், இவர்க்காசிரியராகிய உடையவர் காஷாயமிழந்ததும் பேசாது கூறினராகலின், இதனுண்மை இவ்வாறுமென்பது விவேகிகளறியாமற் போகார். அவ்வாழ்வார்கள் உற்ச

வத்தில் வெள்ளைசாத்து என்று நடந்துவருவதே அதற்குச் சான்றுமென்க. இதனை சிலர் கூரத்தாழ்வான் அரசனைப்பார்த்தகண்களால் ஆசிரியரைப் பார்க்கக்கூடாதென்று கர்ப்பூரக்கட்டியைக் கண்களிலொத்திக்கொண்டதால் கண்களவிந்தனவென்றும், சிலர் ஆழ்வார்தாமே கண்களைக் கையால் தோண்டியெடுத்து அரசன்மேலெறிதலும், அதனால் அரசனுக்கு சிலதீங்குகள் விளைந்தனவென்றும், சிலர் ஆழ்வார்களுடையகண்களை அரசனே களைந்துவிட்டனனென்றும் ஒன்றுக்கொன்றுமாறாக ஒருவர்சொன்னபடியொருவர் சொல்லாமல் குழறுபடையென்பது தோன்றப்பிதற்றுகின்றனர். அன்றியும் சோழமகாராஜனைக் கூரத்தாழ்வான்வாதித்து வென்றதாகவும் சிலபொய்யுரைகளைநிறைத்துக் "கூரேசவிஜயம்" என்றொருநூலையுங்கற்பித்து வெளியாக்கியிருக்கின்றனர். இந்தப்புரட்டெல்லாம் இனி யச்சிட்டு வெளியாக்கப்படும் சோழவிஜயத்தால் தொலையுமென்க. இதனால் சோழனை யிவர்களாழ்வார்கள் வென்ற பொய்க்கதை வெட்டவெளியாய் விட்டதாகையால் இனி பின்விஷயங்களை விசாரிப்போம்.

அரசனால் சிட்சிக்கப்பட்ட இருவருள் பெரியநம்பி யென்பவர் உடனே யிறந்துவிட்டதால் கூரத்தாழ்வான் திகிலடைந்து சிறகொடிந்தபட்சிபோல் சித்தப்பிரமைகொண்டு திரிந்துகொண்டிருக்கையில் சிஷ்யர்களைக் காட்டிக்கொடுத்து விட்டோட்டம்பிடித்த பரமாசாரியமூர்த்திகளாகிய உடையவர் நடந்தவிருத்தாந்தங்களையெல்லாங் கேள்வியுற்று, இனியென்னசெய்வதென்று ஆலோசித்துத் தம்மவர்களையனுப்பிக் கூரத்தாழ்வானை யழைப்பித்துக்கொண்டு பாண்டவர்கள் அஞ்ஞாதவாசஞ்செய்ததுபோல் ஒருவருந் தாங்களின்னாரென்றறியாதபடி வஞ்சவேடங்கொண்டு மறைந்திருந்து காலங்கழித்துக்கொண்டுவருகையில், இவர்களுழிருந்தபடி சிலகாலத்தில் சோழமகாராஜன் விதேகமடையவுங்கேள்வியுற்று அதிகசந்தோஷத்தையடைந்து நம்முடையதவம் பலித்தது என்று நல்லநாள்கொண்டு அவிழ்த்தெறிந்த காஷாயத்தை யாதரவாயுடுத்து வெளியேபுறப்பட்டு மூடஜனங்களாகிய ஒட்டர் உப்பரவர்களையும், சிலவடமாளையும் பிடித்து சூடுபோட்டு, அப்பிரமாணிய சித்தமான பட்டைநாமங்களைசாத்தித் துராசாரநிலையில் வேதசிவாகமவிருத்தமாய் ஒழுகிக் காலங் கடத்திக்கொண்டுவருகையில், சோழமகாராஜனுடைய திருக்கூட்டத்தவர்களால் பலமுறை அபஜயப்

பட்டவமான மடைந்தவர்களாயினும், "பாபக்கலிகாலப்பண்புகாண்" என்றருளிய இரட்டையர் தெய்வவாக்கின்படி மந்தமதிகளுக்கு துர்ப்போதங்களைச்செய்துகொண்டு ஸ்ரீநீலகண்ட சிவாசாரியசுவாமிகள்செய்த ஸ்ரீபாஷ்யத்தை அப்பியசித்து அதனைத் தமது ஊழின் வலிபெற மனம்போனபடிக்கெல்லாம் பொருள்கொண்டு விசிட்டாத்துவித பாஷ்யம் என்னும் பெயரால் வேறொன்று புதுக்கிப் பாஞ்சராத்திரப்படுகுழியில் புன்மக்களைவீழ்த்தி வேதசிவாகமங்களுடைய உண்மைகெட்டு முறைபிறழும்படிச் செய்துகொண்டிருந்தழிந்தனர்களென்றும் சோழவிஜயத்தால் உண்மையினிது விளங்குமாகையால் புத்திமான்கள் பகுத்துணர்வாராக.

இதுகாறுங் கூறிவந்த நியாயங்களால் இவர்கள் பேயாழ்வார்கள் சைவத்தை வென்றார்களென்னும் வீண்வாதம் நிரஸ்தமாகிவிட்டதாகையால், சிவனடியார்களாலிவர்கள் பூர்வாசாரியர்கள் பங்கப்பட்ட விருத்தாந்தங்களை யொருவாறு சுருக்கிக்காட்டுவோம்.

கஞ்சனூரிலே மதுசூதனாசாரியென்னும் பேருடையபாஞ்சராத்திரியொருத்தன் சிவநிந்தகனாய் அனேகரைத் தனது துர்ப்போதத்துக்குள்ளாக்கிக் கெடுத்துக்கொண்டுவருகையில், அவனுக்கு ஒரு சுபுத்திரர் அவதரித்து சிவநேசத்தோடுவளர்ந்து வரும் அதிசயத்தைப் பாஞ்சராத்திரியுணர்ந்து உள்ளம்வருந்தியொருவாறு தெளிந்து அப்பிள்ளைக்கு சுதரிசனாசாரியென்னும் பெயர்புனைந்து பாஞ்சராத்திர கர்மங்களை செய்யத்தொடங்குகையில் அவர்தந்தையை நோக்கி உம்மால்தரப்பெற்ற இச்சிறுதெய்வப்பேரும், உம்மால்செய்விக்கப்படும் அவைதிககருமங்களும் எமக்குடன்பாடில்லையென்று மறுத்துரைத்து சிவபிரானருளிய வேதசிவாகமங்களிரண்டுமே முக்கியப் பிரமாணங்களென்றும், அவற்றால் துணிந்து கூறப்படும் உண்மைப்பொருளாயுள்ளவர் பரமபதியாகிய சிவபெருமானேயென்றும், அவரையடையவருஞ் சந்மார்க்கம் சைவமார்க்கமே யென்றும், அச்சமயத்தாற் பெறப்படுஞ் சிவதீக்ஷைமுதலியனவே முத்திசாதநமென்றும், இவ்வுண்மைமுத்தியடைபவர்கள் சிவனடியார்களேயென்றும், இதுவேயென்னுடைய நிச்சயமென்றுந் துணிந்துகூறி, சர்வமங்கள குணாகரனாய்விளங்கும் ஹரனென்னும் திவ்வியநாமத்தினையுடையசிவபெருமானுக்குநான்தத்தமாகிவிட்டேனாகையால்என்னையினிஹரதத்தனென்றழைக்கடவாயென்றுரைத்

நருளி விபூதி யுருத்திராக்கமாதி சைவமுத்திரைகளைத் தாங்கிக் கொண்டு சிவநேசர்திருவடிகளை ஆசிரயித்து சைவமார்க்கப்பிரசாரஞ்செய்துகொண்டுவருகையில், பாஞ்சராத்திரி அசூயை யதிகரித்தவனுய் ஹரதத்தரையடைந்து சிலவேதவாக்கியங்களைக்கூறி நாராயணனே பரம்பொருளென்று உபதேசிக்கப்புகுந்தகாலத்து, அவன் சொன்ன வாக்கியங்களையெல்லாம் ஒவ்வொன்ருகக் கண்டித்துப் பூர்வபட்சஞ்செய்து மேல் சித்தாந்த வாக்கியங்களால் உண்மையைத் தெளிவுபெறக்கூறி சர்வஜன பிரசித்தியாய் அரசன்முதலியவர்களறிய அக்னிசமஸ்காரப்பட்ட இருப்புப்படிகளின்மேலேறி "காயத்ரீவல்லபத்வாத்தசரததநயஸ்தாபிதாராத்நத்வாச் சதுரேः கைலாசயாத்ராவ்ரதமுதிததயாபீஷ்டசந்தாநதாநாதுந்த்ரேணஸ்வேநஸாகம்தசசதகமலைர்விஷ்ணுநாபூஜிதத்வாத்தஸ்மைசக்ரப்ரதாநாதபிசபசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்டः கந்தர்ப்பத்வம்ஸகத்வாத்கரடகபாநாத்காலகர்வாபஹத்வாத்தைத்யாவாஸபூதத்ரிபுரவிதளநாத்தக்ஷயாகேஜயத்வாதுபார்த்தஸ்யஸ்வாஸ்த்ரதாநாந்நாஹரிவிஜயாந்மாதவேஸ்த்ரீசரீரே சாஸ்தஸ்ஸம்பாதகத்வாதபிசபசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்டः பூமோலோகைரந்நைகஸ்ஸததவிரசிதாராதநத்வாதமீஷா மக்ஷடைசீவர்யப்ரதாநாத்தசவிதவபுஷாவிஷ்ணுநாபூஜிதத்வாத் ஹம்ஸக்ரோடாங்கதாரிச்நஹிணமுரஹராந்விஷ்டசீர்ஷாங்க்ரிகத்வாத் தாநாத்ப்ரக்ஞாநமுக்த்யோரபிசபசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்டः வாராணஸ்யாஞ்சபாராசரநியமபுஜஸ்தம்பநாத்ப்ராக்புராணம் சிரத்வம்ஸேகேசவேநாச்ரிதவ்ருஷவபுஷாதாரிதத்வாரதத்வாத்அஸ்தோகைர்ப்ரம்ஹபர்ஷைரநிசகளகதாலங்க்ருதாபூஷிதத்வாத் ஜந்மத்வம்ஸாத்யபாவாதபிசபசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்டः" என்கிற சுலோகங்களைக்கூறி ஒவ்வொருபடியிலிருந்துகொண்டு ஒவ்வொருவிஷயமாகவாதித்து ஒருவருந் தம்மெதிர்நின்று வாய்திறப்பதற்கிடமில்லாமல் எல்லாரையும்வென்று அனற்பரிசத்தால் செந்நிறந்தோய்ந்துவிளங்கும் அப்படிகளினுச்சியிலிருந்துகொண்டு "ஹரதத்தஸஹஸ்ரம்" என்னுங் கிரந்தமொன்றியற்றி ஆயிரங்கட்சிகளால் தமது சித்தாந்தத்தைநாட்டித் தந்தையுட்பட எல்லாரையுந் திருத்தி யாவர்க்குஞ் சிவதீக்ஷைசெய்து சன்மார்க்கத்திலுய்வித்த பிரபாவம் ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதஸ்வாமிகளருளிய "ஹரதத்தமாஹாத்மியம்" என்னுங் கிரந்தத்தால் இனிதுபெறப்படும். இவரைத் திருநந்திதேவர் அவதாரமென்று சிவரஹஸ்யமாதிகிரந்தங்கள்கூறும். இவரால் செய்யப்பட்ட நூல்கள் சதுர்வேதசாரம், தத்வநிரூபணம் ஹரிஹரதாரதம்யம், ஸ்ரீகண்டபாஷ்யசமர்த்தநம், உஜ்வலம் என்கிற ஆபஸ்தம்ப சூத்திரபாஷ்யம், ஞாநரத்நாகரம், சிவாதித்யசிகா

மணி, பக்தாதிக்யசிகாமணி, சைவாகமபூஷணம், விபூதிபஞ்சகம், ருத்ராட்சபஞ்சகம் முதலியனவாம். இவரை நூல்களில் சதுரிசுனு சாரியென்றும், ஹரதத்தாசாரியென்றும் மேலோர்கள் கூறுகின்றனர். இவர் இருப்புப்படிமேலேறிக் கூறியசுலோகப்படித் திருவாவடுதுறையாதீனத்து சிவஞானசுவாமிகள் மொழிபெயர்த்தருளிய உண்மைவாக்கியம்வருமாறு: "உயர்காயத்திரிக் குரியபொருளாகலிற், றசாதன்மதலை தாபித்தேத்தலிற், கண்ணன்கயிலையினண்ணிநின்றிரப்பப், புகழ்ச்சியினுயர்ந்த மகப்பேறுதவலிற், றனுதவிழியுடனொராயிரங்கமலப், புதுமலர்கொண்டரி பூசனையாற்றலி, னுங்கவற்கிரங்கி யாழியீந்தருடலி, னங்கணைக்கிழவனை யழல்விருந்தாக்கலி, னமைப்பருங்கடுவிட மமுதுசெய்திடுதலிற், றென்றிசைத்தலைவனைச் செருக்குயிர்பருகலி, னவுணர்முப்புர மழியவில்வாங்கலிற், றக்கன்வேள்வி தகர்த்தருள்செய்தலிற், றனஞ்சயன்றனக்குத்தன் படைவழங்கலின், மாநடமடங்கலைவலிதபக்கோறலின், மாயோன்மகவே வாகியகாலைத், தடமுலைதிளைத்துச் சாதகனைத்தருதலி, னூழ்கடல்வரைப்பி னுண்ரேருமனைக, ரன்புமீதூர வருச்சனையாற்றலி, னுன்கிருசெல்வமு மாங்கவர்க்கருடலி, னையிருபிறப்பினு மரியருசித்தலி, னிருவருமன்னமு மேனமுமாகி, யடிமுடிதேட வழற்பிழம்பாகலிற், பிறப்பிறப்பாதி யுயிர்க்குணமின்மையிற் கங்கைசூழ்கிடந்த காசிமால்வரைப்பிற், பொய்புகல்வியாதன்கைதம்பித்தலின், முப்புரமிறுப்புழி முகுந்தப்புத்தேண், மால்விடையாகி ஞாலமொடுதாங்கலி, னயன்சிரமாலை யளவிலவணிதலின், ஞானமும்வீடும் பேணினர்க்குதவலிற், பசுபதிப்பெயரிய தனிமுதற்கடவு, ளும்பர்களெவர்க்குமுயர்ந்தோ, னென்பதுதெளிகவியல்புணர்ந்தோரே" என்னுந் திருவாக்கால் உணர்ந்துய்யப்பெறுவாராக.

இனிக் காஞ்சிபுரத்திலே தாத்தாசாரி யென்னும் பாஞ்சராத்திரி யொருத்தன் ஸ்ரீமத் அப்பதீக்ஷித ஸ்வாமிகள்விஷயத்தில் அசூயை யதிகரித்து அவரை யெந்தவிதத்தில் வெல்லுவதென்று ஆலோசித்து அவர்பாற்சென்று, உம்முடைய சிவன் விடமுண்டருளியது சத்தியமாயின் யாங்கடரு மிவ்விடத்தை நீருமுண்டு சகித்திரும் பார்ப்போமென்று கூறுதலும், அதற்கு தீக்ஷிதஸ்வாமிக ளிசைந்து அப்பாதகனால் கொடுக்கப்பட்ட விஷங்கலந்த பாலையுண்டு ஒருசற்றேனு மதனால்வருந்தாது "சிவதத்வவிவேகம்" என்னுங் கிரந்தமொன்றப்போதே யியற்றி சர்வ ஜனப்பிரசித்தியாய் அரசன்முதலியவர்களஞ்சும்படிப் பிரசங்கித்தனரென்றும், அதனை மறுத்துக் கூறவகையில்லாமல் பேய்போல்விழிக்குந் தாத்தாசாரியினுடைய தீயசெய்கையையும், விசாரலோபத்தையும் அறிந்து அரசன் சிவஞானச்செல்வராகிய தீக்ஷிதஸ்வாமிகளை யடைந்து ஆசாரிய பரி

யாதைகொண்டு தன்னுடைய தவம் பலித்துக் கைவந்தது போலும் மகிழ்ந்து பேரன்புடையவனாய் ஒழுகிவருங்காலத்தில், தாத்தாசாரி அதிகமாச்சரியங்கொண்டு அரசனிடத்திற்சென்று என்னுடைய சிஷ்யனாகிய நீ என் விரோதியை யபிமானிப்பது யுக்தமன்று எனக் கூறி தீக்ஷிதரோடுவாதித்து அவர் செய்த கிரந்தங்களையெல்லாங் கண்டித்து வைஷ்ணவ ஜயஸ்தம்பம் நாட்டப் போகின்றேனாகையால் இப்பெருவிஷயத்தை நீ முன்னின்று முடிக்கவேண்டு மென்று சொல்லவும், அரசன் உள்ளம்புழுங்கித் தீக்ஷிதஸ்வாமிகள் விஷயத்தில் அவ்வாறுநடத்தத் தனக் கிசைவில்லையாயினும், தாத்தாசாரி தன்னுடைய ஆசாரியனென்னும் விசுவாசம் பாராட்டி அவனை மறுக்கக்கூடாதவனாய்த் தீக்ஷிதஸ்வாமிகளையடைந்து வந்தனம்புரிந்து விஷயம் இன்னதென்று அறிவிக்கவும், சுவாமிகள் சந்தோஷித்து அரசனைநோக்கி இந்தவாதமுடிவில் தோல்விவெற்றிகளை நிச்சயித்துக்கூறுவதற்கு மத்தியஸ்தர்வேண்டுமாகையால் யாரையாவது சித்தப்படுத்து மென்று திருவுளம்பற்றுதலும் அரசன் வியாசபட்டர், பராசரபட்டர் என்னும்பேரையுடைய மத்துவாசாரியர்களையும், இன்னும்அனேக மதவாதிகளையும் வரவழைத்து அவர்களில் மத்துவாசாரியர்களாகிய இருவரையும் மத்தியஸ்தராக நியமித்து வாதாரம்பமாகி நடந்துவருகையில் தாத்தாசாரி பின்னிடைந்து கட்சிகள் சொல்ல வகையறியாமல் குவாதஞ்செய்யத்தொடங்கவும், மத்தியஸ்தராய்நின்றவர்களில்வியாசபட்டரென்பவர்எழுந்துநின்று தீக்ஷிதஸ்வாமிகளை நமஸ்கரித்துக்கொண்டு "ஸஞ்சாரிதே சிவமதேப் பயக்ஷீதேநதோர்மூல தாஹகமதம்ஸாதராம் நிரஸ்தம் சீருங்கத்வமத்ரீஷாவ்நுஷேஷா ச தப்தமுத்ரா ஹாரித்ரசூர்ணமபலாகுசமண்டலேஷு" என்கிற சுலோகத்தைக்கூறிச் சைவாசாரியராகிய அப்பதீக்ஷிதஸ்வாமிகள் செய்துவரும் சைவப் பிரசாரத்தால் வைஷ்ணவமதம் பாழாகிவிட்டதென்றும், அது பாழாகிவிடவும் அம்மதசின்னங்களி லொன்றாகிய ஊர்த்துவபுண்டரரேகைகளாகிய சிருங்கங்கள் பர்வதசிகரங்களையடைந்தன வென்றும், தப்தமுத்திரைகளாகிய சங்குசக்கர முத்திரைகள் எருதுகளுக்காய்விட்டனவென்றும், ஸ்ரீசூர்ணமென்கிற மஞ்சட்பொடி ஸ்திரீகளுடைய குசமண்டலத்திற் சேர்ந்துவிட்டதென்றும் எடுத்துப் பிரசங்கித்து அஞ்சலிபத்தராய் நிற்கையில், பராசரபட்டர் என்பவர் கொஞ்சம்வருந்தி மத்தியஸ்தமாகவந்த நம்மில்வியாசபட்டர் சைவராய்விட்டனரேயென்று சகிக்கமாட்டாமல் தாமெழுந்து தீக்ஷிதரோடு அனேகவிதமாய்வாதிக்கத்தொடங்கி

ஏழுநாள்பரியந்தம் வாதித்துந்தீக்ஷிதர் பின்வாங்காமல்வாதித்துவருந்திரத்தையும், அத்தெய்வசபையில் விளங்கிவருமுண்மையையுங் கண்டு பரிபாக விசேஷத்தால் தீக்ஷிதர்பால் தமக்கும் பக்திஜநித்து அவரைநமஸ்கரித்துக்கொண்டு அபசாரக்ஷமை வேண்டிநிற்கையில் தீக்ஷிதரவர்கள் எழுந்துநின்று அனேகமதவாதிகள் நிறைந்திருக்கும் அச்சபையைநோக்கி இப்போது நாம்செய்துவரும் சைவப்பிரசாரத்தை மத்துவ ராமாநுஜாசாரிய மதஸ்தர்கள் மறுத்து எம்மால் கண்டிக்கப்பட்டார்களானபடியால் இச்சபையில்வேறு எந்தமதஸ்தர்களாவது எம்மை மறுக்கக்கூடுமாயின் அவ்வாறுசெய்யலாமென்று திருவுளம்பற்றுதலும், வரநந்தியென்னும் பௌத்தனொருவனெழுந்து பிடகாகமவழித்தாய் சில பொய்யுரைகளைப்பிதற்றியுடனே கண்டிக்கப்படவும், மாயாவாதிகளாகிய சிலஸ்மார்த்தர்கள் அவரையணுகி, தேவரீர் வைதிகதுல்யராயிருந்தும் அதனையிங்கே விளக்கி அத்வைத ஸ்தாபனஞ்செய்யாமல் வேதபாஹ்யமாகிய சிவாகமவழித்தாய் சைவப்பிரசாரஞ் செய்துவருவது யுக்தமன்றென்று கூறியகாலத்தில் அவர்களைநோக்கி, வேதசிவாகமங்களிரண்டும் பதியாகிய சிவபிரானருளிய உண்மைப்பிரமாணங்களாகவும், நீங்கள் சிவாகமங்களைநிந்தித்து வேதவிருத்தமான துராசாரம்பூண்டு தீயவொழுக்கத்தில் நிற்கும் பாஷண்டிகளாவீர்களென்று அவர்களைக் கண்டித்து, "வைதிகாசாரநிர்ணயம்" என்னுங் கிரந்தமொன்று அப்போதே யியற்றி வேதசிவாகமசம்மதமான தருமங்களைக்கூறிச்சித்தாந்தப் படுத்திவிட்டு மேல் ஒருவருந் தம்மை யெதிர்த்து வாதிக்க விடமில்லாமல் எல்லா மதங்களையுங் கண்டித்து, "பரமததிமிரபாநு" என்னுங்கிரந்தமொன்றியற்றி சைவத்தினுண்மையை அநேக விதங்களால் எடுத்துக்கூறிப் பிரசங்கிக்கவும், இவ்வற்புதங்களையெல்லாங்கண்டுகொண்டு நிற்பவராகிய பராசரபட்டர் தீக்ஷிதஸ்வாமிகளை வலம்வந்து அவரை நமஸ்கரித்துக்கொண்டு அரசன்முதலிய மஹாஜனங்கள்கூடிய அப்பெருஞ்சபையைப்பார்த்து "மத்வத்வாந்தாதிகவித்வம்ஸநதிவஸமணிர்ப்பௌத்தஸித்தாந்தவங்யா வஹ்நிஃ பாஷண்டஷண்டோரகபணபடலோத்தண்டதுண்டாண்டஜேந்த்ரஃத்ருப்யத்ராமாநுஜோத்யத்தரணிதரமஹாதம்பதம்போளிகேளிஃ சைவாசாராப்திசந்த்ரஸ்ஸஜயதிகவிராடப்பயாக்யாத்வரீந்த்ரஃ "என்கிற சுலோகத்தைக்கூறி மாத்துவமதமாகிய காடாந்தகாரந் தொலைய உதிக்கும் ஞானசூரியனென்றும், பௌத்தசித்தாந்தமாகியமஹாரணியத்தைத்

தகிக்கவரும் ஜ்வாலாக்னியென்றும், சிவாகமங்களை வேதவிருத்தமென்றுகூறித்திரியும் பாஷண்டிகளாகிய சர்ப்பசமூகங்கள் நசிக்க வெழுந்த கருடபகவானென்றும், இராமாநுஜமதமென்கிற பர்வதம் பொடிந்துபோக பேதித்துடைக்கும் வச்சிராயுதமென்றும், சைவாசாரம் என்கிற சமுத்திரத்தினின்றுந்தோன்றிய பூரணசந்திரனென்றும், மஹாவித்வசிரோன்மணியாகிய அப்பதீக்ஷிதஸ்வாமிகள் (யாவராலும்புகழ்ந்துரைக்க) சர்வோத்கர்ஷராய்ப் பிரகாசிக்கின்றாரென்று தெளிவுபெறப் பிரசங்கித்து முடிவுகூறுதலும், இவ்வற்புதங்களையெல்லாம் பிரத்தியட்சமாகக்கண்ட அரசன் அதிக சந்தோஷத்தையடைந்தவனாய் தீக்ஷிதஸ்வாமிகளைப்பணிந்து, என்னுடைய அபசாரத்தைப் பொறுத்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்துத தாத்தாசாரியைநோக்கி இனி யிப்படிப்பட்ட சிவபராதவிஷயத்தில் என்னை அழைப்பது யுக்தமன்றென்று கூறிவிட்டு, தீக்ஷிதஸ்வாமிகளிடத்தில் வியாசபட்டர் பராசரபட்டர் முதலியவர்களோடு தாமும் சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு சைவப்பிரசாரஞ் செய்துவருகையில் தாத்தாசாரி திகிலடைந்து இனியென்னசெய்வதென்றாலோசித்து, ஒருநாள் தீக்ஷிதரவர்கள் நதிக்குச்சென்றுஸ்நாநாதி நித்தியாநுஷ்டானமுடித்துக்கொண்டிருக்குஞ் சமயம்பார்த்து சிலதுஷ்டர்களையேவி இதுநல்லசமயமாகையால் அவரைக்கொன்றுவிட்டுவாருங்கோள் என்று அனுப்புதலும், அவ்வாறேசென்ற பாதகர்கள் தீக்ஷிதரை யணுகியகாலத்தில் அனேகர் சூலபாணிகளாய்த்தோன்றி அவரைச்சூழ்ந்துநிற்கவும், வந்தவர்களெல்லாம் பயந்து தீக்ஷிதரை சரணடைந்து தமது தீயவெண்ணத்தை வெளிப்படுத்தலும், சுவாமிகள் அவர்களைநோக்கி சிவனடியார்களுக்குத் தீங்குநினைக்கும் அப்பாதகன் இப்பூமியிலிருப்பதைப்பார்க்கிலும் ஒழிந்துபோய்விடுவதுஅதிகநலமென்றுரைத்து, "ஸகலபுவநகர்த்தாஸாம்பமூர்த்திச்சிவச்சேத்ஸகலமபிபுராணம்ஸாகமஞ்சேத்ப்ரமாணம் யதிபவதிமஹத்வம்பூதிருத்ராக்ஷபாஜாம் கிமிதிநம்ருதிரஸ்மத்ரோஹிணஸ்யாதகாண்டே" என்கிற சுலோகத்தைக்கூறிச் சாம்பமூர்த்தியாகிய சிவபெருமானே சகலபுவனகர்த்தாவாயிருந்தால், சிவாகமங்களோடு சமஸ்த வேத புராணங்களும் உறுதிப்பிரமாணங்களானால், விபூதி யுருத்திராக்கங்கள் தெய்வீகமுடையதானால், என்னுடைய சத்துருவாகிய துன்மார்க்கனுக்கு அகாலமிருத்து சம்பவிக்குமாக என்று பிரமாணஞ்செய்து கூறுதலும், உடனே தலையிலேயிடிவிழுந்து செத்தா

னென்று ஸ்ரீ சிவஞானசுவாமிகள் செய்தருளிய "தீக்ஷிதமாந்மியம்" என்னும் கிரந்தத்தால் உண்மையினிது விளங்கும். இந்தமூர்த்திகளைச் சிவாஷ்டமதநுவிலொன்றென்று மேலோர்கள் கூறுகின்றனர். இவரால்செய்யப்பட்ட கிரந்தங்கள் சிவகர்ணாமிருதம், பிரஹ்மதர்க்கஸ்தவம், சிவார்க்கமணிதீபிகை, தப்தமுத்திரவித்ராவணம், பாகவததாத்பரியசாரசங்கிரகம், பாரததாத்பரியசாரசங்கிரகம், இராமாயணதாத்பரியசாரசங்கிரகம், சிவபுராணதாமசத்வநிராகரணம், சர்வார்த்தசாரசங்கிரகம், பரிபாஷாமஞ்சரி, ஹரதத்தமாந்மியம், பாஷண்டமதசபேடிகை முதலியனவாம். இந்நூல்களில் சிலவற்றை ஸ்ரீசிவஞானசுவாமிகள் மொழிபெயர்த்திருக்கின்றனர். அவற்றையிடம்வந்துழிக் கண்டுகொள்க.

இவ்வுண்மைகளை யுணரப்பெறாத எழும்பூராஞெருத்தன் வெளியிட்ட "சைவவாதசைலாசனி" என்னும் தெலுங்குசுவடியில் ஸ்ரீகண்ட சிவாசாரியஸ்வாமிகளையும், ஹரதத்தாசாரியஸ்வாமிகளையும், தீக்ஷித ஸ்வாமிகளையும் பலவாறு நிந்தித்திருக்கின்றனன். அவற்றையெல்லாங்கண்டித்து "வைஷ்ணவவாததூலவாதூலம்" என்னுங்கிரந்தமொன்று கந்தசாமிதேவரென்பவரால் முன்னமேதானே வெளியிடப்பட்டிருத்தலால், அவ்விஷயத்தைப்பற்றி யிங்கேவிரித்தெழுத வேண்டுவதில்லையாயினும் ஒருவாறு சுருக்கிக் காட்டிக்கண்டிப்போமாக. ஸ்ரீநீலகண்டபாஷ்யம் இராமாநுஜ பாஷ்யத்திற்குப் பிற்பட்டதாகையால் முன்னோர்கள் யாரும் அதனைக் கண்டிக்கவில்லையென்றும், அந்தபாஷ்யத்தை சாந்திசெய்து எந்தப்பிராம்ஹணனும் அப்யஸிப்பதில்லையென்றும், அதற்குபதேச பரம்பரையில்லையென்றும், அதற்கு நெடுங்காலத்தின்பிறகு ஹரதத்தாசாரியரால் "சதுர்வேததாத்பரிய நிர்ணயம்" என்கிற சைவகிரந்தமொன்று பிறந்து அப்போதே கண்டிக்கப்பட்டதென்றும், இந்நூலாசிரியர் அத்வைதமதஸ்தரென்றும், அதற்கு நெடுங்காலத்தின்பிறகு சைவர்கள்வருந்தித் தங்களுக்கு கீர்வாணசம்பந்தமான கிரந்தங்களொன்றுமில்லாத துக்கத்தினுல் அப்பதீக்ஷிதரென்கிற அத்வைதியையடைந்து சிலகிரந்தங்கள் அவர்செய்துகொடுக்கப் பெற்றுக்கொண்டனரென்றும், அவைகளும் அப்போதே கண்டிக்கப்பட்டனவென்றும், அந்தகிரந்தங்களை தீக்ஷிதரவர்கள் பிராமாணிய புத்தியாய் செய்யவில்லையென்றும், சைவபாஷ்யாதிகளுக்கெப்படி வியாக்கியானங்கள் செய்தனரோ அப்படியே மத்துவ ராமாநுஜசங்கர

பாஷ்யங்களுக்கும் வியாக்கியானஞ் செய்திருப்பதால் சைவபாஷ்யாதிகிரந்தங்களுக்குச் சிறப்புகூறுவது பொருந்தாதென்றும் மனம்போனபடிக்கெல்லாம் பிதற்றியிருக்கின்றனன். இதனை முறையே விவகரிக்குமிடத்து ஸ்ரீநீலகண்டபாஷ்யம் எல்லாப்பாஷ்யங்களினும் முற்பட்டதென்பதை நிரூபிப்போம். ஸ்ரீகண்டாசாரியசுவாமிகள் தமது பரமாசாரியமூர்த்திகளாகிய சுவேதாசாரியர் திருவருளால் தேவீபாகவதம், மஹாபாரதம் முதலிய கிரந்தங்களுக்கு பாஷ்யஞ் செய்து முடித்துச் சூத்திரபாஷ்யம், உபநிஷத்பாஷ்யம், சிவஞானபோதம் என்னும் ஆகமாந்த சூத்திரபாஷ்யங்களுஞ் செய்திருக்கின்றனர். இதுகளெல்லாம் பிராசீனமேயன்றி நவீநமன்று. அவர்க்காசிரியராகிய சுவேதமுனிவர் சிரஞ்சீவித்வமடைந்து இன்னுமெழுந்தருளியிருப்பவராகக் கூர்மபுராண முதலியவற்றால் நிச்சயிக்கப்பட்டவர். ஸ்ரீநீலகண்டசிவாசாரியசுவாமிகள் மாணக்கருளொருவராகிய பிரஹ்மவித்யாத்வரர்என்பவரால் "தர்ப்பணம்" என்னும் வியாக்கியானமொன்று ஸ்ரீநீலகண்டபாஷ்யத்திற்கு அப்போதே செய்யப்பட்டது. சிலகாலத்தின்பிறகு "ஸ்ரீகண்டபாஷ்யசமர்த்தநம்" என்றொரு வியாக்கியானம் ஸ்ரீஹரதத்தாசாரிய சுவாமிகளால் செய்யப்பட்டது. "தாராவளி" என்றொரு வியாக்கியானம் சிலகாலத்தின்பிறகு நிஜகுணயோகீந்திரரென்பவரால் செய்யப்பட்டது. சிலகாலத்தின்பிறகு "சிவார்க்கமணிதீபிகை" என்னும் வியாக்கியானம் ஸ்ரீமத் அப்பதீக்ஷிதஸ்வாமிகளால் செய்யப்பட்டது. இங்ஙனமாகவும் இராமாநுஜர்முதலியவர்களால்கண்டிக்கப்படாதகாரணத்தால் ஸ்ரீகண்டபாஷ்யம் பிற்பட்டதென்று பிதற்றியது பேதைமையென்க. சங்கராசாரியர் ஸ்ரீகண்டாசாரியரோடுவாதித்துத் தோல்வியடைந்து சைவதீக்ஷைபெற்றுக்கொண்ட மாந்மியம் மேலிடங்களில் விவகரித்தோமாகையால் சைவபாஷ்யம் அவரால்கண்டிக்கப்படாமை வெளிப்பட்டது. சங்கராசாரியர் நீங்கலாக மற்றைப் பாஷ்யகர்த்தர்கள் கேவலம் அற்பாதிகாரிகளேயாகையால், அவர்களால் கண்டிக்கப்படுமென்பது ஒருவாற்றானும் பொருந்தாது. இராமாநுஜர் விருத்தாந்தம் சோழமகாராஜன் விஷயத்தில் வெட்டவெளியாகியதால் சைவபாஷ்யத்தைக்கண்டிக்குமவ்வளவுதிறம் எங்கேயிருந்துவரும்? தாம் வேறாகச்செய்துகொண்ட விசிட்டாத்துவித பாஷ்யத்திற்கு ஆதாரமாகிநின்றசைவபாஷ்யத்தை இராமாநுஜர் கண்டிக்காமைகொண்டே அதுபிற்பட்டதென்று கூறியது அறியாமையென்க. இவர்கள் வெளியிட்டிருக்கும் "கூரேசவிஜயம்" என்னுஞ் சுவடியில் கண்டிக்

கப்பட்டவைகளாக எழுதியிருக்கும் விஷயங்கள் முறையே ஹரதத்தாசாரிய சுவாமிகள் சுலோகமொழிபெயர்ப்பேயன்றி வேறில்லை. இதனால்கூரத்தாழ்வான் ஹரதத்தாசாரிய சுவாமிகளுக்குப் பிற்பட்டவனென்பது பெறப்படும். ஸ்ரீகண்டபாஷ்யத்திற்கு ஹரதத்த வியாக்கியானமொன்று "ஸ்ரீகண்டபாஷ்ய சமர்த்தனம்" என்னும்பேரால் பிரகாசிக்கின்றது. இதற்குமுன்னு மொருவியாக்கியானம் "தர்ப்பணம்" என்னும்பேரால் பிரகாசிக்கின்றது. இந்நியாயங்களால் ஸ்ரீகண்டாசாரியசுவாமிகள் காலம் இராமாநுஜர்முதலியவர்கள் காலத்திற்குநெடுங்காலம் முற்பட்டதென்று ஸ்பஷ்டமாய்விளங்கும். இந்நியாயங்களை யுணராது ஸ்ரீகண்டபாஷ்யம் பிற்பட்டதென்று குரைத்த மட்டிவாசகம் பாழாகிவிட்டதென்க.

மேற்கூறியவியாக்கியானங்களை ஸ்ரீபாஷ்யத்தைச் சாந்திசெய்த புண்ணியவிசேஷத்தாலேயேபிரஹ்மவித்தியாத்வரர்முதலிய மஹாத்துக்கள் செய்திருப்பாராகவும், இதனையறியாது அந்தபாஷ்யத்திற்கு உபதேசபரம்பரை யில்லையென்றுகூறிய மடமைக்கு விசனப்படவேண்டியிருக்கிறது. அது கேவலம் சுத்தசிவசந்மார்க்கப் பிரதிபாதகமாயிருத்தலால், ஆதிசைவர்களுக்கே அதிகாரவிசேஷத்தால் பலிதமாகிவரும். இப்போதும் அதிகாரிகள் அநுட்டித்து வருகின்றனர். ஆயின் சர்வபிராஹ்மண சம்மதமின்றேயெனின், அது எந்தபாஷ்யத்திற்கு மில்லையாகவும் அங்ஙனங் கேட்பது அறிவீனமென்க. இராமாநுஜபாஷ்யம் வைஷ்ணவர்களுக்கு மாத்திரம் பிரயோசனப்பட்டுவருமன்றி, அதை எந்த ஸ்மார்த்தனும் மாத்துவனும் பரிசிக்கவுஞ்செய்யான். வைஷ்ணவருள்ளும் வடகலையார் அதனை விசேஷமாகப் பாராட்டார்கள். அப்படியே ஒவ்வொரு மதஸ்தனும் தந்தம் பாஷ்யத்தையே ஆதரித்து வருவானன்றி எல்லா பாஷ்யத்தையும்சமமாகப்பாராட்டுவானென்பதில்லையாகவும், சங்கராசாரியர் மதஸ்தராகிய ஸ்மார்த்தகும்புகள் சைவபாஷ்யத்தை அப்யசிக்காததுகொண்டு குறைவுகூறவந்தது என்னமதியீனம்? இதுநிற்க, "உஜ்வலம்" என்று செய்யப்பட்ட ஆபஸ்தம்ப சூத்திரபாஷ்யத்தால் ஸ்ரீ ஹரதத்தாசாரியசுவாமிகள் சைவாசாரதுல்யரென்பது இனிது பெறப்படும். இவரையும் தீக்ஷிதஸ்வாமிகளையும் அத்வைதிகளென்று கூறியமூதான். தீக்ஷிதர்விஷயமாய் மேலிடங்களில் யாம் உதகரித்த சுலோகங்களால் அவரை சிவமதஸ்தரென்றும், சைவாசாரதுல்யரென்றும் ஸ்பஷ்டமாய்க் கூறியிருத்தலானும், அவர் செய்திருக்

குஞ் சைவகிரந்தங்களானும் அவர்மதம் இன்னதென்று புத்திமான்க ளறியாமற்போகார். அவர் சைவபாஷ்யத்திற்கு வியாக்கியானஞ் செய்ததுபோலவே மத்துவராமாநுஜ சங்கரபாஷ்யங்களுக்கும் வியாக்கியானஞ்செய்திருப்பதால் ஸ்வபாண்டித்ய பிரகடனார்த்தமேயன்றிப் பிராமாணியபுத்தியா லன்றென்று பிதற்றினன். அப்போது எல்லாபாஷ்யங்களும் அப்படியேயாகி, அவருடையஸ்வமத மின்னதென்று விளங்காமற்போகும். அவர்சுத்தசைவாசாரியரென்பதற்கு எண்ணிறந்தனவாய் செய்யப்பட்டுள்ள சைவகிரந்தங்களே சான்றுமாகவும் அவரை அத்வைதியென்றும் அவர் பிராமாணியபுத்தியாய்ச் சைவநூல்கள் செய்யவில்லை யென்றுங் கூறியது விசார சூனியமெனக்க. ஆயின் அவர் மற்றை மதங்களுக்கும் நூல்செய்த தென்னையெனின், அக்காலத்திலிருந்த அத்வைதிகள் சிலர் இவரைநோக்கி நீர் வைதிக துல்யராயிருந்தும் சங்கரபாஷ்யாதிகளை அப்யசிக்காததென்னையென்று கேட்டகாலத்தில் அவர்களைநோக்கி எல்லாமத வுண்மையையுமறிந்து மீசுரப்படும்பரிபாகிகளே சைவாதிகாரிகளாவராகையால் யாம் சுத்த சிவசந்மார்க்கம் பற்றியொழுகும்புண்ணிய விசேஷத்தையடைந்தோமென்று கூறி, இனியாரும் அப்படிமயங்காவண்ணம் சங்கரபாஷ்யம், மத்துவபாஷ்யம், இராமாநுஜபாஷ்யம் ஆகிய மூன்றுக்குந் தனித்தனி வியாக்கியானங்கள் செய்தனர்.

"புறச்சமயநெறிநின்றுமகச்சமயம்புக்கும்
புகன்மிருதிவழியுழன்றும்புகலுமாச்சிரம
வறத்துறைகளவையடைந்துமருந்தவங்கள்புரிந்து
மருங்கலைகள்பலதெரிந்து மாரணங்கள்படித்துஞ்
சிறப்புடையபுராணங்களுணர்ந்தும்வேதச்
சிரப்பொருளைமிகத்தெளிந்துஞ்சென்றாற்சைவத்
திறத்தடைவரிதிற் சரியைகிரியாயோகஞ்
செலுத்தியபின்ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்."

என்றருளிய அருணந்தி சிவாசாரியசுவாமிகள் திருவாக்கானுமுணர்க. இந்தநியாயங்களால் அவர் விஷயத்தில் மனம்போனபடிக்கெல்லாம் பிதற்றித்திரியும் துஷ்டவாசகங்கள் நிரஸ்தமாயிற்றெனக. ஸ்மார்த்தர்கள்கதி இப்படியாகவும், அக்காலத்திலிருந்த மாத்துவ வைஷ்ணவர்களுள் சிலர் சைவத்தில் தமக்கிருந்த அருமையால் இப்போதிவ் வெழும்பூரிரெட்டி குரைத்தபடியே தீக்ஷிதர்

சைவபாஷ்யத்திற்கு வியாக்கியானம்செய்ததுபோலவே மாத்துவ வைணவ பாஷ்யங்கட்கும் வியாக்கியானங்கள் செய்திருப்பதால் சிவோத்கர்ஷ துல்யங் கூறுவது பொருந்தா தென்று புலம்பிய காலத்தில் அவர்கள் கர்வமடங்க மாத்துவ மதவித்வம்சம், இராமாநுஜ சிருங்கபங்கம் என்கிற கிரந்தங்களால் உடனே அவர்களைக் கண்டித்துவிட்ட வுண்மையை அந்நூல்கள் காட்டுகின்றனவாகலின் அதனைப் பரிபாகிகள்கண்டுணர்வாராக. இதனால் சைவர்கள்வேண்டுகோளால் சிலகிரந்தங்கள் செய்தாரென்னும் பித்துரை கண்டிக்கப் பட்டதென்க. கோவர்த்தனகிரி ரங்காசாரியென்பவர் இராமசுப்பிரமணியசாஸ்திரியென்னும் அத்வைதியையடைந்து "விஷ்ணுதத்துவ ரகசியம்" என்னும்நூல் செய்துகொடுக்கப்பெற்று இப்போது வெளியிட்டிருக்கும் பிரத்தியக்ஷ பிரமாணத்தால் கையிலாகாமல் பிறரைவேண்டி நூலாதரவுபூண்டொழுகு நுண்ணுணர் வில்லா மந்த மதிகளிவர்களென்று புத்திசாலிக ளறியாமற்போகார். இவர்கள்பெருங்காப்பியமாகக் கொண்டிருக்குங் கம்பராமாயணம், இராமாயணகீர்த்தனைமுதலியவைகள் சைவர்கள்செய்து கொடுத்தனவேயன்றி வேறில்லையாகவும், நூல்யாசகம் யாரிடத்துண்டென்பது விவேகித்துணர்வாராக. இதுமட்டோ! சின்னசாமிசாஸ்திரிஎன்னும் ஸ்மார்த்தபிராமணரை யாசித்துத் தங்களில் யாரும் பிரபன்னுளில்லாதகாரணம் பற்றியேயன்றோ அவர்பால் வைஷ்ணவப்பிரசங்கங் கேட்டுவருகின்றனர்? இதனை யாருமறிவார்களே! இதுநிற்க. மூடசிரோமணியாகிய முடிச்சூர்முதலி போலவே இவ்வெழும்பூர்க்கவியும் சில துஷ்டத்தனங்கள் அனேகவிதமாய்த் தனது நூலில் காட்டியிருக்கின்றுனுகையால், அவற்றை இடம்வந்துழியெடுத்துக் காட்டிக் கண்டிப்போமாக.

இனித்தஞ்சாவூரிலே சிவாக்ரயோகிகளென்னுஞ் சிவயோகியொருவர்சைவப் பிரசாரஞ்செய்துகொண்டிருக்கையில், அக்காலத்திலிருந்த மணவாளமாமுனி யென்னும் பாஞ்சராத்திரி யொருத்தன் அவரிடத்தில் அசூயை யதிகரித்தவனாய்த் தனது பெருங் கூட்டத்தோடும் சர்ப்போஜி மகாராஜனையடைந்து சிவாக்ரயோகியைவெற்றிபுனைந்து வைஷ்ணவஜயஸ்தம்பம்நாட்ட வுத்தேசித்திருக்கின்றேனென்று கூறுதலும், அரசன்வருந்தி இது தக்கசெய்கையன்றாயினும் பின்னிடுவது குறைவென்றுகொண்டு சிவாக்ரயோகிகளையடைந்து விஷயத்தைத் தெரிவித்து அவர் சம்மதப்படிப் பெருஞ்சபை

யென்று சேர்த்துப் பதினெட்டுநாள் வாதமென்று தீர்மானித்து, வாதத்திற்பின்னிடைந்தவர்கள் வெற்றியடைந்தவர் சமயஞ்சேர்வ தென்று முடிவுகொண்டு வாதாரம்பஞ்செய்து பதினேழுநாளாகி வெற்றி சிவாக்ரயோகிகள் புறமேயாகிவரு மதிசயத்தால் அரசன் சந்தோஷமடைந்து வருமுண்மையை நோக்கிப் பாஞ்சராத்திரியும் அவன் கூட்டத்தாரும்பயந்து இன்னும் ஒருநாள்தா னிருக்கின் றதே என்ன செய்வதென்று ஆலோசித்துப் பதினேழாநா ளிரவில் வாதமுடிந்து சிவாக்ரயோகிகள் தமது திருமடத்தையடைந்து நிஷ் டைசாதித்திருக்குங் காலத்தில், அவர்மடத்தைச்சுற்றி நெருப்பிட்டு விட்டு ஒன்று மறியாதவர்கள்போல் மறுநாள்காலையில் வாதசபைக் குப் போனகாலத்தில் சிவாக்ரயோகிகள் வராமைகண்டு அரசன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், அவருடையமடம் தீபற்றி யெரிந்துவிட்டதென்று ஊர்முழுதும் பிரஸ்தாபமாகி அரசன் செவியிற்புகுதலும், உள்ளம்நடுங்கிப் பதைபதைத்து ஓடோடியுஞ் சென்று மடத்தைப்பார்த்தகாலையில் எல்லாங்கரிந்து சாம்பராய்க் கிடந்தும் சுவாமிகள் திருமேனிவருந்தாது அசைவற்ற நிலையினிற்கு மற்புதத்தைக்கண்டு அத்தியாநந்தங்கொண்டு சந்நிதியை யணைந்து அடியற்றபனைபோல் திருவடிகளில்விழுந்து நமஸ்கரித்துக்கொண்டு இச்சிவாபராதஞ்செய்தவர்கள் அப்பாதகர்களேயென்று அவர்க ளெல்லாரையும் ஓர் அறையிற்சேர்த்து நெருப்பிட்டுக்கொளுத்தி விட்டதாக சிவாக்ரயோகிகள் மான்மியத்தால் இனிது பெறப் படும். இவர் வைதிகதுல்பராயிருந்து சிவதீக்ஷையடைந்த மஹா சைவரென்க. இவரால் செய்யப்பட்ட கிரந்தங்கள் சிவஞானபோத பாஷ்யம், சித்தாந்ததீபிகை, சிவஞானசித்திமணிப்பிரவாள வியாக் கியானம், வேதாந்ததீபிகை, தத்துவதரிசநம், பாஞ்சராத்திரமதச பேடிகை முதலியனவாம்.

இனிக்கொப்பூரிலே பிப்பபாச்சையரென்னும் மெய்யன்பரொ ருவர் சிவனடியார்களுண்ட பரிகல சேஷத்தைவண்டியி லேற்றிக் கொண்டு தமது திருமடத்துக் கெழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகையில், மார்க்கத்தில் சில ஸ்மார்த்தர்களும் வைஷ்ணவர்களுங் கூடி எங்களுடைய அக்கிரகாரத்தில் இவ்வசுத்தங்கொண்டு போவ து யுக்த மன்றென்று மறுத்தகாலையில் அவர் புன்னகைகொண்டு வண்டியிலிருக்கும் பரிகலசேஷப் பிரசாதத்தைக் கைகளால்வாரி அந்த பிராமணர்களுடைய மடங்களின்மேல் வீசுதலும், அக்கிர

காரமெல்லாம் புகைந்து வெந்துகரிந்துபோகவும், அவர்கள் பயந்து சிவனடியாராகிய பிப்பலாச்சையரைச் சரணடைந்து உயிர் பிழைத்தார்களென்று வசவபுராணத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

"சிலல்லவிதாநம்பிஞோர்க்கமு திகழ்ந்தபேரையிறப்பிப்பதென்றலுங்
கசெழும்விடமோ சிங்கமோவெய்ய காலனோவெவ கதப் புலி யோவன
வசமின்றி மறையவர்கூறவே பையர்பிப்பலாசனைபரா துதனை
முச்சுமாடையை நீக்கிக்கரத்திஞன் மொண்டுவேதியரில்லின்முனிந்திட."

"பல்விதத்தில் விழுந்தீயிடிகளோ பரவுமின்னினமோ வடவங்கியோ
சொல்லுதற்கரி தாம்வடவாவனற் ஞெரணியதாகச் சொடில்படி லென்றெழுந்
தில்லமெங்குந் திரிபுரமோவெழி லீசனெற்றி விழி யங்கி யோவெனப், புல்ல
ரந்தணர் கொப்பூர்த் தெருவெலாம் புகைந்தெழுந்து பொடிபட வேகவே."

"துட்டராமையரில்லுந்தாமோதரர் துய்யவில்லமுமச்சுதரில்லமு
முட்டவெந்தது பாற்கரபட்டரில் முடியவெந்தது நரசிங்கையர்தம்
பட்டசாலையு மாரணப்பட்டரப் புண்ணரில்லும் பரந்தெரிக்கொத்ததே
தட்டிலாதசந்யாசிபுராணிகர் சாமவேதர்மடம்வெந்துசாய்ந்ததே."

என்றுவரும் வாக்கியங்களாலுங் கண்டுணர்வாராக.

இனிக் காசிப்பதியிலே மஞ்சிதேவரென்பவரொருவர் சைவப்பிரசாரஞ்செய்துகொண்டுவருகையில் அவர்பால்அசூயைகொண்ட வைஷ்ணவர்கள சிலர் அங்கேயுள்ள பெருமாள் கோயிலிலிருந்துகொண்டு மஞ்சிதேவரைத் தங்களோடு வாதிக்கும்படி யழைத்தகாலையில் அவர் புன்னகைகொண்டெழுந்தருளி அவர்களைப்பார்த்து, இங்கே யெழுந்தருளியிருக்கும் பெருமாள் யாவருங்காண வீதியிலே நடந்துவந்து எங்கள் விசுவநாதசுவாமியை வணங்கும்படிச் செய்கிறேன் பாருங்களென்று கோயிலுக்குள்ளேசென்று பெருமாளை யழைத்துக்கொண்டுபோய்ப் பரமசிவத்தை வணங்கும்படிச் செய்த மான்மியமும் வசவபுராணத்தாலினிது பெறப்படும்.

"நீயருச்சிப்போனெங்கணித்தனேயாவனுயி
னீயலர்க்கரங்கொளெஃகுமலனதரயோயாயி
னீயளித்திடுந்தொழிற்கெ னெஞ்சிறைகர்த்தாவாயி
னீயரன்விசுவநாத னிலயமுன்பணிவாயென்றார்."

"தரையினரதிசயிப்பச் சங்கரனன்பராஞெ
ரரகரவெனக்களிப்ப வகந்தைசேர்வாதர்வெள்கி

வெருவியுஞ்சமருண்டுநிற்ப மெய்த்தகைமஞ்சிலிதேவர்
வருதியென்றுரைத்தசொல்லைமாதவன்றலைமேற்கொண்டே."

"அஞ்சியங்கோயில்விட்டங் கடிபெயர்த்தகன்றவீதி
விஞ்சியவெளியிற்சென்று மேதினிமதித்தசெல்ல
மஞ்சையர்முதலாநல்லோர் மகிழ்ந்துமுன்விரைந்துசெல்ல
வஞ்சகச்சமயமாதர் மயங்கினர்பின்னேசெல்ல."

"வந்திகோயிலுட்புகுந்து மாதவன்விசுவநாதன்
கந்தமார்மலர்த்தாண்முன்னங் காதலிற்பணிந்தங்கின்ன
மிந்தமாநிலத்தோர்காணக் கிடப்பதையெழுப்பமாட்டா
ரந்தமால்சமயத்தோர்க ளாதலாலரனேமேலோன்."

என்று வரும்வாக்கியங்களே சான்றாமென்க.

இவ்வாறுபலபிரமாணங்களால் விஷ்ணுபக்தர்கள் சிவனடியார்களால் பங்கப்பட்ட விருத்தாந்தங்கள் வெளிப்பட்டதன்றியும், திக்விஜயம் எம்பாரையங்கார் என்னும் பாஞ்சராத்திரி யொருத்தன "அதர்வசிகாவிலாசம்" என்றெழுதிவிட்ட துர்வாதநூலைக் கண்டித்து "அதர்வசிகாவிலாசநிராசநம்" என்னுங்கண்டந கிரந்தமொன்று மைசூர்வீரபத்திரராத்ய ரென்பவரால் செய்யப்பட்டது மன்றி, அவர்பால் வாதித்துத் தோல்வியடைந்த அப்பாஞ்சராத்திரி தன்னுடைய விருதுகண் முதலியவற்றை யெல்லாம் அவர் திருவடியிலர்த்தம்பண்ணிவிட்டுத் தானும் அவர்க்குத் தனது பெருங் கூட்டத்தோடு கொத்தடிமையாகி யொழுகிவந்த பிரபாவம் சங்கரபட்டரென்பவரால் செய்த "சகலவேத சிகாமணி" என்னும கிரந்தத்தாலினிது பெறப்படும். இவைகளன்றியும், இந்திரத்யும்மன் என்னும விஷ்ணுபக்தன் சிவனடியாராகிய அகஸ்தியபகவானைக்கண்டு வணங்காதசெருக்கால காட்டானையாக அம்முனிவரால சபிக்கப்பட்டவுண்மையைப பாகவதாதி பிரமாணங்க ளுணர்த்தும். இதுநிறக, விஷ்ணுபக்தனாகிய பிரகலாதனென்னும் இரணியகுமாரன் அரசாண்டுகொண்டிருக்குங்காலத்தில் சிவனடியா ரொருவர் அவன் கொலுவீற்றிருக்குஞ் சபைக்கெழுந்தருளுதலும, அவரைக்கண்ட இராக்கதவரசன மிகுந்த செருக்கால வழிபடாதொழியவும், முனிசிரேஷ்டர் அவனைநோக்கி நீயிவ்வளவுமமதைகொண்டிருப்பது நாம் விஷ்ணுவை வழிபடுகின்றோமென்னுஞ் செருக்கேயொழியவேறில்லையாகையால் நீயும்அவ்விஷ்ணுவுமொருவரையொருவர் விரோ

தித்துத் திராப்பகைவர்களாகக்கடவீர்களென்று சபித்துவிட்டுப் போய்விடுதலும், உடனேயவனுக்கொருவிபரீதம்பிறந்துநம்முடைய தந்தையைக்கொன்ற சத்துருவாகிய விஷ்ணுவை நாம்வழிபட்டுவருவது நம்பால் என்னபேதைமையென்று ஆலோசித்து இப்போதே சென்று அவ்விஷ்ணுவை யெதிர்த்துப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று ராக்ஷதவிருத்தி யதிகரித்துச் சேனைகளோடு திருப்பாற்கடலையடைந்து என்னுடைய தந்தையைக்கொன்ற வுன்னை யுயிரோடு விடுகிறதில்லை; என்னோடு போர்புரியவாவென்று விஷ்ணுமூர்த்தியை யழைத்தகாலையில் அவர் ஆச்சரியமடைந்து, இது சிவனடியார்க்கபசாரமிழைத்தகொடுமையாலல் நாமென்னசெய்வதென்று சிந்தித்து அவனோடு பதினாயிரம்வருடம் போர்புரிந்து அவனுடைய செருக்குடைந்து போசநன்றாகப் புடைத்துப் புறங்கண்டோடும்படிச் செய்ததாகக் கூர்மபுராணத்தா லினிது பெறப்படும். பின்னர் அப்பிரகலாதன் விஷ்ணுவினிடத் தன்பொழிந்து சிவபெருமானை வழிபட்டொழுகும் புண்ணிய விசேஷத்தையடைந்து காசிப்பதியிற்சென்று சிவலிங்கப் பிரதிட்டைசெய்துய்ந்ததாகக் காசிகண்டமுதலிய வுண்மைநூல்கள் துணிந்து கூறும். இதுமட்டோ, இவர்கள் பெரியதிருவடியென்று வணங்குங்கருடனைச் சிவபெருமானுடையதிருமுடிமேலுலாவும்பெருவாழ்வுபெற்றசர்ப்பமொன்று "ஏன்கருடாசுகமா" என்று கேட்டுப்பங்கப்படுத்தியும், அக்கருடனது செருக்கழிய வொருகாலத்தில் நந்திகேசுரர் தமது சுவாசத்தால் நாசிவழியாய்ப்பலமுறை யுள்வாங்கியும் வெளியேவிடுத்தும் வருத்திச் சிறகுகளெல்லாம் முறிந்துபோகச்செய்து பங்கப்படுத்தியும், சிறியதிருவடியென்று கொண்டாடும் அநுமானை இராமபத்திரர் தாம் இராவணனைக் கொன்ற ஹத்திதொலையச் சிவப்பிரதிஷ்டை செய்யவேண்டிச் சிவலிங்கமொன்று கொண்டுவரும்படிக் காசிக்கனுப்பிய காலத்தில் நந்திகேசுரருத்தரவின்றி யிறுமாப்போடு சிவசந்நிதியை யணுகுதலும், ஆக்ஞையின்றி முன்னே நடக்கும் அநுமானுடைய இடையெலும்பு முறிந்து போகும்படி நந்திபகவான் தமது திருவடியைத்தூக்கிப் பின்னேயிருந்தோருதைகொடுத்து இரத்தங்கக்கிவிழும்படிச்செய்து பங்கப்படுத்தியும் நிகழ்ந்தபிரபாவங்கள் முறையே ஸ்காந்தம், வேதாசலமாந்மியம், காளிகாகண்ட முதலிய பிரமாணங்களாலினிது பெறப்படும். இப்படி யின்னுமநேகமுளவாகலி னிதனை யிவ்வளவிலே நிறுத்திவிட்டு மேல் சிவனடியார்களால்

விஷ்ணு பங்கப்பட்ட விருத்தாந்தங்களிரண்டொன்று எடுத்துக்காட்டுவோமாக.

சுபதேவனென்னும் அரசன் சிவபக்தராகிய ததீசி முனிவரை விரோதங்கொண்டு அவரை வெல்லும்படி விஷ்ணுவைநோக்கித் தவஞ்செய்த காலையில் விஷ்ணுமூர்த்தி வெளிப்பட்டு அவன்பக்கல் சார்ந்து ததீசிமுனிவரை யெதிர்த்துத் தமது சக்கராயுதத்தை அம்முனிவர்மேற் பிரயோகித்திடலும், அஃது குயவன்றிகிரியா மெனக் கூர்மழுங்கிய வலமாய்ப்போகவும் நாணி வில்லைவளைத்து அநேகமாயிரம்பாணங்களை வருஷித்துப் பராக்கிரமசாலியாக நின்றகாலையில் முனிச்சிரேஷ்டர் புன்னகைகொண்டுதருப்பைப்புல் லொன்றெடுத்து அப்பாணங்களையெல்லாம் விழுங்கும்படி விடுத்தலும் அத்தனை பாணங்களும் பாழாகிவிட்டதால் இனி யென்னசெய்வதென்றாலோசித்து முனிவர் பிரமிக்கும்படி விசுவரூபங்கொண்டு எண்ணிறந்த விஷ்ணுக்களாகத் தோன்றி அவரைச் சூழ்ந்து கொள்ளுதலும், முனிபுங்கவர் அவ்வதிசயத்தைக்கண்டு அஞ்சினவர்போலொதுங்கித் தமது திருவடியைத்தூக்கிப் பெருவிரலொன்றை யசைத்தமாத்திரத்தில் சங்கு சக்ர கதாகட்க கோதண்டபாணிகளாகிய விஷ்ணுக்கள் பற்பலகோடிகளாயுதிர்தலுங்கண்டு விஷ்ணுமூர்த்தி பயந்து ததீசிமுனிவரைச்சரணடைந்துய்ந்த மாந்மியம் பாத்மபூர்வத்திலும், ஸ்காந்தத்திலும் விசிதமா யெழுதப்பட்டிருக்கின்றது. அன்றியும் அகஸ்தியபகவான் குற்றாலமென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருந்த விஷ்ணுமூர்த்தியினுடைய சிரத்திலே தமது திருக்கரத்தையமைத்து அவருக்கு சிவசாரூப்பியத்தைக் கொடுத்தருளிய பிரபாவம் குற்றாலமாந்மியம், ஸ்காந்தமுதலியவற்றாலினிது பெறப்படும். இதனால் விஷ்ணு சிவசாரூப்பியத்தை யடைந்தாரென்பது பெறப்படினும் முக்கியவிருத்தியாற்சிவனடியாரால்பங்கப்பட்டது வெளிப்பட்டதென்க. இதுநிற்க, சங்குவர்னரென்பவரால் ஒருபெரிய யுத்தத்தில் விஷ்ணுமூர்த்தி சிகையறுப்புண்டு பங்கப்பட்டாரென்று ஸ்காந்தபுராணத்திற் கூறப்பட்டதன்றியும், சங்கரதாஸையரென்னும் மெய்யன்பரொருவர் காசிப்பதியி லெழுந்தருளியிருந்த விஷ்ணுமூர்த்தியைத் தமது நெற்றிக்கண்ணால் எரித்துவிட்டாரென்றும், பெருமாள் எரிந்துபோய்க் கோயில் குட்டிச்சுவராகிச் சூநியாலயமென்னும் பேராலிப்போதும் வழங்கிவருகிறதென்றும் வசவபுராணத்தில் ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது.

"மோகவாலயத்துவாழு முகுந்தனுக்குடலாம்பஞ்ச
லோகமுமெரிந்துவீழ்ந்த துரைபிரமாணமன்றே
போகவேயிந்தயோள் புரத்தினுளரிக்குத்தாதர்
சோகமேலிடவிருக்குஞ் சூரியாலயத்தைக்காண்டி"

என்று வரும்வாக்கியமே சான்றுமென்க. இப்படியேயின்னுஞ் சிவகணங்களால் பங்கப்பட்ட விருத்தாந்தங்கள் ஸ்காந்தமுதலிய பிரமாணங்களி லேராளமாயுரைக்கப் படுமாகையா லிதனை யிவ்வள விலே நிறுத்தி யினிச் சிவனடியார்களால் விஷ்ணு அநுக்கிரகம்பெ ற்ற மான்மியங்களை யெடுத்துக் கூறுவோமாக.

ஸ்ரீராமசந்திரர் தமது குலபத்தினியாகிய ஜானகியை யிழந்து சித்தப்பிரமங்கொண்டு ஆரண்ய சஞ்சாரஞ்செய்துகொண்டிருக் கையில் அகஸ்தியமுனிவருடைய ஆசிரமத்தையடைந்து தன்னு டைய குறைகளையெல்லா மவர்பாலெடுத்துச்சொல்லி அநுக்கிரகஞ் செய்யும்படிப் பிரார்த்தித்த காலையில் முனிபுங்கவர் கிருபைகூர் ந்து அவருடைய சித்தப்பிரமநதொலையுமபடித் தத்வஞானோபதே சஞ்செய்து தெளிவித்து மேல் விரஜாதீக்ஷைசெய்து சிவலிங்கப் பெருமானை யெழுந்தருளப்பண்ணிப் பூசிக்கும்படி அநுக்கிரகித்த ருளலும், சிவபெருமான உமாதேவியாரோடும் வெளிப்பட்டுப் பாசு பதாஸ்திரமுதலிய திவ்வியாஸ்திரங்களும் சீதையையடையும் வர மும் அருளிப்போயினரென்று பாத்மோத்தரத்திலும், வான்மீகப் புரோக்தமாகிய இதிகாசத்திலும் விசிதமாய்க் கூறப்பட்டிருக்கின் றது. இராமாயணத்தில் "அத்ரபூர்வம்மஹாதேவம்" என்னும் வாக்கி யத்தால் சீதையைமீட்டுக் கொண்டு ஸ்ரீராமபத்திரர் அயோத்திக் கெழுந்தருளுகையில் பஞ்சவடிதீரத்தை யடைந்து பூர்வத்தில் நான் இவ்விடத்தில் மகாதேவரை•யாராதித்து உன்னையடையும் வரத்தைப் பெற்றேனென்று கூறிய வுண்மையை யறியாமல் முடிச் சூர்முதலியென்பவன் தான்வெளியிட்ட "கூரேசவிஜயம்"என்னுஞ் சுவடியில் இராவணனைக்கொன்ற அத்திதொலையும்படி இராமன் சிவபிரதிட்டை செய்தற்காதாரமாகச் சைவர்கள் இந்தவாக்கியத தையே யுதகரிப்பதாக வெண்ணிக்கொண்டு பூர்வம் என்கிற சப்தத் தால் இராவணனைக் கொன்றபிறகு செய்த சிவபிரதிட்டைக்குப் பொருத்தமில்லையென்றும், ஹத் என்பது சலமாகவும் மஹாதே வனென்பது வருணனாகவுஞ் சமர்த்தித்து அவனை நான் பிரார்த் தித்தேனென்று சொன்னதாகக் காமதேநுவைவிட்டுக் கழுதையின்.

சாவில் விழுவா னிவனேபோலும் புரட்டியிருக்கின்றனன். பிரமகத்திதொலேயும்படி இராமன் சிவபிரதிட்டை செய்ததற்காதாரமான வாக்கியங்களே யிடம்வந்துழி யுதகரிப்போமாக. எமது பிரசங்கத்தால் மேல்வாக்கியம் பூர்வசப்தத்தால் பாதிக்கப்படாமை வெளிப்பட்டதன்றியும், பாத்மோத்தர வசனத்தால் இராமன் சிவதீட்சாவிசிட்டத்தை யடைந்தானென்று கூறுமுண்மையினுலும், மஹாதேவருடி நாமப்பிரதிபாதக விசேஷத்தானும் அப்பேதையினுடைய துர்வாதம் நிரஸ்தமாயிற்றெங்க.

இனி ஸ்ரீகிருஷ்ணருக்கு உபமன்யுபகவான் சிவதீக்ஷைசெய்து சிவபூசை யெழுந்தருளப் பண்ணிக்கொடுத்த விசேஷத்தால் அதனை விதிப்படியநுட்டித்துச் சர்வாபீஷ்ட சித்தியடைந்தனரென்று சைவபுராணம், மஹாபாரதம், கூர்மபுராணமுதலியவற்றுல் துணிந்து கூறப்படும். இனி ஞானசம்பந்தமூர்த்திகள் விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பியமளித்த வுண்மையை மேலிடங்களில் இருபத்திரண்டாம் பக்கத்தி லெழுதியிருக்கின்றே மாகையா லாண்டு கண்டுகொள்க. அன்றியும் பிரத்தியட்சப் பிரமாணமாய்த் திருமேற்றளியென்னும் தலத்திலுஞ்சென்று கண்டுணர்வாராக. இதுமட்டோ, ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் திருவஞ்சைக்களத்தில் சுவாமிதரிசனஞ்செய்து கொண் டிருக்கையில் விஷ்ணுமூர்த்தி பிரமன் முதலிய தேவர்களோடு ஆங்கடைந்து சுவாமிகளே யழைத்துக் கொண்டுவருப்படிச் சிவாக்ஞையாகையால் நாங்கள் யானே கொண்டுவந்திருக்கிறோம்; தேவரீர் இதன்மேலாரோகணித்துக்கொண்டெழுந்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்து அவ்வாறே சுவாமிகளே ஸ்ரீகைலாயத்திற் கழைத்துக்கொண்டுபோனதாக உபமந்யுபக்தவிலாசம், திருத்தொண்டர்புராணமுதலிய வுண்மைநூல்களில் கூறப்பட்டதன்றியும், சுந்தரமூர்த்திசுவாமிகளருளிய தேவாரத்திலும் விஷ்ணுமுதலியதேவர்கள் தம்மைவந்தெதிர்கொண்டு வழிபட்டதாகக் கூறியிருக்கின்றனர்.

"இந்திரன் மால்பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னே மத்தயானே யருள்புரிந்து
அந்தரமாமுனிவ ரிவனுரென வெம்பெருமா
னந்தமாரூரனென்று னுடைத்தான்மலே யுத்தமனே"

என்றுவரும் அருள்வாக்கியமே சான்றுமென்க. புராணப் பிரமாணங்களேப்பற்றத் தேவாரப்பிரமாணம் பிராசுரியமுடைய தெ

ன்க. பிரத்தியக்ஷ சித்தியாய் அவர்கள்வந்தெதிர்கொண்டு வழிபட்டதைக் கூறியவுண்மையுடைய தாகையால் ஒருவராலும் பாதிக்கப்படாமை வெளிப்பட்டது. இதனால் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய அருளைப் பெறுதற்கான பெரும்பாக்கியத்தை விஷ்ணுமூர்த்தி யடைந்தாரென்பது நாட்டப்பட்டது. ஹரதத்தாசாரிய சுவாமிகள்முதலாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளிறுதியாய் இதுகாறும் யாம்கூறிவந்த சிவபக்தாதிக்யவிசேஷப் பிரசங்கத்தால் இவர்கள் பேயாழ்வார்கள் சைவத்தைவென்றார்களென்னும் வீண்வாதம் அறவே நிரஸ்தமாயிற்றென்க. கூறனுதியராகிய இவர்களாழ்வார்கள் பாஞ்சராத்திராகம சித்தமான துர்மதப் பிரசாரத்தால் உலகத்தைக் கெடுக்கவே பிறக்கப்போகிறார்களென்று கேதாரகண்டமுதலிய நூல்களி லெழுதப்பட்டிருப்பதால் அவ்வுண்மையைப் பாலிக்கவே பிறந்து துர்மதப் பிரவர்த்தகம் பூண்டொழுகிவந்தவர்களைப்பற்றி யாமிங்கென்னை விஸ்தரித்தெழுதவுரியேம். இதனை யின்னும் விரிக்கிற்பெருகுமென்றஞ்சி யிவ்வளவிலே நிறுத்திவிட்டுப் பின்வருங் கட்சிகளுக்குச் சமாதானம் வரையப்புகுந்தனம்.

இனியவ் வழுவாசகப்பிறலில் நாலு-ஐந்து-ஆறு-எழு இலக்கங்களிட்டு எழுதியவிஷயங்கள் சிறுபிள்ளைகள் விவகாரமாய்க் காணப்படுதலால், அவைகட்கிங்கே சமாதானங்கூறாமல்விடப்பட்டது. அவற்றின் விஸ்தாரத்தை யாம் வெளியிட்டிருக்கும் "இராமாநுஜமதசபேடிகை" என்னுநூலில் பரக்கக்காணலாம். இதுநிற்க, மேற்கண்ட ஆறாவதிலக்கக்குறிப்பி லீண்டுசிந்திக்கவேண்டிய அத்யாவசியகரமான விஷயமொன்றுண்டு. என்னவெனின், அத்துஷ்டவாசகத்தில் "ஏகயேவருத்ரோநத்விதீயதே" என்கிற வாக்கியத்தையெழுதி இதன்பொருள் தேவர்கள்யாகஞ்செய்து யாகபதியாகிய விஷ்ணுவுக் கவிசளித்து முறையே சமஸ்ததேவர்களுக்குங் கொடுத்தபிறகு இன்னும் அவிசுபெறுதற்கு யாரேனுமுளரோவென்று கேட்டதற்குஉருத்திரனன்றி யிரண்டாவதியாருமில்லையென்று சொன்னதாகக் குலவிக்கூறியழுதார். அதனைப் பார்க்குந்தோறும் எமக்கு வியப்பும் நகைப்புமதிகரிக்கின்றது. சமஸ்ததேவர்களுக்கும் அவிசுகொடுத்தானபிறகு உருத்திரனன்றி அவிசுபெறுதற்கிரண்டாவதியாருமில்லையென்று பொருள்கொண்டக்கால் உருத்திரமூர்த்தி அவிசுபெற்றபிறகு மற்றும் அவிசுபெறுவார் ஒருவருமில்லாதிருத்தல் வேண்டும். ஆகவே அவிசுபெறுவாரில் உருத்திரமூர்த்தி கடைப்பட்

டவராதல்வேண்டும். அவிசு பெறுவாராகிய தேவர்கள் அதிகார
பேதத்தினாலேயே கிரமவரிசையாய்ப் பெற்றுவருவாராகலின், உரு
த்திரமூர்த்தியைக் கடைப்பட்டவராகக் கொள்ளுமிடத்து அவ
ரை சமஸ்ததேவர்களினுங் கீழ்ப்பட்டவராக நிச்சயிக்கப்படும்.
ஐயையோ இப்படிப்பொருள் கொண்டுதிரியும் பாவிகள் உருத்திர
னுக்கு மேலொருதெய்வமும், சம்ஹாரத்துக்கு மேலொருகிரியை
யும் இல்லையென்றுகூறும்வேதசாட்சிக்கென்னசெய்வார்கள்? இது
நிற்க, அவிசுபெறுதற் கியாரேனுமுளரோ வென்று கேட்டகாலத்
தில் உண்டு இல்லையென்று சொல்லவேண்டுவதொழிந்து இரண்
டாவ தியாருமில்லையென்று சொல்வது எவ்வளவும் பொருந்தாது
இரண்டாவதில்லையென்னும் பிரயோகம் உயர்ந்தவிடத்திற் பிரயோ
சனகரமாமன்றித் தாழ்ந்தவிடத்தில் நிஷ்பலிதமாகும் "ஏகமேவாத்
த்விதீயம்பிரஹ்ம" என்று வரும் வாக்கியத்தால் உத்கர்ஷப்பிராப்
யமே சித்தியாயினதன்றி ஸ்வல்பாநுகூலசித்தி பாதகமாய்விட்டது.
இந்த நியாயங்களால் உருத்திரமூர்த்திக் காதிக்கமதிகரிக்கின்றது.
அன்றியும் "காதபதிம்மேதபதிம்ருத்ரம்ஜலாஷபேஷஜம்" என்னும்
ருக்வேதவாக்கியத்தால் உருத்திரமூர்த்தியை மேதபதியென்றும்,
யஜ்ஞபதியென்றும் சத்துக்கள் நிச்சயிக்கின்றனர். "ஆவோராஜநா
மத்வரஸ்யருத்ரம்" என்கிற எஜுஸ்ஸம்ஹிதா வாக்கியத்தால் உருத்
திரமூர்த்தியை யஜ்ஞபதியென்று நிச்சயிக்கப்படுகின்றது. "அயம்
ஸோமஃ கபர்த்திநேக்ருதம் நவ்யதேமது த்ரிஸ்ஸப்தயத்துஹ்யாநித்வேயி
த்பதாவிதம்நிஹிதோயஜ்ஞியாஸஃ" இந்தமந்திரத்தால் சப்த ஹவிர்
யஜ்ஞ சப்தபாகயஜ்ஞசப்தஸோம யஜ்ஞங்களிலும் ருத்ரபதகபர்த்தி
பதங்கள் பிரகாசித்தலால் உருத்திரமூர்த்தியை யிருபத்தொரு
யஜ்ஞங்களுக்குந் தலைவராக நிச்சயிக்கப்படுகின்றது. "இமம்பசும்பசு
பதேதேஅத்யபத்நாம்யக்நேஸீக்ருதஸ்யமத்யே" என்றும், "ருத்ரோவா
யேஷயதக்நிஃ" என்றும் வரும் சுருதிகளால் உருத்திரமூர்த்தியை
அக்னிஸ்வரூபரென்று துணிந்துரைக்கப்பட்டது. மேல்வாக்கியங்
களால் அக்கினியைக்காட்டிலும்வேறுபடாத ஹேபசுபதீ! இந்தப்
பசுவை யஜ்ஞமத்தியில் உன்பொருட்டே கட்டுகின்றேன் என்று
ஸ்பஷ்டமாயுண்மைப்பொருள் வெளிப்பட்டதாகையால் யஜ்ஞபதித்
வம்சிவபெருமானுக்கே யுரிமையென்பது நாட்டப்பட்டது. அன்றி
யும், கூர்மபுராணத்தில் "அஹம்ஹிஸர்வஹவிஷாம்போக்தாசைவபல
ப்ரதஃ ஸர்வதேவதநுர்ப்பூத்வாஸர்வாத்மாஸம்ஸ்திதஃ" என்று கூறப்

பட்டுள்ளவாக்கியத்தால் சர்வகதனுகியும் சர்வசொரூபியாகியும், அக்னி சோமேந்திரவிஷ்ணுவாதி சர்வதேவ தநுர்ப்பூதனுகியும், சர்வ முக்கிய ஹவிர்த்திரவியங்களுக்கும்போக்தாவாய் நானே பலப்பிரதாதாவாகின்றேன் என்ற பரசிவவாக்கிய வுண்மைவெளிப்பட்டதால் சிவபெருமானுக்கே யஜ்ஞபதித்வம் சித்தமாயிற்றென்க.

ஆயின், இந்திராக்னிமுதலிய தேவர்களைச் சுருதியாதிகளிற் கூறுவதென்னையெனின், அக்னி உருத்திரமூர்த்தியினுடைய அஷ்டதநுவி லொருதனுவாகலானும், அக்னிமண்டலமத்தியில் அந்தரியாமியாயிருப்பவர் ஸ்ரீருத்திரமூர்த்தியேயாகலானும் சமஸ்த அக்னிஹோத்திராதி கர்மங்களெல்லாம் ருத்ரசேஷமாகவே காணப்பட்டதன்றியும், தேவதத்தாதி சப்தங்களால் சரீரவிசிஷ்டமாகிய ஆத்மஸ்பாவம் வெளிப்பட்டதுபோல இந்திராதி சப்தங்களால் ததந்தர்யாமியாகிய பரமேசுவரன் அந்தந்தஆஹுதிகளால் திருப்தியடைந்தவராய் அவ்விந்திராதிகளைத் திருப்தியடைவிப்பரென்பது சுருதிசம்மதயுக்தி போதகமென்க. இவ்வுண்மையை மேல்யாம்காட்டிய கூர்மபுராணவாக்கியத்தால் ஸ்ரீருத்ர மூர்த்தியை சர்வதேவதநுர்ப்பூதரென்றுரைத்த நியாயத்தை விசாரித்துத் தெளிந்துய்வாராக. இந்திராதி தேவர்களுக்குத்ததந்தர்யாமியாய் விளங்குவார் பரமசிவம் என்பதற்கு அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ணரிடத்திற்செய்த பூஜோபஹாராத்யுபசாரங்கள் சிவப்பிரீதிகரமாயிற்றென்றுரைக்கும் பாரதத் துரோணபர்வ வாக்கியமே சான்றுமென்க. இதுகாறும்யாமெழுதிவந்த நியாயங்களால் யாகபதியாவார் சிவபெருமானேயென்று இனிது பெறப்படுதலும், இவ்வுண்மையையறியாமல் யாகபதியாகிய அச்சுதனுக் கவிசளித்த பிறகு என்று முழநீளமெழுதிக் கொண்டஅப்போலி நாற்புலவர்விசாரஹீனத்திற்குப் புத்திமான்கள் விசனப்படாமலிரார்கள். இம்மஹாகவியைப் போலவே முடிச்சூர்க் கவியொன்றும், எழும்பூர்க்கவியொன்றும் தமது துஷ்டவாசகங்களில் பலவாறு பிதற்றியிருக்கின்றதுகள். அத்துராக்ஷேபங்கள் யாமிங்கேயெழுதிய சமாதானங்களாலேயே பரிகரிக்கப்பட்டதாகையால், அப்பசுபிராயர்கள் கூற்றுபாழாகிவிட்டதென்க.

ஆயின் விஷ்ணுவை யஜ்ஞபதியாக வேதங்களிற் கூறியதில்லையோவெனின், "யஜ்ஞேநயஜ்ஞமயஜந்ததேவா:" என்கிறபுருஷசூக்தத்தால் யாகீயபசுவாத்யுபகரணமான யஜ்ஞநாமத்தையுடையவிஷ்

ணுவால் யஜ்ஞேசுவராராதனரூபயாகத்தை தேவர்கள் செய்தார்களென்றுண்மை வெளிப்பட்டதாகையால், விஷ்ணுவை யஜ்ஞரூபியென்று கொள்ளவிடமுண்டாமன்றி யஜ்ஞபதியென்று கூறுவது எவ்வளவும் பொருந்தாதென்க. "யஜ்ஞோவைவிஷ்ணுః" என்கிற சுருதியேசாட்சியாவதோடு எழும்பூரிரெட்டியெழுதிக்கொண்ட வாக்கியங்களெல்லாமும் விஷ்ணுவை யஜ்ஞரூபியென்றே விளக்கினதாகலானும், வேதத்தில் கூறுத யஜ்ஞபதித்வம் விஷ்ணுவுக்கு இப்பசுபிராயர்கள் வேறெங்கேயிருந்து சொல்லவல்லவராவர்? விஷ்ணுவைப்பசுவாகக்கொண்டு தேவர்கள் சிவப்பிரீதியாக யாகஞ்செய்தார்களென்று சுருதிப்பிரமாணங்கள் வெகுவாய்க் காணப்படுமுண்மையை விசாரியாத இவர்கள் விளையிருந்தவாறு அந்தோகொடிது! கொடிது!! சிவபெருமானை காதபதியென்றும், மேதபதியென்றும், அத்வராஜனென்றும், யஜ்ஞபதியென்றும் பலநாமங்கள் பாராட்டி வேதங்கள் உதகரித்தவுண்மையை மேலிடங்களில் விஸ்தரித்துக் காட்டினோமாகையால் யஜ்ஞபதித்வம்யார்க்குண்டென்பதை புத்திமான்கள் பகுத்துணர்வாராக.

இதுமட்டோ, ஸ்ரீராமபத்திரர் பரதலட்சுமணுளைநோக்கி விளனென்னும் அரசன்மஹாதேவரையாராதித்துப் பரிமேதஞ்செய்துய்ந்தானுகையால், நாமும் அப்பரிமேதஞ் செய்வோமென்று சிவாராதனத்தால் அசுவமேதயாகஞ் செய்தாரென்று உத்தரராமாயணத்திலும், பரிமேதத்தால் மகாதேவரையே யுபாசித்தாரென்று போதாயனராமாயணத்திலும் ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்குமுண்மையால் யஜ்ஞபதி சிவனேயென்பது பெறப்பட்டது.

இவ்வாறே சைவம், ஸ்காந்தம், லைங்கம், பாகவதம், நாரசிங்க முதலிய புராணங்களால் யஜ்ஞபதியாவார் சிவபெருமானேயென்று நிச்சயிக்கப்பட்ட தாகையால் விபர்யாசாஸ்பதமான வீண்வாதங்கள் விட்டொழிந்ததென்க. பிரமன் - விஷ்ணு - இந்திரன் முதலாகிய தேவர்களும், மற்றை முனிவர்களும் காசி - குருக்ஷேத்திரம் - கங்காதீரம் - இந்துசரசு - மாநதசரசு - யமுனாதீரம் - சேதுகட்டமுதலிய ஸ்தானங்களில் உருத்திரமூர்த்தியை யாராதித்து அநேகயாகங்கள் செய்தார்களென்று பூர்வப்பிரமாணங்கள் வெகுவாய்விளங்குகையால், முழுப்பூசினைக்காயை சோற்றிலேமறைப்பதுபோல் சிவபெருமானுக்கு யஜ்ஞபதித்வம் யாண்டுங் கூறினதில்லையென்னும்

இவர்கள் பெரும்புரட்டுகளெல்லாம் பாழாகிவிட்டதென்க. இன்னும் யாகத்திரவியமாகிய பசுவும், தத்ஸம்பந்தமாகிய கௌவியமும் சிவ சம்பந்தமென்பது சர்வசம்மதமாகையால் யாகீயமான சமஸ்ததர்மங்களும் சிவசம்பந்தமென்றே நிச்சயிக்கப்பட்டது.

ஆயின் "அபஉபஸ்புருஸ்ய" என்கிற வாக்கியத்தால் உதகபரிஷேசனம், ருத்ராஹுத்யனந்தரத்தில் ஆசாரமாவதென்னையெனின், யாகங்களில் ருத்ராவிர்ப்பாகம் முதலிய கொடுக்கவேண்டியதாகவின், அங்ஙனங்கொடுத்தபிறகு விஷ்ணுவாதி தேவர்களுக்கு அவரோடு சமானமாக வுடனே கொடுக்கப்படாதாகையால் ருத்ராஹுத்யனந்தரமாகிய ஜலபரிஷேசனம் உருத்திரமூர்த்தி அந்தர்த்தானமாதற் பொருட்டென்று முதனூலுணர்த்துமென்க. "அப: பரிஷிஞ்சதிருத்ரஸ்யாந்தர்ஹித்யை:" என்கிறசுருதியால் உருத்திரமூர்த்தியினுடைய அந்தர்த்தானத்திற்காகச் ஜலபரிஷேசனம் செய்கின்றார்களென்று பெறப்பட்டது. "யோமஹாதேவமங்யேநஹீநதைவேநதுர்மதி: ஸக்ருத்ஸாதாரணம்ப்ரூயாத்ஸோந்த்யஜோநாந்த்யஜோந்த்யஜ:" என்கிற புராணவசனத்தால் எவன் அன்னியமான ஹீனதெய்வங்களோடு சமானமாக ஒருவார்த்தையாவது மஹாதேவரைப் பேசுவானோ அந்ததுர்மதியே சண்டாளனுவனன்றி லோகப்பிரதீதியால் சண்டாளனென்றழைக்கப்படும் அவன் சண்டாளனுகான் என்றுஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. மேல்வாக்கியங்களால் ருத்ராஹுத்யனந்தரம் ஜலபரிஷேசனப்பிரசங்கம் நிர்ப்பாதிதமாய் விட்டதென்க. இன்னுஞ் சிவபெருமானைச் சாமானியமாகிய இதரதெய்வங்களோடு சமானமாகக்கொண்டு நமஸ்காரஸ்தோத்திராதிகள் செய்யப்படாதென்று விதிக்கும் ருக்வேதவாக்கியத்தை யிங்கே யுதகரிக்கின்றோம். "மாத்வாருத்ரபிக்ருதாமாநமோநமோபிர்மாதுஷ்டுதீ திவ்ருஷபமாஸஹூதி" இந்தச்சுருதியில், சுரசிரேஷ்டப்பிரபுவாகிய ஹேருத்ரமூர்த்தி! உன்னை இதரதெய்வங்களோடு நமஸ்காரங்களாலும், துஷ்டஸ்தோத்திரங்களாலும், ஆஹ்வானங்களாலும் கோபிக்கச்செய்யோமாக என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் சிவபெருமானோடு சமானமாக இதரதெய்வங்கட் கவிர்ப்பாகங்கொடுப்பாரைப் பரமேசுவரர் கோபிப்பாரென்பது பெறப்படுதலால், சகலதேவதாஸ்வாமியாகிய ஸ்ரீ ருத்ரமூர்த்திக்கு அன்னியதெய்வங்களோடு சமானமாய் ஸ்மார்த்தசுரௌதகர்மங்களில் ஆஹுதிசெய்தல் கூடாதென்றும், ருத்ராஹுதிகொடுத்தபிறகு அவர் அந்தர்த்

தானஞ்செய்தற்காகவே ஜலபரிஷேசனம் ஆசாரமாயிற்றென்றும், உருத்திரமூர்த்தி அந்தர்த்தானஞ்செய்தபிறகே மற்றைதேவர்களுக்கு ஆஹுதிகொடுத்தல் வேண்டுமென்றும் நிச்சயித்து மேலோரநுஷ்டித்துவருகின்றனர். சிவபெருமான் அந்தர்த்தானஞ்செய்யாதபட்சத்தில் அவரோடுசமானமாய் அன்னியதெய்வங்கட் காஹுதிசெய்யக்கூடாதாகையால், ருத்ராஹுத்யனந்தரமான ஜலபரிஷேசனம் அத்தியாவசியகரமாயிற்றென்க. இப்படி விசாரித்தறியாத மூடஜனங்கள் உருத்திரமூர்த்தி நீச்சதெய்வமாகையால் ஜலபரிஷேசனம் அவர்க் காசாரமாயிற்றென்று தங்கள் சுவடிகளில் எழுதியிருக்கின்றனர். அவர்களறியாமையை யெடுத்துரைக்க எமக்கு நாணமாயிருக்கின்றது. அவரப்படியே நீச்சதெய்வமாகிறபட்சத்தில் சமஸ்ததேவர்களுக்குங் கொடுத்துத் தீர்ந்தபிறகு அவர் பெறுதற்குரியாரேயன்றி முதலில் அல்லது இடையில் பெறுதற்குரியாரென்பது எவ்வளவும்பொருந்தாது. இங்ஙனமாகவும், ஜலபரிஷேசனம் விதித்தமையால் அவர்க்குப்பின்னர் ஆஹுதிபெறுதற்கான தேவர்களின்னுமிருப்பதாகப் புலப்படுகின்றது. ஆகவே, அவர்க்குப் பிற்பட்டவர்கள் அதிக நீச்சமுடையாரென்பது பெறப்பட்டது. அதிக நீச்சமுடையாரைவிட்டு அற்ப நீச்சமுடையார்க்குச் ஜலபரிஷேசனம் விதித்ததுயாதுகாரணம்? அன்றியும், உருத்திரமூர்த்தி நீச்சதெய்வமானபோது முறையே அவர்க்குப்பின்னவர்கள் அதிக நீச்சமுடையாரென்பது பெறப்பட்ட நியாயத்தால் ஜலபரிஷேசனம் அநாவசியமென்றே நிச்சயிக்கப்படுகிறது. உருத்திரமூர்த்தியொருவர்தவிர மற்றவர்கள் நீச்சமுடையாரல்லவெனின், அல்லாதவர்களைப் பின்னிருத்தி உருத்திரமூர்த்தியை முன்னிருத்தியதற்குக் காரணம்வேண்டும். இது எங்குள்ள சாம்பிரதாயம்? இனி யிந்த விதிமுறையால் பஞ்சமனுக்கு முன்மரியாதையும், பிராமணனுக்குப் பின்மரியாதையும் செய்யவேண்டிவரும். இப்படிப் பூர்வோத்தர விரோதங்கள் வெகுவாய்க் காணப்படுதலால், உருத்திரமூர்த்தியை நீச்சதெய்வமென்று பிதற்றியது பேதமையாய்விட்டது. ஆகவே. அதிபரமாப்தராகிய உருத்திரமூர்த்திக்குக் கொடுத்த கரங்கொண்டே நீச்சதெய்வங்களாகிய விஷ்ணுவாதி தேவர்களுக்குச் சமானமாய் ஆஹுதிகொடுக்கப்படாதென்றே ருத்ராஹுத்யனந்தரமான ஜலபரிஷேசனம் ஆசாரமாயிற்றென்க. மேலிரண்டுநியாயங்களாலும் ஜலபரிஷேசனப் பிரசங்கம் நிர்ப்பாதிதமாய்விட்டதாகையால், யஜ்ஞபதித்வம் சிவபெருமானுக்கே யென்பது எல்லா விதத்தா

னுஞ் சாதிக்கப்பட்டது. இதனையறியாத அம்மூடசிரோமணி "ஏக யேவருத்ரோ" என்கிறவாக்கியத்தை யஜ்ஞசம்பந்தமாக அபார்த்தங் கொண்டு உபக்கிரமோபசம்ஹார நியாயங்களையறியாமல் எசுர் வேதம் முதற்காண்டம் எட்டாம்பிரசினத்திலுள்ளதாகப் பெரும் புளுகொன்று சாதிக்கவந்தார். அதனைச் ஜகத்காரணவிஷயமாய்ப் பிரதிபாதிக்கும் ருக்வேதவாக்கியமென்று மேலோர்கள் நிச்சயித் திருக்கின்றனர். அன்றியும், அந்தவாக்கியத்தை "நத்விதீயதே" என்று முடித்தார். "நத்விதீயாயதஸ்தே" என்று விளங்கும் வாஸ் தவசொரூபத்தை ஆபாசப்படுத்திக் கெடுத்துவிட்டார். அநதிகார தோஷத்தாலேயே யிவ்வாபாசங்கள் சம்பவிப்பதாகலின், அவரு டைய அதிகாரமிப்பகுதியினை யுடையதென்று புத்திமான்கள் கண் டிராமற்போகார் இதுகாறும் விவகரித்த நியாயங்களால் யஜ்ஞபதி யாவார் சிவபெருமானேயென்று பிரசங்கிக்கப்பட்ட தன்றியுந் தக்ஷப்பிரஜாபதியினுடைய யாகத்தில் விஷ்ணுமூர்த்தி யாகபதி யாயிருந்து வீரபத்திரரால் நாகபாசத்தாற்கட்டுண்டழிந்த மானக் கேடும், அவரை யாகப்பதியாகக்கொண்ட தக்கனுடைய தலையுரு ண்டுபோய்விட்டதும் சர்வப்பிரசித்தியாகையால் யஜ்ஞபதி சிவனே யென் றறியாதவர்கட்குத் தலைபோய்விடுமென்பதே சாஸ்திர சம் மதமென்க. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனி யவ்வழூவாசகப்பிறலில் சிவநின்மாலியப்பிரசாதம் அசுத் தவான்களுக்கே யுரியதென்றும், சுத்தாத்மாக்களுக்கு அருகமல்ல வென்றும், அதனை மண்ணிடைப்புதைத்தல், தடாகங்களிற்போடல் விகிதமென்றும், அதவாவுட்கொண்டால் அதோகதியடைவார்க ளென்றும், இவ்வாறு ஸ்காந்தம் மநுஸ்மிருதிமுதலிய பிரமாணங் களிற் கூறப்பட்டதென்றுந் தாறுமாறுகப்பிதற்றி அப்படி நிகழ்ந்த வுண்மை வெளிப்படத் தவளையின்கதையொன்று எழுதிவிடுத்தார். அன்றியும், "எவ்வமில் சிவன்கோயினின்மாலியம்" என்றற் றொடக் கத்துவாக்கியத்தால் சிவநின்மாலியம் சீலமுடையோர்களுக்கு ஆகா மையை அறப்பளீசுரசதகத்தால் சாதிக்கத்தலைப்பட் டொருமுறை யழுது தொலைத்தார்.

இதனைமுறையேவிவகரிக்குமிடத்து சிவநின்மாலியம் போஜ னயோக்ய மல்லவென்பது எவ்வளவும் பொருந்தாது. ஜாபாலசுருதி யில் "ருத்ரபுக்தம்புஞ்சீத ருத்ரபீதம்பிபேத் ருத்ராக்ராதம்ஜிக்ரேத்

ருத்ரேணுத்தம் மச்நந்திருத்ரேணபீதம்பிபந்தி ரௌத்ராக்ராதம்ஜிக்ரந்திதஸ்மாத்ப்ராஹ்மணுஃ ப்ரசாந்தமநஸோநிர்மால்யமேவபக்ஷயந்தி" என்கிறவாக்கியத்தால் சிவபுக்தமாகிய பிரசாதத்தையே புசிக்கவேண்டுமென்றும், ருத்ரபீதமாகிய ஜல க்ஷீராதிகளையே பானம்பண்ணவேண்டுமென்றும், ருத்ராக்ராதமாகிய கந்தபுஷ்பாதிகளையே ஆக்கிராணிக்க வேண்டுமென்றும் பெறப்படுதலால் சிவநின்மாலியகிராஹ்யம் சாந்தசிலர்களாகிய பிராஹ்மணர்களுக்கு நிர்ப்பாதிதமாய்ச் சாதிக்கப்பட்டது. இதற்குபப்பிரஹ்மணம் இலிங்கபுராணத்தில், "புஷ்பம்பலம்ஸுகந்தஞ்சவஸ்த்ராண்யாபரணுநிசசிவார்ப்பிதாநிஸ்வீகுர்யாதந்யதாகில்பிடீபவேத்" என்கிறவாக்கியத்தால் சிவார்ப்பிதமாகிய கந்தபுஷ்பமால்ய வஸ்திராபரணுதிகளையே கிரகிக்கவேண்டுமென்றும், அப்படி கிரகிக்காமல் ஆத்மபோகார்த்தமாய்க் கிரகித்தபக்ஷத்தில் பாபத்தை யடைவரென்றும் நிச்சயிக்கப்பட் டிருக்கின்றது. அன்றியும் பிரஹ்மாண்டபுராணத்தில் "மஹ்யமந்நம்ப்ரயத்நேநநிவேத்யாச்நாதியஸ்ஸதா ஸபூபாலஸ்ஸர்வவேத்தாபவத்யேவஹிவர்வதா அதீதாநாகதம்ஜ்ஞாநம்பூபாலத்வஞ்சசாச்வதம் ஜாதிஸ்மரத்வம்ஸௌந்தரியம் மந்நைவேத்யஸ்யபக்ஷணுத்" என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் சிவநின்மாலியத்தை எவன் புஜிப்பானே அவன் சகலார்த்த வேத்தாவாகிச் சக்ரேசுவரனுவனென்றும், அவனுக்குத் திரிகாலஜ்ஞானமும், நித்யபூபாலத்வமும், விசேஷசௌந்தரியமும் உண்டாகுமென்றும் விஸ்தரித் துரைக்கப்பட்டிருக்கின்றது. இந்த வாக்கிய விசேஷங்களால் சிவநின்மாலியம் பரமபாவனமாகக் கிரகிக்கத்தக்கதென்று நிச்சயிக்கப்பட்ட தாகையால், பூர்வோத்தர சம்பந்தங்கள் தெரியாமல் பிதற்றிவரும் பேடிவாசகங்கள் சபேடிகை செய்யப்பட்டனவென்க.

இனி யந்தத்துஷ்டவாசகத்தில் சிவநின்மாலியம் அசுத்தவான்களுக்கே யுசிதமென்றும், சுத்தாத்மாக்களுக் கருகமல்லவென்றும் எழுதித்தொலைத்தார். மேல்யாம் உதகரித்துக்காட்டிய உபநிஷத்வாக்கியத்தால் சாந்த சீலர்களாகிய பிராஹ்மணர்கள் பக்ஷிக்கின்றார்களென்று பெறப்பட்டதன்றியும், காமிகாகமத்தில் "அசுத்தாத்மாசுசிர்லோபாந்மத்புக்தம் பாவநம்பரம் பக்ஷயேந்நாசமாப்நோதிசூத்ரோஹ்யத்யயநுதிவ" என்று கூறிய சிவ வசனத்தால் உபநயன சமஸ்கார ரஹிதர்களாகிய சூத்திரர்களுக்கு வேதாத்யயனம் விநாசகரமாவதுபோல் சிவபாவனுரஹிதத்வத்தால் அபரிசுத்தாளாகிய பிரா

கிருதஜனங்களுக்குச் சிவநின்மாலியசேவனம் நரகஹேதுவென்று நிச்சயிக்கப்பட் டிருக்கின்றது. அன்றியும், சைவபுராணத்தில் "நிர்மால்யம் நிர்மலம்சுத்தம் நிர்மலத்வாதநிந்திதம்தஸ்மாதபோஜ்யம் நிர்மால்யம்ப்ராக்ருதைரசிவார்ச்சகைஃ லோபாந்நதா ரயேச்சம்போர் நிர்மால்யம்நசபக்ஷயேத்ஜிஹ்வாசாபல்யஸம்யுத்தஃ சிவஸம்ஸ்காரவர்ஜிதஃ சிவநிர்மால்யபோஜிசேத்ரௌரவம்நரகம்வ்ரஜேத்" என்கிற சுலோகத்தால் சிவசம்ஸ்கார வர்ஜிதர்களுக்குச் சிவ நின்மாலியம் அபோஜ்யமென்றும், அதவாகிடைக்கப்பெற்றால் நரக ஹேதுவென்றும், சைவதீக்ஷாவிசிஷ்டர்களாகிய சிவபக்தர்களுக்கே சிவநின்மாலியம் ஜன்மபாவனகரமென்றும் சாதித்துரைக்கப்பட்டது. இந்த நியாயங்களால் சிவநின்மாலியம் சுத்தாத்மாக்களுக்கே யுரித்தென்றும், அசுத்தாத்மாக்களுக்கு நரகஹேதுவென்றும் நாட்டப்பட்டது. இங்ஙனமாகவும், சிவநின்மாலியம் சுத்தாத்மாக்களுக்கு அக்கிராஹ்யமென்றுரைத்த மட்டிவாசகம் நிரஸ்தமாயிற்றென்க.

இதுநிற்க. "எவ்வமில் சிவன்கோயி னின்மாலியங்கிரண மிலகுசுடரில்லாதவூ, ணிவையெலாஞ் சீலமுடை யோர்களுக்காகா வெனப்பழைய நூலுரைசெயும்." என்னு நீதிவாக்கியத்தை யொருபெரிய பிரமாணமாகக் கொண்டு தனது மட்டி வாசகத்தைச் சாதிக்கப்புகுந்தார். அது எவ்வளவும் பொருந்தாது. அந்த நீதிநூல் சாதாரணமான ஒரு வித்வானால் செய்யப்பட்டதன்றிப் பூர்வாசாரியர்களால் செய்யப்பட்டதல்லவாகலின் அதனை யிங்கே யங்கீகரித்து நியாயஞ்சொல்வதவசியமன்றாயினும், அவ்வாக்கியத்துக்கு அபார்த்தங்கொண்டெழுதிய அப்பேதையினுடைய விபரீதத்தைக்காட்டிக் கண்டிக்கவேண்டுமென்பதுபற்றியே யீண்டுவரையப்புகுந்ததென்க. எவ்வமில் சிவன் கோயிலென்றெடுத்துச் சிவோத்கர்ஷப்பிராப்யந் தோன்றக்கூறினவர் சிவப்பிரசாதத்தை நிந்திப்பாரென்பது இம்முழுப்பேதைபோல்வார் துணிபாமேயன்றி மேதாவியர் கொள்ளாரென்க. மேலவ்வாக்கியத்துக்குப் பொருளியாதெனின், அந்தவாக்கியத்தில் சிவனுடைய கோயில்நின்மாலியமென்று கூறப்பட்டதனால் அதனுண்மைவிளங்க சில நியாயங்களைப் பிரமாணபூர்வகமாய் விஸ்தரித்துக் காட்டுவோமாக. பிரம்மாண்ட புராணத்தில் "சிவாநுபூதமகிலம்நிர்மால்யம்பரிபாஷியதேபோஜ்யம்தார்யமிதித் வேதாஷட்விதஞ்சபவிஷ்யதிதேவஸ்வம்தேவதாத்ரவ்யம்நைவேத்யஞ்சநிவேதிதம்சண்டத்ரவியம்பஹிஃக்ஷிப்தம்நிர்மால்யம்ஷட்விதம் ததாதேவஸ்வம்க்ராமபூம்யாதிதாஸீதாநசதுஷ்டயம்ஹேமநுப்யகராத்தாந்தி தேவத்ரவ்யமிதிஸ்மிருதம்யத்ஸங்கல்ப்யசதேவா

யபத்ரம்புஷ்பம்பலம்ஜலம்அந்நபாநாதிதத்ஸர்வம் நைவேத்யமிதிகீர்த்தி தம்ஏதத்த்ரிவிதநிர்மால்யமநர்ஹமிதிகச்சதேப்ரமாதாத் போஜநம்குர்வந் பூமௌஸஸ்யாதமங்களஃ சிவத்ரவ்யாபஹாரேண நரகம்மாத்யஸேஸ்ாநரஃ சிவோபபுக்தஸ்ரக்கந்தமந்நபாநாதிகம் ததாநிவேதிதமிதம்புரோக்தம்ம் ஸர்வபாபஹரம்பரம்ஸ்தாபிதம் வ்திவல்லிங்கம்ஸர்வைர்தேவாசுரயிர்ந ரைஃஏதத்திரிவிதநிர்மால்யம்சண்டேசாதிகிருதம்பவேத்பஹிஃக்ஷிப்தமநர் ஹம்ஸ்யாதந்யத்த்ரவ்யத்வகாரணத்பிசாசாநாஞ்சஸர்வேஷாமதிகாரோ த்ரஸர்வதாநிர்மால்யேஷட்விதேநித்யமேகமேவநிவேதிதம்”என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் நின்மாலியமானது தேவஸ்வமென்றும், தேவதாத்ரவ்யமென்றும், நைவேத்யமென்றும், நிவேதிதமென்றும், சண்டாதிக்ருதமென்றும், பஹிக்ஷிப்தமென்றும், ஆறுவிதங்களாய்ப் பகுக்கப்பட்டு அவற்றுள் தேவஸ்வமென்பது சிவசம்பந்தமான கிராமபூமியாதிகளென்றும், தேவதாத்ரவ்யமென்பது, சிவசம்பந்தமான சுவர்னரஜித ரதனாதிகளென்றும், நைவேத்யமென்பது சிவார்த்தமாய்ச் சங்கற்பிக்கப்பட்டு அர்ப்பணமாகாத அன்னபலபுஷ்பாதிகளென்றும், இம்மூன்றுவித நின்மாலியங்களுஞ்சுத்தாத்மாக்களுக்குக் கிராஹ்யமல்லவென்றும், மேல்நிவேதித மென்பது சிவார்ப்பிதமாய்விட்ட அன்னபலஜலாதிகளென்றும், இஃது பாவனமும், பாபஹரமுமாய்ச் சுத்தாத்மாக்களால் கிராஹ்யமாகத்தக்கதென்றும், சண்டாதிக்ருத மென்பது, “உத்தாதஹாசண்டேஸ்வராயநமஃ” என்று அர்ப்பிக்கப்பட்ட திரவியமென்றும், பஹிக்ஷிப்தமென்பது பாஹ்யதேசத்தில் வைத்திருக்கும் ஜலான்னபத்ர புஷ்பாதிகளென்றும், இவ்விரண்டில் முதலாவது சண்டேசுரப்பிரீதிகரமும், இரண்டாவது பிசாசப்பிரீதிகரமுமாகையால் இவைகளும் சுத்தாத்மாக்களுக்கு அக்கிராஹ்யமாகுமென்றுநிச்சயித்து ஒன்று கிராஹ்யமும், ஐந்து அக்கிராஹ்யமுமாக நாரதமுனிவர் கூறினதாகப் பெறப்படுதலால் யாமங்கேகாட்டிய கோயில் நின்மாலியமென்பது தேவஸ்வமாதிகளையே விளக்கினதன்றி நிவேதிதமாகிய சிவப்பிரசாதத்தை யன்றென்பது நிர்ப்பாதிதமாய்ச் சாதிக்கப்பட்டது.

இதுநிற்க, அம்மட்டிவாசகத்தில் சுருதிஸ்மிருதிகளிலும் சிவநின்மாலியதோஷங் கூறுவதாக எழுதப்பட்டிருக்கின்றது. அது இந்தச்சுருதியில் ஸ்மிருதியிலென்று காணப்படவில்லை. சிவநின்மாலிய கிராஹ்யமான சுருதிவாக்கியத்தை மேல்யாம் காட்டியிருக்கின்றேமாகையால் அப்பேதையினுடைய துர்வாதம் நிரசிக்கப்பட்டது. அதவா ஸ்மிருதிகளா லேகதேசமாய்ப்பாதிக்கப்பட்டாலும் அது

"ஸ்ருதிஸ்மித்யோர்விரோதேதுஸ்ருதிரேவபலீயஸீ" என்கிற நியாயத்தால் சுருதிஸ்மிருதிகளுக்குப் பரஸ்பரவிரோதமுண்டாகிற பட்சத்தில் ஸ்மிருதியைக்காட்டிலுஞ், சுருதிப்பிரமாணம் பலிஷ்டமுடையதாகக் கொள்ள வேண்டுமென்கிறபடிச் சுருதிபாஹுள்யமுடைய எமக்கு ஸ்மிருதிபாதகத்தால் வருந்தோஷம் நிஸ்புருஹமென்க.

இன்னும், அத்தஷ்டவாசகத்தில் சிவநின்மாலியத்தை மண்ணிடைப் புதைத்தல் தடாகங்களிற்போடல் விகிதமென்றும், அதவாவுட்கொண்டால் அதோகதியடைவார்களென்றும் ஸ்காந்தத்திலும், சுப்பிரபேதமென்னும் ஆகமத்திலுங் கூறப்பட்டதாக அழுதார். மேலிடங்களில் யாம்விவகரித்துவந்த நியாயங்களால் நின்மாலியப்பகுதிகள் வெளிப்பட்டதர்கையால் சண்டாதிக்ருதம், பஹிகூதிப்தமாகிய இவ்விரண்டுமே பக்ஷணயோக்கிய மல்லவென்று தடாகங்களில் விட்டுவிடச் சிவாகமங்கள் விதிக்குமன்றிச் சிவார்ப்பிதமாய்விட்ட நிவேதிதமாகிய சிவப்பிரசாதத்தை யொருபோதுஞ் சொல்லாதென்க. இனி அம்மூடவாசகத்தில் இறக்கமுத்தியென்கிற காசியில் சிவப்பிரசாத நுகர்ந்த பாதகத்தவனை யை அதற்கிறுதிநாள்வந்தபோது அமரர்கள் இப்புண்ணியக்ஷேத்திரத்தில் சிவப்பிரசாதநுகர்ந்த இந்தப்பாதகத்தவனை யுயிர்விடலாகாதென்றெண்ணிக் காகத்தைக்கொண்டு அதனைக் காசியெல்லைக்கப்புறத்தே யெறிந்துவிடும்படிச் செய்தார்களென்று காசிகண்டத்திற் கூறியிருத்தலால் சிவநின்மாலியத்திற்குப் போஜனயோக்கிய மில்லையென்று சாதிக்கப்புகுந்தார். காசிகண்டத்தில் ஓங்காரலிங்கத்தின் சிறப்புரைத்த அத்தியாயத்தில் சிவநின்மாலியநுகர்ந்த தவனையைக் காசிக்கப்புறத்தேகொண்டுபோய்க் காகமொன்று அதன் வினையிருந்தபடித் தின்றுவிட்டதாக எழுதப்பட் டிருக்கிறதன்றிக் காகத்தைக்கொண்டு தேவர்கள் காசிக்கப்புறத்தே எறிந்துவிடும்படிச் செய்ததாகக் காணப்படவில்லை. தேவர்கள் செய்தார்களென்று இல்லாத விஷயத்தைக் கற்பித்துரைத்ததனு லென்னபலன்கண்டார்? இப்படியெழுதுவதனுல் நூற்புரட்டரென்று நிச்சயிக்கப் படுகின்றனர். இதுநிற்க சிவப்பிரசாத நுகர்ந்த தவனைக்குத் தோஷாரோபிதம் வந்ததென்னையெனின், மேல்யாம் பலவிடங்களிலும் சிவநின்மாலியம் சுத்தாத்மாக்களுக்கே பிரயோசனங்கூறினேமன்றி அசுத்தாத்மாக்களுக் கல்லவாகலின் முழுமலதேகியாகிய தவனைக்கு எப்படி அப்புண்ணியப் பிரயோஜனங்கிட்டும்? இத்தவனை விருத்தாந்தத்தால் சிவநின்

மாலியம் அசுத்தாத்மாக்களுக்கே அருகமல்லவென்று பெறப்பட்டதால் சுத்தாத்மாக்களுக்கு உரிமையென்று நாட்டப்பட்டது. இவ்வுண்மையைப் பகுத்துணராமல் தவளையின்கதையைத் தனக்காதாரமாகக்கொண்டு தடுமாறிப்போய்விட்டார். இந்த நியாயங்களால் சிவப்பிரசாத கிராஹ்யம் சத்துக்களுக்குப் பரமபாவனமாமென்று நாட்டப்பட்டது.

ஆயின் சைவசம்ஹிதையில் "அநர்ஹம்மமநைவேத்யம்" என்கிற வாக்கியத்தால் எம்முடைய நின்மாலியம் அபோஜ்யமென்று சிவபெருமான்கூறிய தென்னையெனின், இவ்வாறு கேட்ட சைமினிபகவானுடைய சந்தேகமொழியும்படி "தேவதேவஸ்யவசஸோவிஷயோயம்நஜைமிநேயேவீரபத்ரசபிதாஃ சிவபக்திபராங்முகாஃ சம்போரந்யத்ரதேவேஷுயேபக்தாயேநதீக்ஷிதாஃ தேஷாமநர்ஹமீஸஸ்யதத்ப்ரஸாதசதுஷ்டயம்" என்கிற வாக்கியத்தால் வீரபத்திர மூர்த்தியால் சபிக்கப்பட்டவர்களும், சிவபக்தி விமுகர்களும், சிவபெருமானைவிட்டு அன்னிய தெய்வங்களிடத்துப் பக்திசெய்பவர்களும், சிவதீக்ஷா சம்ஸ்கார மில்லாதவர்களுமாகிய அநதிகாரிகளுக்குத் தமது நின்மாலியங் கிராஹ்யமாகாதென்று சிவபிரானருளியதாக வியாசபகவான் உபதேசித்தவுண்மைவெளிப்பட்டதனால் சிவநின்மாலியபோஜயத்திற் கருகமல்லாதவர்களின்னாரென்பது வெளிப்பட்டது. இதனால் சுத்தாத்மாக்களுக்கே சிவநின்மாலியபோஜ்யம் கூறப்பட்டது. பிரம்மாண்டபுராணத்தில் "நிர்மால்யஸலிலம்பீத்வாதேவதேவஸ்யஸூலிநஃ க்ஷயாபஸ்மாரகுஷ்டாத்யைர்ஹிஸத்யோமுச்யேதபந்தநாத் நிர்மால்யம்பரமம்புண்யம்நைவேத்யம்பாபநாசனம்ப்ரஹ்மசாரிக்ருஹஸ்தாநாம்யதீநாஞ்ஸ்விமுக்திதம்நிர்மலத்வாச்ச நிர்மால்யம்நிர்ணம்நைர்மல்ய காரணம்" என்னுமிந்தவாக்கியத்தால் சிவபாதோதக பானத்தினாலும், சிவார்ப்பிதமான ஜலபானத்தினாலும், க்ஷயாபஸ்மாரகுஷ்டாதிரோகங்கள் நசிக்குமென்றும், பரமபுண்ணியமாகிய சிவநின்மாலியம் பாபக்ஷயமென்றும், பிரம்ஹசர்ய கிருஹஸ்தாதி எதிகளுக்கும் முக்திப்பிரதாயகமென்றும் நிச்சயிக்கப்பட்டது. "உபவாஸசகஸ்ராணி பிராஜாபத்யாயுதாநிச சிவப்பிரசாதசித்தஸ்யகோட்யாம்ஸேநாபிநோஸமாஃ பத்ரம்புஷ்பம்பலம் தோயமந்நபாநாதிகோஷதம்சிவார்ப்பணம்விநாபுங்தேசத்யோபவதிகில்பிஷீ" என்னும் வாக்கியத்தால் உபவாசசகஸ்ரங்களும், பிராஜாபத்ய கிருச்சிராதிகளும், சிவநின்மாலியமாகிய சிவப்பிரசாத பாதோதக கிரஹண புண்ணிய பலங்கட்குக் கோடியமிசத்திலொன்றிற்குஞ் சமானமாகாது என்று பெறப்படுதலால் சிவார்ப்

பிதஞ் செய்யாமல் பத்ரபுஷ்பஜலான்னௌஷதங்களை யெவன் புஜி ப்பானோ அவன் உடனே பாபாத்மாவாய் விடுவனென்று மேலோர் கள் நிச்சயித்திருக்கின்றனர். இப்படியின்னும் அனேகவாக்கியங் கள் சுருதிசம்மதமாய்ப் புராணவசனங்களா லுதகரிக்கப்படுமாகை யால் சிவநின்மாலியப்பிரசாதங்களுக்குத் தோஷங்கூறிவரும் பாபா த்மாக்களுடைய துர்வாதம் நிரஸ்தமாய்விட்டதென்க.

இங்ஙனநிற்க ஸ்மார்த்தருட் சிலர் வேதத்தில் சிவநின்மாலியம் விதித்தது வைதிகசம்பந்தமேயன்றித் தாந்திரிக சம்பந்தமல்ல வென்று சிவத்விஜோத்தமர்களை நிநதைகூறுகின்றனர். சிவபூஜாவி திகளைச் சிவாகமங்களே பாஹுள்யமாய் விளக்கினதன்றி வேதங்க ளல்லவாகலின் வைதிகபூசையைச் சொன்னதென்பது எவ்வளவும் பொருந்தாது. திருமறைக்காட்டில் வேதங்கள் சிவாகமவிதிப்படிச் சிவாராதனஞ்செய்தது பிரமாணசித்தமாகையால் தாந்திரிகசம்பந் தந்தோஷமுடையதென்று பிதற்றுவது முழுமூடத் தன்மையென்க. இலிங்கபுராணத்தில் "சிவாக்ரேசிவநிர்மால்யமக்ஹ்ரித்வாசிவத்விஜாத் ஸ்வயமேவாததாநச்சேந்நரகம்ப்ரதிபத்யதே" என்கிற வாக்கியத்தால் எவன் சிவத்விஜோத்தமர் கொடுக்க வாங்கிக்கொள்ளாமல் தனக்கு த்தானே விபூதி பிரசாதகந்த குசுமாதிகளாகிய நின்மாலியங்களைக் கிரஹிப்பானோ அந்த நரன் நரகத்தை யடைவனென்று ஸ்பஷ்டமா ய்க் கூறியிருத்தலால் வேதத்தில் விதித்தது தாந்திரிகாராதனமே யென்று பெறப்பட்டுப் பிராமணாதி சாதுர்வர்ணத்தாரும் சிவப்பிரா ஹ்மணர்க ளிடத்திலேயே சிவப்பிரசாதம் பெறவேண்டு மென்பது சாதிக்கப்பட்டது. இதுகாறுங் கூறிவந்த நியாயங்களால் சிவநின் மாலியம் சர்வோத்கர்ஷமாய்ச் சாதிக்கப்பட்டதாகையால் பேதைக ளால் தூற்றப்படுந் தூஷணங்கள் நிஸ்புருஹமாய்விட்டதென்க.

இதுநிற்க, அத்துஷ்டவாசகத்தில் "விஷ்ணோர்நிவேதிதம்சுத் தம்" என்கிறவாக்கியத்தை யெழுதி விஷ்ணு நிவேதிதம் சுத்தமான தென்றும், அது போஜனயோக்யமென்றுங் குலவிக் கூறியழுதார். சிவப்பிரசாதமொன்றிற்கே போஜனயோக்யம் வேதத்தில் விதிக்கப் பட்டதேயன்றி இதரதேவதா சம்பந்தமொன்றுங் கூறினதில்லை யாகலின் விஷ்ணுப்பிரசாதகிராஹ்யோத்கர்ஷம் நிரசிக்கப்பட்டது. பாகவதாதிபிரமாணங்களில் "உச்சிஷ்டபோஜிநோதாஸா:" என்று விஷ்ணு நின்மாலிய கிராஹ்யங்கூறப்பட்டதேயெனின், "தேஹபுத் யாத்மதாஸோகம்" என்கிறவாக்கியப்படித் தேகபுத்தியுடைய தாசர்

களாகிய பாஞ்சராத்திரிகட்குச் சொன்னதேயன்றிச் சர்வவைதிக ஜனசம்மதமாய்ச் சொல்லப்பட்ட தல்லவென்க. பாஞ்சராத்திரிகளுக்கு மாத்திரமே விதித்ததால் அவைதிகத்வம்பெறப்பட்டது. அன்றியும் பாகவதம் ஏகாதசஸ்கந்தத்தில் "நோபயுஞ்ஜ்யாந்நிவேதிதம்" என்று கூறப்பட்டவாக்கியத்தினாலும் அதனுண்மை வெளிப்பட்டது. சிவப்பிரசாதமோவெனின், சுருதிசம்மதமா யுதகரிக்கப்பட்டதனால் நிர்ப்பாதிதமாய்ச் சாதிக்கப்பட்டதென்க. வைதிகர்கள் தாந்திரிகசம்பந்தமான நின்மாலியங் கொள்ளார்களேயெனின், அவர்கள் கொள்ளுவதன்முன் கொடுப்பாரொருவருமில்லையாகவும் அது கொண்டொரு தாழ்வுகூறவந்தது பேதமையென்க. சிவதீக்ஷா சம்ஸ்காரமில்லாதவர்கட்குச் சிவாலய நிவேதிதப்பிரசாதம் போஜன யோக்ய மாகாதாகையால் வைதிகருள்ளும் சிவதீக்ஷா விசிட்டத்தை யடைந்து மஹாசைவரானவர்களே அதற்குரியவர்களென்பது பெறப்பட்டது. மஹாசைவரானபிறகும் சிவாசாரியரைவிட்டுத் தாமே நின்மாலியத்தைக் கிரஹிப்பவர்கள் நரகத்தை யடைவரென்று இலிங்கபுராண வாக்கியத்தை மேல் காட்டியிருக்கின்றோமாகையால் தாந்திரிகாராதன நின்மாலியப் பிரசாதத்தை வைதிகர்கள் கொள்ளார்களேயென்னும் வீண்வாதம் நிரஸ்தமாயிற்றென்க. இவ்வுண்மை நியாயம்பற்றியே சிவாலயங்களில் சிவப்பிரசாதபாதோதகங்கள் சிவதீக்ஷா விசிஷ்டர்களாகிய சைவாசாரியர்களுக்குமாத்திரமே கிராஹ்யமாகி மற்றை அதீக்ஷிதர்களுக்கு அக்கிராஹ்யமாய்விட்டதென்க. மேல் விவகரித்தது தாந்திரிக வைதிக ஆராதனபேதமேயன்றி மூர்த்திபேதமல்லவாகலின் வேதத்திற் கூறிய ருத்ரபுக்தமாகிய பிரசாதபாதோதகங்கள் ஸர்வசம்மதமென்பது நாட்டப்பட்டது. தாந்திரிக வைதிகபூஜைகள் அதிகாரபேதத்தினால் சிவனை வழிபடும்மார்க்கங்களாக நிச்சயமாகையால் எந்த மார்க்கத்தாலும் சிவப்பிரசாத கிராஹ்யசித்தி சர்வோத்கர்ஷமாய்ப் பெறப்பட்டது. வைதிகதாந்திரிக தீக்ஷாபேதங்களைப் போலவே தாந்திரிகதீக்ஷையுள்ளும், சமயவிசேஷ நிர்வாண ஆசாரியாபிஷேகங்கள் விதிக்கப்பட்டு மூர்த்திமானொருவனையே காட்டுமுண்மையால் அவற்றை அதிகாரபேதமென்றே கொள்ளப்படும். மேல் விவகாரத்தால் வாதமெல்லாந் தீக்ஷாபேதத்தாற் பெறப்பட்டதன்றி மூர்த்திபேதத்தாற் பெறப்பட்டதில்லையாகலின் வைதிகர்க்கும், சைவர்கட்கும், சிவநின்மாலியகிராஹ்யம் சுருதி சம்மதப்படி யெந்தவிதத்துஞ் சாதிக்கப்பட்டது. விஷ்ணுப்பிரசாதம் சுருதிவிலக்கானபடியால் வைதிகர்கட்கு

அக்கிராஹ்யமாய்விட்டதென்க. வைதிகர்கள் சாளக்கிராமாதிகளை யாராதிப்பார்களே யெனின், முனிவர்களுடைய சாபத்தால் சாளக்கிராமாதிகளைப் பூசிக்கப்பெற்றவர்களாயினும் சிவலிங்கபூசையில், ஆதித்தியன், அம்பிகை, விஷ்ணு, கணநாதர்முதலியவர்களைப் பரிவாரரூபமாகவே கொள்வார்களன்றி முக்கியோத்தேசமாய்க்கொண்டு பூசிக்காரென்க. இதனால் அப்பஞ்சபூசையில் விநியோகமான நின்மாலியமும் ருத்ரசேஷமேயானதால் விஷ்ணுநிவேதிதம் வைதிகர்கட்குக் கிராஹ்யமாயிற்றென்பது நிரசிக்கப்பட்டது. மேலிடங்களில் யாம் விவகரித்த எச்சுவிஷயத்தில் இதரதெய்வங்களோடு சமானமாக நமஸ்காரங்களாலும், துஷ்டஸ்தோத்திரங்களாலும், ஆஹ்வானங்களாலும், ஸ்ரீருத்தரமூர்த்தியை யாராதிக்கப்படாதென்னும் ருக்ஸம்ஹிதா வாக்கியத்தைக்காட்டி யிருக்கின்றேமாகையால் அச்சுருதிக்கு விரோதமாய்ப் பஞ்சபூசையென்றுகொண்டு சிவபெருமானோடு ஹீனதெய்வங்களையும் ஆராதித்துவருவது அவர்கள் வினையிருந்தவாறென்க. இங்ஙனநிற்க, ருக்ஸம்ஹிதையில் "அந்தரிக்ஷம்த்திதம்ஐநேருத்ரம் பரோமநீஷயாச்சந்த்திஜிஹ்வாயாக்நுகந்த்திநஸம்" என்கிறவாக்கியத்தால் ஜனங்களிடத்து அந்தரியாமியாய்நிற்கும் பரனாகிய அந்தஉருத்திரனைப் புத்தியினாலுள்ளே பற்றுபவர்கள் சசியத்தை நாவினாலே கிரகிப்பர்கள் என்றுகூறுமாற்றால் அவ்வுருத்திரனை யுள்ளேபற்றாதவர்கள் மலத்தையே நாவினால் கிரகிப்பர்களென்று அப்பிரஸ்துதப் பிரஸம்சாலங்காரத்தாற் பெறப்பட்டது. இதனால் உருத்திரமூர்த்தியை யாராதிப்பவர்களே யுருத்திரநிவேதிதமாகிய அன்னத்தை யுண்பவர்களென்றும், உருத்திராராதன மில்லாதவர்கள் இதர தேவதாராதனர்களாகி மலத்தையே நாவினாற் பற்றுபவர்களென்றும் நிச்சயிக்கப்பட்டது. இந்த நியாயங்களால் சிவாராதனமும், சிவப்பிரசாதமுமே கிராஹ்யமாகி யிதர தேவதாராதனங்களும், நிவேதிதங்களும் அக்கிராஹ்யமாயிற்றென்க. மேல்வாக்கியத்துக்குபப்பிரம்ஹணமாய்ப் பராசரஸ்மிருதியில் "அந்தர்நேச்சந்தியேருத்ரம்பவாநீசகிதம்சிவம் புரீஷமேவக்ருஹ்ணந்தி ஜிஹ்வாயாதேநசம்ஸய:" என்று கூறப்பட்டது.

## மொழிபெயர்ப்பு.

வாச்சியார்த்தம்.

"நற்றவையுருத்திர நாயகன்றனைப்
பெற்றிபெறுந்தியாற் பெரிதகத்திடைப்

பற்றிடுவோர்நிதம் பரிந்துநாவினுற்
குற்றமிலமுதினைக் கொள்ளுவார்களால்"

கம்மியார்த்தம்.

"உற்றிடுமுமைபுணருருத்திரன்றனைப்
பெற்றிடுபுந்தியாற் பெரிதகத்திடைப்
பற்றிடாத்தீயர்கள் பரிந்துநாவினுற்
குற்றமாமலத்தினைக் கொள்வருண்மையே"

என்றுவரும் வாக்கியங்களாலினிதுதெளிவாராக. சிவநிவேதிதமல்லாதனவற்றை யுண்பவர்கள் மலபோஜனத்திற்கு யோக்யர்களென்று பெறப்பட்ட வுண்மையையறியாமல் விஷ்ணுநிவேதிதம் சுத்தமென்றும், அது போஜனயோக்யமென்றுங் கூறவந்த சுருதிபாதகவாதம் கண்டிக்கப்பட்டதென்க. விஷ்ணுநிவேதிதம் சுத்தமென்று கூறவந்தது கிறிஸ்துமதகம்மதீயர்களுந் தங்கள்தங்கள் தேவதாராதனங்களில் அர்ப்பிக்கப்பட்ட பதார்த்தங்களைச் சுத்தமென்று கூறுவதுபோலாமன்றிச் சுருதி சம்மதகிராஹ்யமான சுத்தமுடைமை பாதகமாய்விட்டது. சைவபுராணத்தில் "சம்போர்நிர்மால்யகம்சுத்தம்புஞ்ஜீயாத்சர்வதாத்விஜா: அந்நியதேவஸ்யநைவேத்தியம்புக்த்வாஸாந்த்ராயணம்சரேத்" என்கிற வாக்கியத்தால் பரிசுத்தமாகிய சிவப்பிரசாதம் சர்வபிராஹ்மணபோஜனயோக்யமென்றும், அன்னிய தேவதாராதித நிவேதிதம் அபோஜ்யமென்றும் பெறப்பட்டதுமன்றி ஸ்காந்தத்தில் "ப்ரசாதமந்நியதேவஸ்யபுக்த்வாவை கில்பிஷீபவேத்" என்கிற வசனத்தால் சிவப்பிரசாதமல்லாத அன்னிய தேவதாராதன பிரசாதத்தையுண்டவர்கள் நரகத்தையடைவர்களென்றும் நிச்சயிக்கப்பட்டதனுல் விஷ்ணுப்பிரசாதம் போஜனயோக்யமுடையதென்று பிதற்றவந்தது பேய்த்தன்மையாய்விட்டதென்க. இதுமட்டோ, "ஜஸாவாஸ்யமிதம்சர்வம்யத்கிஞ்சித்ஜகத்யாம் ஜகத்தேநத்த்யக்தேநபுஞ்ஜீதாமாக்ருத: கஸ்யசித்தநம்" என்கிற உபநிஷத்வாக்கியத்தாலும் சிவநிவேதித கிராஹ்யமும் இதர தேவதாநிவேதித அக்கிராஹ்யமுங் கூறப்பட்டதாகையால் விஷ்ணுநிவேதிதம் போஜனயோக்யமென்று கூறவந்தது பாழாகிவிட்டதென்க. இதுகாறுங் காட்டிவந்தநியாயங்களால் சுருதி சம்மதபோதகமாகிய சிவநின்மாலியப் பிரசாதமொன்றே சுத்தாத்மாக்களுக்குப் போஜனயோக்யமென்றும், விஷ்ணுமுதலிய க்ஷுத்ர தேவதாராதனநின்மாலியங்கள் அயோக்யமென்றுஞ் சாதிக்கப்பட்டது. இவ்வுண்மை

யைப் பதுமம், மானவீயசம்ஹிதை, இராமாயணம், பாகவதம், விஷ்ணுபுராண முதலியவற்றுள்ளுங் கண்டு தெளிவாராக.

இனி யவ்வழுவாசகத்தில் ஸ்ரீயப்பதி கிருஷ்ணவதாரஞ் செய்தருளியபோது சதுர்வேதபாரகர்களிலுஞ் சிலர் அவனது அதிதிவ்ய மாயாமோகனத்தால் கெட்டுப்போகக் கேவலம் மௌட்டியாளான ஏகாலியன், யாதவாள், ததிபாண்டன்முதலாயினோர் பிரபத்திசெய்து மோட்சமடைந்தார்களென்றும், பித்தப்பெருமானைக் கண்ணப்பர் எறிபத்தர் முதலாயினோர் தெரியாமல் ஒருவிதபத்திபண்ணி உருத்திரபதவியையடைந்தார்க ளென்றுங்கூறிப் பிரபத்தி பண்ணுகிறவர்களை முட்டக்கல் லடுக்கியென்றும், முடிச்சவிழ்க்கிறவர்களென்றுந் தூஷிக்கப்படாதென்று அபிமானம்பூண்டழுதார்.

இதனை முறையேவிவகரிக்குமிடத்து ஸ்ரீயப்பதி கிருஷ்ணவதாரஞ்செய்தாரென்பது பிரமாணவிரோதமென்க. ஸ்ரீமகா பாரதத்தில் விஷ்ணுமூர்த்தி தன்னுடையதேகத்தினின்றும் எடுத்துவிட்ட வெள்ளைமயிரொன்று பலராமனாகவுங் கறுப்புமயிரொன்று கிருஷ்ணனாகவும் பிறந்ததாக இனிது பெறப்படுதலால் ஸ்ரீயப்பதியே கிருஷ்ணனாகவந்தாரென்பது வெறுங்கதையாய்விட்டது. இப்படிப்பட்ட அவதாரவிசேஷத்தை மௌட்டியாளாகிய ஏகாலியன், அம்பட்டன், வண்ணான், ஒட்டன், உப்பரவன்முதலியவர்க ளாச்சிரயிப்பார்களையன்றிச் சதுர்வேத பாரகர்கள் எப்படியாச்சிரயிப்பார்கள்? அப்படியவதரித்த கிருஷ்ணனுடைய பிரபாவத்தை விசாரிக்குமிடத்துத் தந்தையாகிய வசுதேவனுடைய கர்ப்பத்தி லிரண்டுமாசந்தங்கியிருந்து அவன்விட்ட வீரியத்தின்வழியாய்த் தாயுதரத்திற்சேர்ந்து அங்கு பத்துமாசம்வரையில் மலசலத்திலூறியும், புழுக்களாற்குடையப்பட்டுப் பலதுன்பங்களை யநுபவித்திருந்தும், பின்னர் வெளிவந்து பாலியாவத்தைமுதலிய பலசேட்டைகளையடைந்தும், கடைசியில் வேகாத குறைக்கட்டைப்பிணமாக யாவருங்காணச் செகந்நாதத்திற் கிடப்பதுமாகிய விருத்தாந்தங்கள் வெளிப்படுமானால் யார்தானாச்சிரயிப்பார்கள்? சதுர்வேதபாரகர்கள் பிரபத்திசெய்யாது அவனுடையமாயாமோகனத்தால் கெட்டார்களென்றார். இதனால் அவர்களைக்கெடுத்தவன் இவர்கள்கரியபெருமானேயென்று பெறப்பட்டதால் பதிதர்மம் பாதகமாய் விட்ட தென்க. சதுர்வேதபாரகர்கள் கெட்டார்களென்றும், ஏகாலி, இடையன் முதலியவர்கள் மோக்ஷ

மடைந்தார்களென்றும் பிதற்றியழுதார். வேதபாரகர்களே அவனுடைய மாயாமோகனத்தால் கெடுவாராயின் பௌட்டியாளாகிய ஏகாலி, இடையன் முதலியவர்கள் பிரபத்திசெய்தார்களென்பது விருத்தநியாயத்தை விளைவிக்கும். ஏழை, இடையன், இளிச்சவாயனென்பவர்களாகிய இராமன், கிருஷ்ணன், நரசிங்கன் முதலியவர்களை அவதார விசேஷங்களாகக்கொண்டு பரசிராமன், பலராமன், மீன், ஆமை, குதிரை, பன்றி அவதாரங்களை யோக்யமன்றெனக்கழித்துப் பக்திபாராட்டிவரும் இப்பேதைகளில் ஏகாலி, இடையன் முதலியவர்கள் பிரபத்திக்கு யோக்யராவரன்றிச் சதுர்வேதபாரகர்கள் ஆகாரென்பதே யெம்முடைய சம்மதமுமென்க. இவர்கள் உடையவர்காலத்தும், ஒட்டன் உப்பரவன் முதலியவர்களையே பிடித்துச் சூடுபோட்டுச் சேர்த்துக்கொண்டு சிஷ்யசாம்பிரதாயம் விருத்திசெய்ததாக மேலிடங்களில யாம் காட்டியிருக்கின்றோமாகையால் அது இங்கே சமர்த்திக்கப்பட்டது. இங்ஙனமாகவும், ஆத்மாக்களுடைய கன்மானுகூலசித்தியாய்ச் சமஸ்ததர்மங்களும் நிகழ்ப்பெறுமென்பதே சாஸ்திரசம்மதமாகவின் அவனுடைய மாயாமோகனத்தால் கெட்டார்களென்று பிதற்றவந்தது பேதைமையாய்விட்டதென்க.

இங்ஙனநிற்க, கண்ணப்பர்முதலாயினோரடைந்தது உருத்திரபதவியாகிய கைலாசகிரியென்றும், இவர்கள் ஏகாலி முதலியவர்களடைந்தது மோக்ஷவீடென்றும முத்தி தாரதம்யங் கண்டெழுதவந்தார். கண்ணனிடமே கீதாவுபதேசம்பெற்ற அருச்சுனன்றானே கண்ணப்பராக அவதரித்துச் சிவாராதனத்தால் முத்தியடைந்தமான்மியம் காளஹஸ்திபுராண முதலியவற்றால் நிச்சயிக்கப்பட்டதனால் கண்ணனை ஆச்சிரயித்தவர்க்குப் பிறப்புடைமையும், சிவனை ஆச்சிரயித்தவர்க்கு முத்தியுடைமையும் பெறப்பட்டது.

"கண்ணப்பனொப்பதோ ரன்பின்மைகண்டபி
னென்னப்பனென்னொப்பி லென்னையுமாட்கொண்டருளி
வண்ணப்பணித்தென்னை வாவென்றவான் கருணை
சுண்ணப்பொன்னீற்றற்கே சென்றூதாய்கோத்தும்பீ."

என்னுந்திருவாக்கால் கண்ணப்ப சுவாமிகளுடைய அன்பின்திறத்தை ஸ்ரீமந்மாணிக்கவாசக சுவாமிகளாலெடுத்துக் கூறப்பட்டதன்றியும், சிவானந்தலஹரியில் "மார்க்காவர்த்திதபாதுகாபசுபதேரங்

கஸ்யகூர்ச்சாயதேகண்டூஷோம்பு நிஷேசனம்புரரிபோர் திவ்யாபிஷேசாய தேகிஞ்சித்பக்ஷிதமாம்ஸஸேஷகபளம்சவ்யோபஹாராயதேபக்தி: கிம்ந கரோத்யஹோவனசரோபக்தாவதம்சாயதே" என்கிற வாக்கியத்தால் அவருடையபக்திவிஷயங்களை முறையேயெடுத்துக்கூறிப்பக்தசிரேஷ்டசிகாமணியென்றும் சங்கராசாரியரால் துதிக்கப்பெற்றதனால் அப்பேதையினுடைய பாழ்ம்பிரசங்கம் பேய்க்கூச்சலாய்விட்டதென்க. பேயினாற்பிடியுண்டான் செய்கையாவும் பேய்ச்செய்கையேயாமாபோல் சிவபக்தியுக்தபாரம்ய விசேஷத்தால் எல்லாஞ் சிவச்செயலாக அற்புதங்கண்டருளும் எமது சுவாமிகளைத்தெரியாமல் ஒருவித பக்திசெய்தாரென்று நிந்தைகூறிய அப்பேதையினுடைய வாய்புழுத்தழியுமென்பதே நிச்சயமென்க. இங்ஙனநிற்க, எல்லாப்பேற்றினுஞ் சிறந்தது சிவப்பேறென்னு முண்மையையுணராமல் விஷ்ணுபதத்தை மோக்ஷவீடென்றும், ருத்ரஸ்தானத்தை யொருபதவியென்றும் புலம்பினர். "தவச்ரியேமருதோமர்ஜயந்தருத்ரயத்தே ...மசாருசித்ரம்பதம்யத் விஷ்ணோருபமங்யதாயிதேநபரஸிகுஹ்யாம்நாமநாம்" என்னும் ருக்ஸம்ஹிதாவாக்கியத்தால் சமஸ்ததேவர்களும் சிவலிங்காராதனத்தால் தங்கள் ஐசுவரியங்களை யடைந்தாரகளென்றும், லட்சுமீசமேதராகிய விஷ்ணுவானவர் சிவலிங்கபூசை செய்து பரமபதத்தையடைந்தாரென்றும் பெறப்பட்டதனால் விஷ்ணுபதமானது சிவாராதனத்தால் வந்ததாக நிச்சயிக்கப்பட்டது. உருத்திரமூர்த்தியை யாராதித்துப்பெற்ற விஷ்ணுபதம் அவ்வுருத்திரஸ்தானத்தைகாட்டிலு முயர்ந்தமோக்ஷஸ்தானமென்று கூற வந்தது என்ன அறியாமை? மேலுதகரித்த சுருதிக்குபப்பிரம்ஹணமாய்ப் பிரம்ஹகைவர்த்தத்தில் "ரௌத்வம்ஸமப்யார்ச்யஹரிலிங்க மாதோசிலாமயம் சாருஹரிஸ்துபக்த்யாஸ-துர்லபம்வைஷ்ணவமாத்யமிக்வயமவாப்தவாநேஷபரம்பதந்தத்" என்கிற வாக்கியத்தால் இந்த விஷ்ணுவானவர் ஆதியில் சுந்தரமாகவும், சிலாமயமாகவுமிருக்கின்ற சிவலிங்கத்தைப்பூசித்துச் சர்வோத்கர்ஷமாகிய பரமபதத்தையடைந்தாரென்று கூறப்பட்டிருத்தலால் விஷ்ணுபதம் மோக்ஷஸ்தானமென்பது நிரசிக்கப்பட்டது. மேல்நியாயங்களால் உருத்திரஸ்தானமே விஷ்ணுவாதிபதங்களைக்காட்டிலுஞ் சிறந்த மோக்ஷஸ்தானமென்று சாதிக்கப்பட்டது. ஸ்காந்தத்தில் "ப்ரதமாத்ப்ரஹ்மலோகாப்தீம்த்விதீயாத் வைஷ்ணவம்பதம் ப்ரதக்ஷிணாத்த்ருதீயாத்துலோகம்மாஹேச்வரம்வ்ரஜேத்" என்கிற வாக்கியத்தால் முதற்பிரதக்ஷிணத்தால்

பிரம்ஹலோகத்தையும், இரண்டாவது பிரதக்ஷிணத்தால் விஷ்ணுலோகத்தையும், மூன்றாவது பிரதக்ஷிணத்தால் சிவலோகத்தையும் ஆத்மாக்களடைவர்களென்று பெறப்பட்டதனாலும் "ஸம்ஸாரயோயாத்ப்ரபச்யந்திதத்விஷ்ணோ: பரம்பதம்" என்கிற வசனத்தால் எந்தபதத்தை வித்வான்கள் பார்க்கின்றார்களோ அது விஷ்ணுபதத்தைக்காட்டிலு முயர்ந்த பரமபதமென்று நிச்சயிக்கப்பட்டதனாலும், ருத்ரஸ்தானமே மோக்ஷபதமென்று சாதிக்கப்பட்டது. இதுநிற்க, பிரபத்திசெய்பவர்களை முட்டக்கல்லடிக்கியென்றும், முடிச்சவிழ்க்கிறவரென்றுந் தூஷிக்கப்படாதென்றார். இதனால் இவர்களில் பிரபத்திசெய்பவர்கள் முட்டக்கல்லடிக்கியும், முடிச்சவிழ்க்கிறவருமேயாகி அவரெவ்வியல்போராயினும் அவர்களை யொன்றுஞ்சொல்லப்படாதென்று இவர்கருத்து வெளிப்படுகின்றது. முடிச்சவிழ்க்கிறதுமுதலிய துர்க்குணங்களை யெடுத்துக்காட்டிக் கண்டிப்பவர்களையிப்பேதைவெறுப்பதனால் அவர்களில் தாமு மொருவர்போலுமென்று சங்கிக்க விடமுண்டாகிறது. இவருடைய பாழ்ம்பிரசங்கத்தில் மௌட்டியாளாகிய ஏகாலியன் முதலியவர்களென்று தாமே குறித்ததனால் முட்டக்கல்லடிக்கிகளாகிய மூடசிரோமணிகளே பிரபத்திக்குரியாரென்பது நிச்சயிக்கப்பட்டது. மெடலைன்னங்கோவிந்தராஜப்பெருமாளிடத்துப் பிரபத்திசெய்வார்களு மிவர்க்குப் பக்கத்துணைவர்போலும். இவர்களுடைய பிரபத்திமார்க்கத்தைச் சடகோபர்முதலிய பூர்வீகர்களனுட்டித்ததில்லையாகலின் முட்டக்கல்லடிக்கிகளுக்கே பிரயோசனமாயிற்றென்க. நம்மாழ்வாருடைய பிரபந்தத்தில், "எறியபித்திரேல்"என்னும் பாசுரத்தில் "நீறுசெய்யேயிடுவாரைக்காணின் னெடுமாலடியாரென்றோடும்" என்று கூறியிருந்தலால் விஷ்ணுபக்தர்களும் நீறு பூசுபவர்களேயென்று நிச்சயிக்கப்பட்டுச் சித்தூர்த்துவபுண்டர தப்தமுத்திராங்கிதங்கள் நிரசிக்கப்பட்டதனால் பிரபத்திமார்க்கம் அவலமாய்விட்டதென்க. இவர்கள் பாகவதசிரோமணிகளாகக்கொண்ட விபீஷணன், பிரகலாதன், அருச்சுனன், துரோபதை முதலியவர்கட்கும் பஞ்சசம்ஸ்கார விதாயகமாகிய பிரபத்திமார்க்கம் பிரசங்கிக்கப்படாமை நிச்சயமாதலையால் அதனுண்மை யித்திறத்ததென்று புத்திமான்கள் கண்டிராமற்போகார். இதுநிற்க, பிரபத்திசெய்பவர்களைத் தூஷிக்கப்படாதென்பதற் காதாரமாய்ப் பிள்ளைப்பெருமாளையங்காருடைய பாடல்களிலொன்றை யுதகரித்தழுதார். அப்பாட்டோவெனின், அப்பர்சுவாமிகளருளிய தேவாரப்பொருளைக் களவுகொண்டதாகப் புலப்படுகின்றது.

## அப்பர்சுவாமிகள்.

"சங்கநிதிபதுமநிதி யிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத் தருவரேனு
மங்குவாரவர்செல்வ மதிப்போமல்லே
மாதேவர்க்கேகாந்த ரல்லராகி
லங்கமெலாங்குறைந்தழுகித் தொழுநோயரா
யாவுரித்துத்தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்பராகி
லவர்கண்டீர்யாம்வணங்குங் கடவுளாரே."

## பிள்ளைப்பெருமாளையங்கார்.

பாதியாயழுகியகால் கையரேனு
பழிதொழிலுமிழிகுலமும் படைத்தாரேனு
மாதியாயரவணையா யென்பாராகி
லவர்கண்டீர்யாம்வணங்கு மடிகளாவார்
சாதியாலொழுக்கத்தான் மிக்காரேனுஞ்
சதுமறையால்வேள்வியாற் றக்காரேனும்
போதின்முகன்பணியப் பள்ளிகொள்ளும்
பொன்னரங்கம்போற்றாதார் புலையர்தாமே."

மேல் வாக்கியங்களால் இவர்க ளையங்கார்திறம் வெளிப்பட்டது. ஆகவே, அத்திருட்டுப் பாட்டைக்கொண்டு சபையேறவந்தது அறிவின்மையும், அவமானமுமாய் முடிந்தது. ஆயினும், அது அப்பர்சுவாமிகள் கருத்தை யுடன்கொண்டிருப்பதொன்றாகலின், அங்கீகரித்து நியாயஞ்சொல்வ தவசியமாயிற்று. அப்பிள்ளைக்கவியில் பிரபத்திசெய்வாரிழிவுடையராயினுமென்றது பகவத்குணானுபவஞ் செய்பவர்மாட்டுத் தமக்கிருக்கும் அன்பு வெளிப்படுத்தவென்க. இதனால் பிரபத்திசெய்வார் முடிச்சவிழ்க்கிறவர்களும் முட்டக்கல் லடுக்கிறவர்களுமாகவே யிருப்பார்களென்று அபிமானம்பூண்டு துர்வாதத்திற்கெழுந்தது விசாரசூனியமென்க. இப்படியே யிவர்களாழ்வார்களும் தேவார திருவாசகப்பொருள்களைத் தங்கணூல்களில் கிரகித்திருக்கின்றனர்.

## வாதவூரடிகள்.

இன்றெனக்கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று

நின்றநின்றன்மை நினைப்பறநினைந்தே
நீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லை யன்றியொன்றில்லை
யாவரேயறியகிற்பாரே."

## சடகோபர்.

நின்றவொன்றை யுணர்ந்தேனுக்
கதனுண்ணேர்மை யதுவிதுவென்
றொன்றுமொருவர்க் குணரலாகா
துணர்ந்துமேலுங் காண்பரிது
சென்றுசென்று பரம்பரமா
யாதுமின்றித் தேய்ந்தற்று
நன்றுதீதென் றறிவரிதாய்
நன்றாய்ஞானங் கடந்ததே."

மேல்வாக்கியங்களால் பொருளமைதியோடு சொல்லமைதியும் பெற்று விளங்கலான் வாஸ்தவார்த்தம் வெளிப்பட்டதென்க. திருவாசகம், திருவாய்மொழியென்னும் பிரபந்தங்களே யிதற் காதாரமாகையால் அவற்றின்பொருளே விரிக்கு மிடத்துத் திருவாசகமென்னுஞ் சொற்பொருளே திருவாய்மொழியென்று பெறப்பட்டதனுலும் புத்திமான்கள் பகுத்துணர்வாராக. இங்கே யாமிதுகாறும் விவகரித்துவந்த நியாயங்களால் முன்னும்பின் முரணுகக்கூறிவந்த மூடவாசகங்கள் நிரஸ்தமாயிற்றென்க.

இனி யவ்வழுவாசகப்பீறலில் "காரணந்துத்யேய:" என்கிற வாக்கியத்தால் ஜகத்காரணவஸ்துவாகிய கடவுளையே தியானிக்கவேண்டுமென்று கூறி, ஆங்கிரச உபநிஷத்வாக்கியமாக "ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரம்ஹா நசங்கர:" என்னும் வாக்கியத்தையெழுதிப் பிரம்ஹருத்ராதிக ளிறந்தகாலத்தில் நாராயணனொருவனே யிருக்கின்றானென்றும் "ஸமசிந்தயத்ததயே தேத்யாநாஜ்ஜாயந்தே விஸ்வோ ஹிரண்ய கர்ப்போக்நி யமம்வருணருத்ரேந்திர:" என்கிற வாக்கியத்தால் அவனினைத்தமாத்திரத்தில் உலகங்களும், பிரமன், அக்னி, யமன், வருணன், உருத்திரன் இந்திரனு முண்டானார்களென்றும், "பிரம்ஹாணமிந்திரம்ருத்ரஞ்ச, யமம்வருணமேவச, நிக்ரஹ்யஹரதேயஸ்மாத், தஸ்மாத்தரிரிஹோச்யதே." என்கிறவாக்கியத்தால் பிரம்ஹருத்திராதிக

னைச் சம்ஹாரிக்கிறபடியால் அவனுக்கு ஹரியென்னும் பெயருண்டாயிற்றென்றும் பிரசங்கித்து, இப்படிச்சுருதிகளி லுத்கோஷித்திருப்பதையே, ஔவையார் "தெய்வமொருவனே யென்றுணரவல்லீரேல்." என்றும் அத்தெய்வம் நாராயணனேயென்று பொருள்படத் "திருமாலுக் கடிமைசெய்" என்றும் அவனது அஷ்டாட்சர மந்திர செபமேமோட்சசாதகமாகையால் "எண்ணெழுத்திகழேல்" என்றும், சக்ராங்கிதம்பெற்று அவனுக்குத் தாசரெனகிற பிரபத்திநெறியில் நிற்கவேண்டுமென்பதை "சக்கரநெறிநில்" என்றும் அருளிச்செய்ததாகக்கொண்டு "ஆரோக்யம்பாஸ்கராதிஸ்சேத் - ஸ்ரியமிஸ்சேத்ஹுதாஸன:— சங்கராத்ஞானமன்மிஸ்சேத் - மோக்ஷமிஸ்சேத்ஜனார்த்தனாத்" என்கிற வாக்கியத்தால் ஆரோக்யம் சூரியனிடத்திலும், செல்வம் அக்னியினிடத்திலும், ஞானம் சிவனிடத்திலும், மோக்ஷம் விஷ்ணுவினிடத்திலும் பெறவேண்டுமென்பதற்கேற்பச் சிவனால் ஞானமாத்திரமே சித்திக்குமென்பதற்கு "பல்லூழிகாலம் பயின்றரனையர்சிக்கில், நல்லறிவுசற்றே நகும்." என்று கூறிய ஔவைவாக்கே சாட்சியாமென்றும் வாயில்வந்தபடித் தாறுமாறாய்ப் பிதற்றியிருக்கின்றனர்.

இதனை முறையே விவகரிக்குமிடத்து முதலில் "காரணந்துத்யேய:" என்ற முன்னும்பின்னும்தள்ளி யிடையே நின்ற வாக்கியத்தை யுதகரிக்கவந்தார். காரணவஸ்துவைத் தியானிக்கவேண்டுமென்றதனால் அந்தக்காரணவஸ்து இதுவென்று அந்த வாக்கியத்திலே தானே யிருக்குமதொழிய வேறுபாகத்திலேயுள்ள பூர்வபட்சசுருதியொன்றையுதகரித்தது தென்னிலிராமன் கதையாய்முடிந்தது. "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்ஸம்ப்ரஸூயந்தேநகாரணம் காரணந்துத்யேயஸ்ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ்ஸர்வேச்வரசம்புராகாசமத்யகஇதி" என்னும் அதர்வசிகாவசனத்தால் பிரம்ஹவிஷ்ணு ருத்ரேந்திராதிகள் பிறப்பிக்கப்படுகிறார்களென்றும், அதனால் அவர்கள் சகத்காரணரல்லரென்றும், சர்வைசுவரியசம்பன்னனும், சகலஜகதீசனும், அந்தருபாசனவிதிகளால் தியானிக்கப்படுபவனும், தஹராகாசமத்யகதனாகிய சம்புசப்தவாச்யனுமாகிய பரமசிவனே ஜகத்காரணவஸ்துவென்று பெறப்பட்டதனால் அப்பேதை யுதகரிக்கவந்தவாக்கியம் சிவோத்கர்ஷப் பிரதிபாதக சுருதிசம்பந்தமென்பது வெளிப்பட்டது. இப்படி வாக்கியங்களைத்திருடி யெழுதிக்கொண்டு திருட்டுப்பிழைப்புப்பிழைக்கச்சொல்லி யிவரை யாரடித்தார்கள்? இப்பேதையைப் போலவே யிவர்கள் பூர்வீகர்களும் அந்தவாக்கியத்தைத் திரு

டிமிருக்கின்றனர். இவர்கள் திருட்டு வெளிப்பட்டுப் போய்விட்டு தாகையால் "காரணந்துத்யேய:" என்று புரட்டிப்புரட்டி யெழுதிக் கொண்டுவரும் அவ்வாக்கியத்தை யினித் தத்தஞ்செய்துவிடுவே ராக.— அந்தவாக்கியத்தைத் திருடிக்கொண்டதால் விஷ்ணுவைக் காரணவஸ்துவென்று வேதஞ்சொல்லவில்லையென்பது சர்வசம்மத மாய் நிச்சயிக்கப்பட்டது. இதனால் காரணவஸ்து சிவபெருமானே யென்றும், அவரே தியானிக்கப்பட்டவரென்றும், விஷ்ணுப்பிரம் ஹாதிகள் அகாரணர்களென்றும் சாதித் தூரைக்கப்பட்டது.

இதுநிற்க, "ஏகோஹவைநாராயணஆஸீத்" என்னும்வாக்கியத் தால் பிரம்ஹாதிகளிறந்தகாலத்தில் நாராயணனொருவனே யிருக்கி ன்றானென்று சொல்லவந்தது அறிவின்மையென்க. அந்தவாக்கி யம ஜகத்சிருட்டிகாரணவிஷயமாகவந்ததேயன்றி லயகாரணமாக வந்ததல்லவென்க. சிருட்டிக்குப்பூர்வப் பிரம்ஹாதிகளில்லையென் றும், நாராயணனொருவனே யிருந்தானென்றும், அதன்கருத்து வெளிப்பட்டதேயன்றி இப்பேதை கூறியமாற்றம் நிரசிக்சப்பட் டது. இதனை ஏழும்பூரிரெட்டி யெழுதியிருக்குஞ் சுவடியிலும் பார்த் துணர்வாராக. எப்படியாயினும் அந்தச்சுருதியில் நாராயண னேபரமென்று நிச்சயமாகையால் பிரம்ஹருத்ராதிகள் அவனிடத் திலேதானே யுண்டானார்களென்று பெறப்பட்டதெனின், மேல்யா முதகரித்த அதர்வசிகாவசனத்தால் பிரம்ஹவிஷ்ணு ருத்ரேந்திரா திகள் சிவபெருமானால் படைக்கப்பட்டார்களென்று வெளிப்பட்ட தனால் நாராயணன்முதலிய நால்வர்க்குங் காரணன் பரமசிவனே யென்று நிச்சயிக்கப்பட்டது. வாயுசம்ஹிதையில் "த்ரயஸ்தேகார ணாத்மானோ ஜாதாஸ்ஸாக்ஷாந்மஹேச்வராதித்யுபக்ரம்யஸ்பஷ்டமுக் தம்தபஸாதோஷியித்வாது பிதரம்பரமேச்வரம் ப்ரஹ்மநாராயணௌ பூர்வம் ருத்ரம்கல்பாந்தரேஸ்ருஜத் கல்பாந்தரேபுநர்ப்ரஹ்மா ருத்ர விஷ்ணூஜகந்மய: விஷ்ணுச்சபகவான்தத்வத்ப்ரஹ்மாணமஸ்ருஜத்பு நபு: நாராயணம்புநர்ப்ரஹ்மாப்ரஹ்மணஞ்சபுநர்பவ: ஏவம்கல்லேஷு கல்பேஷுப்ரஹ்மவிஷ்ணுமஹேசுவரா: பரஸ்பரஸ்மாஜ்ஜாயந்தேபர ஸ்பரஜயைஷிண: தத்தத்கல்பாந்தவ்ருத்தாந்தமதிக்ருத்யமஹர்ஷிபி: ப்ரபவ: கத்யதேதேஷாம்பரஸ்பரஸ்முத்பவாஇதி" என்கிறவாக்கியத் தால் பிரம்ஹவிஷ்ணுருத்ராதிகள் சிவனால் படைக்கப்பட்டார்க ளென்றும், படைக்கப்பட்டவராகிய மூவரும் சுற்பங்கடோறு மாறி மாறிப் பிரமனிடத்து விஷ்ணுவு முருத்திரனும், விஷ்ணுவினிடத்

துப் பிரமனுமுருத்திரனும், உருத்திரனிடத்துப் பிரமனும் விஷ்ணுவும் பரசிவாக்ஞாவசத்தராய்ப் பிறக்கின்றார்களென்றும் பெறப்பட்டதனால் மூன்றுமூர்த்திகளும் அகாரணர்களென்றும், இவர்களைக்கடந்துநின்ற துரியமூர்த்தியாகிய சிவபெருமானே சர்வகாரணரென்றும் நிச்சயிக்கப்பட்டது. இந்தநியாயங்களால் "ஏகோஹவைநாராயணஆஸீத்" என்றுரைத்தவாக்கியம் கற்பபேதத்தைநோக்கியென்றுபெறப்பட்டதனால் நாராயணனுக்குச் சர்வகாரணத்வசித்திகூறவந்தது நிரஸ்தமாயிற்றென்க. "ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே" என்கிறசுருதியால் சிருட்டிக்குப் பூர்வம் பிரம்ஹதேவரொருவரே வர்த்தித்தாரென்று பெறப்பட்டதனால் அக்காலத்தில் நாராயணன்முதலியவர்களில்லாதவர்களாய்ப் பின்பு அவராலேயேயுண்டானவர்களாக நிச்சயிக்கப்படுகின்றது. இங்கே பிரம்ஹதேவனே காரணனென்று கூறப்பட்டதனால் மேல்வாக்கியத்தால் நாராயணனே காரணனென்று சாதிக்கவந்தது தடுமாறிப்போய்விட்டதென்க. இப்படிச் சுருதிகளில் விரோதமாய் நாராயணனே காரணனென்றும், பிரம்ஹதேவனே காரணனென்றுங்கூறியதென்னையெனின், மேலுதகரித்துக்காட்டிய வாயுசம்ஹிதாவாக்கியப்படிப் பரமசிவனாலுண்டாக்கப்பட்ட திரிமூர்த்திகளும் ஒருவரிலொருவர் கற்பங்கடோறு மாறிமாறித்தோன்றிவரு முண்மையால் அந்தந்தஸ்துதிப் பிரகரணங்களில் அவரவர்களைக்காரணர்களென்று கூறியதென்க. இந்தநியாயங்களால் "ஏகோஹவைநாராயணஆஸீத்" என்கிறவாக்கியம் சூக்குமசிருட்டியனந்தரத்தில் தேவாதிஸ்தூலசிருட்டிக்குப் பூர்வம் நாராயணனொருவனேயிருந்தானென்று சமர்த்திக்கப்பட்டதென்க. ஆகவே, அப்பிராகிருதமாகிய சூக்ஷ்மசிருட்டிக்குக் கர்த்தாவாய் நாராயணவியதிரிக்தமாகிய தேவதையொன்று வேண்டுமாகையால் பிராகுப்தசுவேதாசுவதாராதர்வசிரஸ்சிகாத்யுபநிஷத்துக்களில் கூறியபடியே சூக்குமசிருட்டியும், விஷ்ணுவாதி மூர்த்தித்திரய சிருட்டியும் சிவபெருமானாலேயே யுண்டாயிற்றென்று நிச்சயிக்கப்பட்டது. "யதாதமஸ்தம் நதிவாநராத்ரிர்நஸந்நசாஸச்சிவஏவகேவல:" என்கிற சுவேதாசுவதரவாக்கியத்தால் தமோமாத்ராவசேஷமாகிய சிருட்டிக்குப் பூர்வகாலத்தில் சர்வகாரணராகிய சிவபெருமானொருவரே யிருந்தாரென்று பெறப்பட்டதனால் மேலதர்வசிகாவாக்கிய வுண்மைப்படிப் பிரம்ஹவிஷ்ணுவாதிகள் அந்தச் சிவபெருமானாலேயே படைக்கப்பட்டார்களென்று சாதிக்கப்பட்டது. இந்த வாக்கியத்தில் "சிவஏவகேவல:" என்று சிவனொருவனுக்கே சத்பா

லங்கூறி "ஏவ" என்று இதரவியவச்சேதம் வெளிப்பட்டதனால் சதசதாத்மகமாகிய பிராக்ருதாப்ராக்ருதசூக்ஷ்மஸ்தூலஸ்ருஷ்டிகளுக்குமுன்பு சிவபெருமானொருவரேயிருந்தாரென்று நிச்சயிக்கப்பட்டுப் பரமகாரணத்வம் அவர்க்கே சாதிக்கப்பட்டது. சிருட்டிக்குப் பூர்வம் எப்படியவரொருவரே யிருந்தனரோ அப்படியே சர்வசம்ஹாரகாலத்தும் அவரொருவரேயிருந்தாரென்று கூறும் சாபாலசுருதியையீண்டுதகரிக்கின்றோம். "ப்ரத்யக்ஜநஸ்திஷ்டதி ஸஞ்சுகோசாந்தகாலே ஏகஏவருத்ரோநத்விதீஸாயதஸ்தே நப்ரஹ்மாநவிஷ்ணுர்நஸூர்யோக்நாத்நிசந்த்ரதாரகா:" என்கிறவாக்கியத்தால் சர்வசம்ஹாரகாலத்தில் உருத்திரமூர்த்தியொருவர்தவிர இரண்டாவதியாருமில்லையென்றும், பிரமன், விஷ்ணு, சூரியன், அக்னி, சந்திரன், நட்சத்திரங்கள்முதலாக வொன்றுமில்லையென்றும் நிச்சயிக்கப்பட்டதனால் புனருற்பவம் ஒடுங்கினவிடத்தினின்றே மீளவுண்டாமென்னு நியாயத்தால் சர்வஜகந்காரணப்பிரபு சிவபெருமானேயென்று சாதிக்கப்பட்டது. இதனால் சிருட்டிக்குப்பூர்வமும் பின்னுமிருந்தவர் ஸ்ரீ சிவபெருமானே யென்று நாட்டப்பட்டது. "ஏகோஹவைநாராயணஆஸீத்" என்கிற வாக்கியத்தையும் "ஏகஏவருத்ரோநத்வீதியாயதஸ்தே" என்கிறவாக்கியத்தையும் பகுத்துணருமிடத்து நாராயணரொருவரேயிருந்தாரென்றும், உருத்திரமூர்த்தியொருவர்தவிர இரண்டாவதியாருமில்லையென்றும் பெறப்பட்டதனால் "நத்வீதியாயதஸ்தே" என்னும் விசேஷார்த்தத்தால் நாராயணப்பிரதிபாதகசுருதி பாதிக்கப்பட்டொழிந்ததென்க. "ஏகமேவாத்விதீயம்ப்ரஹ்மா" என்கிறசுருதியால் பிரம்ஹமொன்றேயொழிய இரண்டாவதொன்றுமில்லையென்று பெறப்பட்டதுபோலும் "ஏகஏவருத்ரோநத்வீதீயாயதஸ்தே" என்கிற சுருதியால் உருத்திரமூர்த்தியொருவர்தவிர இரண்டாவதியாருமில்லையென்று பெறப்பட்டதனால் பிரம்ஹபத ருத்ரபதங்கள் பரியாயபதங்களாக நிச்சயிக்கப்பட்டு அந்தப்பிரம்ஹம் ருத்ரமூர்த்தியேயென்று சாதிக்கப்பட்டதாகையால் தத்வியதிரேகமாகிய நாராயணசப்த வாசகசுருதியால் ஜகத்காரணத்வங் கூறவந்தது நிரஸ்தமாய்விட்டதென்க.

இங்ஙனநிற்க, அத்துஷ்டவாசகத்தில் அவனிணைத்தமாத்திரத்தில் பிரமன், அக்னி, ருத்ரன் முதலியவர்களுண்டானார்களென்று பிரசங்கித்தழுதார். மேல்விவகாரங்களால் நாராயணனிடமிருந்து ஸ்தூலசிருட்டி கற்பபேதத்தா லுண்டாமென்பதை வெளிப்படுத்தியிருக்

கின்றோமாகையால் அதுவும். பூர்வபட்சமாயிற்றென்க. "நதஸ்யக ச்சித்பதிரஸ்திலோகே நசேசிதாநைவசதஸ்யலிங்கம் நகாரணம்காரணா நாமதீசோ நதஸ்யகச்சிஜ்ஜநிதாநபோதிப:" என்கிற சுவேதாசுவதர வாக்கியத்தால் அந்த உருத்திரமூர்த்திக்குப் பிரபுவானவனும், ரக்ஷகனும், லோகத்தி லொருவருமில்லையென்றும், அவருக்கு ஜன்மஸ்தானமும், காரணமுமில்லையென்றும், அவர் காரணங்களுக்கெல்லாம் பிரபுவானவரென்றும், அவர்க்கு உற்பத்திகாரணமானவர்களொருவருமில்லையென்றும், அவர் ஆகாசாதிபதியென்றும் பெறப்பட்டதனால் நாராயணனிடத்து ஸ்ரீ ருத்ரமூர்த்திபிறந்தாரென்று அழுவந்தது முழு மூடத்தன்மையாயிற்றென்க. இதனால் நாராயணனிடத்து உருத்திரன் பிறந்தானென்னும் வாக்கியம் திரிமூர்த்திகளிலொருவராகிய உருத்திரமூர்த்தியைக் கற்பபேதத்தா லுணர்த்துமேயன்றித் துரியமூர்த்தியாகிய பரசிவப்பிரபுவை யொருபோதுமுணர்த்தாதென்க. "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்தேஸம்ப்ரஸூயந்தேந்காரணம் காரணாந்துத்யேயஸம்பு:" என்று மேல்விசாரித்த சுருதிவாக்கியத்தால் பிரம்ஹ விஷ்ணு ருத்திராதிகள் பரசிவமூர்த்தியா லுண்டாக்கப்பட்டவர்களென்று பெறப்பட்டதனால் பூர்வோத்தர சம்பந்தாசம்பந்தங்கள் தெரியாமல் பூர்வபட்ச சுருதிகளைக்கொண்டு விஷ்ணு பாரம்யம் நாட்டவந்தது அவிவேகருணியமென்க.

இதுநிற்க, சஹஸ்ரநாம வியாக்கியானத்தில் பிரம்ஹருத்ராதிகளை ஹரிக்கிறபடியால் விஷ்ணுவுக்கு ஹரியென்னும் பெயர்வந்ததாக நிச்சயித்துக்கூறியமுதார். அந்த வியாக்கியானஞ்செய்தவர் சங்கராசாரியராகையால் அது ஔபசாரிகமேயன்றி வாஸ்தவமாகாதென்க. எங்ஙனமெனின், அவர்செய்தருளிய சௌந்தரியலஹரியில் விஷ்ணு பிரம்ஹாதிகள் நாசமானகாலத்தும் உருத்திரமூர்த்தி நாசமில்லாதவராயிருக்கின்றாரென்று கூறியவாக்கியத்தை மேலிடங்களில் (கள) வது பக்கத்தி லுதகரித்திருக்கின்றோமாகையால் அவருடைய வாஸ்தவாபிப்பிராயம் வெளிப்பட்டது.

"வேதபஞ்சகன் மால்புரந்தரன் வேகசண்டகு பேரனோ
டாதியெண்டிசை பாலர்பொன்றவு மாதியந்தமி லாததோர்
நாதர்பொன்றில ரேதுன்மங்கல நாணுறுந்திற மாதலால்
நீதழைந்தது யோகமம்பிகை நீலியென்பது பாவமே."

என்கிற வியாக்கியையாலும் அதனுண்மையைத் தெளிவாராக. "விஷ்ணுப்ரஹ்மாணமிந்த்ரஞ்ச யமமந்யாந்ஸுராநபி யதோநிக்நஹ்ய

ஹரதே ஹரஇத்யுச்யதேபுதை:" என்கிற நாமநிர்வசனத்தால் விஷ்ணு, பிரமன், இயமன், இந்திரன், தேவர்கள்முதலிய சமஸ்தமான பேரையும் சம்ஹரிக்கிறபடியால் ஹரனென்னும் பெயர்வந்ததாக மேலோர்களால் நிச்சயிக்கப்பட்டதனாலும், மேலிடங்களில் (௨௪) வது பக்கத்தில்காட்டிய வைப்பலாத வாக்கியத்தாற் சமஸ்தாண்ட சராசரங்களையும் தமது நெற்றிக்கண்பொறியொன்றினால் சுட்டெரித்துவிட்டு மீண்டுஞ் சிருட்டிப்பதும், சிருட்டித்தவைகளை ரக்ஷிப்பதும், ரக்ஷித்தவைகளைச் சம்ஹரிப்பதுமாகிய ஸ்வதந்திரபிரகடனார்த்த லீலைசெய்கின்றாரென்று பெறப்பட்டதனாலும், சர்வசம்ஹாரகர்த்தா ஸ்ரீருத்திரமூர்த்தியேயென்று சாதிக்கப்பட்டது. பரமசிவனாலுண்டாக்கப்பட்ட திரிமூர்த்திகளில் பிரமனுக்குச் சிருஷ்டியும், விஷ்ணுவுக்குச் சிருட்டியுந்திதியும், உருத்திரமூர்த்திக்குச் சிருட்டியுந்திதியுஞ் சம்ஹாரமுமாக அதிகாரநிர்ணயமாகையால் சர்வசம்ஹாரகிருத்யம் விஷ்ணுவாதிதேவர்களுக்கு வேதங்களில் யாண்டுங் கூறாதென்க. சம்ஹாரகர்த்தா உருத்திரமூர்த்தியேயென்று சமஸ்தவேதங்களாலுஞ் சாதிக்கப்பட்டதன்றியும், பிரமனைச் சிரத்தையரிந்தும், மன்மதனை முழுநீறெரித்தும், இயமனை மார்பிலுதைத்தும், சூரியனைப்பல்லையுடைத்தும், அக்னியைக்கையைமுறித்தும், சரஸ்வதியைமூக்கையரிந்தும், இலக்குமியை நாக்கையரிந்தும், விஷ்ணுவினுடைய அவதாரங்களில் மீனைக் கண்ணைப்பிடுங்கியும், ஆமையை ஓட்டைப்பறித்தும், பன்றியைக் கொம்பைமுறித்தும், சிங்கத்தைத் தோலையுரித்தும், வாமனனை எலும்பையுடைத்தும், அவைகளைத் தமது திருமேனியிற்றரித்ததுமன்றிப் பிரம்ஹ விஷ்ணுக்களுடைய சிரங்களை மாலையாகப்பூண்டும், அவைகளைச் சுட்டெரித்த சாம்பலை மேனியையணிந்தும், விஷ்ணுவைச் சூலத்திற்கோத்து விளையாடியும், இவ்வாறே சமஸ்ததேவர்களையும் நிக்கிரகித்தருகின்றாரென்பது சர்வப்பிரசித்தியாகையால் சர்வசம்ஹாரகர்த்தா சிவபெருமானேயென்று சாதிக்கப்பட்டது. "பாதேவிஷ்ணுவிலோசனம் கடிதடே மாத்யந்ருஹிம்ஹாஜிநம் ஹாரேகூர்மசிர: கராம்புஜதலேகம் காளநாமாயுதம் சூலாக்ரேசவகேசவம் ஹர்சிரோமாலாஞ்சயிப்ரத்ஸதாஹ்யேவம்விஷ்ணுமயம்ஸநாசிவவபுஸ்தத்யத்புதை: கத்யதே" என்கிற வாக்கியத்தால் சிவனுடையபாதத்தில் விஷ்ணுவினுடைய கண்ணும், இடையில் மதம்பொருந்திய சிங்கத்தோலும், ஹாரத்தில் ஆமைத்தலைகளும் ஹஸ்தங்களில் திரிவிக்கிரமனுடைய முதுகெலும்பும், சூலத்துச்சியில் சவரூபமான கேசவனுடலமும், மார்பில் விஷ்ணு சிரோ

மாலையும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனவென்று பண்டிதர்களால் கொண்டாடப்பட்டதென்று கூறுமாற்றானுமறிக.

## அதிவீரராமபாண்டியர்.

“கறைகொண்டசூலத் தலையினுங்கையிற் கபாலத்தினு
நறைகொண்டபங்கயப் பொற்றாளிணையினு நாங்கள்கண்டோ
மறைகொண்டதென்கரு வைப்பெருமானுக்கு மாயவனார்
நிறைகொண்டபேருட லும்பசுஞ்சோரியு நீள்கண்ணுமே.”

என்றுவரும் ஆன்றோர்வாக்கியங்களாலு மறிந்துணர்வாராக. இன்னு மிந்தவிஸ்தாரத்தைப் பாகவதம், ஸ்காந்தமுதலிய புராணங்களிற் காணலாமன்றியும், பைப்பலாதத்தானும் அறியலாமென்க. சிவபெருமானிடத்துநிக்ரகானுக்கிரகம் பெறுதவர்கள் தேவசமூகங்களில் ஒருவருமில்லையாகவும், அவர்களு ளொருவராகிய விஷ்ணுவை நிக்கிரஹ கர்த்தாவென்று சொல்லவந்த ஏழைமதிக்கு விசனப்படவேண்டியிருக்கின்றது. விஷ்ணுவால் நிக்கிரகமடைந்த தேவர்க்க ளொருவருமில்லையாகவும்; தேவர்க்களாலும், ராக்ஷசர்களாலும், மனுஷ்யர்களாலும் பலமுறை யபசயப்பட்டோடி யொளித்திருந்த விஷ்ணுவைச் சம்ஹாரகர்த்தாவென்று சொல்லவந்தது வீண்வழக்காய் முடிந்ததென்க. “அதகஸ்மாதுச்யதேமஹேச்வரஃ யஸ்ஸர்வாந்லோகாந்ஸம்பக்ஷஸ் ஸம்யஜத்யஜஸ்ரம்ஸ்ருஜதிவாஸ்யதி வாதஸ்மாதுச்யதேமஹேச்வரஃ” என்கிற அதர்வசிகாவசனத்தால் சர்வவிசுவத்தையும் பக்ஷிக்கின்றவனும், ரக்ஷிக்கின்றவனும், ஸ்ருஜிக்கின்றவனும், தன்னிடத்தில் வசிக்கச்செய்கின்றவனுமாகிய காரணத்தாலேயே மஹேசுவரனென்று சொல்லப்படுவான் என்று நிச்சயமாகையால் சர்வ சிருஷ்டிஸ்திதிலயகாரணங்கள் மஹேசுவரசப்தவாச்யனுகிய ஸ்ரீருத்திரமூர்த்திக்கே யுரிமையென்று சாதிக்கப்பட்டது. “அந்நம்பிரஹ்மாரஸோவிஷ்ணுர் போக்தாசைவமஹேச்வரஃ ஏவம்த்யாத்வாத்விஜோபுஞ்சந்நந்நதோஷைர்நலிப்யதே” என்னு மிந்தமந்திரத்தால் அன்னம்பிரம்ஹாவென்றும், சாரம்விஷ்ணுவென்றும், புசிப்பவர் மஹேசுவரரென்றும் பெறப்பட்டவுண்மையானும், சர்வகாரணத்வசித்தி வெளிப்பட்டதென்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இனியந்தத் துஷ்டவாசகத்தில், சங்கத்தாரைவென்ற காலையில் ஔவையாரருளிய “ஐயமிடுமின்” என்னுந் திருவெண்பாவில் “தெய்வமொருவனே யென்றுணரவல்லீரேல்” என்றுவரும் வாக்கியத்

நால் விஷ்ணுபரஞ் சாதிக்கவந்தார். ஔவையார் என்னு மருட்பெயர்சாத்தி எமதன்னையா ரவதரித்தகாலையில் "இட்டமுடனென்றலையிலின்னபடியென்றெழுதி, விட்ட சிவனுஞ்செத்து விட்டானோ - முட்டமுட்டப், பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்றோய், நெஞ்சமேயஞ்சாதே நீ." என்று தத்வார்த்தத்தைவெளிப்படுத்திய சற்சாம்பிரதாயத்தை யாவருமறிவாரன்றியும் "சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க், கபாயமொருநாளுமில்லை-யுபாய, மிதுவேமதியாகு மில்லாதவெல்லாம், விதியே மதியாய் விடும்." என்றருளிய திருவாக்காலும் "தெய்வமொருவனே யென்றுணரவல்லீரேல்." என்று கூறவந்தது சிவபெருமானை யுணர்த்துமேயன்றி விஷ்ணுமுதலிய தேவர்க்களையுணர்த்துமென்பது பரியாசாஸ்பதமாகுமென்க. "சிவத்தைப்பேணிற் றவத்திற்கழகு." என்று கூறிய வாக்கியத்தால் தவச்சிரேஷ்டர்களால் பேணத்தக்கவர் ஸ்ரீசிவபெருமானே யென்று பெறப்பட்டதனால், "எல்லார்க்குமொன்றே சிவமாவதென்றுணர்ந்த, பல்லோர்க்குமுண்டோபவம்." "ஆயுமிரவியுமொன்றேயனைத்துயிர்க்கும், ஆயுங்காலொன்றேசிவம்." என்று அவரருளிய வாக்கியங்களாலும், "தெய்வமொருவனே யென்றுணரவல்லீரேல்." என்னும் வாக்கியம் சிவபரமாகவே சாதிக்கப்பட்டது. ஆயின், "திருமாலுக்கடிமைசெய்." என்று கூறிய தென்னையெனின், சைவத்தில் ஞானபூசையில் வைத்துப்பூசிக்குஞ் சத்தகுரவருள் விஷ்ணு வொருவராகலானும், ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகளால் விஷ்ணுமுதலியவர்களை வழியடியாராகக் கூறியிருத்தலானும், விஷ்ணுபக்தி சைவர்களுக்கு நிர்ப்பாதிதமாய்ப் பெறப்பட்டதென்க.

## சிவதத்வவிவேகவிருத்தி.

"திருமாலிந் திரன்பிரம னுபமனியன் றபனனந்தி
 செவ்வேளாதித்
தருமமுது குரவருக்குந் தனதருளா லாசிரியத்
 தன்மைநல்கி
வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரைக்கைம்
 மலரும்வாய்ந்த
வுருவழகுங் குறுநகையுங் காட்டியரு டருஞ்சிவனை
 யுளத்தில்வைப்பாம்."

## திருவாசகம்.

"காணர்புலித்தோ லுடைதலையூண்காடுபதி
யானலவனுக்கிங் காட்படவொராரேடீ."

யாஞனுங்கேளா யயனுந்திருமாலும்
வாஞடர்கோவும் வழியடியார்சாழலோ."

என்றுவரும் உண்மைவாக்கியங்களே சான்றுமென்க. இத ஞல் விஷ்ணுபக்தி தோஷமில்லாததென்றும் அது பாஞ்சராத்திர மார்க்கம்பற்றிச்செய்வது விருத்தமென்றும், சிவாகமம் விதித்தப டிச்செய்வது தக்கதென்றுஞ், சாதிக்கப்பட்டது. இப்படிவிசாரித் தறிவதொழிந்து திருமாலுக்கடிமை செய்யென்றது அவரைப் பர மென்றுகூறியதாக மயங்கிப்பழமாய்ந்ததென்க. "யந்பாதாம் புஜபூஜயாஹரி ரதர்ச்யோயதங்க்ரயார்ச்ச நாதார்யாபூந்கமலாவிதிப் ரப்நத யோஷ்யர்ச்யாயதாஜ்ஞாவசாத் தங்காலாந்தகமந்தகாந்தக முமா காந்தம்ஹ்ருஸ்ஸ்தகம் ஸந்தஸ்வாந்தஸரோஜராஜி சரணம்போஜம் யந்த்யாதாரந்" என்கிற சூதசம்ஹிதாவாக்கியத்தால் எந்தமஹாதே வனுடைய ஆக்ஞாவசத்தராய் அவனுடைய ஸ்ரீபாதத்தையர்ச்சி த்து விஷ்ணு, லட்சுமி, பிரம்ஹாமுதலிய சமஸ்ததேவர்களும் எல்லாராலும் பூஜிக்கத்தக்க யோக்யதையையடைந்தார்களோ, அப் படிப்பட்ட காலாந்தகனும், அந்தகாந்தகனும், உமாகாந்தனுமாகிய ஸ்ரீ பரசிவப்பிரபுவை ஹ்ருதய புண்டரீகத்திலுள்ளவனுகச் சிவ ஞானிகள் தியானிக்கின்றார்களென்று பெறப்பட்டதனுல் விஷ்ணு பக்தி நிர்ப்பாதிதமாய்ச் சாதிக்கப்பட்டது. அன்றியும்,

"வாழ்த்துவதும்வானவர்கடாம் வாழ்வான்மனநின்பாற்
றழ்த்துவதுந்தாமுயர்ந்து தம்மையெல்லாந்தொழவேண்டிச்
சூழ்த்துமதுகரமுரலுந் தாரோயைநாயடியேன்
பாழ்த்தபிறப்பறுத்திடுவான் யானுமுன்னைப்பரவுவனே."

என்றருளிய வாதவூரடிகள் திருவாக்கானும் உண்மைவெளிப் பட்டதென்க. மேலிரண்டு வாக்கியங்களாலும் சமஸ்ததேவர்க ளும் சிவாராதனத்தால் உலகத்தவர்கள் தம்மைவழிபட்டொழுகும் பெரும் பாக்கியத்தை யடைந்தார்களென்று பெறப்பட்டதனுல் திருமாலுக்கடிமைசெய்யென்னும் வாக்கியத்தாலெமக்கொருவிரோ தமுமின்றென்க. இதுமட்டோ, "ததாகஸ்த்யாதிமுநயோ துர்வாஸா நந்திகேச்வரஃ மஹாகாளோததீசிச்ச பாணிநிச்சகணாதயஃ ஸ்கந்தோப் நங்கீரிட்டிர்வீர பத்ரச்சப்ரதமாதயஃ அஜோஹரிஸ்ஸஹஸ்ராக்ஷோ பாணு ஸ்ஸூரதசாநநௌ வசிஷ்டநுவால்மீகி பாரத்வாஜாச்சகௌதமஃ ஏதேப ரமசைவாச்ச பஜந்திபாயாமுதா" என்கிறவாக்கியத்தால் அகஸ்தியர், துர்வாசகர், நந்திகேசுவரர், மஹாகாளர், ததீசி, பாணினி, ஸ்கந்

தர், பிருங்கி, வீரபத்திரர், பிரம்ஹா, விஷ்ணு, இந்திரன், பாணாசுரன், இராவணன், வசிஷ்டர், வால்மீகர், பாரத்வாஜர், கௌதமர், மற்றுஞ் சிவகணத்தலைவர் முதலியவர்களைப் பரமசைவர்களாய்க் கொண்டு தீக்ஷிதஸ்வாமிகள் ஸ்தோத்திரஞ்செய்திருப்பதாலும் ஔவையாரருளிய விஷ்ணுசம்பந்தமானவாக்கியம் சமர்த்திக்கப்பட்டதென்க. ஔவையென்பவர் சுத்தசைவசித்தாந்தப் பெருஞ்செல்வத்தினையுடையவரென்று உலகமெல்லாஞ் சொல்லுமன்றியும், சைவர்களல்லாத மற்றைப்புறச்சமயிகளும் அவரைச் சைவசிரோமணியென்று சொல்வாராகவும், விபரீதத்தால் வாயில்வந்தபடிப் பிதற்றவந்தது கேவலம் அறியாமை யாயிற்றென்க.

இதுநிற்க, அத்துஷ்டவாசகத்தில் "எண்ணெழுத்திகழேல்." என்பதை விஷ்ணுநாமமாகிய அஷ்டாட்சரத்தை யிகழாதேயென்று சொன்னதாக எழுதித்தொலைத்தார். கற்றறிந்தவர்களெல்லாம் எண்ணும், எழுத்தும் என்று பொருள்கொண்டிருப்பார்களன்றியும், அதனுண்மைதோன்ற "எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும்." என்று ஔவையாரே கூறியிருக்கின்றாராகலானும், இவர்சகோதரராகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவரும், "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் - கண்ணென்ப வாழுமுயிர்க்கு." என்று தெள்ளிதிற் கூறியிருக்கின்றாராகலானும், "மையறு - மெட்டெழுத்தை யோதியிடு வார்மன் ணெப்பொழுதுங், கட்டுரைக்கவென்னக் கௌதமனு, ரிட்டபெருஞ் - சாபத்தியல்பு." என்று இரட்டையரால் புறக்கணித்துரைக்கப்பட்ட எட்டெழுத்தையே ஔவையார்சொல்லவந்தாரென்பது அவதிவாசகமாய்முடிந்ததென்க. அவனது அஷ்டாக்ஷரமந்திரசெபம் மோக்ஷசாதகமென்று கூறியழுதாரே! தனது ஊத்தை வாயைத் திறவாமலிருக்கக்கூடாதா? சீ! சீ! துர்க்கந்தம் வீசுகின்றதே! இப்பேதைக்கு அஷ்டாக்ஷரமென்பதேதது? பிரணவத்தைக்கழித்தால் சப்தாக்ஷரமாகுமன்றி அஷ்டாக்ஷரமென்பது விருத்தமாகுமே! நாராயணநாமங்கள் மந்திரராஜமாகிய பிரணவத்தைச் சிரசிற்றாங்கிக் கொண்டதினாலேயே ஜபயோக்யதையை யடைந்தனவன்றி ஸ்ரீபஞ்சாட்சரத்தைப்போல் பிரணவசகிதமாகாமலே வர்த்திக்கும் விசேஷமுடையனவன்றாம். பஞ்சாட்சரமோவெனின், சமஸ்தபதார்த்தங்கட்கும் லவணம் பிரதானமாய்ப் பாலுக்கெப்படிப் பிரதானமில்லையோ, அதுபோல் பிரணவங்கூடாமலே முக்திப்பிரதாயகமாமென்று சத்துக்கள் நிச்சயித்திருக்கின்றனர். "ப்ரணவம்சதநத்ரீயம் ததாதர்

வசிரச்சிகா தேஷாம்ஏயோஜப: புத்ர ஸ்வாத்யாய இதிகீர்த்தித: என்கிற பிரமாணவாக்கியத்தால் ஓங்காரமும், ஸ்ரீருத்திரமும், அதர்வசிரஸ்சிகையும் ஸ்வாத்யாயமாய்ச் செபிக்கத்தக்கனவென்று வெளிப்பட்டதனால் பிரணவமானது பிரத்யேகமந்திரமென்று நிச்சயிக்கப்பட்டு நாராயணாதிநாமங்களுக்கு மந்திரபுஷ்டியாகச் சேர்த்துக்கொண்டதாய் பெறப்பட்டது. பிரணவமானது அக்ஷரத்திரயாத்மகபிரம்ஹவாசகமாகிய மந்திரமாகலான் ஜபயோக்யமல்லாத மந்திரங்களிற்சேர்த்து அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. விஷ்ணு, நாராயணாதிமந்திரங்கள் பிரணவத்தையன்னியில் ஸ்வதப்பிரமாணங்களும், முக்திஹேதுவுமாகாமையால் முமூக்ஷுக்கள் அவற்றைப் பரித்யஜிப்பாரென்க. மானவபுராணத்தில் "நாராயணாதிநாமாநி விஸ்நுஜ்யநவிசாரத: ஜபேச்சிவாதிநாமாநி ஸத்யோமுக்திம்யதீச்சஸி" என்கிறவாக்கியத்தால் சத்யோமுக்தியடைய வேண்டுமென்கிற இச்சையுடையவர்கள் நாராயணாதி நாமங்களைவிட்டு விசாரமின்றிச் சிவநாமங்களைச் செபிக்கக்கடவர் என்று பெறப்பட்டதனால் இவர்கள் அஷ்டாக்ஷரியினுடைய தௌர்ப்பல்யம் வெளிப்பட்டதென்க. பிரணவத்தைச் சேர்க்காதபட்சத்தில் ஜபயோக்யமும், சுருதிவிதானத்வமும் நாராயணாதி மந்திரங்களுக்குச் சம்பவிக்காமையும், பிரணவமில்லாமலே ஜபயோக்யமும், சுருதிவிதானத்வமும் ஸ்ரீபஞ்சாட்சரிக்குச் சம்பவித்திருப்பதுமாகிய வுண்மையால் எங்கள் அஷ்டாட்க்ஷரி மோக்ஷவிதாயகமுடையதென்று கூறவந்தது நிரஸ்தமாயிற்றென்க. இப்படிப்பட்ட தௌர்ப்பலிய மந்திரத்தையே ஔவையார் விரும்பவந்தாரென்றுதொடுத்த வீண்வழக்கும் விட்டொழிந்ததென்க. மேல்நியாயங்களால் ஔவையார் இவர்களெட்டெழுத்தைக் கூறியதில்லையென்று வெளிப்பட்டதனால் எண்ணெழுத்தென்பதை எண்ணுகின்ற எழுத்தையென்று பொருள்கொண்டு ஸ்ரீபஞ்சாட்சர செபத்தைக் கூறினாரெனினும் நிர்ப்பாதகமாய்ப்பெறப்படும். "சிவாயநம" என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் ஸ்ரீபஞ்சாக்ஷரத்துண்மையைக் கூறியிருக்கின்றாராகையால் எமதுவாசகம் பிழைபடாதென்க. "அகஸ்த்யராமாதிபிராத்நதத்வா தமஷ்யமந்த்ரஸ்யசவைதிகத்வாத் பரஸ்யதத்வஸ்யசவாசகத்வாந் நமச்சிவாயேதிஸதாஜபத்வம்" என்கிற பிரம்ஹோத்தரகண்ட வாக்கியத்தால் அகஸ்தியர், ஸ்ரீராமபத்திரர் முதலானவர்களெல்லாம் ஸ்ரீ பஞ்சாக்ஷரசெபத்தியான பரராகவேயிருந்தார்களென்று பெறப்பட்டதனால் வேதசம்பந்தமுடையதும், பரதத்வவாசகமுமாகிய ந-ம-சி-வா-ய என்னு

ணமந்தெழுத்துண்மை யினிதுவெளிப்பட்டது. இதனால் ஜபயோக்யமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமே ஔவையார்க்குடன்பாடன்றி இவர்கள் அஷ்டாக்ஷரியைமறந்துங் கூறினாரில்லையென்க. இவர் செய்தருளிய "விநாயகரகவல்" என்னுநூலில் "சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச் சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி, அணுவிற்கணுவா யப்பாலுக்கப்பாலாய்க், கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி, வேடமுநீறும் விளங்கநிறுத்திக் கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன்கூட்டி, அஞ்சக்கரத்தி னரும்பொருடன்னை, நெஞ்சக்கருத்தி னிலையறிவித்துத், தத்துவநிலையைத் தந்தெனையாண்ட, வித்தகவிநாயக விரைகழல்சரணே" என்றருளினாராகலின் ஸ்ரீபஞ்சாக்ஷரசெபத்தியானமே மோக்ஷவிதாயகமென்று அவருடைய நிச்சயம் வெளிப்பட்டது. இன்னு மிவ்வாறு பலபிரமாணங்களுண்டாமாகலின் அவற்றைச் சற்றேனும் யோசியாது எண்ணெழுத்தென்பதற்கு அஷ்டாக்ஷரமென்றழுவந்த பேரிழவு தொலைந்துபோயிற்றென்க.

இனி யவ்வழுவாசகத்தில், "சக்கரநெறிநில்" என்கிற வாக்கியத்தால் சக்ராங்கிதம்பெற்று அவனுக்குத் தாசரென்கிற பிரபத்திநெறியில் நிற்கவேண்டுமென்று சொன்னதாக அழுவந்தார். இப்படி அன்னிய சமயநூலில்வந்துவிழுந்து தலைபடித்துக்கொள்ள இவர்க்கென்ன தலையெழுத்தோ அறிகிலம். சக்ராங்கிதமார்க்கத்தைக்கூறினாரென்னுமிடத்துத் தாமுமந்நெறிநின்றாரென்பது தானேபோதரும். ஆகவே, அவர்க்கு நாமத்தைச்சாத்திச் சூடுபோட்ட ஆசிரியர்வேண்டும். அவரியாவர்? அன்றியும், "சங்குநெறிநில்" என்றும், "நாமநெறிநில்" என்றும் ஏன் கூறாதுவிடுத்தனர். சக்கரத்தைக் காட்டிலும் நாமம்போடுகிறது முக்கியமாமே! நாமம்போட்டல்லவோ சுடவேண்டும்? சைவத்தை நீற்றுநெறியென்று கூறுவது பிரசித்தியாமே! அதுபோல் நாமநெறியென்றுகூறுவது அத்தியாவசியமாகவும், அதனை ஏன்விடுத்தனர்? அவர் திருவாய்மலர்ந்தருளிய "நீறில்லாநெற்றிபாழ்" என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் அவர் சுத்தசைவசிகாமணியென்பது பெறப்பட்டிருக்கவும், ஐயையோ இப்படி வீண்வழக்காட விவரை யேவின துன்மார்க்கரியாவரோ அறிகிலம். சூடுண்ட பாவிகளைக் கண்ணினால்பார்ப்பதும் பெருங்குற்றமென்று சமஸ்த நூல்களுங் கூறுமாகவும் அப்பிரமாணிய சித்தமான பட்டை நாமஞ்சாத்திச் சூடுபோட்டுக்கொள்ளுகிற மார்க்கத்தையே ஔவையார் கூறவந்தாரென்பது அவதிவாசகமா யொழிந்ததென்க.

இனி "சங்கசக்ரமிருதாயஸ்து குர்யாத்தாபநகர்மணு ஸசூத்ரவத் பஹிஷ்கார்யஸ் ஸர்வஸ்மாத்விஜகர்மண:" என்கிறவாக்கியத்தால் எவன்மிருத்திகையினுலுமா, தபனகாரியங்களாலுஞ் சங்கசக்ரமுத்திரைகளைத் தரிப்பானே அவன் சூத்திரனைப்போல் சமஸ்த கர்மங்களிலும் திரஜிக்கப்படுவானென்றும் "யதாச்மசாநகங்காஷ்ட மர்ஹம்ஸர்வகர்மஸு சங்கசக்ராத்யங்கநஞ்ச ந்ருத்யகீதாதிகந்ததா" என்கிறவாக்கியத்தால் சுடுகாட்டிலுள்ள காஷ்டமானது சர்வகர்மங்களிலும் எப்படி அயோக்யமாமோ, அப்படிப்போலவே சங்கசக்ர முத்திரைகளைத் தாங்குபவர்களும், தாசர்களென்கிறபேரால் கோணங்கிக் கூத்தாடித்திரிபவர்களும் பரித்யஜிக்கப் படுவாராக என்றும் விஷ்ணுஸ்மிருதியில் கூறப்பட்டிருத்தலால் சக்ராங்கிதமார்க்கம் சர்வோத்கர்ஷமென்று சாதிக்கவந்தது கண்டிக்கப்பட்டதென்க. "ப்ராஹ்மணோயதிமோஹாத்வா தாபயேத்வஹ்நிமுத்ரயா நகர்மார்ஹோபவேதத்ர ஸவைபாஷண்ட ஸஞ்ஜ்ஞித:" என்கிற வாயுசம்ஹிதா வாக்கியத்தால் எந்தப்பிராமணன் அஞ்ஞானத்தினாலே சங்கசக்ராதிமுத்திரைகளைத் தரித்துக்கொள்ளுவானே அவன் கர்மங்களுக்கு யோக்யனுகாமற் போகிறதுந்தவிரப் பாஷண்டனென்றுஞ் சொல்லப்படுவான் என்றும், "வேதேஷுயஜ்ஞபாகேஷு யஸ்யநாஸ்த்யதிகாரிதா ஸ்தாபஸீத்வாச்சக்ராதீந்தாரயேத்துபுஜத்வயே" என்கிற ஸௌரபுராண வாக்கியத்தால் யாகங்களுக்கு உபயுக்தங்களாகிய வேதங்களில் எவனுக்கதிகாரமில்லையோ அவன் இரண்டுபுஜங்களிலும் சங்கசக்ராதிசின்னங்களை தரிக்கத்தக்கவன் என்றும், "ப்ராஹ்மணோயதிமோஹேந தாரயேத்தப்தமுத்ரிகா: தஸ்யதர்சநமாத்ரேண குர்யாத்ஸூர்யாவலோகநம்" என்கிற ஷஷ்டி புராண வாக்கியத்தால் எந்தப்பிராமணன் அக்னிதப்தங்களாகிய முத்திரைகளைத் தெரியாமையால் தரித்துக்கொள்ளுவானே அவனைப் பார்த்தவுடனே அந்தப்பாவ நீக்கும்பொருட்டுச் சூரியதரிசனம் பண்ணவேண்டும் என்றும், "பூர்வஜஸ்துதநுந்தக்த்வா சங்கசக்ராதிபி: ப்ராஜ்ஞ: நதஸ்யநிஷ்க்ருதிர்வாபி ஸ்நாநதாநவ்ரதாதிபி:" என்கிற ... புராண வாக்கியத்தால் எந்தவிப்ரன் அக்னிதப்தங்களான சங்கசக்ராதிகளால் தேகத்தைக் கொளுத்திக்கொள்ளுவானே அவனுக்கு ஸ்நாநதாந விரதங்கள்முதலான எந்த ஸத்கர்மங்களாலேயும் பரிகார முண்டாகமாட்டாது என்றும் நிச்சயிக்கப்பட்டதனால் இவர்கள் பேசிழவுமார்க்கம் பேதிக்கப்பட்டதென்க. இன்னும் "சங்கசக்ரகதாபாச சாபதண்டாங்குசாதிபி: அங்கிதாசிரந்தயாயூயம் பவதப்ராஹ்மணாதமா:" என்கிற சூதசம்ஹிதா வாக்கியத்

தால் சங்கு, சக்ரம், கதைபாசம், தனுசு, தண்டம், அங்குசமுதலாகிய சின்னங்களைத் தரிப்பவர்கள் துர்ப்பிராம்ஹணர்களாவார்களென்று கூறப்பட்டதன்றியும், காசிகண்டத்தில் "வேதபாஹ்யேஷு தந்த்ரேஷு பாஞ்சராத்ரேஷு சத்விஜாः பவந்தோதீக்ஷிதாயூயம் யுஷ்மாகம் வம்சஜாஸ்ததா அங்கேஷு சாங்கிதாயூயம் சங்கசக்ராங்குசாதிபிः பவ தச்ரத்தயாஸார்த்தம் வேதபாஹ்யாத்விஜாதமः" என்கிற வாக்கியத்தால் வேதவிருத்தமாகிய பாஞ்சராத்திர தந்திரத்தில் தீக்ஷையடைந்த நீங்களும், உங்கள் வம்சஸ்தர்களும், அங்கங்களில் சங்கசக்ராங்குசமுதலிய சின்னங்களைத் தாங்கினவர்களாய் வேதபாஹ்யர்களும், பிராம்ஹணாதமர்களுமாவீர்களாக என்று ததீசிமுனிவர் சபித்ததாகப்பெறப்பட்டதனாலும் இவர்கள் சக்ராங்கிதவைபவம் பாழாய்விட்டதென்க. இப்படித் ததீசி கண்ணுவாதிகளுடைய சாபக்கிரஸ்தராய்க் கிடந்துழலும் பாஞ்சராத்திரப் பேய்கள் சாபாநுகுண்யமாகவே சிலகற்பனைவாக்கியங்களைக்கொண்டு மந்தாதிகளை வஞ்சிப்பாராயினும் பரிபாகிகள் மயங்காரென்க. இந்த நியாயங்களால் சக்ராங்கிதமார்க்கத்தையே "சக்கரநெறிநில்" என்று ஔவையாரருளியதாக அபார்த்தங்கொண்டு பிதற்றிவந்த மூடவாசகம் நிரஸ்தமாய் விட்டதென்க.

இதுநிற்க, ஜாபாலசுருதியில், "அநாசாரம்ச்ருஸ்வதாக்நித்யாதிநா பஸ்மம்க்ருஹீத்வாவிம்ருஜ்யாங்காநி ஸம்ஸ்ப்ருசேத்தத்ரோபரி த்ரிபுண்ட்ரம் தாரயேத்ப்ராஹ்மணோநாமயந்தர்மோ வர்ணோத்தராணாம்" என்கிறவாக்கியத்தால் ஆசாரத்தைவிரும்பும் பிராம்ஹணாதி சாதுர்வர்நத்தாரும் அக்னிமந்திரத்தால் விபூதியைக் கையாலெடுத்துச் சர்வாங்கங்களிலும் பூசிக்கொண்டு பின்னர் திரிபுண்டரமாகப் பொதுதர்மமாய் அணியவேண்டுமென்றும், கைவல்யோபநிஷத்தில் "அத்யாச்ரமஸ்தஸ்ஸக்ருத்திரிபுண்ட்ரம் பஸ்மநாகரோதியோவித்வாந் ப்ரஹ்மசாரீக்ருஹீவாநப்ரஸ்தோயதிர் வாஸஸமஸ்தபாதகேப்யஉபபாதகேப்யः பூதோபவதி" என்கிற வாக்கியத்தால் அத்தியாச்சிரமியாயிருக்கிற பிரம்ஹசாரி, கிருஹஸ்தன், வானப்பிரஸ்தன், சந்யாசியென்கிற ஆச்சிரமிகளில் பஸ்மத்தினால் ஒருதரம் திரிபுண்டரதாரணஞ்செய்தவனாயினும் அவன் எல்லா மஹாபாதக உபபாதகங்களினின்றும் விடுபட்டுப் பரிசுத்தனாவான் என்றும் பெறப்பட்டதனால் நீற்றுநெறி வேதோக்தமாகிய செந்நெறியென்று மேலோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது.

வாமனபுராணத்தில், "சதுர்வேதபரோவிப்ர: பூதிருத்ராக்ஷவர்ஜித: யதாசண்டாளபாண்டஸ்தம் ததபாகீரதீஜலம்" என்கிறவாக்கியத்தால் விபூதி ருத்ராக்ஷங்களைத் தரிக்காத பிராம்ஹணன் நான்கு வேதங்களை யோதினவனாயினும், சண்டாளனுடைய பாண்டத்திலிருக்கும் கங்காசலத்துக் கொப்பாவான் என்றும், "யஸ்யபாலேநாஸ்திபூதிர் நாங்கேருத்ராக்ஷமாலிகா யஸ்யலிங்கார்ச்சனம்நாஸ்தி தஸ்யசண்டாளஜீவனம்" என்கிறவாக்கியத்தால் எவனுக்கு நெற்றியில் விபூதியும், அங்கத்தில் உருத்திராக்கமும், சிவலிங்கார்ச்சனமு மில்லையோ அவன் சண்டாள ஜீவனத்தை யுடையவனாவானென்றும் நிஷேதிக்கப்பட்டதுபோலவே, விபூதி யணியாதவருடைய நெற்றி மூதேவி வாழ்தற்கிடமாகிய பெரும்பாழையுடையது என்று திரஸ்கரித்தவராகிய ஔவையார் இவர்கள் சுடுநெறியைச் சொல்லவந்தாரென்பது பேடிவாசகமாய் விட்டதென்க.

இனி, "முகேபஞ்சாக்ஷரீமந்த்ரம் கண்டேருத்ராக்ஷமாலிகா பாலேபஸ்மத்ரிபுண்ட்ரச்ச ஸருத்ரோநாத்ரஸம்சய:" என்கிறவாக்கியத்தால் எவனுடைய முகத்தில் ஸ்ரீபஞ்சாக்ஷரமும், கண்டத்தில் உருத்திராக்கமாலிகையும், நெற்றியில் பஸ்மத்தினால் திரிபுண்டரமும் பிரகாசிக்கின்றனவோ அவனை ஸ்ரீருத்ரமூர்த்தியென்று சொல்லுவதற் கெவ்வளவுஞ் சந்தேகமில்லை என்று மேல் வாமன புராணத்திலேதானே சொல்லப்பட்டிருத்தலால் "வேடமுநீறும் விளங்கநிறுத்தி" என்கிற வாக்கியாதரவுகொண்டு ஔவையாருடைய சற்சமயமும் சதாநுட்டானமும் இதுவாகுமென்று புத்திமான்கள் கண்டறியாமற்போகார். உண்மையில் "சக்கரநெறிநில்" என்பது அரசனுடைய ஆக்ஞாசக்கரத்தின்வழி நிற்கவேண்டுமென்பது மேதாவியர் விதந்து கூறுவரென்க. இன்னும விரிக்கிற்பெருகும்.

இதுநிற்க, அம்மூடவாசகத்தில் ஞானம் சிவனாலும், மோக்ஷம் விஷ்ணுவாலும் அடையத்தக்கதென்று ஒரு புராண வாக்கியத்தைக் காட்டியழுதார். ஞானமடைந்தவர்க்கு மோக்ஷம் கைவந்த பொருளாகையால் மோக்ஷாதிகாரம் சிவனுக்கில்லையென்பது அவிவேகமென்க. சிவனையடைந்தவர்க்குஞானமாத்திரமேயன்றிமோக்ஷசித்தியில்லையெனின், மோக்ஷத்தைப் பயக்காதஞானம் அவலஞானமாகையால் ஞானத்தின்பொருட்டுச் சிவனையடைவதும் அவலமாய்விடுமென்க. சிவனால் ஞானத்தையடைந்து பின்னர் விஷ்ணு

வால் மோக்ஷமடையத்தக்கதெனின், ஞானிகளாயினபிறகே விஷ்ணு வாராதனம் பிரயோஜனமாகையால் ஞானத்தின்பொருட்டு எல்லாஞ் சைவர்களாதல் வேண்டும். இன்னுமிவ்வாறு பலவிபரீதத்தை விளைவிப்பதாகிய அந்த ஹேயவாக்கியத்தை இவர்க்குத் தேடிக் கொடுத்த புத்திமான்யாவரோ அறிந்திலம். ஆதித்யபுராணத்தில்,— "ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்தாந் பசூந்பத்வாமஹேச்வர: பாசை: ரேதை: பதிர்வேத: கார்யங்காரயதிஸ்வயம்" என்கிற வாக்கியத்தால் பதியாகியமஹேசுவரர் தாமேபிரம்ஹாதி ஸ்தம்பபரியந்தங்களாகிய பசுக்களை மலமாயாதி பாசங்களால்கட்டிக் காரியங்களைச் செய்விக்கின்றார் என்றும்,"ப்ரஹ்மவிஷ்ணுஸுரேந்த்ராத்யா: பசவ: பரிகீர்த்திதா: தேஷாம்பதித்வாத்தேவேச சிவ: பசுபதிஸ்ம்ருத:" என்கிற வாக்கியத்தால் பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலானவர்கள் பசுக்களென்றும், தேவதேவனாகிய பரமேசுவரரொருவர்தாமே பதியென்றும் நிச்சயிக்கப்பட்டதனால் பாசசம்பந்திகளாகிய பசுக்களிலொருவராகும் விஷ்ணுவை மோக்ஷகர்த்தாவென்று சொல்லவந்தது அறியாமையென்க. "ஸ்வதஸ்ஸித்தம்பதித்வம்மே யுஷ்மாகம்பசுதாபிச்ச" என்கிற வாக்கியத்தால் ஓ விஷ்ணுவாதிகளே! உங்களுக்குப் பசுத்வமும் எனக்குப் பதித்வமும் ஸ்வபாவசித்தமான அநாதிதர்மமென்று சிவனருளிச்செய்த வுண்மையுஞ் சான்றாமென்க.

இனி, "ஜ்ஞாத்வாதம்ம்ருத்யுமத்யேதி நாந்ய: பந்தாவிமுக்தயே" என்கிற கைவல்யோபநிஷத்வாக்கியத்தால் சிவஞானத்தால் மிருத்துவைக்கடப்பனென்றும், சிவஞானத்தைக் காட்டிலும் வேறாகிய முத்தியுபாயமில்லையென்றுஞ் சொல்லப்பட்டதனால் ஞானகர்த்தா சிவனென்றும், மோக்ஷகர்த்தா விஷ்ணுவென்றுங் காட்டவந்த அவ்விவாசகம்பாழ்த்ததென்க. "ஜ்ஞாத்வாசிவம்சாந்திமத்யந்தமேதி" என்கிற சுருதியால் சிவஞானத்தை யடைந்தவர்கள் ஜநநமரணப்பிரவாஹதுஸ்தரமாகிய ஸம்ஸாரதுக்கத்தினின்றும் அத்யந்த சாந்தியடைகின்றார்களென்றும், "ஏதம்ஜ்ஞாத்வா அம்ருதாபவந்தி" என்கிற சுருதியால் சிவபெருமானையே ஜகஜ்ஜந்மாதி காரணமென்றும், முமுக்ஷுஜனப்பிராப்யபதமென்றுந் தெரிந்துகொண்டவர்கள் முத்தாராகின்றார்களென்றும் பெறப்பட்டதனால் ஞானமோக்ஷங்களிரண்டுஞ் சிவனாலேயே யடையத்தக்கதென்று வெளிப்பட்டது.

"சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளியவொண் முத்தி

சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச
சிவமான ஞானஞ் சிவாநந்த நல்குமே."

என்னுந் திருமந்திரவுரையானுந் தெளியக்கடவர். "ஸர்வமந்ய த்பரித்யஜ்ய ஹேயாந்விஷ்ண்வாதிகாஸ்ஸுராந் சிவஏவஸதாத்யேயஸ் ஸர்வஸம்ஸாரநாசக:" என்கிற பைப்பலாத வாக்கியத்தால் பரித்யஜிக்க வேண்டிய விஷ்ணுமுதலான சமஸ்ததேவர்களையும் விட்டுச் சம்ஸாரதுக்க நாசன பூர்வகமாகிய முக்திப் பிராப்தியின் பொருட்டுச் சிவனொருவனே சர்வகாலத்திலுந் தியானஞ்செய்யத்தக்கவன் என்று நிச்சயிக்கப்பட்டதனால் மோக்ஷகர்த்தா விஷ்ணுவென்று கூறவந்த வீண்வாதம் விட்டொழிந்ததென்க. இன்னும் சுவேதாசுவதரோபநிஷத்தில் "யதாசர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்திமானவா: ததாசிவமவிஜ்ஞாய துக்கஸ்யாந்தேபவிஷ்யதி" என்கிற வாக்கியத்தால் உலகத்தில் மானவர்கள் எப்போது ஆகாசத்தைச் சர்மமாக மேலே போர்த்துக்கொள்ளுவார்களோ அப்போது சிவனைச்சேவிக்காமல் துக்காந்தரூபமாகிய மோக்ஷத்தையடைவார்களென்று பெறப்பட்டதன்றியும், "விஹாயஸாம்பமீசாநம் யஜந்தேதேவதாந்தரம் தேமஹாகோரஸம்ஸாரே பதந்திஹிவிமோஹிதா:" என்கிற பாத்மபூர்வத்தால் பவானிபதியாகிய சிவனைப்பூசிக்காமல் அந்நிய தெய்வங்களை யாவர்பூசிக்கின்றார்களோ, அவர்கள் மோகாந்தகர்களாய்க் கோரஸம்ஸாரத்தில் வீழ்ந்தலைவார்களென்றும் நிச்சயிக்கப்பட்டதனால் ஞானமோக்ஷங்களிரண்டுஞ் சிவனாலேயே யடையத்தக்கதென்று சாதிக்கப்பட்டது. மேல் நியாயங்களால் சிவனால் ஞானமும், விஷ்ணுவால் மோக்ஷமும் சித்திக்குமென்றழவந்த விபரீதஞானம் விலகிவிட்டதென்க.

இதுபட்டோ, விஷ்ணுமூர்த்தி கபிலராகவந்தபோது புராரியாகிய சிவனிடத்தில் சாங்கிய ஞானோபதேசம் பெற்றனரென்று ஸ்காந்தத்திலும், பதரிகாச்சிரமத்தில் நாராயணருக்குச் சிவன் வெளிப்பட்டுச் சிவகீதை பதினொரு அத்தியாயமும உபதேசித்தனரென்று கூர்மபுராணம் உத்தரகாண்டத்திலும், பஞ்சவடிதீரத்தில் அகஸ்தியரிடத்தில் விரஜாதீக்ஷையடைந்த ஸ்ரீராமபத்ரருக்குச் சிவன் வெளிப்பட்டுச் சிவகீதை யுபதேசித்தனரென்று பதுமபுராணம் உத்தரகாண்டத்திலும், சரஸ்வதிக்கும் விஷ்ணுவுக்கும் முன்னும் பின்னுமாக ஞானகைவல்ய காண்டத்தையும், பிருஹஸ்பதிபகவானுக்குமுக்திகாண்டத்தையும், பிரம்ஹதேவருக்குப் பிரம்ஹகீதையையுஞ் சிவ

ன்முறையே வெளிப்பட்டருளினரென்று சூதஸம்ஹிதையினுஞ் சொல்லப்பட்டிருக்கு முண்மையால் விஷ்ணுவாதிகளுக்கு ஞானத்தையளிப்பவர் சிவபெருமானேயென்று பெறப்பட்டதனால் விஷ்ணுவுக்கு ஞானமோக்ஷங்க ளளிக்குஞ் சக்தியுண்டென்று நாமெந்தமதியால் சொல்லத்துணிவோம்? இதுநிற்க, விஷ்ணுவால் ஞானமடைந்தவர்களுண்டெனின், அவர்களையின்னாரென்று வெளிப்படுத்தல்வேண்டும். ஒருவருமில்லையாகவும், ஞானாதிக்கம் விஷ்ணுவுக்குக் கூறுவது துரபிமானமென்க. கண்ணன் அருச்சுனனுக்குக் கீதாவுபதேசஞ் செய்ததில்லையோவெனின், அந்தஞானம் உபமன்னியமுனிவரிடத்துப் பெற்றதேயன்றிச் சர்வக்ஞதையால் ஞானாதிக்கங் கூறுவது பொருந்தாதென்க. கிருஷ்ணர் ஞானாதிக்கமடைந்தவராயினும் ஆசாரியாதிக்கம் பெறாமையால் அருச்சுனனுக்கு அவருபதேசித்தஞானம் அஸ்திரமாகிமீண்டும் உத்தரகீதையை யுபதேசித்தனர். இப்படி யிரண்டுமுறை யுபதேசிக்கப்பெற்றும் அவ்வருச்சுனன் கண்ணப்பராக அவதரித்துச் சிவாராதனத்தால் முத்தியடைந்த மான்மியத்தை மேலிடங்களில்(கூகூ)வது பக்கத்தில் கூறியிருக்கின்றோமாகையால் விஷ்ணுவுக்கு ஞானாதிக்கமுண்டென்பதும் இல்லையென்பதும் புத்திமான்கள் கண்டறியாமற்போகார். சிவபெருமானோவெனின், தக்ஷிணாமூர்த்தமாயெழுந்தருளிச் சநகாதிமுனிவர்க்கருளியும், திருப்பெருந்துறையில் குருந்தடியி லெழுந்தருளி வாதவூரடிகளுக் கருளியும், இன்னும்பலவாறு ஞானாசிரியத்தலைமை தோன்ற விழைந்து சிந்மயகோலங் காட்டிநின்ற வுண்மையைச் சங்கரஸம்ஹிதை, ஹாலாஸ்யமாஹாத்மிய முதலிய பிரமாணங்களால் நிச்சயிக்கக்கூடுமென்க. இதுமட்டோ, மந்திரம், யந்திரம், தந்திரம் சிற்பம், வைத்யம், ஜோசியமுதலிய சர்வசாஸ்திர ஞானாதிக்கமுஞ் சிவனுக்கே அந்தந்த நூல்களில் கூறப்பட்டதன்றி யிதரதேவதாசம்பந்தம் நிரஸ்தமென்க. "அஷ்டாதசாநாம்வித்யாநா மேதாஸாம்பின்னவர்த்மநாம் ஆதிகர்த்தாகவிஸ்ஸாக்ஷாச் சூலபாணிர்மஹேச்வர:" என்கிற வாக்கியத்தால் அஷ்டாதசவித்யைக்கும் கர்த்தா சூலபாணியாகிய சிவபெருமானே யென்று பெறப்பட்டவுண்மையானுந் தெளியக்கடவர். இதுகாறுங் கூறிய நியாயங்களால் ஞானாதிக்கமே விஷ்ணுவுக்கில்லையென்று வெளிப்பட்டதனால் மோக்ஷாதிக்கமுண்டென்று நாம் எந்த ஆதரவால் சொல்லத்துணிவோம்; ஆயின் விஷ்ணுவை ஆச்ரயிப்பவர்களடையுங் கதிதானியாதெனின், விஷ்ணு

பதத்தை யடைவார்களென்பதில் எமக்கொரு ஆடங்கமுமின்றெனக. அதுமோக்ஷபதமல்லவோவெனின், காலத்திரயத்தினுமன்றாம். மோக்ஷமென்பது சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்யம் என்று அதிகாரபேதத்தால் சரியை கிரியை யோக ஞானங்களை அநுஷ்டிப்பவர்கள் அடையும்பேறாக நிச்சயமாகையால் சரியைக்கே அதிகாரிகளல்லாத விஷ்ணுபக்தர்களாகிய பாஞ்சராத்திரிகள் உண்மைஞானத்தாலடையுஞ் சிவப்பேற்றினை எப்படியடைவார்கள்? சிவனை ஆராதித்துப் பரமபதமாகிய உன்னதஸ்தானத்தை விஷ்ணுமூர்த்தி அடைந்தாரென்று கூறும் ருக்ஸம்ஹிதா வாக்கியத்தை மேல் (கூகூ) வது பக்கத்திலேதானே கூறியிருக்கின்றோமாகையால் மோக்ஷபதம் இதுவாகுமென்று புத்திமான்கள் கண்டிராமற் போகார். பாஞ்சராத்திரிகள் விஷ்ணு சாரூப்பியத்தையேபரமமுத்தியென்றுகொண்டவராகையால் ஞானத்தின் பிரயோசனமாகிய சிவசாயுஜ்யப்பேறு அவர்க்குக்கிட்டாமற் போயிற்றென்க. இங்கே விஷ்ணு சாரூப்யமென்றது விஷ்ணுபதமென்றாகி இந்தராதிபதங்கள் போலாமேயன்றி மோக்ஷபதமென்பது அறவேநிரஸ்தமென்க.

> "கொள்ளேன்புரந்தரன் மாலயன்வாழ்வு குடிகெடினு
> நள்ளேனினதடியாரொடல்லா னரகம்புகினு
> மெள்ளேன் றிருவருளாலேயிருக்கப் பெறினிறைவா
> வுள்ளேன்பிறதெய்வ முன்னையல்லா தெங்களுத்தமனே."

என்றருளிய ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கால் பிரம்ஹ விஷ்ணுக்களுடைய பதங்களை முமுக்ஷுக்கள் விரும்பாரென்னு முண்மை வெளிப்பட்டதன்றியும், "கரோமித்வத்பூஜாம்ஸபதிஸுக்தோமேபவவிபோ விதித்வம்விஷ்ணுத்வம்திசஸிகளுதஸ்யா: பலமிதி புநச்சத்வாம்த்ரஷ்டும்திவிபுவிவஹங்பக்ஷிம்ருகதா மத்ருஷ்டவாதத்கேதம்கதமிஹஸஹேஹசங்கரவிபோ" என்றருளிய சங்கராசாரியர் திருவாக்கால் விஷ்ணு பிரம்ஹாதிபதங்களை யடைந்தால் பன்றியாகவும், ஹம்ஸமாகவும்பிறந்து சிவனுடைய திருவடிஞானத்தைவிழைக்கவேண்டி வருமாகலின் அப்பதங்களை விரும்புவது யுக்தமன்றென்னு நியாயம் வெளிப்பட்டதனால் விஷ்ணுபதமே மோக்ஷஸ்தானமென்றும், மோக்ஷமளிப்பவர் விஷ்ணுவேயென்றும், முமுக்ஷுக்கள் விஷ்ணுபதத்தையே விரும்புவார்களென்றுஞ் சொப்பனங்கண்டு பிதற்றிய சோம்பேறிவாதஞ்சோர்ந்து விட்டதென்க. ஆயின், கண்டாகன்னனைக் கண்ணன்பால் மோக்ஷமடைகவென்று

சிவன் சொன்னதென்னையெனின், பெற்றான் சாம்பனைத் தமதன்ப ராகிய உமாபதி சிவாசாரியரிடத்தில் முத்திபெறுகவென்று அருளி யதுபோலாமேயன்றிக் கண்ணனை மோக்ஷாதிகாரியென்று கொண் டல்லவென்க. கண்ணன் சிவதீக்ஷாபாதுகைச் சிவபெருமானிடத்து அன்புபூண் டொழுகிவந்த வுண்மையால் அவன் பெருமைதோன்ற அங்ஙன மருளியதன்றி வேறில்லையாம். அன்றியும், கண்டாகன்ன னென்பவன் பஸ்மருத்ராக்ஷ பஞ்சாக்ஷர சம்பந்தங்களால் பரம பவித்திரனாய் விளங்கினனென்பது பிரமாணசித்தமாகையால் மோ க்ஷரூபியாய் விளங்கும் அவனுக்குக் கிருஷ்ணர் முத்திகொடுத்தா ரென்பது ஔபசாரிகமேயன்றி வாஸ்தவமன்றென்க. கண்டாகன்ன னையும், பெற்றான் சாம்பனையும் முறையே கண்ணனிடத்தும், உமா பதி சிவாசாரியரிடத்தும் முத்திபெறுகவென்றருளியது போலவே மூலபுருஷராகிய விஷ்ணுமூர்த்தியை ஞானசம்பந்தமூர்த்திகளிடத் தில் சிவசாரூப்யம் பெறுகவென்றருளிய வுண்மையை மேலிடங் களில் (கஅ) பக்கத்தில் காட்டியிருக்கின்றோமாகையால் அதனைப் பிரமாண பூர்வகமா யீண்டுதெகரிப்பாமென்க "தத்ராபூர்வம்மஹாவிஷ் ணுః பச்சிமாலயஸங்ஞிகே தபச்சசாரஸாநுப்ய ஸம்ப்ராப்த்யேசூலிநோ ஹரி:— சாந்தோதாந்தோஜிதக்ரோதோ பஸ்மோத்தூளிதவிக்ரஹః ருத் ராக்ஷமாலாபரணோ ருத்ராத்யாயபராயண:— ஹ்ருத்புண்டரீகநிலயம் விச்வாக்ஷம்விச்வதோமுகம் விச்வதః பாதபாணியந்தம் விச்வரூபமுமாப திம் த்யாயாமாநேர்நிவாராத்ரம் தபஸாதஸ்யஸந்து ஷ்டః ப்ராஹாவிர்ப்பூயநூலத்ருத்— வத்ஸவிஷ்ணோப்ரஸந்நோஸ்மி வர ம்வரயஸுவ்ரதத் வமதீவயோர்யோஸ்மாகம் பார்வத்யாச்சவிசேஷத:— இதிதேவவசச்ருத்வா முராரிः ப்ரீதமானஸः ப்ரணம்யகிரிஜாதீசம் ஸ்ரு ஷ்டவாந்வரமுத்தமம்— பகவந்தேவஸர்வஜ்ஞ விச்வேஸ்வரமஹேச்வர ஸாருப்யம்மஹ்யமீசாந ப்ரஸீததவசங்கர— ச்ருத்வாதுவசநம்தேவः ப்ரோவாசமதுலஸ்மிதம் விஷ்ணோதவேஷ்டம்தாஸ்யாமி காலேனைவந சாஞ்சஸா— வைவஸ்வதேந்தரேப்ராப்தேஷ் யஷ்டாவிம்சதிகேகலே மத்பக்தஸ்தேத்யஸம்பந்தः ப்ராதுர்பவதிஸூநுதாம்— த்ராவிடாலயம்தயந் ரைவ ஸ்தாதருமஹாத்மநः தேசேஷ்வத்ரயத்ராஸ்தி மதாலயமநுத்த மம்— தத்ரதத்ரச்சஸம்பந்தோ குஹாப்ஸோபதீநாந்ஸ்வதீः த்ராவிட ஸ்துதிபிர்ப்பக்த்யா ப்ரீணயிஷ்யதிமாம்முதா— அத்ரமாஞ்சயாமபிவசிஸ் தோதும்மாமாகமிஷ்யதி அத்ராபிபச்சிமஸ்தானே த்ராவிடஸ்துதிபிஸ்ஸ வை— ஸ்துத்வாத்வமதமத்புத்யா த்ரஷ்ட்வாத்வத்பக்திதர்சிதம் ப்ரீண யிஷ்யதிநுத்யாஸோ மந்மயஸ்த்வம்கதஸ்ததா— த்வசபக்தகர்வநாசாய் மத்ஸாருப்யமவாப்ஸ்யஸி இதிதேவோவாந்தத்வா ஜகாமாபீஷ்டமாலயம்—" என்கிற வாக்கியங்களால் பூர்வத்தில், கந்தபச்சிமாலயமென்

கிற விடத்தில் விஷ்ணுவானவர் சாந்த சமதமாதிகளோடு கோபக்தைச் செபித்தவராய்ப் பஸ்மருத்ராக்ஷங்கள் தரித்துக்கொண்டு ஸ்ரீருத்ரபாராயணஞ்செய்து ஹ்ருதயகமலவாசியும், விசுவாக்ஷரும், விசுவதோமுகரும், அநேகபாணிபாதரும், விசுவரூபருமான பரமேசுவரரை அகோராத்திரம் தியானித்துக்கொண்டு சிவசாரூப்பியமடையும்பொருட்டு அதிகமான தவஞ்செய்துகொண்டிருக்கையில் சூலபாணியாகிய பரமசிவம் அவர் தவத்தால் சந்தோஷித்தவராய் வெளிப்பட்டு ஓ குழந்தாய் விஷ்ணுவே! பார்வதி பரமேசுவரர்களாகும் எங்களுக்கு நீ மிகவும் அன்பனாகையால் நாங்கள் பிரஸன்னமானோம் உனக்கிஷ்டமான வரத்தைக் கேளென்று திருவுளம்பற்றுதலும், விஷ்ணுவானவர் மனமகிழ்ந்து சிவபெருமானை நமஸ்கரித்து, ஓ பகவானே! எல்லாமறிந்தவரும், ஜகதீசுவரருமாகிய தேவரீர் உம்முடைய சாரூப்பிய பதவியைக் கொடுத்தருளல்வேண்டுமென்று பிரார்த்திக்கவும், விஷ்ணுவை நோக்கி உன்னுடைய இஷ்டமானது காலதாமசத்தின்பேரில் கொடுக்கப்படுமேயன்றி யிப்போது சித்திக்கப்பெறாது. அஃதெப்போதெனின், வைவசுவதமந்வந்தரத்தில் (உஅ) வது கலியுகத்தில் என்னுடைய பக்தனாகிய சம்பந்தனென்பவன் உனக்குச் சாரூப்பியத்தைக் கொடுக்கப்போகிறான். ஆகையால் நீ எப்பொழுதும் தவஞ்செய்துகொண்டிருந்தால் உலகமுய்யப் பக்தி முத்தி யருள்வானாகிய சம்பந்தன் குமாரஸ்வாமி அமிசதநிலைதரித்து உத்தமமாகிய என்னுடைய ஆலயங்கடோறுஞ் சென்று என்னைத் திராவிடஸ்துதிகளால் ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு இந்தக் காஞ்சியில் பச்சிமஸ்தானமென்கிற இந்தவிடத்தில் வருவான் அப்போது நீ என்னிடத்தில் சித்தத்தைவைத்து அவனை நானாக அறிந்து திவ்யஸ்துதிகளால் ஸ்தோத்திரஞ்செய்து உன்னுடைய பக்தஜனகர்வாபஹாரநிமித்தமாய் என்னுடைய சாரூப்பியத்தை யடைவாயென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினரென்றும், அவ்வாறே நிகழ்ந்ததென்றும், ஸ்காந்தத்தில், சநற்குமாரஸம்ஹிதையில், காளிகாகண்டத்தில், காஞ்சிமஹாத்மியத்தில்சொல்லப்பட்டிருக்கும் வாஸ்தவார்த்தம் வெளிப்பட்டதனால் ஞானசம்பந்தப் பிரபுவினுடைய ஆதிக்கம் விசேஷமாய்ப் பிரசங்கிக்கப்பட்டது. மேல்விருத்தாந்தத்தால் பக்தபராதீனராகிய சிவபெருமான் கண்ணனைத் தனது பக்தனென்பதுதோன்றக் கண்டா கன்னனை அவன்பால் விடுத்ததேயன்றி முக்திநாயகனென்றல்ல

வென்பது இனிது வெளிப்பட்டதனால் மோக்ஷகர்த்தா விஷ்ணுவே யென்றழுதுவரும் மூர்க்கத்தன்மையையினியொழிவாராக. இப்படியே விஷ்ணுவால் மோக்ஷமடைந்த வொவ்வொருசரிதமும் விவகாரத்தில் அவலமாகுமென்பதுபற்றி யிவ்வளவிலே விடுத்தனமென்க. இதுகாறும் விவகரித்துவந்த நியாயங்களால் ஞானமோக்ஷங்களை யளிப்பவர் சிவபெருமானேயென்றும், விஷ்ணுப் பிரம்மாதிகள் அதிகாரிகளல்லவென்றும் நாட்டப்பட்டது.

இங்ஙனநிற்க, அம்மூதேவி வாசகத்தில் "பல்லூழிகாலம் பயின்றரனை யர்ச்சிக்கில் - நல்லறிவு சற்றே தரும்" என்றருளிய ஔவையார் திருவாக்கால் ஞானம் சிவனால் வருமென்பது தோன்ற அவ்வாக்கியத்தை யுதாகரித்தார். அந்த வாக்கியத்தால் சிவஞானசித்தியின் அருமை வெளிப்பட்டதேயன்றி விஷ்ணுவாதிகளொன்றுங் காணப்படவில்லை. அந்தவாக்கியத்தைச் சுருதிவிருத்தமாய்த் தானுதாகரித்தமூத ஹேயவாக்கியத்திற் காதாரமாய்க்கொண்டு வெளிப்பட்டாராகையால் விஷ்ணுவால் மோக்ஷமுண்டாமென்பதற்குபகரணமான வேறொருவாக்கியமும் ஔவையார் திருவாக்காகவுதாகரித்தல்வேண்டும். மேல்யாம் விவகரித்துக்காட்டிய நியாயப்படியே பாசபந்திகளாகிய பசுசமூகங்களி லொருவராகிய விஷ்ணுவை ஞானாதிகாரியென்றே கூறாதவராகிய ஔவையார் அவரை மோக்ஷாதிகாரியென்று எங்ஙனங்கூறத் துணிவார்? விஷ்ணுவுக்கே ஞானமென்பது உண்டோ இல்லையோவென்று தடுமாற்றத்திலிருக்கவும், அவருடைய பக்தர்களுக்கு அந்த நிரதிசயஞானம் சித்திக்குமென்பது சசவிஷாணவந்தியாபுத்திரக்ககனாரவிந்தவியவகாரமாய் முடியுமென்க. இங்ஙனமாகவும், ஔவையார் திருவாக்கை யாதாரமாய்க்கொண்டெழ வந்தது என்போலுமெனின், விட்டிற்பூச்சிகள் தீயொளியைத் தமக்கிதமென்றுகருதி மேல்விழுந்து சாதல்போலவும், ஓரிடையன் தனதாடெனக்கருதி மலையடிவாரத்தி லுலவுங்கரடியை நெருங்கி அதற்கிரையாதல்போலவும், தன்னைக்கொல்லும்படிக் கரத்திற் கத்தியேந்திவரும் பூசாரியை ஆடானது இரைதரவருகிறானென்று மகிழுமாறு போலவுமாம். அந்தவாக்கியத்தால் சிவனுக்கே ஞானம் நாட்டப்பட்டதன்றி யிதர தேவதா சம்பந்தமொன்றுங் கூறியதில்லையாகலின் ஞானமும், மோக்ஷமும் சிவனாலேயே யடையத்தக்கதென்று அவர்கூறிய மற்றைவாக்கியங்களை யீண்டுதாகரிப்பாமென்க.

"எண்ணிலியூழி தவஞ்செய்தவ ரீசனை
யுண்ணிலைமைபெற்ற துணர்வு."

"ஆதியோ டொன்று மறிவைப்பெறுவதுதா
னீதியாற்செய்த தவம்."

"பத்தியாலுள்ளே பரிந்தரனைத் தாளேக்கின்
முத்திக்கு மூலமது."

"நல்லானைப்பூசித்து நாதனெனவுருகில்
தில்லாதோ வீசனிலை"

"ஒவ்வகத்துனின்ற சிவனருள் பெற்றக்கால்
அவ்வகத்து வானந்தமாம்."

"சிந்தையுணின்ற சிவனருள் பெற்றக்கால்
பந்தமாம் பாசமறும்."

"ஓவாசிவனருள் பெற்றுருவுரையின்றித
தாவாதவின்பந்தரும்."

"சிவனுருவந்தானாய்ச செறிந்தடங்கிநிற்கில்
பவநாசமாகும் பரிந்து."

"சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்
சிந்தித்திருக்குஞ் சிவம்."

"அழியாவுயிரை யரனுடன்வைக்கிற்
பழியான தொன்றில்லை பார்."

என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் ஞானமோக்ஷங்களிரண்டும் சிவசம்பந்தமாகவே பெறப்பட்டதன்றி யிதரதேவதாசம்பந்தம் அறவே நிரஸ்தமாய் விட்டதனால் விஷ்ணுவுக்கே மோக்ஷாதிக்கமுண்டென்று சாதிக்கவந்த மூடஞானம் முரண்பட்டழிந்ததென்க.

இப்பேதைகள் ஔவையார் திருவாக்குகளிற் பயின்றும் வாய்மைதோன்றுதவழி விபரீதங்கொண்டழிவதென்னை யெனின், "நல்லனூல் பலகற்பினுங் காண்பரிதே - யெல்லை யிலாத சிவம்." என்று எமதன்னையார்கூறிய வாய்மை வெளிப்பட்டதன்றியும், தீக்ஷிதஸ்வாமிகள திருவாக்குண்மையையுஞ் சிந்திப்பாராக

## சிவதத்துவவிவேகம்.

"த்வயிச்ரத்தாநாதப்ரவசநபலாந்நைவ ஸுலபாநமேதாபாஹுச்ன் யாந்நச்சவிவிதசாஸ்த்ரேஷுகட்டநாத் ப்ரஸாதாதேவைநாம்பவதபலபந்தே ஸுக்ருதிநஸ்த்தநூஸ்தேதுத்தாந்தாம் சதமிவலபேரத்துமதய:"

"உன்றிருவடிக் கீழுறுதியாமன்பு முன்றிருவருளினாற் கிடைப்ப
தன்றிநூற் பலவுமாய்ந்ததா லுரைசெயளப்பருந்திறமையான்மதியான்
மன்றவேகிடைப்பதன்று மற்றதனை மாதவஞ்செய்திலாக்கயமை
துன்றியபுலையோர் யாங்ஙனம்பெறுவர்சோதியே கருணைவாரிதியே."

"தவச்ரீபாதாப்ஜேகதமபிச்சபக்திர்ந ஸுலபாநிஹந்த்ரீதுக்காநாம்நிகிலபுஷார்த்தைகவஸதிர்விநாபுண்யைர்ஜந்மாந்திர சதஸஹஸ்ரேஷுவிஹிதைர்ஜநச்ரேயோமாத்ரம்கலுபாஹுசாலிக்ந்நலபதே"

"உலகர்சேருறுதிப்பய னெவற்றினுக்கு முறைவிடமாய்த் துயர்முழுதும்
விலகுறத்துமிக்குங் கணிச்சியா முன்றாள் விரைமலர்க்கியற்றுமெய்ப்பத்தி
யலகிலாப் பிறவிதொறும் புரிதவத்தாலல்லதெவ்வாற்றினு மரிதே
நலமதொன்றடைதற்குறுமிடையூறு நாதனே பலவுளவன்றே."

"விதூதாந்தர்த்வாந்தாவிவிதபவஸம்பந்த ஸுக்ருதாயதந்தேபோத்துந்த்வாம் யமநியமஸத்கர்மநிரதாः ததீச்சாத்யைச்சப்தாகிரிசதநுஸிந்து ப்ராக்ருதயஃ கதந்த்வாம்ஜாநீயுः கலிமலிநசித்தாஹததியः"

"பலவகைப்பவந்தோறெய்திடுந்தவத்தோர்படர்ந்தெழுமகத்திருள்கடிந்தோர்
நலமுறு மியமநியமநற்செய்கைநயந்துளோருனைப் பெறமுயல்வார்
கலியுறு நவைசேருளத்தவ ரசுரக்கடுமையர்ததீசியாதிகளா
லலமரச்சபிக்கப் பட்டுளோ ரெவ்வாறறிவரோ வையநின்றனையே."

இந்தவாக்கியங்களால் சிவஞானசித்தியின் அருமை வெளிப்பட்டதன்றியும், ததீசியாதிகளுடைய சாபத்தாற்கட்டுண்டழியுங் கலதிகள் தன்மையும் வெளிப்பட்டது. "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்று எமது பரமகுருஸ்வாமிகளருளிய திருவாக்கின்படியே பரிபாகிகள் சிந்தித்திருப்பாரென்க. இங்ஙனமாகவும், ஔவையாருடைய வாஸ்தவாபிப்பிராயம் இன்னதென்றறியாமல் மூடத்தன்மையால் அவர்வாக்கியத்தை யுதகரித்தழவந்தது நிஸ்புருஹமாய் விட்டதென்க.

"த்யேயத்வேதவஸாக்ஷிணோமுநிகணாஜ்ஞான ப்ரதாநேசுகோவந்த்யத்வேநிகமாஸ்வபக்திவிமதக்லாந்தேஸாக்ருதாந்தாதயः நித்யந்தேபகவந்பிதாமஹசிரஸ்ராக்ப்ருந்த மாத்யந்தயோச்சூந்யத்வேச்சவராஹ ஹம்ஸவபுஷௌபத்மாக்ஷபத்மாஸநௌ" என்றருளிய ஹரதத்தாசாரியசுவாமிகள் வாக்கியத்தால் சிவபெருமானே யாவராலுந் தியானிக்கத்தக்கவரென்பதற்கு முனிவர்கூட்டங்கள் சாட்சியும், சமஸ்தாத்மாக்களுக்கும் சிவஞானத்தை யளிப்பவரென்பதற்குச் சுகர்சாட்சியும், எல்லாராலும் வந்திக்கத் தக்கவரென்பதற்கு வேதங்கள் சாட்சியும்,

ஸ்வபக்தஜன சத்ருஹரணஞ் செய்பவரென்பதற்கு இயமன் சாட்சியும், நித்தியரென்பதற்குப் பிரம்ஹகிரோமாலிகை சாட்சியும், ஆத்யந்தசூன்யரென்பதற்கு வராஹ ஹம்ஸ சரீரங்களைத்தாங்கி விஷ்ணுப்பிரம்ஹாக்கள் சாட்சியுமென்று நிச்சயிக்கப்பட்டதன்றியும், "ஆநந்த்யேஶ காரியஸத்வாங்ம்ருதி பயஹரணத்ஸ்வல்பஸேவாதிதோஷாத் ஸங்கஷ்டாதப்யுபேக்ஷாபயஹித வசநாதுத்தமத்வாச்சம்போ: ஸேவ்யோவிஷ்ணுபமங்யுக்ருஹிண முநிஸுதரீதமங்கேச்சதேவா தக்ஷ ஸ்ரீராமவேதா: பசுசிசுக வதூராக்ஷஸாஸ்ஸாக்ஷிணோ" என்றருளிய தீக்ஷிதஸ்வாமிகள் வாக்கியபததால் சம்பிரதாய வாசியாகிய சிவபெருமானே ஆத்யந்த ரஹிதரென்பதற்கு விஷ்ணுசாட்சியும், விசேஷகர்த்ருத்வ முடையவரென்பதற்கு உபமந்யுபகவன்ற சாட்சியும், அதிகசத்தியுடையவ ரென்பதற்குப் பிரம்ஹாசாட்சியும், மிருத்துபயத்தை நீக்குபவ ரென்பதற்கு மிருகண்டுபுத்திரர் சாட்சியும், ஸ்வல்ப சேவையாலேயே சந்தோஷித் தனுக்கிரகிப்பவரென்பதற்குக் குபேரன் சாட்சியும், ஆபத்காலத்தி லாதரிப்பவரென்பதற்கு அமிர்தமதனம்பண்ணின தேவர்கள் சாட்சியும், யாவற்றினும் உபேக்ஷைசெய்பவரென்பதற்குத் தக்கன் சாட்சியும், அபயந்தந்து இதவசனங்கூறுபவரென்பதற்கு ஸ்ரீராமர் சாட்சியும், அதிபரமாப்தரென்பதற்கு வேதங்கள் சாட்சியுமாய்க் கொள்வா மன்றிப் பசுவையும், சிசுவையும், ஸ்ரீயையும், ராக்ஷசனையும் உரிய சாட்சிகளாகக்கொள்ளோமென்று பெறப்பட்டதனானும் உண்மையினிது விளங்குமென்க. பசுவென்பதுகஜேந்திரனாகிய யானை, சிசுவென்பது இரணியகுமாரனாகிய பிரகலாதன், ஸ்ரீயென்பது பாண்டவ பத்னியாகிய திரௌபதை, ராக்ஷசனென்பது இராவண சகோதரனாகிய விபீஷணன் என்று நிச்சயமென்க. முன்சாட்சிகள் சிவபரமும், பின்சாட்சிகள் விஷ்ணு பரமுமாகவிளங்கலான் சாட்சிகள் பலத்தைநோக்கி ஞானமோக்ஷங்க ளளிக்கும் சாட்சிகள் பரமாதிக்கமுடையவர் சிவபெருமானேயென்று சாதிக்கப்பட்டது.

இனியந்தத் துஷ்டவாசகத்தில், ஔவையாரருளிய நீதிச்சொற்களுக்குச் சைவர்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்று இல்லாதபேர்வைத்து வழங்குகின்றார்களென்றும், ஔவையார் கருத்தவ்வாறுஞல் அவ்விரண்டு புத்தகங்களினந்தத்தில் ஔவையா ரருளிச்செய்த நீதிச்சொல் முற்றும் என்று வழங்க வழக்கில்லையென்றும், இதுமாத்திரமன்றிப் புறச்சமயிகளாகிய அருகர்செய்த கணித

நூல்கட்கும் யானைமுகன் காப்பைச் சேர்த்திருக்கின்றார்களென்றும், தம்மவர்கள் சைவநூலில் பிரவேசியாமலிருக்கும்போதே அருணகிரியாருக்குக் கன்னதானமளித்த வில்லிபுத்தூரார்செய்த ஸ்ரீ மஹா பாரதத்தில் நல்லாப்பிள்ளை யென்பவர் சிலபாடல்களைப்பாடிச் சேர்த்துக்கெடுத்தனரென்றும், அதுபோலவே யிப்போதுஞ் சிலர் கம்பராமாயணத்தைக் கெடுக்கப்பார்க்கின்றார்க ளென்றும் வாயில்வந்தபடித் தாறுமாறாய்ப் பிதற்றியழுதார்.

இதனை முறையே விவகரிக்குமிடத்து ஔவையாரருளிய நூல்களுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் பெயர்களே யுரியனவென்பதையீண்டு நிரூபிப்போம். மேல் பலவிடங்களில் யாம் விவகரித்துக்காட்டிவந்தநியாயங்களால் ஔவையென்பவர் சுத்த சிவ சந்மார்க்கமுடையாரென்பது பெறப்பட்டதன்றியும், அவருடைய உபாசனாமூர்த்தமா யெழுந்தருளியுள்ளவர் விநாயகக் கடவுளென்பதும் யாவருமறிந்தவிஷயமென்க. அவரருளிய "விநாயகரகவல்" முதலிய வுண்மைநூல்களே சான்றாமாகவின் மேலும் எடுத்துவிரிப்பது அநாவசியமாகும். இங்ஙனமாகவும், தமது சமயபரமாய்ப் பொதுத்தருமங்களைக்கூறி அவர் செய்துகொண்டநூல்களில் பேதைமதியாகிய இவர்க்கேனிந்த வீண்விசாரம்? தம்முடைய சமயநூல்களாயிருப்பின் ஒருவாறிசையும். இங்ஙனநிற்க, "ஆத்திசூடி" என்பனவாதிகள் ஔவையினுடைய நூல்கட்குப் புதுப்பெயர்களாமெனின், நூலாசிரியராகிய ஔவையாரால் தரப்பெற்ற பழையபெயர்கள் வேறேயிருத்தல் வேண்டும்! அவைகளியாவை? அந்தநூல்கட்கு ஔவையார்கூறிய காப்புச்செய்யுள்கள் யாவை? அவற்றினந்தத்தில் ஔவையா ரருளிச்செய்த நீதிச்சொல் முற்றும் என்று வழங்கிவருமாற்றான் அவைகளை நீதிச்சொல் என்றே தனித்தனிக் கூறுவாமெனின், இரண்டையும் நீதிச்சொல் என்றுவழங்குமிடத்து அவற்றின் வேற்றுமை தோன்றாது மயங்கவேண்டிவரும். காப்புகள் கூறியதில்லையெனின், அவர்க்கு நாஸ்திகத்வம் நாட்டவேண்டிவரும். காப்புகளுண்டெனின் அவைக ளெச்சமயப்பகுதி யுடையன? எக்காலத்து வழங்கிவந்தன? எக்காலத்து அழிந்தன? எந்த ஆதரவாலறிப்பாலது? எல்லாந் தடுமாற்றமேயன்றி யுண்மை யென்பதனுந்துணையுங் காணப்பெறாமையால் துரபிமானத்தால் வீண்வழக்காடத் தொடங்கிய துஷ்டத்தனங் கண்டிக்கப்பட்டதென்க. "இயல்பலாதனசெயேல், பழிப்பனபகரேல்" என்றுவரும் நீதிவாக்கியங்களை

அந்நூன்முகத்திப்பேதைப் புலவர் கண்டாரில்லைபோலும். இது நிற்க, அந்தநூல்களி னந்தத்தில் நீதிச்சொல் முற்றும்என்று வழங்கிவருவதனால் ஆதியில் வருவனவாகிய ஆத்திசூடி யென்பனவற்றைக் கற்பனைவயத்ததென்றார். இதென்னபேதைமை? முதற்கண்வரும் "ஆத்திசூடி" என்பவற்றிற்கு மாறாய்க் கடையில்வரும் "நீதிச்சொல்முற்றும்," என்பதையேன் கற்பனையென்று கொள்ளக்கூடாது? ஔவையா ரருளிச்செய்த நீதிச்சொல்முற்றும் என்று பிறர் சொல்வதாமன்றி ஔவையார் கருத்தல்லவாகலின் ஆத்திசூடிமுற்றும், கொன்றைவேந்தன் முற்றும் என்றே வழங்கற்பாலதென்க ம-ா-ா ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வெளியிட்டநூல்களி லிவ்வுண்மையைப் பார்த்துணர்வாராக.

ஔவையாரருளிய இரண்டு நூல்களுக்கும் அகரமுதலிய பன்னிரண்டுயிர்களும், ஆய்த மொன்றும், ககரமுதலிய பதினெட்டு மெய்களும், ககர அகரமாதிவகரஐகாரமீறான உயிர் மெய்களும் முறையேவாக்கியங்களின் முதலெழுத்துக்களாய்ப் பெறப்பட்டு வழங்கிவருமென்பது சர்வசம்மதமென்க. (வு) (வூ) (வொ) (வோ) என்பவைகள்மொழிக்கு முதலில் வராமையால் (உ) (ஊ) (ஒ) (ஓ) என்னும் உயிரொலிகள் ஒத்துவரு முண்மை நோக்கி உயிர்களாக வேகூறிப் போந்தனர். (வெள) என்பது பொருளமைதிபெறாமையால் மொழிக்குமுதலிய வராததன்றியும் அவ்வொலிபொத்துவரும் உயிரொலியொன்றுங் காணப்பெறாமையால் அதனை யறவேயொழித்துவிட்டனரென்க. அன்றியும், இடையிடையே வருவனவாகிய (கௌ) (சௌ) (தௌ) முதலியஎழுத்துக்களெல்லாமும் பயனற்றனவாய்க் கழிக்கப்பட்ட வுண்மையை அந்நூல்களிற்கண்டறியாமல் மந்த மதியால் இப்பேதையைப்போலொத்த எவனோவொருவன் சேர்த்ததாகிய ஔவையாரருளிச்செய்த நீதிச்சொல்முற்றும் என்பதை யொருபெரிய ஆதாரவாய்க்கொண்டு புலம்பவந்தது புண்பட்டழிந்ததென்க.

உள்ளபடியே சைவர்கள் "நீதிச்சொல்" என்பதைப்புரட்டி "ஆத்திசூடி" என்பனவாதியாய் வழங்கிவருவார்களாயின் அந்தநூலிடையே வருவதாகிய "திருமாலுக்கடிமைசெய்" என்னும் வாக்கியத்தையின்னும் வைத்திருப்பார்களா? இந்த வாக்கியமே அவர்களுக்குப் பேதந்தராதொழியவும், நீதிச்சொல் என்பதுஎன்ன விப

நீதந்தருவதாய் நீக்கியிருப்பார்கள்? நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், நீதிசாரம் என்றற்றொடக்கத்தனவாகிய நூல்களிலே பயன்றுவருஞ் சைவர்கள் ஔவையாருடைய நூல்களுக்குமாத்திரம் "நீதிச்சொல்" என்பதைத் தள்ளிவிட்டார்களென்று அறியாமையாற் குரைத்தழுதது அவதிவாசகமா யொழிந்ததென்க. அரிச்சுவடி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வேழமுகம், உலகநீதி, வெற்றிவேற்கை, வாக்குண்டாம் முதலிய நூல்கள் அவற்றிற்குரிய காப்புச்செய்யுள்களின் முதலையே யாதரவாய்க்கொண்டு வழங்கிவருமுண்மையை யறியாமல் ஔவையார் நூலைச் சைவர்கள் புரட்டிவிட்டார்களென்று தமது பிரஷ்டத்தன்மையைக் காட்டியழுதது நிரஸ்தமாய் விட்டதென்க. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இதுநிற்க, அத்துஷ்டவாசகத்தில் புறச்சமயிகளாகிய அருகர் செய்தகணிதநூல்கட்கு யானைமுகன் காப்பைச்சேர்த்தார்களென்றார். அருகரைப் புறச்சமயிகளென்றபோது தம்மை எச்சமயியென்றுகருதியோ அறிந்திலம். புறச்சமயம் ஆறினுளொன்றே பாஞ்சராத்திரமு மாகையால் அதனை மறைக்கழிப்பது யுக்தமன்றென்க. கணிதநூல்செய்தவர்கள் அருகர்களென்று கூறினதால் அவர்கள் செய்து கொடுப்பதன்முன்னரிப்போதைச் சமயிகட்குங் கணிதநூலில்லை போலும். கணிதநூன்மாத்திரமா? இலக்கணநூலு மிவர்க்கில்லையில்லை!! எல்லாம் சைவர்களுஞ் சமணர்களுஞ்செய்து கொடுத்தனவே யன்றி வேறில்லையாகலான் "செய்நன்றியறிதல்" என்னு ஞாயம்பற்றிச் சமணர்களுக்காகப்பரிந்து சைவர்களை யெதிர்த்தனர் போலும். ஐயையோ இப்படியேன் அன்னியசமயநூலில் வந்துவிழுந்து தலையுடைத்துக்கொள்ளவேண்டும்? சிவபெருமானிடத்துத் தமிழை யுபதேசிக்கப்பெற்றவர் ஸ்ரீ அகஸ்தியபகவானையும், அவரைவிட்டுத் தமிழுக்கு அதிகாரிகளாக வேறே யாவரைக்கூறுவது? சமஸ்தமான நூல்கட்கும் அவரேயதிகாரியாகையால் கணிதநூலைச்சமணர்கள் செய்தார்களென்றழுதது தடுமாறிப்போயிற்றென்க. நெல்லிலக்கம், பொன்னிலக்கம், எண்சுவடி முதலிய நூல்கள் சைவர்கள் செய்ததேயன்றி வேறு சமயிகள் செய்தார்களென் றழுவதுந் தடுமாறியதென்க. அவ்வருகர்செய்த சூடாமணிநிகண்டில் "பிரமன்மாற்கரியோன்றனூ" என்று வருவதற்கென்செய்வார்? விநாயகர்காப்பையே விபரீதங்கொண்டவர் இதனை யெவ்வாறு கொள்வரோ அறிந்திலம். எவ்வாறுகொள்ளினு முண்மை யுண்மையேயா

மென்க. இதுநிற்க, விஷ்ணுவை இலிங்கவடிவமாய்க்குழைத்துவிட்டவர் விஷ்ணுவை வணங்காரல்லவா? அங்ஙனஞ்செய்தவர் அகஸ்தியராகவும், அவர்செய்தருளிய நெடுங்கணக்கின் முதலில் விஷ்ணுஸ்துதியை யெப்படிச்செய்திருப்பார்? சிவஸ்துதியே "ஓம்நமசிவாயஸித்தம்நம" என்று செய்திருப்பாராகவும், யாரோவொருபேதை அதனைமாற்றி விஷ்ணுஸ்துதியை வழக்கிவிட்ட வாஸ்தவம் வெளிப்பட்டதனால் நூல்களைப் புரட்டிப் பாவவழியில் திரிந்து பிரஷ்டர்களாய்க் கெடும்பாஷண்டிகள் இன்னுமென்று புத்திமான்க ளறியாமற்போகார்.

இதுநிற்க, அம்மலைபந்த வாசகத்தில் அருணகிரியாருக்குக் கன்னதானமளித்த வில்லிபுத்தூரார்செய்த பாரதத்தைச் சைவர்கள் கெடுத்தார்களென்றார். இதென்ன முழுமோசம்? கன்னதானம் பெற்றுக்கொண்டவர் வில்லிபுத்தூராரேயன்றி அருணகிரியாரல்லவென்க. எங்ஙனமெனின், வில்லிபுத்தூரரென்பவர் தேசங்கடோறுஞ் சென்று வித்வான்களைவென்று அவர்களைக் கர்நபங்கஞ்செய்து கொண்டு வருகையில் ஸ்ரீ அருணாசலத்தையடைந்து அங்குள்ள வித்துவான்களையும் வாதுக்கழைத்தகாலையில் இப்பாதகன் நம்முடைய காதுகளையறுந்து விடுவானேயென்று பயந்து சுவாமி சந்நிதியையணைந்து கோபுரத்தின்மே லெழுந்தருளியிருந்த அருணகிரியாரை வணங்கித் தங்கள் முறைகளைச்சொல்லிக்கொண்ட காலையில் அவர்திருவுள்ளமிரங்கிப் பூமியில்வந்து அவனை யிங்கழைத்து வாருங்களென்று திருவுள்ளமிசைதலும் அவ்வாறே வந்தவராகிய வில்லிபுத்தூரரைநோக்கி நீர் நமதுகல்வித்திறம்வெளிப்பட ஓரந்தாதிசொல்லும், அதனையாம் உமது கருத்து வேறுபடாது பொருள்விரிப்போம், பின்னரியாமொரு அந்தாதிசொல்லுகின்றோம், நீர் எமது கருத்துக்கு மாறுபடாதுபொருள் கூறுவீராகவென்று திருவாய்மலர்ந்தருளுதலும், வில்லிபுத்தூரர் "அழகரந்தாதி" நூறுபாடலை அப்போதே சொல்லுதலும், எம்முடைய சுவாமிகள் அதிலொரு வருத்தமு மின்றி யுடனுடனே பொருள்கூறிமுடித்து "கந்தரந்தாதி" என்னுநூலைத் தாம் அருளிச்செய்தலும் அதிகவருத்தத்தோடு பொருள்சொல்லிக்கொண்டே வந்து.

"திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்ததி தித்தித்த தேதுத்து தித்தித்ததா

திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே.”

என்னும் (௬௪) வது பாடல் தமக்கு அறவே விளங்காமையால் சிறகொடிந்தபட்சிபோற் றியங்கி மௌனஞ்சாதித்துப் பிறகு தெளிந்து தம்முடைய கரத்திற்றுங்கி யிருந்த இருப்புக்கொறட்டைச் சுவாமிகள் கரத்தில் நீட்டுதலும் அவர் தயாரசப்பெருங்குணச் செல்வராகையால் அதனைத்தீண்டாமல் வில்லிபுத்தூரரைநோக்கி ஓ நண்பரே! எமக்குப் பூதத்துவேஷ மில்லை யாகையால் உம்மையாதொரு பங்கமுஞ்செய்ய வெமக்குடன்பாடிராதென்றுகூறி, உம்முடைய கர்நமானது எம்முடைய தானமாகப்பெற்றுப் பிழைத்தோடிப்போமென்று திருவாக்கருளி யநுக்ரகித்தனரென்று கல்விகேள்விகளில் வல்லவர்களாகிய புத்திமான்கள் பலரும் வழங்கிவருகின்றார்கள். எல்லாவித்துவான்களையுங் கர்நபங்கஞ்செய்துவந்தவர் இவரைமாத்திரம் விட்டுவிட்டாரென்பது எங்ஙனமிசையும்? இவரிடத்து மாத்திரம் இரக்கம்வைத்தவர் மற்றவர்பால் கொடுமைசெய்தது என்னபாவம்? புகழைவிரும்பிய தகாதகாரியத்திலிறங்கி அக்கிரமஞ் செய்துவந்தவர் எங்கள் சுவாமிகளையும் அவ்வாறு செய்வாராயின் அதிகபுகழுண்டாகுமே! அங்ஙனஞ் செய்யாததென்னை? இவ்வேதுக்கள் பலவாற்றானும் வில்லிபுத்தூரரே கர்நதானம் பெற்றுக்கொண்டவரென்று இனிது பெறப்பட்டது.

இங்ஙனமிருக்க, தானம்பெற்றுப்போனவராகிய வில்லிபுத்தூரர் இன்னொருகண்டம் நமக்கிருந்தது தப்பிப்போய்விட்டதென்று சந்தோஷத்தினாற் றம்மைமறந்தவராகி யிரண்டு நாழிகைக்குமுன் சம்பவித்த ஆபத்தையும் யோசித்துப்பாராமல் தம்மவர்களைநோக்கி இந்தச்சிவாலயம் நம்முடைய கண்ணிற்படாவண்ணந் திரைபோடுங்களென்று விதித்து அவ்வாறேபோகையில் அங்குள்ள சிவனடியார்கள் ஓடோடியுஞ்சென்று அருணகிரியார்க் கிவ்வபராதத்தைக்கூறுதலும் அவர் பயந்தவராய் நடுங்கி.

“புரத்தை நரசிங்கத்தைப் போர்வேளைக் கூற்றை
*யெரித்தவற்குத் தாத னெதிரோ—நிரைத்தபுகழ்த்
தேன்கட்டுஞ் சோணகிரித் தேசிகனைப் போற்றுமவ
லேன்கெட்டுப் போறு னிவன்.’’

என்னுந் திருவெண்பாவை ஆங்கருளிச்செய்தலும், சர்வாடம்பரத்

* எரித்தவன்என்பது அழித்தவன்என்று பொருளாம்.

தோடும் அகங்கரித்துச் செல்வாராகிய வில்லிபுத்தூரார் இரண்டு கண்களுங்கெட்டுக் குருட்டாழ்வாராகி ஐயோ நமக்கிந்த அவதி சம்பவித்ததே! சிவாபராதத்தின் கொடுமையாக்குமிதுவென்று உள்ளம் நடுங்கி யினி யென்னசெய்வதென்று தேறி, மீண்டும் அருணகிரிநாதரை யணைந்து அடியற்றபனைபோல் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிக்கொண்டு உய்யுநெறி கேட்கவும், அவர் திருவுள்ளமிரங்கி விபூதியளித்துக் கண்ணை யநுக்கிரகித்து ஏதாவது சிவசம்பந்தமான நூலொன்றுசெய்து உம்முடைய அபராதத்தை நீக்கிக்கொள்ளுமென்று திருவுளம்பற்றுதலும், விடை பெற்றுக்கொண்டுபோய்த் தம்முடைய பதியை யணைந்து சிவசம்பந்தமாக நூல்செய்தால் நம்மவர்கள் பழிப்பார்களே! என்னசெய்யலாமென்று மயங்கி ஸ்ரீ மஹாபாரதம் சிவோத்கர்ஷம் விசேஷமுடையதும், ஸ்ரீகிருஷ்ணர் சம்பந்தமுடையதுமாக விளங்கலான் அதனைத் தமிழில் மொழிபெயர்த்து விடுவோமாயின் உபயபிரயோஜனமுமாநுகூல்யமாமென்று நிச்சயித்து அவ்வாறே செய்துமுடித்த வுண்மையை யறியாமல் வில்லிபுத்தூரார்செய்த பாரதத்தைச் சைவர்கள் கெடுத்தார்களென்று விபரீதங் கூறியமூததா விருத்தமாயிற்றென்க. வில்லிபுத்தூரார் செய்த பாரதத்திலுள்ள சிவோத்கர்ஷங்களெல்லாம் நல்லாப்பிள்ளை யென்பவர் சேர்த்தாரென்று அழுதார். நல்லாப்பிள்ளையென்பவர் வேறே தனித்துப்பாரதஞ்செய்திருக்கவும், அதனையறியாது இந்த நூலில் அவர் சம்பந்தங்கூறுவது பெரும்பாவமென்க.

ஸ்ரீமஹாபாரதம் சிவோத்கர்ஷப் பிரதிபாதகமுடைய தென்னும் வாஸ்தவம் தீக்ஷிதஸ்வாமிக ளருளிச்செய்த "பாரததாற்பரிய சாரசங்கிரகம்" என்னுங் கிரந்தத்தா லினிது பெறப்படும். இதனைப் பாஷாந்தரங்களில் யாவர் மொழிபெயர்த்திடினும் முதனூலுக்கு விரோதங் கூடாதல்லவா? விரோதிக்குமாயின் அது கற்பனையாகுமேயன்றி வேறில்லையே! ஆந்திரம், கன்னட முதலாகிய பாஷைகளில் முதனூலுக்கு விரோதமின்றிச் சைவவிஷயங்களை யிடம்வந்துழியெல்லாமினிது கூறியிருக்கவும், திராவிடமாகிய வில்லிபுத்தூரார் பாரதமாத்திரம் அங்ஙனங் கூறியதில்லையென்பது எங்ஙனங்கூடும்? ஸ்ரீமஹாபாரதம் பொதுநூலேயன்றிச் சிறப்புநூலன்றுமாகலின் அது சிவவிஷயங்களைக் கூறுதென்பது விசார சூனியமென்க. மேல் நியாங்களால் வில்லிபுத்தூரார் பாரதம் சைவவிஷயங்களை யிடம்வந்துழிக் கூறிவருமென்றும், அப்படிக் கூறுதாகப் பிதற்றியது தூர

ஹங்காரத்தெழுந்த மூடாபிமானமென்றும் மேதாவியர் நிச்சயிப்ப ரென்க. இவ்வுண்மையை ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வெளியிட்ட பாரதத்தாற் கண்டுணர்க.

இதனையறியாத புலவர் சிரோமணியொருத்தர் வில்லிபுத்தூரார் பாரதம் என்று பேரிட்டதேயொழிய முழுவிரோதமாய் இல்லாதனவற்றைச் சேர்த்தும், இருப்பனவற்றைக் கழித்தும், பாட்டுபாட்டாகவும், அடியடியாகவும்புரட்டித் தமது விபரீதத்தையே வெளியிடுவதுபோல் ஒருநாலை வெளியாக்கியிருக்கின்றனர். அது முதனூலுக்கு முற்றும் விரோதமாயிருத்தலால் நவீனகவியாய்ச் சிலவற்றைச் சேர்த்துப் பாரதத்தைக் கெடுத்த பரமபுருஷர் இவரேயன்றி வேறில்லையென்க.

"காலப்புரட்டர் மதப்புரட்டோடு கலகஞ்செயுந்
தாலப்புரட்டர் மயில்வாகனேசன் றலஞ்சுருதி
நாலைப்புரட்டிப் பரத்துவமென்பர் தந்நாரணனே
மாலைப்புரட்டும் வைணவப்புன்மத வாதிகளே."

என்னும் வாக்கியத்தை யீண்டுச் சிந்திக்கற்பாலதென்க. இனி அக்கவிச்சிரேஷ்டர் புரட்டிய விஷயங்களைப் பின்னர் விவகரிப்பாமாகையால் அதனை யிங்கேநிறுத்தி வில்லிபுத்தூரர் பாரதஞ்செய்ய வந்த காரணத்தை அவர் நூலாதரவுகொண்டே சற்று விசாரிப்போமாக.

"முன்னுமாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னுமாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னுமாதவன் சரிதமு மிடையிடை வழங்கு
மென்னு மாசையால் யானுமீதியம்புதற்கிசைந்தேன்"

என்னுந் திருவிருத்தத்தால் மன்னும் - மாது - அவன் என்றுகி உமாபதியையே யுணர்த்துமன்றி, மாதவன் என்று கண்ணனை யுணர்த்தாதென்க. எங்ஙனமெனின், இடையிடையே கண்ணன் சரிதம் வருவதாக் கூறுவதைக்காட்டிலும் முற்றுங் கண்ணன் சரிதமாகவே வரும். வேறு புராணங்களை யேன்சொல்லக்கூடாது? உள்ளபடியே கண்ணனிடத்தாசையாலெனின் இது விரோதமென்க. மேலிடங்களில் யாம் விவகரித்த நியாயங்களால் சிவபராதசஷாமணூர்த்தமென்று வெளிப்பட்டதனால் சிவத்தியான விசிட்டத்தைநாடியே யிது

னைக் கூறவந்ததென்க. மாது - அவன் = மாதவன் என்று வருஞ் சிவவிஷயத்தைப் பின்வருங் கவியானுங் கண்டுணர்க.

"உள்ளடி விரற்றலைகள் புறவடி புரட்டினுட
னுயர்கணைக் கான்முழந்தா
டள்ளரிய வூருவுயர் தாள்வரைக ளொத்தகடி
தடமுதர மார்புதிணிதோ
ளெள்ளிவரு செங்கையொடு முன்கைமிடர் நெற்றியொடு
சூடமென வெண்ணுபடையால்
வள்ளலெனை யாளுடைய மாதவனு மாதவனு
மல்லமர் தொடங்கியுறவே"

என்னுந் திருவிருத்தத்தில் என்னை ஆளுடைய மாது அவன் என்று தெளிவுபெறக் கூறியிருத்தலால் அதனைக் கண்ணன் மேலேற்றிக் கூறுவது விருத்தமென்க. ஐயோபாவம்! இந்த வாஸ்தவாபிப்பிராயம் இப்பேதைகளிதுகாறு மறியாதவர்போலும். அறிந்திருப்பாராயின் மாதவன் என்பதை மாயவன் என்று மாற்றியிருப்பார்கள். இனியென்னசெய்வது மிஞ்சிப்போய்விட்டகாரியம்? வேறேவிபரீதஞ் செய்யலாமென்றால் ஒந்தித்தலையெடுப்பாய் நசுக்கப்படுமாகையால் அஞ்சிக் கிடப்பாராக.

இத்துஷ்டப்பேய்கள் அந்தநூலில் சிவவிஷயங்களை எவ்வளவாகக் கழித்துவிடினும் உலவாக் கிழியாமென எம்மருங்கும் பிரகாசித்தலால் இவைபோலும் பாடல்கள் அநேகமா யெஞ்சிக்கிடக்கின்றன. "புராதனுகம வேதகீத புராணரூபமொழிந்துவெங், கிராதனுகியவடிவு கொண்ட கிரீசனேடு கிரீடியும்" என்றும், "எண்ணரிய ஞானமுடை யோகியர்கள் பேசவரு மெய்யினர்பதி யானகருணைப், புண்ணியன்" என்றும், "ஆசினுன் மறைப்படியு மெண்ணில்கோடி யாகமத்தின் படியுமெழுத் தைந்துங்கூறிப், பூசினுன் வடிவமெலாம் விபூதியாலப் பூதியினை" என்றும், "நீறுபட்டிலங்கு மெய்ந்நில வொளியா னெஞ்சினி லிருள்களை யகற்றி" என்றும், "ஆசறுகடவுளன்ன வருந்தவர் தமக்கு மெட்டாத், தேசவன்" என்றும், "அருந்தவமுன் புரிந்தோரி லிவனைப்போன் மற்றூர்புரிந்தார் சிவசிவவென் றரியவாறே" என்றும் வருவனவாகிய சிவோத்கர்ஷங்களை யிப்பேதைகள் வெளியிட்டநூலிலேதானே காணக்கூடுமே! இதுகளை யாவர் சேர்த்தனர்? வில்லிபுத்தூரார் கூறியதேயன்றி வேறில்லையாகலின் இதுபோலின்னு மவர்கூறிய சிவவிஷயங்களில் அடிபடியாய்ப் புரண்டொழிந்ததும், முதலே யெடுபட்டுப்போனதுமானவற்றை மீண்டெடுத்துக் காட்டுவாமென்க.

"நீடாழியுலகத்து" என்னும் விநாயகவணக்கச் செய்யுண் முதலிய சிலவற்றையெடுத்துவிட்டுச் சாம்பிரதாயவிரோதமான வேறு செய்யுட்களை முதலிலேதானே சேர்த்திருக்கின்றனர். அன்றியும் பாயிரச்செய்யுட்களை யறவேமாற்றிவிட்டுக் குருகுலச்சருக்கத்துள் வரும முதலாறுபாடல்களைத் தமது நவீனகவிகளுடன் சேர்த்துப் பாயிரமாக்கிக்கொண்டனர்.

"பாவருந்தமிழாற் பேர்பெறுபனுவற் பாவலர்பாதிரா ளிரவின்
மூவருநெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத்தொழுதநன்னாடு
தேவருமறையு மின்னமுங்காணச் செஞ்சடைக்கடவுளைப்பாடி
யாவருமதித்தோர் மூவரிலிருவர் பிறந்தநா டிந்தநன்னாடு"

என்னும் பாடல் பாயிரத்ததாகவும், இது அவர்க்கென்னதோஷஞ் செய்ததாகவோ முதலேபோக்கிவிட்டனர்.

"ஆக்குமா றயனா முதலாகிய வுலகங்
காக்குமாறு செங்கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்குமாறர னுமையவீந்த நாண்மீளப்
பூக்குமாமுத லெவனவன் பொன்னடி போற்றி"

என்றுவருங் குருகுலசருக்க முதற்செய்யுளில் "மீளப்பூக்கு மாமுதலெவனவன்" என்பதை "உந்திபூக்கு மாமுதலெவனவன்" என்று மாற்றியிருக்கின்றனர். அந்தப்பாடலில் முறையே பிரம விஷ்ணு ருத்ரர்களைக்கூறி அவர்களில் அதீதப்பட்ட நான்காவது மூர்த்தியைத் துதித்திருக்கவுஞ் சற்றேனும் பயமின்றிக்கூறியது கூறலென்னுங் குற்றத்திற்கிடனாய் மீண்டுங் கண்ணனையே கூறியதாக அப்பாவந் தது பாழாய்விட்டதென்க. இதனை விரிக்கிற்பெருகும். அன்றியும், சபாபருவம இராஜசூயச்சருக்கத்தில் ககசு-வது பாடலை நவீனமாகச் சேர்த்தனர். அது இடையர்களை வியந்ததாகக் காணப்படுகின்றது. இதனால் அப்புலவர் சிரோமணியாரை இடையரென்று கொள்ளவேண்டிவரும். ஆயினும் அவரை யாமிடையரென்றுகொள்ளேம் அவரிடையராயின் இப்படிப்பட்ட விபரீதங்களைச் செய்வாரா? இடையராகவே பொதுத்தரும் கூறுதல்வேண்டும். அஃதின்மையின் அவரை இடையரென்பதியாண்டு மிசையாதென்க.

"கொச்சையிடையர் மகளிருக்குங் கூத்துக்குனித்து நவநீதப்
பிசைநுகரு மிவனெமக்கு முன்னே பூசைபெறுவானும்

சைச்சைமறையின் முறையென்னுந் தருமன் புரிந்தமகமென்னும்
செச்சைவடிவேன் முடியரசர் செங்கோலென்னுந் திருவென்னும்."

என்று மிக்கவியாற் கண்டுணர்க. இனி ௸ சருக்கம் ௧௪௨, ௧௪௩, ௧௪௪ - வது பாடல்களையுந் திருத்தியிருக்கின்றனர்.

"ஐவகைவடிவா யெங்குமாய்நின்ற
வச்சுத னமலனனந்தன்
செய்யொளிதிகழும் பங்கயக்கண்ணன்
திருமகள்கொழுநனைக் காணத்
தூய்யசெய்தவத்துத் துருவாசமுனிவன்
சேறலுஞ் சுடர்கொள்வைகுந்த
மெய்யுறுகோயிற் றுவாரபாலகராய்
வேதபண்டிதன் றனைவிலக்க."

"விலங்கிய விருவர்தம்மையுமந்த
வெஞ்சின் முனிவரன் வெகுண்டு
துலங்கியகோயிற் றுவாரம்விட்டவனிர்
தோன்றுமின் போயெனச்சபித்தா
னலங்கலந்துளவ மௌலியானதுகேட்
டந்தணன் றனையெதிர்கொண்டு
கலங்கிய துவாரபாலர் நின்சாபங்
கடப்பதெக்காலமோ வென்றான்."

"என்றலுமுனிவன் பரிந்திவரெழுகா
லின்புறு மன்பராய்வருத
லன்றிமும் மடங்குபகைவராய் வருத
லல்லதிங்குன்பத மணுகார்
மன்றலந் துளபமாலையா யென்ன
மலர்மகண்மகிழ்நனு மவரைக்
கன்றியமறையோன் சாபநீர்கடக்குங்
கருத்துமற்றியாது கொலென்றான்."

இவற்றுள் முதற்பாடலில் "பங்கயக்கண்ணன் றிருமகள் கொழுந னைக்காணத், தூய்யசெய்தவத்துத் துருவாசமுனிவன் சேறலும்" என்பதை மாற்றி "பங்கய சரணஞ்சிந்தனை சிந்தையணுகித், தூய்யமாதவத்துத் துருவா சமுனி தொழவருகாலை" என்றும், மூன்றாவதுபாடலில் "என்றலுமுனி வன் பரிந்து" என்பதைமாற்றி "என்றலுமுனியுந் தொழுது" என்றுந் தமது கருத்துக்கிசைந்தவாறெல்லாம் எழுதியிருக்கின்றனர். இப் படி முழுமோசஞ்செய்வா ரிவரையன்றி வேறெயாம் கண்டிலம்

துர்வாசமுனிவர் சிவாம்சபூதராகையால் விஷ்ணுவைத் தொழுவந் தாரென்பது விருத்தமென்க. அவரைக் காணவந்தாரென்பதே அமையும். தொழுவந்தவரிடுஞ் சாபம் துவாரபாலரைப் பற்றாதாகலி னென்க. காணவந்தவரெனவே, சமதைவிளங்கி விஷ்ணுமூர்த்திக் கும் அவரிடுஞ்சாபம் பலிக்குமென்பது தோன்றுதலால் துவாரபால ரைப் பற்றியதென்பது நிர்ப்பாதகமாய்ப்பெறப்படும். பக்தர்களைப் பக்தர்கள் சபியாரல்லவா? துவாரபாலர்களும் முனிபுங்கவரும் விஷ் ணுபக்தர்களாயின் ஒருவரையொருவர் விலக்கினரென்பதும், சபி த்தாரென்பதும் அவஸ்தையாய் முடியுமென்க. சாபமெல்லாம் ஒரு வரிலொருவர் வேறுபட்டவர்க்கேயாகலின் துவாரபாலர்கள் விஷ்ணு பக்தர்களும், துர்வாசமுனிவர் சிவபக்தருமாய்க்கொண்டு சிவபக் தர்கள் விஷ்ணுபக்தர்களை மதியாராகலின் துவாரபாலரை நோக் காது முனிவர்உள்ளேசேறலும், அசூயையால் முனிவரைத் துவார பாலர்கள் விலக்கினரென்றும், முனிவர்கோபித்துச் சபித்தனரென் றுங் கொள்ளவேண்டிவரும். ஆகவே, முனிபுங்கவருடைய சாபவலி யிற் றடுமாறிப் பிறந்துழலு மவதிக்குள்ளாகித் துவாரபாலர்கள் பட்டொழிந்தாரென்பது பெறப்பட்டது. இதுபோலவே சிவபக்தர் களால் விஷ்ணுபக்தர்கள் சர்வபங்கமடைந்த விருத்தாந்தங்களை மேலிடங்களில் ஏராளமாயுரைத்திருக்கின்றோமாகையால் மேதாவி யர்கண்டறியாமற் போகார். இந்தநியாயங்களால் "முனியுந்தொழுது" என்று மூன்றாவதுபாடலில் மீண்டுங்கூறியது மூடத்தன்மையாயிற் றென்க. இதுநிற்க, இடையேநின்ற பாடலில் "அலங்கலந்துளவமௌ லியானதுகேட்டந்தணன்றனை யெதிர்கொண்டு" என்று வருவதனுனுந் தொழுவந்தாரென் றழவந்தது தூரமாய்விட்டதென்க. சமானமான வர்களையே யெதிர்கொள்வதன்றிக் கீழிட்டவர்க்கு அமையாதாக லின் முனிவர் தொழுவந்தாரென்ப தீண்டுந் தோல்வியடைந்ததெ ன்க. "எதிர்கொண்டு" என்னும் விசேஷத்தால் துவாரபாலரைச் சபி த்தமுனிவர் நம்மையும் எங்கேசபித்து விடுகின்றாரோ என்று பய ந்துவந்ததாய் நிச்சயமேயன்றி வேறில்லையென்க. ஏனெனின் முன் னொருகால் அம்முனிவரா லுதையுண்ட ஞாபகமுடையராகலினெ ன்க. முனிவரைக் கீழிட்டவராகக் கொள்வோமாயின் "எதிர்கொ ண்டு" என்பதைமாற்றி "வரவழைத்து" என்று கூறுதல்வேண்டும் அப் புலவர் சிரோமணியார்க் கிதுதோன்றாமல் விடுத்தமை தெய்வீகம் விளங்கவேண்டி யிருத்தலினென்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இனி, ஆரணியபருவம், தவநிலைச்சருக்கம் ௫௭-வது பாடலில் "புள்ளுடைக்கொடியோ ரிருவருங்காணாப் புண்ணியன் பொருப்பிடைத் தவஞ்செய், வள்ளல்" என்பதை மாற்றி "புள்ளுடைக்கொடியோன் றருமுமை பங்கன் புண்ணியப் பொருப்பிடை" என்று எழுதி யிருக்கின்றனர். இப்படியும் பேதைகளுண்டா? தொன்றுதொட்டு வழங்கிவரும் பூர்வப் பிரதிகளுக்கு மாறாக இவரெழுதிவிடுத்ததினாலேயே அது போய் விடுமா? அத்துடன்போகாமல் இவருடைய விபரீதமும் வெளிப் படநேர்ந்ததே! பிரமவிஷ்ணுக்களுக்குங் காணுதற்கரிய பெரியவனி ருக்கையை அருச்சுனனடைந்தானென்னும் அருமையை நோக்காது தமது கவித்தன்மையைக் காட்டவந்தாரே! என்ன பிரயோசனங்கண்டார்? இதுமட்டோ, ஷை சருக்கம் ௭௮-வது பாடலையும் அறவே போக்கிவிட்டனர். தோஷங்களைப் பரிகரிக்கவேண்டியது ஸ்வதர்மமாகலாற் றுனதனை யேற்றுக்கொண்டனர்போலும், ஐயோ பாவம்! இவர்க்கேனிந்த வீண்கொடுமை? சமணபௌத்தாதிகளும் இதனை நோக்கின் வருந்துவார்களே!

"போகமாய்விரிந்தும் போகியாய்ப்பரந்தும்
புலன்களின் வழிமனஞ் செலுத்தா
யோகியாயிருந்தும் யோகிகண்முதலா
முரைப்பரும் பலபொருளாயு
மேகமாய்நின்ற தத்துவமறைக்கு
மெட்டெற்கரியதன் வடிவிற்
பாகமாய்விளங்கும் பைந்தொடியுடனே
பரிவுடன் சின்மொழி பகர்ந்தான்"

என்னும் பாடலை அறவொகவலர் மேதாவியர் சிந்தித்துப் பார்ப்பாராக. இப்படியே, ௮௯-வது பாடலையும் போக்கிவிட்டனர். இவ்விபரீதமே யிவர்க்கு நித்தியாநுஷ்டானம்போலும். பாவம்! பாவம்!!

"ஒரேனந்தனைத்தேட வொளித்தருளுமிருபாதத்
தொருவனைத்தப்
போரேனந்தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்
புனங்களெல்லாஞ்
சேரேனல்விளைகிரிக்குத் தேவதையாய்குழலியையுஞ்
செய்கையேந்திப்
பாரேனையுலகனைத்தும் பணிவுடனேப்புகழ்ந்திடத்தன்
பதிபின்வந்தாள்"

என்னும் பாடலாற்கண்டுணர்க. அதிலுள்ள நயத்தைநோக்கி ஞல் இவ்விபரீதத்துக் கிடமுண்டாகாதே! ஐயையோ! இதுகலி மான்மியமென்க.

இன்னும் ஷெ சருக்கம், கoஎ - கoஅ - ககச - ககஎ - ககஅ - வது பாடல்களையும் போக்கிவிட்டனர்.

"விண்ணிலுறைவானவரில் யாரடிபடாதவர்
விரிஞ்சனரியே முதலினோர்
மண்ணிலுறைமானவரில் யாரடிபடாதவர்
மனுக்கள் முதலோர்களதலக்
கண்ணிலுறைநாகர்களில் யாரடிபடாதவர்கள்
கட்செவிமகிபன் முதலோர்
எண்ணில்பல யோனியிலும் யாவடிபடாதன
விருந்துழியிருந் துழியரோ."

"வேதமடியுண்டன விரிந்தபலவாகம
விதங்களடியுண்டன வோரைம்
பூதமடியுண்டன விநாழிகைமுதற்புகல்செய்
பொழுதொசெலிப் பில்பொருளின்
பேதமடியுண்டன பிறப்பிலிபிறப்பிலி
பிறங்கலரசன் றன்மகனார்
காதலனவன் சமரவேடவடிவங்கொடு
நான்கையடி யுண்டபொழுதே"

"கைவிலுடனேயெயினர் கோடிபலர்சூழ்வரக்
கன்னிமயில் பின்னர்வரவே
தெய்வமறைஞானிக டொடர்ந்துவர வந்துபொரு
செய்யசிவவேடன் முடிமேற்
சைவமுறையேயிறைவர் தண்மலரினோடுருகு
சாத்தியொளிர்நாண் மலவெலா
மெய்வடிவுகொண் டனைய கரியதயவேடனினை
விழிமலர் பரப்பிமகிழா."

"விழுந்தருவினையினின் மெலிந்துநாயினு
மழுந்தியபிறவியி னயருவேன்முனஞ்
செழுஞ்சுடர் மணிப்பணித்திங் கண்மௌலியா
யெழுந்தருளிய விதென்ன மாயமோ."

"ஆதியேயண்டமு மனைத்துமாயொளிர்
சோதியேகொன்றையந் தொங்கன்மௌலியாய்

வாதியேமரகத வல்லியாளொரு
பாதியேபவளமாம் பரமரூபியே."

என்னு மிவைகள் சிவோத்கர்ஷங்களா யிருத்தலால் அசூயை கொண்டனர் போலும். என்னை இவர் அசூயையடைதலினாலேயே வாஸ்தவம்போய்விடுமா? அருச்சுனனுடைய வில்லடியைப் பெருமான்பெற்றகாலத்தில் பிரம்ஹாதிஸ்தம்ப பரியந்தமான எல்லாவுயிர்களும் அடியுண்டனவென்பது மூலப்பிரமாணங்களிற் பார்க்கக்கூடுமே! அதற்கென்னசெய்வார்? பல்லைக்காட்டிப் பசபசவென்று விழிப்பார்போலும். சிவபெருமானடியுண்டது "ஸர்வவியாபீசபகவாந்தஸ்மாத்ஸங்வகதச்சிவ:" என்கிற சுருதிப்படி உயிர்கடோறுந் தாம் விரவி நிற்குமுண்மையை வெளிப்படுத்தவேயன்றி வேறில்லையாகவும், சிறுபிள்ளை பயமறியாததன்மைபோல் வரம்புகடந்து விவகரிக்கவந்தது வாய்கொழுப்புச் சீலையால்வடிந்த கதையாய் முடிந்ததென்க.

## திருவிளையாடற்புராணம்.

"பாண்டியன் முதுகிற்பட்டது செழியன்
பன்னியருடம்பினிற் பட்ட
தாண்டகையமைச்சர் மேனிமேற்பட்ட
தாசிளங்குமரர்மேற் பட்ட
தீண்டியகழற்கால் வீரர்மேற்பட்ட
திவுளிமேற்பட்டது பருமம்
பூண்டவெங்கரிமேற் பட்டதெவ்வுயிர்க்கும்
போதன்மேற்பட்டவத் தழும்பு."

"பரிதியுமதியும் பாம்புமைங் கோளும்
பன்னிறம்படைத்த நாண்மீனு
மிருநிலம் புனல்கா லெரிகடுங்கனல்வா
னென்னுமைம் பூதமுங்காருஞ்
சுருதியுமாறு சமயவானவருஞ்
சுரர்களுமுனிவருந் தொண்டின்
மருவியமுனிவர் கணங்களும்பட்ட
மதுரைநாயகனடித் தழும்பு."

"வானவர்மனிதர் நாகர்புள்விலங்கு
மாசுணஞ்சித லெறும்பாதி

யானபல்சரமு மலைமரங்கொடிபுல்
லாதியா மசரமும்பட்ட
வூனுடைகருவும்பட்டன தழும்போ
டுதித்தனவுயிரிலோவியமுந்
தானடிபட்ட சராசரசடங்க
டமக்குயிராயினோன் றழும்பு."

"தண்ணெனமாயோன் விழித்தனன் கமலச
சோதியும்யாதென வியந்தான்
விண்ணவர்பெருமான் வெருவினன்வானோர்
வேறுளார்மெய்ப்பனிப் படைந்தார்
வண்ணயாழியக்கர்சித்தர் சாரணர்தம்
வடிப்படாவுடம்பினிற் பட்ட
புண்ணையாதென்று தத்தமிற்காட்டி
மயங்கினார்புகுந்தவா றறியார்."

என்னும் பிரமாணத்தால் ஸ்ரீமந் மாணிக்கவாசக் சுவாமிகள் பொருட்டுப் பாண்டியனால் பிரம்படிபட்டு எல்லாவுயிர்களிலும் தாம் கலந்துநின்ற வுண்மையைக் காட்டினாரென்பதும் சர்வப்பிரசித்தி யாமே! சிவபெருமானுக்குரிய விசேஷணத்தை யிப்பேதைப்புலவர் மாற்றிவிட்டதனாலேயே அது போய்விடுமோ? இப்படிப் பிராச்சீனப் பிரமாணங்களெல்லாம் வெகுவாய் விளங்கிக்கொண்டிருக்கவும், அவற்றைநோக்காது பேதமையா லுழவந்ததென்னை? ஆச்சரியம்! ஆச்சரியம்!! இது கலிதர்மமென்க.

இன்னுமிவ்வாறே ஷை சருக்கம் (௧௨அ) வது பாடலில் "அந்த வில்விசயனு மரன்பதம்பணிந்து" என்பதை "அவன்பதம்பணிந்து" என்றும் (௧௨௬) வது பாடலில் "ஐயனுமம்மையோடருள்புரிந்து" என்பதை "அம்பையோடருள்புரிந்து" என்றும் அவற்றால் என்னமோ தமக்குச் சிலாக்கியம்வந்துவிட்டதுபோல் மாற்றியிருக்கின்றனர். அப்படி யெழுதினதால் பொருள்வேறுபா டில்லாவிடினும் அன்புவழியை மாற்றுகின்றது. அவனென்பது இடம்வந்துழி அழகுசெய்யுமாயினும் ஈண்டுக்கூற வந்தவரழகைக்கூசாது காட்டிநின்றது. ஐயனும், அம்மையும் என்றும், அத்தனும், அன்னேயும் என்றும், பிரானும், பிராட்டியும் என்றும், பரனும், பரையும் என்றும், அழகுபெறவருமருமையை நோக்காதார் வேறென்செய்வார்? இருந்த அழகே யன்றோ அடியிற் றோன்றும்? அதனை லெமக்கொரு பாதகமுமின்றென்க. இன்னும் பலவுளவற்றை விரிவஞ்சி விடுத்தாமென்க.

இங்ஙனநிற்க, மேலிடங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டவராகிய எழும்பூரிரெட்டியுந் தனது மலபந்தவாசகத்தில் பாரதவிஷயத்தைச் சற்றே வியவகரித்தழுதார். அது, பகவத்கீதை - ஹரிவம்ச முதலிய விஷ்ணு மாஹாத்மியமுடையதாதலால் சிவசம்பந்தமதிற் சொல்லுவது பிசகென்றும், சிவகீதைமுதலியன பாரதாதிகிரந்தங்களில் வராததன்றியுஞ் சங்கராசாரியர் முதலியவர்களால் வியாக்யானஞ்செய்யாமல் விடப்பட்டதென்றும், மோக்ஷதன்மத்தில் விஷ்ணுபாரம்யம், விஷ்ணுமாஹாத்மியம், வைஷ்ணவ தர்மமுதலிய அநேகவிஷயங்கள் சொல்லப்படுதலால் பாரதம் விஷ்ணுபரமேயென்றுஞ் சாதிக்கவந்தார். இவற்றுள், பகவத்கீதாவிஷயத்தைப் பின்னர் விவகரிப்பாம். ஈண்டுப் பாரதவிவகாரத்தில் சிவகீதை வரவேண்டியதென்னே? கீதைகளின்றாதம்யங்களை விளக்கினார்போலும். அருமை! அருமை!! பாரதத்தில் வந்ததனால் பகவத்கீதை சிறந்ததென்றும், பாரதத்தில்வாராமையில் சிவகீதை தாழ்ந்ததென்றுங் கொண்ட அவரேழைமதிக்கு விசனப்படத்தக்கதாயிருக்கின்றது. பகவத்கீதை இதிஹாசத்திலுள்ளதும், சிவகீதை புராணத்திலுள்ளதுமாகிய வுண்மையையுற்று நோக்கினால் உத்கர்ஷ அபகர்ஷங்கள் வெளிப்படுமாகையால் புராணஞ் சிறந்ததோ இதிஹாசஞ் சிறந்ததோவென்னும் விசாரம் ஈண்டு அத்யாவசியமாகின்றது. விரிக்கிற்பெருகும். வேதத்தின் வழிநூல்களாகிய ஸ்காந்தம், பாத்மமுதலியவற்றுள்வரும் சிவகீதையைச் சார்புநூலாகிய பாரதத்தில் வராமைகொண்டிழிவு கூறவந்தது என்னபேதமை? பாரதத்தில் வருவனவெல்லாஞ் சிறப்புடையனவாய்க் கொள்வோமெனின், நளன் கதை-இராமன்கதை முதலியனவும் வருதலால் அவற்றையும் பகவத்கீதையோடொப்ப உபசரித்தல்வேண்டும் இராமன் கதையைப் படிக்காதவரில்லையேயெனின், நளன் கதையைத்தானியார் பாராட்டாதவர்கள்? சநிபிடித்த வொவ்வொருவரும் பாராட்டியே திரிகின்றார்கள். இரண்டும் ஒப்பு! ஒப்பு!! பாரதத்தில் வந்ததினாலேயே சிறந்ததென்றும், வராது விட்டதினாலேயே தாழ்ந்ததென்றுங் கூறவந்தது கேவலம் மூடத்தன்மையென்க. பிரமாணசித்தமா யொப்புக்கொண்டனவாகிய வேதாகமபுராண இதிஹாசங்களில் ஒன்றும் நீக்கமில்லையாகலின் புராணங்களில்வரினும், இதிஹாசத்தில் வரினும் எமக்கு விரோதமின்றென்க. பகவத்கீதையோடொத்த விசேஷ தர்மமும், நளன்கதையோடொத்த சாமானிய தர்மமும் எல்லாநூல்களினும்

வரக்காண்பது சகச தர்மமாகவும், சற்றேனும் யூகியாது பகவத்கீதையே சிறந்ததென்று பிராந்தியாற்கூறியது பாழாய் விட்டதென்க.

இங்ஙனநிற்க, இராமசுப்பிரமணிய சாஸ்திரியென்பவருந் தாம் செய்த "விஷ்ணுதத்வரஹஸ்யம்" என்னுநூலில் "இதிஹாஸபுராணாப்யாம்வேதம்ஸமுபப்ரஹ்மயேதிதி" என்கிற ஸ்மிருதியில் "அப்யரஹிதம்பூர்வம்" என்கிற நியாயத்தால் பூர்வநிர்த்திஷ்ட இதிஹாசபதத்திற்கு ஸ்ரீமஹாபாரதம் அர்த்தமானதால் வேதோபப் பிரம்ஹணங்களுக்குள் ஸ்ரீமஹாபாரதமே யுத்தமமுடையதென்றார். உத்தமமானதை முன்வைக்கவேண்டுமென்பது அதன்கருத்தாம் இதிஹாசம் புராணத்தைக்காட்டிலும் உத்தமமென்பது நோக்கியே "இதிஹாஸபுராணாப்யாம்" என்றுவந்ததென்றார். இதனை "அப்யரஹிதம் பூர்வம்"என்கிற நியாயத்தால் சாதிக்கவந்தது பிழையாம். மற்றென்னெனின்,"அஜாத்யதந்தம்"என்கிறசூத்திரத்தால்முதலில்உயிர்களும் கடையில்அகரமும் பெற்றுவரும் பதங்களேமுன்னேவைக்கவேண்டுமென்பது நோக்கியேசமர்த்திக்கப்பட்டதென்க. இதனையறியாது உத்தமமானதாலென்றுரைக்கவந்த வுன்மத்த வுரை யுல்லங்கனப்பட்டொழிந்ததென்க. இவற்றைநோக்காதுதாம்சாதிக்கவந்த"அப்யரஹிதம்பூர்வம்"என்கிறநியாய ஆதரவிலே"தஸ்யைவஸாக்ஷாத்வேதவியாஸகர்த்ருகத்வாத்"என்றுஸ்ரீமஹாபாரதம் இதிஹாசபதத்திற்கு அர்த்தமான தன்றியும், அதுவே சாக்ஷாத் வேதவியாச கர்த்துருகத்துவமுமாய் விளங்குகிறதென்றும் பிரசங்கித்தனர். அதனுள் ஏவகாரஸாக்ஷாத்பதங்கள் வியர்த்தமாய்விட்டதென்க. பாரதமொன்றேயன்றி வியாசஸ்மிருதி, வியாசசூத்திர முதலியனவும் வியாசகர்த்துருகத்வமாய் விளங்குமாதலி னென்க. அன்றியும், இதிஹாசபதத்திற்கு ஸ்ரீமஹாபாரதம் அர்த்தமானதுபோலவே ஸ்ரீமத்ராமாயண முதலியனவும் அர்த்தமானதால் வேதோபப் பிரம்ஹணங்களுக்குள் பாரதமொன்றிற்கே உத்தமத்வஞ் சாதிக்கவந்ததும் வியபிசாரதோஷத்தாலழிந்ததென்க. மேலிரண்டு ஹேதுக்களாலும் இதிஹாசமே சிறந்தது, பாரதமே உத்தமமானது என்று கூறும் வீண்வாதம் வியர்த்தமானதால் மேலும் அவர்கூறிய நியாயங்களை விசாரித்துக் கண்டிப்போமாக.

பாரதமே உத்தமமானதென்பதற்கு ஆதரவாய்ச் சங்கராசாரியர், இராமாநுஜாசாரியர் முதலியவர்கள் தாங்களியற்றிய பிரம்ஹ

மீமாம்ஸாபாஷ்யங்களில் பாரதவாக்கியங்களைப் பதேபதே யுதகரித்திருக்கின்றார்களென்றும், தீக்ஷிதரவர்கள் இராமாயண தாத்பரிய சாரசங்கிரஹம்செய்ததுபோலவே பாரததாத்பரிய சாரசங்கிரஹமுஞ் செய்தனரென்றும், அப்படியே ஆநந்ததீர்த்தரென்னு மத்வாசாரியரும் பாரத தாத்பரிய சாரசங்கிரஹம் செய்தனரென்றும், வித்யாரணியரும் பாரதாந் தர்க்கதமாகிய மஹோபாக்யானத்திற்குச் சாரசங்கிரகஞ் செய்தனரென்றும் முறையே சொல்லிமுடித்தார். அவர் பேதமையிருந்தவாறென்னே? கொடிது! கொடிது!! மேற்கூறிய பாஷ்யங்களில் பாரதமேயன்றி ஸ்மிருதிகளும் உதகரிக்கப்பட்டிருக்கின்றனவே! அவைகளை இவர்பார்த்தறியாதவர்போலும். இதுநிற்க, தீக்ஷிதரவர்கள் இராமாயணத்தைப்போலவே பாரதத்திற்கும் சாரசங்கிரஹம் செய்தனரென்றதனால் என்னசிலாக்கியம்? யாம் ஆக்ஷேபித்துரைக்கவேண்டியதை எமக்கவர் ஞாபகப்படுத்தினாரென்பதை நோக்கி அவர்க்குவந்தனமுஞ் செய்கின்றனம். இவ்விரண்டுமன்றிப் பாகவத தாத்பரிய சாரசங்கிரஹமுஞ் செய்திருக்கின்றனர். ஆனந்த தீர்த்தரோவெனின், அவருமப்படியே பாரதத்தோடு இராமாயணதாத்பரிய சராசங்கிரஹமுஞ் செய்திருக்கினர். வித்யாரண்யரோவெனின், மஹோபாக்யானமேயன்றிச் சங்கரவிஜயமாதி புராணசாரசங்கிரஹங்களுஞ் செய்திருக்கின்றாராகலான் புராண அபேக்ஷியா இதிஹாசம்சிறந்ததென்றும், அது ஸ்ரீமஹாபாரத மொன்றுமேயென்றும், வேதோபப் பிரம்ஹணங்களுக்குள் அதுவே உத்தமமானதென்றுந் துரபிமானத்தால் வியவகரிக்கவந்தது நிரஸ்தமாய் விட்டதென்க.

இங்ஙனநிற்க, இதிஹாசபுராணங்களிரண்டும் வேதோபப் பிரம்ஹணங்களுக்குள் சமப்பிரமாணமாயினும் புராணமே இதிஹாசத்தைக்காட்டிலும் உத்தமமானதென்பதை நிருபிப்போம். வேதம் முதனூலென்றும், புராணம் வழிநூலென்றும், ஸ்மிருதீதிஹாசங்கள்சார்புநூ லென்றும் நிச்சயமாகையால் மூன்றும்பிரமாணமாகிச் சார்புநூலினும் வழிநூலுக்காதிக்கமும், வழிநூலினும் முதனூலுக்காதிக்கமும், ஏற்படுத்கின்றது. ஆகவே, சார்புநூலாகிய இதிஹாசம்பிரமாண யோக்யமென்பதுமாத்திரம் ஒப்பேயன்றிப்புராண அபேக்ஷயா அதிக்கிரமித்தது என்பது நிரஸ்தமென்க. என்னை "புராணம்ஸர்வசாஸ்த்ராணி பிரதமம்பிரஹ்மணாஸ்ம்ருதம் அநந்தரந்து வக்த்ரேப்யோ வேதாந்தஸ்யவிநிர்க்கதா" என்கிற ஸ்ரீமச்சபுராண

யத்தால் புராணங்களும், தர்மசாஸ்திரங்களும் பிரம்ஹாவினுல் முன்னே செய்யப் பட்டதென்றும், பின்னர் அவருடைய முகத்தால் வேதங்கள் பஹிர்க்கதமாயிற்றென்றும் பெறப்பட்டதெனின், வேதங்களுண்டாவதன் முன்னர் புராணங்களைப் பிரம்ஹாசெய்தாரென்பது கற்பபேதமேயன்றி நிஜஸ்வரூபமன்றென்க. எங்ஙனமெனின், ஷ புராணத்தில் "வியாஸரூமஹங்க்ருத்வாநங் கிருஷ்ணுமியுகேயுகே சதுர்லக்ஷப்ரமாணேந த்வாபரேத்வாபரேததா ததாஷ்டதசதாக்ருத்வா பூலோகேஸ்மிந்பிரகாசயே அத்யாபிதேவலோகேதச் சதகோடிப்ரவிஸ்தரம்" என்கிற வாக்கியத்தால் நான்வியாசரூபியாய்ப்பிரதி துவாபர யுகத்திலும் சதுர்லட்சப் பிரமாணங்களால் புராணங்களைச் சங்கிரகித்து அஷ்டாதசவிதமாய்ப் பூமியில் பிரகாசிக்கச்செய்கின்றேன், இப்போதும் தேவலோகத்தில் சதகோடிவிஸ்தாரமாய்க் கிடக்கின்றன என்று விஷ்ணு கூறினதாகப் பெறப்பட்டதனுல் மேல் பிரம்ஹாவினிடத்துண்டாயின வென்பதற்குமாருய் அஷ்டாதச புராணங்களும் வியாசரிடத்துண்டாயின வென்று வெளிப்பட்டது. இன்னுமிப்படியே மச்சரூபங்கொண்டு பிரம்ஹாவுக்கு விஷ்ணுசொன்னுரென்றும் பலபலவிதமாய்க் கூறியிருத்தலால் வாஸ்தவஸ்வரூபத்தைக் கிரகிப்பது புண்ணியமிருந்தாலல்லது கிட்டாதென்க. "யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம் யோவைவேதாம்ச்சப்ரஹிணோதிதஸ்மை" என்கிற மந்திரத்தால் அஷ்டாதச வித்தைகளையும், புராணங்களையும் தமக்கு அக்கிரகுமாரராகிய பிரம்ஹதேவருக்குப் பரமசிவம் கொடுத்தருளினுரென்றும், "ஈசாநஸ்ஸர்வவித்யாநும்" என்கிற மந்திரத்தால் சர்வவித்தைகளும் சிவனிடத்திலே நின்று முண்டாயிற்றென்றும் ஸ்பஷ்டமாய்ப் பெறப்பட்டதனுல் புராணங்களைப் பிரம்ஹாவுண்டாக்கினரென்பதும், விஷ்ணுவுண்டாக்கினரென்பதும், வியாசருண்டாக்கின ரென்பதும், மற்றைமுனிவர்க ளுண்டாக்கினரென்பதும் ஔபசாரிகமேயன்றி வாஸ்தவமன்றென்க, அவர்களை அதிகாரிகளாகக்கூறுவது கற்பபேதத்தாலென்று நிச்சயிக்கப்பட்டது. இந்த நியாயங்களால் வேதம், புராணம், இதிஹாச முதலியவற்றை முதனூல் வழிநூல் சார்புநூலென்று கூறுவதில் சொற்பபாதகமுமின்றென்க. இங்கே விரிக்கிற்பெருகும். இதன் விஸ்தாரத்தைப் பின்னர் கூறப்படும் சிவபுராணதாமசத்வ நிராகரணப் பகுதியிற்கண்டுதெளிக.

இந்தநுட்பங்களையறியாத ஷ சாஸ்திரியவர்கள் புராணங்கள் முன்னும், வேதங்கள்பின்னும் பிரம்ஹாவினிடத்துண்டாயின

வென்பதை முன்னேபிறந்த மூதேவிக்கும் பின்னேபிறந்த சிதேவிக்கும் உவமைகூறித் திருப்தியடைந்தனர். ஆஹா என்னபுதுமை? புராணம் மூதேவியானால் இவர் என்ன ஆவார்? மூதேவிக்கு மூத்த பிள்ளையாவர்போலும். இவர் பாரதாதிக்யங் கூறிவருதலில் அதற்கொரு ஹேதுவாய்ப் புராணத்தையுங் கொண்டாரே! அம்மூதேவி புராணத்தை யேன்தொடவேண்டுமே? தொட்டாராகவின இவருடைய நாவும் மூதேவிவாசத்துக்கிருப்பிடமாகின்றது. மூதேவி எங்கிரானிடினும் இவரிடத்திருப்பதுமாத்திரம் ஸ்வதசித்தமென்க. முன்னே பிறந்ததெல்லா மூதேவியும், பின்னே பிறந்ததெல்லாஞ் சிதேவியுமென்று கொள்வாரெனின், வியாசரிடத்தில் முறையே பிரம்ஹசூத்திரமும், ஸ்ரீமஹாபாரதமும் முன்னும் பின்னுமாகத் தோன்றினமையதால் பாரத அபேக்ஷயா பிரமஹசூத்திரத்திற்கும் மூதேவித்வம் சித்திக்கின்றதே! ஐயோ கொடுமை? பிரம்ஹசூத்திரத்தை மூதேவியாக்கி இவர் எங்கே சீவித்துநிற்பார்? இது கலிதோஷமென்க. திருஷ்டாந்தங்கூறுவதில் இவரைப்போல் புத்திமானைக்கண்டெடுப்பது அருமை! அருமை!! இதுபோலவே, முன்னேபிறந்த விஷத்தையும், பின்னேபிறந்த அமிர்தத்தையும் உவமை கூறினர். விஷமோ மரணத்தைக்கொடுப்பது அமிர்தமோ மரணத்தைக்கெடுப்பது விஷத்தையுண்டவா சிவபெருமான் அமிர்தத்தையுண்டவர்கள் விஷ்ணுவாதிகள். விஷத்தையுண்டுஞ் சிவனிறந்திலை. அமிர்தத்தையுண்டு விஷ்ணுவாதிகள் வாழ்ந்ததில்லை. விஷத்தையுண்டாலுஞ் சிவன் சாகாதவரென்றும், அமிர்தத்தையுண்டாலும் விஷ்ணுவாதிகள் சாகிறவர்களென்றும் அவர்களுடைய நித்யாநித்யங்களை வெளிப்படுத்து முபகரணமாய்விளங்கும் விஷதிருஷ்டாந்தத்தை யிவராதரித்தது என்னபேதமை? விஷமும் சிவனுக்கமிர்தமாயிற்று அமிர்தமும் விஷ்ணுவாதிகட்கு விஷமாயிற்று. ஆகவே, இவர் விஷாமிர்தங்களின் றிரதம்யங்கூறியது எற்றுக்கோவறிந்திலம்

"ஸூதாமப்யாஸ்வாத்ய ப்ரதிபயஜராம்ருத்யுஹரணீம் விபத்யந்தேவிச்வே விதிசதமகாத்யாதிவிஷதா: கராளம்யத்வேளம் கபளிதவத: கால்கல்நாந கம்போஸ்தந்மூலம் தவஜநநிதாடங்கமஹிமா"

"பிறழுணிந் இறன் முற்பிறதேவர்க ளூமெனலா
நரைபெரூக்திரை யுற்றால்லாரழு தேகொலாம்

ஒருவர்தங்கிலர் நின்சிவனாண்விடம் வாழ்வன்மா
திருபெருமகுழையிட்டபொன்னோலையின் வாசியே.

என்றருளிய சங்கராசாரியர் வாக்கியத்தால் உண்மை வெளிப்பட்டதென்க.

"வானவரு மிந்திரனு மாலயனு மேசெத்துப்
போனவிடம் புன்முளைத்துப் போகாதோ—ஞானபிரான்
அத்தனருளேச னன்புடனே நஞ்சையுமே
புத்தியுடன்கொள்ளா திருந்தக் கால்."

என்றருளிய குகைநமச்சிவாயர் திருவாக்கானுங் கண்டுணர்க. முன்பிறந்ததை மூதேவியநுபவங்கொண்டுழலுமிவர் பிரம்ஹதேவரிடத்து முன்பிறந்த பிராம்ஹணர்களை யெவ்வாறு கொண்டனரோ அறிந்திலம். முன்பிறந்த பிராம்ஹணர்களை அபகர்ஷமாகவும், பின்பிறந்த சூத்திரர்களை உத்கர்ஷமாகவுங்கொண்டு வழிபடுவர் போலும். இவர்க்கு முன்னேபிறந்ததைத் தள்ளிப் பின்னேபிறந்ததைக் கொள்வது நிஜாநுபவமென்க. இதனாலேயே பிரம்ஹதேவர் முகத்திலே வந்த சிவனைவிட்டு அவர்குதத்திலே தோன்றிய விஷ்ணுவுக்குப் பிரம்ஹத்துவங் கற்பிக்கவந்தனரென்க. இனி ருக்கெஜுஸ்ஸாமங்களினும், முறையே முதல்வேதம் மூதேவியென்றும், இரண்டாவது வேதம் சிதேவியென்றுந் தாரதம்யங் கூறுவர்போலும். முன்வந்தவரைப் புறந்தள்ளிப் பின்வந்தவர்க்குப் பிரியஞ்சொல்வாரிவரே போலும். முன்னேநிற்கும் நீரைத்தள்ளிப் பின்னேநிற்குஞ் சேற்றைக்குடிப்பாரிவரேபோலும். முன்னேயுண்டாமன்னத்தை நீக்கிப் பின்னேயுண்டா மலத்தைக் கொள்வாரிவரேபோலும். முன்னே செல்லும் அரசனைவிட்டுப் பின்னேசெல்லும் அடிமையைக்காண்பாரிவரேபோலும். இப்படிப்பலவுளவாகலின் புத்திமான்கள் பகுத்துணர்வாராக. இப்படிச்சொல்வதனால் பிரமனிடத்துப் பின்வந்த வேதம் புராணத்திற் றாழ்ந்ததென்பது எமது கருத்தன்றென்க. புராணத்தினும் வேதமே முற்பட்டதென்பதை முன்னேவிசாரித்துத் தீர்மானித்தோமாகையால் இவர்கூறிய தோஷம் எங்கேவேதத்துக்குமுண்டாகப்போகின்றதோவென்னும்பயத்தாலேயே இப்படிப் பரிகரிக்க நேர்ந்ததென்க. மூத்தவனுக்கும் இளையவனுக்குமிருக்கும் அன்யோன்யசம்பந்தத்தை நோக்காமல் இருவர்க்கும் பேதங் கற்பித்து ஒன்றுகிராஹ்யமும், ஒன்று அக்கிராஹ்யமுமாகக் கொள்

வது அவிவேகமென்க. இரண்டும் கிராஹ்யமேயாகி மூத்தவன் இளையவன் என்னு முபசாரமாத்திரமே பாராட்டத்தக்கதென்க. மேல்நியாயங்களால் புராணத்தைப்போலவே இதிஹாசமும்பிரமாணமென்றும் இதிஹாசம் புராணத்திற்குச் சார்புநூலாகையால் புராண அபேக்ஷயா இதிஹாசம் தாழ்ந்ததென்றும் நிச்சயிக்கப்பட்டதனால் புராணாந்தர்க்கதமாகிய சிவகீதைக்கு இதிஹாசாந்தர்க்கதமாகிய பகவத்கீதை அதிக்கிரமித்தது என்று கூறுந் துர்வாதம் நிரசிக்கப்பட்டதென்க.

இனி சங்கராசாரியர் சிவகீதைக்கு வியாக்யானஞ் செய்யாததென்னையெனின், அவர்செய்யாததினாலேயே அதற்கொரு குறைவுண்டாமென்பது என்னபேதமை? பகவத்கீதைக்கு மாத்திரஞ் செய்தனரேயெனின், அது ஏகான்மவாதத்தைச்சாதித்துச் செய்ததேயன்றி இவர்கள் பாஞ்சராத்திரத்தைக் கூறினதில்லையாகலின் அந்தவியாக்யானத்தை ஆதரவாய்க்கொண்டெழுவந்தது அவதியாய் முடிந்ததென்க. ஆண்டுகூறியது நூலதிசயமேயன்றிச் சித்தாந்த அதிசயமன்றேயெனின், சித்தாந்த விசேஷத்தால் நூலதிசயமேயன்றி நூல்விசேஷத்தால் சித்தாந்த அதிசயமில்லையாகலான் பரஸ்பரம் பாஞ்சராத்திரவிகற்பமாகிய சங்கராசாரியர் வியாக்யானத்தால் பகவத்கீதையை நிறுத்தவந்தது நிரஸ்தமென்க. சங்கராசாரியர் விசிஷ்டாத்வைதபரமாய்ப் பகவத்கீதைக்கு வியாக்கியானஞ் செய்திருந்தாலொழிய அவரையெடுத்துக்கூறுவது அவலமென்க.

இதுநிற்க, அவர் சிவகீதைக்கு வியாக்யானஞ் செய்யாததை நோக்குங்கால் "இவ்வேற்றுமைபற்றி யன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன் யானேயுலகெல்லா மாயினேனென்றதூஉம், முதல்வனது விசுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம், அதனை யுறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன்கூறிய கருத்துநோக்கிச் சாங்காறுஞ் சிவபூசைசெய்ததூஉம், கண்ணன்மேலிட்டபோதுகள் முதல்வன் திருமுடிமேற் கண்டதூஉமென்க. கண்ணனுபமன்னிய முனியாற் சிவதீக்கையுற்றுத் தன்னையுந் தலைவனையு முணர்ந்தோனாகலிற் சோகம்பாவனையைத்தலைப்பட்டோனாதலறிக" என்று சிவஞானசுவாமிகள் சிவஞானபோதச் சிற்றுரையிற் கூறியிருக்கின்றாராகலான் சிவன்சொன்னகீதையில் யானேயுலகெல்லா மாயினேனென்றதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉ முதலியவற்றைச் சோகம்பாவனையாலென்று கூறின

கையாமை கருதியே சிவகீதையைவிட்டுத் தம்மையொத்தவராகிய கண்ணனுரைத்த கீதையைக் கடைப்பிடித்தாரென்க. கண்ணன் கீதையில் ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்று அருச்சுனற்குக் கூறினாராகவும், அவன்சாங்காறுஞ் சிவபூசைசெய்து வந்ததென்னை? பாசுபதாஸ்திரம்பெறவேண்டிச் செல்லுகையில் கண்ணன் உடனிருந்தும் அவன் கண்ணனைப்பூசிக்காமல் கண்ணனிடத்துச் சிவபூசைசெய்ததென்னை? இவ்வேதுக்கள் பலவாற்றானுங் கண்ணன் கூறியதெல்லாஞ் சோகம்பாவனையாலேயே யன்றித் தன்னையே பரமாய்க் கருதியல்லவென்க.

"கண்டவிவையல்லேனு னென்றகன்று காணுக்
கழிபராமுநானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்று னின்றகலப்பாலே
சோகமெனப் பாவிக்கத்தோன்றுவன் வேறின்றி."

"விண்டகலு மலங்களெல்லாம் கருடதியானத்தின்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறைகளு மதுநானேனே னென்று
பாவிக்கச்சொல்லுவ திப்பாவகத்தைக்காணே."

என்றுவருஞ் சந்தான குரவர்வாக்கியமுஞ் சான்றுமென்க. இந்த நியாயங்களால் சங்கராசாரியர் சிவகீதைக்கு வியாக்கியானஞ் செய்யாதுவிட்ட காரணம்வெளிப்பட்டதனால் அவர்சிவகீதா வியாக்கியானஞ்செய்யவில்லையேயென்று மந்தமதியாற் குரைத்த மட்டிவாசகம் நிரஸ்தமென்க. சிவகீதையில் ஏகான்மவாதத்தைச் சாதித்து வியாக்யானஞ்செய்வதனால் தமது சித்தாந்தங்கெடுமேயன்றிச் சிறப்படையாதென்றே அதனைச்செய்யாது விடுத்தனரென்க. அநாதிமலமுத்தராய் விளங்கும் சிவபெருமான் தாமேபரமென்றும், தாமே எல்லாமென்றும்தம்மைக்காட்டிலும்வேறுபதார்த்தமில்லையென்றுங் கூறுவது ஸ்வதர்மம். சங்கராசாரியர் முதலியவர்கள் பாசபந்திகளாகலின் அங்ஙனந் தாமுங்கூறுவது பரதர்மமாமேயன்றி ஸ்வதர்மமாகாதென்க. அதுபற்றியே சிவகீதாவியாக்யானம் அவர்க்குப்பாதகமாயிற்றென்க. இன்னும்விரிக்கிற்பெருகும்.

இங்ஙனநிற்க, ஷை ரெட்டியாரவர்கள் பகவத்கீதைமுதலிய விஷ்ணு பாரம்யங்களையும், வைஷ்ணவ தர்மங்களையுங் கூறும்பாரதத்தில் நேர்விரோதமாய்ச் சிவபாரம்யங்களையும், சைவதர்மங்களையும் எப்படிக்கூறுமென்று மறுத்தார். நல்லதுகிது. அருச்சுனற்கும்

பாசுபதமளித்தல், கண்ணனுக்குப் பிள்ளைப்பேறுதவுதல், கிருஷ்ண ருக்குச் சிவதீட்சை கொடுத்தல் முதலிய சிவதருமங்களைக்கூறும் பாரதத்தில் விஷ்ணுதர்மங்கள் எப்படிவரக்கூடுமென்று அதனையெ திரிட்டுநோக்கின் மேலாட்சேபம் நசிக்கு மாகையால் அவருடைய மந்தமதிக்கு விசனப்படத்தக்கதா யிருக்கின்றது.

இனி வாஸ்தவவிசாரத்தில் ஸ்ரீமஹாபாரதம் பஞ்சபாண்டவர்கள் சரித்திரமேயன்றி வேறில்லை. ஸ்ரீகிருஷ்ணர் அவர்களுக்குத் தேகபந்துவும், ஆப்தருமாயிருந்தபடியால் அவர்சரிதமு மிடையிடையே பாரதத்தில் சொல்லப்பட்டது. ஸ்ரீகிருஷ்ணர் சரிதமாத்திரமேயன்றிப் பீஷ்மர், துரோணர், அசுவத்தாமர்முதலிய ஆசிரியர்கள் சரித்திரமுஞ் சொல்லப்பட்டது. ஆக இப்படிப் பலசரித்திரங்களைக் கூறிவரும் பாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணர்சரித்திரமே பாரம்யமாகக் கூறிவருமென்பது விருத்தமென்க. பாண்டவர்கள், கிருஷ்ணர்முதலியவர்கள் உபாசகர்களேயாய்த் தங்கள் அபசதர்மங்கள் நிறைவேறும் பொருட்டும், ஆன்மலாபத்தின்பொருட்டும் ஒரு கடவுளை வழிபடுவோராகலின் அவனைச் சாதகசிவமூர்த்தியென்று இனிது விளக்கும். இந்தநுட்பங்களையறியாமல் விஷ்ணு பாரம்யங்களைக்கூறும் பாரதத்தில் சிவபாரம்யம் எப்படி வரக்கூடுமென்று விகற்பித்துரைத்த வீண்வாதங் கண்டிக்கப்பட்டதென்க. விஷ்ணுதர்மம், விஷ்ணுபாரம்ய முதலியவற்றை அந்தந்த ஸ்துதிப்பிரகரணங்களில் அவரை யுபாசியராகக்கொண்ட அதிகாரிகள் பொருட்டுக் கூறியதென்க. அவ்வுபாசியரை யுபாசகராக்கி அவர்க் குபாசியரைக் கூறுங்கால் எஞ்சனுவிருத்தியால் பாரதமடங்கலும் சிவபெருமானையே பரமாய்ச்சாதித்துக் கூறுமென்க. இவற்றின் விவரணத்தைப் பின்னர் கூறுவாமென்க.

இன்னும்ஷெட்டியாரவர்கள் ஸ்ரீமஹாபாரதத்தை ஸ்ரீகண்டாசாரியர் சிவபாரம்யங்களைச் சேர்த்து விஷ்ணு பராம்யங்களை அநேகமாயெடுத்துவிட்டு அவற்றை ரூடிசெய்ய ஒரு வியாக்கியானமுஞ் செய்து கொடுத்துவிட்டாரென்றும், பங்காளவாசிகள் சக்திபாரம்யமுடையவர்களாதலால் தத்சம்பந்தமாய் முந்நூறு அத்யாயங்களைக் கல்பிதாம்சமாய்ச்சேர்த்து நீலகண்டீயத்தை யாதரித்து அந்தத் தேசத்தில் பாரதத்தை அச்சிட்டார்களென்றும், அந்தப் பிரதியாதாரமாகவே இச்சென்னையிலும் அச்சிட்டார்களென்றும், இவைகள்

பிராச்சீன வியாக்யானங்களோடு விரோதிக்கின்றதென்றும், பல வாறு பிதற்றியிருக்கின்றனர். இவற்றை விசாரிக்குமிடத்து ஸ்ரீ கண்டாசாரியர் விஷ்ணுபாரம்யங்களை யெடுத்துவிட்டாரென்பதும், சிவ பாரம்யங்களைச் சேர்த்தாரென்பதும் மூடத்தன்மையென்க. பார தத்தில் விஷ்ணுபாரம்யம் முதலே யில்லாதிருக்கவும் அதனை யெடுத்துவிட்டாரென்ப தெங்ஙனமிசையும்? மேல்யாம் கூறியபடியாயத் தால் பாரதமடங்கலும் சிவதர்மத்தையே கூறுமென்பது ஸ்வதஸித் தம். உள்ளபடியே அவர் விஷ்ணு சம்பந்தமான சில அம்சங்களை யெடுத்துவிட்டாரெனின், அதனை மறுத்து உண்மையை நாட்டி வேறு வியாக்கியானத்தால் ஏன் சாதிக்கக்கூடாது? அவருள்ளபடி யே விஷ்ணுதர்மங்களைக் கழித்ததுண்டெனின், கொஞ்சம் சேஷமாக விட்டுவைத்தா ரென்ப தெங்ஙனங்கூடும்? பங்காளத்திலுள்ள வர்கள் சக்திபாரம்யமாய் முந்நூறு அத்யாயங்களைச் சேர்த்தா ரென்றார். இவர் நாணமில்லாதவர்போலும், எங்காவது ஒரேதொ குப்பாய் முந்நூறு அத்யாயஞ் சேர்ப்பார்களா? முந்நூறு எழுத் துஞ் சேர்க்காரகளே! ஒரு சுலோகஞ் சேர்த்தாலேயே திருட்டு வெ ளிப்பட்டுப்போமாகவும்; அவர்கள் முந்நூறு அத்யாயஞ் சேர்க்கிற வரையில் இவர்களெங்கே தூங்கிக்கொண்டிருந்தனர்கள்? இவர்கள் "பார்த்தோபநிதம்மதுஸூதநஸ்ய பாதாரவிந்தார்ச்சிதச்சித்ராபுஷ்பம் ததர்சகங்காதரமேஸ்ளிமத்யே பபூவவீரஃ கிந்தநிச்சிதாத்மா" என்கிற சுலோகம் துரோணபர்வத்திலுள்ளதாகக் கூறித் திரிகின்றார்களே! அதுபோலென்று கொண்டார்போலும். இப்படி யில்லாததைக்கற் பித்துரைக்கும் பேதைகள் இவர்களேயென்பதைப் புத்திமான்கள் கண்டறிவாராக. இன்னும் பலவுளவற்றை விரிவஞ்சி விடுத்தாமெ ன்க. இதுநிற்க, ஸ்ரீகண்டாசாரியர் செய்த பாரத வியாக்யானம் பிராச்சீன வியாக்யானங்களோடு விரோதிக்கின்றதென்றார். இவரெ த்தனை பிராச்சீன வியாக்கியானங்களைப் பார்த்திருப்பார்? அந்த வியாக்கியானங்களுக்குப் பெயர்கள் யாவை? அந்தப் பிரதிகள் எந் ததேசத்தில் யாரிடத்திருக்கின்றன? அவைதம்மிடத்திருப்பதுபோ லவே கூறினரே ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஸ்ரீ மஹாபாரதத்திற்குப் பிரவக்தர்களாய்ச் சொர்க்க மத்யபாதாளங்களில் முறையே பைல முனிவர், வைசம்பாயனர், சைமினிபகவானுகிய மூவரையும் வியாச முனிவர் ஏற்படுத்தினரென்றும், அவ்வாறே அவர்கள் அந்தந்த இடங்களில் அதனை வெளியிட்டதுமாத்திரமேயன்றி ஒருவராயி னும் அதற்கு வியாக்யானஞ் செய்ததில்லையென்றும், பின்னர் ஸ்ரீ

கண்டாசாரிய சுவாமிகளென்பவர் பரமகாருண்ய நிதிகளாய் ஒரு வியாக்யானம் பிரதிபத ரூபமாய்ச்செய்து வெளியிட்டனரென்றும் புத்திமான்கள் பலரும் வழங்கி வருவதற்கேற்ப அந்த ஸ்ரீகண்ட வியாக்யானமொன்றுமே இம்மைசதுபரியந்தம் பிரசித்தமாயிருக்கின்றது. இதனை யுணராது வாயில்வந்தபடிப் பிதற்றித்திரிவது பாவம்! பாவம்!! இது மாத்திரமா? சுருதிஸ்மிருதிகளிலும் இவர்கள் பேய்க் கருத்தை விரோதித்த அமிசங்களேயும் கற்பனேயென்று சொல்வார்களேயன்றி வேறில்லே: இப்படிப்பட்டவர்களே என்ன சமாதானத்தால் திருப்தி செய்யலாம்? விவேகிகளாய்ச் சத்தியபிரமாணத்திற் கட்டுண்ட புத்திமான்களுக்கே சமாதானஞ் சொல்லலாமன்றி இவரைப்போலொத்த கவிச்சிரேஷ்டர் புளுகையெல்லாம் மாற்றித் திருப்திசெய்விக்க யாவரால்தான் முடியும்? இனியிப்படி வீண்புரட்டுகளாலும், விருதாப் பிரசங்கத்தாலும் அவலமார்க்கத்தை யவலம்பித்துப் பாவத்துக்குள்ளாகிக் கெடாதிருப்பாராக.

இனி ஸ்ரீமஹாபாரதம் சிவபாரம்யப் பிரதிபாதகமுடையதென்பதை விசாரிப்பாம். துரோணபர்வத்தில் "தேவதேவஸ்த்வசிந்த்யாத்யா அஜய்யோவிஷ்ணுரவ்யய: ஸர்வரூபம்பவம்ஜ்ஞாத்வா லிங்கேர்ச்சயதி தம்ப்ரபும் தஸ்மிந்நப்யதிகாம்பிரீதிம் கரோதிவ்ருஷபத்வஜ:" என்கிற வாக்கியத்தால் தேவர்களுக்குத் தெய்வமாகியும், எண்ணக்கூடாமலிருக்கும் ஆத்மபாவமுள்ளவராகியும், குறைவில்லாதவராகியும் விளங்கும் விஷ்ணுவானவர் சிவனைச் சர்வரூபியாய்த் தெரிந்து மஹாபிரபுவாகிய அவரை இலிங்கத்தினிடமாய்ப் பூசிக்கின்றார். எந்தப் புருஷனானவன் சர்வசொரூபியாய்ச் சிவனையறிந்து இலிங்கத்தில் பூசிக்கின்றானோ அவனிடத்தில் பரமசிவன் அதிகமாகிய பிரீதியைச் செய்கின்றார் என்றும், "ஜந்மகர்மதபோயோகாஸ் தயோஸ்தவச்சபுஷ்கலா: தாப்யாம்லிங்கேர்ச்சிதச்சம்பு: த்வயார்ச்சாயாம்விசேஷத:" என்கிற வாக்கியத்தால் வியாசரானவர் அசுவத்தாமரை நோக்கிக் கேளும் அசுவத்தாமரே! கிருஷ்ணார்ச்சுனர்களுக் கெப்படியானால் உற்பத்தி - கர்மம் - தபசு - யோகங்கள் கிடைத்திருக்கின்றனவோ அப்படியே உமக்குங் கிடைத்திருக்கின்றது. அந்தக் கிருஷ்ணார்ச்சுனர்கள் சிவலிங்கத்தினிடமாய்ப் பரசிவாராதனஞ் செய்கின்றார்கள். நீர் விக்கிரகவடிவத்தில் ஆராதனஞ் செய்கின்றீர் என்று கூறினாரென்றும் இனிது பெறப்பட்டது. அன்றியும், "ஸர்வஷுத்ரபக்தச்சகேசவோதத்ரஸம்பவ:" என்கிற வாக்கியத்தால் கேசவ

நாமத்தினையுடைய விஷ்ணுவானவர் சிவனு லுண்டாக்கப்பட்டவ ரென்றும், சிவபாதபக்தி யுடையவரென்றுங் கூறப்பட்டது. இப்ப டியே பாரதமடங்கலுஞ் சிவபாரம்யங்களைக் கூறிவருமுண்மையை யறியாமல் விஷ்ணுபரத்வ போதகமாக அதனைத் திரிபுணர்ச்சி கொண்டு மயங்கிக் கூறுவது மலவுறைப்பென்க.

எழும்பூரிரெட்டியார் மான்மிய மிவ்வளவினதாகவும், மேலிட ங்களில் "இதிஹாஸபுராணுப்யாம்" என்கிற வாக்கியத்தைக் கொண்டு வீண்வழக்காடவெளிப்பட்ட சாஸ்திரிகள்மான்மியத்தையுஞ் சற்று விசாரிப்போம். இவர் பாரதத்தில் சில அமிசங்களை விவகரித்து விஷ்ணுபரத்வங் கூறவந்தவராகலின் இல்லாத பரத்வத்தையுண் டென்று சாதிக்கவந்த அவரேழைமதியைமாற்றி யுண்மையைநாட் டுவது எமக்கு ஸ்வதர்மமாயிற்றென்க. துரோணபர்வகத கைலாச யாத்திராத்யாயத்தில், "யோகிநாம்பரமம்ப்ரஹ்ம வியக்தம்வேதவிதா ம்நிதிம் காலகேயம்மஹாத்மாநம் சக்ரஸௌர்யதுணேதயாம்" என்கிற வாக்கியத்தால் வேதவித்துக்களுக்கு நிதியும், யோகிகளுக்கு வியக்த மும், பரப்பிரம்ஹமுமாயுள்ளது அந்தப்பரமசிவம் என்றும், "ஜக் மதுஃ காரணுத்மாகம்" என்கிற வாக்கியத்தால் ஜகத்காரணமாகிய அந் தப் பரமசிவத்தை யடைந்தார்களென்றும், "வாஸுதேவஸ்துதந்திரு ஷ்ட்வா ஜகாமசிரஸாக்ஷிதிம் பாரர்த்தேநஸஹதர்மாத்மா கிருணந்பிரஹ் மரஸந்நாநம் லோகாதிம்விச்வகர்மாண மஜமீசாநமவ்யயம்" என்கிறவச னத்தால் தர்மாத்மாவாகிய ஸ்ரீகிருஷ்ணர் புராணபுருஷரும், உலகத் துக்கு முதல்வரும், உற்பத்தி நாசரகிதரும், பரப்பிரம்ஹ ஸ்வரூப ருமாகிய பரமசிவத்தை அர்ச்சுனனோடு வந்தித்தாரென்றும்; ஆர ண்யபர்வம், தீர்த்தயாத்திராத்யாயத்தில் "யத்ரவிஷ்ணுஃ பிரஸாதார் த்தம் ருத்ரமாராதயத்புரா வராம்ச்யஸுபஹூந்லேலே தைவதேஷு ஸுதுர்லபாந்" என்கிறவாக்கியதால், விஷ்ணுவானவர் அனுக்கிரகம் பெறவேண்டிப் பரமசிவத்தைப் பூசித்துத் துர்லபமான அநேகவர ங்களைப் பெற்றாரென்றும் இனிது பெறப்பட்டது. இப்படிப் பிர மாண்ய சித்தியாய்த் தீக்ஷிதஸ்வாமிகள் முதலிய சிவாநுபூதிமான் கள் சிவபாரம்யங்களை வெகுவாய் விளக்கியிருக்கு முண்மையில் அசூயைகொண்டு மேற்படி சாஸ்திரியாரவர்கள் குழறிவழிந்திருக் கும் சமாதானங்களைப் பரியாலோசிப்போமாக.

பகவத்கீதையில் "ருத்ராணும்சங்கரச்சாஸ்மி" என்கிற வசனத் தால் சிவனுக்கு வாசுதேவ விபூதித்வங் கூறப்படுதலால் "யோகிநாம்"

என்கிற வாக்கியத்தாற் பிரதிபாதிக்கப்படும் சிவபாரம்யம் சமர்த்திக்கப்பட்டதன்றி வேறில்லை யென்றும், "நாராயணாத்மீகாருத்ர:" என்கிற மோக்ஷதன்ம வசனத்தில் நாராயண: = ஆத்மா = யஸ்ய என்கிற பஹுவ்ரீஹியினால் சிவனுக்கு நாராயண பிரேரியத்வம் கூறப்படுதலால் "ஜக்மது:" என்கிற வாக்கியத்தாற் பிரதிபாதிக்கப்படும் ஜகத்காரணத்வம் சிவதுல்யமாகக் கூறுவது பொருந்தாதென்றும் "ஏஷவிஷ்ணுரிதிக்யாதஅதித்யாங்கச்யபாதபூத்" என்கிறவசனத்தால் அதிதியினிடத்தில் கசியபராலுண்டுபண்ணப்பட்ட இவன் விஷ்ணுவென்றுசொல்லப்படுவான்என்றுபெறப்பட்டதனால்"யத்ரவிஷ்ணு:" என்கிற வசனத்திலுள்ள விஷ்ணுபதம் வாமனபரமாக நிச்சயிக்கப்பட்டு அவதாரபரமாய்ச் சமர்த்திக்கப்படுமன்றி மூலவிஷ்ணுபாஸ்யத்வமாகக் கூறுவது விருத்தமென்றும், அப்படி அவதாரத்தில் பூசித்ததும் வராகபுராணத்தில் சிவனைநோக்கி நான் அவதாரங்கடோறும் உன்னைப் பூசித்து உனக்குப் பிரசித்தியுண்டுபண்ணுகிறேன் என்று விஷ்ணுமூர்த்தி கொடுத்தருளிய வரத்தைப்பாலிக்கும்பொருட்டே யென்றும், ஸ்ரீகிருஷ்ணர்செய்த சிவபூசையாதிகளும் இது அபிமதப்பற்றியே யென்றும், அந்தந்த அவதாரங்களில் பிராம்ஹணாராதனஞ் செய்துவந்ததுபோல் ஸ்ரீருத்ராராதனமும் தர்ம பரிபாலனார்த்தமேயன்றிச் சிவசர்வோத்கர்ஷத்தாலன்றென்றும் ஒருமுறையழுதுதொலைத்தார்.

இதனை முறையே விசாரிக்குமிடத்தில் "ருத்ராணாம்சங்கரச்சாஸ்மி" என்கிற வசனத்தாற் பெறப்பட்ட சங்கரனை விஷ்ணு விபூதியென்று கூறினவர் மேல் துரியமூர்த்தியாகியபரசிவப்பிரபுவை விசாரியாமல் வெளிப்பட்டது அறியாமையென்க. "ஆதித்யாநாமஹம் விஷ்ணும்" என்கிற வசனத்தாற் பெறப்பட்ட விஷ்ணுவைத் துவாதசாதித்தியருள் ஒருவராகிய விஷ்ணு வென்றே கூறுவரன்றி மூலவிஷ்ணுவேதானுண்டு கூறப்பட்டு வருமென்று சொல்லத்துணிவாரா? ஆதித்தியருள் விஷ்ணுநானென்பதைத் துவாதசாதித்தியருள் ஒருத்தரைக் கிரகிப்பதுபோல் உருத்திரருள் சங்கரன் நானென்பதை ஏகாதசருத்ரர்களில் ஒருத்தராகக் கிரகிக்கவேண்டுமன்றிப் பிரம்ஹவிஷ்ணு ருத்ராதி சர்வச்சிரேஷ்ட மூர்த்தியாகிய துரிய சிவத்தை யென்றுகொள்வது துரஹங்காரமென்க. இதனால் சிவபெருமானுக்கு நாராயணவிபூதித்வம் சித்திக்காதாகையால் "யோகி

நாம்" என்கிற வசனத்தாற் பிரதிபாதிக்கப்படும் பரப்பிரம்ஹத்வம் ஸ்ரீபரசிவமூர்த்திக்கென்றே ஸ்பஷ்டமாய் வெளிப்பட்டதென்க.

இனி "நாராயணாத்மகோருத்ர:" என்கிற வசனத்தால் சிவனுக்கு நாராயண பிரேரியத்வங்கூறி "ஜக்மது:" என்கிற வசனத்தாற் பெறப்பட்ட ஜகத்காரணத்வத்தைச் சிவனுக்கு அந்தரியாமியாகிய விஷ்ணுவினிடத்துக் கிரகிக்கவேண்டுமென்பது துரபிமானமென்க. "தமீச்வராணாம்பரமம்மஹேச்வரப் தம்தேவதாநாம்பரமஞ்சதைவதம் பதிம்பதீநாம்பரமம்பரஸ்தா த்விதாமதேவம்புவநேசமீட்யம்" என்கிற சுவேதாசுவதர வாக்கியத்தால் ஈசுவரர்களுக்கெல்லாந் தலைவராகிய மஹேசுவரரும், தேவர்களுக்கெல்லாந் தலைவராகிய மஹாதேவரும், பதிகளுக்கெல்லாந் தலைவராகிய பசுபதியும், பரமாயுள்ளவர்க்கெல்லாந் தலைவராகிய பராத்பரரும், சர்வஜகத்காரணரும், தியானமார்க்கத்தா லுபாசிக்கப்படுபவருமாகச் சிவபெருமானை நாங்களறிகின்றோம் என்று பெறப்பட்டதன்றியும், "விச்வேச்வரமுமாகாந்தம் விச்வாந்தர்யாமிணம்சிவம் நப்ரஹ்மாத்யைஸ்ஸமம்ப்ரூயாச் சக்திபிச்சாபி பார்வதீம்" என்கிற ஆதித்யபுராண வசனத்தால் சகல ஜகத்துக்கும் பிரபுவானவரும், உமாதேவியார்க் கிஷ்டரும், உலகங்களுக்கெல்லாம் அந்தரியாமியுமான பரசிவப் பிரபுவைப் பிரம்ஹாதிகளோடு சமமாகவும், பிராட்டியாரை இதரசக்திகளோடு சமமாகவுங் கூறுதல் கூடாது என்று நிச்சயிக்கப்பட்டதனால் "நாராயணாத்மகோருத்ர:" என்கிற வசனத்துக்கு அர்த்தசுவீகாரமாய் நாராயணனுக்கு ஆத்மா அந்தரியாமியாகிய சிவபெருமான் என்று தத்புருஷ சமாசத்தைக் கிரகிப்பது நிர்ப்பாதிதமென்க. இன்னும் "ஸஏஷபகவாநீசஸ் ஸர்வதத்வாதிரவ்யய: ஸர்வதத்வவிதாநஜ்ஞ: ப்ரதானபுருஷேச்வர: ஸோஸ்ருஜத்தக்ஷிணாதங்காத் ப்ரஹ்மணம்லோகஸம்பவம் வாமபார்ச்வாத்ததாவிஷ்ணும் லோகரக்ஷார்த்தமீச்வர: யுகாந்தேச் சைவஸம்ப்ராப்தேருத்ரம்ப்ரபுரதாஸ்ருஜத்" என்கிற ஆநுசாசநீகபர்வ வசனத்தால் சர்வசத்தாவாகியும், சர்வதத் வாத்மகராகியும், நாசரஹிதராகியும், சகலதத்வங்களுடைய நிர்ணயங்களை அறிந்தவராகியும் விளங்கும் பிரதான புருஷராகிய ஸ்ரீருத்ரபகவான் தனது வலதுபாகத்தினின்றும் லோகசிருட்டியைச் செய்யும்பொருட்டுப் பிரம்ஹாவையும், வாமபாரிசத்தினின்றும் லோகரக்ஷணார்த்தமாய் விஷ்ணுவையும், பிரளயகால சம்ஹாரார்த்தமாய் ஸ்ரீருத்ர மூர்த்தியையும் உண்டு பண்ணினாரென்று பெறப்பட்டது. "ஈசாநச்சேதனக்கர்த்தா

புருஷக்காரணம்சிவ: விஷ்ணுர்ப்ரஹ்மாசசீஸூர்யச் சக்ரோதேவாச்ச ஸாங்வயா: ஸ்ருஜ்யதேக்ரஸ்யதேச்சைவ தமோபூதமிதம்யதாஅப்ஜ்ஞா தம்ஜகத்ஸர்வம் ததாஹ்ரயேகோமஹேச்வர:" என்கிற சாந்திபர்வ வசனத்தால் ஈசானரும், உலகத்தைப் பிராணமுடையதாகச் செய்கின்றவரும், சமஸ்தத்தையும் உண்டுபண்ணுகின்றவரும், சமஸ்தபிராணி பூதங்களிலும் வசிக்கின்றவரும், ஜகத்காரணருமாகிய அந்தப்பரமேசுவரர் விஷ்ணு, பிரமன், சந்திரன், சூரியன், இந்திரன் பரிவாரங்களாகிய மற்றைத் தேவர்களையுஞ் சிருஷ்டித்தும், ரக்ஷித்தும், சம்ஹரித்தும் வருவதனாலேயே உலகமெங்கும் இருள்மூடித் தமோமாத்ராவசேஷமாக விருக்கு மந்தவேளையில் ஆதியந்த சூனியராகிய அவரொருவரே நாசமின்றி யிருக்கின்றார் என்று வெளிப்பட்டது. இந்தப் பிரமாணப் பிரத்தியக்ஷங்களை யறியாமல் "ஜக்மது" என்கிற வசனத்தாற் பெறப்பட்ட ஜகத்காரணத்வம் சிவனுக்குச் சித்திக்காதென்று குரைத்த மட்டிவாசகம் பாழ்த்ததென்க.

இதுநிற்க, "யத்ரவிஷ்ணு: ப்ரஸாதார்த்தம்" என்கிற வசனத்தாற் பெறப்பட்ட விஷ்ணுபாஸ்யத்வம் அவதாரமாகிய வாமனபரமேயன்றி மூலவிஷ்ணுவைப் பாதியாதென்றார். நன்று! நன்று!! இதனால் மூலவிஷ்ணுபாஸ்யாத்வமே யன்றி வாமனனிடத்துஞ் சிவாராதனம் பெறப்பட்டது. "ரௌத்ரம்லிங்கம்மஹாவிஷ்ணுர் பக்த்யாசுத்தம்சிலாமயம் சாருசித்ரம்ஸமர்ப்யர்ச்ய லப்தவாங்பரமம்பதம் ப்ரஹ்மஸர்வஜகத்கர்த்தா யஸ்யலிங்கார்ச்சநேநது பாரதீமாப்தவாநாசு ஸபூஜ்யஸ்ஸர்வசேதநை: யஸ்யலிங்கம்ஸமப்யர்சய மருதஸ்ஸகலாஅபி லப்தவந்தச்ரியம்பூர்ணம் ஸபூஜ்யஸ்ஸர்வசேதநை:" என்கிற பராசரபுராண வசனத்தால் விஷ்ணுவானவர் அன்பினால் சிவலிங்கப்பெருமானைப் பூசித்து உன்னதஸ்தானமாகிய பரமபதத்தையடைந்தார், பிரமன் பூசித்துச் சர்வகர்த்துருத்வமும் சரஸ்வதியையும் அடைந்தான். சமஸ்த தேவர்களும் பூசித்து மிகுந்த ஐசுவரியத்தையடைந்தார்கள், ஆதலால் சிவபெருமான் சமஸ்தபிராணி பூதங்களாலும் பூசிக்கத்தக்கவர் என்று பெறப்பட்டது. "சிவஸ்யபூஜ்யதே லிங்கம் ஸர்வைத்தேவாஸுரைர்ந்ருபி: சிவேநபூஜிதக்கோவா வதந்து ப்ரதிவாதிந:" என்கிற வாமனபுராண வசனத்தால் சிவபெருமான் சமஸ்த தேவாசுர மநுஷ்யர்களாலும் பூசிக்கப்படுகின்றார். சிவனால் பூசிக்கப்பட்டவன் யாவன் பிரதிவாதிகள் சொல்லட்டும் என்று வெளிப்பட்டது. "யஸ்யப்ரஹ்மாச்சவிஷ்ணுச்ச த்வஞ்சசக்ரஸஹாம

ரை: அர்ச்சயத்வம்ஸதாலிங்கம் தஸ்மாச்ரேஷ்டதரோஹிக:" என்கிற ஆநுசாசநீக பர்வவசனத்தால் பிரமனும், விஷ்ணுவும், மற்றைத் தேவர்களும் சிவலிங்கப்பெருமானைப் பூசிக்கின்றவர்களானால் சிரேஷ்டர்கள் யாவர் என்று பெறப்பட்டது. "தமேராங்வபச்யத்கிரிசஸ்ய வாமே ஸ்வாத்மாநமவ்யக்தமநந்தரூபம் ஸ்துவந்தமீசம்பஹு-பிர்வசோபிச் சங்காஸிசக்ரார்ப்பிதசக்ரஹஸ்தம்" என்கிற துரோணபர்வ வசனத்தால் ஸ்ரீகிருஷ்ணருடைய தவத்தைச் சந்தோஷித்துப் பரம சிவம் அநுக்கிரஹார்த்தமாய் வெளிப்பட்ட அவசரத்தில் அவரது இடது பாகத்தில் சங்கசக்ரதரனாய் அநேக திவ்யஸ்தோத்திரங்களால் துதி செய்துகொண்டிருந்த விஷ்ணுவை ஸ்ரீகிருஷ்ணர் பார்த்தருளினாரென்று வெளிப்பட்டது. இவ்வுண்மைகளை மேலிடங்களில் (கூச) (கூஎ) வது பக்கங்களில் உதகரித்திருக்கும் ருக்சம்ஹிதா வாக்கியத்தாலும் பிரம்ஹ கைவர்த்த வசனத்தாலும் விளக்கியிருக்கின்றோமாகையால் "யத்ரவிஷ்ணு:" என்னும் வசனத்தாற் பெறப்பட்ட விஷ்ணுசப்தம் மூலவிஷ்ணுவைப் பாதியாதென்று கூறிய பாதகவசனம் பரித்யஜிக்கப்பட்டதென்க. மேல் வாக்கியங்களாற் பெறப்பட்டனவெல்லாமும் மூலவிஷ்ணூபாஸ்யத்வமேயாகையால் அவதார விஷ்ணுக்களுக்கு மாத்திரம் இடந்தேடிவைத்தது மௌட்டியாந்தகாரமென்க.

இங்ஙனமிற்க, அவதாரங்கடோறும் உன்னைப் பூசித்து உனக்குப் பிரசித்தி யுண்டுபண்ணுகிறேனென்று சிவனுக்குக் கொடுத்த வரத்தைப் பாலிக்கும் பொருட்டே விஷ்ணுவானவர் அவதாரங்களில் பூசித்தாரென்பதும், ஸ்ரீகிருஷ்ணர் பூசித்தாரென்பதும் பேதைமையிற் பேதமையென்க. மேலிடங்களில் "விச்வாதிகோருத்ரோமஹர்ஷி:" என்கிற சுருதி சித்தமான உத்கர்ஷத்தை வெகுவாய்க் கூறியிருக்கின்றோமாகையால் ஸ்வத சித்தியமான சர்வோத்கர்ஷத்தையுடைய சிவபெருமானிடத்து இராமகிருஷ்ணாதி அவதாரங்களில் செய்த ஆராதனத்தாலேயேஉத்கர்ஷம் சம்பவித்ததென்பது விதண்டாவாதமென்க. வராகபுராணத்திற்கூறிய வரதானம் அர்த்தவாத மாத்திரமாகவே கிரகிக்கப்படும் அநேக சுருதிவிருத்தமாய்ப் புராணங்கூறுதாகையால் பிரசம்சாபரமென்பதே மேலோர் துணிபென்க. இல்லையெனின், சுருதி விரோதபரிஹாரந்தேட விடம் பெறுதுகல்பனுமாத்திரமாகக்கண்டிக்கப்பட்டொழியுமென்க. மேல் வரதானம் என்போ துமெனின், தண்ணீர்ப்பந்தரை யணைந்து நீரருந்

தித் தாகந்தணிந்த பிறகுநானிங்கு நீரருந்தியது தண்ணீர்ப்பந்தர் வைத்தவனுக்குப் புண்ணியத்தை விளைவிக்கவேயன்றி வேறில்லை யென்று கூறும் பேதையிற் கருதப்படுமென்க.

இன்னும் பிராம்ஹணாராதனம்போல் ருத்ராராதனமும் தர்ம பரிபாலன மாத்திரமன்றி யதார்த்தமன்றென்று கூறினர். இதுவு மொருவிந்தையாம். மூலவிஷ்ணுவாலும் அவதாரவிஷ்ணுக்களாலும் அந்தந்தக்காலங்களில் சிவாராதனஞ் செய்துவந்ததுபோல்பிராம்ஹ ணர்களுஞ் சிவாராதனஞ்செய்பவர்களென்பது சர்வவேதசம்மதம். விஷ்ணுவும் பிராம்ஹணர்களுஞ் சிவாராதனத்தை யுடையவர்க ளாகையால் விஷ்ணுமூர்த்தி பிராம்ஹணாராதனஞ்செய்தது சிவபக் தாதிக்யத்தாலென்று வெளிப்பட்டது. துர்வாசர், நந்தி, பிருங்கி, சநற்குமாரர், அகஸ்தியர், ததீசிமுதலாகிய முனிவர்களை மூலவிஷ் ணுவே அநேக அவசரங்களில் வழிபட்டவுண்மைகளைப் பராதாதி பிரமாணங்களாற்கண்டறியலாமன்றியும் அவர்களை அவதாரங்களில் பூசித்ததும் ஏராளமாகையால் தர்மபரிபாலன மாத்திரமாகக் கூறு வது அபசித்தாந்தமென்க. அந்த முனிவர்கள் விஷ்ணுவை யாராதி த்ததும் அவர் சிவபூஜாநிஷ்டரா யிருத்தலினென்க. "ப்ரஹ்மணஸ் ருஷ்டிகர்த்ருத்வம் விஷ்ணோர்த்தானவமர்த்தனம் ஸவர்க்காதிபத்ய மிந்த்ரஸ்ய சிவபூஜாவிசேஷபலம்" என்கிற கூர்மபுராண வசனத்தால் பிரம்ஹதேவருக்குச் சிருஷ்டித்தொழிலும், விஷ்ணுவுக்கு அசுரஜ ஜயமும், இந்திரனுக்குச் சுவர்க்காதிபத்யமும் சிவபூஜையில் வந்த பலமென்று பெறப்பட்ட வுண்மையை நோக்குங்கால் ஸ்ரீருத்ராரா தனமின்றி அந்தப்பிரயோஜனம் பெறுவது காலத்திரயத்துஞ் சித் தியாமை வெளிப்பட்டதனுல் விஷ்ணுவினுடைய சிவாராதனத் தைத் தர்மபரிபாலனமாத்திரமென்பது நிரஸ்தமென்க. ஆகவே, ஆத்மார்த்தமென்று வெளிப்பட்டது. இப்படி விசாரித்தறிவதொழி ந்து வாயில்வந்தபடிப் பேசித் திரிவது பாவம்! பாவம்!! இவ்வுண்மை களால் ஷை சாஸ்திரியாரவர்கள் அபார்த்தங் கூறிக்கொண்டு சிவ பாரம்யங்களைக் கெடுக்கத் தலைப்பட்ட விபரீதந்தலைகாட்டா தொழி ந்ததாகலின் இதனை யிவ்வளவின் முடித்து மேல்முடிச்சூர் முதலி யார்கூறிய சில விஷயங்களை யீண்டு விசாரிப்போம்.

இக்கவிச்சிரேஷ்டர் "பிரபன்னகாயத்திரி" என்னுஞ் சுவடியில் "ஸரச்ரேயாம்பவதிஜாயமாநः" என்கிற வசன மொன்றெழுதித் தங்

கத்தை யுருக்குந்தோறும்மாற்றதிகமாகிறுப்போல் நாராயணன் அவதரிக்க உச்சிராயத்தையடைகின்றான் என்று பிரசங்கித்தனர். இதனால் மூலவிஷ்ணுவைக்காட்டிலும் அவதார விஷ்ணுக்களுக் காதிக்க மதிகரிக்கின்றது. மேல்சாஸ்திரிகளோ வெனின், மூலவிஷ்ணுவுக்குவந்த அபகர்ஷத்தை அவதார விஷ்ணுக்கண்மேலேற்றிப்பரிகரிக்க முயன்றார். இதனால் அவதார விஷ்ணுக்களைக் காட்டிலும் மூலவிஷ்ணுவுக் காதிக்க மதிகரிக்கின்றது. இந்த விவகாரத்தால் ஸ்வமதபின்னவாதஞ்சித்திந்தலால் அன்யோன்யாசிரய தோஷம் சம்பவித்துப் பரித்யஜிக்கப்படுமென்க. விஷ்ணுவானவர் அவதாரங்கடோறும் உச்சிராயத்தை யடைகின்றாரென்பதை விசாரிக்கில் புடம்போடுந்தோறும் பொன்னுக்கு மாற்றுயர்தல்போ லென்றும் உவமித்துக் கூறினர். இப்படியும் பொருள் கூறுவாருண்டா? அந்த வாக்கியத்தாற்பெறப்பட்டது சிவனுடைய ஸ்வரூபவர்ணனை யல்லது வேறில்லை. பொன்னானது பூஷணங்களாகக் காரியப்பட்டகாலத்தில் அநுபவநீயமான சிரேஷ்டபதார்த்தமாய் ஆத்மாக்களுக்கு இன்பம் விளைத்தல்போல் நிஷ்களமாத்திரமாயுள்ள பரப்பிரம்ஹம் உமார்த்த சரீர திவ்யமங்கள விக்ரஹதேஜோரூபமாய்ச்சகளீகரித்து அநுபவவேத்யமாகிஆத்மாக்களுக்குப் பேரின்பத்தை விளைவிக்கும்அவசரத்தை விளக்கவந்த அந்தவாக்கியத்தை ஹேயபகிராஹ்யங்கொள்வது அஞ்ஞானாந்தகாரமென்க. இப்படி விசாரியாமல் தங்கத்தை யுருக்குந்தோறும் மாற்றதிகமாகிறுபோல் என்று இராமகிருஷ்ணாதி அவதாரங்கண்மேலேற்றிக் கூறுவது அபசித்தாந்தமென்க. மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்க முதலிய அவதாரங்கள் மூலவிஷ்ணுவினுடைய முதற்புடம், இரண்டாம்புடம், மூன்றாம்புடம் என்றாகி ஒன்றிலொன்று மாற்றதிகரித்தல்வேண்டும். அன்றியு மந்த மூலவிஷ்ணுவைப் புடம்போடுதற்கு வேறொருபுருஷனும் வேண்டும். மூலவிஷ்ணுவினுடைய அவதாரமாகவே பத்தையுங்கொள்வாரெனின், பொன்னானது பூஷணங்களாகக் காரியப்பட்டகாலத்தில்மாற்றுரைகளில் தாழாதுநிற்றல்போல் எல்லா அவதாரங்களும் சமதலையினிற்க வேண்டியதுபோக நாரசிங்கம், ஸ்ரீராமம் முதலிய அவதாரங்களை சிறந்து மச்சம், வாராகமாதிகள் அக்கிராஹ்யமாய் அபூஜ்யதை யடைந்திருப்பதால் பாதிக்கப் படுகின்றது. தங்கத்தை யுருக்குந்தோறு மென்றவுவமையால் பத்தவதாரங்களும் மூலவிஷ்ணுவினதாகக்கொள்ள விடமேயிராது. மூலவிஷ்ணு மச்சமாகவும், மச்சம் கூர்மமாகவும், கூர்மம் வராகமாகவும் அவதரித்ததாகக்

கொள்ளவேண்டிவரும். அதவா கொள்வாமெனின், பரசிராமனும் ஸ்ரீராமனும் ஓர்காலத்திலும் பலராமனும் கிருஷ்ணனும் ஓர் காலத்திலும் இருந்தவர்களாகக் கண்டோமாகையால் பாதகமுண்டாகி மூலவிஷ்ணுவினதாகவே நிச்சயிக்கவேண்டி யிருக்கின்றது. புடஞாய விசாரத்தால் ஒன்றிருந்தகாலத்தில் மற்றொன்றிருத்தல் கூடாமை பற்றியே நிரஸ்தமாயிற்றென்க. இவ்வளவிலொழியாது பரசிராமனும் ஸ்ரீராமனும் சண்டைபிடித்த கதைகளை யேராளமாயறிவோமாகையால் இந்த விகற்பங்கட்கு எங்கே சமாதானந்தேடுவது?

"அரியீரைந்தவதாரச் செயல்யாவுமரன்செயலராமாலறியாதகந்தைகூறற் றிரியாகுமுடல்வாலதருணமூப்பின்செயலுயிரின் செயலாகுஞ் செய்திபோலும், விரிவாமைந்தொழிலையு மெம்மிறைவன்றனே மிகுபடர்க்கைமுன்னிலைத் தன்மையிலுண்டாக்குந், தரியாதன்றிராமனுடன் பரசுராமன் சமர்பொருதகதையுலகிற் சாற்றுவீரே."

என்று சிவஞான தீபத்திற்கூறியவாறு வினைவயப்பட்டுப் பிறந்திழலும் உயிர்வர்க்கத்து ளெண்ணப்பட்டுச் சிவனால் காரியப்படுமுண்மை வெளிப்பட்டதனால் மூலவிஷ்ணு வுயர்ந்தவரென்றும், அவதார விஷ்ணுக்களுயர்ந்தவர்களென்றும் மலைந்து கூறியவாதங்கள் நிரஸ்தமாயிற்றென்க. இந்த நியாயங்களால் மூலவிஷ்ணுவினுடைய சிவாராதன விசேஷத்தாலேயே அவதாரங்களினும் உத்கர்ஷம் சித்தித்ததென்பதுதானே போதரும். இவ்வுண்மை விசாரமின்றி வாயில்வந்தனவந்தன குழறித்திரிவது அறியாமையும், அஹங்காரமுமென்க.

இதுநிற்க, ஷை சாஸ்திரியாரவர்கள் சர்வசித்தாந்த பிரதிபாத்யத்வம் விஷ்ணுவுக்கே யுண்டென்பதை விவகரிக்கவந்தார், எங்ஙனமெனின், பாரதம், மோக்ஷதன்ம பஞ்சசித்தாந்த நிர்ணயாத்தியாயத்தில், சாங்கியத்துக்கு வக்தா கபிலரென்றும், யோகத்துக்குவக்தா பிரமனென்றும், அபாந்தரதபர் வேதாசாரிய ரென்றும், பிரம்ஹபுத்திரரான பசுபதி பாசுபதஜ்ஞானத்தைச் சொன்னவரென்றும், பாஞ்சராத்திரத்துக்குவக்தா நாராயணரென்றும், சர்வஜ்ஞானங்களினும் பாஞ்சராத்திரஞ் சிறந்ததென்றும், சாஸ்திரப்படியும், நியாயப்படியும் நாராயணனுக்கிருஷ்டனென்றும், தமோபூதா ளவனை யறிகிறதில்லையென்றும், சாஸ்திர மறிந்தவர்கள் அறிகிறார்களென்றுங் கூறியிருத்தலால் நாராயண நிஷ்டத்துவம் சாதிக்கப்பட்டுப்

பாசுபத்யாதி சர்வசித்தாந்தப் பிரதிபாத்யர் அந்தரியாமிபரமாய் அந்த நாராயணரொருவரேயென்று வெளிப்பட்டதென்றும், வேதத்திலும், இராமாயணத்திலும், ஹரிவம்சத்திலும், பாரதத்திலும் முதலிலுங் கடையிலும் விஷ்ணுவே சொல்லப்படுகின்றாரென்று ஹரிவம்சத்திற் கூறப்பட்டதென்றும், வேதத்திலுயர்ந்த சாஸ்திரமும், கேசவனிலுயர்ந்த தெய்வமுமில்லையென்று வியாசவசனத்தாற் பெறப்பட்டதென்றும் முறையே சொல்லிமறுத்தார்.

இவற்றை விவகரிக்குமிடத்து மோக்ஷதன்மத்திற் கூறிய நாராயண நிஷ்டத்வம் ஔபசாரிகமேயன்றி வாஸ்தவமன்றென்க. எங்ஙனமெனின், சாங்கியமுதலாகச் சொல்லப்பட்ட சித்தாந்தமைந்தும் ஒன்றிலொன்று முரணியனவே யன்றி வேறில்லை. இப்பகுதியனவற்றை வேதத்தி னுண்மைப் பொருள்களாகக் கிரகித்தல் கூடாது. இவற்றுள் பாஞ்சராத்திரம் ஆதிக்கமுடையதாகக் கூறப்பட்டதேயெனின், பஞ்சசித்தாந்தங்களி லொன்றாகி யேனையவற்றோடு சமதுலையினிற்பதொன்றாகலின் உண்மை பயக்காதென்க. ஆகவே, இவற்றி லொருசேராமல் அதீதமார்க்கமாதல் வேண்டுமென்பது பெற்றாம். அங்ஙனமின்மையின், அதனை யுண்மை நெறியாகக்கிரகிப்பதுகூடாது. ஆயின் அந்தவாக்கியத்தாற் போந்த ஆதிக்கத்துக்குப் போக்கேதெனின், ஏனையமார்க்கங்களைப்பற்ற அதற்காதிக்கங் கூறப்பட்டதன்றி வேதத்திற் றெளிபொருளாய்க் கிரகிக்கப்படுஞ் சித்தாந்தமும் அதுவேயென்பது நிரஸ்தம். சகல சமயாதீதாத்வைதமாய் விளங்குஞ் சைவசித்தாந்தத்துண்மையை மேல் (ரு-ச) பக்கங்களில் விதந்துகூறி யிருக்கின்றோ மாகையால் ஆண்டு கண்டுணர்க. ஆயின்மேல் வாக்கியத்தாற் பெறப்பட்ட பாசுபத்ய மார்க்கத்துக்குப் போக்கென்னையெனின், அது வாமபாசுபதா சாரமாகக் கிராஹ்யமேயன்றி உத்தரசைவத்தைப்பாதியாதென்க. வாமபாசுபதமும் பாஞ்சராத்திரமும் மலபாகம்வராதவர் பொருட்டுப் பரசிவாநுக்ஞைகொண்டு சிவகேசவர்களால் சொல்லப்பட்டன வென்றும் ஞானசிலர்க்கு அவை அக்கிராஹ்யமென்றும், சித்தாந்தசைவமொன்றே கிராஹ்யமென்றும் பலவிதத்தானுஞ் சுருதிபோதகமாய்க்கூறினோமாகையால் பாஞ்சராத்திராதிக்கங் கூறவந்த பண்டிதத்திறம் பாதிக்கப்பட்டதென்க. இந்த நியாயங்களால் மேல்வாக்கியத்தாற்போந்த நாராயண நிஷ்டத்வம் பாஞ்சராத்திரமாகிய சாஸ்திரப்

படியும், அதிற் கூறிய நியாயப்படியுஞ்சித்திக்குமேயன்றி இதர சித்தாந்தாபேக்ஷயா சித்தியாதென்க.

இன்னும் பாசுபத்யாதி சர்வசித்தாந்தப் பிரதிபாத்யர் அந்தரியாமி பரமாய் அந்தநாராயணரொருவரே யென்றும் பிரசங்கித்தனர். விஷ்ணுவால் சொல்லப்பட்டது பாஞ்சராத்திர மொன்றேயன்றி வேறில்லை. இது கொண்டே சர்வசித்தாந்தப் பிரதிபாத்யத்வம் அவர்க்குக் கூறுவது என்னபேதமை? சாங்கியயோக சித்தாந்திகளும் இவ்வாறே கூறுவரெனின் உண்மைதோன்றுவதெங்ஙனம்? ஆகவே சர்வசித்தாந்தங்களையும் சொன்னவர் யாரோ அவரே சர்வசித்தாந்தப்பிரதிபாத்ய ரென்பது சித்திக்கும். இதனால் சமஸ்த சித்தாந்தங்கட்கும் வக்தா ஒருவரே யாதல்வேண்டும். ஒன்றி, லொன்று முரணியபல சித்தாந்தங்களை யொருவரே கூறுவதென்னையெனின், ஆன்மாக்களுடைய கன்மபாகங்களை நோக்கி யங்ஙனங் கூறினதேயன்றி வேறில்லை யாகலான் பரிபாகிகள் மயங்காரென்க. உண்மையில் சர்வசித்தாந்தப் பிரதிபாத்யர் ஒருவரே யாதல்வேண்டுமென்றிப் பலமுதல்களாய்க்கிரகித்தல் கூடாது. பலராகக்கூறுவது அந்தந்த ஸ்துதிப் பிரகரணங்களில் ஔபசாரிகமாய் மூலபுருஷனுடைய அதிஷ்டிப்பை நோக்கியே யன்றி வாஸ்தவத்தாலன்றென்க. இந்நியாயங்களால் சர்வசித்தாந்தப்பிரதிபாத்யத்வம் விஷ்ணுவுக்குச் சமர்த்திக்கவந்தது தடுமாறியமதென்க. "அஸ்ருஜத்ஸர்வசாஸ்த்ராணி மஹாதேவோமஹேச்வர: தண்டநீதிப்ப்ரயோகஞ்ச ப்ராணிச்சஸர்வச: வித்யாச்சதஸ்ரக்கூட்டஸ் தாஸ்தஸாம்பேதவிகல்பநா அங்காநிவேதாச்சத்வாரோமீமாம்ஸாந்யாயவிஸ்தர: புராணந்தர்மசாஸ்த்ரஞ்ச வித்யாஹ்யேதாச்சதுர்த்தச ஆயுர்வேதோதநுர்வேதோ வேதோகாந்தர்வகோத்ரய: அர்த்தசாஸ்த்ரஞ்சதுர்த்தஞ்ச வித்யாஹ்யஷ்டதாசைவது தசசாஷ்டௌசவித்யாதா ஏதாதர்மஸ்யஸம்ஹிதா: ஏதாஸாமேவவித்யாநாம் வ்யாஸ:மாஹமஹேச்வர: சதாநித்ரீணிசாஸ்த்ராணு மாஹதந்த்ராணிஸப்தமிவ்யாஸஏவைதுவித்யாநாம்மஹாதேவேநகீர்த்தித: தந்த்ரம்பாசுபதம்நாம பாஞ்சராத்ரஞ்சவிச்ருதம் யோகசாஸ்த்ரஞ்சஸாங்க்யஞ்ச தந்த்ரம்லோகாயதம்ததா தந்ரம்ப்ரஹ்மதுலாநாம தர்க்கவித்யாதிவொகஸாம்" என்றற் றொடக்கத்துச் சாந்திபர்வ வசனங்களால் சர்வசாஸ்திரங்களையுஞ் சிவபெருமா னொருவரேயுண்டாக்கினரென்றும், அவற்றின் விவரணத்தை நோக்குங்கால் தண்டநீதி, பிரயோகம், பிரமாணம், கூடஸ்தம் என்கிற நாலு வித்தைகளென்றும், அவற்றி னுட்பிரிவுகளென்றும், வேதங்கள், ஷடங்கங்கள், மீ

மாம்சை, நியாயவிஸ்தரம், புராணம் தர்க்கசாஸ்திரம், ஆகியபதினாலு வித்தைகளென்றும், ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்திரம் என்கிற நாலுவித்தைகளென்றும் விளங்குகை யால் தர்மசம்ஹிதைகளாகிய இவ்வஷ்டாதசவித்தைக்கும் சிவனே வக்தா வென்றறியத்தக்கது. அன்றியு மிதனுட்பிரிவாக மூன்றாறு சாஸ்திரங்களேயும், ஏழுதந்திரங்களேயும் சொல்லியருளினரென் றும், அவற்றில் சாஸ்திரங்கணிற்க தந்திரங்களே நோக்குங்கால் பாசுபதம், பாஞ்சராத்திரம், யோகம், சாங்கியம், உலகாயதம், பிரம் ஹஸூலே, தர்க்கவித்தை என்கிற பேதங்களாய்ப் பெறப்பட்டதென் றும் இனிது விளங்கும், "ஏகார்த்தாநிபுராணநி வேதாச்சைகார்த்தஸம் ஹிதா:" என்கிற வசனத்தால் புராணங்களும், தர்மசாஸ்திரங்களும் வேதங்களும் ஏகார்த்தத்தையுடையது. இவற்றையெல்லால் மஹா தேவராகிய சிவபெருமானே சொல்லியருளினரென்று பெறப்பட்ட வுண்மையால் சர்வசித்தாந்தப் பிரதிபாத்யர் பரசிவப் பிரபுவாகிய அவரொருவரேயென்று சாதிக்கப்பட்டது. "வேதஃ பாசுபதம்ததா ஜ்ஞாநாந்யேதாநிபஞ்சைவ ஜ்ஞேயச்சைகோமஹேச்வர:" என்கிற பா த்மபுராண வசனத்தால் சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், வே தம், பாசுபதம் ஆகிய இவ்வைந்தும் ஞானங்களென்றும், இவற்று லறியப்படும் ஞேயமாவான் சிவபெருமானென்றும் வெளிப்பட்ட வுண்மையுஞ் சித்தித்ததென்க. இங்கே வேதத்தையுஞ் சொல்ல வந்தது ஏனைய சித்தாந்தங்கட்கு ஆதிக்கங் கூறவேண்டியென்க. ஆகவே, வேதத்திற் பேதித்தபாகங்கள் அக்கிராஹ்யமும், அபேத பாகங்கள் கிராஹ்யமுமாகிய ஞானங்களென்று நிச்சயப்படும். இவ் வுண்மைகளால் சர்வஞானங்களாலும் பிரதி பாத்யராய் விளங் கும் ஞேயப்பொருளா யுள்ளவர் சிவபெருமா னொருவரேயென்று நிச்சயிக்கப் பட்டதென்க. பாரதமொன்றிலேதானே சமஸ்த சித் தாந்தங்களேயுஞ் சிவன் சொன்னாரென்றும், அவற்றி லொவ்வொ ன்றைத் தனித்தனி விஷ்ணுவாதிகள் சொன்னார்களென்றும் பேதந் தோன்றக்கூறிய தென்னேயெனின், சிவபெருமான் அந்தநூல்களேச் சொன்னகாலத்துப் பாஞ்சராத்திரங் கேட்டவர் விஷ்ணுவும, பாசு பதங்கேட்டவர் உருத்திரமூர்த்தியும் யோகசாஸ்திரங்கேட்டவர் பிரம்ஹதேவரும், உலகாயதங் கேட்டவர் பிரஹஸ்பதி பகவானும், என்று நிச்சயமாகையால் சர்வ சாஸ்திரங்களேயுஞ் சிவபெருமான் தாமே சொன்னவரென்றும் விஷ்ணுவாதிகள் அவர்பால்கேட்டனர

வற்றைத் தனித் தனிச் சொன்னவர்களென்றும், சிவபெருமானை வக்தாவென்றும், விஷ்ணுவாதிகளைப் பிரவக்தாக்களென்றும் சாஸ்திரமறிந்தவர்கள் துணிந்துரைப்பரென்க. இவ்வுண்மையை யறியாமல் பாஞ்சராத்திரப் பிரவக்தாவாகிய விஷ்ணுவுக்குச் சர்வசித்தாந்தப் பிரதிபாத்யத்வம் சமர்த்திக்கவந்த சாமர்த்தியம் நிஷ்பலிதமாயிற்றென்க. இவற்றின்விரிவைமேல் (௧௧௨) (௧௧௩.) வது பக்கங்களினும் பார்த்துணர்வாராக.

இனி வேதத்திலும், இராமாயணத்திலும், ஹரிவம்சத்திலும் பாரதத்திலும் விஷ்ணுவேமுதலிலும், இடையிலும், கடையிலுஞ் சொல்லப்படுகின்றார் என்று ஹரிவம்ச வாக்கியமொன்றால் சாதிக்க வந்தனர். "ச்ருதயச்சபுராணநி பாரதாதீநிஸத்தம சிவமேவஸதாஸாம்யம் ஷ்ருதிக்ருத்வாருவந்திஹி" என்கிற சூதசம்ஹிதா வாக்கியத்தால் வேதங்களும், புராணங்களும், பாரத முதலாகிய இதிஹாசங்களும் சிவபெருமானையே சொல்லுகின்றன என்று பெறப்பட்டதனால் ஹரிவம்சத்திற் கூறிய விஷ்ணுபாரம்யம் பாதிக்கப்பட்டதென்க. பாரதமடங்கலும் எஞ்சனு விருத்தியால் சிவனையே பிரதிபாதிக்குமென்று மேலிடங்களில் யாம் கூறியபடியே பாரதாந்தர்க்கதமாகிய ஹரிவம்ச வாக்கியம் சிவபரத்வ போதகமாமேயன்றி விஷ்ணுபரத்வ சாதகமாகாதென்க. ஹரிவம்சத்தைக் காட்டிலும் சூதசம்ஹிதை பலிஷ்டப்பிரமாணமென்பதையுஞ் சிந்திப்பாராக. "யோபகர்ஷோஹரேர்த்ருஷ்டச்சாம்பவேஷ்வகிலேஷுச்சபுராணேஷுஹரேஸ்ஸாக்ஷாந்மூலபூதஸ்யஸத்தம வைஷ்ணவேஷுபுராணேஷு யோபகர்ஷஸ்துத்ருச்யதே ருத்ராம்சஸ்யஹரஸ்யாஸ்ய விபூதேரேவகேவலம் உத்கர்ஷோயப்புராணேஷு த்ருச்யதேசாம்பவேஷுச்ச ருத்ரஸ்யாஸோஸ்வரூபேண முநேதத்வாத்மநாப்பிச்ச உத்கர்ஷோயப்புராணேஷு த்ருச்யதேவைஷ்ணவேஷுச்ச அஸோதத்வாத்மநாவிஷ்ணோர் நஸ்வரூபேணஸத்தம" என்கிற பராசர புராணவசனத்தால் சகல சைவபுராணங்களிலுங் கூறப்பட்ட விஷ்ணுநிகர்ஷத்வம் மூலபூதனான விஷ்ணுவுக்கேயென்றும், வைஷ்ணவ புராணங்களிற்கூறிய சிவநிகர்ஷத்வம் சிவவிபூதியாகிய உருத்திர மூர்த்திக்கேயென்றும், சிவபுராணங்களிற்கூறிய சிவோத்கர்ஷம் சாட்சாத் சிவபெருமானுக்கேயென்றும், விஷ்ணு புராணங்களிற் கூறிய விஷ்ணு உத்கர்ஷம் ததந்தரியாமியாகிய சிவபெருமானுக்கேயென்றும் பெறப்பட்ட வுண்மையால் ஹரிவம்சத்தாற்கூறிய விஷ்ணு உத்கர்ஷம் ஸ்ரீபரசிவப்பிரதிபாத்யமென்பது நிர்ப்பாதிதமாய்ச் சாதிக்கப்பட்டது. "வேதைரநேகைரஹமேவவேத்

யோ வேதாந்தக்ருத்வேதவிதேச்சாஹம்" என்கிற கைவல்யோப நிஷத் வாக்கியத்தால் சகல வேதங்களிலும் நானே பிரதிபாத்யன், வேதங்களைச் செய்தவனும் நானே, வேதங்களை அறிந்தவனும் நானேஎன்று சிவபெருமான்கூறிய வுண்மை வெளிப்பட்டதனால் ஹரிவம்சத்தாற் பெறப்பட்ட சர்வவேதப் பிரதிபாத்யம் சிவைகநிஷ்டமென்பதே சாதிக்கப்பட்டது.

இங்ஙனநிற்க, "பிரபன்னகாயத்திரி" என்னுஞ் சுவடியில் (நிச) வது பாடல்வியாக்கியானத்தில் முடிச்சூர்முதலி யென்பவன் தான் ஒரு பாண்டாரத்தோடு வாதித்த காலையில், "ஸர்வேவேதாயத் பதமாமநந்தி ஸர்வேவேதாயந்மஹிமாநம்வதந்தி ஸர்வேவேதாயத்ரை கம்பவந்தி" என்கிறவாக்கியத்தைக்கூறி எல்லாவேதங்களிலும் நாராயணனுடைய பதங்களையும், அவனுடைய மகிமைகளையுமே சொல்லுகின்றன வென்னு முண்மையைக்காட்டிக் கண்டித்ததாகவும், அவன்மறுத்துச்சொல்ல வகையில்லாமல் ஓடிப்போய் விட்டானென்றும் பிதற்றி யிருக்கின்றனன். அந்தவாக்கியத்தில் எவனுடைய பதங்களையும் மஹிமைகளையுமென்று பெறப்பட்டவுண்மையால் அவ்வுண்மைதோன்ற, "ஸர்வேவேதாயத்பதமாமநந்தி தபாம்ஸிஸர்வாணிச்சயத்வதந்தி யதிச்சந்தோப்ரஹ்மசர்யஞ்சரந்தி தத்தேபதம்ஸங்க்ரஹேணப்ரவீம்யோ மித்யேதத்" என்கிற காடகசுருதியால் சமஸ்தவேதங்களும் யாதொருபதத்தை மநநஞ்செய்கின்றதோ, சமஸ்த தபசுகளும் யாதொரு பதத்தைச் சொல்லுகின்றதோ, சமஸ்தமான பேரும் யாதொருபதத்தை யபேக்ஷித்துப் பிரம்ஹசர்யத்தை அநுஷ்டிக்கின்றார்களோ, அந்தப் பிரணவ வாச்யமான பதத்தைச் சங்கிரஹமாய்ச் சொல்லுகிறேனென்றுகூறி, "தத்விஷ்ணோபரமம்பதம்" என்றுமுடிவு பெறுகையினால் விஷ்ணுபதத்தைக்காட்டிலும் உன்னதஸ்தானமாகிய பரமபதம் என்று பஞ்சமியில் கிரகித்துச் சிவலோக சாம்பிராஜ்யத்தையே முமுக்ஷுக்கள் அபேக்ஷிப்பார்களன்றி விஷ்ணுபதமென்று ஷஷ்டியில் கிரகித்துப் பக்ஷிவாகனன் பதமென்று கொள்ளாரென்க. வியாபகத்தன்மையாற் கொள்வாமெனின், வியாபக சைதன்யமாகிய பரசிவப்பிரதிபாத்யம் நிர்ப்பாதித மாகையால் ஆண்டும் உண்மை சித்தித்ததென்க. பஞ்சமியாலும், ஷஷ்டியாலும் சிவபாரம்யமே சித்தித்ததனால் பண்டாரத்தோடுவாதித்தேனென்றும், அவன் ஓடிப்போய்விட்டானென்றும் பிதற்றவந்த துஷ்டவாசகங் கண்டிக்கப்பட்டதென்க. இன்னும், கீதையில், "வேதைச்சஸர்

வைராஹமேவவேத்ய:" என்று கண்ணன்கூறினதாகவும் எடுத்துக் காட்டவந்தார். இப்படிக் கண்ணன் கூறியதெல்லாம் சோஹம்பாவனையாலெனகிற ஞாயத்தை முன்னர்காட்டியிருக்கின்றோமாகையால் கண்ணனிடத்துச் சர்வவேதப் பிரதிபாத்யங் கூறுவது அசங்கதமாயிற்றென்க.

இத்துட னொழியாமல் தாய்செத்தபோதே குட்டிகளுக்குப் பாலில்லாமலிறக்குமாபோல் சிவனுக்குப் பரத்வத்தை நாட்டிவைத்த சமயம் நசித்தபோதே சிவனுக்குப் புத்திரர்களான கணபதி மதமாகிய காணாபத்யமும், குமாரஸ்வாமிமதமாகிய கௌமாரமும், சக்தியின் மதமாகிய சாக்தேயமும் நசித்துப்போய் விட்டனவென்று தன் கதியைப் பிறர்மேலேற்றிக் கூறியிருக்கின்றனன். சிவனிறந்தாலல்லவோ அவர் சமயமிறக்கும்? அவர் சாகாதவரென்பதை அவருடைய சம்ஹாரகிர்த்யமே சாக்ஷி கூறிக்கொண்டிருக்கவும் அவர்க்கு மேலொரு சம்ஹார கர்த்தாவை எங்கேதேடிப் பிடிப்பது? படைப்பும், அளிப்பும் அழிப்பிலடங்குமாகையால் சர்வசம்ஹாரகாலத்தில் பிரம்ஹ விஷ்ணுக்கள் முதலாகிய சராசரப்பிரபஞ்சங்களும் நசிக்குமென்பதே சத்யம். இப்படிச் சாவைத் தலைமேற் கொண்டுழல்வார் சமயமல்லவோ நசிக்கும்? இராமனுகவும், கிருஷ்ணனுகவும் பிறந்து பலதுன்பத்தழுந்திச் செத்தகதைகள் பாரத ராமாயணாதிகள் கூறுமே! இன்னும் செகநாதமென்னும்பதியில் வேகாக் குறைக்கட்டைப் பிணமாய்க் கிடப்பதையுஞ்சென்று பிரத்யக்ஷமாய்ப் பார்க்கலாமே! இப்படிப்பட்ட இழிவுகதைகளை யெங்கள் சிவசாத்திரங்களில் எங்காவது கண்டதுண்டா? இல்லையே! சிவனை யெப்படி வேதங்கள் நித்தியராகக்கூறுமோ அப்படிப்போலவே உமாதேவியார், கணநாதர், ஸ்கந்தர்முதலியவர்களையும் நித்தியர்களாகவே கூறும்! இவர்களைப் பிரதிபாதித்த புராணங்களிலும் இராமனிறந்தான், கிருஷ்ணன் செத்தான் என்பதுபோல் இவர்களுக்கு எங்குஞ் சாவுகூறின தில்லையே! மஹிஷாசூரன், கஜமுகாசூரன், தாருகாசூரன் முதலியவர்களைக்கொன்று சரஸ்வதி, லட்சுமி முதலிய தேவஸ்திரீகளுக்குத் தாலிகொடுத்தவர்க ளிவர்களாமன்றோ? சத்தியலோகம், வைகுண்டமுதலிய பதங்களெல்லாம் இவர்கள் கடைக்கணிப்பாலன்றோ நிலைபெற்றுநின்றன? சிவன்கோயில்களைக் கணக்கிட்டாலும் பிள்ளையார் கோயில்களைக் கணக்கிடுவது அரிதாமே! அப்படியேயன்றோ ஸ்கந்தாலயங்களும்? சிவாலயங்

களிலு மிவர்க்குப் பூசையாதிகள் நடக்குமே! சிவாலயங்கள் கணக்கில் ஆயிரத்தெட்டெனினும் எண்ணிறந்தனவாமே! விஷ்ணுவாலயங்கள் நூற்றெட்டேயன்றோ? இவற்றுள்ளும் திருவேங்கடம், பழமுதிர் சோலைமுதலியவைகள் திருடிக்கொண்ட ஆலயங்களாமே! இந்த விசாரத்தால்பதின்மடங்கு சிவாராதனம்பலிஷ்டமென்பதை யேனறியார்கள்? காஞ்சியில் கோணங்கிக் கூத்தாடிநின்ற விஷ்ணுவுக்குச் சக்கர மளித்தவர் விகடச்சக்கர விநாயகராமே! பிரமஹத்தவரைத் தலைபோட்டுச் சிறையில்வைத்தவர் ஸ்கந்தராமே! விஷ்ணுபொய் சொன்னதற்காக மலைப்பாம்பாகச் சபித்தவர் தேவியாராமே! இவ்வுண்மைகளையே னறியமாட்டார்? அன்றியும், ஆதித்திய புராணத்தில், "தேவீஸ்கந்தகணம்ச்சைவ கோவ்ருஷம்நந்திகேச்வரம் விநாயகஞ்ச ஸம்பூஜ்ய ஸ்துதிபிச்சாஸ்துவைந்ஹரிஃ ஐ தகஞ்சைவஜுக்ராஹபில்வஞ்சஹரிவ்யஃ" என்கிற வசனத்தால் விஷ்ணுவானவர் தேவியையும், ஸ்கந்தரையும், நந்திபகவானையும், விநாயகமூர்த்தியையும், பூசித்து அவர்கள் பாதோதகத்தையும், பில்வத்தையுங் கிரகித்தாரென்றும், அநேகமாய் ஸ்தோத்திரங்களுஞ் செய்தாரெனறும் பெறப்பட்டதன்றியும், பஹுதரமான பிரமாணங்கள் இன்னும் அநேகமுளவாகலின் சைவமார்க்கமொன்றே சந்மார்க்கமாகி நித்தியமாயுள்ளதென்றும், தத்ஸம்பந்தமாகிய காணாபத்ய கௌமாராதிகளுஞ் சைவமேயென்றும், தத்விரோதமாகிய பஞ்சராத்திரம், மாயாவாதம், ஆருகதம் முதலாகிய துஷ்டமதங்கள் அவைதிகங்களான ஹேயமார்க்கங்களென்றும், அவைகள் அக்கிராஹ்யமாகலின் அநித்யமார்க்கங்களவைகளேயென்றும், நிச்சயிக்கப்பட்டது. ஆகவே, விஷ்ணு சம்பந்தமான பாஞ்சராத்திரத்துக்கும் ஹானிசித்தித்தது. இதனால் தாய்செத்தபோதே குட்டிகளுக்குப் பாலில்லாமலிறந்த ஞாயம் அவர்க்கே சமர்த்திக்கப்பட்டது. விஷ்ணுபுத்திரர்களாகிய பிரமனுக்கும், மன்மதனுக்குங் கோயில்கள் குட்டிச்சுவர்களாமே! மன்மததகனத்தை யுலகத்தவர் கொண்டாடிவருவதும் பிரத்தியட்சமாமே இவர்களுக் காராதன மெங்குமில்லையே! இந்தக்கதியை யிவர்க்களித்தவர் சிவபெருமானே யன்றோ? இலக்குமிக்குத்தானெங்காவது தனி ஆலயங்களுண்டா? தேவி ஆலயங்கள் காசிமுதலிய தலங்களிலிருப்பதன்றியும் காஞ்சியில் சரஸ்வதியும், லட்சுமியும் சாய்மரை யிரட்டிக்கொண் டிருமருங்கு மேவல் பூண்டுநிற்கக் கொலுவீற்றிருக்குமாலயமும் பிரத்தியட்சமாமே! அவரைவழிபடுஞ் சாக்தேயம் என்னுஞ் சமயமொன்றும் பிரசித்தியாமே! நம்பியாண்டார்நம்பிகள்

ஔவை, நக்கீரர், அருணகிரிநாதர், அபிராமிபட்டர் முதலியவர்கள் மேற்கூறிய சமயங்களில்வந்த மெய்யன்பர்களாமே! இத்துணைச் சிறப்புகளையறிந்தும் அஹங்காரத்தாற் குரைத்த மட்டிவாசகம் நிரஸ்தமென்க விஷ்ணுவுக்கு ஆலயங்களுஞ் சமயமு முண்டாயிருப்பதைச் சிவாராதனத்தால்வந்த பெருவாழ்வென்று மேல் யாம் பலவிடங்களில்கூறி யிருக்கின்றோமாகையால் ஆண்டுகண்டுணர்க.

இங்ஙனநிற்க, ஷை சாஸ்திரியாரவர்கள் "வேதசாஸ்த்ராத்பரம் நாஸ்தி" என்கிற வசனமொன்றுகாட்டி விஷ்ணுவே பரனென்கிற அர்த்தத்தை விளக்கினார். அது சுருதிவிருத்தமான பூர்வபக்ஷவாக்கிய மென்பதை நிரூபிப்போம். "பாராத்பரதரோப்ரஹ்மா தத்பாராத்பரதோஹரி: தத்பாரத்பாரதோஈச: தஸ்மாத்துல்யோதிகோநஹி" என்கிற வைப்பலாதகத்தால் பரத்துக்குப்பரம் பிரமனென்றும், அவனுக்குப் பரம் விஷ்ணுவென்றும், அவனுக்குப்பரம் ஈசனென்றும், அவர் சமாநாதிகசூனியரென்றும் வெளிப்பட்டதன்றியும்கூர்மபுராணத்தில் "நப்ரஹ்மாத்மையஸ்ஸமம்ப்ரயாதி சக்திபிச்சாபிபார்வதீம் ப்ரஸாதயதிஸமம்சம்பும் ப்ரஹ்மவிஷ்ணுவாதிபிஸ்ஸர்வை: யக்கச்சித்தாமஸவிஷ்ட: கதாசிந்நைவதம்ஸ்ப்ருசே" என்கிற வியாசவசனத்தால் பிரம்ஹ விஷ்ணுவாதிகளோடு சிவனையும், இதரசக்திகளோடு பார்வதியாரையும் சமத்வங் கூறலாகாதென்றும், சமஸ்த தேவர்கட்கும் சிவனையும், சமஸ்த சக்திகட்கும் பார்வதியாரையும் உத்கிருஷ்டமாகக் கூறவேண்டுமென்றும், யாவனொருவன் தமோபூதனாய் அன்யதா கூறுவானோ அவன் பதிதனாய் ஸ்பரிசிக்கக்கூடாதவனாவனென்றும் ஸ்பஷ்டமாய்ய பெறப்பட்டது. இன்னுஞ் சுருதிகளில் "யஸ்மாத்பரம்நாபரமஸ்திகிஞ்சித்" என்றும், "நதத்ஸமச்சாப்யதிகச்சத்ருச்யதே" என்றும் வந்தவாக்கியங்களால் யாதொருவனைக் காட்டிலும் உத்கிருஷ்டனுஞ் சமானனுமில்லையோ அவன் சிவன் என்று வெளிப்பட்டது. இந்த வுண்மைகளால் சிவனுக்கு உத்கிருஷ்ட சமத்வமுடைய தேவதாந்தரத்தைப் பிரதிஷேதித்துச் சிவனுக்கே சர்வோத்கர்ஷத்வம் சாதிக்கப்பட்டது. இதனை அவத்தை வயத்தான்மயங்கிக்கூறிய வியாசருக்குக் காசியில்புஜஸ்தம்பனம் சித்தித்ததன்றியும் "தத்வம் மேவசநம்வ்யாஸ சீநுணுமூடயதார்த்தவத் அஹமேவஜகத்கர்த்தா மம்கர்த்தாமஹேச்வர: தஸ்யதேவநதிதேவஸ்ய கர்த்தாகோபிநவித்யதே" என்கிற காசிகண்டவசனத்தால் விஷ்ணுவானவர் வெளிப்பட்டு ஓ வியாசனாகிய மூடனே, சத்தியமாய்ச்சொல்லுகிறேன் சமஸ்த ஜகத்துக்

கும் நானேகர்த்தன், எனக்குக்கர்த்தா மஹேசுவரர், தேவதேவரா கிய அவர்க்குக்கர்த்தா கிடையவே கிடையாது என்று கூறினரெ ன்றா வெளிப்பட்டதனால் அபார்த்தங்கொண்டு புலம்பித்திரியும் வாசகம் யாவும் பரிகாரமாயிற்றென்க. இன்னும் பலவுளவற்றை விரிவஞ்சி விடுத்தாமென்க.

இதுகாறுங் கூறிவந்த நியாயவிசேஷங்களால் பாரதமடங்க லுஞ் சிவபாரம்யமே பிரதிபாதிக்கப் பட்டுள்ளதென்றும், துர்மதி களாகிய பாஞ்சராத்திரிகள் சாபவசத்தராய்ச் சிவபாரம்யங்களைக் கெடுத்தும், விஷ்ணுபாரம்யங்களைத் தொடுத்தும் அபசித்தாந்தங் களைப் புகட்டி வழங்கிவருகின்றார்களென்றும் அவர்கள் விபரீதம் வெளிப்பட்டதனால் சைவர்கண்மேலேற்றி அப்பேதைகள்கூறுந் துர் வாதம் நிரசிக்கப்பட்டதென்க.

இனி நன்மதிவிளக்கப் பண்டோலத்தார் புத்திகோசரத்தைச் சற்றே விசாரிப்போம். இந்தப்புத்திமான் இம்மட்டேயொழியாமல் தனது மலபந்தவாசகத்தில் கம்பராமாயணத்தையுஞ் சைவர்கள் கெடுக்கப்பார்க்கிறார்களென்றார். நன்று! நன்று!! கம்பன் ஒருநாளிர வில் வீதியுலாவி வரும்போது கடைவீதியில் கம்பராமாயணப் பிர சங்கம் ஒருவித்வான் செய்கின்றதைச் சற்றுநின்றுகேட்டு இந்த நூலில் நான்சொன்னதுஞ் சில இருக்கின்றன என்று கூறினனெ ன்று வழங்கிவருஞ்சொல் வழக்கால் கம்ப னிருக்கும்போதே கம்ப ராமாயணம் திரியப்பட்டதென்று வெளியாகின்றது. அந்த நூலை யொருபெரிய பிரமாணமாகக்கொண்டுசைவர்களென்னமோ அதைக் கெடுக்கப்பார்க்கின்றார்களென்று விந்தைகூறுவது பரியாசாஸ்பத மென்க. கம்பன்வாக்கு வான்மீகியோடு சில அம்சங்களில் முரணு மாகையால் அப்பிரமாணத்வம் சித்தித்தது. அதவா அதனைப் பிர மாணமாகக் கொண்டாலும் அதனால் சிவோத்கர்ஷம் பாதிக்கப்பட்ட தில்லை. கம்பன்பூதிசாதனத்தனாயினுஞ் சாமான்யம் வித்வச்சிரேஷ் டத்வம் சித்திக்குமேயன்றி மதசம்பந்தம் அன்வயமாகாதாகையால் அவனுடைய நூலால் சித்திக்கும் உத்கர்ஷ அபகர்ஷங்கள் எமக்கி யாண்டும் பிரமாணமாகாதென்க. பொதுப்படக்கூறிய அந்தநூலில் இந்தத்துஷ்டப்பேய்கள் புகுந்து விபரீதஞ்செய்த அமிசங்களில் சிலவற்றையீண்டுதஹரிப்போமென்க.

“ஆதியந்தமரியனயாவையும்” என்பதை “ஆதியந்தமரீயென யாவையும்” என்றும், “எழுந்தனன் கடகளிற்றிறையும்” என்

பதை "எழுந்தனர் கறைமிடற்றிறையும்" என்றும் மாற்றிப் பூர்வப்பிரதிகளுக்குமாறாய் வெளியிட்டும், "சூலமுண்டது சூருளோர், காலமுண்டது கைக்கொள்வான், ஆலமுண்டவனாழிவாய், ஞாலமுண்டவனல்கினான்" என்னுங்கவியால் சூலமுளது. அச்சூலம் அமரரது வாழ்நாளை யுண்டுவிட்டது. அதனை விஷ்ணுமூர்த்தியினது சக்கரத்தினிடமாகவிருந்து சிவபெருமான் பெற்றுக் கும்பகர்னனுக்குக் கொடுத்தார் என்று பொருள்கூறியுஞ் சிவபாரம்யங்களைக்கெடுக்கத் தலைப்பட்ட பாதகர்கள் பாஞ்சராத்திரிகளே யன்றி வேறில்லை. அந்தக்கவியால் அதனை விடமுண்டருளிய சிவபெருமானது சக்கரத்தையேந்திய உலகமுண்ட திருமால் கொடுத்தான் என்று பொருள்கூற விடமுண்டாயினும் அன்யமதஹானி சித்திக்கிறபடியால் உபயசம்பிரதிபன்னமாகிய சாதகார்த்தத்தை யீண்டுவிரிப்பாமென்க. எங்ஙனமெனின் "ஆழிவாய்ஞாலமுண்டவ" என்று அண்மை விளியாக்கி "ஆலமுண்டவன் நல்கினான்" என்று அன்வய பாவத்தாற் கிரகித்து, ஹே ராமமூர்த்தி! அதனைச் சிவபெருமான் கும்பகர்னனுக்குக் கொடுத்தாரென்று விபீஷணர் கூறினதாக நிச்சயிக்கப்பட்டது. இந்தவுண்மையை யுணராமல் பாவத்தழும்பேறித் துரஹங்கார மிகுதியால் அபார்த்தங்கூறித்திரியும் ஒவ்வொன்றும் இவ்வாறே பரித்யஜிக்கப்படுமென்க. இத்துடனொழியாமல், நைஷதத்தில், "தேங்கமழ்துளவினானு நான்முகத்தேவுநாளுந், தாங்கருங்காமவெம்மை தரிக்கிலராகியன்றோ" என்பதை "தேங்கமழ்துளவனீனு நான்முகத்தேவனானுந், தாங்கருங் காமவெம்மை தரிக்கிலனாகியன்றோ" என்றும்மாற்றி யிருக்கின்றனர். விஷ்ணுவைத் தப்பவிட்டுப் பிரமனைக் காட்டிக்கொடுக்கப் பார்த்ததினாலேயே அது விட்டுவிடுமா? "தக்கார்தகவில ரென்பதவரவ, ரெச்சத்தாற்காணப்படும்" என்னும் பிரமாணமுகத்தால் பிரம்ஹதேவரைநோக்க அவர்தந்தை யுண்மை வெளிப்பட்டதனால் "தேங்கமழ்துளவனீனு நான்முகத்தேவன்" என்றுமாற்றிக்கூறினும் விஷ்ணுவைப்பிடித்த பாதகம் விட்டதேயில்லை. இதுமட்டோ "கொன்றைவேந்தன் செல்வனடியிணை என்றுமேத்தித் தொழுவோமியாமே" என்பதை "கன்றுமேய்த்த கண்ணனடிகளை-என்றுமேத்தித் தொழுவோமியாமே" என்றும், "தந்திமுகத்தெந்தை சதங்கைப் பதம்போற்றி" என்பதை "தந்திக்குமுன் வந்த தாசரதிதாள்போற்றி" என்றும் மாற்றிப் பாலிசர்கள் பயின்றுவருஞ் சிறு நூல்களினுந் தங்கள் அவலட்சணத்தைக் காட்டியிருக்கின்றனர்கள். இப்படி அவர்கள் புரட்டியபாகங்கள் ஏராளமாகலின் சைவர்கள் புரட்டர்களென்றும், கம்பராமாயணத்தையுங் கெடுக்கப் பார்க்கிறார்களென்றும் வீண்வாதமிட்டுரைத்த மட்டிவாசகம் நிரஸ்

தமென்க. வேதத்தின் வழிநூல்களாகிய புராணங்கள் பதினெட்டனுள் பத்து சிவபாரம்யமும், ஒன்று தேவிபாரம்யமும், மூன்றுவிஷ்ணு பாரம்யமும், இரண்டு பிரம்ஹபாரம்யமும், ஒவ்வொன்று அக்னி சூரிய பாரம்யங்களுமாகவிளக்கும். இவற்றுள் சிவபுராணங்களன்றியும் இதரபுராணங்களிலும் பூர்வோத்தர பாகங்களில் ஒவ்வொருபாகம் சிவபாரம்யமாயிருக்கும். இந்தவுண்மையால் விஷ்ணுவுக்குள்ள புராணமூன்றில் பாதிபாகம் சிவபாரம்யமாய் விட்டதனால் சேஷித்து நின்றது மூன்றரை ஒண்ணரைபுராணம் இவர்கட்குச் சொந்தமாம். இவ்வளவுஹீனதிசையோடுங்கூடிய இவர்கள் சர்வ வேதப் பிரதிபாத்யனும் விளங்கும் பரசிவமூர்த்தியைநிந்தித்தும், அவனடியார்களைச் சைவப்புரட்டர்களென்று வைதுஞ் சந்தோஷித்துத் திரிவது குருட்டரிப்பாளன் குபேரனைப் பழித்தல்போலாம். கம்பன் வாக்கு பலிஷ்டப்பிரமாண மாகாததுநோக்கி இவ்வளவில் விடுத்தனமாயினும் இனி யிரண்டாம்பாகத்தில் பாரதத்தில் கீதை முதலிய பிரமாணங்கட்குச் சிவபாரம்ய கிரஹணவிசேஷணங்களை விஸ்தரித்துக் கூறுவோமாகையால் அத்துடன் வான்மீகி யுரைத்தருளிய ஸ்ரீமத்ராமாயணப் பிரசம்சையையும் விரித்துரைப்பாமென்க. தீக்ஷிதஸ்வாமிகள் முதலிய சிவாநுபூதிமான்கள் "இராமாயண தாத்பரிய சாரசங்கிரஹம்" என்பதாதிகிரந்தங்களால் சிவபாரம்யங்களை இனிது விளக்கியிருக்கு முண்மையானுந் தெளியக்கடவர்.

இந்தப்பாகத்தை யிவ்வளவோடேநிறுத்தி மேலிரண்டாம்பாகத்தில் பிரணவ விஷயமுதலிய ஒவ்வொரு அமிசத்தையும் பரீக்ஷித்து "நன்மதிவிளக்கம்" என்னும் போலிப்பெயர் மாய்ந்துபோகவுண்மையைச் சித்தாந்தப்படுத்திச் சிவாதிக்யங்களாகிய அரதனங்களை வரையின்றி வாரிக்கொடுப்போமாகையால் மெய்யன்பர்களாவார் கரங்களிலேற்றுப்

பத்தியாம் பொன்னிற் பத்தியாய் வைத்து
மேலணி யென்ன விரும்பி யணிந்து
உருத்திர மணிப்பூ ணுடைமையாக் கொள்ளும்
அன்பர்க ளெவரு மதிசயித் துரைக்கச்
செம்மனத் திருமாப் பெய்தித் திருவிலாப்
பாஞ்ச ராத்திரப் பதடிக ளெனி
யுண்மயக் கெய்தி யோடி யொதுங்கப்
பூதி சாதனம் பொலிதர வுலகத்
தேதமின் ஞானத் தியற்கைய ராகிச்
சிவனருண் மார்க்கந் தேர்ந்துவாழ் குவரே!

சிவாதிக்யரத்நாவளி.

முதற்பாகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குரவே நம:

# இரட்டையர்கள் அருளிச்செய்த

## தைவீகவுலாவில்

## சிவாதிக்யம்.

---

கல்லா னிழலிருந்த கண்ணுதலார் தம்முடனே
யெல்லாரையுந் தேவரென் றுரைத்த—நல்லாயொப்
பேதுங்கரா விரும்பினையும் பொன்னினையுந்
தாதுவென வுரைக்குந் தன்மைகாண்—மீதுலவு
நீடுசுடராழிநிலத் தேரிலீரிரண்டு
பாடுசுருதிப் பரிபூட்டித்—தோடார்
நளினத்துப்பாக னடத்த வெரிவாய்த்
துளவப்பகழி தொடுத்துக்—கொளுவியநாண்
மூரியரவாக மூதண்டமுந் தாங்கு
மேருவெனுஞ் சைலம் வில்லாக—வார்வமுள
மூவருயிர்வாழ முப்புரமு நீறுக
யாவர்பொருதா ரிமை யோரில்—தேவர் (௧)

பழித்த பெருவேள்வி பழுதாக வாள்விட்
டழித்த விமையவர் வேறுர்தா—னிழைத்து (௨)

வதைப்பான் வருங்கூற்றை மார்க்கண்டர்க்காக
வுதைத்தா ரிவரல்லா துண்டோ—வெதிர்த்த (௩)

கழற்கான் மதன்மாளக் கண்மலரால் வெய்ய
வழற்றனை யேவினு ரார்தா—னிழற்பொற் (௪)

கலையா னிடந்திட்ட கண்ணுக்கோ ராழி
விலையா நல்கினுர் வேறுர்—நிலையாகத் (௫)

துன்னுமொருசிலந்தி சோணுடெங் காவிரியும்
மன்னியரசாள வைத்தவரார்—பன்னெடுநாள் (௬)
தேடியிருவர் திரியத் தெரியாம
னீடுசுடர் வடிவாய் நின்றவரார்—ஆடலென (௭)

வுங்காரஞ்செய்தே யுலகுண்ட மாலயனைச்
சங்காரஞ் செய்துபின்னுந் தந்தவரார்—பங்கயன்மால் (௮)

வீந்தசுடலை விபூதி தரித்திருவ
ரார்ந்ததலைமாலை யணிந்தவரார்—மாய்ந்திடவே (௯)

நாராயணருடலு நாலுமுக னுருடலுங்
கூராய சூலம்பிசைக் கொண்டவரார்—சேர (௧0)

வெரிந்த பிறையெயிற்றி னீரைந்து வாயும்
பரந்து செழுங் குருதிபாய—நெரிந்தொருவன்
மர்ன்று கிடக்க மலையான் மகளுடனே
யூன்றுவிர லொன்றுடையவ ரார்—தோன்றியட (௧௧)

லோதவிட முண் டெபயநிறத் தாமரைமேற்
கோதையர்க்குத் தாலி கொடுத்தவரார்—மாதவனைக் (௧௨)

கூடியயனைக் கொடுத்தவரார் மோகினியா
ளுடெமழிற் சாத்தனைமுன் னல்கினரார்—பாடார்ந்த (௧௩)

புத்தேளிரென்னைப் புனைந்தவரா ரல்லினுமை
கைத்தாளங் கொட்ட நடங்காண்பவரார்—மத்தமுறு (௧௪)

மாதிநெடு மாலுதிர மத்தனையுங் கைத்தலத்திற்
பாதிதனிலே நிறையப் பண்ணினரார்—வேதமுடன் (௧௫)

றுண்ணெனவே யாழிபுகுஞ் சோமுகனைச் செற்றிடுமீன்
கண்ணை யுகிராற் களைந்தவரார்—கண்ணனு (௧௬)

ராமைவடிவந்தனிலு மாதிவராகந்தனிலு
மாமுது கோட்டைக்கரத்தால் வாங்கினரார்—தாமறையும் (௧௭)

பேசரியசிம்புளாய்ப் பேராட னையடுங்
கேசரியை வள்ளுகிராற் கீண்டவரார்—கூசா (௧௮)

தடருஞ் சலந்தரனை யன்றாழி சூட்டி
யுடலம்பிளந்தவர் வேறுண்டோ—படிவிண் (௧௯)

முழுதளந்தமாயன் முதுகெலும்பைச் செந்நீ
ரொழுகவே வாங்கினர் வேறுண்டோ—பழுதெண் (௨0)

டடமலரோ னுச்சித் தலையை யுகிரா
லுடனே குறைத்தவர் வேறுண்டோ-நெடுவிசும்பு (௨௧)

முற்றும் புதைத்தலையான் மோதுஞ் சுரநதியைச்
சுற்றுஞ்சடையிற்சுவறுவித்து-மற்றும்
பகீரதனின் றாழிநாட் பாதமலர் போற்ற
மகிதலத்தே போதுவித்தா மற்றார்-புகழைச் (௨௨)

செலுத்தச் சிறுத்தொண்டர் தேவியறுத்தாக்கிக்
கலத்திற் படைத்த கறியைத்-தலைக்கிட்ட

MAHAMAHOPADHYAYA
IVER LIBRARY

சுட்டியு மாலைச் சுரிகுஞ்சியு முத்துங்
கட்டியை நல்குங் கனிவாயு-மிட்டதொரு
வாளியுங்காது மருங்குமணி வடமுந்
தாளிணையுஞ் செம்பொற் சதங்கையுமாய்-மீளப்
பிறப்பித் தவர்தம் பெரும்பிறப்பை யெல்லா
மறுப்பிக்க வல்லவர்தா மற்றூர்-நறைக் கொன்றை (உ௫)

யாதிதனையொழிய வாறாறு தத்துவத்தின்
மீது மகிழ்ந்திருக்கும் விண்ணவரார்-மாதிற் (உ௪)

பொருந்தி விடையாகப் பூந்துழாய் மாலை
விரும்பி நடத்தினர் வேறூர்-அரன்பெருமை (உ௫)

யின்னும் பலகோடி யில்லையோ யாமிருந்து
சொன்ன பொழுதே தொலையுமோ-வுன்னரிய
மூவா முதலா முதல்வனையு மூவுலகிற்
சாவர்பிறப்பார்க டங்களையுந்-தேவாக
வொக்க நினைவாருக் கல்லவோ வோரேழு
மிக்க நரகம் விதித்ததுகாண்-மைக்கண் (உ௬)

மருவார் குழலியென மற்றவனு மந்தப்
பெருவாழ் வுடைய பிரானைப்-பரவியவர்
தெய்வ வெழுத்தைந்து மோதித் திருநீறு
மெய்யி லணிய விதியற்று-மையறு
மெட்டெழுத்தை யோதி யிடுவார்மண் ணைப்பொழுதுங்
கட்டுரைக்க வென்னக் கௌதமனு-ரிட்டபெருஞ்
சாபத் தியல்புதரு மாமறையோர் செய்
பாபக் கலிகாலப் பண்புகாண்- கோபவிதழ் (உ௭)

மின்னே யெனச்சிறந்தும் வேதியராகிப் பிறந்து
மென்னே பெருமையிருந்தவா-முன்னை
மறையி னெழுத்தைந்தும் வாயாரவோதி
நிறைய வணிந்து திருநீறும்-பிறவியெல்லாம்
வாட்ட வறியாமல் வாளா பிறவிதனை
யீட்டுவதே பாவ மெனவுரைத்து. (உ௮)

என்றற்றொடக்கத்தனவாகிய அருள்வாக்கியங்களால் உண்மை கண்டுணர்வாராக. இவைகட்குப் பிரமாணம் (௧௪௫)வது பக்கத்தில் மேல்(௧)முதலாகிய குறிப்புகளில்எழுதியிருக்கிறபடியே கண்டுணர்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாய பரப்பிரஹ்மணேநம:

# இரட்டையர்கள் அருளிச்செய்த

## தைவீகவுலாவிற்போந்த

# பிரமாணத்திரட்டு.

(௧) எஜுர்ஸ்ஸம்ஹிதை-ஸ்ரீமஹாபாரத முதலியன.

(௨) பாகவதம் சதுர்த்தஸ்கந்தம்-பிரம்ஹாண்டபுராண முதலியன.

(௩) சரபோபநிஷத்து-மாரக்கண்டேயம்-கூர்மமுதலியன.

(௪) இராமாயணம் உத்தரகாண்டம்-ஸ்காந்தமுதலியன.

(௫) சரபோபநிஷத்து-ஈசானசம்ஹிதை-ஆதித்யபுராண முதலியன.

(௬) சிவரஹஸ்யம்- அகஸ்தியபக்தவிலாச முதலியன.

(௭) பாஸ்கரசம்ஹிதை - பிருஹதாரண்யம் - பராசரபுராண முதலியன.

(அ-௯) சரபோபநிஷத்து - கூர்மபுராணம் — வியாசகீதை முதலியன.

(௧0) சிவரஹஸ்யம் - சரபோபநிஷத்து முதலியன.

(௧௧) இராமாயணம் - ஸ்ரீமஹாபாரத முதலியன.

(௧௨) சரபோநிஷத்து-பாகவதம் அஷ்டமஸ்கந்தம் - இராமாயணம் உத்தர காண்ட முதலியன.

(௧௩) பஸ்மஜாபாலம்-உபதேசகாண்டம்-கூர்மபுராண முதலியன.

(௧௪-௧௫) சிவரஹஸ்யம் - பிரம்ஹாண்டபுராணம் - கூர்மபுராண முதலியன.

(௧௬-௧௭-௧அ,) ஆதித்தியபுராணம் சரபோபநிஷத்து - பிரம்ஹாண்டபுராணம் உத்தரபாகம் - அதர்வணம் - தைத்திரியமுதலியன.

(௧௯) மானவீயசம்ஹிதை - ஆதித்தியபுராண முதலியன.

(௨0-௨௧) சரபோபநிஷத்து - வாமனபுராணம்-ஸ்காந்தமுதலியன.

(௨௨) இராமாயணம் பாலகாண்டம்-பாரதம்- ஆரண்யபர்வம்-வாமனபுராண முதலியன.

(உரு உபமன்யுபக்தவிலாசம்-சிவரஹஸ்யமுதலியன.

(உச) வேதம்-சிவாகமமுதலியன.

(உரு) ஈசானசம்ஹிதை-வாசிஷ்டலைங்கிய முதலியன.

(உசு) ருக்வேதம்- பாராசரஸ்மிருதி-ஜாபாலசுருதி முதலியன.

(உஎ-உஅ) ஜாபாலசுருதி-பாகவதம்-எக்ஞவைபவகாண்டம் -பௌஷ்யோ புராணம்-பராசரபுராணமுதலியன.

சாபமிட்டமஹரிஷிகள்; ததீசி - உபமன்யு - தூர்வாசர் - கௌதமர் - சரர் - பிரம்ஹா முதலியவர்களாம்.

---

Dr. U. V. S. IYER LIBRARY
23088